உ

கடவுள் துணை.

பிராணரக்ஷாமிர்தசிந்து

என்னும்

வைத்தியரத்னசங்கிரகம்.

முதலாவது பாகம்.

PRANA RATCHAMRITHA SINDHU.

MEDICAL TREATISE.

PART I.

—:o:—

இஃது

தஞ்சாவூர்

டி. எ. இராமருயர் (பண்டிதாள்) புத்திரராகிய

ஆயுள்வேதபாஸ்கர்

டி. ஆர். மகாதேவருயர் (பண்டிதாள்) அவர்களால்

அனேக சமஸ்கிருத, தமிழ், இங்கிலீஷ், யுனானி வைத்திய கிரந்தங்களைப் பார்வையிட்டு அதிசிலாக்கியமான அநேகவித ஒளஷதங்களை சர்வஜன உபகாரமாக சொல்லிய இந்நூல் இயற்றப்பட்டது.

இரண்டாவது பதிப்பு.

Second Edition Revised & Enlarged.

நாகபட்டணம்

"நீலலோசனி" அச்சுக்கூடத்தில் பதிப்பிக்கப்பெற்றது.

1913.

 [விலை ரூ 1-12-0.

Soliciting to recommend
your friends to enjoy the interest of our five medical books,
containing the Tanjore Palace Renowned Medicines.

முகவுரை.

PREFACE.

இவ்வுலகத்தில் அனுபவிக்கக்கூடிய நன்மைகள் யாவற்றிலும் சரீர சுகமே முதன்மை. ஆதலால் மனிதர்களுக்குக்காணும் ரோகங்களுக்கு சிகிச்சை செய்வதில் அவரவர்களின் வாதபித்த சிலேஷ்ம தேகங்களுக்கு அல்லது ரோகங்களுக்கு இங்கிலீஷ், யுனானி அல்லது கர்நாடக அவுஷதங்கள் குணத்தைத் தருவதால் மேற்படி தேகங்களின் அல்லது ரோகங்களின் லக்ஷணங்களை அறிந்து இம்மூன்றுவித அவுஷதங்களில் எது தகுதியானதோ அதைக் கொடுத்து ரோகங்களை நிவர்த்தி செய்வதற்காகவும், இத்தேசத்தில் இதுவரையிலும் மேற்படி மூன்றுவித அவுஷதங்களைச் சொல்லிய வைத்திய புஸ்தகம் இல்லாக்குறைவை நிவர்த்தி செய்யவேணுமென்ற கருத்தினுலும், இந்த காரியத்தில் பிரவேசித்தோம்.

நமது முன்னோர்கள் தஞ்சாவூர் அரண்மனையின் சாஸ்வதி மஹாலில் இருக்கின்ற வைத்திய கிரந்தங்களில் அதிக சிலாக்கியமானதும் கைகண்டதுமான அநேக இங்கிலீஷ்—யுனானி—கர்நாடக அவுஷத முறைகளைச் செய்து தஞ்சாவூர் சர்போஜி மகாராஜா, சிவாஜிமகாராஜா, இவர்களிருக்குங் காலத்தில் மகாராஜாக்களுக்கும் அவர்களுடைய பந்து, சிநேகிதர்களுக்கும் சம்பவித்த வியாதிகளுக்குக் கொடுத்து அனுகூலப்பட்டிருக்கின்ற முறைகளை நாம் செய்து வியாதிகளுக்குக் கொடுத்து அனுபவத்திற்கு வந்திருப்பதால், இந்த அபூர்வமான ஔவுதங்களின் பிரயோஜனத்தை சாதாரண ஜனங்களுக்கும் வைத்தியர்களுக்கும் உபயோகமாகும்படி பிரா[illegible]ரக்ஷாமிர்த சிந்து முதலாவது பாகம் என்னும் வைத்திய புஸ்தகம், நம்மால் இயற்றப்பட்டு முதல் பதிப்பு அச்சிட்டு விற்பனையாகிவிட்டது. இந்த இரண்டாவது பதிப்பில் வைத்தியர்களுக்கு வேண்டிய அநேக நூதனமானதும் இலேசில் கிடைக்காததுமான அநேக விஷயங்களையும், அநேக மருந்துகளையும் சேர்த்து உயர்ந்த கிளேஸ் கடிதத்தில் அச்சிட்டு முழு காலிகோ பயிண்டு செய்திருக்கின்றது. இதில் அடங்கிய விஷயங்களாவன:— வாத பித்த சிலேஷ்மங்களின் ஸ்தானங்கள்—சுபாவகுணங்கள்—விருத்தி குணங்கள்—சூர்ணகுணங்கள்—குறிகள்—அளவுகள், அஷ்டவித பரீக்ஷைகள், நாடி பரீக்ஷிக்கும் ஸ்தானங்கள்—விதங்கள், நாடி நடக்குங்காரணங்

கள், ஒரு மினிட்டுக்கு நாடி நடை பிரமாணம், பருவங்கள், மருந்துக் கொடுக்குமுன் கவனிக்க வேண்டிய விஷயங்கள், மருந்துகளைச் சாப்பிட அளவுகள், நல்ல நாள்கள், பிரம்மாவின் ஆயிசு, நிறைகள், காற்று, ஜலம், மருந்துகளின் காலம், பத்திய விதிகள், பத்திய பதார்த்தங்கள், மருந்துகளின் வகுப்புகள், சுத்திகள், சத்துரு பதார்த்தங்கள், முறிவுகள், எரிப்புத்திட்டம், புடத்திட்டம், வாதத்திட்டம், பச்சை தாவரவர்க்கப் பதார்த்தங்கள். சகல இங்கிலீஷ் மருந்துகள்:-லினிமென்ட்கள், வைன்கள், எஸ்லென்ஸ்கள், ஆயில்கள், டிங்சர்கள், ஸ்பிரிட்கள், வாட்டர்கள், பலவித சாராயங்களின் குணங்கள், ஆயின்ட்மெண்ட்கள், எக்ஸ்ராக்ட்கள், பிளாஸ்திரிகள், பலவித தேன்களின் குணங்கள், பலவித விசிறிகள், பலவித பால்கள், பலவித வஸ்திரங்கள், பலவித உணவு வனங்கள், பலவித ஜலங்கள், பலவித மூத்திரங்கள், ஆண்-பெண் சரக்குகள், பதார்த்தத்திலிருக்கும் சதை, அனல், கொழுப்பின் அளவுகள், குளிரான சங்கோஷனகாரிகள், பலவித பொங்குநீர்கள். சகல கர்நாடக பூநவீ மருந்துகள்:-தயிலங்கள், எண்ணெய்கள், சூர்ணங்கள், லேகியங்கள், மாத்திரைகள், பஸ்மங்கள், செந்தூரங்கள், கிருதங்கள், கஞ்சிவகைகள், பலகாரவகைகள், ஷர்பத்துகள், கட்டுகள், மெழுகுகள், குழம்புகள், ரசாயனங்கள், வடகங்கள், பாவனங்கள், ஹல்வாக்கள், தாதுபுஷ்டி மருந்துகள், நஸ்யங்கள், புகைச்சல்கள், விரேசனகாரிகள், தூபங்கள், லேபனங்கள், இன்னும் அநேக மருந்துகளின் முறைகள், ஆயுள் வேதியர்கள் தெரிந்துக் கொள்ளவேண்டிய அநேக முக்கியமான விஷயங்கள் இவைகளும், சுரரோகம், சன்னிரோகம், அபஸ்மார ரோகம், குய்ய ரோகம், காச ரோகம், க்ஷயரோகம், முதலிய 4448 வியாதிகளுக்கு அதிஅனுபோகமுள்ள மருந்து முறைகளும் ஒன்றாய்த்திரட்டி இந்த ஆயுள்வேதக் கிரந்த வாக்கியத்திற்கு பிராணாக்ஷாமிர்த சிந்து, வைத்திய ரத்ன சங்கிரகம், முதலாவது பாகம் என்றும் பெயரமைந்தது.

இந்நூற் பொருளையுணர விரும்பும் அறிஞர்கள் யாவரும் இதிலுள்ள குற்றத்தைப் பாராமல் குணத்தையே பாராட்டுவார்களென்று மிக பிரார்த்திக்கின்றனன்.

ஸ்ரீ T. R. மகாதேவருயர்-(பண்டிதாள்),

கிரந்த கர்த்தா.

ரிஜிஸ்தர் அறிவிப்பு.

இப்பிராணரக்ஷாமிர்த சிந்து என்னும் வைத்திய புஸ்தகம் முதலாவது, இரண்டாவது பதிப்புகள் தஞ்சாவூர் கோட்டைக்குள் மேல்ராஜவீதி 358 நெம்பர் வீட்டிலிருக்கும் T, R. மஹாதேவ ரையர்-(பண்டிதாள்) அவர்களால் இயற்றப்பட்டு ரிஜிஸ்தர் செய்திருப்பதால், அவர்களுடைய அனுமதியன்றி அச்சில் பதிப்பிக்கின்றவர்களும், பதிப்பிக்கும் அச்சுக்கூடத்தலைவர்களும், 1887-ஞூ ச்திய 25-வது ஆக்ட்டு 20-வது பிரிவின் 6-வது விதியின்படி இக்கிரந்தகர்த்தா ஏற்படுத்தும் நஷ்டத்திற்கு உத்திரவாதிகளாகவும், கோர்ட்டார் அவர்களால் விதிக்கும் சிக்ஷைகளுக்குமுள்ளாக வேண்டியதாயிருக்கு மென்பதையும் அறியவும்.

CONTENTS.

பொருள் அடக்கம்.

;o:

உ
கடவுள் துணை.

பிராணரக்ஷாமிர்தசிந்து

என்னும்

வைத்தியரத்ன சங்கிரகம்.

முதலாவது பாகம்.

1-வது அத்தியாயம்.

தேகத்தில் வாதம், பித்தம், சிலேஷ்மம் இவைகள் வியாபிக்கும் ஸ்தானங்கள்.

வாதமானது அனுத்துவ ரூபமாக பாதம் முதல் நாபிவரையிலும் பித்தமானது அதி உஷ்ண ரூபமாக நாபி முதல் கண்டம் வரையிலும், சிலேஷ்மமானது அதி சீதள ரூபமாக கண்டம் முதல் சிரசு வரையிலும் வியாபிக்கும்.

வாதம், பித்தம், சிலேஷ்மம் இவைகளின் குணங்கள்.

°தோஷம்.	சுபாவ குணம்.	விருத்தி குணம்.	க்ஷீண குணம்.
வாதம்.	§7 தாதுக்கள், §14 வேகப்பிரவர்த்திகள் முதலியவைகளால் சரீரத்தைக் காப்பாற்றி சுபாவருபமாயிருப்பதாம்.	தேகத்தில் பலஹீனம், மலஜலக்கட்டு, உப்பிசம் இவைகளை உண்டாக்கும்.	பேசத் திராணியில்லாமை, ஞாபகமறதி இவைகளை உண்டாக்கும்.
பித்தம்.	சுபாவ உஷ்ணத்தால் சரீரத்தைக் காப்பாற்றி சுபாவ ரூபமாயிருப்பதாம்.	மலம், மூத்திரம், கண்கள் இவைகள் மஞ்சள் நிறமாயிருக்கும்.	மந்தம், சீதளம் இவைகளை உண்டாக்கும்.
சிலேஷ்மம்.	சுபாவ சீதளத்தால் சரீரத்தைக்காப்பாற்றி சுபாவ ரூபமாயிருப்பதாம்.	உப்பிசம், மந்தம், நித்திரை இவைகளை உண்டாக்கும்.	புத்திமாறும் சிலேஷ்மம்குறையும்.

° தோஷம் என்பது வாதம், பித்தம், சிலேஷ்மம் இவைகளுக்குப் பொதுப் பெயராம்.

§ ரசதாது, ரத்ததாது, மாமிசதாது, மேதோதாது, அஸ்திதாது, மச்சாதாது, சுக்கிலதாது என ஏழுவகைகளாம்.

§ அபானவாயு, தும்மல், மலம், மூத்திரம், கொட்டாவி, பசி, தாகம், இருமல், நித்திரை, கண்ணீர், சுக்கிலம், சுவாசம், வாந்தி, இளைப்பு என்பவைகளாம்.

வாதம், பித்தம், சிலேஷ்மம் இவைகளின் குறிகள்

மலத்தால் வாதகுணமும், மூத்திரத்தால் பித்தகுணமும், விந்துவால் சிலேஷ்ம குணமும் அறியவேண்டியது.

அஷ்டவிதபரிக்ஷைகள்.

பரிக்ஷிக்கவேண்டியவைகள்	வாதரோகியின் லக்ஷணங்கள்.	பித்தரோகியின் லக்ஷணங்கள்.	சிலேஷ்ம ரோகியின் லக்ஷணங்கள்.
சரீரம்	கருப்பு நிறம்	மஞ்சள் நிறம்	வெள்ளை நிறம்
பரிசம்	சில யிடத்தில் சீதளம் சிலயிடத்தில்உஷ்ணம்	அதி உஷ்ணம்	சீதளம்
கண்கள்	கறுப்பு நீர்வடிதல்	சிவந்த மஞ்சள் நிறம்	வெள்ளை நிறம்
மலம்	கறுப்பு நிறம்	சிவந்த மஞ்சள் நிறம்	வெள்ளைநிறமும் சீதமும்
மூத்திரம்	வெள்ளை நிறம்	சிவந்த மஞ்சள் நிறம்	வெள்ளை நிறமாயுங் குழம்பாயும், நுரையாயும் இருக்கும்.
நாக்கு	கறுப்பு முள்ளும் வெடிப்பும்	சிவந்த மஞ்சள் நிறம்	வெள்ளைநிறமும் ஜலம் ஊறுதலும்.
சத்தம்	சமசொனி	உரத்த சொனி	ஹீனசொனி
நாடி	பாம்பு, அட்டை, தவளை, ஒஞன், இவைகளின் நடைகள்.	தாரா, மயில், அன்னம் இவைகளின் நடைகள்.	கோழி, ஊர்க்குருவி இவைகளின் நடைகள்.

நாடியை பரிக்ஷிக்கும் ஸ்தானங்கள்.

(1) கை, (2) கண்டம், (3) கண்ணைச்சுழி, (4) காலின் பெரும் விரல், (5) கணுக்கால் இவைகளில் பரிக்ஷிக்கலாம், ஆனால் கையை பரிக்ஷிப்பது தான் உத்தமம்.

நாடிநடக்குங் காரணங்கள்.

இருதயம் விரியவும் சுருங்கவும், நாடி நரம்புகளும் விரியவும் சுருங்கவும் செய்யும். இருதய நடைக்கு நாடிநடை ஒத்திருப்பதால், தேகத்திலிருக்கின்ற ரோகங்களை இருதயம் அறிந்து நாடிகளின் வழியாய்த் தெரிவிக்கின்றது.

நாடிபரிக்ஷிக்கும் விதங்கள்.

கையின் பெருவிரல் பக்கமாய் ஓடும் நாடியை, மணிக்கட்டுக்கு ஒரு அங்குலம் மேலாக மூன்று விரல்களால் அழுத்தியும், தளர்த்தியும், சமமாகவும் மாறி மாறி பரிக்ஷிக்க நாடிநடை அறியலாம். புருஷர்களுக்கு வலதுகையும், ஸ்திரீகளுக்கு இடதுகையும் பரிக்ஷிக்கவேண்டியது. ஆனால் இரண்டு கைகளும் பரிக்ஷிப்பது உத்தமம்.

ஒரு மினிட்டுக்கு நாடி நடை பிரமாணம்

பருவம்.	ஒருமினிட்டுக்கு நாடி நடக்கும் பிரமாணம்.	நாடி பரீக்ஷிக்கும் நிலமை.	ஒருமினிட்டுக்கு நாடி நடக்கும் பிரமாணம்.
அப்போது பிறந்த சிசுவுக்கு	140	மனிதன் நிற்கும்போது	79
பால்லியத்தில்	120—130	,, உட்கார்ந்திருக்கும்போது	70
குழந்தையில்	100	,, படுத்திருக்கும்போது	67
எவ்வனத்தில்	90	ஆகையால் மனிதன் நிற்கும்போது நாடியைப்பரீக்ஷிக்கலாகாது.	
சம்பூர்ண பருவபுருஷனுக்கு	70—75		
மேற்படி ஸ்திரீக்கு	75—80		
க்ஷீணபருவத்தில்	70		
விருத்தாப்பியத்தில்	75—80		

நிரோகியாயிருக்கையில் தேகத்தில் வாதம், பித்தம், சிலேஷ்மம் இவைகளின் அளவுகள்.

சரீரத்தில் சிலேஷ்மம் பங்கு 1, பித்தம் பங்கு 2, வாதம் பங்கு 4, இவ்விதமாய் இருக்குமாகில் ரோகமில்லை.

நாடிகளின் சேர்க்கைகளாலுண்டாகும் ரோகங்கள் முதலியவைகளைக் காண்க.

நாடிகளின்பெயர்கள்.	நாடிகளின் குணங்கள்.	ரோகங்களின் குணங்கள்.	ரோகங்களின் பெயர்கள்.
வாதபித்த நாடி	பாரஞ்சுமந்து நடப்பதுபோல் நடக்கும்.	வயிற்றுவலி, உப்பிசம், தாகம்.	பாண்டு, காமாலை, மகோதரம், கிராம்பல், முதலியவைகள்.
வாதசிலேஷ்ம நாடி	முறிந்த அரணைவால் துடிப்பதுபோல் நடக்கும்.	தலைவலி, கைகால் திமிருதல், வயிற்றுப்பொருமல்.	சன்னி, மயக்கம், சோபை, பாண்டு, மூர்ச்சை, முதலியவைகள்.
பித்தவாத நாடி	வீணை அடிப்பதுபோல் நடக்கும்.	தேகவலி, எரிவு, நாக்கு, நெஞ்சுவறளல், நோவு.	பீநிசம், மூலம், வலிப்பு, பவுத்திரம், அரையாப்பு, முதலியவைகள்.
பித்தசிலேஷ்மநாடி	பிள்ளைத்தொட்டிலில் ஆடுவதுபோல நடக்கும்.	வயிறு உப்பல், பிதற்றல், கண் எரிவும் மஞ்சள் நிறமாயிருக்கும்.	தலைசுற்றல், வயிற்றுவலி, பிடரிவலி, முதலியவைகள்.
சிலேஷ்ம வாதநாடி	புணர்ச்சிபோல் நடக்கும்.	கப மதிகம், தாகம்.	ஜன்னி, தலைவலி, முதலியவைகள்.

சிலேஷ்மபித்தநாடி	வண்டிச்சக்கரம் சுழலுவது போல நடக்கும்.	மண்டையிடி, காதுகேளாது, நாக்கு இனிப்பு.	ஜன்னி, முதலியவைகள்.
அதிவாதநாடி	வாதநாடி அதிகமாக நடக்கும்.	தேகநோவு, தேகபெலக்குறைவு, அன்னத்துவேஷம்.	வாதரோகங்கள்.
அதிபித்தநாடி	பித்தநாடி அதிகமாய் நடக்கும்.	இறுகிறுப்பு, பிதற்றல், சத்தி, இளைப்பு, தேகம் உலர்ந்து வீங்கும்.	பித்தரோகங்கள்.
அதிசிலேஷ்மநாடி	சிலேஷ்மநாடி அதிகமாய் நடக்கும்.	உயிர்பிரியும்.	ஜன்னி, சயித்தியம்.
வாத பித்தசிலேஷ்மநாடி	நாடி மூன்றும் படபடவென்று நடக்கும்.	சன்னிக்குறிய விகாரங்கள்.	ஜன்னி, முதலியவைகள்.

1-வது அத்தியாயம் முற்றிற்று.

2-வது அத்தியாயம்.

பருவங்களின் வகுப்புகள் காண்க.

நம்பர்.	பருவங்கள்.		வருஷம். முதல்	வரை
1	பாலயம்	(1) முலைப்பால்உண்ணும்பருவம்	பிறப்பு	1
		(2) பால்குடிக்கும் பருவம்	2	2
		(3) பால்யம் பருவம்	3	15
2	எவ்வனம்	(1) விருத்திபருவம்	16	20
		(2) எவ்வனபருவம்	21	30
		(3) சம்பூர்ணபருவம்	31	40
		(4) க்ஷீணபருவம்	41	70
3	விருத்தாப்பியம்		71	100

ஸ்திரீகள், புருஷர்கள் இவர்களின் பருவகாலங்கள்.

புருஷர்கள் 25-வது வயதிலும், ஸ்திரீகள் 16-வது வயதிலும், பருவ காலத்தை அடைவார்கள்.

அவுஷதங்களின் அளவு நிர்ணயங்கள்.

இந்த புஸ்தகத்தில் ஒவ்வொரு வேளைக்குக் கொடுக்கும்படிச் சொல்லிய மருந்தின் அளவு யவ்வனபருவமுடைய புருஷர்களுக்குத் தகுதியானது.

மருந்துக்கொடுக்குமுன் கவனிக்க வேண்டியவைகள்.

நோயாளியின் (1) வயது, (2) வாதபித்தசிலேஷ்ம குணங்கள், (3) தேகபலம், (4) அப்பியாசம், (5) தொழில், (6) மலபாதை,

(7) தேசத்தின் உஷ்ண சீதள ஸ்திதி, (8) புருஷனுக்கு இப்படி ஸ்திரீக்கு இப்படி என்னும்பேதம், (9) ரோகம் நிலைத்தகாலம், (10) தீபனம், (11) நாடிநடை, (12) தேகசுபாவம், இவைகளை அறிந்து மருந்தின் அளவை நிட்சயிக்கவேண்டியது.

டாக்ட்டர் பேரிருதுரையானவர் ஏற்படுத்தின ஒருவேளைக்குக் கோடுக்கும் மருந்துகளின் அளவைகாண்க (Dr. Pereira)

நோயாளின் வயது.	ஒருஅவுன்ஸாகில்	ஒரு திராமாகில்.	20-கிறேன் ஸாகில்.
மாதம் 1 வரை	திராம் ½ (?)	கிறேன் 3	கிறேன் 1
,, 3 ,,	——	,, 4	——
,, 6 ,,	ஸ்குருபில் 2	,, 6	,, 2
,, 9 ,,	——	,, 7	——
வருஷம் 1 ,,	திராம் 1	,, 8	,, 3
,, 2 ,,	,, 1½ (௧?)	,, 10	,, 4
,, 3 ,,	,, 1½ (௧?)	,, 12	,, 4
, 4 ,,	,, 2	,, 15	,, 5
,, 5 ,,	,, 2½ (௨?)	,, 18	,, 6
,, 6 ,,	,, 3	,, 20	,, 7
,, 7 ,,	,, 3½ (௩?)	,, 25	,, 8
,, 8 ,,	,, 4	,, 30	,, 10
,, 10 ,,	,, 4½ (௪?)	,, 35	,, 12
,, 12 ,,	,, 5	,, 40	,, 14
,, 13 ,,	,, 5½ (௫?)	——	,, 15
,, 15 ,,	,, 6	,, 45	,, 16
,, 18 ,,	,, 6½ (௬?)	——	,, 17
,, 20 ,, வரைக்கும்	,, 7	,, 50	,, 18
21-முதல் 45 ,,	அவுன்ஸ் 1	திராம் 1	,, 20
50 ,,	திராம் 7	கிறேன் 50	,, 18
60-முதல் 70 ,,	,, 6	,, 45	,, 16
80-முதல் 90 ,,	,, 5	,, 40	,, 14
100	,, 4	,, 30	,, 10

இப்புஸ்தகத்தில் ஒருதடவைக்குக் கொடுக்கும்படி சொல்லி மருந்துகளின் அளவை வயதுக்குத்தக்கபடி பாகித்துக்கொடுக்க வேண்டியதைக் காண்க.

வயது ஆரம்பம் முதல்.	வயது முடியும் வரையில்.	வயதுக்குத் தக்கபடி ஒருதடவைக் குக் கொடுக்கும் அளவின் பாகங்கள்.
பிறப்பு.	3 மாதம்	16-ல் ஒருபாகம் $(\frac{1}{16})$
4-வது மாதம்	1 வருஷம்	12-ல் ஒருபாகம் $(\frac{1}{12})$
2-வது வருஷம்	2 வருஷம்	8-ல் ஒருபாகம் $(\frac{1}{8})$
3-வது ,,	3 ,,	6-ல் ஒருபாகம் $(\frac{1}{6})$
4-வது ,,	4 ,,	4-ல் ஒருபாகம் $(\frac{1}{4})$
5-வது ,,	7 ,,	3-ல் ஒருபாகம் $(\frac{1}{3})$
8-வது ,,	14 ,,	2-ல் ஒருபாகம் $(\frac{1}{2})$
15-வது ,,	20 ,,	3-ல் இரண்டுபாகம் $(\frac{2}{3})$
21-வது ,,	60 ,,	பூர்ண அளவு (1).

அவுஷதங்களைச் சாப்பிட நல்ல நாள்கள்

மருந்துகள் தொடர்ச்சியாய் வெகுகாலம் சாப்பிடவேண்டியதாய் இருந்தால் அடியில்கண்ட நட்சத்திரங்களும், வாரங்களும் அனுசரித்து ஆரம்பிக்க வேண்டியது.

ரேவதி, அசுவனி, புனர்வசு, பூசம், அஸ்தம், சித்திரை, சுவாதி, திருவோண, அவிட்டம், சதயம், அனுஷம், மூலம், மிருகசீரிடம் இந்தநட்சத்திரங்களிலும், ஞாயற், வியாழம் இந்த வாரங்களிலும் மருந்தைச்சாப்பிடுவதற்கு ஆரம்பிக்கவேண்டியது.

பிரம்மாவின் ஆயிசு

அல்லது

மகாகல்பகால நிர்ணயம்.

15 கண்ணிமை	=	1 காஷ்டை
30 காஷ்டை	=	1 கலை
30 கலை	=	1 முகூர்த்தம்
30 முகூர்த்தம்	=	1 இராப்பகலுள்ள நாள்
15 நாள்	=	1 பக்ஷம்
2 பக்ஷம்	=	1 மாதம்
2 மாதம்	=	1 இருது
3 இருது	=	1 அயனம்
2 அயனம்	=	1 வருஷம்
100 வருஷம்	=	1 மனிதன் ஆயிசு
1728000 வருஷம்	=	1 கிருதயுகம்
1296000 வருஷம்	=	1 திரேதாயுகம்
864000 வருஷம்	=	1 துவாபரயுகம்
432000 வருஷம்	=	1 கலியுகம்
4320000 வருஷம்(4-யுகம்)	=	1 மகாயுகம்
306720000 வருஷம்(71-மகாயுகம்)	=	1 மனுவின்காலம்
4294080000 வருஷம்(994-மகாயுகம்)	=	14 மனுக்களின்காலம்
25920000 வருஷம்(6-மகாயுகம்)	=	2 சந்திகள்
4320000000 வருஷம்(1000-மகாயுகம்)	=	1 கல்பம் (பிரம்மாவின்பகல்)
8640000000 வருஷம்	=	பிரம்மாவின் 1 நாள்
3110400000000 வருஷம்	=	பிரம்மாவின் 1 வருஷம்
311040000000000 வருஷம்	=	1 மகாகல்பம் (பிரம்மாவின் ஆயிசு)

2-வது அத்தியாயம்.

அடியில்கண்ட நிறைகளின்படியும், அளவுகளின்படியும், அவுஷதங்கள் நிறுக்கவும், அளக்கவும் வேண்டியது.

அளவுகள்.	நிறைகள்.
ரசம் ஜலரூபமாயிருந்தபோதிலும் நிறுத்துக்கொள்ளவேண்டியது	4 நெல்லிடை=1 குன்றிமணி
சுமார் 1½ (சஉ) துளி=1 மினிம்	3½ குன்றிமணி=1 பணவிடை
60 மினிம்=1 ப்ளூயிட்டிராம்	9 பணவிடை=1 விராகனிடை
8 டிராம்=1 ப்ளூயிட்அவுன்ஸ்	2 குன்றிமணி=$\frac{1}{16}$ (பஉ) விராகனிடை
20 அவுன்ஸ்=1 பையிண்ட்	32 குன்றிமணி=1 விராகனிடை
8 பையிண்ட=1 காலன்	10 விராகனிடை=1 பலம்=3ரூபாயிடை
4 டிராம்=1 டேபில்ஸ்பூண்	8 பலம்=1 சேர்=24 ரூபாயிடை
2 டிராம்=1 டெஸர்ட்ஸ்பூண்	5 சேர்=1 வீசை
1 டிராம்=1 டீஸ்பூண்	8 வீசை= 1 மணங்கு
6 அவுன்ஸ்=1 ஆழாக்கு	20 மணங்கு=1 பாரம்
4 ஆழாக்கு=சுமார் 1 புட்டி	சுமார் ½ (உ) குன்றிமணி=1 கிறேன்
8 ஆழாக்கு=1 படி	20 கிறேன்=1 ஸ்குருபில்
2 ஆழாக்கு=1 ஒழக்கு	3 ஸ்குருபில்=1 டிராம்
2 ஒழக்கு=1 உரி	8 டிராம்=1 அவுன்ஸ்
2 உரி=1 படி	12 அவுன்ஸ்=1 பவுண்டு
2 படி=1 குருணி (மரக்கால்)	1 ரூபாயிடை=3 டிராம்
2 மரக்கால்=1 பதக்கு	**காலங்கள்.**
2 பதக்கு=1 தூணி	60 விநாடி(ஸெகண்டு)=1 நிமிஷம் (மினிட்டு)
3 தூணி=1 கலம்	60 நிமிஷம்=1 மணி (அவ்வர்)
1 காலன்=76800 மினிம்	24 மணி=1 நாள் (டே)
1 பையின்ட்=9600 மினிம்	7 நாள்=1 வாரம் (வீக்)
1 அவுன்ஸ்=480 மினிம்	4 வாரம்=1 மாதம் (மன்த்)
1 டிராம்=60 மினிம்	12 மாதம்=1 வருஷம் (இயர்)
1 டேபில்ஸ்பூண்=சுமார் 240 மினிம்	12 வருஷம்=1 மாமாங்கு
1 டெஸர்ட்ஸ்பூன்=120 மினிம்	48 நாள்=1 மண்டலம்
1 டீஸ்பூன்=60 மினிம்=90 துளி	

☞ 8 அவுன்ஸ்=1 டம்பளர்புல் (Tumblerful)
4 அவுன்ஸ்=1 டீக்கப்புல் (Teacupful)
2 அவுன்ஸ்=1 வைன்கிளாஸ்புல் (Wineglassful)
1 அவுன்ஸ்=1 எக்கப்புல் (Eggcupful)

4-வது அத்தியாயம்.

மருந்துகளின் வகுப்புகள்.

1. அங்காகர்ஷண நாசகாரிகள்—[Antisposmodics.] இசிவு ரோகங்களைத்தடுக்கும் மருந்துகள்.

2. ஆம்ல நாசகாரிகள்—[Antacids] வயிற்றிலுள்ள புளிப்பைக்கண்டிக்கும் மருந்துகள்.

3. உதரவாத ஹாரகாரிகள்—[Carminatives] வயிற்றில் உஷ்ணஞ் செய்து வாயுவைக்கண்டிக்கும் மருந்துகள்.

3. உச்சாககாரிகள்—[Stimulants] நாடிநடையும்சரீரத்தில் உஷ்ணத்தையும் அதிகரிக்கிற மருந்துகள்.

5. கபஹாரகாரிகள்—[Expectorants] கபத்தை அதிகரித்து வெளியாக்கி, இருமலை நீக்கும் மருந்துகள்.

6. கிருமிநாஷகாரிகள்—[Anthelmintics] வயிற்றிலுள்ள நாக்குப்பூச்சிகளை வெளியாக்கும் மருந்துகள்.

7. ஸ்மிரிதிரோதகாரிகள்—[Anaesthetics] பிரக்ஞை இல்லாமல் செய்து நோயைத்தெரிவிக்காமல் செய்யும் மருந்துகள்.

8. சமனகாரிகள்—[Sidatives] உஷ்ணிக்காமல் தாதுக்களின் கொதிப்பைத்தணித்து வேதனையைகுறைத்து நித்திரையை வரும்படிச் செய்யும் மருந்துகள்.

9. சீதளகாரிகள்—[Refrigerants] அதிகரித்திருக்கிற உஷ்ணத்தைத்தணித்து தாகத்தை உண்டாக்காமல் செய்கிற மருந்துகள்.

10. சினிக்தகாரிகள்—[Demulcents] தாதுக்களின் எரிச்சலை குறைத்து அவைகளை துவளச்செய்யும் மருந்துகள்.

11. சுரஹாரகாரிகள்—[Febrifuges] சுரத்தை நீக்கும் மருந்துகள்.

12. சுவேதகாரிகள்—[Diaphoretics] வியர்வையுண்டாக்கும் மருந்துகள்.

13. சோபாநாசகாரிகள்—[Deobstruents] வீக்கம், கட்டி இவைகளைக் கரைக்கும் மருந்துகள்.

14. சோணகாரிகள்—[Rubefacients] மருந்து உபயோகித்த இடத்தை சிவப்பாக்கி எரிச்சல், உஷ்ணம் இவைகளைஉண்டாக்கிற மருந்துகள்.

15. தாருட்டியகாரிகள்— [Tonics] தேகத்திற்கு பலத்தையுண்டாக்கும் மருந்துகள்.

16. திரவகாரிகள்—[Sialogogues]எரிச்சலையுண்டாக்கும் மருந்துகள்.

17. துவக்ஸபோடகாரிகள்— [Vesicants] மருந்து போட்டயிடம் நீர்க்கொப்பளத்தை உண்டாக்கும் மருந்துகள்.

18. நஸ்யங்கள்— [Sternutatories] நாசிநீரை விருத்திசெய்யும் மருந்துகள்

19. நித்திராகாரிகள்— [Narcotics] நோயைத்தணித்து நித்திரையையுண்டாக்கும் மருந்துகள்.

20. பிரசவகாரிகள்— [Parturifacients] பிரசோதவாயுவை அதிகரித்து கருப்பையை சுருங்கச்செய்யும் மருந்துகள்.

21. பித்தகாரிகள்— [Cholagogues] பித்தநீரை விருத்திசெய்யும் மருநதுகள்.

22. பூதி நாசகாரிகள்— [Disinfectants] சரீரத்தின் தாதுக்களை அழிகிப்போகாமல் தடுக்கிற மருந்துகள்.

23. மூத்திரவர்த்தனகாரிகள்— [Duiretics] மூத்திரத்தை அதிகமாக்கும் மருந்துகள்.

24. ரக்தஸ்தம்பனகாரிகள்— [Styptics] ரத்தத்தை அதிகரிக்காமல் நிறுத்தும்படி செய்யும் மருந்துகள்.

25. ஜாடராக்கினி வர்த்தனகாரிகள்— [Stomachics] தீபனத்தை உண்டாக்கும் மருந்துகள்.

26. ருதுவர்த்தன காரிகள்— [Emmenagogues] சுரோணிதத்தை வெளியாக்கி சுவாபீகஸ்திதியை உண்டாக்கும் மருந்துகள்.

27. வமனகாரிகள்— [Emetics] வாந்தியை ஆக்கும் மருந்துகள்.

28. விரேசனகாரிகள்— [Cathartics] பேதியை உண்டாக்கும் மருந்துகள்.

29. விரணகாரிகள்—[Caustics] புண்ணாக்கும் கார மருந்துகள்.

30. விஷநாஷகாரிகள்— [Antidotes] விஷத்தை முறிக்கும் மருந்துகள்.

31. வியதாபேதகாரிகள்— [Alteratives] வியாதியை நாளுக்குநாள் குணமாக்கி சரீரத்தை ஆரோக்கிய ஸ்திதியில் கொண்டுவரும் மருந்துகள்.

32. வீரிய வர்த்தனகாரிகள்— [Aphrodisiacs] காமம், போகம் இவைகளை விருத்தியாக்கும் மருந்துகள்.

33. வேதனுசாந்தகாரிகள்— [Anodynes] நோவைத்தணிக்கும் மருந்துகள்.

34. ஜலவர்த்தனகாரிகள்— [Diluents] ரத்த நீரை விருத்தியாக்கும் மருந்துகள்.

35. வீரியநாஷகாரிகள்— [Anaphrodisiacs.] காமம், போகம், இவைகளை க்ஷீணமாக்கும் மருந்துகள்.

36. ஹஸ்மரிஹரகாரிகள்— [Lithics] மூத்திரத்தில் கல்லைக்கரைத்தாவது அல்லது கல்லை உத்பத்தியாக்காமல்செய்யும்மருந்துகள்.

37. சங்கோசனகாரிகள்— [Astringents] சதை, நரம்பு. முதலியவைகளை சுருங்கச்செய்யும் மருந்துகள்.

38. அபகர்ஷணகாரி— [Depressant] தாதுக்களின் பலத்தைக் குறைக்கிற மருந்துகள்.

39. ஆம்ல விர்த்தினி— [Antalkaline] கர்ப்பத்திலுள்ள புளிப்பை அதிகரிக்கிற மருந்துகள்.

40. உக்கிரரோகசமனகாரி— [Antiphlogistic] தாபம் முதலிய குரூர ரோகங்களை சாந்தம்படுத்துகிற மருந்துகள்

41. தாது க்ஷீணரோதி – [Antiseptic] தேகதாதுக்களையும் இன்னும் இதர பதார்த்தங்களையும் அழுகவோட்டாமல் காப்பாற்றுகிற மருந்துகள்.

42. மலகாரி— [Laxative] மெதுவாய் பேதியை உண்டாக்கிற மருந்துகள்.

43. முறை வியாதிரோதி—[Antiperiodic] முறைக்காச்சல் முதலியவைகளை வராமல் தடைசெய்கிற மருந்துகள்

44. ரக்த வியாபனகாரி—[Cordial] ரக்தத்தைப் பரவசெய்கிற மருந்துகள்.

45. வமனவியதாகாரி—[Nauseant] வாயில் அரிவருப்பை உண்டாக்கிற மருந்துகள்.

46. சிக்தகாரி—[Emmolient] உட்கொண்டால் தாதுக்களின் எரிச்சலை சாந்திசெய்து அவற்றை துவள்விக்கிற மருந்துகள்.

47. பூயஜனகாரி—[Suppurative] சீக் கொப்பளங்களை உண்டாக்கிற மருந்துகள்.

5-வது அத்தியாயம்.

காற்று-வாயு.(Air)

காற்று பூமியிலிருந்து சுமார் 45 மைல் உயரம் அளாவி இருக்கின்றது. ஆக்சிஜென், நைட்ரோஜன், என்னும் இரண்டுவித வாயுகள் சேர்ந்து நமது பிராணனுக்கு ஆதாரமாகிய காற்று உண்டாயின. நூறுபங்கு காற்றில் 20 பங்கு ஆக்சிஜென் வாயுவும், 80 பங்கு நைட்ரோஜன் வாயுவும் இருக்கின்றன. காற்றில் வேறு சில வாயுகள் கலந்திருக்கும், அதாவது கார்பொனிக் ஆஸிட், ஜலம் முதலியவைகளாம். காற்ரோட்டம் இல்லாத இடத்தில் கும்பல் சேர்ந்திருந்தால் அவ்விடத்தில் கார்பொனிக் ஆஸிட் அதிகமாயிருக்கும். இந்த வாயுவை ஆக்கிராணித்தால் இறந்துவிடுவார்கள். அழிகிப்போன பதார்த்தங்கள், சாக்கடைகள், எரிகிற விளக்குகள் முதலியவைகளிலும் இந்த வாயு ஜெனித்து காற்றில் சேர்ந்திருக்கும். காற்று இல்லாவிட்டால் சகலமும் நாஸமடையும்; காற்றிலிருக்கிற ஆக்ஸஜென் வாயுதான் நமது பிராணனை நிலைபெற்றிருக்கும்படிசெய்கிறது.

6-வது அத்தியாயம்.

ஜலம்.(Water.)

சுத்தமான ஜலத்துக்கு வாசனை, நிறம், ருசி இவைகள் இல்லை. சாதாரணமாய் ஜலம் வாயுரூபமாகிக் காற்றில் கலந்துவிடுகிறது. காற்றில் ஜலம் அதிகமாயிருந்தால் சீதளமாயும், குறைந்திருந்தால் உஷ்ணமாயும் இருக்கும். குளிர்ந்த ஜலத்தை மிதமாகச் சாப்பிட்டால் தாகத்தை அடக்கும், உஷ்ணத்தைத் தணிக்கும், தீபனத்தை உண்டாக்கும், ரத்த நீரை சமரசப் படுத்தும்.

அதிகமாவது, போஜனம் செய்கிறதற்கு முன்னமேயாவது ஜலஞ்சாப்பிட்டால் அக்கினிமந்தரோகங் காணும். மிதமாய் போஜனம் செய்யும்போதுச் சாப்பிட்டால் பதார்த்தங்களோடுச் சேர்ந்து மெத்த பிரயோஜனத்தைத் தரும். குளிர்ந்த ஜலஸ்நானம் தேகத்தை பலப்படுத்தும். ஆனால் பலஹீனர், கர்ப்ப ஸ்திரீகள், ரோகிகள், சிசுகள் இவர்கள் குளிர்ந்த ஜலத்தில் ஸ்நானஞ் செய்யக் கூடாது. குளிர்ந்த ஜலத்தில் கார்பொனிக் அஸிட்வும், ஆகாயமும் சேர்ந்திருப்பதால் இதற்கு ருசி உண்டு. ஜலத்தைக் காய்ச்சும்போது அதிலுள்ள இரண்டு வாயுகளும் வெளியேபோக ருசியும் நீங்கிவிடுகிறது. வெந்நீர் ஸ்நானம் தேகத்தில் ரத்தத்தை பரவ செய்து சமரசப்படுத்தும், மாம்ச தாதுக்களை தளர்ச்சிசெய்யும். வெந்நீர் குடிக்க சுரம், காசம், குன்மம், தலைவலி முதலியவைகள் தீரும். குடிக்கிற வெந்நீரின் உஷ்ணம் 100-டிக்கிரி இருக்கவேண்டியது

பற்பல ஜலங்களின் பெயர்களும் குணங்களும்.

ஜலங்களின் பெயர்கள்.	ஜலங்களின் குணங்கள்.
ஆற்று ஜலம்.	வாத பித்த சிலேஷ்மங்களாலுண்டாகும் பற்பல ரோகங்கள் தீரும்
குளத்து ஜலம்.	வாதம், மதுமூத்திரம், சீதளம் உண்டாக்கும்.
தாமரை குளத்து ஜலம்.	பற்பல ரோகங்களை உண்டாக்கும்.
அல்லி குளத்து ஜலம்.	பற்பல ரோகங்களை உண்டாக்கும்.
ஏரி ஜலம்.	வாதம் உண்டாக்கும்.
சுனை ஜலம்.	வாத பித்த சிலேஷ்மரோகங்களைஉண்டாக்கும்
கிணற்று ஜலம்	மயக்கம், வீக்கம், சுவாசம், பித்தந்தீரும்.
ஊற்று ஜலம்.	பித்தம், தாகந்தீரும்.
பாறை ஜலம்.	வாதம், சுரம் உண்டாக்கும்.
சுக்கான் ஜலம்.	நீர்எரிவு, கபம், பித்தம், உண்டாக்கும். வாதம் தீரும்.
சமுத்திர ஜலம்.	பீலிகம், குன்மம், குஷ்டம், உதரரோகம், கண்டமாலைத் தீரும்.

7-வது அத்தியாயம்.

மருந்துகள் பிரயோகிக்கும் காலம்.

மருந்துகளின் பெயர்கள்.	காலம்.		மருந்துகளின் பெயர்கள்.	காலம்.	
	வருஷம்.	மாதம்.		வருஷம்.	மாதம்.
பஸ்மங்கள்.	600	,,	வடகங்கள்.	,,	3
செந்தூரங்கள்.	500	,,	கிருதங்கள்	,,	2
கட்டுவகைகள்.	100	,,	ஷர்பத்துகள்.	,,	1
திராவகங்கள்.	50	,,	மெழுகுகள்.	1	,,
ரசாயனங்கள்.	1	,,	தாதுவர்க்க மாத்திரைகள்.	100	,,
தைலங்கள்.	,,	9	தாவரவர்க்க மாத்திரைகள்.	2	,,
லேகியங்கள்.	,,	8	பிளாஸ்திரிகள்.	,,	10
பாவனங்கள்.	1	,,	தூபசூரணங்கள்.	1	,,
ஊறல்வாக்கள்.	,,	½	லேபனபில்லைகள்.	3	,,

பத்திய விதிகள்.

இச்சாபத்தியம்:—முள்ளுள்ள பாகல்காய், மாங்காய், கத்திரிக்காய், கொத்தவரைக்காய், வெள்ளைப்பூசினிக்காய், அகத்திக்கீரை, கடுகு, எள்ளு, மந்தவகைப்பதார்த்தங்கள் நீக்கி உண்பதாம்.

உப்பில்லாபத்தியம்—இந்த பத்தியம் வைத்தநாளும் மறுபத்தியமிருந்து பின்னுளில் உப்பு வறுத்துக்கூட்டி, அதற்கு பின்னுல் முறையே ஓமப்பாலிட்டு முழுகி புளிசேர்த்து பசுநெய்யை தேய்த்து ஸ்நானஞ்செய்யவும்.

பத்திய பதார்த்தங்கள்.

புடலம்பிஞ்சி, அகத்திப்பிஞ்சி, அவரைப்பிஞ்சி, ஆடாதோடைக்காய், அறுக்கீரை, கத்திரிப்பிஞ்சி, துவரை, கோதுமை, சிறுப்பயறு, சிறுக்கீரை, தூதுளை, வசலை, பழம்புளி, பீர்க்கம்பிஞ்சி, புதியநெய், பெருங்காயம், பொன்னுங்காணி, மணத்தங்காளி, மாங்காய்ப்பருப்பு, மாங்காய்வடுவு, முருங்கைப்பிஞ்சி, முன்னை, வாழைப்பிஞ்சி, வாழைப்பூ, வெண்டைப்பிஞ்சி, வெள்ளுள்ளி, வேளை, இவைகளும்; ஜீவவர்க்கங்களில் ஊர்க்குருவி, உடும்பு, உள்ளான், கவுதாரி, காடை, கோழிக்குஞ்சு, முசல், மான், வெள்ளாடு, கச்சைக்கருவாடு, காரைப்பொடி, ஓலைவாளைச்சரகு, குரவை, சுறு, கிழங்கான், சென்னுக்கூனி, திருக்கை, வரால், வெள்ளாறு, நெத்திலி, சுதும்பு இவைகளும்; ஊறுகாய்களில், இஞ்சி, கடுக்காய், எலுமிச்சங்காய், களாக்காய், நார்த்தங்காய், மரிமாங்காய், நெல்லிக்காய், மாம்பிஞ்சி, இவைகளும்; பழவகைகளில், திராக்ஷை, ஆல்பகோரா, கிச்சிலி மாதுளம், பேயன்வாழை இவைகளும்; துவயல்களில் பிரண்டை, புளியாரை, வேப்பம்பூ, பொதினு, பச்சைக்கொத்தமல்லி, நாய்க்கடுகு, துவரம்பருப்பு, பச்சைப்பருப்பு, இவைகளும் பத்தியத்துக்குத்தகுதியானது.

8-வது அத்தியாயம்.

தாது, தாவரவர்க்க பதார்த்தங்களின் சுத்திகள்.

1. சுவர்ணம்—தங்கத்தகடுகளுக்கு செம்மண்ணால் ஒவ்வொருதடவையும் லேபனஞ்செய்து நெருப்பைப்போல் பத்துதடவை காய்ச்சினால் சுத்தியாகும்.

2. ரஜதம்—வெள்ளித்தகடுகளைக்காய்ச்சி பழுப்பாகல் கிழங்குச்சாற்றில் ஏழுதடவை துவைத்தால் சுத்தியாகும்.

3. பவளம்—எலுமிச்சம்பழச்சாற்றில் ஒருநாள் ஊறவைத்து மறுநாள் வெந்நீரால் கழுவசுத்தியாகும்.

4. வெள்ளைப்பாஷாணம்—எருக்கம்பாலிலும், எலுமிச்சம்பழச்சாற்றிலும் முறையே ஒவ்வொருநாள் ஊறவைத்து பிறகு எடுத்துக்காடியில் கழுவி, மெருகன்கிழங்கு ஒன்றில் போதுமான பள்ளஞ்செய்து அதில் அந்த பாஷாணத்தை வைத்து அதின்பேரில் ஷை கிழங்கின் அறுத்தத்துண்டுகளை வைத்துமூடி அதற்கு சாணித்தடவி உலர்த்தி, அந்த கிழங்கை பாதி எரியும்படியாய் எரித்து எடுத்துக்கொள்ள சுத்தியாகும்.

5. ரசம்—ஒரு விதை நீக்கினமொளாகாவில் ரசத்தைப்போட்டு நாலுவிரற்கடைகனத்தில் கோவையிலையால் அதைச்சுற்றி ஏழு சீலை மண் வலுவாய் செய்து குக்குடப்புடம் போட்டு எடுத்துக்கொள்ள சுத்தியாகும்.

6. காந்தம்—பொற்றலைகையாந்தகரைச் சாற்றில் 21 தடவை காந்தத்தை குகையில்வைத்து உருக்கி ஊற்ற சுத்தியாகும்.

7. தாளகம்—பெரும் பூசினிக்காய்ச் சாற்றில் 2 ஜாமம் வேகவைத்து எடுத்து சுண்ணாம்புக் கல்லுக்குள் 100 தடவை நீற்றி, நல்லெண்ணெயில் 2 ஜாமம் எரித்து எடுக்க சுத்தியாகும்.

8. கர்ப்பூரசலாசத்து—பசும்பாலில் போட்டு காய்ச்சி எடுக்க சுத்தியாகும்.

9. முத்து—சங்கம்பழச்சாற்றில் 2 நாள் ஊறவைத்து எடுக்க சுத்தியாகும்.

10. காரீயம்—நல்லெண்ணெய், கோமூத்திரம், புளித்தமோர், புளித்த தண்ணீர், கொள்ளுவேகவைத்தஜலம், எருக்கம்பால், வெள்ளாட்டுப்பால் இவைகளில் ஒவ்வொன்றிலும் காரீயத்தை 21 தடவை உருக்கி ஊற்றினால் சுத்தியாகும்.

11. கந்தகம்—ஒரு புதுக்கலயத்தில் 2 சேர் பசும்பாலிட்டு சுத்தவஸ்திரத்தினால் வாயைக்கட்டி அதின்மேல் கந்தகம் பொடித்துப்போட்டு அதின்மேல் அகலால்மூடி சீலைமண்செய்து 10 எருவில் தாலிப்போட மேற்படி கந்தகம் மணிகளாக பாலில் இறங்கும். இவைகளை ஜலத்தால் கழுவினால் சுத்தியாகும்.

12. நாவி—எருமை மூத்திரத்தில் ஒருநாள் ஊறவைத்து; பிறகு வேகவைத்துக்கழுவி, உலர்த்தி, பிறகு எலுமிச்சம்பழச் சாற்றில் ஒருநாள் ஊறவைத்து உலர்த்திக்கொள்ள சுத்தியாகும்.

13. அப்பிரகம்—(1) அப்பிரகத்தை துண்டுகளாக்கி அவைகளை ஒரு கட்டாகக்கட்டி, அதற்கு கோவையிலையை நாலு விரற்கடை கனத்தில் சுற்றி ஏழு சீலைமண்செய்து குக்குடப் புடம்போட சுத்தியாகும். (2) அப்பிரகத்தை புளித்தமோரில் 3 நாள் ஊறவைத்து, பிறகு உரலில்போட்டு பொடியாக்கி மறுபடியும் புளித்தத் தண்ணீரில் 3 நாள் ஊறவைத்து வடித்து ஜலத்தால் கழுவி உலர்த்திக்கொள்ளச் சுத்தியாகும்.

14. அயம்—இரும்பின் அரப்பொடியை எலுமிச்சம்பழச்சாறு, காடி, நாட்டுக் காட்டாமணக்குப்பால் இவைகளில் ஒவ்வொன்றிலும் 3 நாள் ஊறவைத்து எடுக்க சுத்தியாகும்.

15. மண்டூரம்—வெள்ளாட்டுநீர், கோமூத்திரம், இவைகளில் ஒவ்வொன்றிலும் மண்டூரத்தை 3 நாள் ஊறவைத்து எடுக்க சுத்தியாகும்.

16. நாகம்—இலுப்பை நெய்யில் நாகத்தை 10 தடவை உருக்கி ஊற்ற சுத்தியாகும்.

17. மான்கொம்பு—மான்கொம்பைச் சுத்தியால் சீவி குப்பைமேனிச் சாற்றில் ஒரு நாள் ஊறவைத்து எடுக்க சுத்தியாகும்.

18. ரசகர்ப்பூரம்—(1) ஒருபலம் ரசகர்ப்பூரத்திற்கு ¼ (வ) பலம் வெள்ளைப்பூண்டுத் தயிலமும், கோழிமுட்டைத் தயிலமும் சுருக்குக் கொடுக்க சுத்தியாகும்.

(2) ரசகர்ப்பூரத்தை முலைப்பாலில் 10 நாள் ஊறவைத்து எடுக்க சுத்தியாகும்.

(3) ரசகர்ப்பூரத்துக்கு ஆதளம்பால், முலைப்பால், எலுமிச்சம்பழச் சாறு, வாழைப்பழச்சாறு, இவைகளால் வகைக்கு ஒருசாமம் சுருக்குக்கொடுக்க சுத்தியாகும்.

☞ இதை பலவிதங்களாகச் சுத்திசெய்வார்கள்.

19. வெள்ளீயம்—நல்லெண்ணெய், இலுப்பெண்ணெய், எலுமிச்சம் பழச்சாறு இவைகள் வகைக்கு சேர் 12, வெவ்வேறாக பாத்திரங்களில்போட்டு, வெள்ளீயத்தை ஒவ்வொன்றிலும் 21 தடவை உருக்கி வார்க்க சுத்தியாகும். இந்தவிதமாகக் காரீயத்தையுஞ்சுத்திசெய்யலாம்.

20. அமுக்கிராக்கிழங்கு—இதை பசும்பாலில் வேகவைத்து உலர்த்திக் கொள்ள சுத்தியாகும்.

21. கஞ்சா—(1) இதை ஜலத்தில் 12 மணி ஊறவைத்துக் கசக்கி புதுஜலத்தில் 5 தடவை கழுவவும். இவ்விதமாக 3 தடவை செய்து உலர்த்திக்கொள்ள சுத்தியாகும்.

(2) நாசுக சரீரமுடையவர்களுக்கு கஞ்சாவை மேல்சொல்லியபடி சுத்திசெய்து பலம் 1 தூக்கி 5 சேர் பசும்பாலில் போட்டுக் காய்ச்சி ஒறக்குத்தி வெண்ணெயை எடுத்து உருக்கி நெய்யாக்கி உபயோகிக்கிறார்கள்.

22. ஜாதிக்காய்—(1) இதைநாலாக நறுக்கி நெய்யால் வறுக்க சுத்தியாகும்.

(2) இதற்கு நெய்யைத்தடவி ஒருபெரிய ஊசியில் குத்தி நெய்யாலெரியும் தீபத்தில் பிடித்து வெடிக்கும்போது எடுக்க சுத்தியாகும்.

23. நேர்வாளம்—இதின் சுத்தி பலவகைகளாக செய்வார்கள். ஒவ்வொரு நேர்வாள கொட்டைக்கு எருமைச்சாணியால் கனமாகக் கவசமிட்டு நெருப்பில் போட்டு வேகவைத்து எடுக்க நல்ல சுத்தியாகும்.

24. தாம்பிரம்—நாகூர் சேல்லியை நாட்டுக்காட்டாமணக்கு அடிமாரத்துப் பாலில் 3 நாள் ஊறப்போட்டு பிறகு புளியாரைச்சாற்றில் அரத்தை நனைத்து நனைத்து ரவிலே அரப்பொடியை புளியாரைச்சாற்றில் 11 நாள் ஊறப்போட்டு எடுக்க சுத்தியாகும்.

25. வெடியுப்பு—4 பவுண்டு உப்பை 2 பயின்ட் வெந்நீரில் கரைத்து குளிரவைத்துத் தானாவிறல் உப்பைக்கட்டும்; பிறகு ஜலத்தை வடித்து 3 பயின்ட் குளிர்ந்த ஆவிநீர் விட்டு உப்பைக்கழுவி அடுப்பில்வைத்து உலர்த்திக்கொள்ள சுத்தியாகும்.

26. கர்ப்பூரம்—ஒரு பீங்கானின் வாயைப் பட்டுவெஸ்திரத்தால் கட்டி அதின்மேல் ஈரக்கர்ப்பூரம் பொடித்துப்போட்டு அதின்மேல் ஒரு தாம்பிரத் தட்டில் நெருப்பைப் போட்டுவைத்து புகையை வெளிப்போகாமல் செய்ய கர்ப்பூரம் உருகி பீங்கானில் விழும்; இவ்விதமாகவே 2-தடவை செய்ய சுத்தியாகும்.

27. வாதுமைபருப்பு—இதை சுத்த ஜலத்தில் 1-2 மணி ஊறவைத்து மேல்த்தோலை நீக்க சுத்தியாகும்.

28. நவாக்ஷாரம்—2 வீசை நவக்ஷாரத்தை கொதிக்கிற வெந்நீரில் கரைத்து வடிகட்டி குளிரவைத்து பிறகு ஒரு அகலமான பாத்திரத்தில் ஊற்றி வெய்யிலில் வைத்தால் உப்பைக்கட்டும்; அதை எடுத்துக்கொள்ள சுத்தியாகும்.

29. சீமைச்சுண்ணாம்பு—தேவையான சுண்ணாம்பை கல்வத்திலிட்டு ஜலத்தாலரைத்து ஜலம் நிரைந்த குடத்தில் கரைத்துத் தெளியவைத்து பால்போலிருக்கிற ஜலத்தை வேறொரு பாத்திரத்தில் ஊற்றி மிதந்துக் கொண்டிருக்கும் சன்னப்பொடிகளை அடியில் படியும்படி செய்துக்கொள்ளவும். முன்பாத்திரத்தில் படிந்துவிட்டதையும் இவ்விதமாய்ச்செய்து வடிகட்டி சன்னப்பொடியைச் சேகரித்து உலர்த்திக்கொள்ள சுத்தியாகும்.

30. சேங்கொட்டை—சேங்கொட்டைகளை துண்டுகளாக்கி நெய் அல்லது ஆமணக்கெண்ணெய்யில் போட்டு வறுத்து எடுக்க சுத்தியாகும்.

☞ இன்னும் அநேக பதார்த்தங்களின் சுத்திகளை பிராணரக்ஷாமிர்தசிந்து 2-வது பாகத்தில் விஸ்தாரமாய் சொல்லிருப்பதால் அவைகளை அந்த புஸ்தகத்தில் காண்க.

9-வது அத்தியாயம்.

எரிப்புத்திட்டம், புடத்திட்டம், ஊதுத்திட்டம், இவைகளைக்காண்க.

எரிப்புத்திட்டம்.

எரிப்பின் பெயர்கள்.	2 விரல் கன விறகு.
தீபாக்கினி	1
கமலாக்கினி	2
காடாக்கினி	4—5

ஊதுத்திட்டம்.

ஊதின் பெயர்கள்.	துருத்தி.
கண்ணம்	1
உருக்கு	2
சத்து	4

புடத்திட்டம்.

புடத்தின் பெயர்கள்.	ஒரு பலம் இடையுள்ள எரு.
காடைபுடம்.	1—2
கவுதாரிபுடம்.	3
குக்குடம்புடம்.	10
வராகல் புடம்.	50
கெஜபுடம்.	100
கனபுடம்.	1000

☞ ஜலபுடம், பூமிபுடம், அப்பிரேகபுடம், அப்பிரேக எரிப்பு, சூர்ய புடம், உமிபுடம், நெல்லுபுடம், வாயுபுடம், முதலிய அநேகவித எரிப்புகளும், புடங்களும் பிராணரக்ஷாமிர்தசிந்து 2-வது பாகத்தில் காண்க.

10-வது அத்தியாயம்.

சில அவுஷதங்கள் ஒன்றோடொன்று சேர்ப்பதில் அவைகளின் குணங்களை மாறிக்கெட்டுப்போவதால், அவுஷத பதார்த் தங்களும் அவைகளுக்கு சத்துரு அவுஷத பதார்த் தங்களும் சொல்லப்படும்.

பதார்த்தங்களின் பெயர்கள்.	சத்துரு பதார்த்தங்களின் பெயர்கள். Incompatibles.
கறி உப்புத் திராவகம் (Hydrochloric Acid)	வெள்ளி, ஈயம் இவைகளின் உப்பு இனங்களாம்.
பொட்டிலுப்புத்திராவகம் (Nitric Acid)	உப்பு இனங்கள், செந்தூரங்கள், அன்னபேதி, வங்கஉப்பு, அல்கொஹால்.
கந்தகத் திராவகம் (Sulphric Acid)	உப்பு இனங்கள், சுண்ணாம்பு, வங்க உப்பு, இவைகளாம்.
வாந்தி உப்பு (Tartar Emetic)	உப்புகள், திராவகங்கள், சுண்ணாம்பு, வங்க உப்பு, ஷின்கொனு, காசிக்கட்டி.
ரஸபஸ்மம் (Calomel)	வங்க உப்பு, நவக்ஷாரம், சுண்ணாம்பு, லோகத்திராவகம், நாகம், தாம்பிரம், அயம், முதலியவைகளின் உப்புகளாம்.
செவ்வீரம்-வீரம் (Hydrargyri Bichloridum)	சவுக்காரம், சுண்ணாம்புத் தண்ணீர், காடிக்காரம், வாந்தி உப்பு, வங்க உப்பு, ஐயோடைட் ஆப்பொட்டாஷியம், கசப்பு, துவர்ப்பு கசாயங்கள்.
காடிக்காரம் (Lunar Caustic)	கந்தகத்திராவகம், கறி, உப்புத் திராவகம், உப்புகள், சுண்ணாம்புஜலம், ஆற்றுஜலம், கிணற்றுஜலம், வெள்ளைக்கரு, பால், துவர்ப்புக் கசாயங்கள்.
அபினி (Opium)	காரஉப்புகள், துவர்ப்புப்பதார்த்தங்கள், சுண்ணாம்புஜலம், வீரம், அன்னபேதி, காடிக்காரம், மயில்துத்தம், பால்துத்தம்.

பதார்த்தங்களின் பெயர்கள்.	சத்துரு பதார்த்தங்களின் பெயர்கள். Incompatibles.
டார்டாரிக்ஆஸிட் (Tartaric-acid)	உப்புகள், வங்கம், சுண்ணும்பு ஜலம், இவைகளாம்.
விளாம்பிசின் (Gum Arabic)	சாராயம், வங்க உப்பு, அயத்திராவகம் இவைகளாம்.
காசிக்கட்டி (Catechu)	மார்பிய, உப்புகள், படிக்காரம், வெடி உப்பு, சுண்ணும்பு, இபிக்காக், வெள்ளைக் கரு இவைகளாம்.
சின்கொனு (Cinchona)	சுண்ணும்புத்தண்ணீர், அம்மொனியா, பொட்டாஷ், வாந்தி உப்பு, வங்க உப்பு, வீரம், காடிக்காரம், மாசிக்காய்.
அமொனியா ப்ரொமைட் (Ammonia Bromide)	அசிட், அசிட் உப்புகள், நைட்ப்ரஸ் ஸ்பிரிட் ஈதர்.
அமொனியா கார்பொனெட் (Ammonia corbonate)	சுண்ணும்பு, அசிட், அசிட் உப்புகள்.
அஞ்சனக்கல் பஸ்மம் (Antimonial Powder)	உப்பு இனங்கள், வங்க உப்பு, துவர்ப்பு அசிட்கள், சங்கோஷனகாரிகள்.
பெல்லடொனு (Belladona)	உப்பு இனங்கள், அபினி, எட்டிக்கொட்டை.
டிஜிடெலிஸ் (Digitalis)	அயம், வங்கம், இவைகளின் உப்புகள், துவர்ப்பு அசிட்கள், சங்கோஷன காரிகள், அபினி, Gelsemium-ஜெல்ஸிமியம்.
ப்ட்டாஸியம் பொரொமைட் (Pottasium Bromide)	அசிட்கள், தாதுவர்க்கப் பதார்த்தங்களின் உப்புகள்.
ஸ்பிரிட் நைட்ரஸ் ஈதர் (Spirit Nitrous Ether)	அன்னபேதி, உப்புகள், கார்பொனெட்ஸ்கள், அமொனியா ப்ரொமைட், குவாசிகம், ஐயொடைட் ஆப் பொட்டாஸியம்.
விலிரிநெட் ஆப் ஜிங்க் (Velerianate of zinc)	தாவரசங் கொசனகாரிகள், அசிட்கள், தாதுவர்க்க உப்புகள்.

பதார்த்தங்களின் பெயர்கள்.	சத்துரு பதார்த்தங்களின் பெயர்கள். Incompatibles.
வங்க உப்பு (Suger of Lead)	கறிஉப்புத்திராவகம், கந்தகத்திராவகம், எலுமிச்சம்பழரசம், டார்டாரிக் ஆசிட், சீமை சுண்ணும்பு, பொட்டாஷ், லிக்கர் அம்மொனிய அசிடேட்ஸ்.
கால்ஸியம்க்ளோரைட் (Calcium Chloride)	பொடாஸியம் உப்புகள்.
கார்போலிக் அஸிட் [Carbolic Acid]	குளோரைன், சுண்ணும்பு, மினரல் ஆஸிட்ஸ், ஸல்பைட்ஸ்.
பொடாஸியம் பர்மாங்கநேட் [Potassium Permanganate]	ஜீவவர்க்கங்கள், தாதுவர்க்கங்கள்.
கிரியஸோட் (Creasote)	வெள்ளி உப்புகள். (Silver Salts.
எர்காட் (Ergot)	Caustic Alkalies, Metallic salts, சங்கோஷணகாரிகள்.
குளோரி லிகுவர் (Chlori Liquor)	வங்க உப்புகள், வெள்ளி.
ஐயோடீன் (Iodine)	Ammonia, Metalic salts, mineral acid, quinine, digitalis, tonic.
பொடாஸியம் ஐயோடைட் (Potassium Iodide)	Spirit Nitrous Ether, Bismuthi Subnitras.
பொடாஸியம் குளோரேட் (Potassium Chlorate)	கரி, கந்தகம், அயஉப்புகள்.
டார்டார் எமிடிக் (Tartar Emetic)	மாசிக்காய் உப்பு, டானிக் ஆஸிட், வங்கஉப்பு, ஸங்கோஷணகாரிகளான கஷாயங்கள், ரேவல்சின்னி, சின்கோனு.
தீமுறுதல் பாஷாணம். (Phosphorus)	சுண்ணும்புத்தண்ணீர், கரி, கர்ப்பூரத்தைலம், உப்புகள்.
பெரீரா (Pareira)	அய உப்புகள், வங்கஉபுப்கள், டிஞ்சர் ஆப் ஐயோடின்.

11-வது அத்தியாயம்.

அவுஷதபதார்த்தங்களை விஷமிக்கும்படிச் சாப்பிட்டவர்களுக்கு முறிவு அவுஷதபதார்த்தங்களை உடனே கொடுத்து அனுகூலப் படுத்தவேண்டியதற்காக அவைகளை சொல்லப்படும்.

விஷமிக்கும்படிச் சாப்பிட்ட பதார்த்தங்களின் பெயர்கள்.	முறிவு பதார்த்தங்கள். [Antidotes.]
கஞ்சா [Hemp]	புளியைக்கரைத்த ஜலம், எலுமிச்சம் பழச்சாறு, வாழைமட்டைச்சாறு, காடி.
கந்தகத்திராவகம் [Sulphric Acid]	காந்தமண் பஸ்மம், சவுக்காரம், ஜல வர்த்தன காரிகள், சினிக்த காரிகள்.
தீமுறுகல் பாஷாணத்திராவகம் [Phosphoric Acid]	ஷை ஷை
வெடிஉப்புத்திராவகம் [Nitric Acid]	சீமைச்சுண்ணம்பு, சவுட்டுப்பு, மரவுப்பு, இவைகளின் சம்மந்தமான உப்புகள், சவுக்காரம், காந்தமண் பஸ்மம்.
கறிவுப்புத்திராவகம் [Hydrochloric Acid]	காந்தமண் பஸ்மம், சவுக்காரம், பைகார்பொனேட் ஆப் சோடா பொட்டாஷ், பால், சினிக்த காரிகள்.
நவக்ஷார ஜயநீர் [Liquor ammonia]	சீமைக்காடி, எலுமிச்சம் பழச்சாறு, தாவரபதார்த்தங்களின் திராவகங்கள்.
லைகர்பொடாஸ்லி [Liquor Potash]	எண்ணெய், காடி, எலுமிச்சம்பழரசம்.
கார்போநெட் ஆப் பொடாஸ் [Carbonate of Potash]	ஷை ஷை
கார்பொனெட் ஆப் சோடா [Carbonate of Soda]	ஷை ஷை

விஷமிக்கும்படிச் சாப்பிட்ட பதார்த்தங்களின் பெயர்கள்.	முறிவு பதார்த்தங்கள். [Antidotes.]
வெடியுப்பு [Nitric Potash]	வாந்திக்குக் கொடுத்து வெளியாக்கவும், எரிச்சலைத் தணிக்கவும், வயிற்றின் புண்ணை ஆற்றவும் வேண்டியது.
வங்கஉப்பு [Sugar of Lead]	பால்துத்தத்தை வாந்திக்குக் கொடுத்து வெளியாக்கி சீமை இந்துப்பு, பாஸ்பேட் ஆப் ஸோடா [Phosphate of Soda] கொடுக்கவும்.
வீரம்-சவ்வீரம் [Hydrargyri Bichloridum]	முட்டையின் வெள்ளைக்கருவைக் கொடுத்து உடனே மாசிக்காய், காசிக்கட்டி, இவைகளின் கஷாயங்களைக்கொடுக்கவும்.
டிஜிடேலிஸ் [Digitalis]	வாந்திக்குக் கொடுத்து வெளியாக்கி, மாசிக்காய் கசாயம், தேயிலைத்தண்ணீர், லைகர் அம்மோனியா, பிராந்தி, ஒயின், கொடுக்கவும்.
பெல்லடோனா [Belladona]	வாந்திக்கும், பேதிக்கும், கொடுக்கவும், துவர்ப்புக்கசாயங்கள் கொடுத்து தலைக்கு குளிர்ந்த ஜலம் விடவேண்டியது.
ஐயோடைன் [Iodine]	வயிற்றிலிருக்கும் விஷத்தை வெளியாக்கவேண்டியது. வெளியாக்குவதற்கு முன்னும் பின்னும் கஞ்சியை வேண்டியமட்டும் கொடுக்கவும். தாபனத்தை சமனப்படுத்தவும்.
கொளோரைன் [Chlorine]	காந்தமண்பஸ்மம், சீமைச்சுண்ணும்பு, சவுக்காரம், வெள்ளைக்கரு, பால் இவைகள் கொடுக்கலாம்.
ஐயோடைட் ஆப் பொட்டாசியம் [Iodide of Potossium]	வயிற்றிலுள்ளவிஷத்தை வெளியாக்கி, சினிக்த காரிகள் கொடுக்கவும். தாபனத்தை சமனப்படுத்தவும்.
சோனியம் [Conium]	லைகர் அம்மோனியா கொடுக்கவும்.

விஷமிக்கும்படிச் சாப்பிட்ட பதார்த்தங்களின் பெயர்கள்.	முறிவு பதார்த்தங்கள். [Antidotos.]
வெள்ளைப்பாஷாணம் [White Arsenic]	வாந்திக்குக்கொடுத்து வெளியாக்கவும். பாலாவது கஞ்சியாவது வாந்திக்குக்கொடுக்கும் முன்னும்பின்னும்கொடுக்கலாம்; காந்தமண்பஸ்மமும், கரித்தூளும் விசேஷமாகக்கொடுக்கலாம். பாஷாணத்தை வெளியாக்கின பிறகு தாபனத்தை சமனப்படுத்தவும். மூத்திரத்தை அதிகரிக்கவும். மலமிறங்கும்படி அபினியைக் கொடுத்து ஆமணக்கெண்ணெயை அடிக்கடி கொடுக்கவும்.
காடிக்காரம் [Lunar Caustic]	கறிவுப்பைக்கொடுக்க முறித்துவிடும். விஷத்தை வெளியாக்கி பால், வெள்ளைக்கரு, முதலிய குழகுழப்பான பதார்த்தங்களைக் கொடுக்கவும்.
அபினி [Opium]	பால்த்துத்தம், உப்பு, கடுகு, எதையாகிலும் கொடுத்து வாந்தியாகும்படிச்செய்யவேண்டியது. கருவியை [Stomach Pump] உபயோகித்தாவது வாந்தியாக்கவேண்டியது. நித்திரை போகவொட்டாமல் செய்யவும். அக்கிராண உப்பை முகரவைக்கலாம். குளிர்ந்த ஜலத்தை சிரசிலூற்றவேண்டியது. துவர்ப்புக்கசாயங்கள் கொடுக்கலாம். உஷ்ணமாக்க காப்பி, பிராந்தி, அம்மொனியா கொடுக்கவும். கடுகை அரைத்து துணியின்மேல் தடவி பாதங்களுக்குப் போடவும். அமில் நைட்ரேட் முகரவைக்கலாம்.
ஹைட்ரோஸையானிக் ஆஸிட் [Hydrocyanic Acid]	இதற்கு சிகிச்சைசெய்ய நேரம் இராது. குளிர்ந்த ஜலம் சிரசிலும், முதுகிலும் ஊற்றவும். அக்கிராண உப்பை முகரவைக்கவும். நவக்ஷாரஜெயநீரை உள்ளுக்கும் மேலுக்கும் உபயோகிக்கவும். குளோரின் வாட்டர் [Chlorine water] 1-2 தேயிலைக்கரண்டிவீதம் கொடுக்கவும். வாயில் ஊதி சுவாசத்தை உச்சாகப்படுத்தவு

விஷமிக்கும்படிச் சாப்பிட்ட பதார்த்தங்களின் பெயர்கள்.	முறிவு பதார்த்தங்கள். [Antidotes.]
	ம். ஒரு அவுன்ஸ் ஜலத்தில் 10 கிறேன்ஸ் அன்னபேதியும் கொஞ்சம் அயத்திராவகமுஞ் சேர்த்துக்கொள்ளவும். வேறொரு எனத்தில் 1-2 அவுன்ஸ் ஜலமிட்டு அதில் 2 கிறேன்ஸ் கார்போனெட் ஆப் சோடாவைக்கரைத்து உள்ளுக்குக்கொடுத்து உடனே அயம் அன்னபேதி சேர்ந்த மிக்சர்கொடுக்கவும். இது டாக்டர் ஸ்மித் என்பவருடைய முறை.
ரிஸோர்ஸினம் [Resorcinum]	முட்டையின் வெள்ளைக்கரு, அட்ரோபைன், அமில்நைட்ரேட், உஷ்ணகாரிகள்.
எட்டிக்கொட்டை [Nux Vomica]	புகையிலை வெந்நீர் 8 அவுன்ஸ்சேர்த்து 20 கிரேன்ஸ் ½ மணிநேரம்ஊறவைத்து வடிகட்டி பீச்சாங்குழலால் ஆஸனத்தில் அடிக்க முறித்துவிடும். புகையிலை வெந்நீர் கஷாயம் ½ அவுன்ஸ், தீநீர் 20 அவுன்ஸ் இவைகளைச்சேர்த்து வலிகுறைந்துபோகிற வரையில் பாகித்து உள்ளுக்கு கொடுக்க முறித்துவிடும். அமில்நைட்ரேடை முகரவைக்கலாம். குளோரல் ஹைட்ராஸ், Calabar bean, zinc Sulphate, Potassium Bromide, இவைகளில் எதை கொடுத்தாலும் முறித்துவிடும்.
டார்டார் எமிடிக் [Tartar Emetic]	வாயில் விரலை கொடுத்தாவது அல்லது வெந்நீரை குடித்தாவது வாந்தியை அதிகப்படுத்தவேணும். அல்லது ஸ்டாமக் பம்பு [Stomach pump] யை பிரயோகித்து வயிற்றிலிருப்பதை வெளிப்படுத்தி பிறகு டானிக் அஸிட், காபி, டீ, மாசிக்காய், காசிக்கட்டி, சின்கோனு இவைகளில் ஏதாவது கொடுக்கவும்.
நீருறுகல் பாஷாணம். [Phosphorus]	வமனகாரிகள், விரேசனகாரிகள் கொடுக்கவும்.

விஷமிக்கும்படிச் சாப்பிட்ட பதார்த்தங்களின் பெயர்கள்.	முறிவு பதார்த்தங்கள். [Antidotes]
கால்ஷிகம் [Colchicum]	அபின் Opium.
கார்போலிக் அஸிட் [Carbolic Acid]	வெள்ளைக்கரு, காபி, சிற்றாமணக்கெண்ணெய், சுண்ணாம்புத்தண்ணீர், அட்ரோபியா, வமனகாரிகள். இரப்பையைச் சுத்தப்படுத்தவேண்டும்.
கோகேயின் ஹைட்ரோக்ளோரைட் [Cocaine Hydrochloride]	அமில் நைட்ரேட் முகர்தல், எட்டிக்கொட்டை உப்பு.
எர்காட் [Ergot]	ஆல்கோஹால்.
குளோரல் ஹைட்ராஸ் [Chloral Hydras]	30 கிரேன்ஸ் சாப்பிட்டு விஷமித்தால் $\frac{1}{20}$ கிரேன் பைக்ரோடாக்ஸின் [Picrotoxin] கொடுத்தால் முறித்துவிடும். வமனகாரிகள், அமில் நைட்ரேட் முகர்தல்.
குளோரின் லிக்கர் [Chlori Liquor]	முட்டையின் வெள்ளைக்கரு, பால்.
குளோரொபாரம் [Chloroform]	சுத்தமான காற்று, அமில்நைட்ரேட், முகரவைக்கவும். எட்டிக்கொட்டை உப்பை ஹைபாடர்மிக் இஞ்சக்ஷன் செய்தல்.
நைட்ரோக்ளிஸிரைன் [Nitroglycerin]	எர்காட், எட்டிக்கொட்டைஉப்பு, பெல்லடோனா, அட்ரோபைன், தலைக்கு குளிர்ச்சியான வஸ்துக்களைப்போடுதல்.

12-வது அத்தியாயம்.

அவுஷதபதார்த்தங்களின் குணங்கள், செய்கைகள் முதலியவைகள் நமக்குத்தெரியாவிடில் ரோகங்களுக்குத் தக்கபடி பதார்த்தங்களைச் சேர்க்கவும், லேகியம், தயிலம் முதலியவைகள் செய்யும்பொழுது சில பதார்த்தங்

கள் கிடைக்காமலும், சிலது ரோகிகளுக்கு ஏற்றுக்கொள்ளாமலும், அவைகளுக்குப் பதிலாக அந்த செய்கைகளையுடைய வேறு பதார்த்தங்களைச் சேர்க்க நமக்குத் தெரியாதாகையால் அவைகளை சொல்லப்படும்.

*பச்சை தாவரவர்க்க பதார்த்தங்கள்.

மூங்கில்:—(இலை) பிரசவகாலத்தில் வழிவராநின்ற அழுக்கை நீக்கும்.

சிற்றுழா:—(இலை) பந்தமூலம், சீதமூலம், தீரும்.

கருவேப்பிலை-கறியபிலை: —(இலை) உஷ்ணகாரி, மலகாரி, ஜாடராக்கினி வர்த்தனகாரி—சீதபேதி, சுரம், அரோசகம் குணமாகும்.

பசுமுன்னை-நறுமுன்னை:—(இலை) மந்தாக்கினி, வாதம் தீரும்.

அருந்தி:—(இலை) மலகாரி—மலத்தைக்கழிக்கும், பித்தத்தைத் தணிக்கும். (பட்டை) பலகாரி—பலத்தையுண்டாக்கும்.

முருங்கை: - (இலை) சிரசுதாபனம், மூர்ச்சை, உள்சூடு குணமாகும். (பட்டை) வாதம் (80), வலிப்பு குணமாகும். (வேர் பட்டை) சந்நி பாதசுரம், கபரோகம் குணமாகும். (பிசின்) குஷ்டம், அதிமூத்திரம் குணமாகும். (விதை) விந்தைத் தடிப்பாக்கும். (காய்) கபரோகம் குணமாகும்; விந்துஊறும்.

புளியம்.—(இலை) பாண்டு, கண்ணோவு குணமாகும். (பட்டை) தீபனகாரி, பித்தகாரி—குன்மம் (8), அதிசாரம் (6), சுரம், அஜீரணம் குணமாகும்

கருவேல்: —(இலை) பாஷாணவேகத்தைத் தணிக்கும், கண்ணோவுத் தீரும். (பட்டை) சுரம், பித்தம், ரசவேக்காடு, ரணம், நாக்குபுண் தீரும். (பிசின்) சுக்கிலத்தை தடிப்பாக்கும், சீழ்பிரமேகந்தீரும். (வேர்) மகாவாதம், அதிசாரம், மந்தாக்கினி, ரத்தகடுப்பு குணமாகும்.

மரிய:—(இலை) சீதபேதி, அதிசாரம், வாந்தி குணமாகும்.

அத்தி:—(பட்டை) சங்கோஷனகாரி-சீதபேதி, புண், பெரும்பாடு, ரத்த மூத்திரம், தீரும். (விதை) மலகாரி-ரணம், பிரமேகம் தீரும். பாயிசஞ் செய்துச் சாப்பிட மலம் இறங்கும். (பிஞ்சி) ரத்தமூலம், மூலவாயு, கிரகணித் தீரும். (பால்) வெண்ணெயில் கலந்து ரத்தபேதி, நீரிழிவு, இவைகளுக்குக் கொடுக்க நல்ல மருந்து. (கள்ளு) பலகாரி, வியதாபேதகாரி-மேகம், பித்தமயக்கம் தீரும்.

---

*உலர்ந்த தாவரவர்க்க அவுஷதபதார்த்தங்களின் குணங்கள், செய்கைகள் முதலியவைகளை 14-வது அத்தியாயத்தில் சொல்லப்படும்.

நாவல்:—(பட்டை) வாய்ரோகம், கபரோகம் தீரும். (வேர்) சீதபேதி, சுரம், அதிமூத்திரம் தீரும். விதையை நிழலில் உலர்த்தி தூள்செய்து பட்டைச் சாராயத்தில் சேர்த்து ஊறவைத்து கொடுத்தால் மதுமேகம் குணமாகும். இது கைகண்டமுறை.

பெருமரம்:—(பட்டை) உதரரோகம், அதிசாரம், கிரகணி, வாதம் தீரும்.

எருக்கம்:—(பட்டை) வாதம் (80), சந்நிபாதம் (13) விஷம் தீரும். (பால்) எலி பாம்பு விஷங்கள், கிருமி, குஷ்டம், சிலேஷ்மம், வாதம் தீரும்.

மாவலிங்கம்:—(பட்டை) வாதம் (80), சன்னி (13), அஸ்மரித்தீரும்.

கிளியூரம்:—(பட்டை) சுரஹரகாரி—சுரம் (64) குணமாகும்.

வாகை:—(பிசின்) மேகக்கட்டி, பிரமேகம், கிரந்தி குணமாகும்.

இலவம்:—(பிசின்) உட்சுரம், பிரமேகம், கிரிச்சரம் குணமாகும்.

விளாம்:—(பிசின்) நீர் எரிவு, பேதி, இருமல், அதிமூத்திரம், வெள்ளை, அதிசாரம் குணமாகும். (பழம்) தீபனகாரி—காசம், சுவாசம், கபம், பித்தம் குணமாகும். (ஓடு) இதன் கசாயம்—பித்தசமனகாரி.

ஆவாரை:—(பிசின்) பிரமேகம், அதி மூத்திரம் தீரும். (பூ.விதை) நீரிழிவு குணமாகும்.

வில்வம்:—(வேர்) வீரியவர்த்தனகாரி,—அக்கினிமந்தம், சோபை, குன்மம், பேதி, வாந்தி குணமாகும். (இலை) சுவேதகாரி—சுரந்தீரும், (உலர்ந்த செங்காய்) இதின் கசாயங் கொடுக்க சீதபேதி, அதிசாரம் தீரும்.

பாதரி:—(வேர்) கை கால் கண்கள் எரிவு, மதுமூத்திரம், குணமாகும். (பூ) மேகசுரம் தீரும்.

சண்பக:—(வேர்) தீபனகாரி—சுரம்தீரும், பசி உண்டாகும். (பூ) கண் எரிவு, சுரம் தீரும். சுக்கிலத்தை விருத்திக்கும்.

இலுப்பை:—(வேர்) உஷ்ணகாரி—சுரம் (64), மந்தம் அதிமூத்திரம் குணமாகும். (பருப்பு) அந்திரவாயுத் தீரும்.

புங்கம்:—(வேர்) வேரின் ரசம் புரை ரணத்தில் செலுத்த உலரும். அன்றியும் குன்மம் (8), குடைச்சல், மூர்ச்சை இவைகளுக்குக் கொடுக்கத் தீரும். (நெய்) செவிநோய், கரப்பான், கிரந்தி குணமாக்கும்.

நெல்லி:—(வேர்) பலகாரி,—பித்தம், தாகம், வாந்தி தீரும். (காய்) கபரோகம், மலக்கட்டு, வாந்தி, குணமாகும். (விதை) சூடு, ஒக்காளம் தீரும்.

ருத்திராக்ஷம்:—(விதை) மிகதாகம், பித்தம், திரிதோஷம் தீரும்.

அருநெல்லி:—(வேர்) சாருட்டியகாரி,—சுரம்,அரோசகம், குணமாகும். (காய்) உட்சூடுத்தீரும்.

பசீன:—(கிழங்கு) சீதளகாரி—மேகம் (20), கரப்பான், ரணம், ரத்தசீதபேதி, குணமாகும். (நற்நம்பு) மசூரிகையின் உஷ்ணம், நீர்ச்சுருக்குத்திரும். (வெல்லம்) சுரம், அருசி, உஷ்ணந்திரும்.(நாளு) சுக்கிலத்தை விருத்திக்கும், 7 தாதுகள் உறுதியாக்கும். (நுங்கின் ஜலம்) வியர்குருவை நீக்கும். நோலுடன் நுங்கு) சீதபேதித்திரும். (பதனி) கக்குவான் திரும்.

வாழை:—(காய்) பலகாரி, இருமல், உஷ்ணம், பித்தவாந்தித் திரும்.

பிஞ்சி) ரத்தமூலம் திரும். (பழம் பித்தம், மூர்ச்சை, சோபைதீரும்.

நொடி. எலுமிச்சம்: (காய் பித்தம், வாந்தி குணமாகும்.

எலுமிச்சம்: பழம்) பித்தம், திரிதோஷம், சூலே, குன்மம் திரும்.

நாரத்தம்:—(பழம், தீபனகாரி ,—பித்தம் (40) திரும். சுக்கிலம் விருத்தியாகும்

கடாரநாரத்தம்:— காய் அரோசகம், பித்தம், வாய்நீர் ஊறல்திரும்.

நொளிஞ்சி நாரத்தம்:—(காய்) கபம், வாதம், தாகம் குணமாகும்.

மாதுளம்:—(பிஞ்சி) அதிசாரம் (6 திரும். (பழம்) பித்தம், தாகம், கபம், வாந்தி குணமாகும்.

இலந்தை:—(பழம்) வாந்தி, பித்தம், மூர்ச்சை, அருசி, குணமாகும்

வெள்ளைநாவல்:— பழம்) சுக்கிலம்,ரத்தம் விருத்திக்கும்.

கள்ளி: [திருகுக்கள்ளி, சதுரக்கள்ளி, கொடிக்கள்ளி, இலேக்கள்ளி.] (பால்) செய்கை விரேசனகாரி,—இதை வெல்லத்தில் பணவிடை வைத்துக் கொடுக்க பேதியாகும். (பட்டை) வாதம் (80), நரம்பு சிலந்தி, எலிக்கடி விஷம் குணமாகும்.

வேப்பம்:—(இலே) சுரம் (64), மசூரிகை கொப்பளத்தின் ரணம், குஷ்டம், மந்தம் தீரும். கன்று பசி உண்டாகும். (கொட்டை) ஜன்னித்திரும். (பூ) பித்தம் திரும். (எண்ணெய்) ரணம் ஆற்றும். (பட்டை) பசி உண்டாக்கும், சீதசுரம் திரும், சுரம் விட்டிருக்கும்போது சூர்ணத்தில் 1 விராகனிடை வீதம் ஜலத்தில் 3 நாள் கொடுக்க, பின்பு சுரம் வராது.

அத்நார:—(பட்டை) சிரோரோகம் (19), சந்நிபாதம், (13), வாதம் (80) குணமாகும்.

கொங்கம்:— பட்டை) தந்தரோகம் (18), பிரமேகம் (21) மூத்திரரோகம் 12), குணமாகும்.

மாம்— பிசின், வெள்ளை, ரத்த அதிசாரம் திரும். (வேர்ப் பட்டை) வாந்தி. சீதரத்தபேதித்திரும். (பருப்பு) சீதபேதி, ரத்த அதிசாரம், மூலகுடு குணமாகும்.

மலைவேம்பு:—(பிசின்) அஜீர்ணபேதி, மேகக்கட்டித் தீரும்.

நேர்வாளம்:—(கொட்டை) உட்சூடு, வெட்டை, பிரமேகம், கிரிச்சரம், தீரும்.

புரசன்:—(கொட்டை) பித்தத்தை விருத்திக்கும். குன்மம், வயிற்றிரைச்சல், கிருமி, கரப்பான் தீரும்.

புன்னை:—(கொட்டை) தனுர்வாதம், செவிபுண் தீரும்.

அழிஞ்சில்:—(வேர்ப்பட்டை) இதை அரைத்து பாக்களவுக்கொடுக்க பித்த நீரை வாந்தியாக்கும்.

மகிழம்:—(விதை) சீதளகாரி, பலகாரி:—சுரம், கண்ணோய் தீரும். சுக்கிலத்தை விருத்திக்கும்.

ஆளி:—(விதை) வாந்தி, தேகக்கடுப்பு, நரம்பு சூலைத்தீரும்.

சார:—(விதை) நீர் எரிவு, பிரமேகம் தீரும். சுக்கிலத்தைத் தடிப்பாக்கும்.

நிலப்பனை:—(கிழங்கு) வீரியவர்த்தனகாரி—விலாக்குத்தல், மேகம் தீரும்.

சரக்கொன்றை:—(புளி) மலக்கட்டு, குடல்வலித் தீரும். (பூ) குடல் வியாதிகளுக்கு இதைக் கொடுக்கப்படும்.

ஆலமரம்:—(பால்-பட்டை-விதை) சங்கோஷணகாரி— பாலை கால்வெடிப்புக்கும் பல்நோவுக்கும் தடவிவர தீரும், நாவக்ஷரத்துக்கு உட்கொள்ள தீரும். (பட்டை) கசாயம் செய்துக்கொடுக்க நீரிழிவு தீரும். (விதை) ஆவாரை லேகியத்துடன் கொடுக்க தேகசூடுத்தீரும்.

சுரை:—(இலை) வீக்கம், சோபைத்தீரும்.

பாகல்:—(இலை) விரேசனகாரி—திரிதோஷம், கிருமிரோகம் தீரும்.

கொடிக்தறிஞ்சா:—(இலை-வேர்) வமனகாரி—வேரின்தூளை ஜலத்தில் கொடுக்க வாந்தியாக்கி கபத்தைப்போக்கும். இலைத்தூள் 20—30 கிறேன்ஸ் குழந்தைக்குக்கொடுக்க வாந்தியாகும். அன்றியும் நாக்குபுண், காசம் இவைகளுக்கு உபயோகிக்கலாம்.

கோவை:—(இலை) நீர்க்கட்டு, வாயு, இருமல், உஷ்ணம், தீரும். (கிழங்கு) கோழை, ஜீக்வாரோகம், குஷ்டம், பித்தம், மதுமூத்திரம் தீரும். (காய்வற்றல்) கபசுரம், அருசு, உஷ்ணம்தீரும்.

முசுமுசுக்கை:—(இலை) கோழை, சுவாசம், காசம் தீரும். (வேர்) தடித்த கோழை, மார்புநோய், வாந்தி, குன்மம் தீரும்.

கழற்சி:—(இலை-வித்து) பலகாரி, சோபாநாசகாரி, சுரஹரகாரி-குன்மம் (8), அண்டவாதம், சூலைக்கட்டு, சுரம் தீரும்.

முசிநாதி:—(இலை) கை கால்களின் கீல்கள் வீக்கம், அண்டவீக்கம், தீரும்.

கோழியவரை:—(இலை) வயிற்றுவலி, ஆமக்கட்டித்தீரும்.

சிறுபூனைக்காலி:—(இலை) க்ஷயம், கோழை, மந்தம் தீரும். (விதை) வீரிய விருத்தியாக்கும்.

உத்தாமணி-வேலிப்பருத்தி:—(இலை) தீபனகாரி, அங்காகர்சன நாசகாரி-வாதம் (80), சுவாசம் (5), சன்னி (13), தேகவலித்தீரும். இலை ரசத்துடன் சுண்ணாம்பைச்சேர்த்து வீக்கங்களுக்கு போடலாம்.

செந்நாரை:—(இலை) பசிஉண்டாக்கும், நீர்எரிவு, மூளை மூலம், வாதம் தீரும்.

சதாபு:—(இலை) பசி உண்டாக்கும், அதிகபேதி, மாந்தபேதித்தீரும்.

விஷமூங்கில்:—(இலை) கர்ணநோய், சோபை, நகச்சுற்றுத்தீரும்.

காட்டுமல்லிகை:—(வேர்) சுரம் (64), அதிசாரம், நாக்குவறளல் தீரும்.

சிறுக்குறிஞ்சா:—(வேர்) காசம், சுவாசம், வாதம் தீரும்.

கொடிவேலி-சித்திரமூலம்:— (வேர்) விரணகாரி, உஷ்ணகாரி—இதில் நீலம், சிவப்பு, வெள்ளை என 3 விதங்களுண்டு. அதை அரைத்துப் போட கொப்பளிக்கும். அரையாப்புக்கட்டியின் பேரிலும், இருமலுக்கு மார்பின் பேரிலும் போடசவுக்கியப்படும். இதை வாதம் (80), மூலம் (8), சுவாசம் இவைகளுக்குக் கொடுக்க குணமாகும்.

பெருங்காஞ்சொறி:—(வேர்) இரைப்பு, சீதசுரம், இருமல் தீரும்.

சிறுகாஞ்சொறி:—(வேர்) திரிதோஷம், சுவாசம், வாதம், சுரம், கரப்பான் தீரும்.

இம்பூறு:—சிறுவேர்:-(வேர்) கபஹரகாரி—சுரம், காசம், கோழை, பித்தம் (40), வாதம் (80) தீரும்.

வெள்ளரி:—(விதை) நீரடைப்பு, கல்லடைப்பு, சதையடைப்பு, பிரமேகம் (21) தீரும். (காய்) நீர் எரிவு, நீர்க்கட்டுத்தீரும்.

தாமரை:—(விதை) சுக்கிலத்தை விருத்திக்கும். (பூ) தேகசூடு, நீர்எரிவு, சுரம் தீரும். (கிழங்கு) கண்களை பிரகாசிக்கச்செய்யும்.

வெள் அல்லி:—(பூ) சுக்கிலத்தை விருத்திக்கும், மிகமூத்திரம், ரத்தபிரமேகம், ஆண்குறிரணந் தீரும்.

செவ்வல்லி:—(கிழங்கு) சுரோணிதத்தை விருத்திக்கும், ரத்தபிரமேகம் தீரும்.

முல்லை:—(பூ) உட்குடு, மஞேவியாதி தீரும்.

தாதுமாம்:—[பூ] சுக்கிலம்விருத்தியாகும், தேகபலமும் புஷ்டியும் உண்டாகும். [இலை] காசம் (5), கண்ணேய், மந்தம் தீரும். [பழம்] மார்பு சளி, க்ஷயம் தீரும். [காய்] கபரோகம், மலக்கட்டுத் தீரும்.

சீந்தில்:—[கிழங்கு] பசியை உண்டாக்கும், மாந்தம், சுரம், பித்தம் [40] தீரும்.

கருடன்:—[கிழங்கு] பாம்பு விஷம், வெள்ளை, கொருக்கு, அரையாப்புத் தீரும்.

கூவை:—[கிழங்கு] தேகத்தை புஷ்டிக்கும், சுரம், இருமல் தீரும்.

மாகாளி:—[கிழங்கு] பசியை உண்டாக்கும், வாத பித்த சிலேஷ்மரோகங்கள் தீரும்.

தண்ணீர்விட்டான்:—[கிழங்கு] சுரம், சோபை, வெள்ளை, அதிமூத்திரம் தீரும்.

நெய்தல்:—[கிழங்கு] சீதளகாரி:— பித்தம் [40], ரத்தகிரகணி, அக்கித்தீரும். சுக்கிலத்தை விருத்திக்கும்.

செங்கழுநீர்:—[கிழங்கு] சீதளகாரி:—பித்தம் [40], மேகம் [20], புணர்ச்சியின் உஷ்ணம் தீரும்.

கீழாநெல்லி—கீழ்வாய்நெல்லி:—[சமூலம்] தீபனகாரி, மூத்திரவர்த்தனகாரி பித்தசமனகாரி,—இதின்சாறு பலம் ½ [?] பாலில்ச்சேர்த்து தினம் 2 தடவைக்கொடுக்க மஞ்சட்காமாலை தீரும். இலைதூளுந்தேனுஞ் சேர்த்துக்கொடுக்க பசி உண்டாகும். துளிர்களும் வெந்தியமுஞ் சேர்த்துக் கசாயமிட்டுக்கொடுக்க வயிறுக்கொட்டல் தீரும்.

குப்பைமேனி:—[இலை—வேர்] விரேசனகாரி—இலை தூள் 30—40 கிறேன் ஸ்யுடன் சர்க்கரைச்சேர்த்து ஜலத்தில் கொடுக்க கிருமிகள் வெளிப்படும். (வேர்) மலத்தைக்கழிக்கும். இலை ரசமும் வேப்பெண்ணெயும் சேர்த்து குழந்தையின் நாக்கில்தடவ குமட்டலுடன் கபத்தை வெளியாக்கும். அன்றியும் வாதம், பீநசம், தந்தநோய், வயிற்றுவலி, தீப்புண் இவைகளுக்கும் உபயோகிக்கப்படும்.

குன்றிமணி:—[வேர்—இலை] கபஹரகாரி-இதில் கருப்பு, சிவப்பு, வெள்ளை என மூன்றுவிதங்களுண்டு. இலைதூளும் சர்க்கரையும் சேர்த்துக்கொடுக்க இருமல் நீங்கும். வேரின் கசாயத்தில் கற்கண்டு தூள்ச்சேர்த்துக் கொடுக்க இருமல் நீங்கும்.

நையாந்நகனை-நரிசலாங்காணி:—[சமூலம்] பலத்தையுண்டாக்கும், பாண்டு, குன்மம், தந்தரோகம், சுரம், மாந்தம் தீரும்.

கோரைக்கிழங்கு—முந்நுஸ்தா:—[கிழங்கு] மூத்திர வர்த்தனகாரி, சுவேத காரி—குளிர்சுரம், பித்தம், தாகம், கபம், மூர்ச்சை, பேதி, வாந்தி தீரும்.

சிவதை:—[வேர்] விரேசனகாரி— வேரின்பட்டையை அரைத்து பாலில் கொடுக்க பேதியாகும். திராக்ஷ உப்பை சேர்த்துக்கொடுப்பது நல்லது.

சிற்றுமுட்டி:—[வேர்] சுரஹரகாரி— கசாயமிட்டு சுரத்துக்குக் கொடுக்கத் தீரும்.

வண்டு கொல்லி-சீமை அகத்தி:—[இலை] இலைச்சாறும் தேங்காய்ப்பாலும் சேர்த்து சொறி, சிரங்குகளுக்கு பூசத்தீரும்.

சீயக்காய்-சிகைக்காய்:—[காய்-கொழுந்து]—கொழுந்தை துவையல் செய்து க்கொடுக்க பித்தம் தீரும். காயைக்கொடுக்க பேதியும் வாந்தியுமாகும். [தூள்] ஈஸ்வரியமிட வலி சன்னித்தீரும்.

செங்கத்தாரிப்பட்டை, சுருளுப்பட்டை:—இதை அரைத்து தேங்காய் நெய் யில் சேர்த்து காய்ச்சி வடித்து ரணங்களுக்குப்போட உடனே உல ரும். [வேர்] கீல்களின் வீக்கம்; பிரமேகம், புண் தீரும்.

தகரை:—[வேர்] வேரை எலுமிச்சம்பழச் சாற்றாலரைத்து படர்த்தாமரை க்கு பூச தீரும். [விதை] இதை அரைத்து மோரில் கரைத்து சொறி சிரங்குகளுக்கு தடவிவரத் தீரும்.

திருநீற்றுப்பச்சை—ருத்திரசடை—சப்ஜா:—[விதை] அதிசாரம், மேகம், இருமல், வயிறுக்கொட்டல், இவைகளுக்கு ஜலத்தாலரைத்துக் கொடு க்கவும். [இலை] இதின்சாறு காதிலிட காதுவலித்தீரும்.

அந்நாந் தாமரை—ஆகாசத்தாமரை:—[இலை] சினிக்தகாரி, சீதளகாரி— கசாயமிட்டு நீர்சுருக்குக்கு கொடுக்கவும். இலையை அரைத்து மூலத்து க்குதடவ மூலம்தீரும். சீதபேதிக்கு தேங்காய்ப்பாலிலும், இருமல் சுவா சம், காசம், இவைகளுக்கு சர்க்கரை, பந்நீர், சேர்த்து அதிலும் கொடுக் கத்தீரும்.

ஆடுதின்டாப்பாளை:—[இலை] கிருமிநாசகாரி—இதின் கசாயத்தை கிருமிக ளைப்போக்கக் கொடுக்கப்படும். இலையை பாம்புகடிக்கு உள்ளுக்குக் கொடுக்கவும். இலைச்சாறும் எண்ணெயும் சேர்த்து கருங்குஷ்டம், கர ப்பான், சிரங்கு, சிலந்தி, இவைகளுக்கு பூச குணமாகும்.

இங்போகல்:—[விதை] சினிக்தகாரி—விதையும் அதிமதுரமும் அரைத்து இருமல், நீர்கடுப்பு, பிரமேகம் இவைகளுக்குக் கொடுக்கத்தீரும்.

எள்ளு:—[இலை-விதை] இலையாவது விதையாவது அரைத்து காலின் முள்தச்ச இடத்தின்பேரில் வைத்து கட்ட முள்ளை வெளிப்படுத்தும். [எண்ணெய்] இதை தினம் கொஞ்சம் சாப்பிட்டுவர இருமல், சொறி, சிரங்குத்தீரும். தேகம்பூரிக்கும்.

கஞ்சாங்கோரை:—[இலை] கர்ப்பவாதஹரகாரி, உஷ்ணகாரி—குழந்தைகளின் சுரம், மாந்தபேதி, இருமல் இவைகளுக்கு இலைச்சாற்றில் ஒரு பாலடைக்கொடுக்கத்தீரும்.

கருநொச்சி:—[இலை] சுரத்துக்கு இலை கசாயம் கொடுக்கத்தீரும். இலையும் உப்பும் சேர்த்து வறுத்து மூட்டுவலிக்கு ஒற்றடம் கொடுக்கத்தீரும். இலைச்சாறும் எண்ணெயும் சேர்த்து வீக்கங்களுக்கு தடவிவர குணமாகும். மண்டைக்குடைச்சல், பீநசம் இவைகளுக்கு உபயோகிக்கப்படும்.

கர்ப்பூரவள்ளி:— [இலை] கபஹரகரி—குழந்தையின் இருமல், சலுப்பு, இவைகளுக்கு இதின்சாற்றில் கோரோசன மாத்திரையை உரைத்துக் கொடுக்கத்தீரும்.

காக்கட்டான்:—[விந்து-வேர்] செய்கை—விரேஷனகாரி—உபயோசம் இதில் வெள்ளை, நீலம், என 2 விதங்களுண்டு. வெள்ளை சிரேஷ்டமானது. விதையை நெய்யால் வறுத்து பொடித்து ஒரு விராகனிடைக் கொடுக்க பேதியாகும். வேரின் தூளை ½[?] விராகனிடை குழந்தைக்குக் கொடுக்க ஒக்காளம், வாந்திகாணும்; கபத்தை வெளியாக்கும். அன்றியும், ஆமக்கட்டு கண்நோவு, தலைநோவு, சுரம்தீரும்.

நாயுருவி:—[வேர்] முகவசியம் உண்டாகும்- [இலை] கபம், அதிசாரம், ரத்தமூலம், வியர்வை, தந்திமேகம், தீரும். [விதை] பசியை இல்லாமல் செய்யும். [சமூலம் சுட்ட சாம்பல்] பிரசவித்த ஸ்திரீயின் உதிரச்சிக்கலை நீக்கும்.

நாய்வேளை:—[இலை] வாதப்பொருமல், கர்ணஞரோகம், தேகக்கடுப்பு, குத்தல் தீரும்.

நிலவிளா-நரிவிளா-துட்புவிளா:—[இலை] இலையை கசாயமிட்டு சுரம், பித்தம், அதிதாகம் இவைகளுக்குக் கொடுக்கத்தீரும்.

சிறுநெருஞ்சி:—[சமூலம்] மூத்திரவர்த்தனகாரி, சினிக்தகாரி—இதின், கசாயமும் சர்க்கரையும் சேர்த்து நீர்எரிவு, சீழ்மேகம், இவைகளுக்குக்கொடுக்க தீரும். [வித்து] மதுமூத்திரம், சதைஅடைப்பு, நீர்க்கட்டுத்தீரும்.

ஆனைநெருஞ்சி:—[சமூலம்] மயக்கம், தாகம், வெள்ளை, வெண்குஷ்டம் தேக எரிவு, அஸ்மரித் தீரும்.

பற்படாகம்:—[சமூலம்] இதை கஷாயமிட்டு சுரத்துக்குக்கொடுக்க வியர்வை உண்டாகும்.

பிரண்டை—வச்சிரவல்லி:—[சமூலம்] ஜாடராக்கினி வர்த்தனகாரி—இதை நெய்யில் வறுத்து அரைத்து தினம் பாக்களவு எட்டு நாள்கொடுக்க ஆசனதினவு, ரத்தமூலம் தீரும். அன்றியும் கபம், ரத்தபேதி, குன்மம், அக்கினிமந்தம், இவைகளுக்கும் கொடுக்கலாம்.

பூவரசு:—[பட்டை] பட்டையை அரைத்து பாக்களவு நீராகாரத்தில் கலந்துச்சாப்பிட பேதியாகி, சொறி, சிரங்கு தீரும். [காய்] காயின்ரசத்தை எற்சிற்றழும்புக்குத் தடவிவர குணமாகும்.

பேய்ப்புடல்:—[வேர்] வேர்ரசம் கொடுக்க மலங்கழியும். [இலை] இலை ரசம் கொடுக்க வாந்தியாக்கும். சுரம், இருமல் இவைகளுக்குக் கொடுக்கப்படும்.

மீனநாளை:—[வேர்-இலை-பட்டை] கர்ப்பவாதஹரகாரி, பலகாரி--கபம், அஜீர்ணம், வாயு இவைகளுக்கு இதை கஷாயமிட்டுக் கொடுக்கப்படும்.

பொடுதலை-பொற்றலை-கையாந்தகரை:—[சமூலம்] இதை கஷாயமிட்டு குழந்தையின் மாந்தம், சுரம் இவைகளுக்குக் கொடுக்கத்தீரும்.

மாட்டிமோந்து:—[மோந்து] வேதநாசாந்தகாரி—இதைக்கொடுக்க மயக்கங் காணும். வேதனை சமனுக்கவும், பேதியைக்கட்டவும் ஒரு மொக்கு ஒருவேளைக்கு பாலில் காய்ச்சிக்கொடுக்கலாம். இதை சாக்கிரதையாய் உபயோகிக்கவேண்டியது.

மூக்கிரட்டை:—[வேர்] மலகாரி, கிருமிநாசகாரி—இதின் கஷாயத்தை மலங்கழிக்கவும், கிருமிகளை வெளியாக்கவும் கொடுக்கப்படும்.

வல்லாரை:—[சமூலம்] மூத்திராவர்த்தனகாரி, ஜாடராக்கினி வர்த்தனகாரி—மேகம், ரணம், குஷ்டம் முதலிய சருமரோகங்களுக்கு இதை நிழலில் உலர்த்தி சூர்ணித்து 5—8 கிறேன்ஸ் ஜலத்தில் தினம் 2 தடவைக் கொடுக்க வெகு குணத்தைத் தரும். இத்துடன் அயச்செந்தூரஞ்சேர்த்து குஷ்டத்துக்கு கொடுப்பது வெகு சிலாக்கியம். தூளை ரணத்தின் மேல் தூவினால் ரணம் உலரும்.

விஷ்ணுகிராந்தி:—[சமூலம்] சுரம், இருமல் இவைகளுக்கு இதைக்கஷாயமிட்டுக் கொடுக்கலாம்.

வெட்டிவேர்:—[வேர்] சுவேதகாரி, உஷ்ணகாரி—தாகம், சுரம், வாதரோகம் இவைகளுக்கு இதை கசாயமிட்டுக்கொடுக்கவும்.

வெண்டை:-[இலை] இலையை போல்ட்டிஸ் செய்து உபயோகிக்கவும். [விதை] விதையின் கஞ்சியைக்கொடுக்க இருமல், நீர்எரிவு, மலக்கட்டு, தீரும்.

அம்மான்பச்சரிசி:—[சமூலம்] இதில் வெள்ளை, சிவப்பு, என 2-விதங்களுண்டு. வெள்ளைக்கு-தேகத்தடிப்பு, எரிப்புண், பிரமேகம், மலக்கட்டு இவைகளை நிவர்த்திக்குங் குணமுண்டு. சிவப்புக்கு சுக்கிலத்தைவிருத்தியாக்கவும், பிரமேகத்தை நீக்கவும். வெள்ளியை பஸ்மமாக்கவும் குணமுண்டு.

சின்னி:—[கிழங்கு] மூலம் [8], ரத்தக்கிரகணித்தீரும். [இலை] கடிவிஷம் தீரும்.

கொடிமுந்திரி-திராக்ஷை:—[பழம்] சுரம், தாகம், பித்தம் தீரும், சுக்கிலத்தை விருத்திக்கும்.

பெரும்பூசினி:—[காய்] உட்சூடு, பித்தரோகம் [40] மேகம் [20] இவைகளுக்கு இதை உபயோகிக்கப்படும்.

தும்மட்டி-தும்மட்டி:—[காய்] விரேஷனகாரி—கர்ப்பரோகம், வாதரோகம் [80], குன்மம் [8] தீரும்.

கற்றாழை-குமரி:—[மடல்] இதின் சோற்றைக் கழுவி படிகாரத்தூளைச்சேர்த்துதுணியில்போட்டு கண்ணோவுக்கு ஒற்றடம் கொடுக்க கண்ணோவுத்தீரும். வீக்கங்களுக்கு கட்டக்கரையும். இதை அனுபானத்தோடு உள்ளுக்குக்கொடுக்க மூலம் [8]. வாதம், கபம், மேகம் [20], குஷ்டம், கிரிச்சரம் [4] தீரும்.

கள்ளிமுளையான்:—தீபனகாரி—பித்தம் [40], வாதம் (80), இவைகளுக்கு அனுபானத்திலிடத் தீரும்.

ஆடாதோடை:— (இலை) சுரஹரகாரி, அங்காகர்சனநாசகாரி, கிருமிநாஷகாரி—சுரம் (64), சந்நிபாதம் (13), இவைகளுக்கு இதை அனுபானத்திலிடத்தீரும். (வேர்) சுவாசம் (5), காசம் (5), பித்தம் (40), கபம், இருமல், மந்தம், கிருமிரோகம், இவைகளுக்கு வேரின் சாற்றை அனுபானத்திலிடத்தீரும்.

வெண்ணொச்சி:— (இலை) பீநசம், சுரம், வாதம், இருமல், தீரும்.

ஆமணக்கு:— (இலை) மார்புநோய், வாதம், மலபந்தம், தீரும்.

வறட்பூலா:— (இலை) சீதரத்தபேதிக்குக் கொடுக்கப்படும்.

விளாரி:— (இலை) சோபாசாசகாரி—இதை ஆமணக்கெண்ணெயால் வதக்கி வீக்கம், கட்டி இவைகளின் மேல்போட்டு கட்டத்தீரும்.

காட்டாமணக்கு:— (இலை) வெள்ளைவிழுதல், குன்மம் (8), மேகப்புண், குஷ்டம், குளிர்சுரம் இவைகளுக்கு உபயோகிக்கப்படும்.

தவசுமுருங்கை:— (இலை) ஜிங்வாரோகம், சுவாசம், பீநசம், வாதம், கபம் குளிர்சுரம் இவைகளுக்கு உபயோகிக்கப்படும்.

வெதுப்படைக்கி:— (இலை) மாந்தபேதி, சுரம், இவைகள் தீரும்.

பருத்தி:— (இலை) மேகம், பிரமேகம், சோபை இவைகள் தீரும்.

கூத்தன்குதம்பை:— (இலை) பித்தகாரி, வாதம் (80), சூலை (18), சந்நிபாதம் (13) இவைகளுக்கு உபயுகிக்கப்படும்.

அரிவாள்முந்து:— (இலை) காசம், விஷம், சிரஸ்தாபம், தீரும்.
துத்தி:— [இலை] மூலம், கிருமி இவைகளுக்குக் கொடுக்கப்படும். [விதை] கருமேகம், குஷ்டம், இவைகளுக்குக் கொடுக்க குணமாகும். [பூ] சீதளகாரி, வீரியவர்த்தனகாரி—காசம், ரத்தவமனம் இவைகளுக்குக் கஷாயமிட்டுக் கொடுக்கத் தீரும்.

விழுதி:— [இலை] விரேசனகாரி—[வேர்] கர்ப்பத்திலுள்ள கிருமிகள் செத்து வெளிப்பட்டு கர்ப்பந்தரிக்கும்.

கணைப்பூண்டு:—[இலை] சுரம், கணம், மேகக்கட்டி இவைகள் தீரும்.
பிடங்குநாரி:—(இலை) ஜாடராக்கினி வர்த்தனகாரி—மந்தம், அஜீர்ணம் இவைகளுக்கு உபயோகிக்கலாம்.

அவுரி:—(இலை) பாம்புவிஷம், சன்னி (13), கீல்வாதம், மந்தம், தீரும்.
தும்பை:—(இலை) மந்தம், வாதம், சிரோநோய், கபம் இவைகளுக்குக் கொடுக்கலாம். (பூ) தாகம், சன்னி (13), நேத்திரரோகம் இவைகளுக்கு உபயோகிக்கலாம்.

முள்ளங்கி:—(இலை) நீர்க்கட்டு, வாதம், மார்புநோய், இவைகளுக்குக் கொடுக்கலாம். (கிழங்கு) வயிற்றுவலி, குடல்வலி, வாதநோய், குன்மம், சுவாசம், கபம், நீர்க்கட்டு இவைகளுக்கு உபயோகிக்கலாம். (விதை) வீரியவர்த்தனகாரி—விந்தை அதிகரிக்கும்.

கத்தரி:—(பிஞ்சு) கபம், திரிதோஷம், தீரும். சொறிதினவு உண்டாகும்.

கண்டங்கத்திரி:—(சமூலம்) நீர்எற்றம், ஈளை, சுவாசம், ஜலபீநசம், இவைகளுக்கு உபயோகிக்கப்படும். (காய்) உஷ்ணகாரி, தீபனகாரி—சிலேஷ்ம ரோகம் (20)க்கும் கொடுக்கலாம்.

கறிமுள்ளி:—(காய்) சுவாசம் (5), சுரம் இவைகளுக்குக் கொடுக்கலாம்.

மணத்தக்காளி:—(இலை-விதை) மலகாரி. இதில் கறுப்பு, சிவப்பு என 2 விதங்களுண்டு. இரண்டின் குணமொன்று. வாதம் (80), சிலேஷ்மம் (20) இவைகளுக்குக் கொடுக்கலாம். இலையின் கசாயம் வாய் ரணத்துக்கு வாயைகொப்பளிக்க குணமாகும்.

களா:—(காய்) தீபனகாரி—பித்தம், வாந்தி, தாகம் இவைகள் தீரும். (பூ) சதை, ரத்த, கரும, சுவேத என்னும் 4 வித நேத்திர படலங்களுக்கு உபயோகிக்கப்படும். (வேர்) பிரசவ அழுக்கு, மாந்தம், கபநோய் இவைகளுக்குக் கொடுக்கலாம்.

மொநகன்:—(கிழங்கு) சீதளகாரி—சுரம், பிரமேகம், கபம், தீரும்.

அமுக்கிற-அசுவகந்தி:—(கிழங்கு) சொபாநாசகாரி, தீபனகாரி-சுரம், பாண்டு, க்ஷயம் இவைகள் குணமாகும்.

பூமிச்சர்க்கரை:—(கிழங்கு) தாருட்டியகாரி- வெள்ளைவிழுதல், சுரம், மூலம், பிரமேகம் இவைகளுக்குக் கொடுக்கலாம்.

இஞ்சி:—(கிழங்கு) தீபனகாரி-சுரம், சன்னி, ஒக்காளம், வாதம், கபம் தீரும்.

காற்க்கருணை:—(கிழங்கு) தீபனகாரி-மந்தம், வாதம், ரத்தமூலம் தீரும்.

கருஞ்செம்பை:—(பூ) கபாலச்சூலை, பீநசம், நீர்கட்டு, குணமாகும்.

செம்பரத்தம்:—(பூ) வெள்ளைவிழுதல், பிரமேகம் (21) இவைகளுக்கு உபயோகிக்கலாம்.

நந்தியாவட்டை:—(பூ) நேத்திரகாசப்படலம், லிங்கநாதம், சிரஸ்தாபம் இவைகளுக்கு உபயோகப்படும்.

செவ்வந்தி:—(பூ) தலைசுற்றல், மூர்ச்சை இவைகள் குணமாகும்.

வேளை:—(பூ) மந்தம், மந்தசுரம், விஷம், மார்புசளி இவைகள் தீரும்.

நீர்முள்ளி:—(விதை) வீரியவர்த்தனகாரி, பலகாரி-கபம், சோபை, பிரமேகம், அதிசாரம் தீரும். (சமூலம்) கசாயமிட்டு கொடுக்க நீர் இறங்கும்.

வெங்காயம்:—(விதை) மேகம், மூலம், தேககாங்கை, நீர்எரிவு தீரும்.

துளசி:—(விதை) சீதம்விழுதல் தீரும். (இலை) இருமல், ஜலுப்பு தீரும்.

கரியசாலை:—(விதை) காமாலைக்குக் கொடுக்க தீரும்.

சங்கம்:—(வேர்) கிருமி, வாதம், காசம், கோழை, கபம் குணமாகும்.

பேராமுட்டி:—(வேர்) பித்தம், சுரம், தாகம், மந்தம் இவைகள் தீரும்.

சிற்றமுட்டி:—(வேர்) சுரம் (64) க்கும் கொடுக்கலாம்.

செந்நோட்டி:—(வேர்) கோழை, இரைப்பு, வாதம் இவைகளுக்கு கொடுக்கலாம்.

அவுரி:—(வேர்) வெள்ளைவிழுதல், வயிற்றுவலி, மூர்ச்சை இவைகள் தீரும்.

முக்காவேளை:—(வேர்) அன்னதுவேசம், சுரம், மந்தம், வாதம் தீரும்.

தருப்பை:—(புல்) தாகம், சுரம் இவைகளுக்கு உபயோகிக்கலாம்.

மீநரப்புல்:—(புல்) நாசிகாரோகம், மாந்தம், மூலம், இவைகள் தீரும்.

வாசனைப்புல்-நாமாக்ஷிப்புல்-நாவட்டம்புல்:—(புல்) தீபனகாரி, சுவேதகாரி-கோழை, சுரம் இவைகளுக்குக் கொடுக்கலாம்.

பெரியாநங்கை:—(இலை) மலக்கட்டு, பித்தம் (40) இவைகள் தீரும்.

மிளகுந்நங்கை:—(இலை) நித்திரையில் கால்களைச்சேர்த்து முருக்கிக்கொள்ளும் வாதம், பாண்டு, மேகம், உட்சூடு இவைகள் தீரும்.

கருணை:—(தண்டு) தீபனகாரி, ஜீர்ணகாரி-கபம், மூலம், இவைகளுக்குக் கொடுக்கலாம். (கிழங்கு) மூலம் (8) க்கு உபயோகிக்கலாம்.

கீரை:—(தண்டு) ரத்தகழிச்சல், கிரிச்சரம் இவைகளுக்குக் கொடுக்கலாம்.

புதியது:—(கீரை) பேதி, மந்தம் அரோசகம் இவைகள் குணமாகும்.

வெள்ளை:—(கீரை) இதை முலைப்பால் அதிகரிக்க கொடுக்கப்படும்.

பருப்பு:—(கீரை) பித்தத்தை சமனமாக்க இதைக்கொடுக்கலாம்.

பசலை:—(கீரை) வெள்ளைவிழுதல், மூத்திரரோகம் இவைகள் தீரும்.

பால்சோரி:—(கீரை) இதைக்கொடுக்க பித்தம் குணமாகும்.

முளை:—(கீரை) தீபனகாரி-காசம், சுரம் இவைகளுக்குக் கொடுக்கலாம்.

முள்ளி:—(கீரை) ஜாடராக்கினி வர்த்தனகாரி, மூத்திரவர்த்தனகாரி-மந்தம் நீர்கட்டு இவைகளுக்குக் கொடுக்கலாம்.

அறை:—(கீரை) வீரியவர்த்தனகாரி—காசம், சுரம் தீரும். தாதுவிருத்தியாகும்.

சிறு:—(கீரை) கிரிச்சரம், பித்தம், நேத்திரகாசம் இவைகள் தீரும்.

புளியாரை:—(கீரை) ரத்தமூலம். பித்தம், மூலவாயு இவைகள் தீரும்.

கோழி:—(கீரை) கிருமி, கரப்பான், இவைகளுக்குக் கொடுக்கலாம்.
கொத்தமல்லி:—(கீரை) பலகாரி, வீரியவர்த்தனகாரி, பித்தநாசகாரி—அரோசகம், பித்தம் (40), வாதம் (80), இவைகளுக்குக் கொடுக்கலாம்.
குங்குமப்பூ:—(பூ) உஷ்ணகாரி-சிலேஷ்மரோகம், செவி நாசி நேத்திரரோகங்கள் இவைகளுக்கு உபயோகிக்கப்படும்.
காட்டாத்தி:—(பூ) மந்தபேதி, ரத்தபேதி, இவைகள் தீரும்.
மந்தாரபூ:—(பூ) சீதளகாரி—தேகஎரிவு, காங்கை தீரும்.
பன்னீர்: (பூ) இதை பித்தம், வாந்தி இவைகளுக்குக் கொடுக்கலாம்.
செந்தாமரை:—(பூ) இருமல், தொண்டைகபம், சிரஸ்தாபம் தீரும்.
பிரமதண்டு:—(பால்) கண்சிவப்பு, கண்கூசுதல், கண்ணீர்வடிதல், கண்குறுகல், கண்வலி, முதலியவைகளுக்கு உபயோகிக்கப்படும்.
தென்னம்:—(குருத்து) கபம், பித்தம் மூலம் இவைகளுக்குக் கொடுக்கவும். (இளநீர்ஜலம்) பித்தத்தை விருத்திக்கும், க்ஷயத்தைக் கண்டிக்கும். (தேங்காய்பால்) கரப்பானுக்குக் கொடுக்கலாம், சுக்கிலத்தை விருத்திக்கும், வாதம், பித்தம் அதிகரிக்கும்.
மருதோன்றி:—(வேர்) ஸ்திரிகளின் ருதுகால தோஷம், பித்தம் தீரும்.

சில இங்கிலீஷ் மருந்துகள் சாதாரணமாய் இங்கிலீஷ் பெயர்களைக் கொண்டே வழங்கிவருவதால் இங்கிலீஷ் பெயர்களும் அதற்குச் சரியான தமிழ்ப்பெயர்களும் காண்க.

மருந்துகளின் இங்கிலீஷ் பெயர்கள்.		மருந்துகளின் தமிழ் பெயர்கள்.
தமிழில்	இங்கிலீஷில்	
பில்ஸ்	Pills	மாத்திரை
கன்பக்ஷன்	Confection	லேகியம்
லினிமெண்ட்	Liniment	பூசத்தயிலம்
அயின்டமெண்டு	Ointment	இளகியக் களிம்பு
பிளாஸ்டர்	Plaster	பிளாஸ்திரி
பிளிஸ்டர்	Blister	கொப்பளிக்கும் மருந்து
பொல்டீசு	Poultice	பதவாடை
டிகாக்ஷன்	Decoction	கசாயம்
மிக்ஸ்சர்	Mixture	பலமருந்துகளின் சேர்க்கை
டிங்சர்	Tincture	பாவனத் திரவம்
காம்பௌண்ட் டிங்சர்	Compound Tincture	கலவைப்பாவனத் திரவம்
எக்ஸ்டிராக்ட்	Extract	சத்து
காம்பவுண்ட் பவுடர்	Compound Powder	கலவைச்சூரணம்
ஸ்பிரிட்	Spirit	பரிமளபதார்த்தங்கள் சேர்ந்த சாராயம்
வாட்டர்	Water	ஜலம்
ஆயில்	Oil	தயிலம்
எஸ்ஸென்ஸ்	Essence	தயிலஞ்சேர்ந்த சாராயம்

13-வது அத்தியாயம்.

கபேரோகங்கள் அதி சீக்கிரத்தில் குணமாக்குவதற்கு மகாவல்லமையுள்ள, இங்கிலீஷ், யுனனி, கர்நாடக இம்மூன்றுவித அவுஷத பதார்த்தங்களையும் அவைகளின் குணங்கள், செய்கைகள் முதலியவைகளையும் இந்த அத்தியாயத்தில் சொல்லப்படும்.

கடுகு—Mustard—மஸ்டார்ட் (வித்து)

குணம்:—கடுகில் நாய்க்கடுகு, மலைக்கடுகு, சிறுக்கடுகு, கருங்கடுகு, வெண்கடுகு என ஐந்துவகைப்படும். இதை சகலருக்குந்தெரிந்த பதார்த்தம்.

செய்கை:—வமனகாரி, சோணகாரி, உஷ்ணகாரி, மூத்திரவர்த்தனகாரி.

உபயோகம்:—கடுகைக் கொஞ்சமாய்க் கொடுத்தால் சீர்ணிக்கச்செய்யும், வாயுவை ஹதம் செய்யும், சூட்டையுண்டாக்கும். அதிக அளவில் கொடுத்தால் வாந்தியாகும். இது குமட்டல், ஆயாசம் இவைகளில்லாமல் வாந்தியை உண்டாக்குவதால் நஞ்சுண்டோருக்கு நஞ்சை வெளியாக்கக் கொடுக்கலாம். கடுகை அரைத்து கால் கைகளுக்கு தடவி துணியைச்சுற்றினல் சூட்டை உண்டாக்கும். வயிறு, தொண்டை, மார்பு முதலிய இடங்களில் இதை அரைத்துத் தடவினல் நோய்தணியும். கடுகை அடிக்கடிக் கொடுத்தால் மூத்திரத்தை விருத்திக்கும்.

அளவு:—இதின் தூள் 1—2 டேபில்ஸ்பூன் அளவுக்கு 6—8 அவுன்ஸ் நீரில் கொடுக்க வாந்தியாகும். 2—3 தேயிலைக்கரண்டி அளவு மந்தாக்கினிக்கு தினம் 2—3 தடவைக் கொடுக்கலாம்.

அம்பர்—Amber—(ரோஜனம்)

குணம்:—இது பல ரூபங்களாயும் மஞ்சள் நிறமாயும் இருக்கும். ஜலத்திலும் சாராயத்திலும் கரையாது.

செய்கை:—உஷ்ணகாரி, அங்காகர்சன நாசகாரி.

உபயோகம்:—அம்பரும் மணலும் சமனிடையாய் சேர்த்து, எரித்துத் தயிலத்தை வடித்து 5 துளி விதம் அனுபானத்திலிட வலி 5 தீரும்.

மண்ணெண்ணெய்—Earth Oil—எர்த் ஆயில்.

குணம்:—இது தடிப்பாயும், கறுத்து தாரின் வாசனையும், ருசியும் உள்ளது. ஜலத்தில் கரையாது, ஈதரில் கரையும்.

செய்கை:—உஷ்ணகாரி, அங்காகர்சன நாசகாரி, சுவேதகாரி, கிருமிநாசகாரி.

உபயோகம்:—இதை அனுபானத்திலிட வலிப்புகள் (5), குணமாக்கும், கிருமிகளைப்போக்கும், வியர்வை உண்டாக்கும். வாந்தியை நிறுத்தும்.

அளவு:—12-20 துளி ஜலத்தில் கொடுக்க வாந்தி நிற்கும், 30-60 துளி லவங்கப்பட்டை கசாயத்தில் கொடுக்க வியர்விக்கும், கபம் தீரும்.

வசம்பு (வேர்கட்டை) Sweet Flag— ஸ்வீட்பிளாக்.

செய்கை:—ஜாடராக்கினி வர்த்தனகாரி, உஷ்ணகாரி.

உபயோகம்:—இசிவு, சுரம், அக்கினிமந்தம், மாந்தம், ஜன்னி, பேதி, வாயு, புண், இவைகளுக்கு இதை கசப்புள்ள பலகாரியோடும், உஷ்ணகாரியோடும், சேர்த்துக்கொடுக்கப்படும்.

அளவு:—இதின் தூள் 10—20 கிறேன்ஸ் மாத்திரை ரூபமாகவாவது, ஜலத்திலாவது கொடுக்கலாம்.

சீமைக்காடி—Vinegar—வினிகர்.

குணம்:—இதை மால்ட்கோதுமையை புளிக்கவைத்து செய்யப்படும். இதில் அவிடிக் ஆஸிட் என்கிற புளிப்பு இருக்கிறது.

செய்கை—உபயோகம்:—காடியில் துணியை நனைத்து மூலம், கருப்பை, நாசி, ரணம், இவைகளுக்குப்போட்டால் அவைகளிலிருந்து வடிகிறரத்தம் உடனே நிற்கும், காடியை ஜலத்திலிட்டுச் சாப்பிட்டால் அதிவியர்வை, ரத்தவமனம், ரத்தபீநசம், இவைகள் தீரும்.

அளவு:—2—4 திராம் வரையில் ஜலத்தில் கொடுக்கலாம்.

கடுகுரோகிணி —Black Hellebore—பிளாக் ஹெல்லிபோர் (வேர்)

குணம்:—இதின்மேல் கறுப்பாயும் உள்ளே வெண்மையாயும், கசப்பாயும், காரமாயும் இருக்கும்.

செய்கை:—ருதுவர்த்தனகாரி, விரேசனகாரி.

உபயோகம்:—ஆமக்கட்டு, மலக்கட்டு, சூதகக்கட்டு, சூதகச்சூலை, கரப்பான், சுரம், திரிதோஷம், மாந்தம், வாயு, இவைகளுக்கு இதை உபயோகிக்கலாம்.

அளவு:—இதின் தூளை 10—20 கிறேன்ஸ் அனுபானத்தில் கொடுக்க தண்ணீர்த் தண்ணீராய் பேதியாகும், வாந்தியுமாகும். ரோகங்களுக்கு 3-8 கிறேன்ஸ் கொடுக்கலாம். டிங்சர் 20 முதல் 60 துளி கொடுக்கலாம்.

ஆகோனைட்—Aconite-(வேர்-இலை)

குணம்:—இலைகளின் மேற்புறம் பச்சையாயும், அடிப்புறம் இளம் பச்சை நிறமாயுமிருக்கும். வேரானது கறுத்தும் உள்ளேவெளுத்துமிருக்கும். வாயில் போட கசப்பும், காரமும், விறு விறுவென்று நாக்கும் உதடுகளும் மரத்து விடும். இங்கிலீஷ் நாவிக்கு ஆகோனைட் என்று பெயர். வடதேசத்திலிருந்து வருகின்ற நாவிகள்-கருநாவி, வெள்ளைநாவி, ருத்திரநாவி, வச்சநாவி என 4 வகைப்படும்.

செய்கை:—வேதனைசாந்தகாரி, சமனகாரி.

உபயோகம்:—இது வெகு விஷமுள்ள பதார்த்தம். ஜாக்கிரதையாய் உபயோகித்தால் கீல்வாதம், இருதயரோகம், நரம்பைப்பத்தியரோகங்கள் இவைகள் குணமாகும். நாடி விரைவாய் அடிப்பதை சமனப்படுத்தும். நுரைசுரல் தாபனரோகம், அக்கி, சர்வஉக்கிறதாபன சுரம், ஸ்போடகசுரம், சூதகவயிற்றுவலி, கிரந்தி இவை முதலியவைகளுக்கு உள்ளுக்குக் கொடுக்கலாம். Extruot ¼ முதல் 1 கிறேன் அளவு. டிங்சர் Tinoturo 5 முதல் 15 துளி வீதம் கொடுக்கலாம். ஒரு அவுன்ஸ் ஜலத்தில் ½ (?) துளி வீதம் ½ (?) மணி நேரத்திற்கு ஒரு தடவையாக கொடுத்துவந்தால் சுரத்தை அல்லது ரத்த கொதிப்பை குறைத்து தாராளமாய் வியர்வையைப் பிறப்பிக்கும்படி செய்யும். ஒரு நாளுக்கு 2—3 தடவை கொடுக்கலாம். 3 மணி நேரத்திற்கு ஒரு தடவை 5 துளி வீதம் ஜலத்தில் கொடுத்தால் முக சந்நிகுணமாகும்.

கலம்பா —Calumba-(வேர்)

குணம்:—இது தட்டையாயும் உருண்டை பில்லையாயிருக்கும். கசப்பும் கொஞ்சம் வாசனையுமுள்ளது.

செய்கை:—பலகாரி, ஜாடராக்கினிவர்த்தனகாரி.

உபயோகம்:—இதைக்கொடுக்க பலத்தை உண்டாக்கும். இதில் துவர்ப்பு, சத்துயில்லை. அயம், வீரம் இவைகளோடு சேர்த்துக்கொடுக்க மெத்த உபயோகமுள்ளது. கர்ப்பஸ்திரீகளுக்கு காணும் வாந்தி, துர்பலம்; மந்தாக்கினி இவைகளுக்குக்கொடுக்க குணமாகும்.

அளவு:—10—30 கிறேன்ஸ் வீதம் தினம் 2-3 தடவை கொடுக்கலாம். டிங்சர் ½ (?) முதல் 1 திராம் கொடுக்கலாம்.

போஸ்தக்காய் —Poppy heads—பாப்பிஹேட்ஸ்-(காய்)

குணம்:—இது கசகசாச்செடியின்காய். முற்றின போஸ்தக்காயில் சத்து கொஞ்சமாயிருக்கும், முற்றாதகாயில் சத்து அதிகமாயிருக்கும். ஆகையால் இது நல்லது. சத்துக்கு அபினிக்குள்ள குணங்களுண்டு.

செய்கை:—வேதனசாந்தகாரி, சின்கிதகாரி.

உபயோகம்:—கீல்நோவு, கண்ணோவு, வயிற்றுவலி, ஆஸனக்கடுப்பு முதலியவைகளுக்கு இதின் கசாயத்தை சுடசுட ஒற்றிடம் கொடுக்க குணமாகும்.

அபினி—Opium—ஒபியம்-(உறைந்தபால்)

குணம்:—இது போஸ்தக்காயிலிருந்து வடிந்துறைந்தபால்.

செய்கை:—வேதனசாந்தகாரி, நித்திராகாரி, சமனகாரி, அங்காகர்ஷன நாசகாரி, சுவேதகாரி, உஷ்ணகாரி.

உபயோகம்:—அபினி மகாசிரேஷ்டமான அவுஷதம். இதுவெகு ஜாக்கிறதையாய் வயதுக்குத்தக்கபடி அளவை நிறுத்திக்கொடுக்கவேண்டியது. கர்ப்பஸ்திரீகளுக்கும், குழந்தைகளுக்கும் அபினியைக் கொடுக்கலாகாது. தாபனரோகங்களுக்கு இபிகாகியுவனு, ரசபஸ்மம் இவைகளோடு அபினியை சேர்த்துக்கொடுக்கலாம். சூலை, இசிவு, வாந்திபேதி, அதிசாரம், பல்நோய், செவிநோய், வாதம், குன்மம், பேதி, பீனசம் முதலிய ரோகங்களுக்கு அபினியைக் கொடுத்து சௌக்கியப்பட்டு இருக்கின்றது.

அளவு:—அபினிக்கட்டி ½ [೭]—2 கிறேன்ஸ். எக்ஸ்டறாக்ட் ¼ [வ] முதல் 1 கிறேன். வைன் 10 முதல் 40 துளி. Extract Liquid-எக்ஸ்ட்றாக்ட் லிகுவிட் 5 முதல் 30 துளி. டிஞ்சர் 5 முதல் 30 துளி கொடுக்கலாம்.

திப்பிலி— Long Pepper—லாங்பெப்பர்-(காய்)

குணம்:—இது நீண்டு மேல் மேடுகளாயிருக்கும். இதில் வித்துகளுண்டு. காரமும், விறுவிறுப்புமுள்ளது. இதில் அரிசிதிப்பிலி, ஆனைத்திப்பிலி என 2 விதங்களுண்டு; ஆனல் குணம் ஒன்று.

செய்கை:—உஷ்ணகாரி.

உபயோகம்:—இதை தனியாய்க் கொடுப்பது அரிது. இதை அனுபானத்தில் கொடுக்க வாதம் [80], சிலேஷ்மம் [20], இரைப்பு முதலிய பற்பல ரோகங்கள் குணமாகும்.

அளவு:—10—20 கிறேன்ஸ் கொடுக்கலாம்.

திப்பிலிமூலம்-கண்டதிப்பிலி (வேர்)

செய்கை:—கர்ப்பவாதஹாரகாரி.

உபயோகம்:—தேகவலி, பித்தம், காசம், சுரம், இவைகளுக்குக்கொடுக்கப்படும்.

அளவு:—1—2 திராம் அனுபானத்தில் கொடுக்கவும்.

நெல்லிமுள்ளி. (நெல்லிவற்றல்.)

குணம்:—நெல்லிக்காயை உலர்த்திக்கொள்ளுதல்.

செய்கை:—பித்தசமனகாரி.

உபயோகம்:—நீர்எரிவு, பித்தவமனம், உட்சூடு இவைகளுக்குக் கொடுக்கலாம்.

நான்றிக்காய் (காய்.)

உபயோகம்:—ஆண்குறிப்புண், உள்சூடு, திரிதோஷம் இவைகளுக்கு தகுந்த அநுபானத்திலிட குணமாகும்.

பேரீச்சம் (காய்-பழம்.)

செய்கை:—தீபனகாரி, வீரியவர்த்தனகாரி.

உபயோகம்:—மதுமூத்திரம், உமிழ்நீர்வடிதல், இவைகளுக்கு காயைக் கொடுக்கலாம். நீர்க்கட்டு, பித்தம், சுரம் இவைகளுக்குப் பழத்தைக் கொடுக்கப்படும்.

சிறுதேக்கு-கண்டுபோரங்கி; (வேர்.)

உபயோகம்:—உட்சூடு, தேகவலி, சுவாசம், காசம், குளிர்சுரம் இவைகளுக்கு அநுபானத்தில் கொடுக்கப்படும்.

அலிஸி—Linseed—லின்ஸிட்-(விதை)

செய்கை:—சினிக்தகாரி.

உபயோகம்:—இருமல், சீதபேதி, கிரகணி, வெள்ளைவிழுதல், கல்லடைப்பு, நீரடைப்பு முதலியவைகளுக்கு விதை கொடுக்கலாம்.

அளவு:—அலிஸிவிதை தூள் 3 கிராமும், அதிமதுரத்தூள் 1 கிராமும் சேர்த்து ½ [௯] பையிண்டு ஜலத்தில் போட்டுக்காய்ச்சின கசாயத்தில் 1½ [க௯] அவுன்ஸ் வீதம் கொடுக்கவும்.

தேயிலை —Tea—டீ-(இலை)

குணம்:—இது சீனுதேசத்தில் விளைகிறது. இதில் கறுப்பு, பச்சை, என 2 விதங்களுண்டு. இதை இந்தியாவிலும் பயிரிட்டு வருகின்றது. இதற்கு துவர்ப்பு குணமுண்டு.

செய்கை:—அல்ப உஷ்ணகாரி.

உபயோகம்:—இது நரம்புகளில் வியாபித்து தெம்பைக்கொடுத்து ஆயாசத்தை நீக்கும். வியாதிகளில் இளைப்பை யாற்ற இதை கொடுக்கப்படும். பச்சை நிறமான தேயிலை நித்திரையை போக்கடிக்கும். தேய்த்தண்ணீர் ரத்தவோட்டத்தைக் குறைத்து சாராயம் குடித்துக்காணுகிற மயக்கத்தையும், தேகம் அலுத்து காணுகிற உறக்கத்தையும் நீக்கும். தேய்த்தண்ணீர் காரமாக செய்துக்கொடுத்தால் சிலவேளை தெம்பையும் சிலவேளை சோம்பலையும் தரும்.

மக்கி—Gamboge—காம்போஜ்-(உறைந்தபால்)

குணம்:—மக்கியானது கார்சினிய பிக்டொரிய என்னும் செடியை காயப்படுத்துவதால் வடிந்து உறைந்த பால். இது மஞ்சள் நிறமாயிருக்கும்.

செய்கை:— ஜலவிரேஷனகாரி, கிருமிநாசகாரி.

உபயோகம்:—இது தனிப்பட கொடுக்கக்கூடாது. பேதிமருந்துகளுடன் சேர்த்துக் கொடுத்தால் வாந்தி, குமட்டல், கடுப்பு முதலியவைகளை ஆக்காமல் தண்ணீர் தண்ணீராய் பேதியாக்கும். சூதககட்டு, மலக்கட்டு முதலியவைகளுக்கு கொடுக்கலாம்.

அளவு:—2-5 கிறேன்ஸ் மக்கியை ரசபஸ்மம், ஸ்காமொனி இவைகளோடுச் சேர்த்துக் கொடுக்கவேண்டியது.

குவாகம்—Guaiacum—(ரோஜனம்)

குணம்:—இது சாம்பிராணி வாசனையும், தொண்டையில் எரிச்சலையும் உண்டாக்கும்.

செய்கை:—சுவேதகாரி, உஷ்ணகாரி.

உபயோகம்:—கீல்வாதம், மேகம் (20), கண்டமாலை, சூதகஜன்னி, சருமரோகம் இவைகளுக்கு கொடுக்க குணமாகும்.

அளவு:—10 - 30 கிறென்ஸ் கொடுக்கலாம். வியர்க்காவிட்டால் மூத்திரத்தை அதிகப்படுத்தும். டிங்சர் ½ (?) முதல் 1 திராம் கொடுக்கலாம்.

சதாபுஇலை—Rue—ரூ-(இலை)

குணம்:—இது, பச்சையில் சாம்பல் பூத்த வண்ணமாயும், கசப்புள்ள வெகுட்டலாயும் இருக்கும்.

செய்கை:—உஷ்ணகாரி, அங்காகர்சனநாசகாரி, கிருமிநாசகாரி, சோனகாரி, ருதுவர்த்தனகாரி.

உபயோகம்:—இதை வயிற்றுவலிக்கு கொடுக்க சிலாக்கியமானது. சூதக ஜன்னியை தவராமல் கண்டிக்கும். குழந்தையின் இசிவுரோகத்தை உட னே குணமாக்கும். கர்பஸ்திரீக்குக் கொடுத்தால் பிண்டத்தைச் சேதப்படு த்தும். இருமலுக்கு நோயாளியிருக்கும் அரையில் தூபம்போட குணத்தைத் தரும். இதின் ரசத்தை கொடுக்க கிருமிகள் நாசமடையும்.

அளவு:—20—40 கிறேன்ஸ் கொடுக்கலாம்.

பக்கு—Buchu—(இலை)

உபயோகம்:—இது மூத்திரப்பையில் காணுகிற மேகரோகத்துக்கு மறுரா நல்ல மருந்து; கொடுத்தால் உடனே குணத்தைத் தரும்.

அளவு:—இலை தூள் 20—30 கிறேன்ஸ். டிங்சர் ½ (௨) முதல் 1 திராம் கொடுக்கலாம்.

குவாஷியா—Quassia—(சக்கை)

குணம்:—குவாஷியா மரத்தை சக்கைகளாக்கி விற்கப்படும். பலவிதநிற முள்ளதும், கசப்பாய் இருக்கும்.

செய்கை:—பலகாரி, தீபனகாரி.

உபயோகம்:—துர்பலம், அஜீர்ணம், பசியில்லாமை ரோகத்தால்காணும் பலஹீனம் இவைகளுக்கு இதைக் கொடுக்க தவராமல் குணத்தைத் தரும். நாள்ப்பட கொடுத்தால் பார்வைக் கெடும். இதின் கசாயத்தை சிறு பிள்ளை களுக்கு 2-3 நாள் தொடர்ச்சியாய் கொடுத்து மறுநாள் ஆமணக்கெண்ணெய் யைக் கொடுக்க கிருமிகளை வெளிப்படுத்தும்.

அளவு:—இதின் கசாயம் 1½ (௧௨) அவுன்ஸ். டிங்சர் அரை முதல் 1 திராம் கொடுக்கலாம்.

கியான்டர்பன்டையின்—Chian Turpentine-(ரோஜனம்)

குணம்:—இது இளகிய ரோஜனம். வாசனையுண்டு.

செய்கை:—கர்ப்பூர தைலத்தின் செய்கைகள் இதற்கு உண்டு.

உபயோகம்:—இது மூத்திர உறுப்புகளில் போய் பற்றி பிடித்து அவை களிலிருந்து வடிகிற மேக நீரை உடனே குணமாக்கும்.

அளவு:—10—30 கிறென்ஸ் ரோஜனத்தை அதிமதுரம், விளாம்பிசின், முட்டையின் மஞ்சள் கரு இவைகளில் எதிலாகிலும் சேர்த்து தினம் 3 தட வைக் கொடுக்கலாம்.

ருமிமஸ்தகி—Mastic—மாஸ்டிக்-(ரோஜனம்)

துணம்:—இது மணிகளாயும், மஞ்சள் நிறமாயுமிருக்கும். கர்ப்பூரதயிலம், ஆல்கோஹால் இவைகளில் கரையும்.

செய்கை:—உபயோகம்:—இதை சொத்தைப்பல்லின் குழியில் காற்றுப்புகாமலிருக்கும்படி அடைக்க குணத்தைத் தரும். இது சாலாமிசிரி முதலியவைகளோடெச் சேர்த்துக்கொடுத்தால் பலத்தை உண்டாக்கும்.

அளவு:—20—60 கிறேன்ஸ் கொடுக்கலாம்.

வாலேந்திரபோளம்—Myrrha—மர்-(ரோஜனப்பிசின்)

துணம்:—இது சிறிதும் பெரிதுமான மேடுபள்ளமுள்ள கட்டிகளாயிருக்கும். சிவப்பு கறுப்பு நிறமும் கசப்போடு நல்ல வாசனையும் உள்ளது. ஜலத்தில் கரையும்.

செய்கை:—தீபனகாரி, கபஹரகாரி, அங்காகர்சனநாசகாரி, ருதுவர்த்தனகாரி.

உபயோகம்:—காசம், இருமல், எலும்புருக்கி, க்ஷயம், குன்மம், சூலை, கரப்பான், சொறி இவைகளுக்கு தகுந்த அனுபானத்தில் கொடுக்க குணத்தைத் தரும்.

அளவு:—10—30 கிறென்ஸ்யை விரேஷனகாரி, பலகாரி இவைகளோடெச் சேர்த்துக் கொடுக்கலாம். டிங்சர் ½ (?) முதல் 1 திராம் கொடுக்கலாம்.

காசுக்கட்டி—Catechu—காடிகியு-(சத்து)

துணம்:—இது துவர்ப்பும், தித்திப்பும், பிசுபிசுப்பும் உள்ளது. சிவப்பு நிறமுள்ளது நல்ல சரக்கு. ஜலத்திலும் சாராயத்திலும் கரையும்.

செய்கை:—ஸங்கோசஷனகாரி.

உபயோகம்:—மூலைக்காம்பு வெடிப்பு, தொண்டைக்கம்மல், வெள்ளை, சீதபேதி, அதிசாரம், இருமல் முதலிய ரோகங்களுக்கு உபயோகிக்கலாம்.

அளவு:—10—30 கிறேன்ஸ். டிங்சர் ½ (?) முதல் 1 திராம் கொடுக்கலாம்.

சூரத்து நில ஆவாரை—Senna—ஸென்னு-(இலை)

துணம்:—இது அநேக தேசங்களில் விளைகிறது. திருநெல்வேலியில் விளைகிற சரக்கு சிரேஷ்டமானது. கசப்பும் வெகுட்டலும் உள்ளது.

செய்கை:—விரேசனகாரி.

உபயோகம்:—மலச்சிக்கல், நீர் ஏற்றம், முதலியவைகளுக்கு இதை கசாயஞ்செய்து கொடுக்கலாம். குமட்டல் உண்டாகாமலிருக்க காபி, பால் சுக்குத்தூள், சீமை இந்துப்பு, (Epson Salt), திராக்ஷ உப்பு, இவைகளில் எதிலாகிலும் சேர்த்துக் கொடுக்கவும். கர்ப்பஸ்திரீ, மூலரோகி, சிறு குழந்தை இவர்களுக்கு நிலாவாரை கொடுக்கக்கூடாது. நிலாவாரையும் சுக்கும் சேர்ந்த கசாயத்தில் ஆமணக்கெண்ணெய்ச் சேர்த்து பேதிக்குச் சாப்பிட்டால் சுகபேதியாகும். நிலாவாரை விசேஷமாக சிறு குடலில் வியாபித்து பேதியை உண்டாக்கும்.

அளவு:—1—3 கிராம் நிலாவாரையுடன் ஜலம் சேர்த்து காய்ச்சின கசாயத்தில் சுக்குத்தூள் 12 கிறேன்ஸ் அல்லது பெப்பர் மேண்டு தைலம் ஒரு துளி விட்டுச் சாப்பிடவும்.

குங்கிலியத்தயிலம்—Copaiba—கோபேபா

குணம்:— இது அநேக ஜாதி மரங்களிலிருந்து சேகரிக்கப்படும். மஞ்சள் நிறமும், ஒருவித வாசனை, கசப்பு, கறகறப்பு, வெகுட்டல், இவைகளுள்ளது. இது ஜலத்தில் கரையாது. ஆல் கோஹால், எண்ணெய் இவைகளில் கரையும்.

செய்கை:—விரேசனகாரி, மூத்திரவர்த்தனகாரி.

உபயோகம்:—இது முக்கியமாய் மூத்திரத்தாரையில் சென்று குணத்தைத் தருவதால் வெள்ளை விழுதலுக்கு இது சஞ்சீவி. வெள்ளைக்கு ஆரம்பத்தில் இதைக்கொடுத்தால் உடனே குணத்தைத்தரும். வியாதியை அனுகூலமான பிறகும் 7-8 நாள் அதாவது பேதி காணும் வரையில் சாப்பிட்டு வந்தால் ரோகம் குணமாகும். பேதி காணுவது, மருந்து உடம்பில் பற்றினதற்கு அடையாளம். தந்தி மேகத்துக்கு நீர்த்தாரையில் இதை செலுத்தினால் குணமாக்கும். காசம் (5), மூலம் (8), ஸ்திரிகளின் வெள்ளை இவைகளுக்குக்கொடுக்க வெகு குணத்தைத்தரும். ரணத்தின்மேல் தடவி வர ரணத்தை ஆற்றும்.

அளவு:—15—40 துளி தினம் 3 தடவை பாலில் கொடுக்க வெகுட்டலிராது.

பால்ஸம் ஆப் பேரு—Balsam of Peru—(தயிலம்)

குணம்:—இது செடியிலிருந்து எடுக்கப்படும் ஒருவித குங்கிலியத்தயிலம். கறுப்பு சிவப்பு நிறமும், கசப்பாயுமிருக்கும்.

செய்கை:—கபஹரகாரி, உஷ்ணகாரி.

உபயோகம்:—இருமலுக்கு தாபனமில்லாதபோது இதைக்கொடுக்கத் தீரும். பிரமேகம், எலும்புருக்கி, மது மூத்திரம், சூதகக்கட்டு, கீல்வாதம் இவைகளுக்கும் கொடுக்கப்படும். மேல் தடவ ஆருத ரணத்தை ஆற்றும். தலைக்கு தடவினால் மயிரை முளைக்க செய்யும். முலைகாம்பு ரணத்துக்கு தடவ குணமாகும்.

அளவு:—15—30 துளி விளாம்பிசின்ப்பாகில் கொடுக்கப்படும்.

பால்ஸம் ஆப் டோலு—Balsam of Tolu—(தயிலம்)

குணம்:—இது சிவந்த மஞ்சள் நிறமாயும், நல்ல வாசனையாயும், காரமாயும், தித்திப்பாயும், தேன்போல் தடிப்பாயும் இருக்கும்.

செய்கை:—கபஹரகாரி, உஷ்ணகாரி.

உபயோகம்:—இதை இருமலுக்குக் கொடுக்க குணமாகும்.

அளவு:—15—40 கிறேன்ஸ் விளாம் பிசின்பாகில் கொடுக்கலாம்.

அதிமதுரம்—Liquorice—லிகோரிஸ்-(வேர்)

குணம்:—இது தித்திப்பாயும், சூர்ணித்தால் மஞ்சள் நிறமாயும் இருக்கும்.

செய்கை:—வினிக்தகாரி.

உபயோகம்:—இருமல், பேதி இவைகளுக்கு இதைக் கொடுக்க குணத்தைத்தரும். 1½ (க½) அவுன்ஸ் அதிமதுரத்தை ஒரு பயின்ட்டு ஜலத்தில்ப் போட்டு காய்ச்சின கசாயத்தை நீர் சுருக்கு, மூத்திரரோகம் இவைகளுக்குக் கொடுக்க உடனே குணத்தைத்தரும். அதிமதுரத்தை வாயில் அடக்கி ரசத்தை விழுங்கினால் இருமல் தனியும் கறகறப்புத் தீரும்.

டிரேககாந்த—Tragacanth—(பிசின்)

குணம்:—இது தகடுகளாயும், வெள்ளை மஞ்சள் சிவந்த நிறமாயும் இருக்கும்.

செய்கை:—சினிக்தகாரி.

உபயோகம்:—பேதி, இருமல் இவைகளுக்கு கொடுக்க குணமாகும். குழந்தைகளுக்கு இதை ரசபஸ்மத்துடன் சேர்த்துக்கொடுத்தால் வெகு குணத்தைத்தரும். கொஞ்சம் வாயில் போட்டு ரசத்தை விழுங்கினால் உடனே பொடி இருமல் தீரும்.

அளவு:—½ (½)—1½ (க½) திராம் கொடுக்கலாம்.

பூனைக்காலி—Cowhage—கவ்ஏஜ்-(காயின்சுணை)

குணம்:—இந்த சுணை தேகத்தில் பட்டால் தினவு, நோய், வீக்கம் காணும்.

செய்கை:—கிருமிநாசகாரி.

உபயோகம்:—சுணையுள்ள காயை சர்க்கரைப்பாலில் துவைத்து சுரண்டி பாகில் கலந்துக்கொள்ளவும். இவ்விதமாய் பாகானது தேன்போல் தடிப்பாகிற வரையில் சுணையைச் சேர்த்து சீசாவில் போட்டு வைத்துக்கொள்ளவும். 2—3 தேயிலைக்கரண்டி வீதம் காலையில் 3 நாள் கொடுத்தபிறகு ஆமணக்கெண்ணெயை பேதிக்குக் கொடுக்க பூச்சிகளை எல்லாம் உயிரோடே வெளிப்படுத்தும்.

டார்மேன்டில்ல—Tormentilla—(வேர்)

செய்கை:—சினிக்தகாரி.

உபயோகம்:—இது துவர்ப்பாயிருக்கும், சீதபேதி, பேதி இவைகளுக்குக் கொடுக்க உடனே குணத்தைத் தரும்.

அளவு:—½ (?)—1 கிராம் வேரின் தூளை ஜலத்திலும், வேரை கசாயமிட்டும் கொடுக்கலாம்.

ரோஜா—Rose Dry Bud—ரோஸ் டிரை பட்-(உலர்ந்த மொக்கு)

செய்கை:—ஜலவிரேசனகாரி.

உபயோகம்:—இதை துவையல் செய்தாவது, நெய்யில் வறுத்து சர்க்கரைச்சேர்த்தாவது சாப்பிட்டால் தண்ணீர்த்தண்ணீராய் பேதியாக்கும்.

அளவு:—2—5 கிராம் கொடுக்கலாம்.

கோஸ்ஸோ—Kousso—(உலர்ந்த புஷ்பங்கள்)

செய்கை:—கிருமிநாசகாரி.

உபயோகம்:—இதை வயிற்றிலுள்ள கிருமிகளை வெளிப்படுத்துவதற்குக் கொடுக்கப்படும். இது அபூர்வமான சரக்கு.

அளவு:—6—8 கிராம் பூச்சூரணத்தை வெந்நீரில் கொடுத்து 3—4 மணிக்குள் மலம் இறங்காவிட்டால் ஆமணக்கெண்ணெய்யைக் கொடுக்கவும். ½ (?)—2 கிராம் சிறுவர்களுக்குக் கொடுக்கவும்.

காஜிபட் ஆயில்—Cajaput—(தயிலம்)

குணம்:—இது தெளிவாய், பச்சை நிறமாய், இனிப்பாய், வாசனையாய், காரமாய் இருக்கும்.

செய்கை:—அங்காகர்ஷன நாசகாரி, உஷ்ணகாரி.

உபயோகம்:—நரம்பைப்பற்றிய வியாதிகள், வாந்திபேதி, கீல்வாதம், கணுவாதம், சூதகஜன்னி, வயிற்றுவலி முதலிய சகலவாத ரோகங்களுக்கும், சுரங்களுக்கும் இதைக்கொடுக்க தவறாமல் குணத்தைத் தரும்.

அளவு:—2—4 துளி சர்க்கரையில் கொடுக்கலாம். கர்ப்பூரத் தயிலத்தோடு இதைச் சேர்த்து மேலுக்குத்தடவ வாதநோய் குணமாகும்.

கிராம்பு—Clove—குளோவ்-(மொக்கு)

செய்கை:—கர்ப்பவாதஹரகாரி, உஷ்ணகாரி.

உபயோகம்:—இதைக் கொடுக்க வாயுவைப் போக்கும், தீபனத்தை உண்டாக்கும்.

அளவு:—10—30 கிரேன்ஸ்தூளைக் கொடுக்கலாம்.

கேக்விதை—Caraway—காரவே-(விதை)

குணம்:—இது சிறுதாயும், வாசனையாயும், காரமாயும், இருக்கும்.

செய்கை:—கர்ப்பவாதஹரகாரி, ஜாடராக்கினி வர்த்தனகாரி.

உபயோகம்:—மந்தம், வாதம், பசியில்லாமை இவைகளுக்கு இதைக் கொடுக்க குணமாகும்.

அளவு:—1—2 திராம் தூளை ஜலத்தில் கொடுக்கலாம்.

சோம்பு—Anise—அனிஸ்-(விதை)

குணம்:—இது வாசனையாயும், காரமாயும், தித்திப்பாயும், பழுப்புநிறமாயும் இருக்கும்.

செய்கை:—உஷ்ணகாரி, கர்ப்பவாதஹரகாரி.

உபயோகம்:—குழந்தைகளுக்கு காணுகிற அதிசாரம், வாயுவால் காணும் வயிற்றுவலி இவைகளுக்கு இதைக்கொடுக்கலாம். முலைப்பாலை சுரப்பிக்கிற குணம் இதற்குண்டு.

அளவு:—10—30 கிரேன்ஸ் கொடுக்கலாம்.

பெருஞ்சீரகம்—Fennel—பென்னல்-(விதை)

செய்கை:—கர்ப்பவாதஹரகாரி, உஷ்ணகாரி.

உபயோகம்:—சோம்பை உபயோகப்படுத்துகிற ரோகங்களுக்கு இதைக் கொடுக்கலாம்.

அளவு:—½ (அரை)—1 திராம் கொடுக்கலாம்

சதகுப்பை—Dill—டில்-(விதை)

செய்கை:—சர்ப்பவாதஹரகாரி, உஷ்ணகாரி.

உபயோகம்:—குழந்தையின் வயிற்றுவலி, மாந்தம் முதலியவைகளுக்கு இது தகுதியான மருந்து. பெரியவர்களுக்கும் வெகு நல்லமருந்து.

அளவு:—10—60 கிரேன்ஸ் பெரியவர்களுக்குக் கொடுக்கலாம்.

பெருங்காயம்—Assafoetida—அஸ்ஸேபிட்டிடா-(பிசின்)

குணம்:—இது ஒரு செடியின் வேரிலிருந்து எடுக்கிற பால். இதை வெய்யிலில்வைத்து இறுகும்படி செய்யப்படும். இது பார்ஸிதேசத்தில் உண்டாகும்.

செய்கை:—அங்காகர்சனநாசகாரி, ருதுவர்த்தனகாரி, உஷ்ணகாரி, கிருமிநாசகாரி.

உபயோகம்:—சூதகஜன்னி, கோரியவலி, காக்கைவலி, முதலியவைகளுக்குக்கொடுக்க இது மகாசிலாக்கியமான மருந்து. சூதகஜன்னிக்கு இது சஞ்சீவி. ஜன்னிகண்டிருக்கும்போதாவது அல்லது தனிந்திருக்கும்போதாவது இதை அதிக அளவில் கொடுத்தால் உடனே குணமாக்கும். குழந்தையின் இசிவுக்கும், விருத்தாப்பியர்களுக்குகாணும் வாயுவால் மலம் இறுகுதலுக்கும் இதைக்கொடுத்தால் மெத்த பிரயோசனத்தைத்தரும். கக்குவான், இரைப்பு, காசம், சுவாசம், நீடித்த இருமல், இவைகளுக்கு இதைக்கொடுக்கத் தவராமல் நன்மை செய்யும். கருப்பையின் அழுக்கை வெளியாக்க இதைக்கொடுக்கப்படும்.

அளவு:—5—20 கிரேன்ஸ் ஜலத்திலாவது, மாத்திரைசெய்தாவது கொடுக்கப்படும். டிங்சர் ½ (அரை) முதல் 1 திராம் கொடுக்கலாம்.

கம்அம்மோனியாக்—Gum Ammoniac—(ரோஜனப்பிசின்)

குணம்:—இது கட்டிகளாயாவது, முத்தையாய்யாவது இருக்கும். மேலுக்கு மஞ்சள் அல்லது சிவப்பாயும் உள்ளே வெள்ளையாயும், கசப்பாயுமிருக்கும். ஜலத்தில் அதிலுள்ள பிசின்கரையும் ரோஜனம் மிதக்கும், சாராயத்தில் கரையும்.

செய்கை:—உஷ்ணகாரி, கபஹரகாரி, அங்காகர்சன நாசகாரி.

உபயோகம்:—நீடித்த காசரோகத்துக்கு இதை கொடுக்கத் தவராமல் குணத்தைச்செய்யும். மேகக்கட்டி, வீக்கம் முதலியவைகளுக்கு இதை பிளாஸ்திரியாக்கிப்போட குணமாகும்.

அளவு:—10—30 கிரேன்ஸ் மாத்திரைசெய்தாவது, பால், ஜலம், இவைகளிலாவது கரைத்துகொடுக்கலாம்.

கால்பெனம்—Galbanum (ரோஜனப்பிசின்)

குணம்:—இது சிறுகட்டிகள் சேர்ந்த முத்தையாயிருக்கும். இது மஞ்சள் பச்சை நிறமாயும், வாசனையாயும், கசப்பாயுமிருக்கும். ஜலத்தில் கரையும்.

செய்கை:—கபஹரகாரி, அங்காகர்சனநாசகாரி.

உபயோகம்:—இதற்கு பெருங்காயத்தின் செய்கைகளிருப்பதால் பெருங்காயம் உபயோகிக்கும் ரோகங்களுக்கு இதை கொடுக்கப்படும்.

சீரகம்—Cumin (கம்மின் வித்து)

செய்கை:—பித்தஹரகாரி, தீபனகாரி.

உபயோகம்:—சீரகத்துடன் கற்கண்டு சேர்த்து தினம் காலையில் சாப்பிட்டுவர பித்தஞ்சமனமாகும், பசியை உண்டாக்கும்.

அளவு:—10—20 கிறேன்ஸ் கொடுக்கலாம்.

சோனியம்—Conium (இலை)

குணம்:—இது பச்சையாயும், கசப்பாயும், வெகுட்டலாயும், இருக்கும்

செய்கை:—வேதனைசாந்தகாரி, சமனகாரி.

உபயோகம்:—இது முள்ளந்தண்டைப்பற்றி குணத்தைக் காட்டுவதால் வெகு ஜாக்கிறதையாயிருக்கவேண்டியது. அளவுக்கு அதிகமானால் ஸம்ஸ்தம்பரோகம் (Paralysis) காணும். தொண்டையில் வரளல், இறுகல் கண்டால் மருந்து உடம்பில் பற்றினதற்கு அடையாளம், உடனே மருந்தை நிறுத்தவும். இருமல், சுவாசக்குழலில் மார்ச்சளி சம்பந்தமான எரிச்சல், பயித்தியம், ஸம்ஸ்தம்பரோகம் (paralysis,) விரணசந்நி, சுவாசகாசம், அஸ்மரிரோகம், கண்டமாலை, கீல்வாதம், வாதநோய்கள், நரம்புவேதனை, புற்று, ரணம், சக்கிருமல், க்ஷயம் இவைமுதலியவைகளுக்கு உள்ளுக்கு கொடுக்கலாம், மேலுக்கு போடலாம். ஆனால் வெகு ஜாக்கிரதையாய் உபயோகிக்க வேண்டியது.

அளவு: –டிங்சர் (Tincture) 20—50 துளி வீதம் ஜலத்தில் கொடுக்கலாம்.

கொத்துமல்லி—(Coriander)—கோரியாண்டர் (விதை)

செய்கை:—ஜாடராக்கினி வர்த்தனகாரி, கர்ப்பவாதஹரகாரி, உஷ்ண காரி, பித்தநாசகாரி.

உபயோகம்:—இதை ஜலத்தில் போட்டு காய்ச்சிவடித்த கஷாயத்தில் பாலும் சர்க்கரையும் போட்டு தினம் காலையில் சாப்பிட்டுவர பித்தசமனமாகும், ஆரோக்கியத்தை உண்டாக்கும், வாதத்தை ஹரிக்கும், தாகத்தை அடக்கும், வாந்தியை நிறுத்தும்.

இபிகாகியு எனு—Ipecacuanha—(வேர்)

குணம்:—இது முடிகள்போட்டதாயும், வெகுட்டலுள்ள வாசனையுடையதாயும் இருக்கும்.

செய்கை:—கபஹரகாரி, சுவேதகாரி, வமனகாரி, ஸமனகாரி.

உபயோகம்:—சுவாசம், காசம், சீதபேதி, நுரையீரல் தாபனம் இவைகளுக்கு குமட்டல் காணும்படியாய் இதைக்கொடுக்க குணத்தைத் தரும். அண்டநோய், மேகக்கட்டி, சுரம், க்ஷயம், இவைகளுக்கு இதை வாந்திக்குக் கொடுத்தால் வெகு குணத்தைத் தரும். சீதசுரத்துக்கு குளிர்காணுவதற்கு முன் வாந்திக்குக் கொடுத்தால், குளிரின் வேகத்தை அடக்கும். இதை அபினியுடன் சேர்த்து வியர்வை பிறப்பிக்க சுரத்தில் கொடுக்கலாம். குழந்தைகள், விருத்தாப்பியர்கள், ஸ்திரீகள், முதலியவர்களுக்கு ஆயாசமில்லாமல் வாந்தியாக்க இதைகொடுக்கலாம். டார்டர் மெடிக் (Tartar Emetic) என்னும் வாந்தி உப்போடு சேர்த்துக்கொடுப்பது நல்லது. நஞ்சுண்டோரின் விஷத்தை வெளிப்படுத்த இதை வாந்திக்குக் கொடுக்கலாம்.

அளவு:—15—20 கிறேன்ஸ் கொடுத்தால் வாந்தியாகும். வெந்நீர் அடிக்கடி குடித்துக்கொண்டிருந்தால் வாந்தி தாராளமாய் ஆகும். 1·2 கிறேன்ஸ் கொடுத்தால் கபத்தை வெளிப்படுத்தும். வியர்வையைப் பிறப்பிக்கும். ½ அரை கிறேன்ஸ் வீதம் கொடுத்துவர அக்கினிமந்தம் குணமாகும். எக்ஸ்ட்ராக்ட் விகுவிடம் 1 முதல் 3 துளி கபஹரகாரியாகவும், 15 முதல் 20 துளி வமனகாரியாகவும் கொடுக்கலாம். வைன் 10 முதல் 30 துளி.

காபி—Coffee—(வித்து)

செய்கை:—பலகாரி, உஷ்ணகாரி, பித்தகாரி, தீபனகாரி.

உபயோகம்:—காபிக்கு பித்தத்தை விருத்திக்கவும், தேகத்துக்கு பலத்தை உண்டாக்கவும், பசியை உண்டாக்கவும், உஷ்ணத்தை செய்யவும்

குணமுண்டு. பால், சர்க்கரைசேர்ந்த காபித்தண்ணீரை கொஞ்சமாகச் சாப்பிட்டால் பேதியைக்கட்டும், அதிகமாகக்குடித்தால்பேதியாக்கும். காசம் சுவாசம், இவைகளுக்குக் கொடுத்தால் உடனே சாந்தமாகும். இது குழந்தையின் வாந்தியை நிற்கும். சுரம், முகசன்னி, சக்கிருமல், தலைவலி முதலியவைகளுக்குக் கொடுக்கப்படும்.

ஷின்கோனு —Cinchona—(பட்டை)

துணம்:—இதில் மஞ்சள், வெளுப்பு, சிவப்பு என மூன்று விதங்களுண்டு. மஞ்சள், வெளுப்பு, சரக்குகள் நல்லவைகளாம்.

செய்கை:—பலகாரி, சங்கோசனகாரி, மாம்ஸம் அழுகிப்போகுதலை தடுக்கும். காலக்கிரமமாய் வரும் ரோகங்களை குணமாக்கும்.

உபயோகம்:—மஞ்சள் நிறமானப்பட்டை வெகு வேகமுள்ளது. வெளுப்பு நிறமானப்பட்டையை கொஞ்சம் பலம் வரக்கொடுக்கப்படும். சுரம், கீல்வாதம், துர்பலம், அதிசாரம், ரத்தபேதி, இவைகளுக்குக் கொடுக்க சகுணத்தைத்தீரும். வாய் ரணத்துக்கு கொப்பிளிக்கிற ஜலமாக செய்து உபயோகிக்கலாம். இதை குமட்டலை உண்டாக்குவதால் வாசனை பதார்த்தங்களைச் சேர்த்துக்கொடுக்கலாம். இதினுல் மலசசிக்கலானுல் ரேவல் சின்னியையும், பேதியானுல் அபினியையும் சேர்த்துக்கொடுக்கப்படும். துர்மலத்தை போக்கி பிறகு இதைக்கொடுக்கவேண்டியது. இதைக் கொடுக்க சீக்கிரத்தில் குணமாக்கும். இதை குறைந்த அளவில் அடிக்கடி கொடுக்க அதிக நன்மை செய்யும். காலக்கிரமமாய் வரும் ரோகங்களைத் தீரும்.

அளவு:—10—40 கிறென்ஸ் தூளைக்கொடுக்க பலத்தை உண்டாக்கும். 1-2 திராம் 3 மணிக்கு ஒருதரம் கொடுக்க ரோகங்கள் தீரும். இதை பாலிலாவது ஜலத்திலாவதுக் கொடுக்கலாம். டிங்சர் ½ அரை முதல் 1 திராம். எகஸ்ட்ராக்ட் விகுவிடம் 5-15 துளி.

மாசிப்பத்திரி —Absinthium— அப்சிந்தியம்

துணம்:—இது கசப்பாயும், ஒருவித வாசனையாயும் இருக்கும்.

செய்கை:—கிருமிநாசகாரி, பலகாரி.

உபயோகம்:—இதற்கு பலத்தை உண்டாக்குகிற குணமிருப்பதால் மந்தாக்கினி, பலஹீனம் இவைகளுக்கு இது வெகு நல்லமருந்து. கிருமிகளை உற்பத்தியாகாமல் செய்கிற குணம் இதற்கு இருப்பதால் கிருமி ரோகத்துக்கு இது மகா சிலாக்கியமானது. இதை ஒற்றடம் கொடுத்தால் வீக்கம் கரையும்.

அளவு:—20—30 கிறேன்ஸ் தூளைக்கொடுக்கலாம். டிங்சர் 1 முதல் 4 கிராம்.

டேராக்ஸேகம்—Taraxacum—(வேர்)

குணம்:—இதின் மேலுக்கு அழுக்குள்ள நிறமாயும், உள்ளுக்கு வெள்ளையாயும் இருக்கும்.

செய்கை:—ஸோபாநாசகாரி, வியஞ்சாபேதகாரி, லகுவிரேசனகாரி.

உபயோகம்:—நீர்க்கோவை, மேகம், எகுர்நிக்கண்டரோகம், சருமரோகம், மந்தாக்கினி இவைகளுக்கு இதைக்கொடுக்க குணமாகும். இதற்கு பித்தநீரை அதிகரிக்கவும், மலத்தைக் கழிக்கவும் குணமுண்டு.

அளவு:—4 அவுன்ஸ் வேரை 1½ பையிண்ட் ஜலத்தில் போட்டு ஒரு பையிண்டாகக்காய்ச்சின கஷாயத்தில் 1½ அவுன்ஸ் வீதம் கொடுக்கவேண்டும்.

சடாமாஞ்சி—Valerian—வெலிரியன்—(வேர்)

குணம்:—இதின் மேலுக்கு அழுக்குபடிந்ததாயும், உள்ளுக்கு வெள்ளையாயும் இருக்கும். கசப்பாயும், கறகறப்பாயும், ஒருவித வாசனையாயும் இருக்கும்.

செய்கை:—அங்காகர்சன நாசகாரி, உஷ்ணகாரி.

உபயோகம்:—இதை சூதக ஜன்னி, காக்கைவலி, இரைப்பு, இருமல், சுவாசம், கிருமி, அக்கினிமந்தம், குடைச்சல், சுரம், குஷ்டம் இவைகளுக்கு கொடுக்க வெகு நல்ல மருந்து. சூதக ஜன்னிக்கு இதை அடிக்கடி உபயோகிக்கப்படும்.

அளவு:—வேரின்தூள் 20—40 கிறேன்ஸ். டிங்சர் 1 முதல் 2 கிராம், கொடுக்கலாம்.

அக்கரகாரம்—Pyrethrum—பைரித்திரம்—(வேர்)

செய்கை:—திரவகாரி. வெப்பத்தைத் தரும்.

உபயோகம்:—வாயில் போட்டால் ஜலம் ஊறும். ஜிக்வாரோகம், தந்தரோகம், சுரம், தாகம், வாதம் முதலிய ரோகங்களுக்கு இதைக்கொடுக்கப்படும். ஒரு துண்டை மென்றால் நீர் வடிந்து பல்நோய் குணமாகும்,

அளவு:—1 கிராம் கொடுக்கலாம்.

யூவா அர்ஸை—Uva Ursi—(இலை)

குணம்:—இது பச்சை நிறமாயும், பளபளப்பாயும், மேடுபள்ளமாயும், துவர்ப்பாயும், வாசனையாயும் இருக்கும்.

செய்கை:—பலகாரி, சங்கோஷனகாரி, லகுமூத்திரவர்த்தனகாரி.

உபயோகம்:—நீடித்த மூத்திரப்பை தாபன ரோகத்துக்கும், மூத்திரப்பையில் கல்தங்கி உண்டாகும் ரோகத்துக்கும், இதைக்கொடுக்கப்படும். நீர் எரிச்சலை தணிக்க இத்துடன் பைகார்பொனேட் ஆப்சோடாவும் சேர்த்துக் கொடுக்கப்படும்.

அளவு:—10—30 கிறேன்ஸ் தூளைக்கொடுக்கலாம்.

ஸ்டோராக்ஸ்—Storax.

குணம்:—இது கட்டி அல்லது இளகலாயும், கறுப்பு சிவப்பு கலந்த நிறமாயும், சாம்பிருணி வாசனையாயுமிருக்கும்.

செய்கை:—கபஹரகாரி, உஷ்ணகாரி.

உபயோகம்:—இதை அனுபானத்தில் கொடுக்க நீடித்த இருமல் முதலிய கபரோகங்களை செவ்வையாய்க் கண்டிக்கும்.

அளவு:—10—20 கிறேன்ஸ் கொடுக்கலாம்.

சாம்பிராணி—Benzoin—பேன்ஜாயின்—(உறைந்த தயிலம்)

குணம்:—இது பட்டையிலிருந்து வடிந்து உறைந்தத் தயிலம். வாசனையாயும் இனிப்பாயுமிருக்கும்.

செய்கை:—கபஹரகாரி, உஷ்ணகாரி.

உபயோகம்:—இதின் தூபத்தை கக்குவாய் இருமல், துர்வாசனை இவைகளுக்கு உபயோகிக்கப்படும். இதை உள்ளுக்குக் கொடுப்பது அரிது.

மேனு—Manna—(உறைந்த பால்)

குணம்:—தித்திக்கும், ஜலத்திலும், சாராயத்திலும் கரையும்.
செய்கை:—மலகாரி.

உபயோகம்:—குழந்தைகளுக்கும், நாசுக்கு ஸ்திரீகளுக்கும் பேதிக்கு கொடுக்க இது வெகு சாந்தமானது. இதை தனிப்படக்கொடுப்பதைப் பார்க்கிலும் பேதிமருந்துகளோடு சேர்த்துக் கொடுப்பது சிலாக்கியம்.

அளவு:—1—2 திராம் குழந்தைகளுக்கும், 1—2 அவுன்ஸ் பெரியவர்களுக்கும் கொடுக்கலாம்.

நன்னாரி—Sarsaparilla—ஸார்ஸபேரில்லா—(வேர்)

குணம்:— இது மேலுக்கு கறுப்பாயும் உள்ளுக்கு மரமாயும், நல்ல வாசனையாயும் கொஞ்சம் கசப்பாயும் இருக்கும்.

செய்கை:— மூத்திர வர்த்தனகாரி, பலகாரி.

உபயோகம்:—மேகம், கண்டமாலை, சருமரோகம். சுரம், பித்தம், தாகம், தேகச்சூடு, உடலை, புண் முதலிய நீடித்த ரோகங்களுக்குக் கொடுக்க இது வெகு நல்ல மருந்து. இது நீர்கோவைக்கு நல்லது. இதைக் கொடுக்க ஸ்திரீ போகத்தால் உண்டாகும் சூடு தீரும். தேகத்துக்கு பலம் வரும்.

அளவு:—4 அவுன்ஸ் வேரை ஒரு பைண்ட் ஜலத்தில் போட்டுக்காய்ச்சின கஷாயத்தில் 1—2 அவுன்ஸ் கொடுக்க பலத்தை உண்டாக்கி மூத்திரத்தை அதிகரிக்கும்.

எட்டிக்கோட்டை—Nux Vomica—நக்ஸ்வாமிக—(வித்து)

குணம்:–இது தட்டை உருண்டை பில்லைகளாயும், கசப்பாயும் இருக்கும்

செய்கை:—கொஞ்சமாய் கொடுத்தால் நரம்பு தாருட்டியகாரி, உஷ்ணகாரி, மூத்திரா வர்த்தனகாரி, அதிகமாய்கொடுத்தால் கொல்லும்.

உபயோகம்:—திமிர்ரோகத்துக்கு இதை நோவு இருக்கும் இடத்தின் மேல் ஜலத்தில் ஊறவைத்து அரைத்துப்போட நோய் குணமாகும். ஸம்ஸ்தம்ப ரோகத்துக்கு (Paralysis) கொடுத்தால் உணர்ச்சியை உண்டாக்கி சதைகளுக்கு வலுவைத்தரும். இதை அக்கினிமந்த ரோகத்துக்குக் கொடுக்க பலத்தை உண்டாக்கி குணமாக்கும். வீரிய விர்த்திக்குக் கொடுக்க இது வெகு நல்ல மருந்து. இதை சன்னி (13), வாதவலி இவைகளுக்கும் உபயோகிக்கப்படும். இதற்கு தேகத்தில் பலத்தை உண்டாக்கி தீபனத்தையும், மூத்திரத்தையும் அதிகப்படுத்த சக்தி உண்டு. இதற்கு முள்ளந்தண்டு கொடியின் நரம்புகளை உஷ்ணிக்கிற குணம் உண்டு. அளவுக்கு அதிகமானால் இசிவு காணும். 30 கிறேன்ஸ் சாப்பிட்டு பிராணன் போனதுமுண்டு. இதை போஜனத்துக்கு முன்பு அல்லது பின்பு சாப்பிடலாம். சாப்பிட்டுவரும்போது கை கால்களில் இசிவு கண்டால் தேகத்தில் மருந்து ஊறினதற்கு அடையாளம்; மருந்து உடனே நிறுத்தவும். ஒரு கிறேன் முதல் கொஞ்சங் கொஞ்சமாய் அதிகரித்து 3 கிறேன்ஸ் தூளைக்கொடுக்கலாம். இதனால் சதை வெகுவானாலும் சரி, இசிவுகண்டாலும் சரி மருந்தை உடனே நிறுத்தி விடவும். எட்டிவேரைக்கொடுத்தால் மகாசர்ப்ப விஷ

க்கடித் தீரும். அன்றியும், பக்ஷவாதம், கைகால் அசைவற்றுப்போகுதல், எல்லா நரம்பு வியாதிகள், பேதி, சீதபேதி, மலபந்தம், சொட்டு மூத்திரம், இந்திரிய ஸ்கலிதம், இவைகளுக்கும், முள்ளந்தண்டின் துர்பலத்தைப் பற்றிய வியாதிகளுக்குங்கொடுக்க இது உயர்ந்த மருந்து. சீதசுரம், சாக்கை வலி, ரத்தக்ஷீணரோகம் இவைகளுக்கும் இது நல்ல மருந்து.

அளவு:—டிங்சர் 5 முதல் 15 துளி. லிகுவிட் எக்ஸ்ட்ராக்ட் 1 முதல் 3 துளி. எக்ஸ்ட்ராக்ட் ¼ (வ) முதல் 1 கிறேன்.

ஜென்ஷன்—Gentian—(வேர்)

குணம்:—இது மேல்புறம் பழுப்பாயும், உள்புறம் மஞ்சளாயும், வாசனையாயும், தித்திப்பாயும், கசப்பாயும் இருக்கும்.

செய்கை:—ஜாடராக்கினி வர்த்தனகாரி, பலகாரி.

உபயோகம்:—இதை நோயுற்றெழுந்தோருக்கும், சுரங்களுக்கும், கணுவாதத்துக்கும், கிருமிரோகத்துக்கும், மந்தாக்கினி ரோகத்துக்கும் கொடுத்தால் குணத்தைத்தரும்.

அளவு:—10—30 கிறேன்ஸ் தூளைக் கொடுக்கலாம். டிங்சர் ½ அரை முதல் 1 திராம்.

சிரட்டா—Chiretta—(வேரோடு கூடிய பூண்டு)

குணம்:—இந்தியாவில் உண்டாகும் சிரட்டாபோல் இருக்கிற பூண்டுக்கு நிலவேம்பு என்று பெயர். அதுபோலவே இதுவும் கசப்பாயிருக்கும்.

செய்கை:—ஜாடராக்கினி வர்த்தனகாரி, பலகாரி.

உபயோகம்:—நோயுற்றெழுந்தோருக்கும், மந்தாக்கினிக்கும் இதை கசாயமிட்டுக் கொடுக்க குணத்தைத் தரும். போஜனத்துக்குமுன் சாப்பிடவும்.

அளவு:—4 திராம் சிரட்டாவை 1 பைன்ட் ஜலத்தில் போட்டு காய்ச்சி வடித்து 1½—3 அவுன்ஸ் கொடுக்கலாம் டிங்சர் ½ அரை முதல் 1 திராம்.

ஜாலப்—Jalap—(கிழங்கு)

குணம்:—மேலே கறுத்தும், உள்ளே மஞ்சளாயும் இருக்கும்.

செய்கை:—விரேஷனகாரி.

உபயோகம்:—இதை மலக்கட்டு, கிருமி, மகோதரம் இவைகளுக்குக் கொடுக்கலாம். இதுபேதியை நன்றாய் உண்டாக்கும். அதிகமாய் கொடுத்

தால் பேதியாகி வயிற்றைப் புண்ணாக்கும். கிருமிகளைப் போக்க இத்துடன் ரஸபஸ்மம் சேர்த்துக்கொடுக்கவும். பேதிக்குக் கொடுக்கும்போது வயிறு கடுக்காமலிருக்க பெப்பர்மெண்டு, சுக்குச் சேர்ந்த கசாயத்தில் இதைச் சேர்த்துக் கொடுக்கப்படும்.

அளவு:—10—30 கிறேன்ஸ் தூள் பெரியவர்களுக்கும், 2—8 கிறேன்ஸ் குழந்தைகளுக்கும் சுக்குக் கசாயத்தில் கொடுக்கவும். டிஞ்சர் ½ அரை முதல் 1 டிராம். எக்ஸ்ட்டிராக்ட் 2—8 கிறேன்ஸ்.

ஸ்காமோனி—Scammony—(ரோஜனப்பிசின்)

குணம்:—இது பச்சைக் கறுப்பு கலந்த நிறமுள்ளக் கட்டிகளாய் இருக்கும். இது கசப்பாயும் கெட்டவாசனையாயும், காரமாயும் இருக்கும். ஜலத்தில் கரையும்.

செய்கை:—ஜலவிரேசனகாரி.

உபயோகம்:—இதற்கு வயிற்றைக் கடுத்து தண்ணீர்த் தண்ணீராய் பேதியாக்கிற குணமுண்டு. இதை தனியாய் கொடுக்கக்கூடாது. ரசபஸ்மம், சுக்கு, ரேவல் சின்னி முதலியவைகளோடு சேர்த்துக்கொடுக்க செவ்வையாய் பேதியாகி, கிருமி, நீர்கோவை, மலபந்தம் முதலியவைகள் தீரும்.

அளவு:—2—10 கிறேன்ஸ் கொடுக்கலாம்.

மேஜிரியன்—Mezeron—(வேர்ப் பட்டை)

குணம்:—இதை தேகத்தின் மேலே போட்டால் எரிச்சலைத் தரும். நேரப்பட வைத்தால் கொப்பளிக்கும்.

செய்கை:—சுவேதகாரி, மூத்திரவர்த்தனகாரி, ஸ்போடகாரி,

உபயோகம்: இதைக்கொடுக்க மூத்திரம், வியர்வை இவைகள் அதிகப்படும். நாள்பட்ட மேகத்தில் வாத ரோகத்துக்கு இதையும் நன்னாரிவேரும் சேர்த்து கசாயமிட்டுக் கொடுக்க வெகு சீக்கிரத்தில் குணத்தைக் காட்டும். சருமத்தின் மேலேபோட முதலில் எரிச்சலை உண்டாக்கி பிறகு கொப்பளிக்கும்.

சாதிக்காய்—Nutmeg—நட்மக்—(பருப்பு)

குணம்:—இது அண்டவடிவாயும், கட்டியாயும், நல்லவாசனையாயும் இருக்கும்.

செய்கை:—நித்திராகாரி, உஷ்ணகாரி.

உபயோகம்:—போர்ட் ஒயினோடு இதின் சூரணத்தைச் சேர்த்துக்கொடுக்க உஷ்ணித்து வாயுவை கண்டிக்கும். பேதிமருந்துகளோடு சேர்த்துக்கொடுக்க வயிற்றுக்கடுப்பை நீக்கும். அசதி ஜன்னிக்கு இதைக்கொடுக்கக்கூடாது.

அளவு:—5—15 கிறேன்ஸ் தூளைக்கொடுக்கலாம்.

சாதிப்பத்திரி—Mace—மேஸ்

குணம்:—இது சாதிக்காயின் மேல் மூடிக்கொண்டிருக்கும் பதார்த்தம்.

செய்கை:—நித்திராகாரி, உஷ்ணகாரி.

உபயோகம்:—சாதிக்காயின் செய்கைகள் இதற்கு இருப்பதால் சாதிக்காய்கொடுக்கும் ரோகங்களுக்கு இதைக்கொடுக்கலாம்.

கருப்பூரம்—Camphor—காம்பர்—(செடியின்சத்து)

குணம்:—இதை செடியின் சமூலம் துண்டாக்கி ஜலத்திலிட்டுக் காய்ச்சி பதங்கித்து எடுக்கப்படும்.

செய்கை:—சுவேதகாரி, உஷ்ணகாரி, மேல்த்தடவ சமனகாரி.

உபயோகம்:—சுரம், கீல்வாதம், முதலியவைகளுக்கு சுவேதகாரிகளோடு சேர்த்துக்கொடுத்தால் வியர்வை பிறப்பித்து குணமாக்கும். சடாமாஞ்சி, ¦பெருங்காயம் இவைகளோடுச் சேர்த்துக்கொடுக்க வலிப்புகள் (5) சூதக ஜன்னி இவைகள் குணமாகும். இதை மோந்தால் ஜலதோஷம் தீரும். இதின் வெந்நீர் ஆவியை உட்கொண்டால் கபரோகத்தை உடனே சாந்தமாக்கும். கருப்பாசனம், நீர்ப்பை, நீர்த்தாரை, நீர்க்கட்டு, ஆசனம், இவைகளின் தாபனத்தை நீக்க இது மகா நல்ல மருந்து. இதற்குநாள்ப்பட்ட சரும ரோகத்தை குணமாக்க சக்தி உண்டு. வாந்திபேதிக்கு அதிக அளவில்க் கொடுக்க குணத்தைத்தரும்.

அளவு:—5—10 கிறேன்ஸ் கொடுக்கலாம்.

கருவாப்பட்டை—Cinnamon—ஸின்னமன்—(பட்டை)

குணம்:—இது சுருண்டு நார்நாராயும், நல்லவாசனையாயும், காரமாயும் இருக்கும் .

செய்கை:—கர்ப்பவாதஹரகாரி, உஷ்ணகாரி, சினிக்தகாரி.

உபயோகம்:—இதை தனியாக கொடுக்காமல் துவர்ப்பு மருந்து, கசப்பு மருந்து பேதிமருந்து இவைகளோடுச் சேர்த்துக் கொடுக்கப்படும். இது வாயுவைக் கண்டித்து மலத்தைக் கட்டும். ஆகையால் குழந்தைகளுக்கு காணும் பேதி சிகிச்சையில் இதைக்கொடுக்க வெகு சகுணத்தைத் தரும்.

அதிசாரம், அக்கினிமந்தம், வயிற்று உப்பல், வாந்தி இவைகளுக்கு இதைக் கொடுக்க தவறாமல் நன்மை செய்யும்.

அளவு:—5—20—கிரேன்ஸ் தூள்கொடுக்கலாம். டிங்சர் ½—அரை முதல் 1 டிராம் கொடுக்கலாம்.

நேர்வாளம்—Croton—குரோட்டன்—(கோட்டை)

குணம்:—இது சற்றேறக்குறைய ஆமணக்கு முத்துப்போலிருக்கும். இது நேபாளதேசத்திலிருந்து வருகிறது.

செய்கை:—அதிவிரேசனகாரி.

உபயோகம்:—நரம்புகளைப்பற்றி வரும் வலி ரோகங்களுக்கு இது எடுத்த அவுஷதம். உன்மாதரோகம், ஸம்ஸ்தம்பரோகம், மலக்கட்டு, சன்னி, நீர்க்கோவை, இவைகளுக்குக்கொடுக்க செவ்வையாய்க் கண்டிக்கும். கர்ப்பஸ்திரீ, பலஹீனர், வயது சென்றவர், சிறு குழந்தை இவர்களுக்கும், வயிறு தாபனரோகத்துக்கும் இதைக்கொடுக்கலாகாது. இது தனியாகக் கொடுப்பது அரிது. இதற்கு சீக்கிரத்தில் தண்ணீர்த் தண்ணீராய் பேதியை உண்டாகிற குணமுண்டு.

அளவு:—1—5 கிரேன்ஸ்க் கொடுக்கலாம்.

ஆமணக்கெண்ணெய்—Castor-Oil—காஸ்டர் ஆயில்.

குணம்:—துல்லியமாயும், வைக்கோல் நிறமாயும், இருப்பதுதான் நல்ல சரக்கு. ஆல் கோஹால் சாராயத்தில் கரையும். இது வேகவைத்து எடுத்த எண்ணெய், வறுத்து எடுத்த எண்ணெய், பச்சையாக எடுத்த எண்ணெய் என 3 வகைப்படும்; பச்சை எண்ணெய் வெகு சிரேஷ்டமானது.

செய்கை:—விரேசனகாரி.

உபயோகம்:—இதைக்கொடுத்தால் உஷ்ணிக்காமலும், வேதனைசெய்யாமலும் சாந்தமாய் பேதியாக்கும். மூலம், வயிறு, குடல், மூத்திர உறுப்புகள், இவைகளின் ரோகங்கள், மலத்துவாரமடைப்பு, இவைகளுக்கும்; குழந்தைகள், பிரஸவித்த ஸ்திரீகள், கர்ப்பஸ்திரீகள், இவர்களுக்கும், இதை பேதிக்குக் கொடுக்க வெகு நல்ல மருந்து. அயம் மருந்துகளை சாப்பிடுவதால் உண்டாகும் மலச்சிக்கலை நீக்க இதைக் கொடுக்கலாம்.

அளவு:—½ (½)—1½ (1½) அவுன்ஸ் எண்ணெய்யை, காபி, பால், சுக்குக்கசாயம் முதலியவைகளில் சேர்த்துக் கொடுக்கலாம்.

மிளகு — Pepper—பெப்பர்—(உலர்ந்தகாய்)

குணம்:—இதில் வெள்ளை, கறுப்பு, என 2 விதங்களுண்டு. காரமாயும் வாசனையாயும் இருக்கும்.

செய்கை:—கர்ப்பவாதஹரகாரி. உஷ்ணகாரி.

உபயோகம்:—இதைக் கொடுத்தால் உஷ்ணித்து வாயுவை ஹரிக்கும், பசியை உண்டாக்கும். கண்கட்டியின்மேல் இதை ஜலத்தால் உரைத்து போட உடனே குணமாகும். பேதி, அதிசாரம், அஜீர்ணம் இவைகளுக்குக்கொடுக்கத் தவராமல் குணத்தைக்காட்டும்.

அளவு:—5—20 கிறேன்ஸ் கொடுக்கலாம்.

வால்மிளகு Cubeb—குயுபெப்—(உலர்ந்த காய்)

குணம்:—இது மெத்த வாசனையாயும், காரமாயும், விறுவிறுப்பாயும் இருக்கும். காயில் காம்பு ஒட்டிக்கொண்டு வால்போல் இருக்கும்.

செய்கை:—ஜாடராக்கினி வர்த்தனகாரி, கர்ப்பவாதஹரகாரி, உஷ்ணகாரி.

உபயோகம்:—வெள்ளை விழுதலுக்கு இதைக்கொடுக்க வெகு குணத்தைத் தரும். அனல் ரணம் ஆறினபிறகு ஜாக்கிரதையாய்க் கொடுக்காவிட்டால் பீஜநோவும், நீர் எரிவும் உண்டாக்கும். எலும்புருக்கி ரோகத்துக்குக் கொடுக்கலாம். இது நாள்ப்படச் சாப்பிடக்கூடாது.

அளவு:—20 கிறேன்ஸ் முதல் 2 திராம் வரையில் இதின் தூளை குங்கிலியத்தயிலம், பால், ஜலம் இவைகளில் சேர்த்துக் கொடுக்கப்படும்.

கஞ்சா—Hemp—ஹெம்ப்—(இலை)

குணம்:—புஷ்பித்தபின்பு செடியை வெட்டி, உலரவைத்த சரக்கு தான் இது.

செய்கை:—நித்திராகாரி. வேதநாசாந்தகாரி, உச்சாககாரி, அங்காகர்ஷன நாசகாரி.

உபயோகம்:—அதிவேதனையுள்ள நோய், நித்திரையில்லாமை, நாய்க்கடி, ஜன்னி, ரணஜன்னி, வாந்திபேதி, வலிரோகங்கள் இவைகளுக்கு இதைக்கொடுக்க வெகு நல்ல மருந்து. கஞ்சாவும் புகையிலையும் சேர்த்து புகைக் குடிப்பதும் உண்டு. இதை அதிகமாய் உள்ளுக்குக் கொடுத்தால் ஆடல், பாடல், நகைத்தல், இடைவிடாமல் பேசுதல், கூத்தாடல் முதலிய

வைகள் சாலும். இதற்கு தீபனத்தையும், வீரிய விர்த்தியையும் உண்டாக்குவதற்கு வல்லமை உண்டு. அன்றியும் நரம்புவேதனை, பயித்தியம் இவைகளுக்கு நல்ல மருந்து. இன்னும் முக்கியமாய் அதிசாரம், பெரும்பாடு, மூலவாயு, கிரகணி, கீல்வாயு, சுவாசகாசம், அதிஸ்தூலம், மந்தப்பிரசவம், இவைகளுக்கு கொடுத்து குணங்கண்டதுண்டு. பெலிடோனாவோடு சேர்த்து கக்கிருமல், குழந்தையின் இசிவு, வயிற்றுவலி, உதர சூலை முதலியவைகளுக்குக் கொடுக்க திவ்விய மருந்து.

அளவு:-டிங்சர் 5 முதல் 15-துளி. எக்ஸ்ட்ராக்ட் Extract ¼ (?) முதல் 1 கிறேன் வீதம் கொடுக்கலாம்.

மாசிக்காய்—Gall—கால்—(செடியின் உலர்ந்தரசம்)

குணம்:—ஒருவித பெண்வண்டானது மாசிக்காய் செடியின் துளிரைத் துளைத்து அதில் முட்டையிடும். அப்போது துளிரிலிருந்து ரசம் வடிந்து காய்ப்போல்க் கட்டிக்கொள்ளும். முட்டைபொரித்து குஞ்சு பெரிதாகி காயைத்துளைத்துக்கொண்டு வெளிப்பட்டுவிடும். இது துவர்ப்பாய் இருக்கும்.

செய்கை:—சங்கோசனகாரி.

உபயோகம்:—இதின் தூளை வெந்நீரிலிட்டு வாயைக் கொப்பளித்தால் வாய்ரணம் குணமாகும். ரத்தபேதி, அதிசாரம், சீதபேதி, சீதசுரம் இவைகளுக்குக் கொடுக்க இது தகுதியான மருந்து. வெள்ளை விழுதலுக்கு இதின் தூள் 20 கிறேன்ஸ் வீதம் தினம் 2—3 தடவைக்கொடுக்க வெகு சகுணத்தைக் காட்டும். இதின் தூளை நஸ்வியமிட்டால் ரத்த பீநசம் தீரும்.

அளவு:—8—16 கிறேன்ஸ் கொடுக்கலாம்.

மிளகாய்—Chillies—க்ஷில்லிஸ்—(உலர்ந்த பழம்)

செய்கை:—அதி உஷ்ணகாரி, க்ஷோணகாரி.

உபயோகம்:—இது அக்கினி மந்தரோகத்துக்குக் கொடுக்கப்படும்.

அளவு:—2—10 கிறேன்ஸ் கொடுக்கலாம்.

ஊமத்தை—Stramonium—ஸ்ட்ரமோனியம்.—(இலை-விதை)

குணம்:—இதில் கறு ஊமத்தை, வெண் ஊமத்தை என 2 விதங்கள்

உண்டு. . இதின் காய் உருண்டையாயும், மேலே முள்ளுகளாயும் இருக்கும். விதை சொற சொறப்பாயும், கசப்பாயும் இருக்கும்.

செய்கை:—அங்காகர்சன நாசகாரி, நித்திராகாரி, வேதனாசாந்தகாரி,

உபயோகம்:—கீல்வாதம், குடைச்சல் இவைகளுக்கு உள்ளுக்கும் மேலுக்கும் உபயோகிக்கலாம். இதின் இலையும் புகையிலையும் சேர்த்து சுருட்டுப் பிடித்தால் சுவாச காசம், உடனேத்தீரும். இது கொடிய விஷம். இதை அதிக அளவில், கொடுத்தால் கெடுதியை உண்டாக்கும். இதை வயது தளர்ந்தவர்களுக்குக் கொடுக்கக்கூடாது. இலையை வதக்கிக் கட்ட கட்டிகள் கரையும். இதை சன்னி (13), சுரம் இவைகளுக்குக் கொடுக்க வெகு நல்ல மருந்து.

அளவு:—1—4 கிரேன்ஸ் இலைத்தூள், அல்லது ¼ (வ) முதல் 1 கிரேன் விதைத்தூள் கொடுக்கலாம். டிங்சர் 5 முதல் 15 துளி.

குரோசானி ஓமம்—Hyoscyamus—ஐயாஸியாமஸ்—(இலை—விதை)

குணம்:—இது பச்சை மஞ்சள் கலந்த நிறமாயும், கசப்பாயுமிருக்கும்.

செய்கை:—வேதனாசாந்தகாரி, நித்திராகாரி, அங்காகர்சன நாசகாரி, லகு உஷ்ணகாரி.

உபயோகம்:—இசிவு, வாதநோய், இருமல், அதி மூத்திரம், கடுப்பு, கரப்பான் இவைகளுக்குக்கொடுக்க வெகு உபயோகமுள்ள மருந்து. பேதிமருந்துகளின் துர்குணத்தை நீக்க இதைச் சேர்க்கப்படும். இதை கொடுக்க நோய், எரிச்சல் இவைகளைத் தணித்து நித்திரையை உண்டாக்கும். இது மலத்தைக்கட்டாது. இதின் வித்துக்கு அதிக வேகமுண்டு. ரணம், கிரந்தி மூலநோய் இவைகளுக்கு இலையை போல்டிசாகவும், ஒற்றடமாகவும் உபயோகிக்கலாம். அளவுக்கு அதிகமானால் பிதற்றல், உறக்கல், முதலியவைகள் காணும்.

அளவு:—3—12 கிரேன்ஸ் இலைத்தூள்க் கொடுக்கலாம். டிங்சர் 30 முதல் 600 துளி. எக்ஸட்டிராக்ட் 2 முதல் 8 கிரேன்ஸ்.

கர்ப்பூரத்தயிலம்—Terpentine-Oil—டர்பண்டயின்—ஆயில்

குணம்:—இது வெள்ளையாயும், வாசனையாயும், விறு விறுப்பாயும், கசப்பாயும் இருக்கும். இது ஜலத்தில் கொஞ்சமாகவும், சாராயத்தில் அதிகமாயும் கரையும்.

செய்கை:—வேஷாணகாரி, மூத்திரவர்த்தனகாரி, சுவேதகாரி கிருமி நாஷகாரி, உஷ்ணகாரி, சங்கோஷணகாரி, மலகாரி.

உபயோகம்:—இதை உள்ளுக்குக்கொடுத்தால் மூத்திரம், வியர்வை, உஷ்ணம், இவைகளை அதிகரிக்கும், கிருமிகளை வெளிப்படுத்தும், ரத்தவடி தலை நிறுத்தும். இது பிரசவ சுரத்துக்கு வெகு நல்லது. இல்வாதம், இடுப்புவலி முதலிய வாதரோகங்களுக்கு மேலே தடவி தேய்த்தால் வெகு நன்மைசெய்யும். பிரமேகம், எலும்புருக்கி இவைகளுக்கு இதை உள்ளுக்குக் கொடுக்கத் தகுதியானது.

அளவு:—8 - 30 துளிக்கொடுக்க உஷ்ணிக்கும், மூத்திரத்தை விருத்திக்கும். ½ (½)—2 அவுன்ஸ்க் கொடுக்க பேதியாகும், கிருமிகளை வெளிப்படுத்தும். இதை சிற்றுமணக்கெண்ணெயுடன் சேர்த்துக்கொடுக்கப்படும்.

டார்—Tar—(தயிலம்)

குணம்:—இது இளகலாயும், களமாயும், கறுப்பாயும் இருக்கும். பையின் மரத்துண்டுகளை கொளுத்தினால் தார் அடியில் இறங்கும்.

செய்கை:—உஷ்ணகாரி.

உபயோகம்:—இதை குஷ்டம், சொறி, சிரங்கு முதலிய சருமரோகங்களுக்கு தடவி வர குணமாக்கும். இருமலுக்கு இதை வெந்நீரில் கொஞ்சம் போட்டு ஆவியை உட்கொள்ள சுகுணத்தைத் தரும்.

ஜூனிபர்—Junipor—(கனி)

செய்கை:—மூத்திர வர்த்தனகாரி.

உபயோகம்:—இது மூத்திரத்தை விருத்திக்கும். நீர்க்கோவை ரோகத்துக்குக் கொடுக்க வெகு குணத்தைத் தரும். கனியிலிருந்து தயிலத்தை எடுக்கப்படும். தயிலத்தில் 2 - 10 துளி, அல்லது கசாயத்தில் 1—4 அவுன்ஸ் கொடுக்கலாம்.

ஸேவைன்—Savine—(தளிர்)

குணம்:—இந்த செடியின் தளிர்கள் பச்சையாயும் துர்வாசனையாயும் இருக்கும்.

செய்கை:—உபயோகம்:—இதை குறைந்த அளவில் கொடுத்தால் மூத்திரமும் உஷ்ணமும் அதிகரிக்கும், ருதுகத்தை தாராளப்படுத்தும். பிண்டத்தை வெளியாக்க இதை கொடுப்பதுமுண்டு. இதை அதிக அளவில் கொடுத்தால் விஷமிக்கும். இதின் தயிலத்தில் 2—5 துளி சர்க்கரையில் விட்டுக்கொடுக்கலாம்.

வெள்ளைப்பூண்டு—Garlic—கார்லிக்

செய்கை:—ஷோணகாரி, உஷ்ணகாரி, கபஹாரகாரி, மூத்திரவர்த்தன காரி, கிருமிநாஷகாரி.

உபயோகம்:—இதை அரைத்து மேல் தடவ நோய்த் தணியும்; உட்கொள்ள மூத்திரமும் உஷ்ணமும் அதிகரிக்கும், கபத்தைவெளிப்படுத்தும், கிருமிகளை நீக்கும். இத்துடன் எண்ணெய்யைச் சேர்த்துக்காய்ச்சி வடித்து காதிலிட செவிநோய் தீரும்; காசம், சுவாசம், இருமல், கிருமிரோகம், இவைகளுக்கு உபயோகிக்கலாம். நகசுத்தின் ஆரம்பத்தில் பூண்டை கத்தியால் சுரண்டி நகசுத்தின்மேல் போட, 6 மணி நேரத்திற்குள்குணமாகும்.

அளவு:—½ (?)—2 திராம் கொடுக்கலாம்.

நரிவெங்காயம்—Squill—ஸ்குயில்—(பூண்டு)

குணம்:—இது உருண்டையாயும் வெங்காயத்தைப்போல் புரைகளாயும் இருக்கும், குமட்டலுள்ளது.

செய்கை:—கபஹாரகாரி, மூத்திரவர்த்தனகாரி, வமனகாரி, விரேசன காரி.

உபயோகம்:—இதை தாபனங்கண்டிருக்கும்போது கொடுக்கலாகாது. இருமலுக்கு கபஹாரகாரியுடன் கொடுக்கவும். நீர்கோவைக்கு ரஸ பஸ்மம், டிஜிடெலிஸ் இவைகளோடு சேர்த்துக்கொடுக்க தவறாமல் கண்டிக்கும். அளவுக்கு அதிகமானால் விஷமிக்கும்.

அளவு:—1—3 கிறேன்ஸ் தூளைக்கொடுக்கலாம். டிங்சர் 5முதல்15துளி.

மூசாம்பரம்—கரியபோளம்—Aloes—ஆலோஸ்.

குணம்:—இதை. கற்றாழையிலிருந்து எடுத்து உலரவைத்துக்கொள்ளும் பதார்த்தம். இதில் 4 விதங்களுண்டு. ஒன்றுக்கொன்று நிறத்தில் வித்தியாஸமேயொழிய செய்கையில் பேதமில்லை.

செய்கை:—பலகாரி, தீபனகாரி, விரேசனகாரி.

உபயோகம்:—இதை கொஞ்சமாகக்கொடுக்க குடலுக்கு பலத்தையும், பசியையும் உண்டாக்கும். இது பெருங்குடலை உஷ்ணிக்கிறபடியால் கர்ப்பஸ்திரீ, மூலரோகி இவைகளுக்குக்கொடுக்கக்கூடாது. காமாலை, மந்தாக்கினி, மலக்கட்டு, இவைகளுக்கு இதை கொடுக்க குணமாகும்.

அளவு:—6—20 கிறேன்ஸ் கொடுக்கலாம். டிங்சர் ½ (?)முதல் 1 திராம்.

கால்சிகம்.—Colchicum—(கிழங்கு—விதை).

குணம்:—கிழங்கு பச்சையில் வெள்ளையாயும், உலரவைத்தால் பழுப்பாயும் இருக்கும். இதை பில்லைகளாய் கத்தரித்து விற்கப்படும்.

செய்கை:—வேதநாசாந்தகாரி, விரேஷனகாரி, மூத்திரவர்த்தனகாரி சுவேதகாரி, சமனகாரி.

உபயோகம்:—இது கீல்வாதம், சூலைகட்டு, முதலிய கடுரோகங்களுக்குக்கொடுக்க வெகு நல்ல மருந்து. இது அளவுக்கு அதிகமானால் விஷமிக்கும்.

அளவு:—1—5 கிரேன்ஸ் கிழங்கு அல்லது விதை தூள், டிங்சர் ஆப் சீட்ஸ் 5-15 துளி. டிங்சர் ஆப ட்ளோரம் 10-30 துளி. வைன் 10-30 துளி.

புகையிலை—Tobacco—டோபாக்கோ—(உலர்ந்த இலை)

குணம்:—இது கசப்பும், காரமும், குமட்டலும் உள்ளது. இதில் பொட்டிலுப்பு இருக்கிறது.

செய்கை:—அங்காகர்சனநாசகாரி, வமனகாரி, மூத்திரவர்த்தனகாரி, மலகாரி, திரவகாரி, நஸ்வியம்.

உபயோகம்:—மலக்கட்டு, நீர்க்கட்டு, குடல்வாதம், இவைகளுக்கு இதின் கசாயத்தை உபயோகிக்கலாம். சுருட்டுப்பிடித்தால் மலம் இறங்கும். இதின் தூளை நஸ்வியம் செய்ய பீனஸ ரோகம் குணமாகும். இதை வாயிலடக்க உமிழ்நீர் வடிந்து தந்தநோய் குணமாகும். இதற்கு இருதயத்தின் நடையைக்குறைக்கிற குணம் இருப்பதால் அளவுக்கு அதிகமானல் மார்பு நோய் உண்டாகும். குழந்தை, பலஹீனர், கிழவர் இவர்களுக்கு இதை கொடுக்கக்கூடாது. செருப்பு கடி புண்ணுக்கு புகையிலையின் மூக்குத்தூளைப்போட்டு அமுக்கினுல் 1-2 நாளுக்குள் குணமாகும். சேங்கொட்டைத் தயிலமும் தடவலாம்.

இலேடீரியம்—Elaterium.

குணம்:—இது காய் ரஸத்திலிருந்து அடியில் படிகிற வண்டல். இது சிறு தட்டை பில்லைகளாயிருக்கும். பிட்டுப்பொடியாக்கலாம். கசப்பாயிருக்கும்.

செய்கை:—ஜலவிரேஷனகாரி.

உபயோகம்:—இதைக் கொடுத்தால் தண்ணீர் தண்ணீராய் பேதியாகும். வாந்தி, குமட்டல், காண்பதுமுண்டு. அளவுக்கு அதிகமானல் கொடி

ய நஞ்சாகும்; வயிற்றைப் புண்ணாக்கும். சிரோ ரோகங்கள், நீர் ஏற்றம் இவைகளில் கெட்ட நீரை வெளியாக்கக் கொடுக்கப்படும். இத்துடன் சுக்குத் தூளைச் சேர்த்துக் கொடுக்க வாந்தி, வயிற்றுக்கடுப்பு முதலியவைகள் உண்டாக்காமல் பேதியாகும். மெலிந்த தேகமுடையவர்களுக்கு இதை வெகு ஜாக்கிறதையாய்க் கொடுக்கவேண்டியது.

அளவு:—$\frac{1}{16}$ (வீசம்) முதல் $\frac{1}{4}$ (வ) கிரேன்ஸ் மாத்திரை செய்துக் கொடுக்கலாம்.

கைநோ—Kino.

குணம்:—இது சிவப்பாயும், துவர்ப்பாயும், இருக்கும்.

செய்கை:—அதிசங்கோசனகாரி.

உபயோகம்:—இதை ரத்தபேதி, சீதபேதி, அதிசாரபேதி, தூர்பலம், தொண்டை ரணம், உள்நாக்கு வளர்தல் முதலிய ரோகங்களுக்கு உபயோகிக்கப்படும். இதை குழந்தைகளுக்குக் கொடுக்கத்தகுதியானது.

அளவு:—10 முதல் 20 கிறேன்ஸ் ஜலத்தில் கொடுக்கலாம். டிஞ்சர் $\frac{1}{2}$ (?) முதல் 1 திராம்.

மட்டிப்பால்.

உபயோகம்:—நித்திரையில் கால்களை முறுக்கச்செய்கிற பாதாக்ஷேபக வாதம், ஜலதோஷம், தலைவலி, இவைகள் தீரும்.

லவங்கப்பட்டை.

உபயோகம்:—அதிசாரம், காசம், வாதம், தீரும்.

கடுக்காய்—Ink-nut—இன்க்நட்—(காய்—பிஞ்சி—பூ)

உபயோகம்:—(காய்) கண், ஆண்குறி, நாக்கு இவைகளின் ரோகங்களும், வாதமும், அதிசாரமும் குணமாகும். (பிஞ்சி) மலச்சிக்கல், சீதம், ஆசனக்கடுப்பு குணமாகும். (பூ) க்ஷயம், ரத்தபித்தம், மூலம், ஆமம், கிரகணி இவைகள் தீரும்.

சித்தரத்தை—Galangal—காலேன்கால்—(வேர்)

செய்கை:—கபஹரகாரி, சுரஹரகாரி, ஜாடராக்கினி வர்த்தனகாரி.

உபயோகம்:—இதை காசம், திரிதோஷம், சுரம், சிரஸ்தாபம், சிலேஷ்மம் இவைகளுக்குக் கொடுக்கலாம்.

வட்டதிருப்பி.

உபயோகம்:—பித்தரோகம், வாத சிலேஷ்மம் தீரும்.

கோஷ்டம் (வேர்.)

செய்கை:—தீபனகாரி, வீரியவர்த்தனகாரி, பலகாரி.

உபயோகம்:—சுரம், வாதம், இருமல், மூலம் தீரும். விந்து ஊறும்.

அதிவிடையம் (வேர்)

செய்கை:—பலகாரி, ஜாடராக்கினி வர்த்தனகாரி.

உபயோகம்:—சுரம், அதிசாரம், ஈளை தீரும்.

பீநரோகணி.

உபயோகம்:—காசம், இமையைப்பற்றிய நீர்ப்பில்லம், கிரிச்சரம் தீரும்.

பேரரத்தை—தும்பராஷ்டகம்.

உபயோகம்:—இசிவு, வலிப்பு, வாதம், கபம், சுரம் தீரும்.

செவ்வியம்.

உபயோகம்:—சுரம், கோழை, காசம் தீரும்.

விலாமிச்சு வேர்.

உபயோகம்:—சுரம், மேகநீர், கண்எரிவு, பித்தம், தாகம், மயக்கம் இவைகளுக்குக் கொடுக்கலாம்.

பறங்கிப் பட்டை.

உபயோகம்:—இதை வாதம் (80), நீர் எரிவு, கபம், வாந்தி, புண், மேகம் இவைகளுக்குக் கொடுக்கலாம்.

பிசின் பட்டை,

உபயோகம்:—வாதம் (80), வெப்பம் இவைகள் தீரும்.

சன்னலவங்கப்பட்டை.

செய்கை:—உபயோகம்:—மூலரணம், கிரகணி தீரும்.

லவங்கப்பத்திரி,

உபயோகம்:—சுரம், இருமல், மேகம், தீரும்,

நாளிசப்பத்திரி.

செய்கை:—ஜாடராக்கினி வர்த்தனகாரி, சங்கோஷனகாரி, சுரஹரகாரி.

உபயோகம்:—இதை அஸ்திசுரம், பீநசம், பேதி, இருமல், இரைப்பு, வாந்தி, தொண்டைக் கம்மல் இவைகளுக்குக் கொடுக்கலாம்.

சிருநாகப்பூ.

உபயோகம்:—காசம், வாதம் இவைகள் தீரும்.

கூகைநீர்.

உபயோகம்:—கோழை, யோனிரோகம், வாதம் தீரும்.

வலம்புரிக்காய்.

உபயோகம்;—விக்கல், மேகம், கர்ணரோகம் தீரும்.

வாய்விளங்கம்.

உபயோகம்:—குன்மம், சிரசு வயிறு நாசி இவைகளின் ரோகங்கள், பாண்டு, குஷ்டம் இவைகளுக்கு உபயோகிக்கலாம்.

தக்கோலம்.

செய்கை:—பலகாரி, வீரிய வர்த்தனகாரி.

உபயோகம்:—பாண்டு, சுரம், வாதம் தீரும்.

விழல் அரிசி.

உபயோகம்:—சுரம், வாதம், பித்தம், சிலெஷ்மம், மேகம் தீரும்.

வெப்பாலை அரிசி.

உபயோகம்:—குடல்வியாதி, வயிற்றுவலி, வாதம் தீரும்.

கார்போக அரிசி.

உபயோகம்:—கிரந்தி, வாதம், சிலேஷ்மம் தீரும்.

அல்லில்ட்ரை ப்ரோமைடம—Allyltri Bromidum

குணம்:—இந்த திரவம் கொஞ்சம் மஞ்சள் நிறமாயிருக்கும். இது ஈதரில் கரையும்.

செய்கை:—சமனகாரி, வேதனசாந்தனி.

உபயோகம்:—சூதகசன்னி, கக்கிருமல், சுவாசகாசம், மாரடைப்பு, குழ

க்கைகளின் வலிப்பு, குடைச்சல், அன்றுாயவிரணம் இவைகளுக்கு இது அடுத்த மருந்து.

அளவு:—5 முதல் 10 துளி வீதம் தினம் 3—4 தடவை கொடுக்கலாம். 15—30 துளி ஈதரில் கலந்து 2—3 துளி வீதம் ஹைபொடர்மிக் மூலமாய்ப் பீச்சிடலாம்.

பெனிலாசிடிக் ஆஸிட்—Phenylacetic acid.

குணம்:—இது வெள்ளையாயும் புளிப்பு வாசனையாயும் ருசியாயுமிருக்கும் ஈதர், வெந்நீர், ஆல்கொஹோல் இவைகளில் கரையும்.

செய்கை:—அழுகுதலைத் தடுக்கும்.

உபயோகம்:—க்ஷயம், சன்னிபாதசுரம், இருமல், அதிசார சன்னி பாத சுரம் இவைகளுக்கு இது வெகு நல்லமருந்து.

அளவு:—1—3 கிறேன்ஸ் வீதம் தினம் 3 தடவை கொடுக்கலாம். க்ஷயத்துக்கு 10—15 கிறேன்ஸ் வீதம் ஆல்கோஹாலுடன் கலந்து தினம் 3 தடவைக்கொடுக்கலாம்.

பொட்டாஸியம் ஆஸ்மேட்—Potassium Osmate.

குணம்:—இது ஜலத்தில் போட்டால் கரைந்து ஜலம் மஞ்சள் நிறமாகிவிடும்.

உபயோகம்:—இதை காக்கைவலிக்கு தனியாயாவது, பொடாசியம் ப்ரோமைட்டுடன் கலந்தாவது கொடுக்கலாம். குடைச்சல், கண்டமாலை இவைகளுக்கு பீச்சிடலாம்.

அளவு:—$\frac{1}{6}$ கிறேன் வீதம் மாத்திரை ரூபமாய் கொடுக்கலாம். 1 per cent ஜெயநீரை ஹைபொடர்மிக் மூலமாய் பீச்சிடலாம்.

குலோரலாமைடம்—Chloralamidum

குணம்:—இது நிறமற்ற சிறிய கட்டிகள், ஜலம், ஆல்கொஹாலில் கரையும், கசப்புள்ளது.

செய்கை:—நித்திராகாரி.

உபயோகம்:—இருதயரோகம், நித்திராபங்கம், இவைகளுக்கு இது வெகு நல்ல மருந்து. பொட்டாஸியம் ப்ரோமைட்டுடன் சேர்த்து கொடுக்கல் காக்கைவலிப்பு, பயித்தியம், கக்கிருமல் இவைகளுக்கு கொடுக்க குணமாகும்.

அளவு:—20 முதல் 45 கிறேன்ஸ் வீதம் ஒரு அவுன்ஸ் ஜலத்தில் கரைத்து கொடுக்கவும்.

ஈதல்ப்ரோமைடம்—Ethyl Bromidum.

குணம்:—இது ஆவியாய் பறந்துவிடும். நிறமற்ற திரவவஸ்து. ஜலத்தில் கொஞ்சமாயும் ஈதர் ஆல்கோஹாலில் சீக்கிரமாயும் கரையும்.

செய்கை:—ஸ்மிரிதிரோதகாரி, இது குளோரோபாரத்தை விட மிகவும் குணமுள்ளது. ஆனால் குளோரோபாரத்துடன் கலந்து கொடுப்பது வழக்கம்.

உபயோகம்:—இது பல்வலி, ஈர்வீக்கம் இவைகளுக்கு மேலே தடவலாம். 200 பங்கு ஜலத்தில் ஒரு பங்கு சேர்த்து மார் அடைப்புக்கு கொடுக்க குணமாகும்.

அளவு:—½ (?) முதல் 2 திராம் வீதம் ஜலத்தில் கொடுக்கலாம்.

ஐயோடால்—Iodol

குணம்:—இதில் 100 பங்கில் 90 பங்கு ஐயோடைன் சேர்ந்திருக்கிறது. ஐயோடைட் ஆப் போட்டாஷியத்துக்கு பதிலாக இதை உபயோகிக்கலாம். மங்கலமான வாசனையுடையது. இது ஜலத்தில் கரையாது. ஆல்கொஹால் ஈதர், கிளிஸிரின் இவைகளில் கரையும். ஐடோபாரத்துக்கு உடைய குணங்கள் இதற்குண்டு. ஆனால் இதற்கு ஐடோபாரத்தைப்போல் வாசனை இராது.

செய்கை:—அழுகுதலைத்தடுக்கும், ஸ்மிரிதிரோதகாரி.

உபயோகம்:—பொட்டாஷியம் ஐயோடைட்டுக்கு பதிலாக நாள்பட்ட மார்ச்சளி முதலிய வியாதிகளுக்கு கொடுக்கலாம். அன்றியும் ஐடோபாரத்தை உபயோகிக்கும் விதமே றணம் முதலியவைகளுக்குபோடலாம். கண்ணோய் காதுநோய், காதுக்குள் புண்-சிரங்கு, காலில் காணும் வியாவை இவைகளுக்கு தூவும் தூளாகவும் உபயோகிக்கலாம்.

அளவு:—2 முதல் 10 கிறேன்ஸ் கொடுக்கலாம்.

ஐயோடோபைரின்—Iodopyrin

குணம்:—வெள்ளை நிறமற்ற இந்த உப்பு ஆன்டிபைரினிருந்து எடுக்கப்பட்டது. இதற்கு வாசனையும் ருசியுமில்லை. ஜலத்தில் கொஞ்சம் கரையும்.

உபயோகம்:—இது சந்நிபாதசுரத்துக்கு கொடுக்க வெகு நல்ல மருந்து.

அளவு:—5 முதல் 20 கிறேன்ஸ் கொடுக்கலாம்.

கனபின் டானஸ்—Cannabin Tannas.

குணம்:—இது மஞ்சள் நிறமான பஸ்மம். ஜலம் ஆல்கோஹால், ஈதர் இவைகளில் கரையும்.

செய்கை:—நித்திராகாரி.

உபயோகம்:—தூக்கமில்லாமை, பயித்தியம்; சூதகசன்னி, பெரும்பாடு இவைகளுக்கு இதை கொடுக்க வெகு நன்மை செய்யும். அபினி, மார்பைனை ப்போல அவ்வளவு கொடிய நஞ்சல்ல.

அளவு:—4 முதல் 8 கிறேன் வீதம் படுக்கைக்குபோகுமுன் சாப்பிட லாம்.

இயோனிமஸ்—Euonymus.

குணம்:—இதின் பட்டையின் தூளுக்கு வாசனை இராது. வாயில் போட் டால் காரப்புள்ளதாயிருக்கும். இதிலிருக்கும் பதார்த்தத்திற்கு இயோனி மின் Euonymin என்று பெயர்.

செய்கை:—விரேசனகாரி, பித்தகாரி, உஷ்ணகாரி, பலகாரி, வியதா பேதகாரி, மூத்திரவர்த்தனி.

உபயோகம்:—எகுர்த கண்டதாபனரோகம் நீர்கோவை, Dropsy, முறைக்காச்சல், தாபசுரம், நாள்பட்ட மலபந்தம், இவைகளுக்கு இது வெகு நல்ல மருந்து:

அளவு:—சத்து Extract 5—15 கிறேன்ஸ், Dry Extract 1—2 கிறே ன்ஸ். Extract Liquid 20—90 துளி, டிங்சர் Tincture 10—40 துளி.

இனியூலா—Inula

குணம்:—இது ஓர் செடியின்வேர். இதுகசப்பாயும் காரமாயும் நல்ல வாச னையாயுமிருக்கும். இதில் இனியூலின் Inulin என்றும் ஹெலினின் Helenin என்றும் உப்புகளுண்டு.

செய்கை:—பலகாரி, உஷ்ணகாரி, ஸ்வேதகாரி, மூத்திரவர்த்தனி, கபஹரகாரி.

உபயோகம்:—இனியூலின் உப்பைக்கொடுத்தால் அஜீர்ணம், மந்தாக் கினி, மார்சளி, நீர்கோவை இவைகள் குணமாகும். ஹெலினின் உப்பு க்ஷயம், நாசிகா துவாரதாபனரோகம் இவைகளுக்கு கொப்பிளிக்கும் நீராக உபயோகிக்கலாம். மலேசுரம், பேதி, க்ஷயம் இவைகளுக்கு கொடுத்தால் குணமாகும்.

அளவு:—இனியூலின் 1—3 கிறேன்ஸ். ஹெலினின் ¼ முதல் 2 கிறேன்ஸ் ஒரு அவுன்ஸ் ஜலத்தில் கொடுக்கலாம்.

ஆஸ்லிபியாஸ் ட்யூபிரோஸா—Asclepias Tuberosa.

குணம்:—இது ஓர் வேர். இதின் உப்புக்கு ஆஸ்லிபிடின் (Asclepedin) என்று பெயர்.

செய்கை:—உஷ்ணகாரி, ஸ்வேதகாரி, மூத்திரவர்த்தனி, வமனகாரி, விரேசனகாரி, கபஹரகாரி.

உபயோகம்:—கீல்வாதம், மார்சளி, பக்கசூலை, சுரம், நுரைஈரல் தாபனம், நெஞ்சரைவுட் சவ்வின் தாபணம், இவைகளுக்கு இதின் பாவன திராவகத்தில் (Tincture) 5—40 துளி ஒரு அவுன்ஸ் ஜலத்தில் கலந்து கொடுக்ககுணமாகும். நல்ல மருந்து.

இக்தியால்—Ichthyol.

குணம்:—இது கார்போன்ற பதார்த்தம். இது கபிலமும் சிவப்பும் கலந்த நிறமாயிருக்கும். இதில் 15 per-cent கந்தகம் சேர்ந்திருக்கிறது. சலத்தில் கரையும்.

செய்கை:—விரணகாரி, வியதாபேதகாரி, அழுகுதலைத்தடுக்கும்.

உபயோகம்:—க்ஷயம், சூதகப்பாண்டு, மார்புசவ்வுதாபனம், கர்ப்ப வீக்கம், சொறி, சிரங்கு, கீல்வாதம், மலபந்தம், குடைச்சல், இவைகளுக்கு உள்ளுக்குக்கொடுக்க திவ்விய மருந்து. இதை பன்றி நெய்யோடு 20—30 per-cent வீதம் கலந்தாவது தனியாவது சொறி, சிரங்கு, வீக்கம், மரு முதலிய சர்மரோகத்துக்கும், க்ரைஸாரோபினுடன் கலந்து குஷ்டத்திற்கும் மேலே போடலாம். தொண்டையின் தாபனரோகத்துக்கு ஜலத்தில் கலந்து கொப்பளிக்கலாம். குதிகொப்பளத்துக்கு இதை தடவலாம். அக்கிக்கு தடவ எடுத்த மருந்து. மேகரணம், சூலை, பூச்சிக்கடி, இராஜபிளவை, ரணம் இவைகளுக்கு இதை மேலே பூசலாம். மிருதார்சிங்கு விருகனிடை 10, விளாவின அவிடிக் ஆவிட் விருகனிடை 30 இவைகளைக் கொதிக்ககாய்ச்சி ஆலிவ ஆயில், பன்றி நெய், இக்தியால் வகைக்கு விருகனிடை 10 சேர்த்து களிம்பு செய்து சொறி, சிரங்குமுதலிய சர்மரோகத்துக்கு மேலே தடவினல் உடனே ஆறும். ஜிங்க் ஆக்ஸைட் விருகனிடை 20, காந்த உப்பு விருகனிடை 100 இக்தியால் விருகனிடை 1 முதல் 2 வீதம் கலந்து அக்கினி விரணத்துக்கு போடலாம். இக்தியால் விருகனிடை 10, கொழுப்பு விரு

களிடை 60, லாரெஞ்ஜிவின் விருகளிடை 20 சேர்த்து களிம்பு செய்து பெரியம்மைக்கு மேலே போடலாம்.

அளவு:—15 முதல் 30 கிறேன்ஸ் ஜலத்தில் கலந்து உள்ளுக்குக்கொடுக்கலாம்.

அட்ரோபைன் ஸல்பேட்—Atropine Sulphate.

குணம்:—இந்த உப்பு தூளாயிருக்கும். சலம், ஆல்கோஹால் இவைகளில் கலந்துவிடும். கெட்டுப்போகாது.

செய்கை:—கண்தாரையை விரிக்கச்செய்யும், நிரவாதிக சமனகாரி.

உபயோகம்:—இது உள்ளுக்குச் சாப்பிடகூடாது. இதை கண்ணில் விட்டால் கண்தாரை விரியும். கருவிழியில் காணுகிற ஒரு சாதிரோகத்துக்கு உபயோகிக்கலாம்.

அளவு:—ஒரு கிறேனில் 200 பாகத்தில் 1 பாகம் முதல் 100 பாகத்தில் ஒரு பாகம் வரையில் அதாவது $\frac{1}{200}$ gr. முதல் $\frac{1}{100}$ gr. வரையில் உபயோகிக்கலாம்.

அபினிவஸ்தி—Enema of opium.

அபினித் திராவகம் (?) ($\frac{1}{2}$) திராம், அரிசிமாவு கஞ்சி 2 அவுன்ஸ் இவைகளைச் சேர்த்து வைத்துக்கொண்டு சீதபேதி, ரத்தபெருக்கு, மூத்திரக்கிரிச்சிரம், மூத்திரப்பையில் வேதனை இவைகளுக்கு ஆசனத்தில் பீச்சாங்குழலால் அடித்தால் உடனே குணமாகும்.

அமிலினி ஹைட்ரேட்—Amylene Hydrate.

குணம்:—இது ஜலரூபமாயிருக்கும். ஜலம், ஆல்கோஹால் இவைகளில் கரையும்.

செய்கை:—நித்திராகாரி.

உபயோகம்:—உன்மாதரோகம். (Mania), மார்பியாச் சாப்பிடுவதால் உண்டாகும் பயித்தியம், காக்கைவலி வியாதிக்கு ப்ரோமைட்ஸ் மருந்துகள் (Bromides) உபயோகப்படாதபோதும் இதைக் கொடுக்கலாம்.

அளவு:—50 முதல் 70 துளி ஒரு அவுன்ஸ் ஜலத்தில் விட்டுக்கொடுக்கலாம்.

அமில் நைட்ரைட்—Amyl Nitrite.

குணம்:—இது மஞ்சள் நிறமான ஜலபதார்த்தம். ஜலத்தில் கரையாது.

அல்கொஹால், ஈதர், குளோரோபோபாரம் இவைகளில் கரையும். முகர்ந்தால் முகம் சிவக்கும்.

செய்கை:—அங்காகர்ஷண நாசகாரி, அபகர்ஷணகாரி.

உபயோகம்:—மார்அடைப்பு, தோணி அட்டத்தின் நடுக்கல், சீதசுரம், இருமலின் கஷ்டசுவாசம், காக்கைவலி, ஒற்றைத்தலைவலி, சூர்யாவர்த்தன வாதரோகம், இவைகளுக்கு முகருவதினுல் குணம் கண்டதுண்டு. கண்ட தாபனரோக சம்பந்தமான நரம்புப்பிடிப்பு, குதகவயிற்றுவலி, சிசுகளின் வாய், கண்ரப்பை, விரல்கள் இவைகளின் வலி (வலிப்பு) விரணசன்னி இவைகளுக்கு கொடுக்க குணம் காணலாம்.

அளவு:—முகருவதற்கு 2 முதல் 5 துளி. உள்ளுக்கு அரை முதல் ஒரு துளி. ஜாக்கிரதையாய் உபயோகிக்க வேண்டியது.

டெரிடேரி அமில் நைட்ரைட்—Teritary Amyl Nitrite.

இதை அமில் நைட்ரைட்க்கு பதிலாக உபயோகிக்கலாம். ஆனால் இது முகத்தை சிவப்பிக்கிறதில்லை. ஆகையால் அச்சமில்லாமல் அதை காட்டிலும் கொஞ்சம் அதிகமாய் 80 முதல் 100 துளி வரையில் தாராள மாய் முகரவைக்கலாம். சாப்பிடலாம்.

அமோனி பேர்சல்பாஸ்—Ammonii Persulphas.

ஆகாரத்தை (சாப்பிடும் பதார்த்தம்) கெட்டுப்போகாமலிருக்க அந்த ஆகாரத்துடன் இதை கொஞ்சம் சேர்த்து வைத்தால் அழுகுதலைத் தடுக்க உபயோகமுள்ளது.

அமோனி பேன்ஜோஸ்—Ammonii Benzoas.

செய்கை: உஷ்ணகாரி, சுரஹரகாரி, சோணகாரி, மூத்திராவர்த்தினி அழுகுதலைத் தடுக்கும்.

உபயோகம்:—நாள்பட்ட மூத்திரப்பை தாபனரோகம், மூத்திர கல்லடைப்பு ரோகம், சந்து வாதம், மகோதரம், சுரம், பிரமேகம் இவைகளுக்கு கை கண்டமருந்து.

அளவு:—5 முதல் 15 கிரேன்ஸ் தினம் 2, 3 தடவை 1 அவுன்ஸ் ஜலத்தில் கொடுக்கலாம்.

பூதசம்பிரான்

குணம்:—இது சிவப்பும் கொஞ்ச வெள்ளைகலந்த நிறமாயும், சொற சொறப்பாயுமிருக்கும்.

செய்கை:—குதாவர்த்தனகாரி, வாதஹரகாரி.

உபயோகம்:—கருப்பையிலிருக்கும் அழுக்கை வெளிப்படுத்தும் சக்தியிருப்பதால் பிரசவித்த ஸ்திரீகளுக்கு கொடுக்க நல்லமருந்து. அன்றியும் குதகட்டு, குதவலி, முதலியவைகளுக்கு கொடுத்து குணத்தைக் கண்டதுண்டு.

அளவு:—5 முதல் 10 கிரேன்ஸ் வரையில் சீனியில் கலந்து கொடுக்கவும். தினம் 2, 3 தடவைக் கொடுக்கலாம்.

வின்னினதிமுறுகல் பாஷாணதிராவகம்.

டைலியூடேட் பாஸ்பாரிக் ஆஸிட்—Diluted Phosphoric Acid.

செய்கை:—பலகாரி, உதிரத்தை அதிகரிக்கும், சீதளகாரி, மூத்திராவர்த்தனகாரி, வீரியவர்த்தனகாரி.

உபயோகம்:—மூத்திர வர்த்தனியாக கால்ஷியம் பாஸ்பேட்டோடு கலந்து கொடுக்கலாம். மந்தாக்கினி, அதிசார சந்நிபாத சுரம், மஜ்ஜாதந்து வேதனை, காக்கைவலி, பலஹீனம், க்ஷயரோகம், நாள்பட்ட சர்மரோகங்கள், வாந்திபேதி, சந்துவாதம், கணு வாதம் முதலிய ரோகங்களுக்கு கொடுக்க இது கைகண்ட மருந்து. அன்றியும், ரத்தக்ஷீணரோகம், ஆண்மைகுறைந்துபோகுதல், முகபரு, முகசரணம், அஸ்திசயனரோகம் இவைகளுக்கு கொடுக்க திவ்விய மருந்து.

அளவு:—5 முதல் 20 துளி கசப்புள்ள கஷாயத்தில் கொடுக்கவும்.

அமோனி போரரஸ்—Ammonii Boras.

குணம்:—இதற்கு ஆல்கலியிலிருக்கும் குணங்களுண்டு. ஜலத்தில் கரையும்.

உபயோகம்:—மூத்திரக்குண்டிக்காயின் கல்லடைப்பு ரோகத்திற்கு கொடுத்து குணங்கண்டதுண்டு.

அளவு:—20 கிரேன்ஸ் வீதம் நன்றாய் நீர் இறங்கும் வரையில் 2 மணிக்கு ஒருதரம், பிறகு 15 கிரேன்ஸ் வீதம் தினம் 3 தடவை கொடுக்கலாம்.

அமோனி பரோமிடம்—Ammonii Bromidum.

குணம்:—கொஞ்சங்காரமாய் உப்புகரிக்கும். இது ஜலத்திலும் ஆல்கோஹாலிலும் கரையும்.

செய்கை:—சமனகாரி, அபகர்ஷணகாரி, நித்திராகாரி, வீரிய சமனகாரி.

உபயோகம்:—சூதகசன்னி, கர்ப்பசூலை, நித்திராபங்கம், சூலைநோய், மஜ்ஜாதந்துவேதனை (Neuralgic pain), சுவாஸகாசம், காக்கைவலி, அதிககாமம், கண்டமாலை, சிரங்கு இவைகளுக்கு கொடுக்க திவ்வியமருந்து.

அளவு:—5 முதல் 30 கிரேன்ஸ் கொடுக்கலாம். ஒரு வருஷத்திற்குட்பட்ட குழந்தைகளுக்கு 2 கிரேன்ஸ் கொடுக்கலாம்.

அயோசியாமினி ஸல்பாஸ்—Hyocyaminae Sulphas.

குணம்:—சிறிய கட்டிகளான பஸ்பம்போன்றது. வாசனை இல்லை, கசப்பு. சலம், அல்கோஹாலில் கரையும்.

செய்கை:—நித்திராகாரி.

உபயோகம்:—இது கொடிய நஞ்சு. கொஞ்சமாய் கொடுத்தால் பயித்தியம், சுவாச காசம், மஜ்ஜாதந்துவேதனை, சூத்காவும் ஜன்னி, மனவக்கம், பித்தரோகம் இவைகளுக்கு வெகு நல்ல மருந்து. அளவுக்கு அதிகம் கொடுக்கக்கூடாது.

அளவு:— $\frac{1}{200}$ முதல் $\frac{1}{100}$ கிரேன் வரையில் கொடுக்கலாம்.

ஸாலிக்ஸ் கேப்ரியா—Salix Caprea.

குணம்:—இது ஓர் விதபூண்டு. இதன் புஷ்பத்தை வாலையிலிட்டு இறக்கப்படும் திராவகம். சலத்தைப்போலிருக்கும். கொஞ்சம்காரமான வாசனையுண்டு.

செய்கை:-உபயோகம்:-இது சப்ததாதுக்களின் ரோகங்களையும் நிதானமாய்போக்கி தேகசுபாவத்தை நிலைநிறுத்தும். மூளைச்சார்ந்த நரம்புகளின் அடைப்பை நீக்கும். சூட்டினாலுண்டான தலைவலியைச் சாந்தப்படுத்தும். இருதயம், வயிற்றிலுள்ள உறுப்புகள் இவைகளைப்பலப்படுத்தும், போக சக்தியை விருத்திசெய்யும்.

காபினி சோடியோ ஸாலிஸிலாஸ்—Caffeine Sodis Salicylas.

குணம்:—இது வெண்மையாயும், சூரணமாயுமிருக்கும். ஜலத்தில் கரையும்.

உபயோகம்:—இருதயாந்தரசர்மதாபனம், கீல்வாதம், இருதய கவச தாபனம், இன்னும் இதர விதமான இருதயரோகங்கள் இவைகளுக்கு உபயோகிக்கலாம். தோணி ஆட்டத்தின் நடுக்கத்துக்கும் கொடுப்பதுண்டு.

அளவு:—1 முதல் 4 கிரெய்ன்ஸ். ஹைபோடர்மிக் என்னும் கருவியின் மூலமாய் 1 முதல் 4 கிரெய்ன்ஸ் ஜலத்துடன் சேர்த்துபீச்சலாம்.

ட்ரைக்ளோர்பேனிக் ஆஸிட்—Trichlorphenic Acid.

குணம்:—இது காரமான வாசனையுள்ள பதார்த்தம். ஜலத்தில் கரையாது.

செய்கை:—பூதிநாசனி, அழுகுதலை தடுக்கும்.

உபயோகம்:—கார்பாலிக் ஆசிட்டைவிட 25 மடங்கு வீரியம் அதிகமாயிருக்கும். கார்பாலிக் ஆசிட் உபயோகிக்கும் வியாதிகளுக்கு இதை உபயோகிக்கலாம்.

கார்ல்ஸ்பால்ட் ஸால்ட்—Carlsbald Salt.

செய்கை:—விரேசனகாரி.

உபயோகம்:—மூத்திரகுண்டிக்காய், ஈரல் இவைகளைப்பற்றிய மலபந்தத்துக்குக் கொடுத்தால் சுகமாய் பேதியாகும். சந்து வாதம், கீல்வாதம் இவைகளுக்குக்கொடுக்கலாம்.

அளவு:—ஒரு டெஸர்ட் ஸ்பூன் உப்பை எடுத்து ஒரு டம்ளர் ஜலத்தில் கரைத்துக்கொடுக்கவும்.

வாலேட்டையில் ஆயில் ஆப் பிடுலா—Volatile Oil of Betula.

செய்கை:—உஷ்ணகாரி, அழுகுதலைத்தடுக்கும்.

உபயோகம்:—கீல்வாதம், சந்துவாதம் இவைகளுக்கு கொடுக்க வெகு நல்ல மருந்து. ஸாலிஸிலிக் ஆஸிட்டை உபயோகிக்கும் வியாதிகளுக்கு இதை உபயோகிக்கலாம்.

கால்ஸியம் குளோரைட்—Calcium Chloride.

குணம்:—இது வெண்மை நிறமுடையது. ஜலம், ஆல்கொஹாலில் கரையும்.

செய்கை:—உஷ்ணகாரி, அழுகுதலைத்தடுக்கும், நாற்றங்களைப்போக்கும், எரிச்சலைத் தணிக்கும், உமிழ்நீரை அதிகரிக்கும்.

உபயோகம்:—கண்டமாலை, சர்மவியாதி, முகத்தில் காணும் ரணம், சொறி, சிரங்கு, சரீர ஊரல், கசுவான தேமல், விஷைநரம்புக்கடுத்த வீக்கங்கள், புப்புஸதாபனம், ரத்த ஒழுக்கு, ரத்த வியர்வை, க்ஷயரோகசம்பந்த வியாதி இவைகளுக்குக் கொடுக்கலாம்.

அளவு:—5 முதல் 15 கிறேன்ஸ் அநுபானத்தில் கொடுக்கவும்.

பாஸ்பேட் ஆப் லைம்—Phosphate of Lime.

குணம்:—அது வெள்ளையாயும் தூளாயுமிருக்கும். ருசியில்லை, ஜலத்தில் கரையாது.

செய்கை:—வியாதபேதகாரி, அம்லநாசகாரி.

உபயோகம்:—குழந்தைகளின் அஸ்தி நமன ரோகம், கண்டமாலை, பேதி, ரணங்கள், தோல் எரிவு, இளைத்துப்போகுதல் இவைகளுக்கு கை கண்டமருந்து. விரணங்கள் ஆறும்போது பக்குக்கட்டுதலைத் துரிதப்படுத்தும். குறைந்து முறிந்து எலும்பு கூடாமலிருப்பதற்கு இதை கொடுத்தால் சலிதியில் கூடவைக்கும். கர்ப்ப ஸ்திரீக்கும், அதிக பால் கொடுத்து இளைத்து போகிறவர்களுக்கும், உடம்பில் அதிகமாய் பாஸ்பரஸ் என்னும் சத்தானது குறைந்து போய்விட்டால் இந்த மருந்தைக் கொடுத்து குணம் கண்டதுண்டு. ஸ்திரீ கர்ப்பமாயிருக்கும்போழுது பல் நோய், பல் விழுதல் இவைகளைத் தடுக்க நல்ல மருந்து.

அளவு:—5 முதல் 15 கிறேன்ஸ் வீதம் அநுபானத்தில் கொடுக்கவும்.

பாஸ்பேட் ஆப் ஐரன்—Phosphate of Iron.

குணம்:—இது நீலவர்ணமாயும், தூளாயுமிருக்கும். உப்பும் புளிப்பும் கலந்த ருசியாயிருக்கும். நாள்படவைத்தால் இளம் பச்சைநிறமாகிவிடும். ஜலத்தில் கரையாது.

செய்கை:—பலகாரி.

உபயோகம்:—ரக்தக்ஷீணரோகம், பலஹீனம், அஸ்திநமன ரோகம், மதுமூத்திரம், சூதகக்கட்டு, அசீர்ணம், இவைகளுக்கெல்லாம் ஜீரணசக்தியை அதிகப்படுத்தி உற்சாகப்படுத்தும்.

அளவு:—5 முதல் 10 கிறேன்ஸ் வீதம் பாணிதமாக செய்து கொடுக்கலாம்.

ஸல்பேட் ஆப் லைம்—Sulphate of Lime.

குணம்:—இது வெள்ளை அல்லது மஞ்சள் நிறமுடைய பஸ்மம்.

உபயோகம்:—நரம்பு அற்றுப் போய் விட்டபோது இதை மேலே போட்டு அல்லது வைத்துக்கட்டினால் நல்ல குணமுண்டு. கட்டி முகப் பரு, ராஜப்பிளவை முதலியவைகளுக்கும், சிப்பிடித்த விதை நரம்புகளின் ரோகத்துக்கும், கழுத்தின் மேல் அரை முதல் 1 கிறேன் வீதம் 2 மணிக்கு ஒருமுறை பூசினால் ஒரு வாரத்திற்குள் சௌக்கியமாகும். கட்டிகளுக்கு ஒரு கிறேனில் பத்தில் ஒரு பாகம் ($\frac{1}{10}$ grain) வீதம் 1 மணிக்கு ஒரு தடவை கொடுக்கவேண்டியது.

அளவு:—$\frac{1}{10}$ (பத்தில் ஒரு பாகம்) முதல் 1 கிறேன் வரையில் கொடுக்கலாம்.

கால்ஸியம் ஹைபோபாஸ்பிஸ்—Calcium Hypophosphis.

தன்மை:—இது முத்தைப்போல் பளபளப்பாயும், வெண்மையாயுமிருக்கும். ஜலத்தில் கரையும்.

செய்கை:—உஷ்ணகாரி, பாஸ்பரஸ்ஸைப்போன்ற பதார்த்தம்.

உபயோகம்:—நரம்பு முதலியவைகளுடைய பலஹீனத்திற்கு கொடுக்க இது வெகு நல்லமருந்து. இது நரம்புகளைப்போஷிக்கும். சூதகப்பாண்டு, கண்டமாலை, அஸ்தி விரணம் முதலியவைகளுக்கு அடுத்த மருந்து.

அளவு:—6 கிறேன்ஸ் வீதம் ஒரு அவுன்ஸ் ஜலத்தில் கரைத்து கொஞ்சம் சர்க்கரை போட்டு சாப்பிடவும்.

காஞ்ஞலோபஸ் காண்டுரோங்கோ—Gonolobus Condurango

தன்மை:—இது மரத்தின் பட்டை.

செய்கை:—உஷ்ணகாரி, பலகாரி, வமனகாரி, மூத்திரவர்த்தனகாரி, சோபாநாசகாரி, வியதா பேதகாரி, அன்ஞசயத்துக்கு சமனகாரி செய்கையைக் காட்டும்.

உபயோகம்:—இதை நாள்பட்ட விரணம், கீல்வாதம், விப்புருதி, சம்பந்தமான வியாதிகள், அன்ஞசய விரணம், ரக்தவாந்தி, இருமல் முதலியவைகளுக்குக் கொடுக்கத் தகுந்த மருந்து. இதற்கு பசியை அதிகப்படுத்தும் குணமுண்டு.

அளவு:—30 முதல் 60 கிறேன்ஸ். Extract Liquidum 30 முதல் 60 துளி. டிங்சர் Tincture 1 முதல் 2 டிராம்ஸ்.

கான்வலேரியா — Convallaria.

குணம்:—இது ஓர்விதமான செடி. இதின் இலையும் புஷ்பமும் மருந்துக்கு உபயோகம். புஷ்பங்கள் வெண்மையாயும், வாசனையாயும், வாயில் போட்டால் காரப்பும் கசப்புமாயிருக்கும்.

செய்கை:—விரேசனகாரி, இருதயபலகாரி, மூத்திரவர்த்தனகாரி, டிஜிடெலிஸ் என்னும் மருந்துக்கு சமானமானது.

உபயோகம்:—இருதய வியாதியால் காணும் நீர்க்கோர்வைக்கும், இருதயதாபனரோகம், இருதய கவாசதாபனரோகம், இருதய ரோகம், பாண்டு, நீரிழிவு, கஷ்ட சுவாசம், இருதய துடிப்பு, இவைகளுக்குக்கொடுக்க இது வெகு சிரேஷ்டமானது.

அளவு:—எக்ஸ்ராக்ட் Extract 2 முதல் 8 கிறேன்ஸ், Extract Liquidum 2 முதல் 10 துளி, டிங்சர் Tincture 5 முதல் 20 துளி கொடுக்கலாம்.

காஸ்காரா ஸாக்ரேடா — Cascara Sagrada.

குணம்:—இது ஓர் மரத்தின் பட்டை. கசப்பாயிருக்கும்,

செய்கை:—பலகாரி, மலகாரி, அதிக அளவில் கொடுத்தால் விரேசனகாரி.

உபயோகம்:—கிழவர்களின் மலபந்தம், அஜீர்ணம், மூலவியாதி, இவைகளுக்கு கொடுக்க நல்ல மருந்து. இதின்லிகுவிட் எக்ஸ்ராக்டில் 10 துளியுடன் ஸோடிஸாலிஸிலாஸ் 15 கிறேன்ஸ் சேர்த்து 3 மணிக்கு ஓர் தடவை கொடுக்க கீல்வாதரோகம் குணமாகும்.

அளவு:—Extract Liquidum 10 முதல் 60 துளி. எக்ஸ்டிராக்ட் Extract 2 முதல் 8 கிறேன்ஸ் கொடுக்கலாம்.

குராணு — Guarana.

குணம்:—இது ஓர் செடியின் விதை. துவர்ப்பாயும் கசப்பாயுமிருக்கும்.

செய்கை:—ஸங்கோசனகாரி, பலகாரி, ஜாடராக்கினி வர்த்தனகாரி.

உபயோகம்:—ஒற்றைதலைவலி, சுரத்தில்காணும் தலைவலி, க்ஷயரோகத்தில் காணும் அதிசாரம், சீதபேதி இவைகளுக்குக்கொடுக்கலாம்.

அளவு:—எக்ஸ்டிராக்ட் ப்ளுயிடம் Extract Fluidum 5 முதல் 30 துளி கொடுக்கலாம்.

திமுறுகல்பாஷாணம்—Phosphorus—பாஸ்பரஸ்.

குணம்:—திமுறுகல் பாஷாணம் கம்பிபோல் நீண்டு மெழுகுபோல் மிருதுவாயிருக்கும். வளைத்தால் வளையும். கத்தியால் எளிதில் துண்டாக்கலாம். இது வெண்மை நிறமாயாவது மஞ்சள் நிறமாயாவது இருக்கும். இதற்கு ருசியும் வாசனையுமில்லை. ஆனால் காற்றுப்பட்டால் வெள்ளைப் பூண்டு வாசனையைத்தரும். இருளில் ஜொலிக்கும். காற்றுப் படவைத்தால் தானாய்ப்பற்றிக்கொள்ளும். ஸ்மசானம் முதலிய இடங்களில் இந்தப் பதார்த்தமிருக்கும். ஜலத்திலிருக்கும் ஆக்ஸிஜென் என்னும் வாயுவோடு சேர்ந்து ஹைட்ரோஜனைப் பிரித்து இக்காற்றை எரியப்பண்ணும். இராகாலத்தில் நமது கண்களுக்கு இது பயங்கரமாய்த் தோன்றும். இதற்கு இங்கிலீஷில் **Jack with Lantern** என்று பெயர்.

செய்முறை:—எலும்பைச்சுட்டுச் சாம்பலாக்கி அத்துடன் கந்தகத் திராவகத்தைச்சேர்த்து இது செய்யப்படுகிறது.

செய்கை:—பலகாரி, உஷ்ணகாரி, வீரியவர்த்தனகாரி, அதிக அளவில் விஷமிக்கும். 1½ கிரேன்ஸ் எடை சாப்பிட்டு பிராணன் போனதுண்டு.

உபயோகம்:—மந்தாக்கினி, அதிசாரசன்னிபாதசுரம், நரம்புவேதனை, காக்கை வலி, பலஹீனம், க்ஷயம், சர்மரோகங்கள், சந்துவாதம், கணு வாதம், ரத்தக்ஷீணரோகம், ஆண்மை குறைந்து போகுதல் இவைகளுக்கு இது நல்ல மருந்து.

அளவு:—$\frac{1}{100}$ முதல் $\frac{1}{20}$ கிரேன் வீதம் கொடுக்கலாம்.

குவெப்ரேகோ—Quebracho.

குணம்:—இது ஓர் மரத்தின்பட்டை. சிவந்த மஞ்சள் நிறமானது.

செய்கை—பலகாரி, சுரஹரகாரி, அங்காகர்ஷணநாசகாரி, முறைவியாதிரோதி.

உபயோகம்:—இதின் எக்ஸ்ட்ராக்ட் ஹிருதயம் சுவாசகாசத்துக்கும் கஷ்டசுவாசம், மாந்தம், மார்புவலி, க்ஷயம் இவைகளுக்கும் கொடுக்கப்படும்.

அளவு:— 15 முதல் 60 துளி வீதம் அநுபானத்தில் கொடுக்கவும்.

குளோரி லிகுவர்—Chlori Liquor.

செய்கை:—உஷ்ணகாரி, வியதாபேதகாரி, அழுகுப்போக்குதலைத் தடுக்கும். பூதிநாசனி.

உபயோகம்:—ரக்த மசூரிகாரோகம், விஷசுரம், ரக்த பேதி, பக்க சூலை, இவைகளுக்கு இது திவ்விய மருந்து. அதிக ஜலம் சேர்த்து விளாவி அழுத ரணங்களுக்கும், சில சர்மரோகங்களுக்கும் மேலுக்கு போடலாம். ரணங்களின் நாற்றத்தைப் போக்க உதவும்.

அளவு:—10 முதல் 30 துளி வீதம் அதிக ஜலத்தில் கலந்து கொடுக்க வேண்டியது.

குளோரைன் மிக்சர்—Chlorine Mixture.

செய்முறை:—இங்கிலிஷ் புஸ்தகத்தில் காண்க.

உபயோகம்:—அதிசார சந்நிபாத சுரத்தில் காணும் சிலுசிலுப்பு, தலை வலி, அதிதாகம், பசியில்லாமை, கைகால்களின் வலி, தீவிரநாடி, பேதி, மயக்கம், நித்திராபங்கம் முதலியவைகளுக்கு இது வெகு நல்ல மருந்து.

அளவு:—½ முதல் 1 அவுன்ஸ் வீதம் 3 மணிக்கு ஒரு தடவை கொடுக்கலாம்.

க்ரேமேரியா—Krameria—(வேர்)

குணம்:—இது ஓர் செடியின் வேர்.

செய்கை:—ஸங்கோஷனகாரி, பலகாரி.

உபயோகம்:—சீதபேதி, அதிசாரம், பெரும்பாடு இவைகளுக்கு இது வெகு நல்ல மருந்து. ஸங்கோஷனகாரியாகவும், பலகாரியாகவும் உள்ளுக்குக்கொடுக்கப்படும். கர்ப்ப மேகம், நாசிகாதாபனரோகம், கண் வைத்தியம், ஆசன வெடிப்பு இவைகளுக்கு ரக்த ஸ்தம்பனகாரியாகவும், உபயோகிக்கலாம். வாய் ரணம் ரசவேகத்தினால் உண்டாகும் வாய்ப்பிடிப்பு இவைகளுக்கு கொப்பிளிக்கும் நீராக உபயோகிக்கலாம்.

அளவு:—எக்ஸ்ட்ராக்ட் ஆப் க்ரேமேரியா (Extract of Krameria) 1 முதல் 15 கிறேன்ஸ். டிங்சர், Tincture, ½ முதல் 1 திராம், வீதம் ஒரு அவுன்ஸ் ஜலத்தில் சேர்த்துக்கொடுக்கவும்.

க்ரிஸிலிக் ஆசிட்—Cresylic Acid.

குணம்:—இது மஞ்சள் நிறமாயும், தாரின் வாசனையுள்ளதாயுமிருக்கும். ஜலத்தில் 80 பங்கு கரையும்.

செய்கை:—பூதநாசனி, அழுகுதலைத் தடுக்கும், விரணகாரி.

உபயோகம்:—கக்கிருமலுக்கு இதை வாசனை பிடித்தால் வியாதி நின்று போய் விடும். அந்த வியாதிக்கு இது சஞ்சீவி. கார்பாலிக் ஆசிட்டைவிட இது மேன்மையானது. ஆனால் அவ்வளவு நஞ்சுடையதல்ல. இது அழுகுதலைத் தடுக்கும் மருந்தாக உபயோகிக்கலாம்.

சால்முக்ரா ஆயில்—Chaulmugra Oil.

குணம்:—இது ஈதர், குளோரோபாரம் இவைகளில் கரையும். சூடு பட்டால் எளிதில் கரையும். நீரடிமுத்தின் குணங்கள் இதற்கு உண்டு.

செய்கை:—பலகாரி, அதிகமானால் வமனகாரியாகும்.

உபயோகம்:—குஷ்டத்திற்கு மேலுக்கும் உள்ளுக்கும் உபயோகித்து குணம் கண்டதுண்டு. கண்டமாலை, சொறி, சிரங்கு முதலிய சர்மரோகங்களுக்கும், கீல்வாதத்திற்கும் மேலுக்கும் உள்ளுக்கும் 3-4 துளி வீதமும் மீன் எண்ணெயுடன் 1-2 துளி கலந்து குழந்தைகளுக்கு பலகாரியாகவும், க்ஷயரோகத்துக்கு மார்பின்மேல் தடவுதலுக்கும், சந்துவாதம், மேகரணம் இவைகளுக்கும் போடலாம்.

அளவு:—2-3 துளி வீதம் 3-4 தடவை பாலில் கலந்து உள்ளுக்குக் கொடுக்கலாம்.

குல்கந்து—Confection of Roses.

செய்முறை:—சிவப்பு ரோஜாப்புட்பத்தின் பச்சை இதழ்கள் 1 பவுண்டு, சீனிகற்கண்டு 3 பவுண்டு. புட்பத்தை கல்லுரலிலிட்டு இடித்து கற்கண்டைச் சேர்த்து இடித்து எடுத்து வைத்துக்கொள்ளவும்.

செய்கை:—லகுவிரேசனகாரி, ஸங்கோசனகாரி.

உபயோகம்:—இதை சாப்பிட்டு வந்தால் உஷ்ணம் தணியும். ரக்த விருத்தியாகும். மாத்திரைகளைச்செய்ய இது உதவும்.

அளவு:—2-4 ரூபாய் எடை தினம் காலை மாலை சாப்பிடலாம்.

ஹிப்னல்—Hypnal.

செய்கை:—நித்திரகாரி.

உபயோகம்:—மஜ்ஜாதந்து வேதனை, ஒற்றை தலைவலி, கூடியரோகத்தின் சுரம், நித்திராபங்கம், பித்த ரோகங்கள் இவைகளுக்குக்கொடுக்கலாம்.

அளவு:—15-30 கிறேன்ஸ் வீதம் அநுபானத்தில் கொடுக்கவும்.

பேனசிடின்—Phenacotin.

குணம்:—இது வெள்ளையாயும், மினுமினுப்பாயும், வாசனையற்றதாயும் ருசியில்லாததாயும், குளிர்ந்த ஜலத்தில் சுவற்பமாயும், வெந்நீரில் சீக்கிரமாயும் கரையக்கூடியதாயுமிருக்கும்.

செய்கை:—வேதனாசாந்தகாரி, சுரஹரகாரி, மஜ்ஜாதந்து வேதனையின் குடைச்சலைத் தணிக்கும், நரம்பின் சமனகாரி.

உபயோகம்:—சகல சுரங்களுக்கும் கொடுக்க இது நல்ல மருந்து. தீங்கு நேரிடாது. உடனே கண்டிக்கும். 8 கிறேன்ஸ் வீதம் கொடுத்தால் உடம்பின் சீத உஷ்ணத்தைத் தணிக்கும். சந்நிபாத சுரத்திற்கு இது சஞ்சீவி. நுரை ஈரல்தாபனம், இதர சுரத்தைப்பற்றிய வியாதிகளுக்கும் இது வெகு நல்ல மருந்து. மஜ்ஜாதந்து வேதனையின் குடைச்சலுக்கு 10 கிறேன்ஸ் வீதம் 1, 2 தடவை கொடுக்கலாம். ஒற்றைத்தலைவலி, கீல்வாதம், சந்து வாதம் இவைகளுக்கு பேனஸிடின் 8 கிறேன்ஸ், ஸாலோபென் 16 கிறேன்ஸ் கலந்து கொடுக்கவும். 1 மணிக்குப்பிறகு அவசியமிருந்தால் மறுபடியும் கொடுக்கவும். தலைவலிக்கு பொடாஷ் ப்ரோமைடுடன் (Potash Bromide) கலந்து கொடுத்தால் உடனே நின்றுவிடும். சுரஹரகாரியாக பெரியவர்களுக்கு 8-12 கிறேன்ஸ் வீதம் 3, 4 மணிக்கு ஒரு தடவை கொடுக்கவும்.

அளவு:—5 முதல் 10 கிறேன்ஸ் கொடுக்கலாம்.

க்ரையோபின்—Kryofin.

குணம்:—இது வெள்ளைநிறமுடையது. வாசனையும் ருசியுமில்லை. ஜலத்தில் கொஞ்சமாய் கரையும்.

செய்கை:—சுரஹரகாரி, சுவேதகாரி, வேதனாசாந்தகாரி.

உபயோகம்:—இது மஜ்ஜாதந்து வேதனைக்கு கொடுக்க வெகு நல்ல மருந்து. சுரத்துக்கு அடுத்த மருந்து. இதைக்கொடுக்க வியர்வை அதிகமாய் உண்டாகும்.

அளவு:—8 முதல் 15 கிரேன்ஸ் வீதம் கொடுக்கலாம்.

பெனோகால் ஹைட்ரோகுளோரிடம்—Phenocoll Hydrochloridum.

செய்கை:—சுரஹரகாரி.

உபயோகம்:—கீல்வாத சுரத்துக்கும், மலேசுரத்துக்கும், குலைநோவுக்கு பதிலாகவும், கீல்வாதம், க்ஷயம், சுரம் முதலியவைகளுக்கு அழுகுதலைத் தடுக்கும் மருந்தாகவும் கொடுக்கலாம். காயம், ரணம் இவைகளின் பேரில் ஐயோடோபாரத்திற்கு பதிலாக தூவலாம். கக்கிருமலுக்கு இதைக் கொடுக்கலாம்.

அளவு:—5 முதல் 10 கிரேன்ஸ் வீதம் கொடுக்கலாம்.

குளோரோடைன்—Chlorodyne.

செய்முறை:—குளோரோபாரம் 1½ ப்ளு அவுன்ஸ், முளாகாயப்பாவனத் திராவகம் ½ ப்ளு. அவுன்ஸ், கஞ்சாப்பாவனத்திராவகம் 2 ப்ளு. அவுன்ஸ், பெப்பர் மின்ட் தைலம் 20 துளி, கிளிஸிரைன் 5 ப்ளு. அவுன்ஸ் இவைகளை 9 ப்ளு. அவுன்ஸ் ஆல்கொஹாலில் கரைத்து, மார்பைன் ஹைட்ரோகுளோரைட் 87½ கிரேன்ஸ், டைலூட் ஹைட்ரோ ஸியானிக் ஆஸிட் 1 ப்ளு. அவுன்ஸ் இவைகளோடு கலந்து, பிறகு 20 ப்ளு. அவுன்ஸுக்கு தேவையான ஆல்கொஹால் சேர்த்துக்கொள்ள வேண்டியது.

உபயோகம்:—அஜீர்ணபேதி, பேதி, விஷபேதி, (வாந்திபேதி), சீதபேதி, சுவாசகாசம், சுரம், கபரோகங்கள், இழுப்பு, நரம்பு வேதனை, நடுக்கல், க்ஷயம் முதலிய அநேக பலத்த வியாதிகளுக்குக் கொடுத்து குணங் கண்டதுண்டு. இன்னும் இதின் சில முறைகள் பிராணரக்ஷாமிர்த சிந்து 2-வது பாகத்தில் காணலாம்.

அளவு:—5 முதல் 15 துளி வீதம் 1 அவுன்ஸ் ஜலத்தில் கொடுக்கலாம்.

பென்ஜ்பிடல்—Benzbetal.

குணம்:—இது ஓர்வித காடி உப்பு. இது வெண்மையாயிருக்கும். வெந்நீரில் கரையும்.

உபயோகம்:—சீதபேதி, அதிசாரபேதி, அஜீர்ணபேதி, வாந்திபேதி, முதலியவைகளுக்குக் கொடுக்க திவ்விய மருந்து.

அளவு:—4 கிரேன்ஸ் வீதம் கொடுக்கவும்.

பைடோலாக்ஸின்—Phytolaccin.

செய்கை:—பித்தகாரி. வியதாபேதகாரி, விரேசனகாரி.

உபயோகம்:—கீல்வாதம், மேகரோகம் இவைகளுக்கு இது கைகண்ட அவுஷதம்.

அளவு:—¼-½ கிறேன் வீதம் வியதாபேதகாரியாகவும், 2-4 கிறேன்ஸ் வீதம் விரேசனகாரியாகவும் கொடுக்கலாம்.

பைரோகாலிக் ஆசிட்—Pyrogallic Acid.

குணம்:—இது வெள்ளையாயும், படைபடையாயும், லேசாயும், வாசனையற்றதாயும், ஜலத்தில் கரையத்தக்கதாயுமிருக்கும்.

செய்கை:—விரணகாரி, அழுகுதலைத் தடுக்கும், பூதநாசனி, ஸங்கோஷணகாரி, ரக்த ஸ்தம்பனகாரி.

உபயோகம்:—இது ரக்த காசரோகத்திற்கு கொடுக்க திவ்விய மருந்து. சர்மரோகத்திற்கு மேலே தடவலாம். காடிக்காரஜெய நீரோடு சேர்த்து மயிர்களுக்குச் சாயம் போட உபயோகப்படுத்தலாம்.

அளவு:—¼ (வ) முதல் 2 கிறேன்ஸ் வீதம் கொடுக்கலாம்.

கலபார் பீன்—Calabar Bean.

குணம்:—இது ஓர்வித கொடி. ருசியும் வாசனையுமில்லை.

செய்கை:—அங்காகர்ஷணநாசகாரி: கபஹரகாரி, நரம்பின் சமனகாரி, கண்தாரையைச் சுருங்கச்செய்யும், மலகாரி.

உபயோகம்:—இதின் டிங்சருவது (Tincture), எக்ஸ்டிராக்ட்டாவது (Extract) கொடுக்க விரணசந்நி, நரையீரல் தாபனம், பயித்தியம், மார்ச்சளி, காக்கைவலிப்பு, பயித்தியனுக்கு இருக்கும் சர்வாங்க வாதரோகம், மலபந்தம். எரிகுன்மம், கீல்வாதம், மஜ்ஜதந்து வேதனை இவைகள் வெகு சீக்கிரத்தில் குணமாகும். எட்டிக்கொட்டைக்கு இது முறிவு.

அளவு:—டிங்சர் (Tincture) 10 துளி வீதம், எக்ஸ்டிராக்ட் (Extract) ¼ (வ) முதல் 1 கிறேன் வீதம் கொடுக்கலாம்,

நஞ்சமுறிச்சான் நெஞ்சறுப்பான்—Tylophora Folia.

குணம்:—இது இந்தியாவின் மணற் பாங்கான இடங்களில் உண்டாகும் ஓர்வகைக் கொடி. குமட்டலையுடைய ருசி யுள்ளது.

செய்கை:—வமனகாரி, சுவேதகாரி, சுபநாசகாரி.

உபயோகம்:—இதின் இலையை அரைத்து சாறு எடுத்தாவது, அல்லது இலையாவது பூரான், நல்லபாம்பு முதலிய விஷக்கடிகளுக்கு கொடுக்க உடனேவிஷம் நீங்குகிறது. கைகண்ட மருந்து. இதற்கு வமனகாரி செய்கை யிருப்பதால் சாப்பிட்ட அன்னத்தை சீர்ணிக்காவிட்டால் இதை கொடுக்க உடனே வாந்தியாகி அதை வெளியாக்கும்.

அளவு:—8 முதல் 15 இலைகள் கொடுக்கலாம்.

ஒலியம் நைட்ரோ கிளிஸிரைன் -Oleum Nitro Glycerin.

குணம்:—இந்த எண்ணெய்க்கு வாசனையில்லை. இனிப்பான ருசியுள்ளது. ஜலத்தில் கரையாது. ஈதர், குளோரோபாரத்தில் கரையும். ஆல்கோஹாலில் 100 க்கு 90 கரையும்.

செய்கை:—மூத்திராவர்த்தனி.

உபயோகம்:—மார் அடைப்பு, இருமல், சுவாசகாசம், கஷ்டசுவாசம், தலைவலி, சந்துவாதம், குடைச்சல், ஒற்றைத்தலைவலி, கிட்னிதாபனம், இவைகளுக்கு கொடுக்க இது வெகு நல்ல மருந்து. சந்து வாதம், வாந்தி, கால்கையலிப்பு, வயிற்றுவலி இவைகளுக்கு கொடுக்க இது திவ்விய மருந்து. சோணி ஆட்டத்தின் நடுக்கலுக்கு கொடுக்க நல்ல மருந்து. இது கொடிய நஞ்சு. அளவுக்கு மேல் கொடுக்கலாகாது. ஜாக்கிரதையாய் கொடுக்கவேணும்.

அளவு:—இந்த எண்ணெய் 1 முதல் 2 துளிகள் வீதம் சீனியில் விட்டு கொடுக்கலாம். நைட்ரோ கிளிஸ்ரைன் டேப்லட் (Nitro Glycerin Tablet) 1 முதல் 2 கொடுக்கலாம்.

பரால்டிஹைட்—Paraldehoyde.

குணம்:—இந்த மருந்து நிறமற்ற திரவ ரூபமாயிருக்கும். ஈதரின் வாசனையுள்ளது. குளிர்ந்த ஜலத்தைவிட வெந்நீரில் சீக்கிரமாய் கரையும்.

செய்கை:—நித்திராகாரி, சமனகாரி.

உபயோகம்:—குளோரலை (Chloral) ப்போலவே இதை உபயோகிக்கலாம். ஆனால் இருதயநடையை குறைக்கச்செய்யாது. ஒற்றைத்தலைவலி, குடைச்சல், நித்திராபங்கம், பயித்தியம், சித்தப்பிரமை, மனோவியாதி சம

பக்த சர்வ ரோகங்களுக்கும் கொடுக்க நல்ல மருந்து. சுவாசகாசத்துக்கு 30 துளி வீதம் ½ (டு) அல்லது 1 மணி நேரத்திற்கு ஒரு தடவையாக கொடுக்கலாம்.

அளவு:—½ (டு) முதல் 2 திராம் கொடுக்கலாம்.

பாம்புக்கல் —Snake Bazoar.

விபரம்:—உபயோகம்:—கறுத்தும், மஞ்சளாயும், சாம்பல் நிறமாயும், வெள்ளைக் கோடுகளுள்ளதாயும் இருக்கும். பாம்பு கடித்த காயத்தில் இதை வைக்க விஷத்தை இழுத்து விடும். பின்பு பாலில் போட விஷத்தைக்கக்கும்.

பாம்போடானோ—Pambotano.

குணம்:—இது ஓர்வகை செடி.

செய்கை:—சுரஹரகாரி.

உபயோகம்:—இதின் எக்ஸ்டிராக்ட் லிக்விடம் (Extract Liquidum) 4 திராம் வீதம் மலைசுரத்திற்கு கொடுக்க நல்ல மருந்து.

பிக்ரிக் ஆஸிட்—Picric Acid.

குணம்:—இது பிரகாசமான இளமஞ்சள் நிறமாய், சிறிய கட்டிகளாய், வாயில் போட்டால் புளிப்போடு கூடிய கசப்பாயிருக்கும். ஜலத்தில் அற்பமாயும் ஆல்கோஹாலில் 100-க்கு 90 கரையும். சர்மத்திலும், வஸ்திரத்திலும் போட்டு தேய்த்தால் மஞ்சள் நிறமாகிவிடும்.

செய்கை:—விஷக்காற்றினுல் வரும் வியாதிகளைக் கண்டிக்கும்.

உபயோகம்:—முறைச்சுரம், விஷசுரம், விஷகாற்றின் மஜ்ஜதந்து வேதனை, ரக்தக்ஷீணரோகம், முதலியவைகளுக்கு கொடுக்கலாம். வெந்நீர் ரணம், அக்கினி ரணம் முதலியவைகளுக்கு மேலே போடலாம். ஆரம்ப கட்டி, கொப்பளம் இவைகளுக்கு மேலே போடலாம்.

அளவு:—¼ (வ). முதல் 4 கிறேன்ஸ் வீதம் கொடுக்கலாம்.

பாலி போடியம்—Paly Podium.

செய்கை:—கபஹரகாரி, மலகாரி, கர்ப்பவாதஹரகாரி.

உபயோகம்:—கபத்தைக் கண்டிக்கும். வயிற்றுப்பசத்தை நீக்கும்.

வயிற்று நோய் தீரும். பெருவியாதி, கருங்கால், கில்கள் ஆகிய இவற்றின் வியாதிகள் தீரும். குடலிலுள்ள துர்மலத்தை நீக்கும்.

இங்க்ளுவின்—Ingluvin.

குணம்:—உபயோகம்:—இது கோழியின் கல்லீரலிலிருந்து எடுக்கப்படுகிறது. இதை பெப்ஸினுக்கு (Pepsin) பதிலாக உபயோகிக்கலாம். கர்ப்பணிகளின் வாந்தி, அஜீர்ணம், மந்தாக்கினி இவைகளுக்குக் கொடுக்கலாம்.

அளவு:—10 முதல் 20 கிறேன்ஸ் கொடுக்கலாம்.

ப்ரோமோபாரம்—Bromoform.

குணம்:—இது பளுவான நிறமற்ற ஜலபதார்த்தம். இனிப்புள்ளது. காற்றுப்பட்டால் மஞ்சள் நிறமாகும். ஜலத்தில் சேராது. ஆல்கோஹால் ஈதர் இவைகளோடு கலக்கும்.

உபயோகம்:—கக்கிருமலுக்கு 2-5 துளி வீதம் பெரிய குழந்தைகளுக்கும், 1-3 துளி வீதம் சிறு குழந்தைகளுக்கும், 6-7 துளி வீதம் 7 வயதுக்கு மேல்பட்ட குழந்தைகளுக்கும், ஒரு அவுன்ஸ் ஜலத்தில் கலந்துக் கொடுக்கவும். கக்கிருமல் சம்பந்தமான புப்புஸதாபன ரோகத்திற்கும் கொடுக்க நல்ல மருந்து. அதிக அளவில் கொடுத்தால் ஆயாசம், மயக்கம், உண்டாகும்.

ப்ரோமைபின்—Bromipin.

உபயோகம்:—சாக்கைவலிக்கு இது சஞ்சீவி. இதை ஒரு தேக்கரண்டி பிரமாணம் கொடுத்தால் உடனே தணியும். நாள்படச்சாப்பிட்டால் முற்றிலும் குணமாகும்.

வாலிடால்—Validol.

வாலிடோலம்—Validolum.

மென்தால் வெலிரியானஸ்—Menthol Valerianas.

உபயோகம்:—இந்த மருந்து குதகசந்திக்கு சஞ்சீவி. 10 துளி முதல் 15 துளி வீதம் சீனியில் விட்டு கொடுக்கவும்.

யுகாலிப்டி ஓலியம்—Eucalypti Oleum.

குணம்:—இந்த எண்ணெயானது வெண்மஞ்சள் நிறமாயும் கர்ப்பூரவாசனையாயும் காரமானருசியும் வாயிலிட்டால் சில்லென்று இருக்கும்.

ஆல்கோஹாலில் கரையும்.

செய்கை:—அழுகுதலைத் தடுக்கும், முறை வியாதிரோதி, பூதி நாசனி, நஞ்சுடையதல்ல, சோணகாரி, சங்கோசனகாரி, அங்காகர்ஷண நாசகாரி.

உபயோகம்:—இருமல், க்ஷயரோகம், சுவாசகாசம் இவைகளுக்குக் கொடுக்க இது திவ்விய மருந்து. ஐடோபாரத்தோடு கலந்து கொருக்குக்கு மேலுக்கும், பிரமேகத்துக்கு நீர்த்தாரையின் மூலமாயும் உபயோகிக்கலாம். இந்த எண்ணெய் மூத்திரகுண்டிகாய் வீக்கத்திற்கு உள்ளுக்கும், காயம் முதலியவைகளுக்கு மேலுக்கும் உபயோகிக்கலாம். துர்மாமிசத்திற்கு மேலுக்கும் போடலாம்.

அளவு:—½ (?) முதல் 3 துளி கொடுக்கலாம்.

ரிஸோர்ஸினம்—Resorcinum.

குணம்:—இது வெண்ணிறமுடையது. ஜலம், ஆல்கோஹால், ஈதர் இவைகளில் கரையும்.

செய்கை:—அழுகுதலைத் தடுக்கும், சுரஹரகாரி, மேலுக்குப்போட்டால் விரணகாரி.

உபயோகம்:—குவைனைப்போல் சுரத்துக்கு கொடுத்தால் வியர்வையை உண்டாக்கி சுரத்தை நிறுத்தும். கிலேதமாக செய்து சஸ்திர வைத்தியத்தில் அழுகுதலைத் தடுக்கும் மருந்தாக உபயோகிக்கலாம்.

அளவு:—1 முதல் 5 கிறேன்ஸ் வீதம் கொடுக்கலாம்.

லூபுலினம்—Lupulinum—லூபுலின்—Lupulin.

குணம்:—இது வாசனையாயும், கசப்பாயும், மங்கல் மஞ்சள் நிறமாயுமிருக்கும்.

செய்கை:—பலகாரி, சமனகாரி, அற்பநித்திராகாரி, காமத்தைத் தணிக்கும், அதிகமாய் சாப்பிட்டால் நஞ்சாகும்.

உபயோகம்:—அஜீர்ணம், மந்தாக்கினி, நித்திராபங்கம், சூதகசன்னி, முறைக்காச்சல், கீல்வாதம், இந்திரிய ஸ்கலிதம், நீர்தாரை நரம்பின்நோய், சொட்டு மூத்திரம், பலஹீனம், சந்து வாதம் இவைகளுக்குக் கொடுக்க இது வெகு நல்ல மருந்து.

13

அளவு:—2 முதல் 5 கிறேன்ஸ் உருண்டையில் கொடுக்கலாம்.

எக்ஸ்ட்ராக்ட்டம் வைபர்னி ப்ருனிபோலி ப்ளுயிடம்
Extractum Viburni Prunifolii Fluidum.

குணம்:—இது ஓர் செடியின் பட்டையிலிருந்து எடுக்கப்படும் சத்து.

செய்கை:—அங்காகர்ஷணநாசகாரி, பலகாரி, மூத்திராவர்த்தனகாரி, சமனகாரி.

உபயோகம்:—அகால பிரசவம், பெரும்பாடு, ரத்தாசயத்தில் காணும் உதிரப்பெருக்கு, சூதகவயிற்றுவலி இவைகளுக்குக் கொடுத்து குணம் கண்டதுண்டு.

அளவு:—10 முதல் 15 துளி வீதம் கொடுக்கலாம்.

டைலியூடெட் ஹைட்ரோப்ரோமிக் ஆசிட்
Diluted Hydrobromic Acid.

விளக்கம்—குணம்—Phosphoric Acid ஐயும், Potassium Bromide ஐயும் சேர்த்து செய்யப்படுகிற இந்த திராவகத்தில் சுயம் Hydrobromic Acid இருக்கிறது. நிறமற்ற திரவரூபம். ஜலம் சேர்த்து (dilute)க் கொள்ள வேண்டும்.

செய்கை:—சித்திரகாரி, சமனகாரி, புரோமைட்டுக்கு சமானம். முகத்தில் பரு, வெடிப்பை உண்டாக்காது.

உபயோகம்:—தலைநோய், நரம்புகள் எக்கச்சக்கமாய் போதல், உதர வர்த்தன ரோகம், இவைகளுக்கு கொடுக்கலாம். புரோமைட் கொடுக்கும் வியாதிகளுக்கு இதைக்கொடுக்கலாம்.

அளவு:—15 முதல் 60 துளி வீதம் ஜலத்தில் கொடுக்கலாம்.

ஜாபோராண்டி—Jaborandi.

குணம்:—இது காரமாயும், கசப்பாயுமிருக்கும். இதின் உப்புக்கு Jaboridine என்று பெயர்.

செய்கை:—சுவேதகாரி, திரவகாரி, அபகர்ஷணகாரி, இருதயநடையை அதிகரிக்கச்செய்யும்.

உபயோகம்:—சுவாசகாசம், மதுமூத்திரம், நீர் கோவை, கீல்வாதம்,

மகோசரம், தாகம் இவைகளுக்குக்கொடுக்க இது கைகண்ட மருந்து. இது Belladonna & Atropine க்கு முறிவு மருந்து. மயிர் உதிரல் ரோகத்தில் மயிரை நன்றாய் வளரச்செய்யும். ஸ்திரீகளுக்கு பாலை அதிகரிக்க இதைக்கொடுப்பதுண்டு.

அளவு:—எக்ஸ்ட்ராக்ட்டம் ஜாபோராண்டி லிகுவிடம் Extractum Jaborandi Liquidum 5 முதல் 15 துளி வீதம் ஜலத்தில் கொடுக்கலாம். டிங்சர் Tincture 30 முதல் 60 துளி கொடுக்கலாம்.

ஜிங்கி ப்ரோமைடம்—Zinci Bromidum.

குணம்:—உபயோகம்:—இது வெண்மை நிறமுடைய தானியத்தை போன்றது. ஜலத்தில் கரையும். இது கொடிய நஞ்சு, காக்கைவலிக்கு இது நல்ல மருந்து. 2 கிரேன்ஸ் வீதம் தினம் 3 தடவைக் கொடுக்கலாம்.

அளவு:—3 முதல் 8 கிரேன்ஸ் கொடுக்கலாம்.

ஜெல்ஸிமி—Gelsemii.

குணம்:—இது ஓர் செடியின் வேர்.

செய்கை:—அங்காகர்ஷணநாசகாரி, சமனகாரி, சுரஹராகாரி, பலகாரி, ருதுவர்த்தனகாரி, ப்ரசவகாரி, ரக்த ஸ்தம்பனகாரி, நித்திராகாரி, முறை வியாதிரோதி, வேதனாசாந்தனி.

உபயோகம்:—மஜ்ஜாதந்து வேதனை, நரை யீரலைச்சூழ்ந்திருக்கும் சவ்வின் நோய், உன்மாதம், விரணசன்னி, காக்கைவலி, சூதகசன்னி, கக்கிருமல், மார்சளி, மூளையைச் சூழ்ந்திருக்கும் சவ்வின் ரோகம், நித்திராபங்கம், விஷசுரம், சீதசுரம், முறைக்காச்சல், சகலசுரங்கள், மாந்தசன்னி, விடாத காச்சல், நரை யீரல்க்கட்டி, இருமல், கிருச்சினம், சொட்டு மூத்திரம், சர்வாங்க வாதம், கூத்தாடும் சன்னி, மூளையின் வீக்கம், முதலியவைகளுக்கு இந்த மருந்து கொடுத்து குணம் கண்டதுண்டு. கண்தாரையை சுருங்கச் செய்ய உள்ளுக்குக் கொடுக்கவும் கண்தாரையை விரிக்க மேலுக்கு போடவும். அதிக அளவில் மருந்தை சாப்பிட்டால் புருவவேதனை, மயக்கம், விரல்களில் திமிர் சாணுதல், கர்ப்பாசயத்துக்குடைய ரோகம் இவைகள் உண்டாகும்.

அளவு:—எக்ஸ்ட்ராக்ட்டம் ஜெல்ஸிமி ப்ளுயிடம் Extractum Gelsemii Fluidum 1 முதல் 10 துளி வீதம் கொடுக்கலாம். டிங்சர் Tincture

5 முதல் 15 துளி வீதம் கொடுக்கலாம்.

ஆலிவ ஆயில்—Olive Oil.

குணம்:—இந்த எண்ணெய் தாவளமாய் கனத்து பிசுபிசுப்பாய் மஞ்சள் நிறமாயாவது பச்சைச்சாயலாகவாவது இருக்கும். தித்திக்கும். நாள்பட்டால் கார்த்துக்கெட்டுப்போகும்.

செய்கை:—போஷணகாரி, மலகாரி, பினிக்தகாரி, அந்தர்ஸ்நிக்தகாரி.

உபயோகம்:—நஞ்சு தின்றவர்களுக்குச் கொடுத்தால் அதைப்பிசிறிக் கொண்டு அன்னாசயத்தில் பிரவேசிக்க ஒட்டாமல் செய்யும். பூச்சுத்தைலங்கள், களிம்புகள் செய்யுமுறையில் இது சேர்க்கப்படும். சொறி, சிரங்கு, அக்னிவிரணம், வெந்நீர் ரணம் முதலிய சர்ம வியாதிகளுக்கு மேலுக்குப் போடலாம்.

அளவு:—½ (?) முதல் 1 அவுன்ஸ் வீதம் கொடுக்கலாம்.

ஸர்பேன்டேரியா—Serpentaria.

குணம்:—இது ஓர் செடியின் வேர். இதை வாயில் போட்டால் அதிக கசப்பாயும் காரமாயும் பரிமளமான கற்பூரவாசனையுடையதாயுமிருக்கும்.

செய்கை:—பலகாரி, உச்சாககாரி, கபஹரகாரி, மூத்திராவர்த்தனகாரி, ருதுவர்த்தனகாரி.

உபயோகம்:—புப்புஸதாபனம், நாள்பட்ட கபரோகம், அதிசாரசன்னிபாதத்தில் காணும் பலஹீனம், குரல்வளையில் காணும் துத்திரோகம், கீல்வாதம், சந்து வாதம் முதலியவைகளுக்குக் கொடுக்கலாம்.

அளவு:—சூர்ணம் 10 முதல் 15 கிரேன்ஸ், டிங்சர் Tincture ½ (?) முதல் 1 டிராம் கொடுக்கலாம்.

ஸல்போனல்—Sulphonal.

குணம்:—இதை வெந்நீரில் அதிகமாயும், குளிர்ந்த ஜலத்தில் கொஞ்சமாயும், குளோரோபாரம், ஈதர் இவைகளில் சீக்கிரமாயும் கரையும்.

செய்கை:—நித்திராகாரி, நித்திரையை மாத்திரம் பிறப்பிக்கும். ஸ்மிருதிபோதகாரி செய்கை இதற்கில்லை. (Hypnotic but not Anodyne.)

உபயோகம்:—நித்திரையை உண்டாக்க இது வெகு நல்ல மருந்து.

பயித்தியம், இருதய ரோகம், க்ஷயம் இவைகளில் காணுகிற நித்திராபங்கம், சுரம், பலஹீனம் இவைகளினால் உண்டாகும் நித்திரா பங்கம் இவைகளுக்கும், பித்தரோகம், மூத்திரக்குண்டிக்காயதாபனம், காக்கைவலி, பயித்தியம் இவைகளுக்கு நித்திராகாரியாக கொடுக்கப்படும். இது அபினியைப் போல் மல சிக்கலை உண்டாக்காது. 2 மணிக்கு ஒருமுறை 20 முதல் 60 கிறேன்ஸ் கொடுத்து பயித்தியம் குணமாயிற்று 7½ கிறேன்ஸ் வீதம் கொடுத்தால் க்ஷயரோகத்தின் வியர்வை நிறுத்தும். மதுமூத்திரரோகத்தில் மூத்திரத்திலிருக்கும் சர்க்கரையைக் குறைக்கும்.

அளவு:—10 முதல் 30 கிறேன்ஸ் கொடுக்கலாம்.

குளுஸிடம்—Glusidum.

குணம்:—அது வெண்மை நிறமான பஸ்மம். தித்திப்பாயிருக்கும். ஜலம், குளோரோபாரம், ஈதர் இவைகளில் 1கொஞ்சமாயும், லிக்கர் அமோனியாவில் பூர்ணமாயும் கரையும்.

செய்கை:—உபயோகம்:—மதுமூத்திரம், அதிஸ்தூலரோகம், ஈரலைப் பற்றிய ரோகங்கள், இவைகளுக்கு சர்க்கரைக்கு பதிலாக இதை உபயோகிக்கலாம். காஸ்காராஸெக்ரேடா, ஸாலிஸின் முதலிய உவட்டான மருந்துகளைக்கொடுக்கும்போது இதைச் சேர்க்கலாம். இதை அதிகமாய் சாப்பிட்டாலும் நஞ்சின் குணம் காட்டாது. 8 அவுன்ஸ் ஜலத்தில் ஒரு கிறேன் சேர்த்தால் தேவையான இனிப்பு இருக்கும், மதுமூத்திரரோகிகளுக்கு இதை காபி முதலிய பானங்கள் செய்துக் கொடுக்கலாம்.

கோல்லோடியன்—Collodion (Collodium.)

குணம்:—இது வெள்ளைத் திரவமாய் ஈதருக்குள்ள வாசனையோடிருக்கும். காற்றுப்பட்டால் சீக்கிரத்தில் உலர்ந்து விடும். மேலே ஏடு போல் படியும்.

செய்கை:—உபயோகம்:—இது வெட்டு காயம், விரணம், உதடு வெடிப்பு, முலைக்காம்பு வெடிப்பு, அக்கினி ரணம், அக்கி முதலியவைகளுக்கு கோழி இறகால் தடவி வர வெகு சீக்கிரத்தில் குணமாகும்.

லாமேல்லியா கோகேய்னியா—Lamellae Cocainae.

செய்கை:—உஷ்ணகாரி, ஜீர்ணகாரி.

உபயோகம்:—சுரேர்களுக்கு $\frac{1}{12}$ கிறேன் வீதம் பிரதிமணிக்கு அல்லது அடிக்கடி கொடுக்க நல்ல மருந்து. ஜலதோஷத்திற்கு 100-க்கு 4 வீதம் (ஜலம் 100 பங்குக்கு மருந்து 4 பங்கு) ஜலத்தில் கரைத்து மூக்கிலிடலாம். பிரமேகத்திற்கு 100-க்கு 2 வீதம் சேர்த்து பீச்சிட்டால் நோவு தணியும். காது வலிக்கு 100-க்கு 3 வீதம் சேர்த்து பீச்சிடலாம். பல்நோவுக்கு கர்ப்பூரம் 5, குளோரல் 5, கொகெயின் ஹைட்ரோகுளோரைட் 1, இவைகளைச் சேர்த்து உபயோகிக்கவேண்டியது. நேத்திரவைத்தியத்திலும், சஸ்திர வைத்தியத்திலும், தந்தவைத்தியத்திலும் இது உபயோகப்படுகிறது. யாத்திரை பண்ணுகிறபோது முதல் இதைச்சாப்பிட்டால் மூர்ச்சை வியாதி மறித்துப் போகும். அக்கினி ரணத்திற்கு போடலாம்.

டல்கமேரா—Dulcamara.

குணம்:—இது கசப்பாயும் நல்ல ருசியாயுமிருக்கும். இதின் உப்புக்கு ஸொலனைன் (Solanine) என்று பெயர்.

செய்கை:—நித்திராகாரி, விபதாபேதகாரி, மூத்திரவர்த்தனகாரி, சுவேதகாரி.

உபயோகம்:—இது சொறி, சிரங்கு, கரப்பான், சுண்டு முதலியவைகளுக்கும், நாட்பட்ட சருமவெடிப்புகள், குஷ்டம், நாட்பட்ட கீல்வாதம், புப்புஸத்தில் காணும் இருமல் இவைகளுக்கும் கொடுக்க நல்ல மருந்து.

அளவு:—Extract Liquidum எக்ஸ்ட்ராக்ட் லிகுவிடம் 20 முதல் 60 துளி வீதம் கொடுக்கலாம்.

டிஜிடாலின்—Digitalin.

செய்கை:—மூத்திரவர்த்தனகாரி, இருதய பலகாரி, காமவர்த்தினி.

உபயோகம்:—இருதய ரோகம், இந்திரிய ஸ்கலிதம், மதுபானிக்குக்காணும் பான்கி ரோகம், ரக்தப்பெருக்கு இவைகளுக்கு கொடுக்க திவ்விய மருந்து. காமத்தை அதிகரிக்க இதைக்கொடுக்கலாம்.

அளவு:—$\frac{1}{60}$ முதல் $\frac{1}{30}$ கிறேன் வீதம் அனுபானத்தில் கொடுக்கலாம்

தாலின்யா ஸல்பாஸ்—Thallinae Sulphas.

குணம்:—இது வெண்மஞ்சள் நிறமுடையது. ஜலத்தில் கரையும்.

செய்கை:—முறைவியாதி ரோதி, அழுகுதலைத்தடுக்கும், சுரஹாரகாரி.

உபயோகம்:—இதை 4 முதல் 8 கிறேன்ஸ் வீதம் பிரமேகத்திற்கும் அல்லது 150 மினிம்ஸ் ஜலத்தில் $2\frac{1}{2}$ கிறேன்ஸ் போட்டு பீச்சாங்குழலின் மூலமாய் பீச்சிடலாம். சந்நிபாத சுரம், விஷசுரம், முதலிய சுரங்களுக்கும் சுரஹாரியாக கொடுப்பது உண்டு.

அளவு:—3 முதல் 8 கிறேன்ஸ் வீதம் கொடுக்கலாம்.

தியோப்ரோமைன் ஸோடியோ ஸாலிஸிலேட்

Theobromine Sodio Salicylate.

குணம்:—இது வெண்மை நிறமுடையது. ஜலம் ஆல்கோஹால் இவைகளில் கரையும்.

செய்கை:—பலகாரி, மூத்திராவர்த்தனகாரி.

உபயோகம்:—நீர் கோவை, மகோதரம, நாள்ப்பட்ட மூத்திரக்குண்டிக்காய் தாபனம் இவைகளுக்கு இது எடுத்த மருந்து.

அளவு:—தினம் 3 தடவை 10 முதல் 20 கிறேன்ஸ் வீதம் சீனியில் கலந்து கொடுக்கலாம்.

ஸ்பார்டேய்னியா ஸல்பாஸ்—Sparteinae Sulphas.

குணம்:—இந்த பஸ்மம் நிறமற்ற கட்டிகளாயிருக்கும். ஜலத்தில் கரையும்.

செய்கை:—இருதயபலகாரி, மூத்திராவர்த்தனகாரி.

உபயோகம்:—டிஜிடேலிஸ் (Digitalis) யைக்கொடுக்கும் வியாதிகளுக்கு இதைக்கொடுக்கலாம். ஆனால் இதற்கு அதைப் பார்க்கிலும் வீரியமதிகம்.

அளவு:—$\frac{1}{4}$ முதல் 2 கிறேன்ஸ வீதம் கொடுக்கலாம்.

ஸ்பார்டீனா—Spartiena (Spartiene).

குணம்:—இது ஒர்விஷ உப்பு. ஆல்கோஹால், ஈதர், குளோரோபாரம் இவைகளில் கரையும். ஜலத்தில் கரையாது.

செய்கை:—உபயோகம்:—ஆத்மா ஒடுங்குகிற காலத்தில் இதைக் கொடுத்தால் உத்சாகப்படுத்தி சௌக்கிய ஸ்திதிக்குக்கொண்டுவரும்.

அல்ஹாஜி மௌரோரம்—Alhagi Maurorum.

குணம்:—இது ஒர்வித முட்செடியின் மேல் உறைந்திருக்கும் பனி. இது கற்கண்டுத்துண்டுகளைப் போலிருக்கும். கொஞ்சம் வெண்மஞ்சள் சாயலாயும் இனிப்பாயுமிருக்கும்.

செய்கை:—விரேசனகாரி.

உபயோகம்:—பித்தரோகத்தைக்கண்டிக்கும், இருமல், மார்வலி, ஒக்காளம், சூட்டைப்பற்றிய சுரம் இவைகளுக்குக் கொடுக்க நல்ல மருந்து. பசும் பாலில் கரைத்து குடிக்க தாது விர்த்தியாகும்.

அளவு:—10 முதல் 20 கிராம் வீதம் கொடுக்கலாம்.

தைராயடியம் ஸிக்கம்—Thyroideum Siccum.

குணம்:—இது ஆட்டின் விசை நரம்புகளினின்று எடுக்கப்படும் பஸ்மம். மங்கல் நிறமாயிருக்கும். காற்றுப்பட்டால் சில்லென்றுய் விடும்.

செய்கை:—உபயோகம்:—இதை சுவாசக்குழலுக்கு முன் குறுக்காய் ஓடியிருக்கும் மாமிசத்தில் காணும் தாபனரோகம், உன்மாதம். சொறி, தின்றுக்கொண்டேபோகும் ரணம், படர்தாமரை, கண்டமாலை, சுண்டு, விப்புருதி, நாள்பட்ட சர்மரோகங்கள் இவைகளுக்குககொடுக்கலாம்.

அளவு:—8 முதல் 10 கிரேன்ஸ் வீதம கொடுக்கலாம்.

த்யூஜா—Thuja.

செய்கை:—ருதுவர்த்தனகாரி, முறைவியாதிரோதி, சங்கோஷணகாரி.

உபயோகம்:—ஜலதோஷம், முறைசுரங்கள், மலேசுரம், சூதகக்கட்டு, இருமல், கீல்வாதம் இவைகளுக்கு கொடுக்க வெகு நல்ல மருந்து. மரு, சீழ்வடியும் ரணம், ஆசனத்தில் காணும் மருள் இவைகளுக்கு மேலுக்கு போடலாம்.

அளவு:—இதின் டிங்சர் (Tincture) 2 முதல் 5 துளி வீதம் கொடுக்கலாம்.

நாப்நலின்—Naphthalene.

குணம்:—இது வெண்மை நிறமுடைய புரைபோன்ற பில்லைகளான கட்டியாயும் பளிங்கமாயுமிருக்கும். ஆல்கோஹால், குளோரோபாரம், ஈதர் இவைகளில் கரையும். ஜலத்தில் கரையாது.

செய்கை:—அழுகுதலைத் தடுக்கும், கபஹரகாரி, உஷ்ணகாரி.

உபயோகம்:—இருமல், நீர்க்காசம், குழந்தையின் குடல் வியாதி இவைகளுக்குக் கொடுக்கலாம். அன்றியும் உடம்பின்மேல் ரணமாகாத எல்லா சர்மரோகங்களுக்குங்கொடுக்கலாம். இன்னும் குழந்தைக்கு காணும் பேதிக்கும், கிருமிகளை வெளிப்படுத்தவும், சொட்டு மூத்திரத்திற்கும் 2 கிரேன்ஸ் வீதம் தினம் 2-3 தடவை கொடுக்க குணமாகும்.

அளவு:—2 முதல் 10 கிரேன்ஸ் வீதம் 4-6 மணிக்கு ஓர் தடவைகொடுக்கலாம்.

ஜிங்சி லாக்டாஸ்—Zinci Lactas.

குணம்:—இது வெண்மை நிறமுடையது. ஜலத்தில் கரையும்.

செய்கை:—உபயோகம்:—இது காக்கைவலிக்கு கொடுக்க வெகு நல்ல மருந்து.

அளவு:—3 முதல் 30 கிரேன்ஸ் வீதம் கொடுக்கலாம்.

ஸாலால்—Salol-(Salolum-Phenyl Salicylate).

குணம்:—இது வெண்மைநிறமாயும், நல்ல வாசனையாயுமிருக்கும். ஜலத்தில் கரையாது. ஆல்கோஹால், ஈதர், குளோரோபாரம் இவைகளில் கரையும்.

செய்கை:—சுரஹரகாரி. அழுகுதலைத் தடுக்கும், பூதநாசனி.

உபயோகம்:—சந்துவாதத்திற்கு மாலையில் 8 கிரேன்ஸும், நடு இரவில் 16 கிரேன்ஸும் கொடுத்தால் நித்திரையை உண்டாக்கி நோயைத் தணிக்கும். பிரமேகத்திற்கு (Gonorrhoea) தினம் 3 தடவை 10 முதல் 30 கிரேன்ஸ் வீதம் உள்ளுக்குக் கொடுக்க திவ்விய மருந்து. இது நஞ்சின் குணத்தைக் காட்டாது. ஆனால் மூத்திரம் இருண்ட பச்சை நிறமாய் இறங்கும். கில்வாதத்திற்கு ஸாலால் 4, ஈதர் 4, கல்லோடியன் 30 இவைகளைச்சேர்த்து மேலே தடவி தேய்க்க குணமாகும்.

அளவு:—5 முதல் 15 கிறேன்ஸ் வீதம் கொடுக்கலாம்.

ஸிமிஸிப்யூஜா—Cimicifuga—(Cimicifuga Rhizoma.)

குணம்:—இது ஓர் செடியின் வேர் இது கசப்பாயிருக்கும்.

செய்கை:—ஜாடராக்கினி வர்த்தனகாரி, மூத்திரவர்த்தனகாரி, சுவேதகாரி, கபஹரகாரி, வேதனாசாந்தகாரி.

உபயோகம்:—கீல்வாதம், இடுப்புவலி, நரம்புவேதனை, சந்துவாதம், பாரிச்சியம், சூதகவலி, பக்கச்சூலை, சுரம் இவைகளுக்கு இந்த மருந்து கொடுக்க குணமாகும். அதிக அளவில் கொடுத்தால் வாந்தியாகும். கொஞ்சம் கொடுத்தால் இருதயத்திற்கு பலத்தைக்கொடுக்கும்.

அளவு:—எக்ஸ்ட்ராக்ட்டம் ஸிமிஸிப்யூஜா லிகுவிடம் (Extracutum Cimicifuga Liquidum) 5 முதல் 30 துளி வீதமும், டிங்சர்-Tincture-ல் 30 முதல் 60 துளி வீதமும் கொடுக்கலாம்.

ஸினிகா—Senega.

குணம்:—இது ஓர் செடியின் வேர். வாயில் வேரைப்போட்டால் முதலில் தித்திப்பாயும் பிறகு கசப்பாயுமிருக்கும். இதில் Polygallic Acid என்னும் காடி இருக்கிறது.

செய்கை:—கபஹரகாரி, மூத்திரவர்த்தனகாரி, சுவேதகாரி, ருதுவர்த்தனகாரி, அதிக அளவில் வமனகாரி, விரேசனகாரியாகும்.

உபயோகம்:—சூதகக்கட்டு, சூதகவலி, சுவாசக்குழலின் தாபனம், சுவாசகாசம், கீல்வாதம் இவைகளுக்குக் கொடுக்கலாம். நீர்க்கோவை, இருமல் இவைகளுக்கு எடுத்த மருந்து.

அளவு:—தூள் 10 முதல் 20 கிறேன்ஸ், டிங்சர் (Tincture) $\frac{1}{2}$ (?) முதல் 1 திராம் வீதம் கொடுக்கலாம்.

ஸிரை ஆக்ஸலாஸ்—Cerii Oxalas (Cerium Oxalate.)

குணம்:—இது ஓர் வெள்ளை நிறமான பஸ்மம். வாசனையும் ருசியுமில்லை. கறியுப்புத் திராவகத்தில் கரையும். ஜலத்திலும் ஆல்கோஹாலிலும் கரையாது.

செய்கை:—நரம்பின்பலகாரி (Nervous Tonic), அன்னாசயசமனகாரி.

உபயோகம்:—வலிகுன்மம். வாந்திகுன்மம், குன்மம் 8-க்கும் இது சஞ்சீவி. கர்ப்பிணிகளின் வாந்தி, தோணியாட்டத்தின் வாந்தி, க்ஷயம், சூதக சன்னி இவைகளுக்கு கொடுக்க வெகு நல்ல மருந்து.

அளவு:—2 முதல் 10 கிறேன்ஸ் வீதம் கொடுக்கலாம்.

ப்யூகஸ் வெஸிகலோஸஸ்—Fucus Vesicolosus.

குணம்:—இது ஓர்வித செடி. உப்பு கறித்துக்கொண்டிருக்கும். இதில் ஐயோடைன், ப்ரோமைன் என்னும் உப்புகளிருக்கின்றன.

செய்கை:—சோபாநாசகாரி.

உபயோகம்:—வீக்கம், அதிஸ்தூலரோகம் இவைகளுக்கு இது சஞ்சீவி. அதிஸ்தூலரோகத்தில் உண்டாயிருக்கிற கொழுப்பைக் கரைத்து தேகத்தை வாட்டிவிடும். பேதி, குன்மம் இவைகள் உண்டுபண்ணாது. இதற்கு Antifat என்று பெயர் உண்டு.

அளவு:—எக்ஸ்ட்ராக்ட் (Extract) 3 முதல் 5 கிறேன்ஸ் வீதமும், எக்ஸ்ட்ராக்ட்டம் லிகுவிடம் (Extractum Liquidum) 1 திராம் வீதமும் கொடுக்கலாம்.

ஸைப்ரிபிடின்—Cypripedin.

குணம்:—இது ஓர் செடியின் உலர்ந்த சத்து.

செய்கை:—அங்காகர்ஷணநாசகாரி.

உபயோகம்:—பயித்தியம், பித்தாதிகத்தினால் பயித்தியம், சூதகக்கட்டு, சூதகசன்னி, காக்கைவலி, இந்திரியஸ்கலிதம் இவைகளுக்கு கொடுக்க இது வெகு நல்ல மருந்து.

அளவு;—1 முதல் 5 கிறேன்ஸ் வீதம் மாத்திரை ரூபமாய்க் கொடுக்கலாம்..

ஸிட்லிட்ஜ் பவுடர்—Seidlitz Powder.

செய்முறை:—ரோஸல்சால்ட் (Rochelle Salt) 2 திராம்ஸ் பைகார்போனேட் ஆப் சோடா (Bicarbonate of Soda) 40 கிறேன்ஸ் இவைகளைச் சேர்த்து வைத்துக்கொள்க. இதற்கு ஸிட்லிட்ஜ் பவுடர் என்று பெயர். ஆ

கலவை உப்பை முழுவதும் ½ (ழ) பைன்ட் ஜலத்தில் கலந்து, ½ (ழ), கிராம் டார்டாரிக் ஆஸிட் என்னும் (புளிப்பு) உப்பை சேர்த்தால் பொங்கும். அப்போதே குடிக்க வேண்டியது. சௌக்கியமாய் உபத்திரவமில்லாமல் பேதியாகும்.

ஸோடி ஹிப்பியூராஸ்—Sodii Hippuras.

குணம்:—இந்த பஸ்மம் வெண்மை நிறமுடையது. ஜலத்தில் கரையும்.

செய்கை:—உபயோகம்:—சந்துவாதம், கல்லடைப்பு ரோகம் இவைகளில் மூத்திரத்திலிருக்கும் கல்லே கரைந்து விடும்.

அளவு:—5 முதல் 30 கிறேன்ஸ் வீதம் ஜலத்தில் கரைத்து கொடுக்கலாம்.

எக்ஸ்டாரக்ட்டம் ஸ்ட்ரோபாந்தி—Extactum Strophanthi.

குணம்:—இது ஓர் கொடியின் விதை. இதின் சத்து கசப்பாயிருக்கும். ஈதர், ஆல்கோஹால் இவைகளில் கரையும்.

செய்கை:—இருதயபலகாரி, உச்சாககாரி, மூத்திராவர்த்தனகாரி.

உபயோகம்:—டிஜிடெலிஸைப்போலவே இதையும் கொடுக்கலாம். நீர்கோவைக்கு அதை விட இது நல்ல மருந்து. நரையீரல் தாபனம் (சுரக்கட்டி), நாசிகாத்துவார தாபனம் இவைகளுக்கு ஸ்மிருதிரோதகாரியாக மேலுக்கு உபயோகிக்கலாம்.

அளவு:—⅛ (வ) முதல் 1 கிறேன் வீதம் கொடுக்கலாம்.

ஸிட்ரைன் ஆயின்ட்மென்ட்—Citrine Ointment.

உபயோகம்:—இதை சர்மரோகங்கள். ஆறுத ரணம், அழுரணம், கண்ணின் புழுவெட்டு இவைகளுக்கு உஷ்ணகாரியாகவும், வியதாபேதகாரியாகவும் உபயோகிக்கலாம். குழந்தை முதலிய மெலிந்த தேகம் பிரகிருதியுடையவர்களுக்குக் காணுகிற சர்மவியாதிகளுக்குப் போட இது நல்ல களிம்பு. நாசிகாதுவாரத்தில் உபயோகிக்கலாம்.

ஹைட்ராஸ்டிஸ் ரைஜோமா—Hydrastis Rhizoma.

குணம்:—இது கசப்பாயிருக்கும். இதின் உப்புக்கு Hydrastin என்று பெயர். இது காரமுள்ள உப்பு.

செய்கை:—பலகாரி, ஜாடராக்கினி வர்த்தனகாரி, வியதாபேதகாரி, மூத்திரவர்த்தனகாரி, உஷ்ணகாரி, சங்கோசனகாரி, மலகாரி.

உபயோகம்:—அஜீர்ணம், இருமல், ஜலதோஷம், மலசிக்கல், மேக வெட்டை, இவைகளுக்கு கொடுக்க இது கைகண்ட மருந்து. ரணம், சொரு க்கு முதலியரணங்களுக்கு மேலேப்போடலாம். ஸ்திரீகளின் வெட்டை க்கு ஜலத்தில் கரைத்துப் பீச்சலாம். முகம் மூக்கு இவைகளில் மேகரண ம் காணுதலுக்கு ஜலத்தில் கரைத்து கழுவலாம். நீர்தாரையில் காணும் வெடிப்புக்கு ஜலத்தில் கரைத்து போடலாம். ரக்த பீனசத்திற்கும் பெரும்பாடுக்கும் கொடுக்க இது எடுத்த மருந்து. அதிக வியர்வை ரோக த்திற்கு உள்ளுக்குக் கொடுக்கலாம்.

அளவு:—எக்ஸ்ட்ராக்ட்டம் லிகுவிடம்-Extractum Liquidum—5 முதல் 15 துளி அல்லது 25, Tincture-டிங்சர் ½ (௨) முதல் 1 டிராம், வீதம் ஜலத்தில் கலந்துக்கொடுக்கலாம்.

ஹைட்ராஸ்டிஞ—Hydrastina

குணம்:—இது கசப்பாயிருக்கும். ஜலத்தில் கரையாது. ஈதர் ஆல் கோஹால் இவைகளில் கரையும். குளோரோபாரத்தில் கொஞ்சமாய் கரை யும்.

செய்கை:—உபயோகம்:—இதை முக்கியமாய் சந்நிபாதசுரங்களுக்கு கொடுக்க நல்ல மருந்து.

அளவு:—¼ (௳) ½ (௨) கிரேன் வீதம் கொடுக்கலாம்.

ஹைட்ரர்ஸ்டினைனி ஹைட்ரோகுளோரிடம்
Hydrastininae Hydrochloridum.

உபயோகம்:—கர்ப்பாசயத்தினின்று உண்டாகும் ஓர் வித வெள் ளை, கர்ப்பாசயதாபனம், மாதாந்திரருதுகாலத்தில் அதிகமாய் ரக்தம் காணு தல், நீர்த்தாரையின் மூலமாய் வடிகிற ர்க்தப்பெருக்கு, க்ஷயரோகத்தில் இரவில்காணும் அதிவியர்வை இவைகளுக்கு கொடுக்க இதுதிவ்விய மருந்து.

அளவு:—¾ (ஹ) முதல் 1½ (க௨) கிரேன்ஸ் வீதம் கொடுக்கலாம்.

பாஸ்பேட் ஆப் ஐரன்—Phosphate of Iron.

குணம்:—இது நீலவர்ணமாயும் தூளாயுமிருக்கும். வாசனை இராது.

றப்பும் புளிப்புங்கலந்த ருசியாயிருக்கும். நாள்பட வைத்தால் இளம் பச்சை நிறமாய்விடும். ஹைட்ரோகுளோரிக் ஆஸிட்டில் கரையும், ஜலத்தில் கரையாது.

செய்கை:—உபயோகம்:—பலகாரி, ரக்த க்ஷீணரோகம், பலஹீனம், அஸ்திரவரோகம், மது மூத்திரம், சூதகக்கட்டு, அஜீர்ணம் இவைகளுக்கு கொடுக்கலாம். ஜீர்ணக்கிரியை அதிகப்படுத்தி உற்சாகப்படுத்தும்.

அளவு:—5 முதல் 10 கிரேன்ஸ் சீனியில் கொடுக்கலாம்.

எர்காட்—Ergot.—(Ergota.)

குணம்:—இது ஓர்வித தானியம். கோதுமை அரிசி போலிருக்கும். கருப்பு நிறம். வாசனையுள்ளது.

செய்கை:—பிரஸவகாரி, ருது வர்த்தனகாரி, சங்கோசனகாரி, ரக்த ஸ்தம்பனகாரி. விடாமல் சாப்பிட்டால் அஜிரணம், இசிவு, சந்நி இவைகளை உண்டாக்கும்.

உபயோகம்:—இதற்கு கர்ப்பப்பையைச் சுருக்கச்செய்கிற குணமிருப்பதால் பிரசவவேதனை மந்தமாகி சிசுவாவது அல்லது நஞ்சாவது வெளிப்படத் தாமதிக்கும்போது இதைக்கொடுத்தால் வேதனையைப் பிரபலப்படுத்தி கர்ப்பாசயத்திலிருப்பதை சீக்கிரத்தில் வெளிப்படுத்தும். இதை கொடுக்கும்போதெல்லாம் பெரும்பாலும் குழந்தை இறந்து ஜனிப்பதுண்டு. இது வேதனையைப் பிறப்பிக்காது. ஆனால் மந்தவேதனையைப் பிரபலப்படுத்தும். பிரசவவேதனையில் காணும் பெரும்பாட்டிற்கும் கொடுக்கலாம். அன்றியும் சூதகக்கட்டு, வெள்ளை விழுதல், சூதகப்பாண்டு, கருப்பை தடித்துப்போகுதல், நீர் அடைப்பு, சொட்டு மூத்திரம், பிரமேகம், தந்திமேகம், இந்திரிய ஸ்கலிதம் இவைகளுக்குக்கொடுத்து கைகண்டதுண்டு. அன்றியும் ரக்த சிலேஷ்ம ரோகம், ரக்த மூத்திரரோகம், ரக்த பீநஸம், ரக்த வாந்தி, முள்ளந்தண்டின் தாபனம். விக்கல், இவைகளுக்கு கொடுக்க நல்ல மருந்து. அதுமல்லாமல் க்ஷயத்தில் காணும் வியர்வை, நரம்பு வேதனை, மது மூத்திரம் இவைகளுக்கு டிங்சரில் (Tincture) 30 துளி வீதம் 3 மணிக்கு ஓர் தடவை கொடுக்கலாம்.

அளவு:—20 முதல் 60 கிரேன்ஸ் தூள். டிங்சர் (Tincture) 10 முதல்

60 துளி. Extact Liquidum 10 முதல் 35 துளி, Extract 2 முதல் 8 கிறேன்ஸ் வீதம் கொடுக்கலாம்.

பொடாஸியம் ஐயோடைட்—Potassium Iodide.

குணம்:—உப்பு கறிக்கும். கசப்பாயும் காரமாயும் இருக்கும். ஜலம், ஆல்கோஹால், கிளிஸிரையின் இவைகளில் கரையும்.

செய்கை:—வியதாபேதகாரி, சோபாநாசகாரி, மூத்திராவர்த்தனகாரி, கபஹரகாரி, மேலுக்குப் போட்டால் ரணகாரி.

உபயோகம்:—இது ஐயோடினைப் பார்க்கிலும் சாந்தமானது. மேகரணம், கண்டமாலே, மண் ஈரல் தாபனம், நீர்க்கோவை, அதிவியர்வை, சந்துவாதம், கீல்வாதம், இருமல், மணிக்குடல் ரோகம், சுவாசகாசம், நாடி-நரம்புரோகங்கள், மார்அடைப்பு, இடுப்பு வலி, சருமத்தில் காணும் கட்டிகள், மூத்திரக் குண்டிக்காய்தாபனம், முதலியவைகளுக்கு கொடுத்து சௌக்கியமானதுண்டு. இவைகளுக்கு வியாதிக்குத்தக்கபடி உள்ளுக்காவது மேலுக்காவது உபயோகிக்கவேண்டியது. குவைனுடன் கலந்து விளாவின கந்தகத்திராவகத்தில் சேர்த்து மேற்படி ரோகங்களுக்குக் கொடுக்கலாம். அதிக நாள் சாப்பிட்டால் ஸ்திரீகளின் ஸ்தன்னியங்களும், புருஷருடைய பீஜங்களும் சுஷ்கிக்கும். மருந்து சாப்பிடுகையில் முகம் மினுக்குதல், தலை நோவுதல், குமட்டல், வாந்தி இவைகள் கண்டால் மருந்து தேகத்தில் ஊறினதற்கு அடையாளம், உடனே மருந்தை நிறுத்தவும்

அளவு:—5 முதல் 20 கிறேன்ஸ் வீதம் அனுபானத்தில் கொடுக்கவும்.

கார்பாலிக் ஆஸிட்—Carbolic Acid.

குணம்:—இது ஊசி கம்பிகள் போல் வெளுத்திருக்கும். சூடுபட்டால் காற்றிலிருக்கிற ஜலத்தை கிரகித்து எண்ணெய்போல் திரவமாகி விடும். சாராயத்திலும், தேனிலும், கிளிஸிரீனிலும் கரையும். ஜலத்தில் கொஞ்சமாய் கரையும்

செய்கை:—விரணகாரி, உச்சாககாரி, சோணகாரி, பூதநாசகாரி, அழுகுதலைத்தடுக்கும், ஸ்மிருதிரோதகாரி, கிருமிநாசகாரி, சமனகாரி.

உபயோகம்:—வாந்தியை நிற்க இதைக்கொடுக்கலாம். ரணம், சுண்டு, சொறி, சிரங்கு, சர்மரோகங்கள், க்ஷயம், இருமல், கக்கிருமல், வயிற்றுப்

ஸ்பாருமஸ், சந்நிபாத சுரம், முதலியவைகளுக்கு உள்ளுக்குக் கொடுக்கலாம். 1 அவுன்ஸ் கிளிஸிரீனில் 1 கிறேன் சேர்த்து தொண்டை ரணத்திற்குத் தடவலாம். 1 அவுன்ஸுக்கு 2 கிறேன்ஸ் கலந்து தொண்டை ரணத்திற்கு கொப்பளிக்கலாம். 1 அவுன்ஸுக்கு 15-30 கிறேன்ஸ் வீதம் கலந்து ரணங்களுக்கும், ராஜப்பிளவை, சொறி, சிரங்கு முதலியசர்மரோகங்களுக்கும் கிலேசமாக உபயோகிக்கலாம். கர்ப்பிணிகளுக்கு காணுகிற வாந்திக்கு 1 அவுன்ஸ் ஜலத்தில் 1 கிறேன் மருந்தைச் சேர்த்து உள்ளுக்குக் கொடுக்கலாம். நின்றுக்கொண்டேபோகிற ரணத்திற்கு இதின் களிம்பையாவது பிளாஸ்திரியாவது மேலே போடலாம்.

அளவு:—1 முதல் 2 கிறேன்ஸ் வீதம் கொடுக்கலாம்.

☞ கார்பாலிக் ஆசிட்—(Carbolic Acid) இந்த ஆசிட்டில் 5 விதங்களுண்டு. நம்பர் 1 ஆசிட்-இது கட்டிகளாயிருக்கும். ஜலத்துடனும் எண்ணெயுடனும் கரையும். சத்திர வைத்தியத்தில் அழுகுதலைத் தடுக்கும் மருந்தாக உபயோகிக்கலாம். நம்பர் 2 ஆசிட்-இது கட்டிகளாகவும் ஜலரூபமாயும் ஜலத்தில் கரையக்கூடியதாயுமிருக்கும். ஜலம், எண்ணெய் இவைகளுடன் சேர்த்து ரணங்களுக்குப்போடலாம். நம்பர் 3 ஆசிட்-இது நிறமற்றதாயும் ஜலத்தில் கரையக்கூடியதாயுமிருக்கும். வியாதிஸ்தர்கள் இருக்கும் அறையில் பூதநாசினியாக உபயோகிக்கலாம். நம்பர் 4 ஆசிட்-இது நிறமற்றதாயும் ஜலத்தில் கரையக் கூடியதாயுமிருக்கும். இதில் கிளிஸிரிக் ஆசிட் இருக்கிறது. பூதநாசினியாக உபயோகிக்கலாம். நம்பர் 5 ஆசிட்-இது ஜலரூபமாயிருக்கும். மங்கலான சிவந்த வர்ணமாயிருக்கும், சத்திர வைத்தியத்தில் உபயோகிக்கலாம்.

கிளிஸிரைன்—Glycerine—(Glycerinum.)

குணம்:—இது சர்க்கரைப்பாகுபோல் தடித்து துல்லியமாய் இனிப்பாய் வாசனையில்லாமலிருக்கும். ஜலம், ஆல்கோஹால் இவைகளில் கரையும்.

செய்கை:—சினிக்தகாரி, பலகாரி, அழுகுதலைத்தடுக்கும், மலகாரி.

உபயோகம்:—இதை விளாவாமல் உபயோகித்தால் ரணமாகி விடும் இதை விளாவி, ஆசனம் அல்லது இதர வெடிப்பு, சுண்டு, சொறி, சிரங்கு. நமட்டு சிரங்கு, முலைக்காம்பு வெடிப்பு, படுக்கை ரணம், முதலிய எல்லாத் தோலைப்பற்றிய வியாதிகளுக்கு மேலுக்குப் போட்டால் குணமுண்டு. கும்

பினளை, தோலின் வறட்சி இவைகளுக்கும் போடலாம். ஆனால் இவைக ளுக்கு எல்லாம் கிளிஸரினை 1 பங்கை, 3 பங்கு ஜலத்தில் விளாவி உபயோ கிக்கவேண்டியது. இதின் போல்ட்டிஸை $\frac{1}{14}$ அல்லது $\frac{1}{16}$ பங்கு வீதம் உபயோகித்தால் சருமத்தை மெதுவு படுத்தும். சலதோஷ சுரத்தில் மூக்கில் இந்த மருந்தைத் தடவினால் சலதோஷம் நீங்கி சுரம் குணமா கும். இருமலுக்கு இதை உள்ளுக்குக் கொடுக்கலாம். மலபந்தத்திற்கு 1-2 திராம் வீதம் ஆசனவழியாய் பீச்சிடலாம். 1-2 திராம் வீதம் ஆசனக் குளிகையாகவும் உபயோகிக்கலாம். அஜீர்ணத்திற்கு 1-2 திராம்ஸ் வீத மாகவும், குழந்தைகளுக்குக் காணும் சீதபேதிக்கும், ரக்த மூலத்திற்கும் ஒரு திராம் அளவாகவும், அன்னத்துவேஷம், க்ஷயத்தில் காணும் இருமல் இவைகளுக்கு உள்ளுக்குக்கொடுக்கலாம்.

அளவு:—1 முதல் 2 திராம் கொடுக்கலாம்.

போடாஸியம் க்ளோரேட்—Potassium Chlorate.

குணம்:—இந்த உப்பு தகடுகளாகவும், வெள்ளையாயும் வாயில் போட் டால் சில்சில் வென்றுமிருக்கும். ஜலத்தில் கொஞ்சம் கரையும். கந்த கத்தோடு சேர்த்து அரைக்கக்கூடாது. அரைத்தால் வெடிக்கும். அதி னால் மோசம் சம்பவிக்கும்.

செய்கை:—மேலுக்குப்போட்டால் உஷ்ணகாரி, உள்ளுக்குக் கொடு க்க சீதளகாரி, மூத்திராவர்த்தனகாரி, வியாதாபேதகாரி, அதிகமானால் நஞ்சு.

உபயோகம்:—சந்நிபாத சுரம், ரக்த மசூரிகாரோகம், போடகசுரம், நீர்கோவை, இருமல், க்ஷயம், அஜீர்ணபேதி, பித்தபாண்டு, கிரந்தி, ரசப் பிடிப்பு (ரசவேகம்), அழிப்புண், சுவாசக்குழல் தாபனம், பிரமேகம், கண்ட மாலை, மேக ரணம், முதலியவைகளுக்கு கொடுக்க இது வெகு நல்ல மரு ந்து. வாய் ரணத்திற்குக் கொப்பளிக்கிற நீருகவும், சயித்தியக்கட்டிகளு க்கு கழுவு நீருகவும் நீர்ப்பையில் உண்டாய் இருக்கும் கெட்ட நீரை வெளி யாக்கி சுத்தி செய்ய நீர்தாரையில் அடிக்கும் மருந்தாகவும் 4 அவுன்ஸ் ஜல த்தில் ½ திராம் மருந்தைச்சேர்த்து கரைத்து உபயோகிக்கலாம்.

அளவு:—5 முதல் 15 கிரேன்ஸ் வீதம் ஜலத்தில் கொடுக்கலாம்.

போடாயஸிம் பேர்மங்கனேட்—Potassium Permanganate.

குணம்:—இந்த உப்பு இருண்ட ஊதா நிறமான ஜொலிக்கிற நீண்ட சிறு கட்டிகள், தித்திப்பாயும் துவர்ப்பாயும் கலந்த சுவையையுடையது. குளிர்ந்த ஜலத்தில் கொஞ்சமாயும், வெந்நீரில் அதிகமாயும் கரையும்.

செய்கை:—உஷ்ணகாரி, பூதநாசனி, அழுகுதலைத் தடுக்கும், வியதாபேதகாரி, அர்ப்பாணகாரி.

உபயோகம்:—பாண்டு, சன்னிபாதம், பேதி இவைகளுக்கு இதைக் கொடுக்கலாம். ரணம், வித்திருதி, குரல்வளையில் காணும் துத்தி ரோகம், கர்ப்பமேகம், பாம்புக்கடி இவைவகளுக்கு மேலுக்கு கிலேதமாக செய்தாவது அல்லது தூளாவது போடலாம். பிரமேகத்திற்கு 1 அவுன்ஸ் ஜலத்தில் ½ கிறேன் மருந்தைச் சேர்த்துப் பீச்சிடலாம். தொண்டைரணத்துக்கு இதைக் கொப்பளிக்கலாம். சதைத்தின்னும் ரணத்திற்கும் அஸ்தி ரணத்திற்கும் மேற்சொன்ன ஜலத்தால் கழுவலாம். சூதகக்கட்டு ரோகம் காணுமுன் இந்த மருந்தை ½ முதல் 2 கிறேன்ஸ் வீதம் தினம் 3-4 தடவை கொடுத்தால் இந்த வியாதி உண்டாகாது.

அளவு:—1 முதல் 3 கிறேன்ஸ் வீதம் கொடுக்கலாம்.

படிகாரம்—சீனகாரம்—Alum—ஆலம்.

குணம்:—இது வெளுப்பாயும், கட்டியாயும், தித்திப்பு புளிப்பு துவர்ப்பு போடுகூடிய ருசியுள்ளதாயுமிருக்கும். ஜலத்தில் கரையும். காற்றுப்பட்டால் கட்டிகளின்மேல் தூள் போல் படியும்.

செய்கை:—சங்கோசனகாரி, ரக்த ஸ்தம்பனகாரி, அழுகுதலைத் தடுக்கும், வமனகாரி.

உபயோகம்:—ரக்த பித்தம், ரக்த பெருக்கு, அஜீர்ணபேதி, சீதபேதி, மதுமூத்திரம், ஈளை, கபம் விழுதல், இருமல், கக்கிருமல், நீரிழிவு, சுவாசகாசம், இவை முதலியவைகளுக்கு கொடுக்க இது திவ்விய மருந்து. மூலவியாதி, காயம், நாசி, மலக்குடல் இவைகளிலிருந்து காணுகிற ரக்த ஒழுக்கு இவைகளுக்கு இந்த மருந்தை ஜலத்தில் கரைத்து மேலுக்கு உபயோகிக்கலாம் நேத்திர ரோகங்களுக்கு கிலேதமாகவும், உண்ணாக்குத் தளர்ச்சி, குரல் வளையில் காணும் ரோகம், நாக்கின் அடியில் காணும் தாபனம்,

வாய் ரணம், வாய் வெக்காடு, தொண்டை ரணம், ஈறு ரணம் முதலியவைகளுக்கு கொப்பளிக்கும் ஜலமாகவும்; பிரமேகம், கர்ப்ப மேகம், பெரும்பாடு, மலக்குடல் விழுதல், மூத்திரப்பை ரோகம், இவைகளுக்கு பீச்சாங்குழலால் அடிக்கும் ஜலமாகவும் உபயோகிக்கலாம். அதிகமாய்ச் சாப்பிட்டால் குமட்டல், வாந்தி, வயிற்றுக்கடுப்பு முதலிய துர்குணங்கள் உண்டாகி வயிறு புண்ணாகிவிடும்..

அளவு:—5 முதல் 10 கிறேன்ஸ் வீதம் உள்ளுக்குக் கொடுக்கலாம். 10 முதல் 15 கிறேன்ஸ் வீதம் தினம் 3 தடவை பெரும்பாடுக்கு உள்ளுக்குக் கொடுக்கலாம்.

படிகாரம் வியாதிகளுக்கு பிரயோகிக்கும் விதிகளும் அளவுகளும் அடியில் காண்க.

வியாதிகளின் பெயர்கள்	மருந்தின் கலவை அளவு	பிரயோகிக்கும் விதிகள்
வாய் ரணம் தொண்டை ரணம் முதலியவைகள்.	1 அவுன்ஸ் ஜலத்தில் 10 கிறேன்ஸ் சேர்க்கவும்.	வாயைக் கொப்பளிக்கவும்.
கர்ப்பமேகம், மேக வெட்டை முதலியவைகள்.	1 அவுன்ஸ் ஜலத்தில் 3 கிறேன்ஸ் சேர்க்கவும்.	பீச்சாங்குழலால் பீச்சிடவும்.
நாசிகாரோகங்கள்.	1 அவுன்ஸ் ஜலத்தில் 4 கிறேன்ஸ் சேர்க்கவும்.	ஷை ஷை
ரக்த பீனசரோகம், தொப்புள் புண் முதலியவைகள்.	½ கிறேன் கோதுமைமாவுடன் 3 கிறேன்ஸ் சேர்க்கவும்.	பொடியாக முகர அல்லது தூவவும்.
நேத்திர ரோகங்கள்.	1 அவுன்ஸ் ஜலத்தில் 2 முதல் 6 கிறேன்ஸ் சேர்க்கவும்.	கண்ணி விடவும், துணியை நனைத்துப்போடவும்.

ஈதில் கார்பமேட்—Ethyl Carbamate.

குணம்:—இதற்கு ஈதரைப்போன்ற வாசனை யுண்டு. ஜலம், ஆல்கோ

ஹால், ஈதர் இவைகளில் கரையும். இது வெண்மை நிறமுடைய கட்டிகள்.

செய்கை:—நித்திராகாரி.

உபயோகம்:—உன்மாதம் (Mania), பித்தரோகம், விரணசந்நி, நித்திராபங்கம், இவைகளுக்கு கொடுக்கலாம். குழந்தைகளுக்கு கொடுக்க தகுதியான மருந்து.

அளவு:—15 முதல் 30 கிறேன்ஸ் ஒரு அவுன்ஸ் ஜலத்தில் கொடுக்கலாம்.

யூபோரைன்—Euphorine.

குணம்:—இது வெண்மை நிறமுடையது. ஆல்கோஹாலில் கரையும், ஜலத்தில் கரையாது.

செய்கை:—சுரஹரகாரி, வேதனைசாந்தனி, அழுகுதலைத் தடுக்கும்.

உபயோகம்:—கீல்வாத ரோகத்திற்கு எடுத்த மருந்து. பலவித வாத ரோகங்களுக்குக் கொடுக்க தகுதியான மருந்து.

அளவு:—5 முதல் 25 கிறேன்ஸ் வீதம் ஆரம்பித்து 30 கிறேன்ஸ் வரையில் தினம் கொடுக்கலாம்.

டைலூட் ஹைட்ரோஸியானிக் ஆஸிட்
Diluted Hydrocyanic Acid.

குணம்:—இந்த திராவகம் நிறமில்லாத ஜலரூபமான ஓர்வித வாசனையுள்ள பதார்த்தம்.

செய்கை:—சமனகாரி, அங்காகர்ஷணநாசகாரி, வேதனைசாந்தகாரி, கொடிய நஞ்சு.

உபயோகம்:—இது மெத்த விஷமுள்ள திராவகம். இது வெகு ஜாக்கிரதையாய் கொடுத்தால் நீடித்த இருமல், நரம்புவேதனை, இருதயரோகம் குலை எரிவு, இரைப்பையின் இசிவு, நெஞ்சிசிப்பு, சுவாசகாசம், க்ஷயம், கக்கிருமல், சந்து வாதம், கீல்வாதம், வாதசூலை, பயித்தியம், ரணசந்நி, இவைகள் குணமாவதற்கு சந்தேகமில்லை. சுவாசகாசத்தின் இருமலுக்கு இது விலையுயர்ந்த மருந்து. இது சாதாரணவாந்தியும், க்ஷயரோகத்தின் வாந்தியும் நீக்க குறித்த மருந்து. 4 அவுன்ஸ் பன்னீரில் அல்லது கிளிஸிரினில்

ஒரு கிராம் மருந்தைச்சேர்த்து கிலேதமாகவும், 1 அவுன்ஸ் அர்த்தநாகக் களிம்புடன் $\frac{1}{8}$ முதல் 1 கிராம் மருந்தைச்சேர்த்து களிம்பாகவும் செய்து பித்தக்கழுப்பு, கொசுக்கடி, படர்தாமரை, சொறி, சிரங்கு இவைகளுக்கு மேலே போடலாம். அதிகமாய் சாப்பிட்டால் 2-3 பெருமூச்சு உள்ளுக்கு வாங்கிக்கொண்டே பிராணம் போய் விடும். ஆகையால் ஜாக்கிரதையாயிருக்கவேண்டும்.

அளவு:—2 முதல் 6 துளி ஒரு அவுன்ஸ் ஜலத்தில் கலந்து சர்க்கரையைச்சேர்த்து கொடுக்கலாம். இதை ஒரு தடவைக்குதான் ஆகும்படி செய்து கொடுக்க வேண்டியது. பலதடவைக்கு ஆகும்படி செய்து கொடுத்தால் திராவகம் ஜலத்தின் மேல் மிதந்து விடும். அதைதெரே வெளியில் தெரியாமல் எடுத்துக்கொண்டால் விஷமிக்கும்.

பெல்லடோனா—Belladonna

குணம்:—இது கசப்பாயும், குமட்டலாயும், பச்சை நிறமாயும் இருக்கும். இதில் உப்புக்கு அட்ரோபியா (Atropia) என்று பெயர்.

செய்கை:—சமனகாரி, வேதனைசாந்தகாரி, அங்காகர்ஷணநாசகாரி, மூத்திராவர்த்தனகாரி, நித்திராகாரி.

உபயோகம்:—கக்கிருமல், குரல் கம்மல், சன்னி, சுவாசகாசம், காக்கை வலி, நீர்க்கட்டு, நரம்புவேதனை, கறுர்வாதம், சூதகவலி, ரணங்கள், பித்த ரோகம், அதிவியர்வை, கர்ப்பாசயரோகம், காசம், சுவாசம், வலிப்பு, இருமல், நரம்பைப்பற்றிய சகல ரோகங்கள், மார்அடைப்பு, வயிற்று வலி, சிறுகுடல் பெருங்குடல் சேருமிடத்தில் காணும் தாபனம், மூத்திரப்பை கழுத்தின் தாபனம், மூத்திரப்பை வீக்கம், மூத்திரத்தாரைநரம்பின் நோய்; இவைகளுக்கும் இதைக்கொடுத்து குணம் கண்டதுண்டு. இது மகா சிரேஷ்டமான மருந்து. ஆனால் ஜாக்கிரதையாய் கொடுக்க வேண்டும். அதிக அளவில் கொடுத்தால் கொடிய நஞ்சாகும். இதின் சத்தில் (Extract) $\frac{1}{8}$ முதல் $\frac{1}{2}$ கிறேன் வீதம் தினம் சாப்பிட்டு வர வழக்கமாயிருக்கிற மலபந்தம் நீங்கிவிடும். கீல்வாதம், பக்கசூலை, இடுப்புவலி, முதலியவைகளுக்கு இதை கிளிஸிரையினத்துடன் சேர்த்து மேலுக்கு தடவலாம். மூலை வெடிப்பு, ரணம், பால்கட்டிக்கொண்டு வேதனை செய்தல் இவைகளுக்கு இதின் பிளாஸ்திரியைப்போடலாம். அளவுக்கு அதிகமாய் சாப்பிட்டால் குமட்டல், மயக்கம், பார்வை மந்தம் முதலியவைகள் காணும்.

அளவு:—டிங்சர் 5 முதல் 15 துளி, Extract $\frac{1}{16}$ முதல் $\frac{1}{4}$ கிறேன், வீதம் கொடுக்கலாம்.

டிஜிடாலிஸ்—Digitalis.

குணம்:—இது ஓர் செடியின் இலை. இது கசப்பாயும், குமட்டலாயும், வாசனை இல்லாமலுமிருக்கும். வெளிச்சம் பட்டால் நிறமும் குணமும் கெடும்.

செய்கை:- உஷ்ணகாரி, முதலில் உஷ்ணம் செய்து பிறகு சமனகாரியாகும். இருதயபலகாரி, இருதய நடையை மெதுவில் தீவிரப்படுத்தும் மூத்திரவர்த்தனகாரி.

உபயோகம்:—இந்த மருந்து அளவுக்கு அதிகமாய்க் கொடுத்தால் கொடிய நஞ்சாகும். இந்த மருந்து வெகு உபயோகமுள்ளது. தாபன ரோகங்கள், இருமல், இருதய ரோகங்கள், க்ஷயம். சுவாசகாசம், ரக்த காசம், பித்தல் பினத்தல், மேக வாயுசுரம், அபஸ்மாரம், ஈளை, பெரும்பாடு, பயித்தியம், நீர்க்கட்டு, முதலியவைகளுக்கு கொடுக்க வெகு நல்ல மருந்து. இது முதலில் உற்சாகப்படுத்தி, பிறகு இருதய நடையின் பலத்தையும் துடிப்பையும் மிகவும் குறைத்துவிடும். மூத்திரக்குண்டிக்காயின் செய்கையை அதிகப் படுத்துவதால் மூத்திரம் அதிகமாய் இறங்கும். இது தேகத்தில் தங்கி பிறகு ஒரே தரமாய் குணத்தைக்காட்டும் தன்மை யிருக்கிறபடியால் குமட்டலாவது, நாடிவிட்டு விட்டு அடித்துக்கொள்ளுதலாவது கண்டால் மருந்தை சிலநாள் நிறுத்தி வைத்து மருந்துனுடைய சேஷ்டை தேகத்திலிருக்குமளவும் நோயாளி படுக்கையிலிருக்க வேண்டியது. நீர்க்கோவைக்குக் கொடுக்கும்போது அதிகமாய் ஜலம் சாப்பிட்டால் மூத்திரம் அதிகமாய் இறங்கும்.

அளவு:—இலைத்தூள் 1 முதல் 3 கிறேன்ஸ், டிங்சர் Tincture 5 முதல் 15 துளி வீதம் தினம் 3 தடவைக் கொடுக்கலாம்.

கிரியஸோட்—Creasote.

குணம்:—இந்த எண்ணெய் துல்லியமாய் மஞ்சள் நிறமாயிருக்கும். ஒருவித வாசனையுண்டு. ஜலத்தில் கரையாது. ஆல்கோஹால், ஈதர், குளோரோபாரம் இவைகளில் கரையும்.

செய்கை:—உஷ்ணகாரி, சமனகாரி, சங்கோசனகாரி, பூதநாசனி, ரக்த ஸ்தம்பனகாரி, மூத்திரகாரி, மேலுக்குப் போட்டால் ரணகாரி.

உபயோகம்:—தீனிப்பையின் வேதனை, கர்ப்பிணியின் வாந்தி, இதர வாந்தி இவைகளுக்கு எடுத்த மருந்து. பேதி, ரக்த பித்தம், பிரமேகம், கர்ப்ப பிரமேகம், மது மூத்திரம், நடுக்கல் முதலியவைகளுக்கு கொடுக்க நல்ல மருந்து. சர்மரோகங்கள், பல் நோய், கண்டமாலை, படுக்கை ரணம், அக்கி, கிரந்தி இவைகளுக்கு மேலுக்குப் போடலாம். இருமல், க்ஷயம், இவைகளுக்கு இதை முகர வைக்கலாம் இதை மீன் எண்ணெயுடன் கலந்து க்ஷயரோகத்திற்கு கொடுத்தால் வெகு குணமுண்டு. பிரதி இரவும் ஒரு துளி வீதம் சாப்பிட்டுவந்தால் சொட்டு மூத்திரம் நின்று விடும். மது மூத்திரத்திற்கு 4 துளி முதல் கொஞ்சங் கொஞ்சமாய் அதிகரித்து 10 துளி வரையில் கொடுத்தால் குணமுண்டு. இதை அக்குளில் தடவினால் வியர்வையுண்டாகி சுரம் தணியும்.

அளவு:— 1 முதல் 5 துளி கொடுக்கலாம்.

பைக்ரோடாக்ஸின்—Picrotoxin.

குணம்:—இந்த உப்புக்கு வாசனையில்லை, நிறமில்லை, நீண்டகட்டியாயிருக்கும், கசப்புள்ளது. ஜலத்தில் கொஞ்சமாயும் வெந்நீரில் அதிகமாயும் கரையும்.

செய்கை:—உபயோகம்:—இது கொடிய நஞ்சு. இரவில் காணும் வியர்வை, காக்கை வலி, சூதகவலி, கர்ப்பமேகம் இவைகளுக்கு கொடுக்க நல்ல மருந்து. இதின் களிம்பை பேன்களைக் கொல்வதற்கும், நரம்பு வேதனைக்கும் மேலுக்குப் போடலாம். அளவுக்கு அதிகமாகாமல் உள்ளுக்கு கொடுக்கவும்.

அளவு: $\frac{1}{100}$ முதல் $\frac{1}{25}$ கிரேன் வீதம் கொடுக்கலாம்.

பேரீரா—Pareira.

குணம்:—இது ஓர் செடியின் வேர். இது வாயிலிட்டவுடன் தித்திப்போடுங் கூடிய பரிமளமாயும் பிறகு கசப்பாயுமிருக்கும்.

செய்கை:—பலகாரி, மூத்திராவர்த்தனகாரி, மலகாரி, ஹஸ்மரீஹரகாரி, சமனகாரி, சங்கோசனகாரி.

உபயோகம்:—மூத்திரப்பை எரிச்சல், மஞ்சள் மூத்திரம், சிலேஷ்ம மூத்திரம், கில்வாதம், மஞ்சட்காமாலை, பிரமேகம், மகோதரம், வெள்ளை விழுதல், நீர்க்கட்டு, கர்ப்பமேகம் முதலியவைகளுக்குக் கொடுக்கலாம்.

அளவு:—எக்ஸ்ட்ராக்ட் ஆப் பெரீரா 10 முதல் 30 கிரேன்ஸ், எக்ஸ்ட்ராக்ட் லிக்குவிட் ½ முதல் 2 திராம் கொடுக்கலாம்.

வாலுழுவை அரிசி.

உபயோகம்:—சுரம், ரத்த பேதி, பித்தம், கடுப்புத் தீரும்.

சமுத்திர சோஷி விதை.

உபயோகம்:—சுரோணிதவாதம் அதிமூத்திரம், கபம் தீரும்.

கருஞ்சீரகம் (விதை.)

உபயோகம்:—சிரோ ரோகம், கண்ணோய், மண்டைக்கரப்பான், உள்ருடு, கிருமிரோகம், இவைகளுக்கு உபயோகிக்கலாம்.

நாய்க்கடுகு (விதை.)

உபயோகம்:—சுரம், சுரோணிதவாதம், குன்மம், தீரும்.

வெந்தியம் (விதை—கீரை.)

உபயோகம்:- (விதை) சீதாதிசாரம்-ரத்த பேதி, சீதபேதி, காசம், உட்சூடு, கணம், மேகம், மாந்தம், தீரும். (கீரை) காசம், மந்தம், அருசி தீரும்.

நீரடி முத்து.

உபயோகம்:—தினவு, சொறி, சிரங்கு, குஷ்டம், வாதம் தீரும்.

சேங்கொட்டை.

செய்கை:—வீரிய வர்த்தனகாரி.

உபயோகம்:—இரத்த உள்மூலம், கில்வாதம், சொறி, சிரங்கு, குன்மம் வாதம், மேகம், இவைகளுக்கு சுத்தி செய்து லேகியம், எண்ணெய் முதலிய ரூபமாய் செய்துகொடுக்கப்படும்.

பச்சைக்கர்ப்பூரம்.

உபயோகம்:—குன்மம், கில்வாதம், சிலேஷ்மம், தீரும்.

சந்தனம் (மரம்.)

செய்கை:—உபயோகம்:—சீதளகாரி, உட்சூடு, பிரமேகம் தீரும்.

வெள்ளை குங்கிலியம்.

உபயோகம்:—மேகப்புண், நீர்த்தாரைப்புண், உள்மூலரணம், சீழ்பிரமேகம் இவைகளுக்கு இது வெகு நல்ல மருந்து.

குக்கில்.

உபயோகம்:—நகசுற்றி, கர்ணரோய், கபம் தீரும்.

அரக்கு.

உபயோகம்:—சுவாசம், வாதம், சன்னி, அஸ்திசாபனம், கபம், இவைகளுக்கு இதை தயிலம் செய்து உபயோகிக்கப்படும்.

அப்பிரகம்.

செய்கை:—வீரியவர்த்தனகாரி.

உபயோகம்:—அதிமூத்திரம், சுரம், நித்திரையில் பாதங்களை முருக்கிக்கொள்ளும் வாதம், பிரமேகம் முதலிய பற்பல ரோகங்களுக்கு இதை பஸ்மம் அல்லது செந்தூரம் செய்து கொடுக்கப்படும்.

கல்நார்.

செய்கை:—பித்தஹரகாரி.

உபயோகம்:—நீர்த்தாரை எரிவு, பித்தகாசம், பித்தவாந்தி, பித்தரோகம் (40) போம். இதை பஸ்மமாக்கிக் கொடுக்கப்படும்.

கல்மதம்.

உபயோகம்:—மேகம், அஸ்மரிரோகம், சதை அடைப்பு, கிரிச்சரம் இவைகளுக்கு இதை பஸ்மமாக்கிக் கொடுக்கப்படும்.

கர்ப்பூரசலாசத்து.

உபயோகம்:—சுரோணிதவாதம், அஸ்மரி, கிரிச்சரம், மேகம் இவைகளுக்கு இதை பஸ்மமாக்கிக் கொடுக்கப்படும்.

காவிக்கல்.

உபயோகம்:—இதை ஜலமிட்டு அரைத்து அக்கியின் மேலே தடவ குணமாகும். இதைச் சேர்த்த ஜலத்தில் துணியை நனைத்து கண்ணோவுக்கும் ஒற்றடம் கொடுக்கத் தீரும்.

கடல் நுரை.

உபயோகம்:—இதின் பஸ்மம் குன்மம், க்ஷயம், புண் இவைகளுக்கு உபயோகப்படும்.

வெள்ளை செங்கு.

செய்கை:—தீபனகாரி.

உபயோகம்:—இதை பஸ்மமாக்கி குன்மம், வாதம், இசிவு இவைகளுக்குக் கொடுக்கப்படும். இதை உறைத்து கண் வீக்கத்துக்குப்போடப்படும்.

முந்துசிப்பி.

உபயோகம்:—இதை பஸ்மமாக்கி காசம், க்ஷயம், சோகை, மேகம் இவைகளுக்குக் கொடுக்கப்படும்.

பலகறை— கவடி

உபயோகம்:—இதை பஸ்மமாக்கி க்ஷயம், வாதம், சுரம், தாகம் இவைகளுக்குக் கொடுக்கப்படும்.

ஓமம்—Omum—(வித்து).

செய்கை:—கர்ப்பவாதஹரகாரி, உஷ்ணகாரி.

உபயோகம்:—இதை பேதி, அஜீரணம், மாந்தம், வயிற்றுவலி, வயற்று இரைச்சல், வாந்தி முதலியவைகளுக்குக் கொடுக்கலாம்.

சாலாமிசிரி (வேர்).

உபயோகம்:—இதைத் தூளாக்கி பசும்பாலில் போட்டுக் காயச்சி சர்க்கரை சேர்த்துச் சாப்பிட்டுவர தேகத்திற்கு பலமும் தாதுபுஷ்டியும் உண்டாகும். க்ஷய ரோகத்திற்கு இதைகொடுக்கலாம்.

அளவு:—2—4 கிராம் கொடுக்கலாம்.

சுக்கு—ஜின்சர்—Ginger (உலர்ந்த கிழங்கு).

செய்கை:—வேஷானகாரி, திரவகாரி, உஷ்ணகாரி, நஸ்வியம்.

உபயோகம்:—இதைக்கொடுக்க வாயுவைக் கண்டித்து, பசியை உண்டாக்கும். அதிசாரம், இரைப்பு, செவிநோய், தலைநோய், வாதம், குன்மம், மந்தம், கபம், சூலை முதலியவைகளுக்கு இதை அடிக்கடிக் கொடுக்கப்படும்.

அளவு:—10—20 கிரேன்ஸ் கொடுக்கலாம்.

மஞ்சள்—டர்மிரிக்—Turmeric (உலர்ந்த கிழங்கு).

செய்கை:—தீபனகாரி, உஷ்ணகாரி, கர்ப்பவாதஹரகாரி.

உபயோகம்:—வயிறு பொருமலுக்கு 5—20 கிரேன்ஸ் கொடுக்கத் தீரும். இதின் புகையை அக்கிராணத்தால் ஜலதோஷம் தீரும். தலைவலி, வீக்கம் இவைகளுக்கு உபயோகிக்கலாம்.

ஏலரிசி—கார்டேமம்—Cardamom (வித்து).

செய்கை:- கர்ப்பவாதஹரகாரி.

உபயோகம்:—வயறுசுரிப்பு முதலியவைகள் தீரும்.

கசகசா—(விதை).

குணம்:— போஸ்தக்காயில் கசகசாவிதை காணலாம்.

செய்கை:—உபயோகம்:—ஒரு பலம் கசகசாவை பசும்பாலில் அரைத்து ஒரு சேர் பசும் பாலில் கரைத்து சுடவைத்து சீனி அரை பலம் போட்டு காலையில் சாப்பிடவும். இவ்விதமாய் காலை மாலை 3 நாள் சாப்பிட வாய் நாற்றம், வயிற்றிலுள்ள ரணம் குணமாகும். சீதபேதி, ரத்தபேதி, நித்திரை பங்கம் இவைகளுக்குச் கொடுக்கலாம்.

வெடிஉப்பு-பொட்டிலுப்பு,—(உப்பு)
நைட்டிரேட் ஆப் பொடாஸ்—Nitrate of Potash.

குணம்:—இது பூமியில் விளைகிறது. இது வெள்ளை, பளிங்கு, குளிர்ச்சி, கசப்பு, விறுவிறுப்பு உள்ளதாய் இருக்கும்.

செய்கை:—மூத்திரவர்த்தனகாரி, சீதளகாரி, மேலுக்குப் போட்டால் உஷ்ணம் தணியும், ரணம் சிவப்பிக்கும்.

உபயோகம்:—இதை சுரம், கீல்வாதம், ரக்தகாசம், பிரமேகம், நீர்க்கோவை முதலியவைகளுக்கு கொடுத்தால் தவறாமல் குணத்தைக்காட்டும். இத்துடன் வாந்தி உப்பைச்சேர்த்துக் கொடுக்க வியர்வையை உண்டாக்கும். இதை வாய் கொப்பளிக்கிற ஜலமாக செய்து கொள்ளலாம். இதை எவ்விதமாய் உபயோகிக்கிறோமோ அவ்விதமாகவே குணத்தைத்தரும். அளவுக்கு அதிகமானால் விஷமிக்கும். இது மகா நல்ல மருந்து. அநேக பலத்த ரோகங்களுக்குக் கொடுக்கப்படும்.

அளவு:—5—15 கிறேன்ஸ் ஜலத்தில் கொடுக்கலாம். 20—30 கிறேன்ஸ் வியர்விக்கவும், 1—3 திராம் அதிக ஜலத்தில் கரைத்து இதின் வேகத்தைக்குறைத்து பிரமேகம், கீல்வாதம் இவைகளுக்குங் கொடுக்கப்படும்.

எப்சம் சால்ட்—Epsom Salt—(உப்பு).

குணம்:—இது பூமியின் மேல் பூத்திருக்கும். ஊற்று ஜலம், சமுத்திர ஜலம் இவைகளிலுமுண்டு. இது நீண்டதும், வெள்ளை, பிரகாசம், உவர்ப்பு, கசப்பு, உள்ளதாயுமிருக்கும். காற்றுப்பட்டால் தூளாகும். ஜலத்தில் கரையும் சாராயத்தில் கரையாது.

செய்கை:—ஜலவிரேசனகாரி, மூத்திரவர்த்தனகாரி.

உபயோகம்:—இது சகல தாபன ரோகங்களுக்கு கொடுக்கத் தகுதியானது. சுக்கு, பெப்பர் மெண்ட் ஜலம், நில ஆவாரைக் கஷாயம், இவைக

ளுடன் இதைச் சேர்த்துக் கொடுத்தால் வாயுவை உண்டாக்காமலும் வயறு கடுக்காமலும் பேதியாக்கும். மருந்தை வயற்றில் தங்காமல் வாந்தியானால் விராவின கந்தகத்திராவகம் கொஞ்சம் சேர்த்துக் கொடுக்க வயிற்றில் தங்கி பேதியாகும். அதிகமாய் ஜலம் சேர்த்து கொடுக்க நன்றாய் பேதியாக்கும். கர்ப்பஸ்திரீக்கும், குதக சூலைக்கும் கொடுப்பதரிது. வாந்திபேதி காலங்களில் இதைக் கொடுக்கக்கூடாது.

அளவு:—2 டிராம் முதல் 1 அவுன்ஸ் கொடுக்கலாம்.

குளோரல் ஹைட்ராஸ்—Chloral Hydras.

குணம்:—இது வெள்ளையாயும், பளபளப்பாயுமிருக்கும். காற்றுப்பட்டால் கிரகிவிடும்.

செய்கை:—நித்திராகாரி, சமனகாரி, பூதநாசகாரி, அங்ககார்ஷண நாசகாரி.

உபயோகம்:—இதைக் கொடுத்தால் வெகு நல்ல நித்திரையை உண்டாக்கும். இதர நித்திராகாரிகள் நித்திரையை உண்டாக்கி பிறகு கெடுதி செய்வதுபோல் இது செய்யாது. நரம்பைப்பற்றிவரும் சகல ரோகங்களுக்கு இதை கொடுக்க தவறாமல் நன்மை செய்யும். சக்கிருமல், காசம், சுவாசம், இரைப்பு, சோகை, தனுர்வாதம், கீல்வாதம், இவைகளுக்கு இது அடுத்த அவுஷதம். சுரங்களில் நித்திரையை உண்டாக்கவும், குழந்தைகளின் இசிவுகளை நிறுத்தவும் இது வெகு நல்ல மருந்து. இது அபினியை போல் வேதனையை நீக்காவிட்டாலும் நித்திரையை விசேஷமாய் உடண்டாக்கும். அன்றியும் குதக சந்நி, ரணசந்நி, எந்நேரமும் வியாதி என்று எண்ணிக் கொண்டிருக்கிற ஸ்திதி, கூத்தாடும் சந்நி, மதுபாணியின் பித்த ரோகம், கடுக்கல் முதலியவைகளுக்கு இதைக் கொடுத்தால் வெகு நன்மை செய்யும். இந்த மருந்தோடு பொட்டாஸியம் ப்ரோமைட் சேர்த்து பிரசவகாலத்தில் மாதர்களுக்குக் காணுகிற வாய், கஷ்பைப்பை, முகவாய்க்கட்டை இவ்விடங்களின் வலிக்கு (வலிப்புக்கு) கொடுக்கலாம். இது பயித்திய ரோகத்துக்குக் கொடுக்க வெகு நன்மை செய்யும். இதை 5 முதல் 15 கிறேன்ஸ் ஒரு அவுன்ஸ் ஜலத்தில் கரைத்து ரணம், காயம், அழிகியசிரங்குகள், முலைக்காம்பு வெடிப்பு, இவைகளுக்கு மேலுக்குப்போட உடனே குணத்தைக் காணலாம். அதிக அளவில் சாப்பிட்டால் இசிவு, சந்நி முதலியவைகள் கண்டு மரணம் சம்பவிக்கும்.

அளவு:—5 – 30 கிறேன்ஸ் அனுபானத்திலிடவும்.

ஸைட்ரேட் ஆப் பொட்டாஸ்—Citrate of Potash—(உப்பு).

குணம்:—இந்த உப்பு வெகு சீக்கிரத்தில் நீராகி விடும்.

செய்கை:—உபயோகம்:—இதை சுரங்களில் கொடுத்தால் குளிர்ச்சியை செய்து அழலைத் தணிக்கும். குமட்டல், வாந்தி, பேதி இவைகளுக்கு இதைக் கொடுத்தால் மெத்த நன்மை செய்யும். அபினியைச் சேர்த்துக் கொடுக்கலாம்.

கந்தகம்—Sulphur—ஸல்ப்பர்.

குணம்:—இது அக்கினிமலை அடிவாரத்திலும், பூமியிலும் அகப்படும் இதைச் சுத்தி செய்துதான் உபயோகிக்க வேண்டியது. சுத்திசெய்த கந்தகத்துக்கு கந்தகப்பதங்கம் (Sublimed Sulphur—ஸப்லைம்ட் ஸல்பர்) என்று பெயர்.

செய்கை:—சுவேதகாரி, மலகாரி, வியதாபேதகாரி.

உபயோகம்:—இதை மூலரோகத்துக்குக் கொடுக்க வெகு நல்ல மருந்து. சருமரோகங்களுக்குக் கொடுக்க நன்மை செய்யாமல் போகாது. இதின்வாசனை மலத்திலும், வியர்வையிலும் கண்டால் மருந்து உடம்பில் ஊறினதற்கு அடையாளம்.

அளவு:—5—20 கிறேன்ஸ் தினம் 2-3 தடவைக் கொடுக்கலாம். $1\frac{1}{2}$ (கஉ) முதல் 2 திராம் கொடுத்தால் மலகாரியாகும்.

டார்டரிக் ஆஸிட்—Tarteric Acid—(உப்பு).

குணம்:—இது ஒயின் சாராயம் செய்யும்போது, திராக்ஷத்திலிருக்கிற உப்பு அடியில் படியும். அதை எடுத்து சுத்திசெய்தால் வெள்ளைப்பொடியாயும், புளிப்பாயுமிருக்கும். ஜலத்தில் கரையும்.

செய்கை:—சீதளகாரி, மலகாரி, மூத்திரவர்தனகாரி.

உபயோகம்:—இது மூலம், சுரம், நீர்க்கோவை, இவைகளுக்குக் கொடுக்கத்தகுதியானது. நல்ல அனுபானத்தில் கொடுத்தால் தவராமல் குணமாக்கும்.

அளவு:—20—40 கிறேன்ஸ் கொடுத்தால் மூத்திரம் அதிகரிக்கும் 1—2 திராம் கொடுத்தால் மலம் இறங்கும்.

டார்டரேட் ஆப் டோடாஷ்—Tartrate of Potash—(உப்பு).

செய்கை:—விரேசனகாரி.

உபயோகம்:—இந்த உப்பு எகுர்திகண்டரோகம், அஜீர்ணம் இவைகளு

க்கு பேதிக்கு கொடுக்க வெகு நல்ல மருந்து. மூத்திரத்தில் புளிப்பை மாற்றி உப்பை உண்டாக்க இதைக் கொடுக்கலாம். இதற்கு குடல் முழுதும் வியாபித்துக் கடுப்பை உண்டாக்காமல் பேதியை உண்டாக்க வல்லமை உண்டு. இதைக் கடுப்பை உண்டாக்கிற விரேசனகாரிகளோடு சேர்த்துக்கொடுக்க அவைகளின் துர்குணத்தை நீக்கிவிடும்.

அளவு:—2—8 திராம் பேதியாக்கவும், 1—2 திராம் மூத்திரத்தை அதிகரிக்கவும் கொடுக்கவும்.

அஸிடேட் ஆப் பொடாஷ்—Acetate of Potash—(உப்பு).

குணம்:—இது காற்றுப்பட நீராகிவிடும். வெள்ளைக்கம்பிகளை போலிருக்கும். ஜலத்திலும், சாராயத்திலும் கரையும். வாயிலிட விறு விறு என்று உவர்ப்பாயிருக்கும்.

செய்கை:—விரேசனகாரி, மூத்திராவர்த்தனகாரி.

உபயோகம்:—பிரமேகம், நீர்க்கோவை, எகுர்திகண்டரோகம், முதலியவைகளுக்கு இதைக் கொடுக்க நன்மைசெய்யும். இது சிலருக்கு வயிற்றில் கடுப்பும், வாயுவும் உண்டாக்கும். மூத்திரத்தை விருத்திக்கவும், மூத்திரத்தின் புளிப்பைமாற்றி உப்பை உண்டாக்கவும் சக்தி உண்டு.

அளவு:—10—60 கிறேன்ஸ் மூத்திரத்தை அதிகரிக்கவும், 1—3 திராம் பேதியாக்கவும் கொடுக்கலாம்.

ஸ்மெல்லிங்க சால்ட்—Smelling Salt.

குணம்:—இந்த நவக்ஷார உப்பு வெள்ளைக் கட்டிகளாயிருக்கும். காரமும் நெடியுமுடைய வாசனையுள்ளது. காற்றுப்பட்டால் தூளாகிவிடும். ஜலத்தில் கரையும், சாராயத்தில் கரையாது.

செய்கை:—அங்காகர்ஷண நாசகாரி, ஆம்லநாசகாரி, உஷ்ணகாரி, சுவேதகாரி, கபஹரகாரி, வமனகாரி.

உபயோகம்:—இதை முகர்ந்தால் ஜலதோஷம், தலைவலி, குணமாகும். இதை சுவாசம், காசம், மதுமூத்திரம, சூதகஜன்னி, கீல்வாதம், குலை எரிவு, ஈரல் வேதனை, நுரை ஈரல் ரோகம், சர்வரோகங்கள் இவைகளுக்குக் கொடுக்க தவறாமல் நன்மை செய்யும். இது வெகு நல்ல மருந்து.

அளவு:—3—12 கிறேன்ஸ் உஷ்ணிக்கவும், 25—30 கிறேன்ஸ் வாந்தியாக்கவும் கொடுக்கப்படும். வாந்திக்குக் கொடுப்பது அரிது.

நவச்சாரம்— ஸால் அமோனியாக்—Sal Ammoniac.

குணம்:—இது காரமும், எரிச்சலும், கசப்பும், மூத்திர வெகுட்டலுமுள்ளது. ஜலத்திலும், சாராயத்திலும் கரையும். இதை சுத்தி செய்யாமல் உள்ளுக்கு கொடுக்ககூடாது.

செய்கை:—சீதளகாரி, வியதாபேதகாரி, பூதிகந்தநாசகாரி, பலகாரி.

உபயோகம்:— இதை கிலேதமாகசெய்து சுரம், குடல்வாதம், நீர் அண்டம், முதலியவைகளுக்குப்போட வெகு நன்மை செய்யும். உள்ளுக்குக் கொடுக்கக்கூடாது.

புரோமைட் ஆப் பொட்டாஸியம்—Bromide of Potassium (உப்பு).

குணம்:—இந்த உப்பு வெள்ளை நிறமாயிருக்கும். வாசனை இராது. ஜலத்தில் அதிகமாயும், சாராயத்தில் கொஞ்சமாயும் கரையும்.

செய்கை:—வியதாபேதகாரி, உஷ்ணகாரி, சோபாநாஷகாரி.

உபயோகம்:—இந்த மருந்து மகா சிரேஷ்டமானது. இது இருதயத்தின் நடையைக்குறைக்கும். நரம்பைப்பற்றி வரும் இசிவு, ஜன்னி, காக்கைவலி, முதலிய சகல வியாதிகளுக்கு இதைக் கொடுத்த வுடனே அதி விசேஷ குணத்தைக்காட்டும். காக்கை வலிப்புக்கு இதை நெடுநாள்க்கொடுக்க வேண்டியது. தேகவலி, வியாதி, சுபாவம், முதலியவைகளால் நித்திரை வராமலிருந்தால் இதைக்கொடுக்க வெகு நல்ல நித்திரையை உண்டாக்கும். சூதகஜன்னி, கக்குவான், இருமல், காசம், சுவாசம், கோழை முதலிய மகா கடூர ரோகங்களுக்குக் கொடுக்க இது வெகு தகுதியானது; கொடுத்ததினம் குணத்தை அறியலாம். குழந்தையின் இசிவுக்கு இதைக்கொடுக்க உடனே இசிவு நிற்கும். மதுமூத்திரம், தனுர்வாதம், மேகம், பிலீகம், ஈரல் நோய் முதலிய கொடிய வியாதிகளுக்கு கொடுக்க இது வெகு நன்மை செய்யும். பயித்தியம், கர்ப்பணியின் வாந்தி இவைகளுக்கு எடுத்த மருந்து.

அளவு:—5 முதல் 30 கிரேன்ஸ் அனுபானத்திலிடவும்.

கார்போனேட் ஆப் பொடாஷ்—Carbonate of Potash (உப்பு).

குணம்:—இந்த உப்பு காரமும் விறு விறுப்பும் உள்ளது. காற்றுப்பட்டால் நீராகிவிடும்.

செய்கை:—ஆம்லநாஸகாரி, அஸ்மரிஹரகாரி, சோபாநாஸகாரி, மூத்திரவர்த்தனகாரி.

உபயோகம்:—இது மூத்திரத்தில் புளிப்பை மாற்றி உப்பை உண்டாக்கும். கீல்வாதம், கண்டமாலை, அஜீர்ணம், நீர்கோவை, மேகம், சொறி, இவைகளுக்குக் கொடுக்க இது வெகு தகுதியான மருந்து; அதிசீக்கிரத்தில் குணமாக்கும்.

அளவு:—10 முதல் 30 கிரேன்ஸ் பாலில் கொடுக்கலாம்.

பைகார்பொனேட் ஆப் பொடாஷ்—Bicarbonate of Potash.

செய்கை:—உபயோகம்:—கார்பொனேட் ஆப் பொடாஷ்க்கு உள்ள செய்கைகள் இதற்கும் உண்டு, ஆனால் இது சாந்தமானது. அதைக்கொடுக்கும் ரோகங்களுக்கு இதையும் கொடுக்கப்படும்.

அளவு:—10 முதல் 30 கிரேன்ஸ் அனுபானத்திலிடவும்.

ஸல்பேட் ஆப் பொடாஷ்—Sulphate of Potash.

குணம்:—இந்த உப்பு வெள்ளையாயும், கசப்பாயும் உப்பு கரிக்கிற சுவையாயுமிருக்கும். ஜலத்தில் கரையும்.

செய்கை:—வியதாபேதகாரி, சோபாநாசகாரி, லகுவிரேசனகாரி.

உபயோகம்:—அஜீர்ணம், பாண்டு, குன்மம், மஞ்சகாமாலை, இவைகளுக்குக்கொடுக்க வேதனையை சாந்தப்படுத்தும். மலம் இறங்க இந்த மருந்து 20 கிறேன்ஸ் முதல் 1 திராம் இரண்டு அவுன்ஸ் ஜலத்தில் கரைத்து, மற்றொரு பாத்திரத்தில் ஒரு அவுன்ஸ் ஜலமிட்டு அதில் 20 கிறேன்ஸ் முதல் 1 திராம் கார்பொனேட் ஆப் சோடா போட்டுகரைத்து இவ்விரண்டும் சேர்த்தால் பொங்கும், உடனே சாப்பிடவும்.

அளவு:—10 முதல் 60 கிறேன்ஸ் கொடுக்கலாம். 1—2 திராம்ஸ் கொடுக்க பேதியாகும்.

பைஸல்பேட் ஆப பொடாஷ்—Bisulphate of Potash.

குணம்:—இது வெள்ளை; புளிப்பும், கசப்பும் உள்ளது. ஜலத்தில் கரையும்.

செய்கை:—திரிதோஷஹராகாரி, விரேசனகாரி.

உபயோகம்:—மலம் இறங்க 20 கிறேன்ஸ் முதல் 1 திராம் உப்பை ஜலத்தில் கரைத்து வேறொரு பாத்திரத்தில் ஜலமிட்டு கார்பொனெட் ஆப் சோடா 20 கிறேன்ஸ் முதல் 1 திராம் கரைத்து பிறகு இரண்டும் சேர்த்து, பொங்கும் போது சாப்பிடவும். இந்த உப்புகள் சமமாக சேர்க்கவேண்டியது.

கார்போனேட் ஆப் சோடா—Carbonate of Soda.

குணம்:—இந்த உப்பு வெள்ளைக் கட்டிகளாகவும், உவர்ப்பாயுமிருக்கும். ஜலத்தில் கரையும், எண்ணெய் சேர்த்தால் சவுக்காரமாகும்.

செய்கை:—ஆம்பலநாசகாரி, சோபாநாசகாரி, மூத்திரவர்த்தனகாரி, ஹைஸ்மரிஹரகாரி.

உபயோகம்:—இதை சூலை எரிவு, இரைச்சல், மது மூத்திரம், கீல் வாதம், காசம், அஜீர்ணம் முதலியவைகளுக்கு இது அடுத்த அவுஷதம். இது வயிற்றிலுள்ள புளிப்பை செவ்வையாய் கண்டிக்கும்.

அளவு:—10 முதல் 30 கிரேன்ஸ் அல்லது 60 கிரேன்ஸ் அனுபானத்தில் கொடுக்கலாம்.

பைகார்போனேட் ஆப் சோடா—Bicarbonate of Soda.

செய்கை:—உபயோகம்:—கார்போனேட் ஆப் சோடாவுக்குள்ள செய்கைகளே இதற்கு உண்டு. ஆதலால் அதைக்கொடுக்கும் ரோகங்களுக்கு இதையும் கொடுக்கப்படும்.

அளவு:—10 முதல் 30 அல்லது 60 கிரேன்ஸ் அனுபானத்திலிடவும்.

கறிஉப்பு—Muriate of Soda—முரியட் ஆப் சோடா.

குணம்:—இந்த உப்பை சில செடிகள், சமுத்திர ஜலம் இவைகளிலிருந்து சேகரிக்கப்படும். இது உவர்க்கும். ஜலத்தில் கரையும். இது சகலருக்கும் தெரிந்தப் பதார்த்தம்.

செய்கை:—உஷ்ணகாரி, வமனகாரி, விரேசனகாரி.

உபயோகம்:—இது வாந்தி பேதி, கிருமி, ரக்தகாசம், மந்தாக்கினி, இவைகளுக்குக் கொடுக்க குணமாகும். அட்டை தற்சயலாய் இரைப்பை, ஆசனம் இவைகளில் சென்று போனால் இதைக்கொடுக்க மரணமடைந்து வெளிப்படும். இதை பேதிக்காவது வாந்திக்காவது கொடுப்பதரிது.

அளவு:—10 முதல் 30 கிரேன்ஸ் பசியை உண்டாக்கவும், ½ முதல் 1 அவுன்ஸ் பேதியாக்கவும், 1½ முதல் 2 அவுன்ஸ் வாந்தியாக்கவும் கொடுக்கப்படும்.

வெங்காரம்—Borax—போராக்ஸ்.

குணம்:—இந்த உப்பை நீற்றிக்கொண்டால் அதிலிருக்கிற தோஷங்

கள் நீக்கிவிடும். இது வெள்ளையாய், தெளிவாய், மினுமினுப்பாய், தித்திப்பாய், துவர்ப்பாய் இருக்கும்.

செய்கை:—மூத்திராவர்த்தனகாரி, ருது வர்த்தனகாரி, லகுஸங்கோசனகாரி, விரணசுத்திகாரி.

உபயோகம்:—தொண்டை, வாய் இவைகளில் காணும் ரணங்களுக்கு இதை ஜலத்தில் கரைத்து வாயைக் கொப்பளித்தால் அதிசீக்கிரத்தில் குணமாகும். கிரிச்சரம், மகோதரம், இவைகளுக்கு இதை உள்ளுக்குக் கொடுக்க வெகு நல்ல மருந்து. கர்ப்ப ஸ்திரீகளுக்கு உள்ளுக்குக் கொடுத்தால் கருவை வெளிப்படுத்தி விடுவதுமுண்டு.

அளவு:—5—30 கிறேன்ஸ் கொடுக்கலாம். 2 டிராம் வெங்காரத்தை 6 அவுன்ஸ் ஜலத்தில் போட்டு வாயைக்கொப்பளிக்கலாம்.

ஸல்பேட் ஆப் சோடா—Sulphato of Soda.

குணம்:—இந்த உப்பு பூமி, கடல் நீர், சில பூண்டுகளின் சாம்பல் இவைகளில் அகப்படும். இது வெள்ளையாயும், கசப்பு வெகுட்டலுள்ள ருசியாயும் இருக்கும். ஜலத்தில் கரையும். காற்றுப்பட்டால் பொடியாகும்.

செய்கை:—விரேசனகாரி.

உபயோகம்:—இது வாய்க்கு இனிப்பாய் இராது. ஆதலால் எலிமிச்சம்பழரசத்தில் கரைத்துக்கொடுக்க மலச்சிக்கலை நீக்கும். இது வயிறுக்கடுத்து பேதியாகும்.

அளவு:—$\frac{1}{2}$ (?) முதல் $1\frac{1}{2}$ அவுன்ஸ் கொடுக்கலாம்.

பாஸ்பேட் ஆப் சோடா—Phosphate of Soda.

குணம்:—இந்த உப்பு எலும்பிலிருந்து எடுக்கப்படும். இது வெள்ளையாயும், உவர்ப்பாயும் இருக்கும். ஜலத்தில் கரையும், காற்றுப்பட்டால் தூளாகும்.

செய்கை:—சுகவிரேசனகாரி, வியதாபேதகாரி.

உபயோகம்:—இது வெகுட்டலை உண்டாக்காது. குழந்தைகளுக்கும், நாசுகஸ்திரீகளுக்கும் பேதிக்கு கொடுக்க இது வெகு நல்ல மருந்து.

அளவு:—$\frac{1}{2}$ (?) முதல் $1\frac{1}{2}$ அவுன்ஸ் பெரியவர்களுக்கும். 1 முதல் 4 டிராம்ஸ் குழந்தைகளுக்கும் கஞ்சியில் கொடுக்கலாம்.

டார்ட்ரேடேட் சோடா—Tartrated Soda.

குணம்:—இந்த உப்பு வெள்ளையாயும், உவர்ப்பாயும், கசப்பாயும் இருக்கும். காற்றுப்பட்டால் தூளாகிவிடும், ஜலத்தில் கரையும்.

செய்கை:—விரேசனகாரி, மூத்திர வர்த்தனகாரி.

உபயோகம்:—அஸ்மரி, பித்தபாண்டு, பிரசவித்த பிறகு காணுஞ்சுரம், இவைகளுக்குக் கொடுக்க இது தகுதியான மருந்து. கொஞ்சமாய்க் கொடுத்தால் நீரை அதிகரிக்கும். அதிகமாய்க் கொடுத்தால் குளிர்ச்சியாய் பேதியாகும். இதைத் தனியாய்க் கொடுக்க வயிற்றில் சங்கடம் உண்டாகும். நிலாவரை கசாயத்தில் கொடுக்க நன்மை செய்யும்.

அளவு.—1 முதல் 2 டிராம்ஸ் மூத்திரத்தை அதிகரிக்கவும், 6 முதல் 8 டிராம்ஸ் பேதியாக்கவும் கொடுக்கலாம்.

அஸிடேட் ஆப் சோடா—Acetate of Soda.

குணம்:—இந்த உப்பு வெள்ளையாயும், விறுவிறுப்பாயும், கசப்பாயுமிருக்கும். ஜலத்தில் கரையும், உஷ்ணம் பட்டால் தூளாகும்.

செய்கை:—விரேசனகாரி, மூத்திரவர்த்தனகாரி.

உபயோகம்:—இது நீர்க்கோவை, மலக்கட்டு இவைகளுக்குக் கொடுக்க அதிசீக்கிரத்தில் குணமாகும்.

அளவு:—½ (?) முதல் 2 டிராம்ஸ் மூத்திரத்தை அதிகரிக்கவும், 1—4 டிராம்ஸ் பேதியாக்கவும் கொடுக்கப்படும்.

சுண்ணாம்பு—Lime—லைம்.

குணம்:—கற்சுண்ணாம்பு, கிளிஞ்சல் சுண்ணாம்பு, சங்கு சுண்ணாம்பு, சிமை சுண்ணாம்பு, நத்தை சுண்ணாம்பு, முத்து சுண்ணாம்பு, என்னும் பற்பல சுண்ணாம்புகள் உண்டு. அவைகளெல்லாம் குணத்திலும் செய்கையிலும் ஒத்திருக்கும். இது சகலருக்குந்தெரிந்த பதார்த்தம்.

செய்கை:—ஆம்லநாசகாரி, ஸங்கோசனகாரி, வியதாபேதகாரி, ஹஸ்மரி ஹரகாரி, ஸோபாநாசகாரி.

உபயோகம்:—ஒரு அவுன்ஸ சுண்ணாம்பை 2 பைன்ட் ஆவி நீரில் போட்டு குலுக்கி வைத்து தெளிவை எடுத்து சீசாவில் போட்டு வைத்துக் கொள்ளவும். இதை குலை எரிவு, அதிமூத்திரம், அஜீரணபேதி, ஆமம்,

கிருமி இவைகளுக்குக் கொடுக்க வெகு சீக்கிரத்தில் குணத்தைக் காட்டும். சாப்பான் முதலிய சரும ரோகங்களுக்கும் ரணங்களுக்கும் போடலாம்.

அளவு:—2 முதல் 8 அவுன்ஸ் தினம் 2—3 தடவை பாலில்க் கொடுக்கலாம்.

சீமைச்சுண்ணும்பு—Chalk.-சாக்

குணம்:—இது வெள்ளை, எளிதில் தூளாகும். ருசியில்லை. சிலது உருண்டையாயிருக்கும். இதை சுத்தி செய்துதான் உபயோகிக்கவேண்டியது.

செய்கை:—அம்லநாசகாரி, சங்கோசனகாரி

உபயோகம்:—வெந்நீர், கஞ்சி, அக்கினி, இவைகளால் உண்டாகும் ரணங்களின் ஜலத்தை வறட்ட அவைகளின் பேரில் தூவி போட்லிஸ்க்கட்ட நன்மை செய்யும். சூலை எரிவு, வயிற்றில் புளிப்பை அதிகரித்து உண்டாகிய சகல ரோகங்களுக்கும் இதைக் கொடுக்க உடனே குணத்தைத் தரும். ஆனால் இதை நாள்படச் சாப்பிட்டால் குடலில்ச் சேர்ந்து கெடுதியுண்டாக்குவதால் மலத்தைக் கழித்துக் கொண்டே இருக்கவேண்டியது.

அளவு:—10 முதல் 60 கிறேன்ஸ் சர்க்கரை, லவங்கப்பட்டை இவைகளோடு சேர்த்துக் கொடுக்கலாம்.

கார்போனேட் ஆப் மாக்னிஷியா—Carbonate of Magnesia.

குணம்:—இது வெள்ளையாயும், இலேசாயும், மிருதுவாயும் இருக்கும். ஜலத்தில் கரையாது.

செய்கை:—அம்லநாசகாரி, மலகாரி, ஹஸ்வரிஹரகாரி.

உபயோகம்:—வயிற்றில் புளிப்பை அதிகரித்துக் காணும் சூலை எரிவு, மாந்தம், தீனிப்பை எரிச்சல், முதலிய சகல ரோகங்களை நிவர்த்திக்க இதைக் கொடுக்கப்படும். இது குழந்தைகளின் அஜீர்ணபேதிக்கு வெகு நல்ல மருந்து; சந்துவாதம், கிரகணி, கல்லடைப்பு, மலபந்தம் இவைகளுக்கு எடுத்த மருந்து.

அளவு:—5 முதல் 20 கிறேன்ஸ் புளிப்பைக்கண்டிக்கவும், 15 முதல் 60 கிறேன்ஸ் மலத்தைக்கழிக்கவும், ஜலம், பால் முதலியவைகளில் கொடுக்கலாம்.

கல்லுப்பு (உப்பு)

உபயோகம்:—இதைக்கொடுக்க குன்மம் (8), வாதம் (80, மலக்கட்டு, கபநோய், வாந்தி, உஷ்ணவாயு குணமாகும்

அட்டுப்பு (உப்பு)

உபயோகம்:—இதைக் கொடுக்க வாந்தி, தேகக்குத்தல் தீரும்.

இந்துப்பு. (உப்பு)

உபயோகம்:—கபநோய், வாதக்கடுப்பு, மலக்கட்டு, தலைநோய் பித்தம், அஜீர்ணம் குணமாகும்.

வளையலுப்பு (உப்பு)

உபயோகம்:—வயிற்றுவலி, சுரம், பிலீகம், இரைப்பு, கீல்பிடிப்பு, பித்தம், இவைகளுக்கு இதைக் கொடுக்க குணமாகும்.

கந்தி உப்பு. (உப்பு)

செய்கை:—உபயோகம்:—உஷ்ணகாரி, குடலண்டவாதம், அதிஸ்தூல ரோகம், இவைகளுக்கு இதைக் கொடுக்க குணமாகும்.

சவுக்காரம் (உப்பு).

உபயோகம்:—வயிற்றுவலி, உட்சூடு, வாதம், சிலேஷ்மம், இவைகளுக்கு இதைக் கொடுக்கலாம். இது விரேசனகாரி.

சத்திக்ஷாரம் (உப்பு)

உபயோகம்:—பிலீகம், அக்கினிமந்தம், க்ஷயம், காசம், வயிற்றுவலி, கிரகணி, கோழை, சிலேஷ்மம், இவைகளுக்கு இதைக் கொடுக்க குணமாகும்.

அப்பளகாரம் (உப்பு)

உபயோகம்:—கபரோகம், குடல்பெருக்கு, வாதம், குன்மம், கீல்வாதம், உப்பிசம், இவைகளுக்கு இதை கொடுக்கப்படும்.

சவ்வர்ச்ச உப்பு. (உப்பு)

உபயோகம்:—வயிற்றுவலி, பித்தசுரம், கீல்வாதம் தீரும்.

பிடாலுப்பு (உப்பு)

உபயோகம்:—மந்தம், அஜீர்ணம், தீரும். தீபனகாரி.

எவக்ஷாரம். (உப்பு)

உபயோகம்:—சுவாசம், காசம், மேகம், ரணம, வீக்கம், கிரகணி, உத

ரமேகம் முதலியவைகளுக்கு இதைக் கொடுக்கப்படும்.

தும்பக்ஷாரம். (உப்பு)

உபயோகம்:—சுவாசம், காசம், சோகை, குன்மம், நீரும்.

உமிலக்ஷாரம் (உப்பு)

உபயோகம்:—வாதக்குடல்விருத்தி, பித்தசுரம், குன்மம், வாதம், நீரும்.

அயச்செந்தூரம்—Oxide of Iron—அக்ஸைட் ஆப் ஐரன்.

குணம்:—இது சிவப்பாயும் தூளாயும் இருக்கும். ஜலத்தில் கரையாது.

செய்கை:—பலகாரி.

உபயோகம்:—இதைச் சாப்பிடும்போது அடிக்கடி பேதிக்குக்கொடுத்து துர்மலத்தை வெளிப்படுத்தினால் மருந்தின் குணத்தை அதிகரிக்கும். இதை மந்தாக்கினி, பாண்டு, முகஜன்னி, சூதகக்கட்டு, நடுக்கல், கிருமி, கீல்வாதம், இருதயத் துடிப்பு, மதுமூத்திரம், குழந்தையின் இசிவு, கக்கிருமல், காந்தி முதலிய பற்பல பலக்ஷயரோகங்களுக்கு கொடுக்க வெகு குணத்தைத் தரும்.

அளவு:—5 முதல் 30 கிறேன்ஸ் கொடுக்கலாம்.

அன்னபேதி—Sulphate of Iron—ஸல்பேட் ஆப் ஐரன்.

குணம்:—இது புளிப்பும், துவர்ப்புமுள்ளது. கட்டியாய், பச்சை நிறமாயிருக்கும். ஜலத்தில் கரையும்.

செய்கை:—பலகாரி, ருதுவர்த்தனகாரி, கிருமிநாசகாரி, ஸங்கோசனகாரி, கால கிரமமாய் வரும் ரோகங்களைத்தடுக்கும்.

உபயோகம்:—அயமருந்துகளுக்குள் இது தான் வெகு சிரேஷ்டமானது. இதை அடிக்கடி கொடுக்கப்படும். பாண்டு, மதுமூத்திரம், காசம், பலஹீனம், சூதகக்கட்டு, கர்ப்பப்பிரமேகம், இரைப்பை ரணம், மருந்திட்ட பயித்தியம், கக்கிருமல், முதலியவைகளுக்கு இதைக் கொடுத்தால் தவறாமல் குணத்தைக்காட்டும்.

அளவு:—1 முதல் 5 கிறேன்ஸ் கொடுக்கலாம்.

ஐயோடைட் ஆப் ஐரன்—Iodide of Iron.

குணம்:—இந்த உப்பு கறுப்பும் ஊதாயும் கலந்த நிறமாயிருக்கும். விறு

விறுப்பும், துவர்ப்பும், உள்ளது. வெகு சீக்கிரத்தில் நீராகிவிடும். ஜலத்திலும் சாராயத்திலும் கரையும். இது சீக்கிரத்தில் கெட்டுப் போவதால் ஜாக்கிரதை செய்து வைத்துக்கொள்ள வேண்டியது.

செய்கை:—பலகாரி, ருதுவர்த்தனகாரி, ஸோபாநாசகாரி, வியதாபேதகாரி, மூத்திராவர்த்தனகாரி.

உபயோகம்:—பலஹீனம், சூதகக்கட்டு, கண்டமாலை, மேகரோகம், மாந்தரோகம், முதலியவைகளுக்குக் கொடுக்க இது வெகு சிலாக்கியமான மருந்து. சூதகசூலை, மதுமேகம், மேகப்படல் ரோகம், ரக்தக்ஷீண ரோகம் இவைகளுக்கு கொடுக்கலாம்.

அளவு:—1 முதல் 5 அல்லது 10 கிரேன்ஸ் கொடுக்கலாம்.

பேர்ரை அம்மோனியோ ஸைட்ரஸ்—Ferri Ammonia Citras.

குணம்:—இந்த உப்பு ஊதா நிறமுள்ள தகடுகளாய், சொகுசாய், கொஞ்சம் துவர்ப்பாயிருக்கும், ஜலத்தில் கரையும்.

செய்கை:—பலகாரி.

உபயோகம்:—குழந்தைகளுக்கும், நாசூகதேகமுள்ளவர்களுக்கும், பலத்தை உண்டாக்குவதற்குக் கொடுக்க இது தகுதியான மருந்து.

அளவு:—5 முதல் 10 கிரேன்ஸ் கொடுக்கலாம்.

நாகபஸ்மம்—Oxide of Zinc—ஆக்ஸைட் ஆப் ஜிங்க்.

குணம்:—இது வெள்ளைநிறம். ருசி, வாசனை இல்லை. ஜலத்தில் கரையாது.

செய்கை:—பலகாரி, அங்காசர்சனநாசகாரி.

உபயோகம்:—இதை சர்மரோகம், சூதகஜன்னி, குழந்தையின் இசிவு, கக்கிருமல், முதலியவைகளுக்குக் கொடுக்க வெகு குணத்தைத்தரும். சீழைவறட்ட ரணத்தின்மேல் தூவலாம்.

அளவு:—1 முதல் 5 கிரேன்ஸ் மாத்திரை செய்துக் கொடுக்கலாம்.

பால்துத்தம்—Sulphate of Zinc—ஸல்பேட் ஆப் ஜிங்க்.

குணம்:—இது வெள்ளையாயும், துவர்ப்பாயும், களிம்பு ருசியாயும் இருக்கும். ஜலத்தில் கரையும், காற்றுப்பட்டால் தூளாகும்.

செய்கை:—பலகாரி, அங்காகர்சன நாசகாரி, வமனகாரி, ஸங்கோசன காரி.

உபயோகம்:—இது இசிவு ரோகத்திற்கு அசித்த ஔஷதம். வெள்ளைக்கு நீர்த்தாரையில் அடிக்கப்படும் ஜலமாகவும், உள்நாக்கு வளர்ந்ததற்கு கொப்பளிக்கிற ஜலமாகவும், கண்ணோவுக்கு திவாலையாகவும் செய்து உபயோகிக்கலாம். நஞ்சுண்டோருக்கு இதைக் கொடுத்தால் அதி சீக்கிரத்தில் வாந்தியாக்கி நஞ்சைவெளிப்படுத்தும். குன்மம், சூதகஜன்னி, நடுக்கல், காக்கைவலி, குடைச்சல், முதலிய கொடிய ரோகங்களுக்குக் கொடுக்க வாயுவை ஒழித்துக் குணத்தைக் காட்டும். பேதி, ரத்தவடிதல், இவை கள்நிற்க இது உபயோகமுள்ளது. அளவுக்கு அதிகமானால் விஷமிக்கும்.

அளவு:—1 முதல் 2 கிறேன்ஸ் தினம் 2—3 தடவைக்கொடுக்கலாம். 10 முதல் 20 கிறேன்ஸ் ஜலத்தில் கொடுக்க வாந்தியாகும். 1 முதல் 3, கிறேன்ஸ் ஒரு அவுன்ஸ் ஜலத்தில் கரைத்து கண்ணோவுக்கும்; நீர்தாரையில் அடிக்கும் ஜலமாகவும் உபயோகிக்கலாம்.

விலிரியனேட் ஆப் ஜிங்க்—Valerianate of Zinc.

தூலம்:—இது வெள்ளையாயிருக்கும், தீ நீரில் கரையும்.

செய்கை:—அங்காகர்சன நாசகாரி, பலகாரி.

உபயோகம்:—இது நடுக்கல், குடைச்சல், காக்கைவலி, சூதகஜன்னி இவைகளுக்குக் கொடுக்க தவறாமல் நன்மை செய்யும். இதைக் கொடுக்க நரம்புகளுக்கு பலத்தை உண்டாக்கி நரம்பைப்பற்றிவரும் சகல ரோகங்களையும் குணமாக்க வல்லமை இதற்கு உண்டு.

அளவு:—1 முதல் 3 கிறேன்ஸ் மாத்திரை செய்து கொடுக்கலாம்.

துரிசு—Sulphate of Copper—ஸல்பேட் ஆப் காப்பர்.

தூலம்:—இது தற்செயலாய் விளைகின்றது. இது நீலநிறமாயும், துவர்ப்பாயும், வெகுட்டலாயும் இருக்கும். காற்றுப்பட்டால் தூளாகும். ஜலத்தில் கரையும்.

செய்கை:—பலகாரி, ஸங்கோசனகாரி, வமனகாரி, விரணகாரி.

உபயோகம்:—நஞ்சுண்டோருக்கு நஞ்சை வெளியாக்க இதை வாந்திக்குக் கொடுக்கப்படும். இதை ரணத்தின்மேல் போட துர்மாமிசத்தை நீக்கி அதி சீக்கிரத்தில் ஆற்றும். பேதி, முறைக்காச்சல், காக்கைவலி,

சூதகசன்னி, இவைகளுக்குக் கொடுக்க இது மகா நல்ல மருந்து. இதைக் கொடுக்க நரம்புகளுக்குப் பலத்தை உண்டாக்கி ரோகங்களை குணமாக்கும்.

அளவு:—½ (?) முதல் 1 கிறேன் பலத்தை உண்டாக்கவும், பேதியை நிறுத்தவும், 4 முதல் 12 கிறேன்ஸ் வாந்தியாக்கவும் கொடுக்கப்படும்.

மிருதார்சிங்கி—Oxide of Lead—ஆக்ஸைட் ஆப் லெட்.

குணம்:—இது படைப்படையாய் சேர்ந்து சிவப்பு பசுமை நிறமாய் இருக்கும். ஜலத்தில் கரையாது.

செய்கை:—உபயோகம்:—இதை உள்ளுக்குக் கொடுக்கக் கூடாது. பிளாஸ்திரி செய்து ரணங்களுக்குப் போடப்படும்.

(இங்கிலீஷ்) ஈயச்சேந்தூரம்.

ரெட் ஆக்ஸைட் ஆப் லெட்—Red Oxide of Lead.

குணம்:—இது சிவப்பாயும், பளுவாயுமிருக்கும். ஜலத்தில் கரையாது.

செய்கை:—உபயோகம்:—இதை உள்ளுக்குக் கொடுக்கக் கூடாது இதை பிளாஸ்திரி செய்து ரணங்களுக்குப் போடப்படும்.

ஐயோடைட் ஆப் லெட் —Iodide of Lead,

குணம்:—இது மஞ்சள் நிறமுள்ள பஸ்மம். ருசி, வாசனையில்லை. நீரில் கரையும்.

செய்கை:—வியாதாபேதகாரி, ஸோபாநாசகாரி.

உபயோகம்:—மேக ரோகங்களால் உண்டாகும் சகல கட்டிகளையும் கரைக்க உள்ளுக்குக் கொடுக்க இது வெகு நல்ல மருந்து.

அளவு:—½ முதல் 2 கிறேன்ஸ் கொடுக்கலாம்.

வங்க உப்பு—Sugar of Lead—ஷுகர் ஆப் லெட்.

குணம்:—இந்த உப்பு வெள்ளை; தித்திப்பு, துவர்ப்பு, உள்ளது. காடி வாசனை வீசும். ஜலத்திலும் சாராயத்திலும் கரையும்.

செய்கை:—சமனகாரி, ஸங்கோசனகாரி.

உபயோகம்:—இது ஜலத்தை வறட்டும். ஆதலால் ரத்தபேதி, வாந்திபேதி, ரத்தகாசம், ரத்தவாந்தி, ரத்தபிரமேகம் முதலிய மகா கடூரமான ரோகங்களுக்கு அனுபானங்களில் கொடுக்கவெகு குணத்தைத்தரும், இதை

ஜலத்தில் கரைத்து நரம்புத்தடிப்பு, காயம், அக்கினிரணம், வீக்கம், இவை களுக்கு மெழுக்குப் போடப்படும். வெள்ளைக்கு இதை ஜலத்தில் கரைத்து நீர்த்தாரையில் அடிக்க அதிசீக்கிரத்தில் குணமாகும்.

அளவு:—1 அல்லது 2 முதல் 10 கிறேன்ஸ் உப்பை அவிடிக்ஆவிட் என்னும் காடியில் தினம் 2—3 தடவைக் கொடுக்கலாம்.

நைட்ரேட் ஆப் பிஸ்மத்—Nitrate of Bismuth.

குணம்:—இது வெள்ளை நிறம். ருசி வாசனை இல்லை. ஜலத்தில் கரையாது. அவிநீர் கலந்த வெடியுப்பு திராவகத்தில் கரையும்.

செய்கை:—பலகாரி, சங்கோஷணகாரி, சமனகாரி, வியதாபேதகாரி அழுகுதலைத் தடுக்கும்.

உபயோகம்:—மருந்துகளில் இது வெகு சிரேஷ்டமானது. வயிற்று வலி, குன்மம், தினிப்பை எரிச்சல், இசிவு, விரணம், குலை எரிவு, இவை களுக்கும், சந்நி பாதசுரம், க்ஷயம் இவைகளில் காணும் பேதி முதலியவை களுக்கு கொடுக்கலாம். பேதி, கிரகணி இவைகளுக்கு சோடா, அபினி இவைகளோடு கலந்து கொடுக்கலாம். 60 கிறேன்ஸுக்கு 1 அவுன்ஸ் ஜலம் கலந்து பிரமேகம், வெள்ளை, இவைகளுக்கு பீச்சலாம். முலைக்காம்பு, உதடு வெடிப்புக்கு மேலே உபயோகிக்கலாம் ஜலதோஷம், நாசிகாதுவாரதாபனம் இவைகளுக்கு நஸ்யமிடலாம். காயம், அக்கினிவிரணம் இவைகளுக்கு மேலே உபயோகிக்கலாம்.

அளவு:—5 முதல் 20 கிறேன்ஸ் வீதம் தினம் 2—3 தடவைக்கொடுக் கலாம்.

ரசபஸ்மம்—Calomel—காலோமேல்.

குணம்:—இது சாம்பலாயும், பளுவாயும் மஞ்சள் கலந்த வெண்மையுள்ள தாயும் இருக்கும். ஜலத்திலும் சாராயத்திலும் கரையாது. இதின் குணங்களும் செய்கைகளும் ரசகர்ப்பூரத்திற்கு உண்டு.

செய்கை:—விரேசனகாரி, வியதாபேதகாரி, உஷ்ணகாரி, சமனகாரி.

உபயோகம்:—இது மேகத்தை அதிசீக்கிரத்தில் குணமாக்கும்; பித்த நீரை விருத்திக்கும். மூளை தாபனம், சுரம் (64), இருதயரோகம், காசம் (5), சன்னி (13), நேத்திரரோகம் (94), சீதபேதி, வாந்திபேதி, மாந்தம் (8), அதிசாரம் (6), குஷ்டம் (18), தலைவலி முதலிய அநேக கொடிய ரோகங்களுக்கு இதை கிரமத்துடன் அருந்தக்கொடுத்தால் உடனே குணத்தைத் தரும்.

மருந்துகளுக்குள் ரசபஸ்மம் மகா சிரேஷ்டமானது. இது சிலர் தேகத்துக்கு ஏற்றுக்கொள்ளாது. அவைகளுக்கு நீக்கி வைக்கவேண்டியது.

அளவு:—1 கிறேன் கொடுக்க வியாதாபேதகாரியாகும். 3 முதல் 5 கிறேன்ஸ் கொடுக்க பேதியாகும். 10 முதல் 20 கிறேன்ஸ் கொடுக்க சமனகாரியாகும். ரசபஸ்மத்துடன் அபினி சேர்த்துக் கொடுக்க சீக்கிரத்தில் வாய் பிடிக்கும்.

ஸிட்ரிக் ஆஸிட்—Citric Acid.

குணம்:—எலுமிச்சம்பழத்தினின்று எடுக்கிற இந்த உப்பானது கற்கண்டுக்கட்டிகளைப்போல் வெளுத்து அதிக புளிப்பாயிருக்கும். ஜலத்திலும் சாராயத்திலும் கரையும். ஒரு டேபில் ஸ்பூன் எலுமிச்சம்பழரசம் கொண்டது, 18 கிறேன்ஸ் ஸிட்ரிக் ஆஸிட்டுக்கு சமானம்.

செய்கை:—சீதளகாரி, திராவகாரி, மூத்திராவர்த்தனி, ஹஸ்மரீஹரகாரி.

உபயோகம்:—இந்த உப்பு முக்கியமாய் பொங்குநீர், சீதஜலம் இவைகளைச்செய்ய உபயோகமாகின்றது. உப்பை பொங்குநீர் செய்துகொடுத்தால் அழலைத்தணிக்கும், தாகமடங்கும், ஆரோக்கியமுண்டாகும். பொங்குநீர்கள் செய்யும் விதிகளை 25-வது அத்தியாயத்தில் காண்க.

அளவு:—5 முதல் 20 கிறேன்ஸ் கொடுக்கலாம்.

வாந்தி உப்பு—Tartar Emetic—டார்டர் எமேடிக்.

குணம்:—இது வெள்ளை; குமட்டல், துவர்ப்பு, கொஞ்சம் புளிப்புள்ளது. காற்றுப்பட்டால் மங்கலாகும், தீநீரில் கரையும்.

செய்கை:—சுவேதகாரி, வியதாபேதகாரி, கபஹரகாரி, வமனகாரி இது மகா சிரேஷ்டமான அவுஷதம்.

உபயோகம்:—இது அளவுக்கு அதிகமாய் சாப்பிட்டால் விஷமிக்கும். ஜாக்கிரதையாய் கொடுத்தால் சுவாசக்குழல், சவ்வு, மூளை, இருதயம் இவைகளில் காணும் பலமான ரோகங்கள் அதி சீக்கிரத்தில் குணமாகும். அன்றியும் ரணசன்னி, பிரசவகால சன்னி, சுரங்கள், பக்கசூலை, கைகால் பிடிப்பு, பித்தரோகம், கக்கிருமல், விரைவாதம், மூட்டு விலகிப்போகுதல் முதலிய அநேக கடூர ரோகங்களை நிவர்த்தி செய்வதில் இது மகா வல்லமையுள்ளது.

அளவு:— $\frac{1}{16}$ (வீசம்) முதல் $\frac{1}{8}$ அரைக்கால் கிறேன் நாள்பட்ட

வியாதிக்கும், அரைக்கால் முதல் மூன்று வீசம் $\frac{1}{16}$ கிறேன் வியர்வையாக்கவும், கபத்தை வெளியாக்கவும், 1 முதல் 2 கிறேன்ஸ் வாந்தியாக்கவும் கொடுக்கப்படும். வாந்தியாகும்போது வெந்த ஜலம் குடிக்க வேண்டியது.

சவ்வீரம்—வீரம்.

ஹைடிரார்ஜிரி பர்குளோரிடம்—Hydrargyri Perchloridum.

குணம்:—இது வெள்ளையாயும், காரமாயும், பளிங்குக்கல்லு அல்லது ஸ்படிக்கக்கல்லு போலேயும் இருக்கும். ஜலத்திலும் சாராயத்திலும் கரையும்.

செயகை:—வியதாபேதகாரி.

உபயோகம்:—சன்னி (13), சிலேஷ்மம் (20), மேகம் (20), சுவாசம் (5) காசம் (5), கண்டமாலை (18), குஷ்டம் (18), கொருக்கு, சருமரோகங்கள் இவைகளுக்கு இதை சுத்திசெய்து ஒரு நெல்லிடை இஞ்சிசாற்றிலாவது வெல்லத்திலாவது காலையிலும் மாலையிலும் கொடுத்துவர குணமாகும்.

மனோசிலை—Red Arsenic—ரெட் அரசனிக்.

குணம்:—கடையில் விற்பது வைப்புச்சரக்கு. செய்யும் விதம்:—ஒரு பங்கு கந்தகத்துடன் 2 பங்கு வெள்ளைப்பாஷாணம் சேர்த்து எரித்தால் மனோசிலையாகும். பிறவிச்சரக்கில் ஒரு பங்கு சுத்தபாஷாணமும் 2 பங்கு கந்தகமும் சேர்ந்திருக்கிறது.

செய்கை:—உபயோகம்:—சருமரோகம், சுவாசம் (5), குளிர்சுரம், குஷ்டம் (18), இவைகளுக்கு இதை சுத்திசெய்துக்கொடுக்க குணமாகும்.

அளவு:—($\frac{1}{16}$) வீசம் முதல் ($\frac{1}{8}$) அரைக்கால் கிறேன் கொடுக்கலாம்.

தாளகம்—Yellow Arsenic—எல்லோ அரசனிக்.

குணம்:—கடையில் விற்பது வைப்புச்சரக்கு. செய்யும் விதம்:—கந்தகமும் சுத்தப்பாஷாணமும் சரி எடை சேர்த்து உருக்கினால் தாளகமாகும். பிறவிச்சரக்கில் ஒரு பங்கு சுத்தபாஷாணமும் 3 பங்கு கந்தகமும் சேர்ந்திருக்கின்றது.

செய்கை:—உபயோகம்:—ஜிக்வாரோகம், தாடை ரோகம், குஷ்டம் (18), குளிர்சுரம், சுவாசம் (5), காசம் (5), க்ஷயம் (4), சிரஸ்தாபம் இவைகளுக்குக் கொடுக்க இது தகுதியான மருந்து.

அளவு:– $\frac{1}{16}$ கிரேன் முதல் $\frac{1}{4}$ கால் கிரேன் சுத்தி செய்து கொடுக்கலாம்.

உலாந்தாலிங்கம் – Cinnabar—ஸின்னபார்

குணம்:—வைப்புச்சரக்கானது சிவந்து பளுவாய் லிங்கம்போல் இருக்கும். ஜலத்தில் கரையாது. பிறவிச்சரக்கும் உண்டு.

செய்கை:—வியாதாபேதகாரி.

உபயோகம்:—இதை சுத்தி செய்து அனுபானத்தில் கொடுக்க சுரம் (64), வாதம் (80), அதிசாரம் (6), சந்நிபாதம் (13), அர்புதபுண், அதிமூத்திரம், கிரந்தி (9), குஷ்டம் (18), தேககுத்தல் முதலியவைகள் குணமாகும்.

அளவு:—4 முதல் 10 கிறேன்ஸ் சுத்திசெய்து கொடுக்க குணமாகும்.

(இங்கிலீஷ்) ரஜதபஸ்மம்.

ஆக்ஸைட் ஆப் ஸில்வர்—Oxide of Silver.

குணம்:—இது ஊதா நிறம்; வாசனையும் ருசியுமில்லை.

செய்கை:—பலகாரி, அங்காகர்சனநாசகாரி, சமனகாரி.

உபயோகம்:—குன்மம் (8), மந்தாக்கினி, ரத்தவமனம், சூலை எரிவு, குழந்தையின் நேடித்த பேதி, முதலியவைகளுக்கு இதைக் கொடுக்க தவராமல் சகுணத்தை தரும். தந்தி மேகம், வெள்ளை இவைகளுக்கு பன்றி நெய்யுடன் சேர்த்து நீர்த்தாரையில் உபயோகிக்கலாம்.

அளவு: —$\frac{1}{2}$ முதல் 1 கிறேன்ஸ் மாத்திரை செய்துக்கொடுக்கலாம்.

அபினி உப்பு—Morphine Hydrochloride

மார்பைன் ஹைட்ரோகுளோரைட்.

குணம்—இந்த உப்பு அபினியிலிருந்து எடுக்கப்படும். இது வெள்ளையாயும், அதிகசப்பாயுமிருக்கும். ஜலத்திலும் ஆல்கோஹாலிலும் கரையும், பொட்டிலுப்பு திராவகம் சேர்த்தால் சிவந்தநிறமாகும்.

செய்கை:—உபயோகம்:—அபினிக்கு உள்ள செய்கைகளெல்லாம் மார்பியாவுக்கு உண்டு; ஆனால் தலைவலி, விகாரம் இந்த துர்குணங்களை உண்டாக்காது. உஷ்ணப்படுத்துகிற குணமுமில்லை. அபினியைக் கொடுக்கும்

ரோகங்களுக்கு இதைக் கொடுக்கலாம். இது நஞ்சு பதார்த்தம். அளவுக்கு அதிகமானால் விஷமித்துக்கொல்லும்.

அளவு: 1/16 வீசம் முதல் 1/2 அரை கிறேன் கொடுக்கலாம்.

காடிநாரம்—Nitrate of Silver—நைட்ரேட் ஆப் ஸில்வர்.

ரூபம்:—இது கட்டி அல்லது நீண்ட கம்பிகளாயிருக்கும். கட்டியானது வெள்ளையாயும், தெளிவாயுமிருக்கும், கம்பிகளானது அழுக்குப் படிந்த வெள்ளை நிறமாயிருக்கும். உடம்பில்பட்டால் கருத்து புண்ணாகும்.

செய்கை:—அங்காகர்சன நாசகாரி, சமனகாரி, பலகாரி, சங்கோசனகாரி, ரணகாரி, சோணகாரி, உச்சாககாரி.

உபயோகம்:—இது சரீரத்தின் மேல்ப்பட்டால் புண்ணாகும், கொப்பளிக்கும். இதை வெந்நீரில் கரைத்து கண்ணோவுக்கு கண்களிலும், ஸ்திரீகளின் வெள்ளைக்கு யோனியிலும், புருஷர்களின் வெள்ளைக்கு நீர்தாரையிலும் உபயோகித்தால் உடனே குணத்தைத்தரும். ரணத்தின் துர்மாமிசத்தை நீக்க இதைப் போடப்படும். கில்வாத வீக்கத்தின்மேல் இதனால் கோடு கோடாக இழுத்தால் குணமாகும். தேள் கொட்டல், நாய்க்கடி, பாம்புக்கடி முதலியவைகளுக்குப் போட்டு புண்ணாக்கினால் குணமாகும். சீதபேதி, அதிசாரம், வலிப்பு, குன்மம், இரைப்பையின் புண், கூத்தாடும் சன்னி, காக்கைவலி, கக்கிருமல், சுவாசகாசம், சூதகக்கட்டு, தலைவலி, ரஸப்பிடிப்பு, ரக்தவமனம், அன்னாசயாணம், க்ஷயரோகத்தில் முதுகு உருகிப்போகுதல், இவைகளுக்கு உள்ளுக்குக்கொடுத்தால் வெகு நன்மை செய்யும். மூட்டு வீக்கம், அக்கி, குய்யரணம், மேகரணம், ஆறுதரணங்கள், இவைகளுக்கு மேலே தடவலாம்.

அளவு:—1/8 முதல் 1/4 கிறேன் வீதம் மாத்திரை செய்து கொடுக்கவும். 1 அவுன்ஸ் ஜலத்தில் 2 முதல் 10 கிறேன்ஸ் போட்டு மேலுக்குப்போடலாம்.

இங்கிலீஷ் தங்க பஸ்மம்.

பேர் ஆக்ஸைட் ஆப் கோல்ட்—Peroxide of Gold.

குணம்:—இது ஒருவித கருப்பு நிறமாயிருக்கும், ஜலமிட்டால் மஞ்சள் நிறமாகும். ஜலத்தில் கரையாது. வெளிச்சம் அல்லது சூடு பட்டால் கெட்டுப்போகும்.

செய்கை:—உபயோகம்:—உட்சுரம், மூலம், சன்னி, வலிப்பு, வாதம், பித்தம், குன்மம், பாண்டு, சூலே, குஷ்டம், மேகம் முதலிய கடூர ரோகங்களுக்கு இதைக் கொடுக்க தகுதியானது.

அளவு:—ஒரு கிரேனில் பத்தில் ஒரு பாகம் முதல் $\frac{1}{4}$ (வ) கிரேன் கொடுக்கலாம்.

ஐயோடைட் ஆப் மர்க்கியுரி—Iodide of Mercury.

செய்கை:—உஷ்ணகாரி, வியதாபேதகாரி.

உபயோகம்:—இதில் ரசம், ஐயோடையின் இவைகள் சேர்ந்திருக்கிறது. கறுப்பு நிறமான சீசாவில் போட்டு காற்றுப்புகாமல் வைக்கவும். இது நஞ்சு பதார்த்தம். இது ரசத்தின் குணத்தைக்காட்டும். குஷ்டம், மேகம் முதலிய கடூர ரோகங்களுக்குக் கொடுக்க இது வெகு தகுதியான மருந்து.

அளவு:—1 முதல் 3 கிரேன்ஸ் கொடுக்கலாம்.

ஹைடிரார்ஜிரி பின்ஐயோடியம்—Hydrargyri Biniodidum.

குணம்:—இது மிகுந்த சிவப்பாய் இருக்கும், ஜலத்தில் கரையாது. ஆல்கோஹாலில் கரையும்.

உபயோகம்:—ஒரு திராம் வெண்ணெயிலாவது, மெழுகு பிளாஸ்திரியிலாவது இந்த மருந்து 8 கிரேன்ஸ் வைத்து மிஸ்ரித்து ஆறு தாரணங்களுக்குபோட வெகு சீக்கிரத்தில் ஆற்றும். உள்ளுக்குக் கொடுக்கக்கூடாது,

ஸல்பேட் அப் குவைனு—Sulphate of Quina.

குணம்:—இந்த உப்பு வெள்ளையாயும், பளபளப்பாயும், நீண்ட கம்பிகள் போலிருக்கும். காற்றுப்பட்டால் சூரணமாகும். வெகு கசப்புள்ளது. குளிர்ந்த ஜலத்தில் கரையாது.

செய்கை:—பலகாரி, காலக்கிரமமாய் வரும் ரோகங்களை குணமாகும்.

உபயோகம்:—குளிர் சுரத்துக்கு இது சஞ்சீவி; சுரம் இல்லாதபோது குறைந்த அளவில் அடிக்கடியும்; குளிர் வருமுன் அதிக அளவில் ஒரேத் தடவையில் கொடுக்க வேண்டியது. இதனால் மலபந்தம், தலைவலி, உஷ்ணம், காதில்இரைச்சல் இவைகள் உண்டாகும். இதை அதிகமாய் சாப்பிட்டு காது செவிடு ஆனதும் உண்டு. காதில் இரைச்சல் கண்டவுடனே மருந்தை நிறுத்தவும். இதை கொடுப்பதற்கு முன் மலத்தை கழித்தால்

வெகு குணத்தைக்காட்டும். இதை சிரோபாரம், வயறுதாபனம் இவைகள் கண்டிருக்கும்போது கொடுக்கலாகாது. இத்துடன் அன்னபேதியைச் சேர்த்துக் கொடுத்தால் பசியை உண்டாக்கும்.

அளவு:—1 முதல் 10 கிரேன்ஸ் கொடுக்கலாம். முறைக் காய்ச்சலுக்கு 10 முதல் 20 கிரேன்ஸ் சுரம் வருமுன் கொடுக்கவும். இதை மாத்திரைகள் செய்தாவது அல்லது அத்துடன் வினாவின கந்தகத்திராவகம் 5 துளி விட்டு ஜலம் சேர்த்து கொடுக்கவேண்டியது.

வெலிரியனேட் ஆப் குவைனு—Valerinnate of Quina.

குணம்:—இந்த உப்பு வெகு கசப்புள்ளது.

செய்கை:—அங்காகர்சன நாசகாரி, அல்ப உஷ்ணகாரி, பலகாரி.

உபயோகம்:—இதைக் கொடுக்க வலிகளோடு கூடிய ஜன்னிகள் உடனே தீரும். அடிக்கடி வரும் நரம்பைப்பற்றிய வியாதிகளுக்கு இது சஞ்சீவி.

அளவு:—2 கிரேன்ஸ் தினம் 3 தடவைக் கொடுக்கலாம். வாதகுடைச்சலுக்கு குடைச்சல்க்கான ஒரு மணிக்குமுன் இதை இரட்டித்த அளவில் கொடுக்கவும். இதை மாத்திரைகள் செய்துக்கொடுக்கலாம்.

ஆர்ஸினேட் ஆப் குவைனு—Arsenite of Quina.

உபயோகம்:—குளிர்சுரத்திற்கு இது வெகு நல்ல மருந்து. இதைக் கொடுத்தால் தவறாமல் நன்மை செய்யும்.

அளவு:—($\frac{1}{10}$) ஒரு கிரேனில் பத்தில் ஒரு பாகம் முதல் $\frac{1}{4}$ (வ) கிரேன் வரையில் மெத்த ஜலத்தில் கரைத்துக் கொடுக்க வேண்டியது.

ஸைட்ரேட் ஆப் ஐரன் அண்ட் குவைனு—Citrate of Iron & Quina.

குணம்:—இந்த உப்பு ஜலத்தில் கரையும்.

செய்கை:—பலகாரி.

உபயோகம்:—காலக்கிரமமாய் வரும் ரோகங்களை குணமாகும். இரத்தத்தை விருத்திக்கவும், தேகத்தில் பலத்தையுண்டாக்கவும் வல்லமை இதற்கு உண்டு.

அளவு:—2 முதல் 5 கிரேன்ஸ் தினம் 3 தடவை கொடுக்கலாம்.

ஸான்டோனின்—Santonine.

குணம்:—இந்த உப்பு பிரகாசமாயும், தகடுகளாயும் இருக்கும். வெளி

ச்சம்பட்டால் மஞ்சள் நிறமாகும். கசக்கும், ஜலத்தில் கரையாது. சாராயத்தில் கரையும், சூடுபட்டால் பறந்து போகும்.

செய்கை:—கிருமிநாசகாரி, உஷ்ணகாரி.

உபயோகம்:—இதைக் கொடுத்தால் உருண்ட நாகப்பூச்சி, திமிர்ப்பூச்சி இவைகளைக்கொன்று வெளிப்படுத்தும். இது சிறு குழந்தைகளுக்கும் தகுதியான மருந்து.

அளவு:—4 முதல் 6 கிறேன்ஸ் அல்லது இன்னும் அதிகமாய் பெரியவர்களுக்கும்; ½ (?) முதல் 2 கிறேன்ஸ் வயதுக்குத்தக்கபடி குழந்தைகளுக்கும் கொடுக்கவேண்டியது. ஸ்காமோனி, ரேவல்சின்னி, அயச்செந்தூரம், சிற்றாமணக்கெண்ணெய் இவைகளில் எதிலாவது சேர்த்து குழந்தைகளுக்குக் கொடுக்கலாம்.

எட்டிக்கோட்டை உப்பு—Strychnine—ஸ்டிரிக்னைன்.

குணம்:—இந்த உப்பு பழுப்பாயும், மணலைப்போலும், கசப்பாயுமிருக்கும். ஜலத்தில் மெத்த கரையாது. ஆல்கோஹாலில் கரையும்.

செய்கை:—உபயோகம்:—எட்டிக் கொட்டையின் செய்கையே இதற்கு உண்டு. அதை உபயோகிக்கும் ரோகங்களுக்கு இதையும் உபயோகிக்கப்படும். நித்திரையில் கை கால் சதைகளில் இசிவு கண்டால் மருந்து தேகத்தில் பற்றினதற்கு அடையாளம்; மருந்து உடனே நிறுத்தவும். அளவுக்கு அதிகமானால் ரணஜன்னிக்குறிகள் காணும், தாடைக்கிட்டிக் கொள்ளும். இது சிலருக்கு தேகத்தில் சேர்ந்து ஒரே தடவையாய் குணத்தைக் காட்டும். 3 வயதுள்ள ஒரு பெண் ¾ முக்கால் கிறேன் உப்பை சாப்பிட்டு இறந்து போனதும் உண்டு. ஆகையினால் இதை வெகு ஜாக்கிரதையாய்க் கொடுக்கவேண்டியது. குளோரோபாரத்தில் இந்த உப்பைக் கரைத்து தேள் கொட்டலுக்கு தடவி தேய்க்க குணமாகும். இது கைகண்ட முறை.

பல்ஸாடில்லா—Pulsatilla.

குணம்:—இது ஓர் செடியின் புஷ்பம். இந்த புஷ்பத்திலிருந்து அனிமோனிக் ஆஸிட் (Anemonic Acid) செய்யப்படும்.

செய்கை:—வியதாபேதகாரி, அங்காகர்ஷண நாசகாரி, மூத்திராவர்த்தினி, உச்சாககாரி, மேலுக்குப் பட்டால் தூலக்ஸ் போடகாரி.

உபயோகம்:—சூதகக்கட்டு, சூதக சன்னி, இவைகளுக்கு காலோமை யின் என்னும் மருந்துடன் சேர்த்துக் கொடுக்க குணமாகும். விரைவீக்கம், விரைவாதம் இவைகளுக்கு இது நல்ல மருந்து.

அளவு:—டிங்சர் 5 முதல் 30 துளி, Extractum Liquidum 1 முதல் 5 துளி. விரைவீக்கத்திற்கு 2 முதல் 3 துளி வீதம் 2 மணிக்கு ஒரு முறை தினம் 30 துளி அளவுக்கு கொடுக்கலாம்.

துவர் உப்பு—Tannic Acid—டானிக் ஆஸிட்.

குணம்:—இந்த உப்பு துவர்ப்புபதார்த்தத்திலிருந்து எடுக்கப்படும். இது மஞ்சள் கலந்த நிறமாயும், பிரகாசமாயும், துவர்ப்பாயும் இருக்கும், ஜலத்தில் கரையும்.

செய்கை:—ஸங்கோசனகாரி.

உபயோகம்:—ரத்தபெருக்கு, பெரும்பாடு, துர்பலருக்கு காணும்பேதி, வியர்வை, இவைகளுக்குக் கொடுக்கப்படும். மந்தாக்கினிக்கு கொடுக்க அவ்வளவு தகுதியானது அல்ல. ரணத்தின் மேல்போட சீழ்வறட்டும்.

அளவு:—½ (7) முதல் 2 கிரேன்ஸ் ஜலத்தில் கொடுக்கலாம்.

மாசிக்காய் உப்பு—Gallic Acid—காலிக் ஆஸிட்.

குணம்:—இந்த உப்பு மாசிக்காயிலிருந்து எடுக்கப்படும். வெள்ளை மஞ்சள் கலந்த நிறமாய் இருக்கும். காற்றில் கெடாது. கொஞ்சம் துவர்ப்பாய் இருக்கும். பிறகு தித்திக்கும்.

செய்கை:—ஸங்கோசனகாரி.

உபயோகம்:—இதை வெந்நீரில் போட்டு வாய்க்கொப்பளித்தால் வாய் ரணம் குணமாகும். இதை ரத்த காசம், ரத்தபிரமேகம், ரத்தவமனம், பெரும்பாடு, அதிவியர்வை முதலிய ரோகங்களுக்குக் கொடுக்க வெகு நன்மை செய்யும். இது மூத்திரத்தில் இறங்கி யிருப்பதை அன்னபேதியை போட்டுப் பார்த்தால் தெரியும்.

பெல்லடோனா உப்பு.

ஸல்பேட் ஆப் அட்ரோபிய்—Sulphate of Atropia.

குணம்:—இந்த உப்பு பெல்லடோனா வேரிலிருந்து எடுக்கப்படும்.

செய்கை:—அங்காகர்சன நாசகாரி, வேதனாசாந்தகாரி.

உபயோகம்:—பெல்லடோனாவுக்கு உள்ள செய்கைகளே இதற்கும்

உண்டு. ஆனால் விசேஷித்து இருக்கும். இதில் 8 கிறேன்ஸ்யை ஒரு அவுன்ஸ் வெந்நீரில் கரைத்து கண்ணிலிட கண்தாரை விரியும். நேத்திரப் படல் ரோகத்திற்கு இதை முக்கியமாய் உபயோகிக்கப்படும். ரணவைத்தியர்களுக்கு இது உபயோகமுள்ள மருந்து. இதை உள்ளுக்குக்கொடுத்தால் கொன்று விடும்.

சாம்பிருணி பதங்கம்—Benzoic Acid—பென்ஜாயிக் ஆஸிட்.

குணம்:—இது வெள்ளையாய், மிருதுவாய், சிறுசம்பிகளாய் இருக்கும். புளிப்பும் காரமும் உள்ளது.

செய்கை:-கபஹரகாரி.

உபயோகம்:—இது இருமல் ரோகத்துக்கு நல்ல மருந்து. தனியாய்க் கொடுப்பது அரிது, கபஹரகாரிகளோடு இதை சேர்த்து அதிக ஜலமிட்டுக்கொடுக்கவேண்டியது.

அளவு:—5 முதல் 30 கிறேன்ஸ் கொடுக்கலாம்.

மண்டூரம்.

செய்கை:--தாருட்டியகாரி.

உபயோகம்:—அஸ்திசுரம், கபரோகம், மகோதரம், பாண்டு, சோபை, வீக்கம், காசம், இரைப்பு, முதலியவைகளுக்கு இதை செந்தூரமாக்கிக் கொடுக்கப்படும்.

காரீயம்—Black Lead—பிளாக் லெட்.

உபயோகம்:—இதை பஸ்மமாக்கி குஷ்டம், குன்மம்: வலிப்பு இவைகளுக்குக் கொடுக்கப்படும்.

வெள்ளீயம்—White Lead—வைட் லெட்.

உபயோகம்:—பிரமேகம், கபரோகம், மேகம், சுரம், சுவாசம் இவைகளுக்கு இதை பஸ்மமாக்கி கொடுக்கத்தீரும்.

தாம்பிரம்—Copper—காப்பர்.

உபயோகம்:—மகோதரம், சந்நிபாதம், வெண்குஷ்டம், திரிதோஷம், குன்மம், பிலீகம், கபரோகம், காசம், தாதுநஷ்டம் முதலிய பற்பல கரோரோகங்களுக்கு இதை செந்தூரமாக்கிக் கொடுக்கப்படும்.

முத்து—ஜீவரத்தினம்.

செய்கை:—வீரியவர்த்தனகாரி.

உபயோகம்:—சோகை, அஸ்திசுரம், தேசஎரிச்சல் இவைகளுக்குக் கொடுக்க குணமாகும். வீரியவிருத்தியாகும்.

பவளம்.

உபயோகம்:—இதை பஸ்மமாக்கி, கபரோகம், சுரம், இருமல், காசம், இவைகளுக்குக் கொடுக்க குணமாகும்.

ரசகர்ப்பூரம்—பூரம்.

உபயோகம்:—இதை சுத்திசெய்து ½ (௨) முதல் 1½ (௪௨) குன்றிமணி யிடை அநுபானத்திலிட பித்தசூலை, வாதபிடிப்பு, வயிற்றுநோய், சிலேஷ்மம் (20), மேகம் (20), வாதம் (80), குணமாகும்.

கந்தகத்திராவகம்—Sulphuric Acid—ஸல்புரிக் ஆசிட்.

குணம்:—இது தனமாயும், அதிபுளிப்பாயும் இருக்கும். தேகத்தில் பட்டால் புண்ணாகும். ஜலத்துடன் சேர்த்தால் ஜலம் சூடாகிவிடும்.

செய்கை:—விரணகாரி, வேஷாணகாரி, ஸங்கோசனகாரி.

உபயோகம்:—இதை உள்ளுக்குச் சாப்பிடக்கூடாது. பட்டவிடம் புண்ணாகும். இத்துடன் ஜலம் சேர்த்து செய்யப்படும் விளாவின கந்தகத் திராவகத்தை உள்ளுக்குக் கொடுக்க உபயோகமுள்ளது. அதை அடியில் சொல்லப்படும்.

விளாவின கந்தகத்திராவகம்.

டைலுடெட் சல்புரிக் ஆசிட்—Diluted Sulphuric Acid.

செய்முறை:—15 டிராம்ஸ் கந்தகத்திராகவத்தை, 20 அவுன்ஸ் ஜலத்துடன் கொஞ்சங் கொஞ்சமாய் விட்டு சேர்த்துக் கொள்ள வேண்டியது. அதிக சூடுண்டாகும்.

செய்கை:—சீதளகாரி, ஸங்கோசனகாரி, பலகாரி.

உபயோகம்:—இதை தூர்பலம், ரத்தவாந்தி, அதிவியர்வை, காசம், ரத்தகாசம், நீடித்த சருமரோகங்கள், அதிசாரம், அஜீர்ணம், விக்கல், வாந்திபேதி, முதலிய சரோரோகங்களுக்கு கொடுக்க வெகுகுணத்தைத்தரும். வாந்தியை நிற்க இது வெகு நல்ல மருந்து. பித்தரோகங்கள், சுரம், முகத்தில் ரணம், அஸ்திரணம், சதையைத்தின்னும் ரணம் இவைகளுக்குக் கொடுக்க இது நல்ல மருந்து.

அளவு:—4 முதல் 30 துளி நிலவேம்புக் கஷாயத்தில் கொடுக்கலாம். இதை பெருவிரலாவது, கிளாஸ் குழாயினாலாவது உறிஞ்சப் பற்களுக்குக் படாமல் சாப்பிட்டு சவட்டுப்பு கலந்த ஜலத்தால் வாயைக் கொப்பளித்து விடவேண்டியது.

சுறிஉப்புத்திராவகம்.

Hydrochloric Acid—ஹைட்ரோகுளோரிக் ஆசிட்.

குணம்:—நீர்தோஷமுடைய திராவகம் நிறமற்றதாயிருக்கும். ஆனால் சாதாரணமாய் மங்கலான மஞ்சள் நிறமுடையது. இதன் வாசனைப் பட்டால் மூச்சடைப்பு காணும்.

செய்கை:—விரணகாரி, காரமுள்ள நஞ்சு.

உபயோகம்:—இதை உள்ளுக்குச்சாப்பிடக்கூடாது. பட்டவிடம் புண்ணுகும். ½ (அரை) முதல் 1 திராம் சுறிஉப்புத்திராவகத்தை 4 அவுன்ஸ் ஜலத்தில் சேர்த்து வாயைக் கொப்பளிக்கவாவது, ரணங்களைக் கழுவவாவது உபயோகிக்கப்படும். இத்துடன் ஜலம் சேர்த்து செய்யப்படும். விளாவின சுறி உப்புத்திராவகத்தை உள்ளுக்குக்கொடுக்க உபயோகமுள்ளது அதை அடியில் சொல்லப்படும்.

விளாவின சுறிஉப்புத்திராவகம்.

Diluted Hydrochloric Acid—டையிலுடெட் ஹைட்ரோகுளோரிக் ஆஸிட்.

செய்முறை:—1 அவுன்ஸ் சுறிஉப்பு திராவகத்துடன் 3 அவுன்ஸ் தீ நீர் விட்டு சேர்த்துக்கொள்ளவும்.

செய்கை:—பலகாரி, சீதளகாரி, கிருமிநாசகாரி பூதிகந்த நாசகாரி.

உபயோகம்:—ஜீர்ணஉறுப்புகளுக்கு பலத்தை உண்டாக்கவும், வயிற்றில் கிருமிகளை உற்பத்தி ஆக்காமல் செய்யவும், இதற்கு வெகு வல்லமை உண்டு. மூத்திரரோகம், கொறுக்கை, விஷசுரம், சகல சுரங்கள் இவைகளுக்கு இதைக்கொடுக்க, உடனே குணத்தை அறியலாம். சக்கிருமல், மந்தம், அதிவியர்வை, பசியில்லாமை இவைகளுக்கு நல்ல மருந்து.

அளவு:—10 முதல் 20 துளி ஜலத்திலாவது, கசப்பு கஷாயத்திலாவது கொடுக்கலாம். இதைச்சாப்பிடும் விதிகள் விளாவின கந்தகத்திராவகத்தைச் சாப்பிடும் விதிகளை அனுசரிக்கவும்.

பொட்டிலுப்புத்திராவகம்—Nitric Acid—நைட்ரிக் ஆசிட்.

குணம்:—தோஷமற்ற பொட்டிலுப்பு திராவகத்துக்கு நிறமில்லை.

மார்பியாவுடன் (அபினி உப்பு) சேர்ந்தால் சிவந்துபோகும். பட்டவிடம் புண்ணாகும்.

செய்கை:—காரமுள்ள நஞ்சு, விரணகாரி.

உபயோகம்:—இதை உள்ளுக்குச் சாப்பிடக்கூடாது. இதனால் விஷக்கடிகளைப்புண்ணாக்கப்படும். இதை தேங்காய் எண்ணெயுடன் சேர்த்து சொறி, சிரங்கு முதலிய சரும ரோகங்களுக்குப்பூசிவர குணமாகும். இந்த திராவகத்துடன் ஜலம் சேர்த்து செய்யப்படும், விளாவின பொட்டிலுப்பு திராவகத்தை உள்ளுக்குக் கொடுக்க உபயோகமுள்ளது. அதை அடியில் காண்க.

விளாவின பொட்டிலுப்புத் திராவகம்.

Diluted Nitric Acid—டைலுடேட் நைட்ரிக் ஆசிட்.

செய்முறை:—3 அவுன்ஸ் பொட்டிலுப்புத் திராவகத்தை, 17 அவுன்ஸ் நீரில் விட்டு சேர்த்துக்கொள்ளவும்.

செய்கை:—பலகாரி, சீதளகாரி, வியதாபேதகாரி.

உபயோகம்:—மூத்திரரோகம், கொருக்கை, மேகவாதம், பக்கச்சூலை, மேகப்புடை, பிலீகம், அதிமூத்திரம், நீர்க்கோவை, சுரம், அஜீர்ணம், பேதி, குலைஎரிவு, முதலிய பயங்கரமான ரோகங்களுக்கு இது அடுத்த அவுஷதம்.

அளவு:—7 முதல் 30 துளி ஜலத்தில் கொடுக்கலாம். இதைச்சாப்பிடும் விதிகள் விளாவின கந்தகத்திராவகத்தைச் சாப்பிடும் விதிகளை அனுசரிக்கவும்.

நைட்ரோ ஹைட்ரோகுளோரிக் ஆசிட்—Nitro Hydrochloric Acid.

குணம்:—இது பசுமையான பொன்னிறமாய் இருக்கும்; பொன்னைக் கரைத்துவிடும். இதின் வாசனைப்பட்டால் மூச்சடைப்பு காணும்.

செய்முறை:—ஒரு அவுன்ஸ் பொட்டிலுப்புத் திராவகத்துடன் இரண்டு அவுன்ஸ் கறிஉப்பு திராவகம் சேர்த்து கற்கார்க்குடைய பச்சை சீசாவில் போட்டு குளிர்ச்சியான இடத்தில் வைக்கவேண்டியது.

செய்கை:—காரமுள்ள நஞ்சு, விரணகாரி.

உபயோகம்:—கறிஉப்பு திராவகம், பொட்டிலுப்பு திராவகம் இவைகள் ஜலத்தில் விளாவி உபயோகிப்பது போலவே இதையும் ஜலத்தில் விளாவிக்

கொடுத்தால் வியாதிகளை நீக்கி தேகத்துக்குப்பலத்தைக் கொடுக்கும். இதற்கு துவர்ப்பு குணமும் உண்டு. இதை மூத்திரரோகங்கள், மேகரோகங்கள், பித்த பாண்டுரோகம், வாந்திபேதி, சருமரோகங்கள் முதலிய பற்பல கபரோகங்களுக்குக் கொடுக்க வெகு நன்மை செய்யும்.

அளவு:—அதிக ஜலமிட்டு விளாவின திராவகத்தில் 8 முதல் 20 துளி கொடுக்கலாம். இதைச் சாப்பிடும் விதிகள் விளாவின கந்தகத்திராவகத்தைச்சாப்பிடும் விதிகளை அனுசரிக்கவும்.

ஸ்பிரிட் ஆப் நைட்ரிக் ஈதர்—Spirit of Nitric Ether.

குணம்:—இது வெள்ளையாயும், இனிப்பாயும், சில்லென்று இருக்கும்.

செய்கை:—அங்காகர்சன நாசகாரி, உற்சாககாரி, மூத்திர வர்த்தனகாரி, சுவேதகாரி.

உபயோகம்:—இதை மூத்திரரோகம், மகோதரம், சுரம், நீர்க்கட்டு, நீர்எரிவு முதலிய அநேக கொடிய ரோகங்களுக்குக் கொடுக்க, தவறாமல் நன்மை செய்யும்.

அளவு:—($\frac{1}{2}$) அரை முதல் 2 திராம் தகுந்த அனுபானங்களில் கொடுக்கவும்.

ஸல்பியுரிக் ஈதர்—Sulphuric Ether.

குணம்:—இது பரிசுத்தமாய், வெள்ளையாய், நல்ல வாசனையாய் இருக்கும். சீக்கிரதில் பறந்து விடும். தீப்பட்டால் பற்றிக்கொள்ளும். ஜலத்தைப்பார்க்கிலும் இது லேசானது.

செய்கை:—அல்ப உஷ்ணகாரி.

உபயோகம்:—இதைக் கொடுத்தால் சர்வாங்கம் உஷ்ணித்து அதிசீக்கிரத்தில் சாந்தமாகும். மார் அடைப்பு, சூலை, மாந்தம், நரம்புப்பற்றிய தலைவலி, இருதயத்துடிப்பு, மூர்ச்சை, சுவாசம், காசம், வயிற்றுவலி, சூதகசூலை, தொண்டைக் கம்மல், நரம்பைப்பற்றிய சகல ரோகங்களுக்கும் கொடுக்க இது வெகு சிரேஷ்டமானது: இதை அடிக்கடி கொடுக்க வேண்டியது. ஸஸ்திர வேலைக்கு நோய் தெரியாமலிருக்க குளோரோபாரம் என்னும் மருந்தை கண்டுபிடிப்பதற்கு முன் இதை முகரவைக்கப்படும். இப்போது ஸஸ்திர வேலைக்கு உபயோகப்படுத்துகிறதில்லை.

அளவு:—15 முதல் 60 துளி ஜலத்தில் கொடுக்கலாம்.

* வெள்ளைப்பாஷாணம்—White Arsenic—வைட் அர்ஸனிக்.

குணம்:—இது வெண்மையாயிருக்கும்; கடூர நஞ்சு.

செய்கை:—வியாதிப்ரதிகாரி, எரிச்சலைத்தரும் நஞ்சு, முறையாய் வரும் ரோகங்களைத் தடுக்கும். மேலே தடவினால் புண்ணாகும்.

பிரயோகம்:—இது முறையாய் வரும் ரோகங்களை குணமாக்க வல்லமையுள்ளது. நாள்பட்ட ஆறாத சரும ரோகங்களுக்கு இதைக்கொடுத்தால் வெகு சீக்கிரத்தில் குணமாகும். இது நஞ்சு பதார்த்தம். அளவுக்கு அதிகமானால் கெடுதி செய்யும். இதைக் கொடுக்க முறைக்காச்சல் செவ்வையாகக் கேள்க்கும். இந்த மருந்து குமட்டலாவது வாந்தியாவது எடுத்தால் அபினியைச்சேர்த்துக் கொடுக்கவும். ஆகாரம் சாப்பிட்டு அரை மணிநேரம் சென்றபிறகு பாஷாணசம்பந்த மருந்துகளைக்கொடுக்க வேண்

---

* பாஷாணங்களில் 64 சாதிகள் உண்டு. அவைகளை அடியில் காண்க.

32—பிறவிப்பாஷாணங்கள்:—1 வெள்ளைப்பாஷாணம் (எலிப்பாஷாணம்), 2 அஞ்சன பாஷாணம் 3 அப்பிரக பாஷாணம், 4 அவுபல பாஷாணம், 5 இலிங்க பாஷாணம், 6 கந்தக பாஷாணம், 7 கரடுத்தாளகம், 8 கற்கடக பாஷாணம், 9 கற்பரி பாஷாணம், 10 கற்பாஷாணம், 11 காயச்சற்பாஷாணம், 12 காந்த பாஷானம், 13 கார்முகில் பாஷாணம், 14 குதிரைக்கல் பாஷாணம், 15கந்தகம், 16 கௌரி பாஷாணம், 17 கோளக பாஷாணம், 18 சங்குபாஷாணம், 19 பறங்கி பாஷாணம் (சவ்வீரம்), 20 சரகாண்டம், 21 சாலாங்க பாஷாணம், 22 சிலாமதம், 23 சீதாங்க பாஷாணம், 24 சிரபந்தபாஷாணம், 25 சூத பாஷாணம், 26 தகட்டு தாளகம் (அரிதாரம்), 27 தாலம்பம், 28 துத்த பாஷாணம், 29 தொட்டி பாஷாணம், 30 பலண்டுறுக பாஷாணம், 31 மனோசிலை, 32 மிருதம், (அங்கணன்).

32—வைப்புப் பாஷாணங்கள்:—1 வைப்பரிதாரம், 2 வெள்ளை, 3 வாண கந்தகம், 4 மிருதார்சிங்கி, 5 பொற்றொட்டி, 6 பூரம், 7 அமரசிலை கந்தகம், 8 அயத்தொட்டி, 9 இந்திர பாஷாணம், 10 இரசிதம், 11 இரத்த பாஷாணம், 12 இலவண பாஷாணம், 13 எருமை நாதத்தொட்டி, 14 கருமுகில், 15 காகம், 16 குங்குமம் அஞ்சநகுளச்சு, 17 கோடாசொரி, 18 கோழித்தலை கந்தகம், 19 கௌரி, 20 சவ்வீரம், 21 சாதிலிங்கம், 22 சூதம், 23 செப்புத்தொட்டி, 24 சோரம், 25 நிமுறுகல், 26 துத்தம், 27 துரிசு, 28 தொட்டி, 29 நாகப்பாஷாணம், 30 நீலம் (சயக்குழவி), 31 பஞ்ச பட்சி, 32 பவளப்புற்று,

டும். கண்கள் சிவந்தாலும் சரி, கண் ரப்பைகள் வீங்கினாலும் சரி, நினைவு எடுத்தாலும் சரி, மூத்திரம் சிவந்து இறங்கினாலும் சரி, மருந்து உடம்பில் பற்றினதற்கு அடையாளம், உடனே மருந்தை நிறுத்தவும்.

அளவு:—($\frac{1}{16}$) வீசம் முதல் ($\frac{1}{8}$) அரைக்கால் கிறேன் வரையில் அதிகரித்துக் கொடுக்கலாம். இத்துடன் ரொட்டிச்சதையும் சர்க்கரையும் சேர்த்து மாத்திரைகளாக்கிக் கொடுக்கப்படும்.

குளோரோபாரம்—Chloroform.

குணம்:—இது ஜலத்தைப்பார்க்கிலும் பளுவாயும், வெள்ளையாயும், இருக்கும். ஜலத்தில் கொஞ்சமாய் கரையும். காற்றுப்பட்டால் பறந்து விடும்.

செய்கை:—அங்காகர்சன நாசகாரி, நித்திராகாரி, உஷ்ணகாரி, சமனகாரி, ஸ்மிரிதிரோதகாரி.

உபயோகம்:—தனுர்வாதம், வலி (5), இசிவு, சூதகஜன்னி, அஜீர்ணம், அதிவாந்தி, குடைச்சல், இரைப்பு, சுவாசம், காசம், இருமல் முதலியவைகளை, வெகு சீக்கிரத்தில் நிவர்த்தியாக்க இதற்கு மகா வல்லமை உண்டு. இதைத்தகுந்த அநுபானத்தில் கொடுக்க வேண்டியது. இதை மோந்தால் உணர்ச்சியில்லாமலும் நோய்தெரியாமலும் செய்து விடுவதால் ஸஸ்திரவேலைக்கு உபயோகித்து வருகிறார்கள். ஸஸ்திரவேலைக்கு உபயோகிக்கும் விதிகள் இங்கிலீஷ் புஸ்தகத்தில் பார்வை யிடவும். இதை கொஞ்சமாய் உள்ளுக்குக் கொடுத்தால் உஷ்ணித்து நாடியைத் தீவரப்படுத்தும்; அதிகமாய் கொடுத்தால் கயப்புக்காணும், பிரக்ஞையில்லாமல் செய்யும், பிராண அபாயமும் நேரிடும். ஆகையால் இதை அளவுக்கு அதிகமாய்க் கொடுக்கலாகாது.

அளவு:—5 முதல் 10 துளி வரையில் சாராயம், கிளாம்பிசின், முட்டையின் மஞ்சள் கரு இவைகளில் எதிலாகிலும் கொடுக்கலாம்.

நவக்ஷார ஜேயநீர்.

லைகர் அம்மோனியா போர்ட்—Liquor Ammonia Fort.

செய்கை:—அங்காகர்சன நாசகாரி, ஆம்லநாசகாரி, உஷ்ணகாரி, சுவேதகாரி, சோணகாரி.

உபயோகம்:—இதை பலஹீனம், வாந்திபேதி, சூதக ஜன்னி, குளி

ர்மை, அஜீர்ணம், முதலிய பற்பல பலத்த ரோகங்களுக்கு இதை அநுபா னத்தில் கொடுத்தால் உடனே குணத்தைத அறியலாம். மயக்கம், தலை வலி, மூர்ச்சை, காக்கைவலி, முதலியவைகளுக்கு இதை முகரவைத்தால் உடனே பிரக்ஞை வரும். இதற்கு வயிற்றிலுள்ள புளிப்பைக் கண்டிக்க வெகு வல்லமை உண்டு. தேள், பூரான், பாம்பு முதலியவைகளின் விஷக் கடிகளுக்கு இதை கடிவாயில் போட்டுத்தேய்த்தும், உள்ளுக்கும் ஜலத் தில் கொடுக்கலாம்.

அளவு:—2 முதல் 4 துளி, ஜலம், பால், கர்ப்பூரஜலம் முதலியவை களில் கொடுக்கலாம்.

ஆரோமாடிக் ஸ்பிரிட்ஸ் ஆப் அமோனியா.

Aromatic Spirits of Ammonia.

குணம்:—இது காரமாயும், இனிப்பாயும், இருக்கும். இதை காற்றுப் படாமல் குளிர்ச்சியான இடத்தில் வைக்க வேண்டியது.

செய்கை:—உற்சாகறகாரி.

உபயோகம்:—ஸ்வக்ஷார ஜெய நீருக்கு இருக்கும் செய்கைகளே இதற் கும் உண்டு; ஆனால் இது இனிப்பாயும், வாசனையாயும், காரமாயும் இருக் கும். மூர்ச்சை, தலைவலி. சோர்வு, மாந்தம், குலைஎரிவு, குதகஜன்னி முதலிய பலமான ரோகங்களுக்கு இதைக் கொடுக்கத் தகுதியானது.

அளவு:—15 முதல் 60 துளி ஜலத்தில் கொடுக்கலாம்.

பயட் ஸ்பிரிட் ஆப் அமோனியா—Foetid Spirit of Ammonia.

செய்முறை:—ஆரோமாடிக் ஸ்பிரிட்ஸ் ஆப் அமோனியா வுடன் பெருங் காய பாவனத்திராவகத்தைச்சேர்த்து செய்யப்படும்.

செய்கை:—அங்கோசர்சன நாசகாரி, உற்சாகறகாரி.

உபயோகம்:—இதை காசம், சுவாசம், வலி(5), இசிவு, குதகஜன்னி, சன்னி முதலிய கடோர ரோகங்களுக்குக் கொடுக்கத் தவறுபடல் நன்மை செய்யும்.

அளவு:—½ (அரை) முதல் 1 திராம் கர்ப்பூர ஜலத்தில் கொடுக்கலாம்.

லைகர் அம்மோனிய அஸிடேடிஸ்—Liquor Ammonia Acetatis.

குணம்:—இந்த உப்பு காற்றுப்பட்டால் நீராகிவிடும். ஆகையால் ஜல த்தில் கலந்து வைக்கவேண்டியது.

செய்முறை:—ஒரு பையின்ட் டைல்யூடேட் அசிடிக் அஸிட்டில் 9 டிராம்ஸ் நவச்சார உப்பு அல்லது நுரை எழும்பாமலிருக்க எவ்வளவு தேவையானதோ அவ்வளவு உப்பை சேர்த்து கொள்ளவும். உப்பிலிருக்கிற கார்போனிக் ஆஸிட் வாயு வெளிப்படுவதே பொங்குதலுக்குக் காரணம்.

செய்கை:—சுவேதகாரி, உஷ்ணகாரி, மூத்திரவர்த்தனகாரி.

உபயோகம்:—இத்துடன் பன்னீரை சேர்த்து கண்ணோவுக்குப் போடலாம். இதை ஜலத்தில் சேர்த்து வெள்ளைக்கு நீர்த்தாரையில் அடிக்கவும், காயம், சுளுக்கு, எலும்புமுறிவு முதலியவைகளுக்கு மேலுக்கு போடவும் இது வெகு நல்ல மருந்து. நீர்க்கட்டு, கீல்வாதம், சுரம், முதலிய கடோர ரோகங்களுக்கு வியர்வையை உண்டாக்க இது தகுதியான ஔஷதம். இதை அடிக்கடி கொடுக்கப்படும்.

அளவு:—2 முதல் 6 டிராம் 4 மணிக்கு ஒருதரம் கர்ப்பூரஜலத்தில் கொடுக்கவும்.

லைகர் பொட்டாஸ்ஸி—Liquor Pottasse.

குணம்:—இது வெள்ளையாய், தெளிவாய், தளமாய், விறுவிறுப்பாய், காரமாய் இருக்கும். கல்கார்க்குப்பச்சை சீசாவில் போட்டு வைக்க வேண்டியது.

செய்கை:—ஆம்லநாசகாரி, மூத்திர வர்த்தனகாரி, அஸ்மரிஹரகாரி, வியதாபேதகாரி, ஸோபநாசகாரி.

உபயோகம்:—இதை கீல்வாதம், அஜீர்ணம், வயிறு எரிவு, வயிறு இரைச்சல், குலை எரிவு, முதலிய கொடிய ரோகங்களில் உண்டாகும் புளிப்பைக் கண்டிக்கவும், மேகம், க்ஷயம், கண்டமாலை, சருமரோகம் முதலிய பலமான ரோகங்களை நிவர்த்தியாக்கவும், அடிக்கடி உபயோகிக்கப்படும். நாள்பட இதைச்சாப்பிட்டால் தேகத்தின் பலத்தை ஹரிக்கும். அளவுக்கு அதிகமாயாவது, ஜலம் விடாமலாவது கொடுத்தால் கொன்றுவிடும்.

அளவு:—10 முதல் 40 துளி பாலிலாவது, தகுந்த அநுபானத்திலாவது கொடுக்கலாம்.

லைகர் ஹைடிரார்ஜிரி பைகுளோரிடை.

Liquor Hydrargyri Bichloridi.

செய்முறை:—10 கிரேன்ஸ் சவ்வீரம், 10 கிரேன்ஸ் நவச்சாரம் இவை

கரா ஒரு டைபயின்ட் வெந்நீரில் சேர்த்துக் கொள்ளவும். (½) அரை கிரேன் சவ்வீரம் ஒரு அவுன்ஸ் ஜெயநீரில் உண்டு.

செய்கை:—உபயோகம்:—சவ்விரத்தைக் கொடுக்கும் ரோகங்களுக்கு இதைக் கொடுக்கப்படும். அதின் செய்கைகளே இதற்கும் உண்டு.

அளவு:—½ (½) முதல் 2 டிராம் வீதம் ஜலத்திலாவது, நன்னாரிவேர் கஷாயத்திலாவதுக் கொடுக்கலாம்.

லைகர் பொட்டாஸி ஆர்சினைடிஸ்—Liquor Pottasse Arsenitis.

செய்முறை:—½ பைன்ட் நீரில் 80 கிரேன்ஸ் வெள்ளைப்பாஷாணத் தூள், 80 கிரேன்ஸ் கார்பொனேட் ஆப் பொட்டாஷ், இவைகளைப்போட்டு கரைகிறவரையில் எரித்து, அதினபிறகு 5 டிராம்ஸ் கம்பவுன்ட் டிஞ்சர் ஆப் லாவெண்டர் சேர்த்து பிறகு ஒரு பைன்ட் வெள்ளைப்பாஷாண ஜெயநீர் ஆகும்படி தேவையான ஜலத்தைச்சேர்த்துக் கொள்ளவும்.

செய்கை:—உபயோகம்:—வெள்ளைப் பாஷாணத்தின் செய்கைகளே இதற்கும் உண்டு. அதை உபயோகிக்கும் ரோகங்களுக்கு இதைக் கொடுக்கலாம். ஒரு அவுன்ஸ் ஜெயநீரில் 4 கிரேன்ஸ் வெள்ளைப்பாஷாணம் உண்டு.

அளவு:—3 முதல் 5 துளி தினம் 2—3 தடவைக்கொடுக்கலாம்.

டனோவன்ஸ் ஷொலுஷன்—Donovan's Solution.

செய்முறை:—சுத்தப்பாஷாணம் 6 கிரேன்ஸ், சுத்திசெய்த ரசம் 16 கிரேன்ஸ், சுத்திசெய்த ஐயொடயின் 50½ கிரேன்ஸ், இவைகளை கல்வத்திலிட்டு ½ (½) டிராம் ஆல்கோஹால் விட்டு ஈரம்வற்றி உலர்ந்து போகிறவரையில் அரைத்து அத்துடன் 8 அவுன்ஸ் ஜலத்தை கொஞ்சங்கொஞ்சமாக விட்டு அரைத்து ஒரு குப்பியில் போட்டு கொதிக்கிற வரையில் சுடவைத்து, குளிர்ந்த பிறகு 8 அவுன்ஸ், 6 டிராம்ஸ் ஆகும்படி தேவையான நீரைச்சேர்த்துக் கொள்ளவும். ஒரு அவுன்ஸ் மருந்தில் ஒரு கிரேன் பாஷாணமும், 2 கிரேன்ஸ் ரசமும், 6 கிரேன்ஸ் ஐயொடையனும் உண்டு.

செய்கை:—பாஷாணம், ரசம், ஐயொடைன் இவைகளுக்கு உள்ள செய்கைகளே இதற்கு உண்டு.

உபயோகம்:—மேகரோகம் (20), குஷ்டம், சருமரோகங்கள், முதலிய மஹா கொடிய ரோகங்களுக்கு இதைக் கொடுக்கத்தவராமல் குணத்தைக்காட்டும்.

அளவு:—10 முதல் 20 துளியீதம் ஜலம், அல்லது வேறு அநுபானத்தில் கொடுக்கவும். மற்றப்பாஷாண இனத்தை கொடுப்பது போலவே இதையும் சாக்கிரதையாய் கொடுக்க வேண்டியது.

காஸ்டோரியம்—Costoreum.

குணம்:—இது பீவர் (Beaver) ஜெந்துவிலிருந்து எடுக்கப்படும் கஸ்தூரியைப்போல ஒத்த ஓர்வித பதார்த்தம்.

செய்கை:—அங்காகர்சன நாசகாரி, ருதுவர்த்தனகாரி, லகுஉஷ்ணகாரி.

உபயோகம்:—நரம்பைப்பற்றி வருகிற வலி (5), சூதகசன்னி, முதலியவைகளுக்குக் கொடுக்க இது வெகுத் தகுதியான அவுஷதம்.

அளவு:—10 முதல் 20 கிறேன்ஸ் அநுபானத்தில் கொடுக்கவும்.

கஸ்தூரி—Musk—மஸ்க்.

குணம்:—மானைப்போல் ஒரு ஆண் மிருகத்திலிருந்து கஸ்தூரி எடுக்கப்படும். கஸ்தூரி இருக்கிறப்பை அண்டவடிவாயும் முன் புறத்தில் ரோமங்களும் உண்டு. கஸ்தூரி மிருதுவாயும், சிவப்புங் கருப்புங் கலந்த நிறமாயும், வாசனையாயும் இருக்கும்.

செய்கை:—அங்காகர்சன நாசகாரி, உஷ்ணகாரி.

உபயோகம்:—இதை வலி (5), ரணசன்னி, சூதக சன்னி, நாய்க்கடி சன்னி, வாந்திபேதி, சுரம், மாந்தம், முதலிய பற்பல வியாதிகளுக்கு கொடுக்க தவராமல் வியாதிகளை நிவர்த்தியாக்கும்.

அளவு:—1 முதல் 5 கிறேன்ஸ் அநுபானத்தில் கொடுக்கலாம்.

முட்டை—Egg—எக்.

குணம்:—கோழி முட்டையானது சகலருக்கும் தெரிந்த பதார்த்தம். முட்டையின் ஓட்டுக்குள் வெள்ளைக்கரு, மஞ்சள்க்கரு என 2 வித பதார்த்தங்களுண்டு. வெள்ளைக்கரு ஜலத்தில் கரையும்; மஞ்சள்க்கரு தடித்த எண்ணெய்ப்போலிருக்கும்.

செய்கை:—உபயோகம்:—பதார்த்தங்களின் அழுக்கை நீக்கவும், எரிச்சலைத் தணிக்கவும் வெள்ளைக் கருவை உபயோகிக்கப்படும். மஞ்சள் கருவை டீ, பால், எண்ணெய் இவைகளில் எதிலாவது சேர்த்துக்கொடுக்க

தேகத்தை போஷிக்கும். இதை எரித்தால் எண்ணெய் ஜனிக்கும். இதற்கு அண்டத்தயிலம் என்று பெயர். இந்த தைலத்துடன் குங்குமப்பூ, கோரோசனை சேர்த்து குழந்தைகளின் மாந்தம், வலிப்பு இவைகளுக்குக் கொடுக்க குணமாகும்.

மீன் எண்ணெய்—Cod-liver-oil—காட் லிவர் ஆயில்.

குணம்:—இந்த எண்ணெயானது கருப்பும் மஞ்சளும் கலந்த நிறமாயும், தெளிவாயும், ஒர்வித வாசனையாயும், கொஞ்சம் குமட்டலாயும் இருக்கும். எண்ணெய் சத்துகள் இதில் இருப்பதும் தவிர கொஞ்சம் ஐயோடைன், புரோமின் முதலிய உப்புகள் இருக்கின்றன. இந்த எண்ணெயானது காட் (Cod) என்கிற மீனின் ஈரலிலிருந்து எடுக்கப்படும்.

செய்கை:—உபயோகம்:—துர்பலம், க்ஷயம், அதிசாரம், கண்டமாலை, அக்கினிமந்தம், சரும ரோகங்கள், மூட்டு நோய் சூலைக்கட்டு, முதலிய பற்பல கொடிய ரோகங்களுக்கு இது சஞ்சீவி. இதை தேகத்தில் ரத்தத்தை விருத்தியாக்கவும் பசியை நன்றாய் உண்டாக்கவும் கொடுக்கப்படும். மேல்கண்ட ரோகங்களில் தேகம் சுட்கித்து மெலிந்து இருக்கிறபோது இதைக் கொடுத்தால் நோயாளி ஸ்தூலித்து சவுக்கியம் உண்டாவதற்கு யாதொரு சந்தேகமில்லை. இதை நாள்பட சாப்பிட வேண்டியது. இதை சரும ரோகத்திற்கும், கீல்களின் வீக்கத்திற்கும் மேலுக்குப் பூசிவர தீரும்.

அளவு:—2 முதல் 8 கிராம் பெரியவர்களுக்கும், 1 முதல் 2 கிராம் குழந்தைகளுக்கும் பால், காபி, டீ, ஒயின் முதலியவைகளில் கொடுக்கலாம். குறைந்த அளவில் ஆரம்பித்து படிப்படியாய் அதிகரித்துக் கொள்ளவும்.

கோரோசனை.

உபயோகம்:—இது பசு அல்லது எருதின் பித்தப்பையிலுள்ள ஒரு விதக்கல்லு. 2–3 புளியங்கொட்டை அளவாக ஒரு பையிலிருக்கும். இதில் கொஞ்சம் எடுத்து வெற்றிலைச் சாற்றிலாவது அல்லது முலைப்பாலிலாவது கொடுக்க குழந்தைகளின் மாந்தம், சுரம், ஜலுப்பு குணமாகும்.

தேன்—Honey—ஹனி.

குணம்:—தேனீக்கள் புஷ்பங்களிலிருக்கிற மதுவை உண்டு, தேன் கூட்டில் சேர்த்து வைக்கிற பதார்த்தத்துக்கு தேன் என்று பெயர்.

செய்கை:—உபயோகம்:—இது தேகத்தை போஷிக்கும், இருமலைத் தணிக்கும், மலத்தை கழிக்கும். இதை வாயைக் கொப்பளிக்கிற ஜலத்துடன் சேர்த்து உபயோகிக்கலாம்.

தேன்களின் குணங்கள்.

பெயர்கள்.	குணங்கள்.
மலைத்தேன்	சிலேஷ்மகாசம், சுவாசம், விக்கல், கண்ரணம், சுரம், நீங்கும். தீபனம், நல்லமிராணி உண்டாகும்.
கொம்புத்தேன்	திரிதோஷம், உன்மாதம், அரோசகம் நீங்கும்.
மரபொந்துத்தேன்	ஜாடராக்கினி, உஷ்ணம் உண்டாகும். அக்கினிமந்தம், விக்கல், அரோசகம், இருமல், சுவாசம், க்ஷயம், அதிசாரரோகம் நீங்கும்.
புத்துத்தேன்	தோஷம், இருமல், ஈளை, வாந்தி, நேத்திரரோகம் நீங்கும்.
மனைத்தேன்	ரணம், புரையோடல், நேத்திரரணம், புழுவெட்டு, நீங்கும். ஜாடராக்கினி உண்டாகும்.
புதியத்தேன்	ஆயுள், சரீரவெப்பம், தேஜசு உண்டாகும். நெஞ்சில் கபமுண்டாகும்.
பழையத்தேன்	வாத ரோகங்கள், வயிற்றெறிச்சல், மூல ரோகம் உண்டாகும். மருந்தின் நற்குணங்களைக் கெடுக்கும்.

கேந்தாரிடிஸ்—Cantharidis.

குணம்:—இந்த வண்டில் பல ஜாதிகள் உண்டு.

செய்கை:—உஷ்ணகாரி, மூத்திரவர்த்தனகாரி, சோணகாரி, கொடிய நஞ்சு.

உபயோகம்:—இதை கொஞ்சமாகக் கொடுக்க மூத்திரத்தை விருத்திக்கும். நாள்பட்ட வெள்ளை, தந்திமேகம், மூத்திரப்பை ரோகம், நீர்க்கட்டு, எலும்புருக்கி, குஷ்டம், சொறி, சிரங்கு, கக்கிருமல், முதலிய பற்பல பயங்கரமான வியாதிகளுக்குக் கொடுக்கக் குணமாகும். இதை அடிக்கடியாவது அதிகமாயாவது உள்ளுக்குச் சாப்பிட்டால் நீர் அடைப்பு உண்டாக்கிக் கொன்று விடும். நோயுள்ள இடத்தில் இதைப்போட்டால் கொப்பளித்து உடனே நோய் தணியும். இதற்கு மூத்திர உறுப்புகளை கெடுதி செய்கிற குணம் உண்டு.

அளவு:—இதற்கு பதில் எரிவண்டுப்பட்டாவனத்திரவம் கொடுக்கப்படும்.

மான்கொம்பு—Hart's Horn—ஹார்ட்ஸ் ஹாரன்.

உபயோகம்:—இதை அஸ்தி காங்கை, கண்ணோவு, கை கால் எரிவு இவைகளுக்கு பஸ்மமாக்கிக் கொடுக்கலாம்.

யானை நகம்.

உபயோகம்:—இதை கத்தியால் சீவி வேப்பெண்ணெயில் போட்டு காய்ச்சி வடித்த எண்ணெயில் ஒரு விராகனிடை வீதம் தினம் 2 தடவைச் சாப்பிட்டுவர காசம், சுவாசம், இரைப்பு முதலியவைகள் தீரும்.

அட்டை--Leech—லீச்.

குணம்:—அட்டையில் அநேக சாதிகள் உண்டு.

செய்கை:—உபயோகம்:—ரத்தம் கட்டிக்கொண்டு இருக்கிற இடத்தில் (சாபன பிரயோகம்) அட்டையைக் கடிக்கவிட்டால் அவ்விடத்திலிருக்கிற ரத்தத்தை உறுஞ்சிவிடும். ஆனால் கண்ட இடத்தில் இதைக் கடிக்கவிடக் கூடாது. இது கடித்த இடத்தில் கரித்தூள், ஆயத்திராவகம், காடிக்காரம், முதலிய துவர்ப்பு மருந்துகளை போட்டு நிறுத்த வேண்டியது. சிலவேளை கடித்த இடத்தைத் தைக்கவேண்டியதாயும் நேரிடும்.

லிகர் குவைனு எமார்பஸ்—Liquor Quina Amorphous.

உபயோகம்:—இந்த திராவகத்தில் 8 துளிக்கு அதிகமாய்க் கொடுக்கலாம். 8 துளியில் ஒரு கிரேன் குவைனு இருக்கிறது. குவைனுக் கொடுக்கும் ரோகங்களுக்கு இதைக்கொடுக்கலாம். குழந்தைகள் இனிப்பாய்ச் சாப்பிடும் பொருட்டு இதை யுண்டாக்கப்பட்டது. குழந்தைகளுக்கு இது நல்ல மருந்து.

கடலைப் புளிப்பு—(Vinegar)

உபயோகம்:—கடலைச் செடியின் பேரில் விழும் பனியை துணியைப் போட்டு சேகரித்து பிழிந்து எடுக்கப்படும். இதை உள்ளுக்குச் சாப்பிட்டால் அனலைத் தணிக்கும். அதிகமானால் கெடுதி நேரிடும்.

அஸிடிக் ஆஸிட்—Acetic Acid—(காடி).

குணம்:—இது வெள்ளையாயும், வாசனையாயும், கசப்பாயும், காரமாயும் இருக்கும்.

செய்கை:—உபயோகம்:—எச்சில் தழும்புக்கு மேலுக்குப் போட்டால் உடனே தீரும். இதை தேகத்தின் மேல் போட்டால் புண்ணாகும். க்ஷய ரோகத்தில் காணும் வியர்வையை தணிக்க உள்ளுக்கு ஜலம், அல்லது வேறு அனுபானத்தில் சேர்த்துக் கொடுக்கலாம். ஆண்குறியிலுண்டாகும் மருவுக்கும், காய்ப்புக்கும் போட குணமாகும். 17 அவுன்ஸ் வெந்நீரில் 23 கிராம் அஸிடிக் ஆஸிட் என்னும் காடியைச் சேர்த்து வைத்துக் கொண்டு உபயோகிக்கவும்.

முசுறு முட்டை.

உபயோகம்:—வலி (5), வாதம், இசிவு, ஜன்னி, சர்மரோகம் இவைகளுக்கு இதை உபயோகிக்கப்படும்.

மயில் இறகு.

உபயோகம்:—இதின் சாம்பலை தேனில் கலந்துக்கொடுக்க வாந்தி, விக்கல் குணமாகும்.

புனுகு சட்டம்.

உபயோகம்:—வாதம், பித்தம், இவைகள் தீரும்.

சவ்வாது.

உபயோகம்:—சிரஸ்தாபரோகம், வாதம், கபம், ஜல பீனிசம் இவைகளுக்கு இதை உபயோகிக்கப்படும்.

நீர்ப்பஞ்சு—Sponge—ஸ்பன்ஜ்.

உபயோகம்:—இது ஒர்வித பாசி. இதை சிறுத்துண்டுகளாக்கி மெழுகைக் காய்ச்சி அதில் தோவைத்தாவது, அல்லது நூலால் சுற்றியாவது, ரணத்தின் புரைவாயில் வைத்தால் துவாரத்தை பெரிதாக்கும். இதை சுட்டு சூர்ணித்து (½) அரை முதல் 1 கிராம் வரையில் தேனில் கலந்து கழுத்தில் காணும் புரைக்குழல், கண்டமாலை, இவைகளுக்கு உள்ளுக்குக் கொடுக்க குணமாகும்.

அடியில் கண்ட மருந்துகள் பிராணசுஷாமிர்தசிந்து 2-வது பாகத்தில் காண்க.

அகேரிகஸ் ஆல்பஸ்–(Agaricus Albus.) ஆடோனிஸ்–(Adonis.) அபாமார்பைன் ஹைட்ரோ குளோரைட்–(Apomorphine Hydrochloride.) அபியால்–(Apiol.) அரிஸ்டோல்·(Aristol) அலிட்ரிஸ்–(Aletris.) ஆன்டிபெப்ரின்–(Antifebrin.) க்லீமன்ஸ் ஸொலுயூஷன்–(Clemen's Solution.) ஆன்டிபைரின்–(Antipyrin) ரேவல் சின்னி–(Rhubarb) பவாசி–(Bhawachee.) ப்ளாட்டா ஒரியன்டாலிஸ்–Blatta Orientalis.) ப்ரொமைடியா–Bromidia.) க்ரைஸோபானிக் ஆசிட்–(Chrysophanic Acid.) ஸாலிஸிலிக் ஆசிட்–(Salicylic Acid.) ஸோடி ஸாலிஸிலாஸ்–(Sodii Salicylas.) அல்ஸ்டோனியா கான்ஸ்ட்ரிக்டா–(Alstonia Constricta). காக்டஸ் க்ராண்டிப்ளோரா–(Cactus Grandiflora.) காபீன்–(Caffeine.) கர்ப்டிடிஸ்–(Coptidis) காலோபைலின்–(Caulophyllin.)

கொகேயின் ஹைட்ரோகுளோரைட்-(Cocaine Hydrochloride.) கோகோ இலை-(Coca Leaves.) கோடியா-(Codeia) எக்ஸால்ஜின்-(Exalgon) காலின்ஸோனியா-(Collinsania.) லிகுவிட் எக்ஸ்ட்ராகட் பிஸிடியா-(Liquid Extract Piscidia.) லிகுவிட் எக்ஸட்ராகட் ஹெமாமலிஸ்-(Liquid Exract Hamamelis.) லிகுவிட் எக்ஸ்ட்ராகட் ஹைட்ராஸ்டின்-(Liquid Extract Hydrostis.) டேமியானு (Damiana) பேரி ஸல்பைடம்-(Barii Sulphidum) கோட் பெஜோர்-(Goat Bezoor.) க்ரிண்டிலியா-(Grindelia.) பெர்ரி ரெடகேடம்-(Ferri Radaoatum.) ஐயோடோபாரம்-(Iodoform.) ஐரிஸ்-(Iris.) லிகுவர் எபிஸ்பாஸ்டிகஸ்-(Liquior Epispsatiens.) மெதிலால்-(Methylal.) மெதிலின் ப்ளு-(Methyleno Blue.) மெந்தால்-(Menthol, or Peppermont Camphor.) ஓஜோனிக் ஈதர்-(Ozonic Ether.) சந்தனத்தைலம்-(Santali Oleum.) பெப்ஸின்-(Pepsin.) போடோபைலம்-(Podophyllum.) ஸம்பல்-(Sumbul.) ஸல்பியுரேட்டெட் லைம்-(Sulphuratod Lime) ஸாலிஸின்-(Salisin.) லிகுவர் ஸோடியா குளோரேடியா-(Liquor Sodae Chloradae. லாக்டியூகா-(Lactuoa.) பைலோகார்பின் நைட்ரேட்-(Pilocarpino-nitrate) பைலோகார்பின்யா ஹைட்ரோகுளோரிடம்-(Pilocarpinae Hydrochloridum.) குளோரோபாரம்-(Chloroform.)

14-வது அத்தியாயம்.

கம்பவுண்ட் பவுடர்ஸ்—Compound Powders.

கம்பவுண்ட் பவுடர் ஆப் சாக்—Co. Powder of Chalk.

செய்முறை:—சுத்திசெய்த சிமைச்சுண்ணாம்பு (½) அரை பவுண்ட், கருவாப்பட்டை 4 அவுன்ஸ், டார்மெண்டில் ரூட் 3 அவுன்ஸ், விளாம்பிசின் 3 அவுன்ஸ், திப்பிலி (½) அரை அவுன்ஸ், இவைகளைத் தனித்தனியே சூர்ணித்து சேர்த்துக்கொள்ளவும்.

செய்கை:—ஆம்பலநாசகாரி, சங்கோசனகாரி, உஷ்ணகாரி.

உபயோகம்:—குழந்தை, ராஜ்ஜ்வக தேகமுடையவர்கள் இவர்களுக்கு காணும் பேதி முதலியவைகளுக்குக் கொடுக்க குணமாகும்.

அளவு:—5 முதல் 20 கிரேன்ஸ் கொடுக்கலாம்.

கம்பவுண்ட் பவுடர் ஆப் ஜாலப்—Co. Powder of Jalap.

செய்முறை:—ஜாலப் சூர்ணம் 3 அவுன்ஸ், கிராகஷ உப்பு 6 அவுன்ஸ் சுக்கு 2 கிராம், இவைகளை தனித்தனியே சூர்ணித்து சேர்த்துக்கொள்ளவும்.

செய்கை:—விரேஷனகாரி.

உபயோகம்:—இதைக்கொடுக்க தண்ணீர்த் தண்ணீராய் பேதியாகும் வயிறுக்கடுக்காது. மலபந்தக்காரர்களுக்குக்கொடுக்க தகுதியான மருந்து.

அளவு:—20 முதல் 60 கிறேன்ஸ் கொடுக்கலாம்.

கம்பவுண்ட் ஸ்காமோனி பவுடர்—C . Scammony Powder.

செய்முறை:—ஸ்காமோனி 1 அவுன்ஸ், ஜாலப் கெட்டிச்சத்து 1 அவுன்ஸ், சுக்கு 2 கிராம்ஸ் இவைகளைத் தனித்தனியே சூர்ணித்து சேர்த்துக் கொள்ளவும்.

செய்கை:—விரேசனகாரி.

உபயோகம்:—மலபந்தம், கிருமி, நீர்கோவை இவைகளுக்கு இதைக் கொடுத்தால் செவ்வையாய் பேதியாகும்.

அளவு:—10 முதல் 30 கிறேன்ஸ் தாளை ஜலத்தில் கொடுக்கலாம்.

கம்பவுண்ட் பவுடர் ஆப் கைனோ—Co. Powder of Kino.

செய்முறை:—கைனோ 15 கிராம்ஸ், கருவாப்பட்டை 4 கிராம்ஸ், உலர்ந்த அபினி 1 கிராம் இவைகளைத் தனித்தனியே சூர்ணித்து சேர்த்துக்கொள்ளவும். 20 கிறேன்ஸ் சூர்ணத்தில் 1 கிறேன் அபினி இருக்கிறது.

செய்கை:—சங்கோசனகாரி.

உபயோகம்:—அதிசாரபேதி, ரத்த பேதி, சீதபேதி முதலியவைகளுக்குக்கொடுக்க இது மகா சிரேஷ்டமான மருந்து.

அளவு:—10 முதல் 20 கிறேன்ஸ் ஜலத்தில் கொடுக்கலாம்.

டோவர்ஸ் பவுடர்—Dover's Powder.

செய்முறை:—இபிகாகியு எனு சூர்ணம், உலர்ந்த அபினி வகைக்கு கிராம் ஒன்று, ஸல்பேட் ஆப் பொடாஷ் கிராம் 8 இவைகளைச் சேர்த்து செவ்வையாய் அரைத்துக் கொள்ளவும். 10 கிறேன்ஸ் சூர்ணத்தில் 1 கிறேன் அபினி இருக்கிறது.

செய்கை—உபயோகம்:—வாந்தி, சிரோபாரம், இவைகள் காணும்போது இதைக் கொடுக்கலாகாது. இருமல், முடக்குவாதம், நீர்க்கோவை, ஊறப்பு, முதலியவைகளுக்குக்கொடுக்க இது வெகு நல்ல மருந்து.

அளவு:—5முதல் 10 கிரேன்ஸ் கொடுக்கலாம்.

சம்பவுண்ட் ஆண்டி மோனியல் பவுடர்—Co. Antimonial Powder.

ரூபம்:—இது வெள்ளையாய் நறநறவென்று விரல்களுக்கு தட்டுப்படும். வாசனையும், ருசியும் இல்லை ஜலத்தில் கரையாது.

செய்கை:—சுவேதகாரி, வியதாபேதகாரி, சுரஹரகாரி, வமனகாரி.

உபயோகம்:—இதை குறைந்த அளவில்கொடுக்க சருமரோகத்தைநிவர்த்தியாக்கும். சுரம், கீல்வாதம் இவைகளுக்குக்கொடுக்க இது எடுத்த அவுஷதம்.

அளவு:— 3 அல்லது 6 முதல் 10 கிறேன்ஸ் வரையில் தேனிலாவது அல்லது கர்ப்பூரம் அபினி, இவைகளோடு சேர்த்தாவது கொடுக்கலாம்.

கிரே பவுடர்—Grey Powder.

ரூபம்:—இந்த பஸ்மம் பளுவாயும், சாம்பல் நிறமாயும் இருக்கும். ஜலத்தில் கரையாது.

செய்முறை:—3 அவுன்ஸ் சுத்திசெய்த ரசத்தை, 5 அவுன்ஸ் சுத்திசெய்த சீமைசுண்ணாம்புடன் சேர்த்து ரசம் கண்ணுக்குதோற்றமல் போகிறவரையில் அரைத்துக்கொள்ளவும். 8 கிரேன்ஸ் பஸ்மத்தில் 3 கிறேன்ஸ் ரசம் இருக்கிறது.

செய்கை:— ஆம்லநாசகாரி, வியதாபேதகாரி, விரேசனகாரி.

உபயோகம்:— இது குழந்தைகளுக்குகொடுக்க வெகு சிலாக்கியமான அவுஷதம். மந்தபேதி, அஜீர்ணம் முதலியமந்தத்தால் உண்டாகும் சகல வியாதிகளுக்கும் கொடுக்கப்படும். உஷ்ணபேதி, ரத்தபேதி இவைகளுக்கு இதை அநுபானத்தில் கொடுக்க அதிசீக்கிரத்தில் குணமாகும்.

அளவு:—2 முதல் 5 கிறேன்ஸ் குழந்தைகளுக்கும், 5 முதல் 30 கிறேன்ஸ் பெரியவர்களுக்கும் தேனிலாவது, சர்க்கரையிலாவது கொடுக்கலாம். கொள்ளவும்.

சம்பவுண்ட் ருபார்ப் பவுடர்—Co. Rhubarb Powder.

செய்முறை:—1 பவுண்ட் மாக்னீஷிய, 2 அவுன்ஸ் சுக்குத்தூள், 4 அவுன்ஸ் ரேவல் சின்னி சூர்ணம் இவைகளை யெல்லாஞ்சேர்த்து அரைத்துக்

செய்கை:—உபயோகம்:—இந்த குழந்தைகளுக்கு பேதியை உண்டாக்குவதற்கு கொடுக்க வெகு நல்ல மருந்து. பெரியவர்களுக்கும் கொடுக்கலாம்.

அளவு:—20 முதல் 60 கிறேன்ஸ் பெரியவர்களுக்கும், 5 முதல் 10 கிறேன்ஸ் குழந்தைகளுக்கும் கொடுக்கப்படும்.

15-வது அத்தியாயம்.

கம்பவுண்ட் டிங்சர்ஸ்—Compound Tinctures.

கம்பவுண்ட் டிங்சர் ஆப் பென்ஜாயின்— Co. Tincture of Benzoin.

செய்முறை:—சாம்பிராணி 3½ அவுன்ஸ், ஸ்டொராக்ஸ் 2½ அவுன்ஸ், பால்ஸம் ஆப் டோலு 10 திராம்ஸ், மூசாம்பரம் 5 திராம்ஸ், இவைகளைப் பொடித்து 2 பையின்ட் ரெக்டிபைட் ஸ்பிரிட் சாராயத்தில் போட்டு 7 நாள் ஊறவைத்து வடிக்கட்டிக் கொள்ளவும்.

செய்கை:—கபஹரகாரி.

உபயோகம்:—இதை ரணம், காயம், வெட்டு இவைகளுக்கு தடவிவர குணமாகும். இருமல், கபம் முதலியவைகளுக்கு இதைக் கொடுக்க நல்ல மருந்து.

அளவு:—½ (ʒ) முதல் 2 திராம்ஸ், விளாம்பிசின் சேர்ந்த ஜலம், சர்க்கரைப்பாகு இவைகளில் சேர்த்து ஜலத்தில் கலந்துக் கொடுக்க வேண்டியது.

கம்பவுண்ட் டிங்சர் ஆப் காம்பர்—Co. Tinct. of camphor.

செய் முறை:—கர்ப்பூரம் 50 கிறேன்ஸ், அபினி தூள் 72 கிறேன்ஸ், சாம்பிராணிப் பதங்கம் 72 கிறேன்ஸ், சோம்புத்தயிலம் 90 துளி இவைகளை எல்லாம் 2 பைன்ட் புருவ்ஸ்பிரிட் சாராயத்தில் போட்டு 7 நாள் ஊறவைத்து வடிக்கட்டிக் கொள்ளவும். ½ அரை அவுன்ஸ் திரவத்தில் சுமார் 1 கிறேன் அபினி இருக்கிறது.

செய்கை:—கபஹரகாரி, நித்திராகாரி.

உபயோகம்:—இருமலைத் தணிக்க இது சஞ்சீவி. அதிசாரத்துக்கு இதைக் கொடுக்க வெகு குணத்தைத்தரும்.

அளவு:—(½) அரை முதல் 4 திராம்ஸ் ஜலத்தில் கொடுக்கலாம்.

கம்பவுண்ட் டிங்சர் ஆப் ருபார்ப்—Co. Tinct. of Rhubarb.

செய்முறை:—பேவல் சின்னிக்தூள் 2½ அவுன்ஸ், அதிமதுரத்தூள் 6 டிராம்ஸ், சுக்குத்தூள் 3 டிராம்ஸ், குங்குமப்பூ 2 டிராம்ஸ் இவைகளை 2 பைண்ட் புருவ் ஸ்பிரிட் சாராயத்தில் போட்டு 7 நாள் ஊறவைத்து வடிகட்டிக்கொள்ளவும்.

செய்கை:—தீபனகாரி, மலகாரி.

உபயோகம்:—இதை பசியில்லாமைக்கும், மலபந்தத்துக்கும் கொடுக்க வெகு நன்மை செய்யும்.

அளவு:—ஒரு டிராம் பசியை உண்டாக்கவும், 4 முதல் 8 டிராம்ஸ் பேதியாக்கவும் கொடுக்கலாம்.

கம்பவுண்ட் டிங்சர் ஆப் சின்ஞ—Co. Tinct of senna.

செய்முறை:—சீல அவரை 3½ அவுன்ஸ், கேக்விதை 3½ டிராம்ஸ், ஏலம் 1 டிராம்; விதை நீக்கின திராக்ஷபழம் 5 அவுன்ஸ் இவைகளை 2 பைண்ட் புருவ் ஸ்பிரிட் சாராயத்தில் போட்டு 7 நாள் ஊறவைத்து வடிக் கட்டிக்கொள்ளவும்.

செய்கை:—உபயோகம்:—சீல அவாரைக் கொடுக்கப்படும் ரோகங்களுக்கு இதைக்கொடுக்க வெகு குணத்தை உண்டாக்கும்.

அளவு:—2 முதல் 4 டிராம்ஸ், ஜலத்தில் கொடுக்கலாம்.

கம்பவுண்ட் டிங்சர் லாவண்டர்—Co. Tinct. Lavender.

செய்முறை:—லவங்கப்பட்டைத்தூள் 75 கிரேன்ஸ், சாதிக்காய் தூள் 75 கிரேன்ஸ், ரெட் சாண்டர்ஸ் வுட் 150 கிரேன்ஸ், ஆல்கோஹால் (90 P. C.) 20ல் 7 நாள் ஊறவைத்து வடிகட்டி பிறகு அத்துடன் லாவண்டர் தயிலம் 45 மினிம்ஸ், ரோஸ்மரி தயிலம் 5 மினிம்ஸ் சேர்த்து கொள்ளவும்.

உபயோகம்:—இது உஷ்ணகாரி, வலி, குதகஜன்னி, மூர்ச்சை, வயிற்றுப்பசம், வயிற்றுவலி இவைகளுக்கு கொடுக்க நல்ல மருந்து.

அளவு:—(½) அரை முதல் 1 டிராம்.

16—வது அத்தியாயம்.

கம்பவுண்ட் லினிமெண்ட்—Compound Liniment.

சில லினிமெண்ட்கள் செய்யும் விதிகளும், உபயோகங்களும் அடியில் காண்க.

லினிமெண்ட்களின் பெயர்கள்.	செய்முறை.	குணமாகும் ரோகங்களின் பெயர்கள்.
கலவை கர்ப்பூர பூசத்தைலம். (Compound Liniment of camphor கம்பவுண்ட் லினிமென்ட் ஆப் காம்பர்)	கர்ப்பூரம் 2½ அவுன்ஸ், லவன்டர்த்தைலம் 1 கிராம், ரெக்டிபையிட்ஸ்பிரிட் சாராயம் 17 அவுன்ஸ் இவைகளை எல்லாம் சேர்த்து கரைத்துக்கொண்டு காரமான லிகர் அம்மொனியா 3 அவுன்ஸ் விட்டு குலுக்கிக்கொள்ளவும்.	இதை நோயுள்ள இடத்தில் போட்டு தேய்த்தால் நோய் குணமாகும்.
கலவை ரசப்பூசத்தைலம். (Compound Liniment of mercury.) கம்பவுண்ட் லினிமென்ட் ஆப் மெர்குரி.)	ஒரு அவுன்ஸ் கர்ப்பூரமும், 1 கிராம் ரெக்டிபையிட் ஸ்பிரிட் சாராயமும் சேர்த்து அரைத்து பிறகு 4 அவுன்ஸ் பன்றி நெய்யும், 4 அவுன்ஸ் இளகிய ரசக்களிம்பும் சேர்த்து அரைத்துக் கொண்டிருக்கும் போதே 4 அவுன்ஸ் நவக்ஷாரஜெயநீரை கொஞ்சங் கொஞ்சமாய் விட்டு எல்லாவற்றையும் மிஸ்ரித்துக் கொள்ளவும்.	எலும்பு தடிப்பு, மேகத்தில் எடுத்த நோவு, வீக்கம், நீர் கொண்டிருப்பது இவைகளின் பேரில் போட்டு தேய்த்தால் குணமாகும்.
சவுக்கார பூசத்தயிலம். (Soap Liniment. ஸோப் லினிமென்ட்.)	2 அவுன்ஸ் திரீசை, 18 அவுன்ஸ் ஸ்பிரிட் ஆப் ரோஸ் மெரி இவ்விரண்டும் சேர்த்து, பிறகு 2 அவுன்ஸ் கட்டி சவுக்காரமும், 10 கிராம்ஸ் கர்ப்பூரமும் சேர்த்து அடிக்கடி குலுக்கி கரைகிற வரையில் ஊற வைக்கவும்.	வாதநோய்களின் மேல் தடவி தேய்த்தால் குணமாகும்.

17-வது அத்தியாயம்.

வைன்பாவனத்திராவங்கள்.

குழந்தைகளுக்கும், ராஜரோக ஸ்திரிகளுக்கும் உபயோகமாகிய வைன்பாவனத்திரவங்களின் உபயோகம், செய்முறை, அளவு முதலியவைகள் சொல்லப்படும்.

வைன் பாவனத்திரவங்கள் செய்யும் பதார்த்தங்களின் பெயர்கள்.	பதார்த்தங்களின் அளவு.	வைன் சாராயத்தின் அளவு.	செய்முறை.	வைன்பாவனத்திரவம்ஒருதடவைக்குக்கொடுக்கும் அளவு.	இந்த மருந்துகளால் சுகமாகும் ரோகங்களின் பெயர்கள்.
	அவுன்ஸ்.	பயிண்ட்.		துளிகள்.	
கால்சிக்கம் (Colchicum.)	8	2	பதார்த்தங்களை நொறுக்கி வைன் சாராயத்தில் 7 நாள் ஊறவைத்து வடிகட்டிக் கொள்ளவும்.	15—90	குலைக்கட்டு, கனுவாதம் தீரும்.
இபிகாகியுவன்ஹ (Ipecacuanha.)	$2\frac{1}{2}$	2		15—45	கபத்தை வெளியாக்கும் வியர்வையை உண்டாக்கும்.

☞ இவ்விதமாக பதார்த்தங்களின் வைன் பாவனத்திரவங்கள் வேண்டியபோது செய்து கொள்ளலாம்.

18-வது அத்தியாயம்.

எஸ்ஸென்ஸ்கள்—Essences.

எஸ்ஸென்ஸ்கள் செய்யும் விதங்கள், உபயோகங்கள், அளவுகள் முதலியவைகளை சொல்லப்படும்.

எஸ்ஸென்ஸ்கள் செய்யும் பதார்த்தங்களின் பெயர்கள்.	பதார்த்தங்களின் தைலம். அளவு. அவுன்ஸ்.	ரெக்டிபயிட் ஸ்பிரிட் சாராயம். அளவு. அவுன்ஸ்.	செய்முறை.	எஸ்ஸென்ஸ் ஒருதடவைக்குக் கொடுக்கும் அளவு. துளி.	எஸ்ஸென்ஸ்களால் நிவர்த்தியாகும் ரோகங்களின் பெயர்கள்.
பெப்பர்மெண்ட் (Peppermeni.)	1	9	பதார்த்தத்தின் தயிலத்தை ரெக்டிபயிட் ஸ்பிரிட் சாராயத்தில் சேர்த்துக் குலுக்கிக் கொள்ளவும்.	20—90	உஷ்ணம் செய்யும், வாயுநிரும்.
கெகவிதை (Carraway.)	1	9		20—60	ஷை ஷை
சோம்பு (Aniso.)	1	9		30—40	வாயு நிரும்.
சதகுப்பை (Dill.)	1	9		20—40	ஷை

☞ இவ்விதமாக பதார்த்தங்களின் எஸ்ஸென்ஸ்கள் வேண்டியபோது செய்துகொள்ளலாம்.

19-வது அத்தியாயம்.

தயிலங்கள்—Oils—ஆயில்ஸ்.

பதார்த்தங்களிலிருந்து தயிலங்கள் எடுக்கப்படும் விதிகள் உபயோகங்கள், முதலியவைகளைச் சொல்லப்படும்.

தயிலங்கள் எடுக்கப்படும் பதார்த்தங்களின் பெயர்கள்.	தயிலங்கள் எடுக்கப்படும் விதிகள்.	தயிலம் கொடுக்கையில் கொடுக்கக்கூடிய அளவு. துளி.	தயிலங்களால் நிவர்த்தியாகும் ரோகங்களின் பெயர்கள்.
பெப்பர்மெண்ட் (Peppermont)	பூண்டை ஜலத்தில்போட்டுவாலையிலிட்டு தயிலம் இறக்கப்படும்.	2— 4	வாதசூலை, சூலை எரிவுந்தீரும்.
வாதுமை ... (Almond)	பருப்பை செக்கிலிட்டு எடுக்கப்படும்.	0	மேல்பூச தயிலத்தோடு சேர்க்கப்படும்.
கருவாப்பட்டை (Cinnamon)	உப்பு ஜலத்தில் ஊறவைத்து வாலையிலிட்டெடுக்கப்படும்.	I— 3	வாயுந்தீரும்.
கிராம்பு... ... (Clove)	வாலையிலிட்டு எடுக்கப்படும்.	2— 5	வாயுந்தீரும்.
டர்பெண்டயின் (Turpentine)	டர்மெண்டயின்யை வாலையிலிட்டு எடுக்கப்படும்.	0	வாத நோய்க்கு பூசலாம்.
கொபெயபா ... (Copaiba)	மரத்திலிருந்து சேகரிக்கப்படும்.	10—30	வெள்ளை விழுதல் தீரும்.
நேர்வாளம் ... (Croton)	பருப்பை செக்கிலிட்டு எடுக்கப்படும்.	1— 2	பேதியாகும்.
லின்ஸீட் ... (Linseed)	செக்கிலிட்டு எடுக்கப்படும்.		தீப் புண்ணுக்குத் தடவிவரத்தீரும்.
சாதிக்காய் ... (Nutmegs)	இதின் தூளை ஜலத்தில் போட்டு வாலையிலிட்டெடுக்கப்படும்.	1— 3	உச்சாகப்படுத்தும்.

அருசா... ... (Rue)	பூவும் காயும் ஜலத்திலிட்டுப்பட்டிக்கட்டி இறக்கப்படும்.	2— 5.	வலி, சூதகக்கட்டு த்தீரும்.
ஸெவைன் ... (Savin)	தளிர்களை ஜலத்தில் போட்டு வாலையிலிட்டு எடுக்கப்படும்.	2— 5	மூத்திரத்தை விருத்திக்கும், சூதகத்தை தாராளப்படுத்தும்.
இச்சிலிப்பூ ... (Orange Flowers)	பூவை வாலையிலிட்டு எடுக்கப்படும்.	1— 5	வாதம், வலி (5) தீரும்.
கெக்கிதை ... (Carraway)	விதைகளைவாலையிலிட்டு எடுக்கப்படும்.	1—10	வாயு, மந்தம் தீரும்.
சோம்பு ... (Anise)	ஷை ஷை	5—15	வாயு, வயிற்றுவலி தீரும்.
பெருஞ்சீரகம் (Fennel)	ஷை ஷை	1—10	ஷை ஷை
சதகுப்பை ... (Dill)	ஷை ஷை	1— 5	ஷை ஷை

☞ இவ்விதமாய் பதார்த்தங்களின் தயிலங்கள் வேண்டியபோது எடுத்துக்கொள்ளலாம்.

20-வது அத்தியாயம்.

டிங்சர்ஸ்—Tinctures.

டிங்சர் ஆப் ஐரன்—Tincture of Iron.

செய்முறை:—இங்கிலீஷ் புஸ்தகத்தில் பார்வையிடவும்.

குணம்:—இது புளிப்பும், துவர்ப்பும் உள்ளது. சிவப்பும் மஞ்சளும் கலந்த நிறமுள்ளது. துவர்ப்பு கற்க வகைகளை சேர்த்தால் கருத்துப் போகும்.

செய்கை:—பலகாரி, மூர்த்திரவர்த்தனகாரி, சங்கோசனகாரி, விரணகாரி.

உபயோகம்:—இதை ரணத்தின்மேலும், அட்டைக் கடியின்மேலும் தடவி ரத்தம் நிற்கும். சீக்கட்டிக்கு இதை கொஞ்சமாக அடிக்கடிக்கொடுக்க சுகுணத்தைத் தரும். சொட்டு மூத்திரம், மதுமூத்திரம் இவைகளும், கருப்பை, மூத்திரப்பை, மூத்திரக்குண்டிக்காய் முதலியவைகளிலிருந்து வடிகிற ரத்தத்திற்கும் கொடுக்க இது சிரேஷ்டமான ஔஷதம். அக்கினிக்குமிழிலே போடலாம்.

அளவு:—10 முதல் 30 துளி கொடுக்கலாம்.

சிலபதார்த்தங்களின் டிஞ்சர்கள் செய்யும் விதங்கள், அளவுகள் முதலியவைகளை சொல்லப்படும்.

☞ ரோஜனம் (Resin) இனத்தைச்சேர்ந்த பதார்த்தங்கள் ஜலத்தில் கரையாது, சாராயத்தில் கரையும். பிசின் (Gum) இனத்தைச்சேர்ந்த பதார்த்தங்கள் சாராயத்தில் கரையாது, ஜலத்தில் கரையும். ஆகையால் ரோஜனம் அதிகமாயிருக்கிற பதார்த்தங்களை இரட்டித்து வடித்த (Rectified spirit) சாராயத்திலும்; ரோஜனம் கொஞ்சமாயிருக்கிற பதார்த்தங்களை புரூப் ஸ்பிரிட் (Proof spirit) சாராயத்திலும் நொறுக்கிப்போட்டு ஏழு நாள் ஊறவைத்து வடிகட்டிக் கொள்ளவேண்டியது. பதார்த்தத்தின் செய்கைகளே டிஞ்சர்க்கு உண்டு.

டிஞ்சர்கள் செய்யும் பதார்த்தங்களின் பெயர்கள்.	பதார்த்தங்களின் அளவுகள்.		டிஞ்சர் செய்ய வேண்டிய சாராயத்தின் அளவுகள்.	டிஞ்சர்களை ஒரு தடவைக்குக் கொடுக்கப்பட வேண்டிய அளவு.		டிஞ்சர்களால் குணமாகும் ரோகங்களின் பெயர்கள்.
	அவுன்ஸ்.	திராம்.	பைன்ட்.	திராம்.	துளி.	
அகோனைட் ... (Aconite)	15	0	2	0	5–7	பதார்த்தத்தின் செய்கைகள் இதற்கு உண்டு.
பெருங்காயம் ... (Assafoetida)	5	0	2	1—2	0	வை. ருசக ஜன்னி குணமாகும்.
கலம்பா ... ... (Calumba)	3	0	2	1—2	0	பதார்த்தத்தின்செய்கைகளே இதற்கு உண்டு.
எரிவண்டு... ... (Cantharides)	½	0	2	(	10—60	ஷை ஷை
காஸ்டோரியம் ... (Castoreum)	2½	0	2	1—2	0	ஷை ஷை

சிரெட்டா .. (Chiretta)	5	0	2	1—3	0	ஷை	ஷை
சின்கோனா ... (Cinchona)	8	0	2	1—3	0	ஷை	ஷை
டிஜிடெலிஸ் ... (Digitalis)	4	0	2	0	10-40	ஷை	ஷை
கடுகுரோகணி ... (Hellabore)	5	0	2	0	45-90	ஷை	ஷை
குரோசாணி ஓமம் (Hyoscyamus)	5	0	2	½—2	0	மேற்படி	
ஐயோடைடன் .. (Iodide caustic)	0	$\frac{5}{6}$	$\frac{1}{20}$	0	0	உள்ளுக்குச் சாப்பிடக்கூடாது. மேலுக்குத்தடவ வீக்கம் கரையும்.	
ஐயோடைட் ஆப் பொடாஸியம் ... (Iodine of Potassium)	0	1					
ஜாலப் ... .. (Jalap)	5	0	2	1—2	0	பதார்த்தத்தின் செய்கையே இதற்குஉண்டு.	
வாலெண்டிர போளம் ... ... (Myrrh)	3	0	2	½—1	0	ஷை	ஷை
குவாஷியா ... (Quassia)	0	10	2	½—2	0	மேற்படி	
அபினி ... ... (Opium)	3	0	2	0	15-45	ஷை எண்ணெயும் இதுவும் சமமாகசேர்த்துக் காதிலிட காதுவலி தீரும்.	
நரிவெங்காயம் ... Squill)	5	0	2	0	10-30	கபம்நீங்கும், மூத்திரம் விருத்திக்கும்.	

☞ இவ்விதமாகவே பதார்த்தங்களின் டிங்சர்கள் வேண்டியபோது செய்துக்கொள்ளலாம்.

21-வது அத்தியாயம்.

ஸ்பிரிட்ஸ்கள்—Spirits.

சில பதார்த்தங்களின் ஸ்பிரிட்ஸ்கள் செய்யும் விதிகளும், நிவர்த்தியாக்கும் ரோகங்களும், கொடுக்கும் அளவுகளும் அடியில் காண்க:

ஸ்பிரிட்ஸ்கள் செய்யும் பதார்த்தங்களின் பெயர்கள்.	பதார்த்தங்களின் தயிலங்கள். அளவு — கிராம்.	புருப் ஸ்பிரிட் சாராயம். அளவு — பயின்ட்.	செய்முறை.	ஸ்பிரிட் மருந்தை ஒருதடவைக்குக் கொடுக்கும் அளவு. — கிராம்.	ஸ்பிரிட் மருந்துகளால் நிவர்த்தியாகும் ரோகங்களின் பெயர்கள்.
செக்விதை ... ... (Carraway)	2	8	புருப்ஸ்பிரிட்சாராயத்தில் பதார்த்தத்தின் தயிலத்தைச் சேர்த்துக் குலிக்கிக் கொள்ளவும்.	1—4	வாயுதிரும், பசியை உண்டாக்கும்.
சோம்பு ... ... (Anise)	2	8		½—1	மேற்படி
பெப்பர்மெண்ட் ... .. (Pepperment)	3	8		½—2	மேற்படி

☞ இவ்விதமாக பதார்த்தங்களின் ஸ்பிரிட்கள் வேண்டியபோது செய்துகொள்ளலாம்.

22-வது அத்தியாயம்.

தீநீர்கள்—Waters—வாட்டர்ஸ்.

சில பதார்த்தங்களின் தீநீர்கள் செய்யும் விதிகளும், நிவர்த்தியாகும் ரோகங்களும், கொடுக்கும் அளவுகளும், அடியில் காண்க.

வாட்டர்ஸ்கள் அல்லது தீநீர்கள் செய்யும் பதார்த்தங்களின் பெயர்கள்.	தீநீர்களைச் செய்வதற்கு பதார்த்தங்களின் எஸ்லென்ஸ்கள். அளவு. அவுன்ஸ்.	ஆவிநீர். அளவு. பயிண்ட.	செய்முறை.	தீநீரை ஒருதடவைக்குக் கொடுக்கும் அளவு. அவுன்ஸ்.	தீநீர்களால் நிவர்த்தியாகும் ரோகங்களின் பெயர்கள்.
சோம்பு (Anise)	1	4	ஆவிநீருடன் பதார்த்தத்தின் எஸ்ஸென்ஸை சேர்த்து குலிக்க வேண்டியது	½—2	வாயு, அதிசாரம் தீரும்.
சீமைச்சீரகம் (Carraway) ...	1	4		1—4	வாயு மந்தம் தீரும்.
சதகுப்பை (Dill)	1	4		½—3	மாந்தம் தீரும்.
பெப்பர்மெண்ட் (Pepperment)	1	4		1—2	வாதசூலை, சூலைஎரிவு தீரும்.
கர்ப்பூரம் (Camphor)	கர்ப்பூரம் அவுன்ஸ் ¼	4	கர்ப்பூரத்துடன் 40 துளிசாராயத்தைவிட்டு அரைத்து ஆவிநீரை சேர்த்துவடிகட்டிக் கொள்ளவும்.	2—3	மருந்துகளோடு சேர்த்துக் கொடுக்கப்படும்.

☞ இவ்விதமாக பதார்த்தங்களின் தீநீர்கள் வேண்டியபோது செய்துக்கொள்ளலாம்.

23-வது அத்தியாயம்.

சாராயங்களில் பலவிதங்களுண்டு. அவைகளின் பேர்கள், குணங்கள் முதலியவைகளை அடியில் சொல்லப்படும்.

ஆல்கோஹால்—Alcohol,

இந்த சாராயம் சுத்தமாயும், வெள்ளையாயும், வாசனையாயும், காரமாயும், ஜலரூபமாயும் இருக்கும்.

ரெக்டிபைடு ஸ்பிரிட்—Rectified Spirit.

இந்த சாராயத்தில் ஆல்கோஹால் 84 பங்கும், ஜலம் 16 பங்கும் இருக்கின்றது. இதனால் கடுத்த ரோஜனம் (குங்கிலியம்-Resin) பதார்த்தங்களை டிஞ்சர் செய்யப்படும்.

புருப் ஸ்பிரிட்—Proof Spirit.

இந்த சாராயத்தில் ஆல்கோஹால் 38 பங்கும், ஜலம் 52 பங்கும் இருக்கின்றது. இதினால் ரோஜனம் (குங்கிலியம்-Resin) கொஞ்சமாய் இருக்கும் பதார்த்தங்களை டிஞ்சர் செய்யப்படும்.

பிராந்தி சாராயங்களின் விபரம்—(Brandy.)

சாராயங்களின் பெயர்கள்.	100 பங்கு சாராயத்தில் ஆல்கோஹால்.	100 பங்கு சாராயத்தில் ஜலம்.	சாராயங்களின் செய்கைகள்.
ரம்சாராயம்-(Rum)	51 முதல் 54 பங்கு	46 முதல் 49 பங்கு	உஷ்ணம், வியர்வை உண்டாக்கும்.
உஸ்கிசாராயம்-(Whiskey)			மூத்திரத்தை விருத்திக்கும்.
ஜின் சாராயம்-(Gin)			மூத்திரத்தை விருத்திக்கும்.
சுதேச பிராந்தி-(Country Brandy)			

சாராயங்கள் எல்லாம் முதலில் உற்சாகப்படுத்தி பிறகு சோர்வு காணும். கொஞ்சமாய் சாப்பிட்டால் தேகத்துக்கு சவுக்கியம். ஆனால் தொடாமலிருப்பது உத்தமம். பிராந்திக்கு நாடியைத் தீவிரப்படுத்துகிற குணமும், தீபனத்தை உண்டாக்கிற குணமும் உண்டு. மூர்ச்சை, சுவாசமில்லாமல் பிணம்போல் இருக்குதல் இவைகளுக்கு இருதயஸ்தானத்தில் பிராந்தியை போட்டுத்தேய்த்தால் குணமாகும். துர்பலருக்கு இதைக்கொடுக்கலாம்.

ஒயின் சாராயங்களின் விபரம்—(Wine.)

ஒயின் சாராயங்களின் பெயர்கள்.	ஆல்கோஹால் அளவு.	சாராயங்களின் செய்கைகள்.
போர்ட்வைன்-(Port Wine)	இம்மூன்றில் ஆல்கோஹால் அதிகமாயிருக்கும்.	பிராந்தியைப் பார்க்கிலும் வைன் சாராயத்துக்குக் கசப்பு குறைச்சல். வைன் கொடுக்க நாடியைத் தீவிரப்படுத்தி பலத்தை உண்டாக்கும். தேகத்தை போஷிக்காது. ரோகங்களுக்குக் கொடுக்கப்படும்.
மெடியராவைன்-(Madaira Wine)		
ஷெர்ரிவைன் (Sherry Wine)		
கிலெரெட் வைன்-(Claret Wine)	இவ்விரண்டில் ஆல்கோஹால் கொஞ்சமாயிருக்கும்.	
ஷாம்பென் வைன்-(Champagno Wine)		

24-வது அத்தியாயம்.

களிம்புகள்—ஆய்ண்ட்மெண்ட்—Ointment.

கிரியசோட் ஆய்ண்ட்மெண்ட்—Creasote Ointment.

செய்முறை:—½ (?) டிராம் கிரியசோட், 1 அவுன்ஸ் பன்றி நெய் இவைகளைச்சேர்த்து அரைத்துக்கொள்ளவும்.

உபயோகம்:—ரணம், சருமரோகம் இவைகளுக்குத் தடவகுணமாகும்

ஐயோடைட் ஆப் லெட் ஆய்ண்ட்மெண்ட்-Iodide of Lead Ointment.

செய்முறை:—1 அவுன்ஸ் ஐயோடைட் ஆப் லெட், 8 அவுன்ஸ் பன்றி நெய் இவைகளைச் சேர்த்து மிஸ்ரித்துக்கொள்ளவும்.

உபயோகம்:—கட்டி, மூட்டு, வீக்கம் இவைகளுக்கு தடவிவர தீரும்.

ரெட் ஐயோடைட் ஆப் மெர்க்கியுரி ஆய்ன்ட்மெண்ட்
Red Iodide of Mercury Ointment.

செய்முறை:—2 அவுன்ஸ் வெள்ளைமெழுகு, 6 அவுன்ஸ் பன்றிநெய் இவைகளைச்சேர்த்து உருக்கி அத்துடன் ரெட் ஐயோடைட் ஆப் மெர்கியுரி 1 அவுன்ஸ் சேர்த்து மிஸ்ரித்துக்கொள்ளவும்.

உபயோகம்:—மேகரணம், கிரந்திக்கட்டி, ஒரு சாதிதின்னுக்கொண்டே போகும் ரணம், நாள்ப்பட்ட சர்மரோகங்கள், அருத மேகரணம் இவைகளுக்கு தடவிவர வெகு சீக்கிரத்தில் ஆறிவிடும்.

ஐயோடின் ஆய்ன்ட்மெண்ட்—Iodine Ointment.

செய்முறை:—½ (?) கிராம் ஐயோடின், 1 கிராம் ஐயோடைட் ஆப் பொட்டாசியம், இவைகளுடன் 1 கிராம் ரெக்டிபைட் ஸ்பிரிட் சாராயத்தைச் சேர்த்து அரைத்து, பிறகு 2 அவுன்ஸ் பன்றிநெய் சேர்த்து மிஸ்ரித்துக்கொள்ளவும்.

உபயோகம்:—இதை புரைக்குழல், கண்டமாலை இனத்தைச் சேர்ந்த கட்டிகள் இவைகளின்மேல் தடவிவர குணமாகும்.

ஸேவைன் ஆய்ன்ட்மெண்ட்—Savine Ointment.

செய்முறை:—12 அவுன்ஸ் பன்றிநெய்யுடன் 3 அவுன்ஸ் வெள்ளை மெழுகைச்சேர்த்து உருக்கி அதில் 6 அவுன்ஸ் ஸெவைன் இலை தூளைச்சேர்த்து நார்துணியில் வடிகட்டிக்கொள்ளவும்.

உபயோகம்:—பிளிஸ்டர் செய்த ரணத்தின் மேல் இதை துணியில் தடவிப்போட ரணம் ஆறாது.

ரசக்களிம்பு—பிளு ஆய்ன்ட்மெண்ட்—Blue Ointment.

செய்முறை:—ரசம் 12 அவுன்ஸ், பன்றிநெய் 11½ அவுன்ஸ், ஆட்டுக் கொழுப்பு ½ (?) அவுன்ஸ் இவைகளில் ரசத்தை கல்வத்திலிட்டு அத்துடன் ஆட்டுக்கொழுப்பும் கொஞ்சம் பன்றிநெய்யும் சேர்த்து ரசத்தின் அணுக்கள் கண்களுக்குப்படாமல் போகிறவரையில் அரைத்து பிறகு மீதியிருக்கிற பன்றிநெய்யையும் சேர்த்து மிஸ்ரித்துக் கொள்ளவும்.

உபயோகம்:—இதை மேகரணம், மேகக் கட்டிகள் இவைகளுக்குத் தடவிவர குணமாகும்.

ஸல்பர் ஆய்ன்ட்மெண்ட்—Sulphor Ointment.

செய்முறை:—கந்தகம் 2 அவுன்ஸ், வெடியுப்பு 20 கிரேன்ஸ், வைட் ஹெலிபோர் (White Hellebore) 5 டிராம்ஸ், இளகிய சவுக்காரம் 2 அவுன்ஸ், பன்றி நெய் 6 அவுன்ஸ் இவைகளை மிஸ்ரித்துக்கொள்ளவும்.

செய்கை:—உபயோகம்:—உஷ்ணகாரி, ஆறாத சிரங்குகளுக்கும் எச்சிற்றழும்புக்கும் போட குணமாகும்.

25-வது அத்தியாயம்.

சத்துகள்—Extracts—எக்ஸ்டிராக்ட்ஸ்.

சில பதார்த்தங்களின் சத்துகள் எடுக்கும் விதிகளும், உபயோகங்களும் அடியில் காண்க.

சத்து எடுக்கும் பதார்த்தங்களின் பெயர்கள்.	சத்து எடுக்கும் விதங்கள்.	கொடுக்கும் அளவு	இந்த மருந்தால் நிவர்த்தியாகும் ரோகங்களின் பெயர்கள்.
		கிறேன்.	
ஆகோனைட் ... (Aconite)	இலையின் சாற்றை வடிகட்டாமல் சுண்டக்காய்ச்சிக் கொள்ளவும்.	1—2	கீல்வாதம், இருதயரோகம்.
கால்சீகம் ... (Colchicum)	ஒருபவுண்ட் பச்சைக்கிழங்கை கொறுக்கி ஒரு அவுன்ஸ் அஸிடிக் ஆசிட் கொஞ்சங்கொஞ்சமாக சேர்த்து எடுத்தசாற்றை சுண்டக்காய்ச்சிக் கொள்ளவும்.	1—3	கீல்வாதம், முடக்குவாதம்.
பெல்லடோனா (Belledona)	ஆகோனைட் சத்துசெய்வதுபோல் செய்துகொள்க.	¼—1	பெல்லடொனா நிவர்த்தியாகும் ரோகங்கள்.
குமட்டிக்காய் (Colocynth)	இதின் சாற்றை சுண்டக்காய்ச்சிக்கொள்ளவும்.	5—20	விரேசனகாரிகளோடு சேர்த்து கொடுக்கப்படும்.
கோனியம் ... (Conium)	இலையின்சாற்றைச் சுண்டக்காய்ச்சி கொள்ளவும்.	3	கீல்வாதம், நரம்புவேதனை.
ஐயாவஸியாமஸ் (Hyoscyamus)	மேற்படி	5—30	இசிவு, இருமல், வாதநோய்.

☞ இவ்விதமாக பதார்த்தங்களிலிருந்து சத்துக்கள் வேண்டியபோது எடுத்துக்கொள்ளலாம்.

26-வது அத்தியாயம்.

இந்த அத்தியாயத்தில் ஆண், பெண் சரக்குகளும், வஸ்திரங்கள்; உணவு ஏனங்கள், மூத்திரங்கள், பால்கள், விதிரிகள் இவைகளின் குணங்களும், பொங்கும் மருந்துகளும், மேலுக்கு குளிரான ஸங்கோசனகாரிகளும், இயல்பான ஸ்நானத்தின் சீதோஷ்ண நிலைமையும், பதார்த்தத்தால் உண்டாகும் சதை, அனல், கொழுப்பு, இவைகளும், பதார்த்தங்கள் ஜீர்ணிக்கும் காலமும் விஸ்தாரமாய் சொல்லப்படும்.

ஆண்—பெண்—சரக்குகள்.

சில சரக்குகள் ஆணாகவும், சில சரக்குகள் பெண்ணாகவும், இருப்பதை நமக்கு தெரிந்திருக்க வேண்டியது. உப்புச்சரக்குகள் ஆண் அல்லது விந்து என்றும், புளிப்பு சரக்குகள் பெண் அல்லது சுரோணிதம் என்றும் சொல்லப்படும். இவ்விரண்டும் சேர்த்தால், சேர்ந்து கட்டியாய்ப் போகிறபடியினாலே ஆண்சரக்கு, பெண்சரக்கு என்று பெயர் பெற்றன.

ஆண்சரக்கு.	பெண்சரக்கு.	ஆண்சரக்கு.	பெண்சரக்கு
கல்லுப்பு.	பழம் புளி, லிங்கம்.	அப்பிரகம்.	காயந்த சுருக்கு.
வெடியுப்பு.	படிக்காரம்.	கௌரிப்பாஷாணம்.	புளிமாங்காய்.
காந்தம்.	காடி.	வெள்ளைப்பாஷாணம்.	பனங்கள்ளு.
சூடன்.	துரிசு.	வைக்கிராந்தம்.	சிமிளா.
கடல்நுரை.	கற்சுணநீர்.	தங்கம்.	மனோசிலை.
ரசம்.	கந்தகம்.	நவச்சாரம்.	வெங்காரம்.
இரும்பு.	எரியலாம் என்னெய்.	பச்சைகர்ப்பூரம்.	இந்துப்பு.
பேதி.	பொன்னம்பர்.	கர்ப்பூரசலாசித்து.	சாம்பிரம்.
தொட்டிப்பாஷாணம்.	புளியரளை; புளிகரளை.	மாங்கிசபேதி.	கல்மதம்.
		வீரம்.	புளியாரை, நாகம்.

விசிறிகளின் குணங்கள்.

பெயர்கள்.	குணங்கள்.
மயில் விசிறி	விஷபாகம், சந்நிபாதம், வயிற்றுவலி, வாதபித்த ரோகங்கள் தீரும்
வெட்டிவேர் விசிறி	பயித்தியம், தேகஎரிவு, தாகம்தீரும். மனோற்சாகம் உண்டாகும்.
பனை, தென்னை, ஈச்சு விசிறிகள்	வாதரோகம், சிலேஷ்மரோகம், பித்தரோகம், அரோசகம் குணமாகும்.
வெண்சாமரம்	வியர்வை, மயக்கம், ஆயாசம், மூர்ச்சை, உஷ்ணம்தீரும். லட்சுமிவிலாசம், புணர்ச்சியில் இச்சை உண்டாகும்.

பால்களின் குணங்கள்.

பால்களின் பெயர்கள்.	பால்களின் குணங்கள்.
வெண்பசும்பால்.	பித்தரோகங்கள் (40) தீரும்.
செம்பசும்பால்.	வாதரோகங்கள் (80) தீரும்.
கறும்பசும்பால்.	சிலேஷ்மரோகங்கள் (96) தீரும்.
கபிலைப்பசும்பால்	திரிதோஷங்கள் தீரும்.
கறுப்புமாதர்பால்.	நேத்திரரோகங்கள் (மாத்திரம்) தீரும்.
சிவப்புமாதர்பால்.	வாதபித்தசிலேஷ்ம ரோகங்கள் தீரும்
வேசியர்பால்.	பற்பலரோகங்கள் உண்டாகும்.
எருமைபால்.	மேற்படி
செம்மறியாட்டுப்பால்,	மேற்படி
ஒட்டைப்பால்.	வீக்கம், மகோதரம், வாதசூலை, சுவாசகாசம், இவைகள் தீரும். தேகபுஷ்டி, தாதுபுஷ்டி, வலிவு உண்டாகும்.
வெள்ளாட்டுப்பால்.	ஜாடராக்கினி வர்த்தனகாரி, சுவாசகாசம், வாதவீக்கம், முதலியவைகள் தீரும். தீபனத்தை உண்டாக்கும்.
குதிரைப்பால்.	தாருட்டியக்காரி, சுக்கிலத்தை விருத்திக்கும், புணர்ச்சியில் வல்லமை உண்டாகும்.
கழுதைப்பால்.	சீத்பிரமேகம், கரப்பான், சிரங்கு, புண், வாதம் தீரும்.

உணவு ஏனங்களின் குணங்கள்.

பெயர்கள்.	குணங்கள்.
சங்கப்பாத்திரம்	இதில் சாப்பிட்டால் சுக்கிலவிருத்தி, சமாக்கினி, வன்மை, உச்சாகம் உண்டாகும்.
வெள்ளிப் பாத்திரம்	சிலேஷ்மம், பித்தம் நீங்கும். தேஜசு உண்டாகும்.
வெண்கலப் பாத்திரம்	சோர்வு, உதிரப்பித்தம் போம்.
வாழை இலை	தேகத்தில் பளபளப்பு, சுகபோகம் பொருந்தும். மந்தாக்கினி, துர்பலம், வாதம், சிலேஷ்மம், ஆரோசிகம் நீங்கும்.
பலா இலை	பித்தம், குன்மம், பெருவயறு நீங்கும்.
பாலுள்ள மரத்திலை	பக்கவாதம், க்ஷயம், பயித்தியம், தாகம் தீரும்.
தாமரை இலை	வெப்பம், வாதம், மந்தாக்கினி உண்டாகும். சம்பத்து நீங்கி விடும்

மூத்திரங்களின் குணங்கள்.

பெயர்கள்.	குணங்கள்.
சிறு நீர்	விஷம், சோபை, வாதம், இருமல், சுவாசம், கிரந்தி, விரணம் தீரும்.
பசு மூத்திரம்	விஷபாண்டு, சோபை, வீக்கம், விஷம், காமாலை நீங்கும்.
எருமைமூத்திரம்	பெருவயறு, காமாலை, பாண்டு, சோபை, பிரமேகம் நீங்கும்.
வெள்ளாட்டு மூத்திரம்	சோபை, பாண்டு, வீக்கம், ரத்தகபம், துர்மாமிசம், மகோதரம், நீங்கும்.
யானை மூத்திரம்	அதிஸ்தூலரோகம், சோபை, வாயு, விஷம் நீங்கும்.
குதிரை மூத்திரம்	பாதபுற்றுக் கண்டுகெண்டாகத் தடித்தல், கிருமி, கபம் தீரும்.
ஒட்டைமூத்திரம்	தேகத்தில் புடைக்கும் தடிப்பு, சந்நிபாதம், சூலை, குஷ்டம் தீரும்.
கழுதை மூத்திரம்	உஷ்ணம், தாதுநஷ்டம், குஷ்டம், காசம், இரைப்பு, சில்விஷம், சந்நிதோஷம், அபஸ்மாரம் தீரும்.

வஸ்திரங்களின் குணங்கள்.

பெயர்கள்.	குணங்கள்.
பட்டு வஸ்திரம்	பயித்தியசிலேஷ்மம் நீங்கும். மனக்களிப்பு, ஞானம், தேஜசு உண்டாகும்.
வெள்ளைப் பட்டு	அதிசுரம், வாதநோய் போம். ஸ்திரீ வசியம், அன்பு உண்டாகும்.
சாலுவை	நீர் ஏற்றம், சிரோரோகம், வலி, வாதம், குன்மம், நமிர் போம்.
நார்மடி	கபம், சலதோஷம், குடல் விருத்திவாதம், சந்நிபாதம் போம்.
வெள்ளைவஸ்திரம்	தோஷம், வியர்வை நீங்கும். லட்சுமி விலாசம், அன்பு, அறிவு, பலம் உண்டாகும்.
சிவப்புவஸ்திரம்	பயித்தியம், உட்சூடு, சுரம், வாந்தி போம்.
மஞ்சள்வஸ்திரம்	வாதம், நீர்சுருக்கு, இருமல், விஷசுரம் போம்.
பச்சைவஸ்திரம்	உட்சூடு, சிலேஷ்மதோஷம் போம். கண்ணுக்கு குளிர்ச்சி உண்டாகும்.
கறுப்புவஸ்திரம்	இருமல், சுரம், சர்ப்பவிஷம், பயித்தியம் போம்.
கம்பளிவஸ்திரம்	திரிதோஷகிரகணி, கீல்பிடிப்பு, அதிசாரம் தீரும்.

மேலுக்கு குளிரான ஸங்கோஷணகாரிகள்
Cold as a Local Astringent.

நம்பர்.	கூட்டு மருந்துகளின் பெயர்கள்	பாகம்.	Fahrenheit's. தர்மாமிட்டர் தொய்க்க டிக்ரியின் அளவு.
1	நவக்ஷாரம்	5	பனிக்கட்டி அகப்படாத போது இதை வெளிக்கு உபயோகிக்கலாம்.
	ஜலம்	16	
2	பனிக்கட்டி–(Ice)	1	நல்லமுறை.
	கரியுப்பு–(Common Salt) ...	1	
3	க்ளோரைட் அமோனியா (Chloride of Ammonia) ...	5	50 டிக்ரி முதல் 10 டிக்ரி பாரன் ஹிட்-
	வெடியுப்பு–(Nitre) ...	5	
	ஜலம்–(Water) ...	10	
4	நைட்ரேட் அமோனியா (Nitrate of Ammonia) ...	1	50 டிக்ரி முதல் 4 டிக்ரி பாரன் ஹிட்.
	ஜலம்–(Water) ...	1	

மேலுக்கு குளிரான சங்கோஷணகாரிகள்
Cold as a Local Astringent (*Continued.*)

நம்பர்.	கூட்டு மருந்துகளின் பெயர்கள்.	பாகம்.	Fahrenheit's தர்மாமிட்டர் தொய்க்கு டிக்கிரியின் அளவு.
5	பனி-(Snow) ..	2	32 டிக்கிரி முதல் 4 டிக்கிரி பாரன் ஹிட்.
	கறியுப்பு-(Common Salt) ..	1	
6	பனிக்கட்டி-(Ice) ..	12	13 டிக்கிரி முதல் 25 டிக்கிரி பாரன் ஹிட்.
	கறியுப்பு-(Cammon Salt) ...	5	
	நைட்ரேட் அமோனியா (Nitrate of Ammonia) ...	5	

பதார்த்தங்களால் உண்டாகும் சதை, அனல், கொழுப்பு இவைகளும், ஜீர்ணிக்கும் காலமும், காண்க.

அவித்தபதார்த்தங்களின் பெயர்கள்.	100 பங்கில்			ஜீர்ணிக்கும் காலம்.	
	அனல் கொழுப்பு உண்டாக்கத்தக்கது.	சதை உண்டாக்கத்தக்கது.	ஜலம் முதலியவைகள்.	மணி.	நிமிஷம்.
உருளைக்கிழங்கு.	23	2	75	3	30
கடலை, உழுந்து, துவரை முதலிய பயறுகள்.	60	25	15	3	0
அரிசி	78	7	15	1	0
கோதுமை	69	15	16	3	30
நெய்	100	0	0	3	30
பால்	9	5	86	2	0
முலைப்பால்...	7	4	89	0	0
முட்டை	11	14	75	3	30
மீன்...	7	14	79	3	0
கோழி	7	20	73	4	0
ஆட்டிறைச்சி	7	22	71	2	0

சவ்வரிசி 1¼ (சஉ) மணிநேரத்தில் ஜீர்ணிக்கும்.

பொங்கும் மருந்துகள்—Effervescent Draughts.

நம்பர்.	மருந்துகளின் பெயர்கள்.	மருந்தின் அளவு.		ஜலத்தின் அளவு.	குணம்.
		திரா.	கிரேன்.	அவுன்.	
1	சோடியம் பாஸ்பேட்	0	50	8	இந்நான்கு உப்புகளும் கல்வத்திலிட்டு பொடிசெய்து பிரித்து 8 அவுன்ஸ் ஜலத்தில் போட பொங்கும். உடனே சாப்பிடவும். மதுமூத்திரம், வாந்திபேதி, கல்லடைப்பு குணமாகும். சுகபேதியாகும்.
	சோடா பைகார்பொனேட்	0	50		
	டார்ட்டாரிக் ஆஸிட்	0	27		
	ஸிட்ரிக் ஆஸிட்	0	18		
2	எப்ஸம்ஸால்ட்	1	40	6	மேல் சொல்லியபடி செய்து 6 அவுன்ஸ் ஜலத்திலிட்டு சாப்பிடவும். (பொங்கும்) மலபந்தம், நீர் சுருக்கு, அஜீர்ணம் குணமாகும்.
	சோடா பைகார்பொனேட்	1	12		
	டார்ட்டாரிக் ஆஸிட்	0	38		
	ஸிட்ரிக் ஆஸிட்	0	25		
	கற்கண்டு	0	21		
3	டார்டரேட் சோடா	2	0	8	மேல்சொல்லியபடி செய்து 8 அவுன்ஸ் ஜலத்தில் போடபொங்கும், உடனே சாப்பிடவும். சுகபேதியாகும். அஜீர்ணம், வாயு தீரும்.
	சோடா பைகார்பொனேட்	0	40		
	ஸிட்ரிக் ஆஸிட்	0	30		
4	சோடா பைகார்போனேட்	0	51	8	மேல்சொல்லியபடி செய்துசாப்பிட மலபந்தம், சுரம், அரோசகம், வாந்தி தீரும்.
	டார்ட்டாரிக் ஆஸிட்	0	27		
	ஸிட்ரிக் ஆஸிட்	0	18		
	கற்கண்டு	0	15		
5	சோடா ஸல்பேட்	0	50	8	மேல்சொல்லியபடி செய்து சாப்பிட மலபந்தம், அஜீர்ணம், சந்துவாதம் தீரும்.
	சோடா பைகாபொனேட்	0	50		
	டார்ட்டாரிக் ஆஸிட்	0	27		
	ஸிட்ரிக் ஆசிட்	0	18		

ஸ்நாநம்—BATH.

இயல்பான ஸ்நாநத்தின் உஷ்ணத்தின் நிலைமை
Temperature of Simple Baths.

ஸ்நாநம்—(Bath.)	ஜலம்—(Water.)	ஆவி—(Vapour.)	காற்று—(Air.)
சீதம் Cold.	30° முதல் 65 டிக்ரி பாரன் ஹிட்.	,, ,,	,, ,,
மிதசீதம் Cool.	65° முதல் 75 டிக்ரி பாரன் ஹிட்.	,, ,,	,, ,,
உஷ்ணம் Temperature.	75° முதல் 85 டிக்ரி பாரன் ஹிட்.	,, ,,	,, ,,
இளஞ்சூடான Tepid.	85° முதல் 92 டிக்ரி பாரன் ஹிட்.	90° முதல் 100 டிக்ரி பாரன் ஹிட்.	96° முதல் 105 டிக்ரி பாரன் ஹிட்.
சூடுள்ள Warm.	92° முதல் 98 டிக்ரி பாரன் ஹிட்.	100° முதல் 115 டிக்ரி பாரன் ஹிட்.	105° முதல் 120 டிக்ரி பாரன் ஹிட்.
அதிசூடுள்ள Hot.	98° முதல் 112 டிக்ரி பாரன் ஹிட்.	115° முதல் 140 டிக்ரி பாரன் ஹிட்.	120° முதல் 180 டிக்ரி பாரன் ஹிட்.

27-வது அத்தியாயம்.

ஆயுள் வேதியர்கள் கவனிக்கவேண்டிய விஷயங்கள்.

1. நஞ்சுள்ள பதார்த்தங்கள் வைத்திருக்கும் ஏனங்களுக்கு நஞ்சு என்று அடுத்தகடுதாசியில் எழுதிஒட்டி, தனிப்பட வைக்கவேண்டியது.

2. மருந்துகளில் சிலது வெளிச்சம்பட்டால் கெட்டுப்போகும். அவைகளை நீல நிறமுடைய சீசாவிலாவது, வெள்ளை சீசாவுக்கு நீலக் கடுதாசியை அதைச் சுற்றிலும் ஒட்டியாவது போட்டு வைக்க வேண்டியது.

3. சில மருந்துகள் காற்றுப்பட்டால் கெட்டுப்போகும். அவைகளை கற்கார்க்கு சீசாவில் போட்டு வைக்கவேண்டியது.

4. ஆயுள் வேதியர்கள் முதலில் அஷ்டவித பரிக்ஷைகளாலும், ரோகம் உண்டான ஆதிகாரணங்களாலும், ரோகம் இன்னதென்று அறிந்துக்கொண்டு பிறகு ரோகிகளின் வயது முதலிய (12) விஷயங்களை அனுசரித்து அவர்களுக்குத் தகுந்த மருந்துகளை நிதானித்தறிந்து அவைகளின் அளவுகளை புஸ்தகத்தில் கண்டறிந்து நோயாளிகளின் இஷ்டப்படி தகுந்த அனுபானங்களில் கொடுக்க வேண்டியது. தினந்தோறும் மலம், மூத்திரம், பசி இவைகளைக் கிரமப்படுத்தி சிகிச்சைகள் செய்ய வேண்டியது.

5. நோயாளிப் படுத்திருக்கும் இடத்தில் தூபங்களைப்போட்டு அவடத்திலுள்ள நாற்றங்களை நீக்கிவிடவேண்டியது. நோயாளியின் மெத்தை முதலானப் படுக்கைகளை தினந்தோறும் உதரி வேறு இடத்தில் போடவேண்டியது. அன்றியும் நோயாளி தினம் சுத்தமான வஸ்திரங்களைத் தரித்துக்கொள்ள வேண்டியது. சுத்தமானதும், காற்றுள்ளதும், நாற்றமில்லாததும், ஈரமில்லாததுமான இடத்தில் நோயாளியின் படுக்கை போட வேண்டியது. நோயாளி சாப்பிடக்கூடாத பதார்த்தங்களைப் படுக்கைக்கு சமீபம் வைக்கலாகாது. அன்றியும் சமீபத்திலிருந்துக் கொண்டு நோயாளிக்கு இஷ்டமில்லாத விஷயங்களை சொல்லுதல், கூச்சலிடுதல், அழுதல் முதலியவைகள் கூடாது.

6. கர்ப்பஸ்திரீகள், பால்கொடுக்கும் ஸ்திரீகள் இவர்களுக்கு மாதாந்திர ருது காணுதல் அரிது. பிரவினை அகாத சிறு பெண்களுக்கு ருது வர்த்தனகாரிகளைக் கொடுக்கலாகாது. கருப்பை பருபக்குவமானால் ஒழிய சுரோணிதம் வெளிப்படாது. இவைகளைக் கொடுத்தால் பேதங்கள் சம்பவிக்கும். ஒரு மருந்து குணத்தைக் கட்டாவிட்டால் அந்த இனத்தில் சேர்ந்த மற்றொரு மருந்து குணத்தைத்தரும். இதை ஒன்றோடொன்று சேர்த்துக்கொடுக்க குணத்தை விசேஷிக்கும். கருப்பையில் காணும் ரணரோகத்துக்கு ருதுவர்த்தனகாரிகள் கொடுக்கக்கூடாது.

7. கபத்தை விருத்தியாக்கி வெளிப்படுத்த கபஹரகாரிகளைக் கொடுக்க வேண்டியது. பலஹீனருக்கு குமட்டலையுடைய கபஹரகாரிகளைக்கொடுக்க கூடாது. வமனகாரிகளாலும், அதிக ஜலம் சாப்பிடுவதாலும், உஷ்ணம் மிதமாக வைத்திருப்பதாலும் கபஹரகாரிகளின் குணத்தை விசேஷிக்கும். தாபனம் கண்டிருக்கும் போது கபஹரகாரிகளைக் கொடுக்கலாகாது. விரேசனகாரிகள், மூத்திரவர்த்தனகாரிகள், அபினிசேர்ந்த மருந்துகள் இவைகளைக் கொடுப்பதால் கபஹரகாரிகளின் குணத்தை குறைக்கும்.

8. சிறு குழந்தைகளுக்கு நித்திராகாரிகளைக் கொடுக்க கூடாது. ரத்தபுஷ்டியுள்ளவர்களுக்கு இது சீக்கிரத்தில் குணத்தைத்தரும். புருஷர்களைப் பார்க்கிலும் ஸ்திரீகளுக்கு இதை குறைந்த அளவில் கொடுக்கவேண்டும். அதிக கபம் வெளிப்படும் இருமலுக்கும், மூளையில் ரத்தம் கட்டினதற்கும், நீடித்த இருதயரோகத்திற்கும், நித்திராகாரிகளை ஜாக்கிறதையாய் கொடுக்கவேண்டியது. நாசூக சரீரத்தையுடையவர்களுக்கு கொஞ்சம் அளவில் ஆரம்பித்து நாளுக்குநாள் அதிகரித்துக் கொள்ளவும். கர்ப்ப ஸ்திரீக்கு இதைக் கொடுத்தால் பிண்டத்திற்கு மோசம நேரிடும். மேல் சொல்லிய கபரோகங்களுக்கு இதைக் கொடுத்தால் கபம் உள்ளுக்கு அடைப்பட்டு மூச்சடைப்புகாணும். இது அளவுக்கு அதிகமானால் விஷமிக்கும்.

9. நீடித்த ரோகங்களுக்கு வியதாபேதகாரிகள் கொடுக்கும் போது ரோயாளிகள் பத்தியம், ஸ்நாநபானம் முதலியவைகளில் ஜாக்கிரதையாய் இருக்கவேண்டியது, அப்படிக்கு இல்லாவிட்டால் மரு

ந்துச்சாப்பிட்டும் பிரயோஜனமில்லை. இவைகளைச் சாப்பிட்டால் வெளிக்கு யாதொன்றும் காட்டாமல் உள்ளேயே வியாபித்து குணத்தைக்காட்டும்.

10. வேதனை சாந்தகாரிகள் மஜ்ஜை நரம்புகளிலும், மூளையிலும் வியாபித்து நித்திரையை உண்டாக்குவதால் நோவுடைய ரோகங்களுக்கு எல்லாம் கொடுக்கப்படும்.

11. அம்லநாசகாரிகள் நாசூக்கசரீர முடையவர்களுக்குக் கொடுக்கக்கொழுப்பைக் கரைத்து தேகத்தை இளைக்கச் செய்யும். ஆகையால் அவர்களுக்கு காரணமில்லாமல் கொடுக்கலாகாது. இவைகளை அஜாக்கிரதையாயாவது, அதிகமாயாவது, நாள்படவாவது சாப்பிட்டால் கெடுதி செய்யும். இவைகள் போஜனம் செய்து 1 அல்லது 2 மணிநேரம் சென்ற பிறகுச்சாப்பிட வேண்டியது.

12. கிருமி நாசகாரிகள் தனியாகக் கொடுக்காமல் ஒன்றோடொன்று சேர்த்துக் கொடுப்பது நல்லது. இவைகளைச்சாப்பிட்டு மறுநாள் சிற்றாமணக்கெண்ணெயை பேதிக்குச்சாப்பிட வேண்டியது.

13. நஞ்சுண்டோருக்கு விஷநாச காரிகள் உடனே கொடுக்க வேண்டியது.

14. நேத்திரரோகிகளை வெளிச்சமுள்ள இடத்தில் வைக்கலாகாது.
15. செவிரோகிகளை சப்தமில்லாத இடத்தில் வைக்கவேண்டியது.
16. நரை ஈரல் ரோகிகளை பேசவொட்டாமல் செய்யவேண்டும்.
17. சிரோரோகிகளை உட்கார வைக்க வேண்டியது.
18. கைகால் தாபனரோகிகளை படுக்க வைக்கவேண்டியது

19. நரம்புகளுக்கு பலத்தை உண்டாக்கி வலிரோகங்கள் (5) நீக்குகிற அங்காகர்சன நாசகாரிகள் வலி நின்றிருக்கும் காலத்தில் கொடுக்க வலியை வரவொட்டாமல் செய்யும். இவைகளை நாள்படக் கொடுக்க வேண்டியது. பித்த உருப்புகளில் கெடுதிகளால் உண்டாகும் வலிகளுக்கு ரசம் சேர்ந்த மருந்துகளையும், வயிற்றில் அதிபுளிப்பால் உண்டாகும் வலிரோகங்களுக்கு க்ஷாரங்களையும், வயிற்றில் கிருமிகளால் காணும் வலிகளுக்கு கிருமிநாசகாரிகளையும் கொடுக்க குணமாகும். வலிரோகத்தில் தாபனம் கண்டால் அடிக்

கடி வலிகள் காணைம், அப்போது பயங்கரமாய் இருக்கும். வலி ரோகத்தில் மலம், மூத்திரம், தீபனம் இவைகளை கவனித்துக் கிரமப்படுத்த வேண்டும்

20. அதிசாரம், ரத்தப்பெருக்கு முதலியவைகளில் தாபனம் கண்டிருக்கும்போது லங்கோஷணகாரிகளைக் கொடுக்கக்கூடாது.

21. துலக்ஸபோடகாரிகள் நரம்புகளில் நீர் சென்று உண்டான வீக்கத்தின்பேரில் போட்டு நீரை வற்றச்செய்து வீக்கத்தைக் கரைக்கவும், சரீரத்துக்குள் இருக்கும் தாபனத்தை வெளியாக்கவும், தேகத்தை உஷ்ணிக்கவும், ஓர் இடத்திலுள்ள கெட்ட நீரை வேறொருயிடத்தில் கொண்டு வரவும், மேலுக்கு உபயோகப்படுத்தப்படும். ஸ்தனம், அண்டகோசம், முதலிய மிருதுவான இடங்களிலும், தாபனம் கண்டிருக்கும்போதும், சிறு குழந்தைகளுக்கும் (பிளிஸ்டர்) புண்ணாக்கக்கூடாது. எரிவண்டு பிளாஸ்திரி போட்டு 6 அல்லது 12 மணி நேரம் வைத்து பிறகு எடுத்து பொல்டிஸ்கட்ட கொப்பளிக்கும். கர்ப்பஸ்திரீகளுக்கு ஸ்தனம், மார்பு இவைகளில் புண்ணாக்கக்கூடாது. இவைகளை உபயோகித்து வருகையில் கிரிச்சரம் கண்டால் அதை நீக்கி மெழுகுக் களிம்பைப்போட கொப்பளமாகும். அதிகமாய் ஜலம் சாப்பிட்டால் நீர் எரிவு குணப்படும். பிளிஸ்டர் செய்த இடத்தை ஆறாமல் வைத்து இருக்கவேண்டிய போது ஸேவைன் ஆயின்ட்மென்ட் போடவேண்டியது. நரம்பைப்பற்றிய வியாதிகளுக்கு முள்ளந்தண்டின் பேரிலும்; உன்மாத ரோகத்துக்கு பிடரியிலும், குதகுலை, ஸ்திரீகளின் மேகம், குழந்தையின் சொட்டு மூத்திரம் இவைகளுக்கு திரிகஸ்தானத்திலும், காது வலிக்கு காதுக்கு பின்புறத்திலும், சந்நிக சிலேஷ்ம ரோகத்துக்கு மூட்டின் பேரிலும், நேத்திர ரோகத்துக்கு புருவத்தின் மேல்புறம், கன்னப்பொறி, பிடரி, காதின் பின்பக்கம் இவைகளிலும்; வாந்தி ரோகத்துக்கு அாமகஸ்தானத்திலும், பிளிஸ்டர் செய்தால் ரோகங்கள் குணமாகும். குழந்தைகளுக்கு பிளிஸ்டர் பிளாஸ்திரியின் பேரில் எண்ணெயை தடவி நோயுள்ள இடத்தில் போட்டு அந்த இடம் சிவந்த உடனே எடுத்துவிட்டு சூடான போல்டிஸ்கட்ட சீக்கிரத்தில் கொப்பளிக்கும். அந்தஇடத்தை ஆற்ற மீன் மொழு

ப்பு சேர்ந்த இளகிய களிம்பை அல்லது தேங்காய் எண்ணெயைப் போடலாம்.

22. விரேசனகாரிகளில் உப்பு, ஆமணக்கெண்ணெய், இவைகள் மலச்சிக்கலை உண்டாக்காது. ரேவல்சின்னி, மலச்சிக்கலை உண்டாக்கும். மும்மரஸ்திதியிலுள்ள ரோகங்களுக்கும், சுரங்களுக்கும் உப்பை பேதிக்குக் கொடுப்பது நல்லது. இது 3-4 மணி நேரத்தில் பேதியாகும். கர்ப்ப ஸ்திரீகளுக்கு சிற்றாமணக்கெண்ணெய், நில ஆவாரை லேகியம், முதலிய சாந்தமானவைகளை பேதிக்குக் கொடுக்க வேண்டியது. மூசாம்பரத்தை பேதிக்குக் கொடுக்கலாகாது. மாதாந்த ருது கண்டிருக்கிற ஸ்திரீகளுக்கு பேதிக்கு அவசியமில்லாமல் கொடுக்கலாகாது. குழந்தைகளுக்கும், வயது சென்றவர்களுக்கும், கர்ப்பஸ்திரீகளுக்கும், ரத்தமில்லாத துர்பலர்களுக்கும், உப்பை போதிக்குக் கொடுக்கலாகாது. மூல ரோகிக்கு மூசாம்பரம் பேதிக்குக் கொடுக்கலாகாது. உப்பு, எண்ணெய் இவைகள் குடல் முழுவதிலும், மூசாம்பரம், ஸ்காமோனி முதலியவைகள் பெருங் குடலிலும், ஆஸனத்தின் மேல்புறத்திலும், வியாபிக்கும். ரச பஸ்மம், கொல்சிகம், ஜாலப், இவைகள் குடலை தாண்டி பித்த நீரை விருத்திக்கும். நேர்வாளம் 1-2 மணி நேரத்திலும், ஜாலப், ஸ்காமோனி, மக்கி, நீல ஆவரை 3-4 மணி நேரத்திலும், ரேவல் சின்னி, ஆமணக்கெண்ணெய் 4-6 மணி நேரத்திலும் பேதியாக்கும். மூசாம்பரம் வெகு நேரம் பொறுத்து பேதியாகும். நேர்வாளத்தின் எண்ணெயை நாக்கில் தடவ பேதியாகும். பேதி மருந்துகளை பக்குவப்படுத்தி ஆசனத்தின் வழியாயும் பிரயோகிக்கலாம்.

23. ரணத்தின் துர்மாமிசத்தை அழிக்கவும், கட்டிகளை உடையும்படிச்செய்யவும், ரத்த பெருக்கை நிறுத்தவும், ரணகாரிகளாகிய காரங்கள் போடப்படும்.

24. சீதபேதி, நீர்சுருக்கு, இருமல், பிரமேகம் முதலிய ரோகங்களுக்கும், நஞ்சுண்டோருக்கும் சினிக்தகாரிகள் கொடுக்கலாம்.

25. சுவேத காரிகள் சாப்பிட்டால் காற்றுப் படாமல் படுத்திருக்க வேணும். காற்றுப்பட்டால் வியர்வைக் குறையும், மூத்திரத்தை

விருத்திக்கும். சூர்ண ரூப சுவேதகாரிகளைப் பார்க்கிலும் ஜல ரூப சுவேதகாரிகள் வெகு சீக்கிரத்தில் குணத்தைக் காட்டும். தாபனம் உள்ளபோது சாராயம் முதலிய உஷ்ண சுவேதகாரிகளைக் கொடுக்கக் கூடாது. சுவேதகாரிகள் படுக்கைக்குப் போகும் முன்னதாவது அல்லது படுத்து எழுந்த உடனேயாவது கொடுக்கவேண்டியது

26. குறைந்த மூத்திரத்தை சுவாபீக அளவுக்குக் கொண்டு வரவும், சுரத்தில் தாபனத்தை நீக்கவும், தேகத்தில் ஊறின நீரை வற்றச்செய்யவும் சுரத்தின் விஷத்தை வெளியாக்கவும், மூத்திர வர்த்தனகாரிகள் கொடுக்க வேண்டியது. குளிர்ச்சியான இடத்தில் இருக்குதல், அடிக்கடி ஜலம் சாப்பிடுதல் இவைகளால் அவைகளின் குணத்தை அதிகப்படுத்தும்.

27. பூர்ண கர்ப்பமுள்ள ஸ்திரீ, சதை அண்டவாதம், இருதய நோய், அதி ஜன்னி, அதி பலஹீனம், இவைகளுக்கு வமனகாரிகளைக் கொடுக்கக்கூடாது. நஞ்சு, ஜீர்ணிக்காத போஜனம், இவைகளை இரைப்பையிலிருந்து வெளியாக்கவும், கபத்தை தாராளமாய் வெளியாக்கவும், வமனகாரிகளைக் கொடுக்க வேண்டியது. குழந்தைகளுக்கு வமனகாரிகளைக் கொடுக்க இபிகாக்குயனு தகுதியானது. வாந்திக்கு அடிக்கடி கொடுக்கக்கூடாது; கொடுத்தால் தேகம் கெடும்.

28. ரத்தத்தின் பசையை உறையச் செய்யவும், ரத்த நரம்புகளை சுருங்கச்செய்யவும், ரத்தத்தை நிறுத்தவும் ரத்த ஸ்தம்பனகாரிகளை உபயோகிக்க வேண்டியது.

29. தேகத்துக்கு பலத்தை உண்டாக்கவும், ஜீர்ண சக்தியை உண்டாக்கவும் தாருட்டிய காரிகளை கொடுக்க வேணும். இவைகள் நாள்ப்படச் சாப்பிடவேணும். அயச்சம்பந்த தாருட்டிய காரிகள் ரத்தத்திலிருக்கிற அயத்தை விருத்தி செய்து மாமிஸ தாதுவின் பலத்தை அதிகப்படுத்தும். பாண்டு, சோகை, பலஹீனம், அஜீர்ணம், சுரம் முதலியரோகங்களுக்கு தாருட்டியகாரிகளைக்கொடுக்கவேண்டும் ஆனால் தாபன ரோகம், அதிசார ரோகம் இவைகளுக்கு அவைகளை நீக்கி வைக்கவும்.

30. பாஷாணம் அல்லது பாஷாண சம்பந்த மருந்துகளை போஜனஞ் செய்து 1-2 மணிநேரம் சென்றுச் சாப்பிடவேண்டும். வெறும் வயிற்றில் சாப்பிடக்கூடாது. இதைச் சாப்பிடுகையில் திவலை, வாய் ரணம், சூடு, இருமல், நீர்க்கட்டு, வெப்புநிற மூத்திரம் இவைகள் கண்டால் உடனே மருந்தை நிறுத்தவும். இதைக் கொடுப்பதற்கு முன் துர்மலத்தைப் போக்க பேதிக்குக் கொடுக்க வேண்டியது. இதைக் சாப்பிட்டுக் கொண்டிருக்கும் போது 10—15 நாளுக்கு ஒரு தடவை 2-3 நாள் நிறுத்தி வைத்து பேதிக்குச் சாப்பிட்டால் மருந்தின் குணத்தை விசேஷிக்கும். இதைச்சாப்பிடும்போது வாந்தி, குமட்டல், இவைகள் கண்டால் அபினிப்பாவனத் திரவத்தை சேர்த்துக் கொடுக்க துர் குணத்தை நீங்கும். குழந்தைகளுக்கு இதைக் கொடுக்கக்கூடாது. இதைச் சாப்பிட்டுக்கொண்டு வருகையில் நோயாளிகளின் கண்கள் சிவந்தாவது, வினவாவது அல்லது ரெப்பைகள் தடித்தாவது இருக்கிறதாவென்று தினந்தோறும் பார்க்க வேண்டும். அப்படிக்கு இருக்குமாகில் மருந்தை நிறுத்தவேண்டியது.

31. அயமருந்துகள் பாண்டு ரோகத்துக்குக் கொடுக்க ரத்தம் ஊறும். அயத்தை நாள்ப்பட சாப்பிடுகையில் 15 நாளைக்கு ஒரு தடவை விட்டு பேதிக்குச் சாப்பிட்டு துர்மலத்தை நீக்குவது மருந்தின் குணத்தை அதிகரிக்கும். இதைச் சாப்பிடுகையில் புளிப்புள்ள பதார்த்தங்களைச் சாப்பிடக்கூடாது. அயத்துக்குண்டான துர்குணத்தை நீக்க கோனியம், குரோசாணி ஓமம், இவைகளில் எதிலாகிலும் சேர்த்துக் கொடுக்க வேண்டியது. கண்டமாலைக்கு ஐயோடைன் சேர்ந்த அயமருந்துகள் கொடுக்கத் தகுதியானது. அயமருந்தில் ஒன்று ஒத்துக்கொள்ளாவிட்டால் வேறொரு சாந்தமானதைக் கொடுக்கவேண்டியது. அதிதூல ரோகம், தாபன ரோகம் இவைகளுக்கு இதைக் கொடுக்கக்கூடாது.

32. பிரசவ காலத்தில் கருப்பை பொறுத்துப் பொறுத்து சுருங்கும் போது அதின் முகமும் கொஞ்சங் கொஞ்சமாய் மலரும். அப்பொழுது குழந்தையின் சிரசும் கொஞ்சங் கொஞ்சமாய் உதயமாகும். இந்த தருணத்தில் பிரசவ வேதனை மந்தப்பட்டால் ஷை வாயுவை அதிகரித்து கருப்பையை சுருங்கச்செய்ய பிரசவகாரிகளைக்கொடுக்க வேண்டியது

33. ஸ்திரீகளுக்கு பிரசவவேதனை ஆரம்பித்த உடனே குழந்தை கர்ப்பத்தில் சரியானவிடத்தில் இருப்பதையும் இல்லாததையும் அறிந்துகொள்வதற்காக படுக்கையின்மேல் ஸ்திரியை வலது பக்கமாய்ப் படுக்கவைக்காமல் இடது பக்கமாய்ப் படுக்கவைத்து வயிற்றின்மேல் கால்களை மடித்துக் கொள்ளச்சொல்லி ஆமணக் கெண்ணெயில் வலது கையின் 2-வது விரலை நனைத்துக்கொண்டு பின்பக்கமாய் யோனிக்குள் நுழைத்தால் குழந்தையின் முன்பாகந் தெரிந்துக்கொள்ளலாம். பிரசவமாவதற்கு நேரஞ் செல்லும் என்று தோன்றினால் ஸ்திரியை உட்காரவைத்து, காப்பித் தண்ணீர், கஞ்சி, பால் கொடுக்கவும். ஸ்திரியை அடிக்கடி பரீக்ஷிக்கக்கூடாது. குழந்தையின் தலை வெளியில் வந்தவுடனே அம்பட்ட மருத்துவச்சிகள் தாங்கள் வெறுமனே உட்கார்ந்திருக்கக்கூடாது உட்கார்ந்திருந்தால் மதிக்கமாட்டார்கள் என்று அறிவில்லாமல் நினைத்து குழந்தையின் தலையைப் பிடித்து இழுத்து அபாயமான காரியங்களைச் செய்வார்கள். ஆகையால் இப்பேர்ப்பட்ட மருத்துவச்சிகளை தருவிக்கக்கூடாது.

34. ஸ்திரிகள் பிரசவிக்குங் காலத்தில் மருத்துவஞ் செய்யப்போகும் வைத்தியர் அடியில் கண்ட ஆயுதங்களும், அவுஷதங்களும், கொண்டு போகவேண்டியது.

ஆயுதங்கள்.

ஆயுதங்களின் பெயர்கள்.	ஆயுதங்களின் உபயோகங்கள்.
1. ரப்பர் அல்லது வெள்ளி சலாக்கு.	பெண் குழந்தைகளுக்கு நீரை வெளியாக்க உபயோகிக்கலாம்.
2. ஸ்தேதஸ் கோபு. Stethoscope	கர்ப்பத்தில் குழந்தைக்கு உயிர் உண்டு அல்லது இல்லை என்று அறிவதற்கும், இரட்டைப் பிள்ளை இருக்கிறதாவென்று அறிவதற்கும் உபயோகிக்கலாம்.
3. குறடு.	குழந்தை குறுக்காய்ப் போய்விட்டால் உபயோகிக்கலாம்.
4. கத்திரி. Scissors.	குழந்தையின் வயிற்றுக் கொடியை கத்தரிக்க உபயோகிக்கலாம்.

☞ ரப்பர் பிச்சாங்குழல் (Indian rubber syringe) ஒன்று கையிலிருப்பது நல்லது.

அவுஷதங்கள்.

1. எர்கட்டெசத்து (Extract Ergot)
2. குளோரொபாரம் (Chloroform)
3. அபினிப்பாவனத்திரவம் (Tincture opium)
4. பரிமலநவசுஷாரமது (Spiritus ammonia Aromaticus)

இந்த மருந்துகளில் ஒவ்வொன்றிலும் ஒரு அவுன்ஸாக்கு குறைவில்லாமலிருக்கவும்

35. ஸ்திரிகளுக்குக் காணும் சூதகஜன்னிக்கு சிகிச்சை செய்வதில் முதலில் சீமை இந்துப்பு (Epsom salt) பேதிக்குக் கொடுத்து வாத பித்த சம்பந்தமான கெட்ட நீரை வெளியாக்கி அபினி சம்பந்தமான அவுஷதங்களைக் கொடுத்து மேலுக்கும் பொஸ்தக்காயக் கசாயத்தை ஒற்றிடம் கொடுத்து வயிற்று வலியை நிற்க செய்யவும். சுவேதகாரிகளைக் கொடுத்து சுரத்தை நீக்கவும், உஷ்ணத்தைத் தணிக்கவுஞ் செய்யவேண்டியது.

36. ஸ்திரிகளுக்கு ரஜஸ்வலான காலத்தில் காணும் வலி (தீட்டு வலிக்கு அபினி சம்பந்தமான அவுஷதங்கள், கர்ப்பூர சம்பந்தமான அவுஷதங்கள் முதலிய சிலாக்கியமான அவுஷதங்களைக் கொடுப்பதுந் தவிர ஒரு தொட்டியில் தீநீர் விட்டு அரை வரையில் தினம் 2-தடவை (?) அரை மணி நேரம் வரையில் உட்காரவைத்தால் நோவு குணமாகும்.

37. உதிரப்பெருக்கு அதாவது திரவம் (சிவந்த ஜலம்) அதிவிசேஷமாயாவது, சுபாவத்திற்குக் குறைவாவது அல்லது ஸ்நானமான பிறகு நெடுநாளாவது வெளிப்பட்டுக் கொண்டே இருக்கும். இந்த சமயத்தில் நாடி தீவிரமாய் நடந்தால் 2-கிறேன்ஸ் சுத்தி செய்த வெடியுப்பை ஜலத்தில் கரைத்து 1 மணி அல்லது 1½ மணிக்கு ஒருதடவை கொடுக்கவும். அதி மெதுவாய் நடந்தால் விளாவின கந்தகத் திராவகத்தில் 2—4 துளி ஜலத்தில் கொடுக்கவும். மருதிட்டு வருமுன் படிக்கார ஜலத்தை யோனியிலடிக்கலாம். கை கால் குளிர்ந்தால் கர்ப்பூரத் தைலத்தைத் தடவித் தேய்த்துச் சூட்டை உண்டாக்கவும், அன்றியும் மணல், உப்பு இவைகளை வறுத்து ஒற்றிடம் கொடுக்கவும். இச்சருணத்தில் ரோகியைப் படுக்கையில் தான் வைக்கவேண்டும்.

38. சில கர்ப்ப ஸ்திரிகள் 2 மாதகாலம் வரையில் தினம் காலே, மாலே, வாந்தி செய்வார்கள். இதற்கு மருந்து அவசியமில்லே. சில கர்ப்ப ஸ்திரிகள் பிரசவமாகிற வரையிலும் எதையும் வயிற்றில் தங்காமல் வாந்தி செய்வார்கள். இப்பேர்ப்பட்ட ஸ்திரீகளுக்கு அவசியமாய் மருந்து கொடுக்க வேண்டியது. ஆகையால் இங்குலுவின் (Ingluvin) 1—1½ கிறேன் கொடுக்க வாந்தி நிற்கும். இதை கால் அல்லது அரை மண்டலம் கொடுக்கவேண்டியது.

39. பிரசவ வேதனை ஆரம்பித்த பிறகு சிற்றாமணக்கெண்ணெயைக் கொடுத்தாவது, அல்லது பீச்சாங்குழலால் அடித்தாவது மலத்தை இறங்கச்செய்வது உத்தமம். இப்படிச் செய்வதால் குழந்தை மலத்தால் தடைப்படாமல் சுகப்பிரசவமாகும்.

40. கர்ப்ப ஸ்திரியின் மூத்திரத்தைக் காய்ச்சிப் பார்க்க வெண்மையான மண்டி விசேஷமாய் அடியில் தங்கினால் அந்த ஸ்திரியின் கால்கள், தேகம் இவைகள் வீங்கும்; அன்றியும் சுரம், தலைவலி முதலியவைகள் காணும். இத்தருணத்தில் செவ்வையாய் பேதியாகும்படி பேதி மருந்தைக் கொடுத்து, மறு நாள் அயப்பாவனத் திராவகம் 15—20 துளி, ஒரு அவுன்ஸ் ஜலத்தில் சேர்த்து தினம் 3—4 தடவை கொடுக்கவும். அன்றியும் ஜின் (Gin) சாராயத்தை தேகத்திற்குத் தக்கபடி அளவை ஏற்படுத்தி ஜலத்தில் சேர்த்துக் கொடுத்தால் குணத்தைத்தரும்.

41. சில பூரண கர்ப்ப ஸ்திரியின் கர்ப்பாசயம் மூத்திரப் பையின் மேல் விழுந்து மூத்திரத் துவாரம் தடைப்பட்டு மூத்திரம் இறங்காமல் வயிறு உப்பும். இத்தருணத்தில் சிலாகினால் தூக்கி மூத்திரத்தை வெளியாக்கவேண்டியது.

42. முலைப்பால் குடிக்கும் குழந்தையின் மாந்தம், சுரம் முதலிய ரோகங்களை சிகிச்சை செய்வதில் குழந்தைக்கு பால் கொடுக்கும் ஸ்திரியை தகுந்த பத்தியத்தில் வைத்தாலொழிய குழந்தையின் ரோகம் நிவர்த்தியாகாது. குழந்தையையும் பத்தியத்தில் வைப்பது நல்லது.

43. லேகியம், கிருதம் முதலிய அவுஷதங்களை பீங்கான் அல்லது, கிளாஸ், வெள்ளிப் பாத்திரம், தங்கப் பாத்திரம் இவைகளில்

போட்டு மேல் காகிதம் முதலியவைகளால் மூடிவைத்துக்கொள்ளவேண்டியது. இங்கிலீஷ், கர்நாடக, யுனானி அவுஷதங்களில் ஜலரூபமான அல்லது எண்ணெய் சம்பந்தமான அவுஷதங்களை பீங்கான் அல்லது கிளாசில் போட்டு உள்ளுக்குச் சாப்பிடவேண்டியது. வெள்ளி, தங்கப் பாத்திரங்களும் உபயோகிக்கலாம். மற்ற பாத்திரங்களை உபயோகிக்கக்கூடாது.

44. பிரசவித்த ஸ்திரிகளின் நாடியை பரீக்ஷிக்கையில் நாடி மெதுவாக நடந்தால் சகுணம். நாடி ஒரு மினிட்டுக்கு 80-க்கு மேல் அடித்துக் கொள்ளுதல் துர்குணத்தில் சேர்ந்தது. ஆகையால் நாடி வேகவாய் நடக்கக்கூடாது.

45. பிரசவித்த ஸ்திரிகளுக்கு 3-வது நாளில் பால் சுவரும்போது உஷ்ணம் சுபாவத்திற்கு 1—2 டிக்ரி மேல்ப்பட்டிருக்கும். இதை 1—2 தினத்தில் சாந்தமாகும்.

46. பிரசவித்த ஸ்திரிகளுக்கு நாடி தீவிரமாயும், உஷ்ணம் 100 டிக்ரிக்கு மேல்ப்பட்டு இருந்தால் ஒருவேளை பிராண அபாயம் நேரிடுமென்று நினைக்கவேண்டியது.

47. குழந்தைகள் சுரத்தாலாவது, கபரோகத்தாலாவது, சருமரோகத்தாலாவது, வேறு எவ்விதமான ரோகத்தாலாவது, தேகம் சுட்கித்து மெலிந்து இருக்கிற தருணத்தில் மீன் எண்ணெயை (Codliver-oil) 1—2 விராகனிடை தினம் 2—3 தடவை காபி, ஒயின், டி, பால் இவைகளில் எதிலாகிலும் குழந்தையின் இஷ்டபடி சேர்த்து 4—6 மண்டலம் வரையில் கொடுக்க குழந்தையின் தேகம் ஸ்தூலிக்கும், ரத்த விருத்தியாகும், தீபனம் உண்டாகும். இந்த மருந்தின் குணம் உடனே தெரியாது. நாள்ப்பட சாப்பிட்டால் தேகத்தில் ஊறி ரத்தத்தை சுத்தியாக்கி எப்பொழுதும் நிரோகியாய் இருக்கச்செய்யும்.

28-வது அத்தியாயம்.

ஸ்திரீ புருஷர்களுக்கு சரீர சம்பந்தப்படுவதால் உண்டாகும் நன்மை, தீமைகள்.

*நல்லக்காற்றும், நல்ல ஜலமுமுள்ள சுத்தமான இடத்தில் பால்லிய முதல் வாசஞ்செய்துக் கொண்டிருக்கின்ற அதி சுகுமாரமான ஸ்திரீகள் தேக உழைப்பு கூடியமட்டும் எடுத்துக் கொள்ளுவதால் அவர்களின் அங்க க்கட்டுகள் பலத்தை அடையும். இந்த ஸ்திரீகள் எவ்வன பருவத்தில் கடினமான வேலைகள் செய்தபோதிலும் தேகத்தில் கஷ்டமாகத் தோன்றாது; அன்றியும் இந்த ஸ்திரீகளுக்கு பிரசவகாலத்திலுண்டாகும் பிரசவ வேதனையை ஒரு வேதனையில் சேர்ந்ததாக இராது.

ஸ்திரீகள் 12 முதல் 16 வயதுக்குள் ருது ஆவார்கள். ருது என்பது கர்ப்பத்திலிருந்து வெளிப்படுகிற சிவந்த ஜலம் (திரவம்). இது 28 நாளை க்கு ஒருதடவை ஸ்திரிகளுக்குக்காணும். இவ்விதமாக 40—45 வயது வரையில்தான் காணும்; பிறகு நின்று போகும். சில ஸ்திரீகள் ருது ஆகாமலே இருப்பார்கள். அவர்களுக்கு பலத்தையும், தேக புஷ்டியையுமுண்டாக்கி, சௌக்கியப் படுத்துவதால் கருப்பையில் திரவம் (சிவந்த ஜலம் உண்டாகி ருது ஆவார்கள். ஸ்திரிகளுக்குக் காணும் முதல் ருது முதல் ருது நிற்குங்காலமாகிய 40—45 வயது வரையிலும் புருஷர்கள் ஸ்திரி போகம் செய்யலாம். ஆனால், பதிவிரதை, குருபத்தினி, எஜமான் பத்தினி, தூரஸ்திரி, விதவை, தன் வயதுக்கு மேல்பட்ட வயதுள்ள ஸ்திரி, துயரமும் அச்சமுமுள்ள ஸ்திரி, ரோகஸ்திரி இவர்களோடு போகித்தால் தரித்திரமும், ரோகங்களும் உண்டாகும்.

16 வயதுள்ள ஸ்திரியும் 25 வயதுள்ள புருஷனும் சரீரமுழுவதும் மறைவில்லாமல் ஆசை வொன்றாகி அன்யோடு வாரத்திற்கு ஒரு தினம் இராகாலத்தில் புணர்வதால் உண்டாகும் குழந்தைகளின் தேகம் திடமாயிருக்கும், வியாதிகள் அணுகாது. அன்றியும் தாய், தந்தைகளின் தேகம்

*சில நாகரீக ஸ்திரிகள் பால்லியம் முதற்கொண்டு தேக உழைப்பில்லாமலிருப்பதால் பிரசவகாலத்தில் வேதனையை சகிக்கக் கூடாமல் மோசமடைகிறார்கள்.

வெகு கிடமாய் இருக்கும். மாதாந்த ருதுக்கண்டமுதல் 12 நாள்கள் வரையில் கருப்பைத் துவாரமானது இராக்காலத்தில் தாமரைப் பூவைப்போல் மூடிக்கொள்ளாமல் இருக்கும்; ஆனால் முதல் 3 நாள்களில் கருப்பையில் முகத்துவாரமாகிய யோனித்துவாரம் அதிகமாய்த் திறந்திருப்பதால் சுக்கிலம் அதிகமாய் செல்லுகிறது. அப்பொழுது சுக்கிலமும் சுரோணிதமும் சமமாகத்திரண்டு அவிப்பிள்ளைகளாக பிறக்கிறது. இந்தக் காரணத்தினால் தான் முதல் 3 நாள்கள் அசுத்தம் சேரக்கூடாதென்றும், மற்ற 9 நாள்களில் இரட்டித்த, நாள்களில் சேர்ந்தால் ஆணாகவும், ஒற்றைப்பட்ட நாள்களில் சேர்ந்தால் பெண்ணாகவும் பிண்டோற்பத்தி உண்டாகும். இந்த பிண்டமானது 2 தரைகளால் மூடப்பட்டு கர்ப்ப ஜலத்தில் மிதந்துக் கொண்டு, நாளுக்குநாள் விருத்தியை அடைந்து, 290 நாள்களான வுடனே பிரசவ வேதனையை மேல் வயிற்றில் ஆரம்பித்து அடிவயிற்றில் போய் பரவும். இது முதலில் அற்பமாய் ஆரம்பித்து பிறகு மேல் மேல் அதிகரித்து, குழந்தை வெளிக்கு வந்து விழும். குழந்தை பிறந்து 20—25 நிமிஷத்தில் மாயை விழுந்து விடும்.

பிண்டம் விருத்தி அடைவதும், கருதரித்த மாதக்கிரமமாய்த் தோன்றும் குறிகளும் இதின் அடியில் சொல்லப்படும்.

மாதம்.	பிண்டம் விருத்தி அடைவதின் விவரம்	கருத்தரித்தால் கிரமமாய்த் தோன்றும் குறிகள்.
1	எறும்பு அளவு.	வாயில் ஜலம் ஊறும், வாந்தியாகும், சாப்பாடு செல்லாது.
2	2 அங்குலம் அளவு,	ஷை குறிகளுடன், முலைக்காம்பு கருத்திருக்கும், ஸ்தனங்களில் நோய், கட்டி, பச்சை நரம்புகளின் தடிப்பு, இவைகள் காணும்.
3	கால், கை, மூக்கு, கண், காது இவைகள் ஏற்படும்.	வயிறும், ஸ்தனங்களும் பெருக்கும். முலைக்காம்பை நசுக்கினால் பால் வரும். ஸ்டெதஸ் கோபு (Stethoscope) அடிவயிற்றின் மேல் வைத்து காது வைத்துக் கேட்டால் பிண்டத்துக்கு போகும் ரத்தத்தின் சத்தம் கேட்கும்.

மாதம்	பிண்டம் விருத்தி அடைவதின் விவரம்.	கருத்தரித்தால் கிரமமாகத் தோன்றும் குறிகள்.
4	ஆண், பெண் குறிகள், வாய், ஆசனம், நகம் இவைகள் ஏற்படும்.	பிண்டம் அசைகிறது தாய்க்குத் தெரியும். ஸ்டெதஸ்கோபு (Stethoscope) தொப்புள் சமீபத்தில் வைத்துக் கேட்டால் சிசுவின் மார்பு துடிப்பது கேட்கும். அது ஒரு மினிட்டுக்கு 130-150 தட்வை துடிக்கும்.
5	பிண்டம் திரும்பும், மயிர் முளைக்கும்.	அடிவயிறு பெரிதாகி முன்னுக்கு வந்திருக்கும். மர்மஸ்தானத்தில் விரலால் மேலே தாக்கினால் கீழே இருக்கும் சிசு கர்ப்பஜலத்தின்மேல் கிளம்பி அங்குலத்திற்கு தென்படும்.
6	இமைகள் மூடியிருக்கும்.	கருக்கொடியில் ரத்தம் பரவுகிறதைக் கேட்கும்.
7	இமைகள் கொஞ்சம் திறந்திருக்கும்.	அடிவயிறு பெருதாகி 2-3 விரற்கடை தொப்புள் முன் வந்திருக்கும்.
8	இமைகள் செவ்வையாய் திறந்திருக்கும்.	மர்ம ஸ்தானத்தில் விரலால் பரீக்ஷிக்க சிசுவின் தலை தென்படும். அன்றியும் கையை கர்ப்பத்தின்மேல் வைத்தால் சிசு திரும்புகிறது தெரியும்.
9	பூர்த்தியாயிருக்கும்.	4-வது மாதமுதல் 8-வது மாதம்வரையில் காணப்பட்ட குறிகள் எல்லாம் செவ்வையாய்த் தெரியும்.
10	ஷை ஷை	மர்மஸ்தானத்திலிருந்து வெள்ளை நிறமுள்ள பிசின் போல் திரவம் வந்துகொண்டிருக்கும். இந்த மாதம் ஆரம்பத்தில் ஸ்திரீகள் பிரசவிப்பார்கள்.

29-வது அத்தியாயம்.

ரோகிகளுக்குத் தகுதியான ஆகாரமாகிய கஞ்சிவகைகள் முதலியவைகளின் பெயர்களும், செய்முறைகளும் இந்த அத்தியாயத்தில் சொல்லப்படும்.

கஞ்சிகள்.

கஞ்சிகளின் பெயர்கள்	கஞ்சிகள் செய்யும் விதிகள்.	கஞ்சிகளின் உபயோகங்கள்.
கோதுமை நொய் (ரவா) கஞ்சி ... (Wheat flour) Gunjee.	கோதுமைநொய்ஜலத்தில்போட்டு நொய்யை கரையும் வரையில் காய்ச்சி பசும் பால் சர்க்கரை சேர்த்துச்சாப்பிடவும்.	கபரோகம், வாதரோகம், சன்னிபாத சுரம், ஜலதோஷம், இவைகளுக்கு கொடுக்கவாம்.
எவாகஞ்சி ...	எவா அரிசியை ஜலத்தில் போட்டு அரிசி கரைந்துபோகும் வரையில் காய்ச்சி வடித்து பால் சர்க்கரை ஏலரிசித்தூள் சேர்த்துச் சாப்பிடவும்.	கபரோகத்துக்கும். தேகம் சுட்சித்து மெலிந்திருக்கிறவர்களுக்கும்; கொடுக்கலாம்.
பச்சரிசி கஞ்சி...	பச்சரிசியை ஜலத்தில்போட்டு மேல்சொல்லியபடி கஞ்சியாக்கி வடித்து பால் சர்க்கரை சேர்த்துச் சாப்பிடவும்.	பித்தஎரிவு, புத்தியீனம், சுக்கிலநஷ்டம் இவைகளுக்குக் கொடுக்கலாம்.
நெற்பொரி கஞ்சி	மேல் சோல்லியபடி செய்துச் சாப்பிடவும்.	பயித்திய ரோகிகளுக்குக் கொடுக்கலாம்.
கொள்ளுகஞ்சி ... Horse gram gunjee.	கொள்ளு, பாசிப்பயிறு, சமமாகசேர்த்து மேல் சொல்லியபடி செய்துச்சாம்பிடவும்.	தீபனத்தையும், 10யானைக்கு உள்ளபலத்தையும் உண்டாக்கும்.
சிறுபயிறு கஞ்சி	சிறுபயிறும் பச்சரிசியும் சமமாகசேர்ந்து மேல் சொல்லியபடி செய்துக்கொடுக்கவும்.	பித்த ரோகிகளுக்கு கொடுக்கலாம்.
புனற்பாகம் ...	வடித்த அன்னத்தை ஜலத்தில் போட்டு அன்னங்கரையும் வரையில் காய்ச்சி வடித்து தேவையான உப்பைசேர்த்துக்கொடுக்கவும்.	வாதபித்தசிலேஷம ரோகங்களுக்கும், சகலசுரங்களுக்குங் கொடுக்கலாம்.

பார்லி அரிசிகஞ்சி (Barley water)	2½ (௨½) அவுன்ஸ் பார்லி அரிசியை ஜலமிட்டு நன்றாய்க் கழுவி ½ (½) பயின்ட் ஜலத்தில் போட்டு கொஞ்சங் கொதிக்க வைத்து, அந்த நீரை ஒழித்து விட்டு, 3½ (௩½) பயின்ட் கொதிக்கிற ஜலத்தை விட்டு 2 பயின்ட்டாகும்படி சுண்டக்காய்ச்சி வடித்துக் கொடுக்கவும்	சினிக்ககாரி-பிரமேகம், சுரங்களில்காணும் தாகம், இருமல் இவைகளுக்குக்கொடுக்கலாம்.
அரோரூட் மாவு கஞ்சி ... ... (Arrowroot gunjee.)	ஒருகரண்டி மாவை கொஞ்சம் ஜலத்தில் கரைத்து பிறகு ஒரு பயின்ட் ஜலத்தைச் சேர்த்து காய்ச்சிக்கொடுக்கவும். பால் சர்க்கரையுஞ்சேர்த்துக்கொடுக்கலாம்.	பாலர்களுக்கு; குழந்தைகளுக்கும் ஆகாரமாகக் கொடுக்க இது தகுதியானது.
கார்ன்பிலோர் கஞ்சி (Corn flour gunjee.	மேற்சொல்லியபடி செய்துக் கொடுக்கவும்.	ஷை, சீதபேதிக்கு கொடுக்க குணமாகும்.
ஜவ்வரிசிகஞ்சி ... (Sago gunjee.)	ஜவ்வரிசியைஜலத்தில் போட்டு ஷை அரிசிகரைந்து போகும் வரையில் காய்ச்சிக்கொடுக்கவும். பால் சர்க்கரையும் சேர்த்துக் கொடுக்கலாம்.	நோயாளிகளுக்கு இது வெகு நல்ல ஆகாரம்.

அன்னங்கள், பலகாரங்கள்.

அன்னங்களின், பலகாரங்களின் பெயர்கள்.	அடியில்கண்ட ரோகங்களையுடையவர்கள் சாப்பிடலாம்.
சர்க்கரைப்பொங்கல் ...	அரோசிகம், வாந்திதீரும். பத்தியத்துக்கு உதவாது.
பால் பொங்கல்	வாதம், பித்தம், ரத்தபித்தம் தீரும்.
பருப்புப்பொங்கல் ...	வீரிய விருத்தியாகும், பித்தம் தீரும்.
புளியோதனம்	அரோசிகம்தீரும். பத்தியத்துக்கு உதவாது.
மிளகோதனம்	தீபனகாரி, குடல்வாயு, இரைச்சல், பித்தம், கபம் தீரும்.
எள்ளோதனம்	பயித்தியம் தீரும். பலம் உண்டாகும்.
ததியோதனம்	உட்சூடு, பித்தரோகம் தீரும்.

உளுந்தோசனம்... ...	பித்தம், சிலேஷ்மம் வாதம் தீரும்.
சர்க்கரான்னம்	வீரியவர்த்தனகாரி, உஷ்ணசாந்தகாரி.
உளுந்தின்வடை... ...	வாதரோகம் தீரும்.
தோசை	பித்தம் வாதசிலேஷ்மம் தீரும்.
இட்டலி	பித்தம் தீரும்.
முறுக்கு	வாதம் தீரும்.
தேன் குழல்	மந்தம், தாகம், வாயு உண்டாகும்.
அதிரசம்	கப பித்தரோகிகளுக்கு உதவாது.
பிட்டு	ஸ்திரிகளின் உதிரப்பெருக்கு தீரும்.
மோதகம்..	வாதம், அக்கினிமந்தம், கபம் தீரும்.
கோதுமை ரொட்டி ...	பலம், தீபனம், மோகம் உண்டாகும்.
உளுத்தமாவின் அப்பளம்	ஆமம், கபம், தீரும்
சோற்றப்பளம்	திரிதோஷம் தீரும்.
பழஞ்சோறு	இரவில்பூட்டிய அன்னத்தை அங்கீராகாரத்துடன் சூரியோதய காலத்தில் அருந்தில் உதராக்கினி, சுக்கிலவிருத்தி, தேஜசு உண்டாகும்.
அரிசிசாதம்	கொழுப்பையும், அனலையும் உண்டாக்கும்.
கம்புச்சாதம்	இருமல், இரைப்பு, தீரும்.
தினைச்சாதம்	வீரியவர்த்தனகாரி, பித்தரோகம், வாதரோகம் தீரும்.
வரகுச்சாதம்	கபரோகம், சருமரோகம், பித்தரோகம் தீரும்.
சாமைச்சாதம்	வாதம், க்ஷயம், சிலேஷ்மம், வீக்கம் தீரும்.
சோளச்சாதம்	சருமரோகம் தீரும், மருந்தைமுறித்துவிடும்.
காடைக்கண்ணிச்சாதம் ...	கபவாதரோகம் தீரும்.

30-வது அத்தியாயம்.

தயிலங்கள்.

சகலபுவன கர்த்தாவானவர் ஆயுர்வேதத்தை பார்வதி தேவியாருக்கு அநுக்கிரகஞ்செய்ய, அந்த பார்வதிதேவியார் நந்தி தேவியாருக்கு அருளிசெய்ய, அவர் தேவர், முனிவர், சித்த புருஷர் இவர்களுக்கு உபதேசித்தருளினார்.

அநேக கிரந்தங்களைப் பார்வையிட்டு எளிதில் செய்யகூடியதுமான அநேக நல்ல தயிலங்களை சர்வஜன உபகாரமாக இந்த அத்தியாயத்தில் சொல்லப்படும். அவைகளில் சிலது உள்ளங்காலில் தேய்த்தால் நேத்திர ரோகங்கள் (94)-ம், கண்களுக்குக் கட்டினால் கர்ணரோகங்கள் (25)-ம் செவிகளிலிட்டால் சிரஸ்தாபரோகமும், சிரசில் தேய்த்து ஸ்நாநஞ்செய்தால் தேகத்திலுள்ள சகலவித ரோகங்களும் குணமாகும். ஆகையால் தயிலங்களை விதிகளின்படி தேய்த்து ஸ்நானஞ்செய்து வருகின்றவர்கள் எப்பொழுதும் நிரோகிகளாகவே இருப்பார்களென்பதற்குச் சந்தேகமில்லை.

தயிலங்கள் தேய்த்துக்கொள்ளும்போது சிரசில் தயிலம் ஊறவேண்டிய காலமும், ஸ்நானஞ்செய்யும் காலமுங்காண்க.

ஸ்நாநஞ்செய்யும் மாசங்களின் பெயர்கள்.	சித்திரை	வைகாசி	ஆனி	ஆடி	ஆவணி	புரட்டாசி	ஐப்பசி	கார்த்திகை	மார்கழி	தை	மாசி	பங்குனி
தயிலம ஊறவேண்டிய நாழிகைகள்.	1	1	1	1	1	3	3	3	2	2	3	3
உதயமுதல் இவ்வளவு நாழிகைகளுக்குள் ஸ்நானஞ் செய்ய வேண்டியதென்பது	5	5	8	8	4	4	4	4	2	2	3	3

அப்பியங்க ஸ்நானத்தின் நன்மைகளும், அரைப்பு வகைகளும் காண்க.

தயிலம் முதலியவைகளின் பெயர்கள்.	அப்பியங்க ஸ்நானத்தின் நன்மைகள்.	அரைப்பு பதார்த்தங்கள்	அப்பியங்க ஸ்நானஞ்செய்ய வேண்டிய வாரங்கள்.	
			புருஷர்கள்.	ஸ்திரீகள்.
நல்லெண்ணெய்	பஞ்சேந்திரியங்களின்தெளிவு, ரோமவளர்ச்சி, நற்றெளி, பலம் உண்டாகும்.	மணிப்புங்கின் காய்கள்.		
தயிலம்	ஷை	சீயக்காய், ஈங்கைப்பட்டை	புதன் கிழமை	செவ்வாய்க் கிழமை.
பசுவ்நெய்	இசிவு, பயித்தியம், ரத்தபித்தம், மூர்ச்சை, மூளைக்கபம், குணமாகும்.	பச்சைப்பயிறு.	சனிக் கிழமை	வெள்ளிக் கிழமை.

இஃதன்றி உசிலந்தாள், இலுப்பை புண்ணாக்கு இவ்விரண்டும் ரணம், வரகூஜி இவைகளுக்கு உபயோகிக்க வேண்டியது.

முக்கூட்டுத் தயிலம் (எண்ணெய்)

தேகலட்சணம்.	நெய்பங்கு	நல்லெண்ணெய் பங்கு.	ஆமணக்கு எண்ணெய் பங்கு.	செய்யும் விதம்.	ரோகநிவர்த்தி.
வாததேகத்துக்கு ...	3	2	3	இவ்விதமாய் சேர்த்து காய்ச்சி முழுகிவரவும்.	திரி தோஷத்தால் வரும் ஜல சம்பந்த மான ரோகங்கள் தீரும்.
பித்ததேகத்துக்கு ...	3	1	2		
சிலேஷ்ம தேகத்துக்கு ...	2	3	1		

ஐங்கூட்டுத்தயிலம் (எண்ணெய்.)

புங்கு, ஆமணக்கு, எள்ளு, வேம்பு, புன்னை, இவைகளின் யெண்ணெய்கள் வகைக்குப் படி 1 சேர்த்து காய்ச்சி உடம்பில் பூசிவர இசிவு, சந்நிவாதம், மஹாவாதம், கபரோகம் குணமாகும்.

மஹா சந்தனாதித் தயிலம்.

சந்தனத்தூள் பலம் 100, கோரைக்கிழங்கு, நன்னாரிவேர், விலாமிச்சுவேர், வெட்டிவேர், சீந்தில்தண்டு, சிற்றாமுட்டி, பேராமுட்டி, அமுக்கிராக்கிழங்கு, பற்படாகம், வகைக்கு பலம் 20 இவைகளை இடித்து 40 மரக்கால் ஜலத்தில் போட்டு $(\frac{1}{16})$ பதினாறிலொன்றாகும்படி எரித்து வடித்தக் கசாயத்தில் பொன்னாங்காணிச்சாறு, செவ்விளநீர்ஜலம், வகைக்குப்படி 10, கர்ப்பூரவல்லி, தாழைவிழுது, சிறுக்கீரை, வல்லாரை, பொடுதலை, பொற்றலைக்கரிப்பான், சிறுசின்னி, நெல்லிக்காய், இவைகளின் சாறு, பசுவின் நெய், வகைக்குப்படி 5, நல்லெண்ணெய் படி 15, பசும்பால் படி 20, வெள்ளாட்டுப்பால், தயிர்த்தண்ணீர் வகைக்குப் படி 10, இவைகளைச் சேர்த்து அதில் சுக்கு, மிளகு, திப்பிலி, கடுக்காய், தானிக்காய், நெல்லிமுள்ளி, கஸ்தூரி மஞ்சள், ஏலம், பூஞ்சாத்துப்பட்டை, இளியூரம்பட்டை, லவங்கப்பட்டை, லவங்கபத்திரி, பச்சையிலை, பூலாங்கிழங்கு, செவ்வள்ளிக்கொடி சண்பகப்பூ, செங்கழுநீர் கிழங்கு, சீரகம், கருஞ்சீரகம், கோஷ்டம், அக்கிராக்காரம், மஞ்சிஷ்டிவேர், பலகைமஞ்சள், முத்தகாசு, வலம்புரிக்காய், வகைக்குப்பலம் 2½, (உ.?) இவைகளை பசும் பாலால் அரைத்து கரைத்து எரித்து வடித்து அதில் புனுகு, கோரோசனை, குங்குமப்பூ, வகைக்கு விராகனிடை 5, பொடித்துப் போட்டு கால் மண்டலம் நெல்லுக்குள் வைத்

தெய்த்து ஸ்நானஞ் செய்துவர—கை கால் எரிவு, பிரமேகம் (21), க்ஷயம் (4), கிரந்தி (9), கண்டமாலை (18), குஷ்டம் (18), நீரிழிவு, நீர்சிறுப்பு, கண்ணெரிவு, கண்புகைச்சல், பிரமியம், கற்றாழை நாற்றம், அஸ்திசுரம், அஸ்திவெட்டை, பித்தமயக்கம், புண், புரை, புழுவெட்டு, சொறி, சிரங்கு, குணமாகும்.

மஹா வில்வாதித் தயிலம்.

வில்வவேர், சிற்றிற்பகாடி, விலாமிச்சுவேர், வாழைக்கிழங்கு, கோரைக் கிழங்கு வகைக்கும்பலம் 4 இடித்து 16படி ஜலத்தில் போட்டு எரித்து எட்டிலொரு பாகமாக்கினக் கசாயத்தில், கொம்பரக்குச் சேர் 1, 2 மரக்கால் ஜலத்தில் போட்டு எட்டிலொன்றாகக் காய்ச்சின கயாயமும், 2½ இரண்டரைபடி நல்லெண்ணெயும், 2½ இரண்டரை படி பசுவின் நெய்யும் சேர்த்து அதில் மரமஞ்சள், கஸ்தூரிமஞ்சள், சுக்கு, மிளகு, திப்பிலி, கடுக்காய், தாளிக்காய், நெல்லிவற்றல், அதிமதூரம், சோஷ்டம், சீரகம், கருஞ்சீரகம், சந்தனம், கிளியூரம்பட்டை, பூஞ்சாந்துப்பட்டை, செவ்வள்ளிக் கிழங்கு, பச்சையிலை, லவங்கப்பட்டை, பூலாங்கிழங்கு, ஏலம் வகைக்குப் பலம் (½) அரை இவைகளைப் பசும்பாலால் அரைத்துக் கரைத்து எரித்து வடித்து அரைமண்டலம் நெல்லுக்குள் வைத்து எடுத்து ஸ்நானஞ் செய்து வர—மேகம் (20), பித்தம் (40), குன்மம் (8) சிரோரோகம் (19), முதலிய அநேக கொடிய ரோகங்கள் தீரும்.

ராஜாங்க கொம்பரக்குத் தயிலம்.

கொம்பரக்கு பலம் 100, நாலு கலம் ஜலத்தில் பொடித்துப் போட்டு எரித்து எட்டிலொன்றாக்கின கசாயத்தில்பசும்பால், நல்லெண்ணெய்வகைக்குப்படி 10, தயிர்த்தண்ணீர் படி 12, புளித்தகாடி படி 24, இவைகளைச் சேர்த்து, அதில் கோஷ்டம், ஜடாமாஞ்சில், லவங்கப்பட்டை, சதகுப்பை, கடுகு ரோகிணி, கிளியூரம்பட்டை, பூஞ்சாந்துப்பட்டை, பச்சையிலை, பூலாக்கிழங்கு, செவ்வள்ளிக்கிழங்கு, லவங்கப்பத்திரி, கஸ்தூரி மஞ்சள், அதிமதூரம், சந்தனம், சீரகம், கருஞ்சீரகம். ஏலம், வகைக்கு விராகனிடை 24 இவைகளை பசும்பாலால் அரைத்து கரைத்து எரித்து வடித்து நெல்லுக்குள் அரைமண்டலம் வைத்து எடுத்து ஸ்நானஞ்செய்து வர—சுரம் (64), காசம் (5), பாண்டு (5), சூலை (18), பித்த வெட்டை, தலை மயக்கம், வாய் நீரல், வெட்டை, தேக வெளுப்பு முதலிய பற்பல கடூரமான ரோகங்கள் குணமாகும்.

மஹா மிருகாமலத் தயிலம்,

மிருகாமலம், பொன்னாங்காணி, குமரி, சிறுக்கீரை, இவைகளின்சாறு, பசும்பால் வகைக்குப்படி 4, செவ்விளநீர் ஜலம் படி 16, நல்லெண்ணெய்

படி 6, இவைகளைச் சேர்த்து, அதில் ஏலம், கோஷ்டம், அதிமதுரம், பூலாக்கிழங்கு, பச்சையிலை, குரோசாணி ஓமம், கஸ்தூரிமஞ்சள், ஜடாமாஞ்சில், ஜாதிபத்திரி, ஜாதிக்காய், லவங்கப்பட்டை, லவங்கப்பத்திரி, சுக்கு, மிளகு, திப்பிலி, கடுக்காய், தானிக்காய், நெல்லிவற்றல், பூஞ்சாந்துப் பட்டை, சோம்பு, வால்மிளகு வகைக்கு விராகனிடை 6 இவைகளை பசும்பாலால் அரைத்து கரைத்து எரித்து வடித்து ஸ்நானஞ் செய்துவர—நேத்திரகாசம் (5), நேத்திரரோகங்கள் (94), அந்திமாலை, பித்தவெட்டை, பித்தவாயு அஸ்திவெட்டை, மயக்கம், தேக எரிவு, கை கால் எரிவு, உஷ்ணரோகங்கள் குணமாகும்.

மஹா அசுவகெந்தி பாலாலாக்ஷாத் தயிலம்.

அசுவகெந்திக் கிழங்கு, சிற்றுமுட்டிவேர், வகைக்கு பலம் 15, வெள்ளெருக்கு வேர், நன்னாரிவேர், சீந்திற்கொடி, விலாமிச்சுவேர், கோரைக்கிழங்கு, நெய்சுட்டிவேர், அவுரிவேர், நார்த்தைவேர், துளசிவேர், வெட்டிவேர், அகிற்கட்டை, தேவதாரக்கட்டை வகைக்குப்பலம் 4, கீழ்நாடான், கொமபரக்கு வகைக்குப் பலம் 8, இவைகளை நொறுக்கி இரு தூணி ஜலத்தில் போட்டு எரித்து ($\frac{1}{16}$) பதினாறிலொன்றாக்கின கஷாயத்தில், நல்லெண்ணெய், பசும்பால், தயிர்த் தண்ணீர் வகைக்கு சேர் 5, சேர்த்து, பிறகு அத்துடன் சுக்கு, மிளகு, திப்பிலி, கடுக்காய். தானிக்காய், நெல்லிவற்றல், கஸ்தூரிமஞ்சள், அதிமதுரம், கோஷ்டம், ஜடாமாஞ்சில், சீரகம், கருஞ்சீரகம், பூஞ்சாந்துப்பட்டை, சந்தனம், மரளிமஞ்சள், கடுகுரோகணி, செவ்வள்ளிக்கிழங்கு, பச்சையிலை, பூலாக்கிழங்கு, கிளியூரம்பட்டை, சதகுப்பை, லவங்கப்பட்டை, ஏலம், வகைக்குப் பலம் ($\frac{1}{2}$) அரை இவைகளை பசும்பாலால் அரைத்து, கரைத்து, எரித்து வடித்து சீசாவில் போட்டு நெல்லுக்குள் அரைமண்டலம் வைத்து எடுத்து ஸ்நானஞ் செய்துவர—மேகம் (20), சூலை (18), சுரம் (64), வாதம் (80), பாண்டு (5), சுவாசம் (5), காசம் (5), பித்தவெட்டை, அக்கினி மந்தம், கண்புகைச்சல், கை கால்காந்தல், தேக எரிவு, முதலிய பயங்கரமான ரோகங்கள் குணமாகும். பத்தியம்—புளி, புகையிலை, ஸ்திரீபோகம், கசப்புப்பதார்த்தங்கள் நீக்கவும்.

குமரி சஞ்சீவித் தயிலம்.

குமரிச்சாறு, நல்லெண்ணெய், பசும்பால் வகைக்குப் படி 3 சேர்த்து அதில் கடுகுரோகணி, கஸ்தூரிமஞ்சள், சந்தனம், கிராம்பு, அக்கிறுக்காரம், செவ்வள்ளிக்கிழங்கு, சுக்கு, மிளகு, திப்பிலி, கடுக்காய், தானிக்காய், நெல்லிவற்றல், கோஷ்டம், ஜடாமாஞ்சில், சீரகம், அதிமதுரம், பூஞ்சாந்துப்

பட்டை, ஏலம், பச்சையிலை, பூலாக்கிழங்கு, லவங்கப் பத்திரி, லவங்கப்பட்டை, சண்பகப்பூ, ஆனைத்திப்பிலி, மந்திஷ்டிக்கிழங்கு, சோம்பு, மஞ்சள், வகைக்குப் பலம் ½ (ஏ) பசும்பலால் அரைத்து, கரைத்து, எரித்து, வடித்து, சீசாவில் போட்டு நெல்லுக்குள் கால் மண்டலம் வைத்து எடுத்து ஸ்நாநஞ்செய்துவர—மேகம் (20), சுரம் (64), பித்தம் (40), குன்மம் (8) பாண்டு (5), உடல்வெளுப்பு, பித்தவரட்சி முதலிய மற்றகொடிய ரோகங்கள் குணமாகும்.

மார்த்தாண்ட பயிரவத் தயிலம்.

சஞ்சா, வெற்றிலை, பொன்னாங்காணி, கையாந்தகரை இவைகளின் சாறு, நல்லெண்ணெய் வகைக்குப்படி 1, சேர்த்து அதில் வால்மிளகு, சீரகம், அதிமதுரம், மிளகு, வகைக்கு விராகனிடை 4, பசும் பாலால் அரைத்துக் கரைத்து எரித்து வடித்து ஸ்நானஞ்செய்துவர—நாள்பட்ட பீநசம், சிருய் பீநசம், ஒற்றலைவலி குணமாகும்.

விளாரித் தயிலம்.

4 வீசை விளாரி சமூலம் கொண்டுவந்து சிறுத்துண்டுகளாக நொறுக்கி அத்துடன் சிவனார் வேம்பு (½) அரை வீசை நொறுக்கிச்சேர்த்து, ஒரு பெரிய பாண்டத்தில் போட்டு சட்டியால் மூடி சீலைமண் செய்து அடியில் ஒரு சிறு துவாரமிட்டு தரையில் ஒரு குழியை நோண்டி அதில் ஒரு சிறு பாத்திரம் வைத்து அதின்மேல் ஷை பாண்டத்தின் துவாரம் பாத்திரத்தின் மத்தியில் வரும்படியாக வைத்து மண்ணாற்மூடி, அதின் மேல் வறுக புடம் போடத்தயிலம் பாத்திரத்தில் இறங்கும். அதை எடுத்து உள்ளுக்கும் மேலுக்கும் உபயோகிக்க—கருங்குஷ்டம், செங்குஷ்டம், குஷ்டம் (18) குணமாகும்.

குஷ்ட நாசத்தயிலம்.

வில்வப்பழம் 50, எட்டிவிதை, புங்கம் விதை வகைக்குப்படி 2 இவைகளை பொடித்து ஒரு மண்பாண்டத்தில் போட்டு விளாரித்தயிலம் இறக்கும் விதமாய் இதையும் இறக்கி (½) அரை அல்லது ஒரு விராகனிடை வீதம் தினம் கொடுக்க குஷ்டம் (18) தீரும். மேலுக்குப் பூசிவர ரணங்கள் குணமாகும்,

அமிர்தவல்லித் தயிலம்

நெல்லிக்காய், கற்றாழை, கையாந்தகரை, இவைகளின் சாறு, முலைப்பால் வகைக்குப்படி 2, நல்லெண்ணெய் படி 3, இவைகளைச்சேர்த்து அதில் சந்தனம், கோஷ்டம், அதிமதுரம், நன்னாரிவேர், வெட்டிவேர், விலாமிச்சுவேர், வகைக்குப் பலம் 1, பசும்பலால் அரைத்துக் கரைத்து, எரித்து,

வடித்து ஸ்நானஞ் செய்துவர—நேத்திர ரோகங்கள் (94), கர்ணரோகங்கள் (25), சிரோரோகங்கள் (19), குணமாகும்.

சர்வசித்தித் தயிலம்.

நல்லெண்ணெய், நெல்லிக்காய், கரிப்பான்ச் சாறு வகைக்கு படி 1, பசும்பால் படி 4, இவைகளைச் சேர்த்து அதில் ஒரு பலம் அதிமதுரம், பசும்பாலால் அரைத்துப் போட்டுக் கரைத்து எரித்து வடித்து ஸ்நானஞ் செய்துவர—பித்தம் (40), கண்புகைச்சல், கை கால் எரிவு, தேகஎரிவு, முதலிய பலமான ரோகங்கள் குணமாகும்.

ராஜசெம்முள்ளி சஞ்சீவித் தயிலம்.

செம்முள்ளி சமூலம் நொறுக்கி 100 பலம் தூக்கி, 4 மரக்கால் ஜலத்தில் போட்டு எரித்து எட்டிலொன்றுக்கினக் கசாயத்தில் நல்லெண்ணெய் படி ½ (அரை) விட்டு, அதில் கருஞ்சீரகம், கோஷ்டம், கற்றாழைவேர், தக்கோலம் வகைக்கு பலம் 1, ஜலத்தாலரைத்துக் கரைத்து எரித்து பதத்தில் எடுத்து வடித்து ஸ்நானஞ் செய்துவர—சுவாசகாசம் (5), கபசம்பந்தமான சகல ரோகங்களும் குணமாகும்.

நாகேசுரத்தயிலம்.

4 படி நல்லெண்ணெயில் பசும்பால் 2 படி, சீராசெங்கழுநீர்க்கிழங்கு, கற்றாழை, நெல்லிக்காய், சீந்தில்கொடி, கரிப்பான் இவைகளின் சாறுவகைக்குப்படி 1 சேர்த்து, அதில் 12 பலம் அதிமதுரத்தை பசும்பாலால் அரைத்துக் கரைத்து எரித்து வடித்து ஸ்நானஞ் செய்துவர—பித்தம் (40), தலைச்சுற்றல், கண்புகைச்சல், கை கால் எரிவு, அஸ்திச் சூடு தீரும்.

உலகோத்தமத்தயிலம்

நல்லெண்ணெயும், பசும்பாலும், பொன்னாங்காணி, முசுமுக்கை, நெல்லிக்காய், சீந்தில்கொடி, இவைகளின் சாறும் வகைக்குப்படி 4 சேர்த்து, அதில் ஏலம், கிராம்பு, சுக்கு, மிளகு, திப்பிலி, அதிமதுரம், முத்தகாசு, சந்தனம், ஜடாமாஞ்சில், சண்பகப்பூ, வகைக்குப்பலம் 1 பசும்பாலால்அரைத்து கரைத்து எரித்து வடித்து ஸ்நானஞ் செய்துவர—பிரமை, தலைசுற்றல், வாந்தி, தேகஎரிவு. விடாத சூடு, கண்புகைச்சல் தீரும்.

சந்திரகாசத் தயிலம்.

நல்லெண்ணெய், பசும்பால், வகைக்குப்படி 1 சேர்த்து, அதில் சீரகம், மிளகு, அதிமதுரம், வகைக்குப் பலம் 1, சண்பகமொட்டு பலம் ¼ (வ) இவைகளைப்பாலால் அரைத்துக் கரைத்து எரித்து வடித்து ஸ்நானஞ் செய்

துவா—இருமல், ஈளை, காசம், முதலிய பலமான கபரோகங்கள் குண மாகும்.

கீழாநெல்லித்தயிலம்.

8 வீசை கீழ்க்காய் நெல்லிசமூலம் இடித்து 3 மரக்கால் ஜலத்தில் போட்டு எரித்து ஒருமரக்காலாக்கின கசாயத்துடன், ஒருபடி நல்லெண்ணெய் சேர்த்து காய்ச்சி பதத்தில் வடித்து, அதில் கற்கண்டு பலம் (½) அரை பொடிந்துப் போட்டு ஸ்நானஞ் செய்து வர—ரத்த பித்தம், கிறுகிறுப்பு, கைகால் எரிவு, உடம்பு வெளுப்பு, கண்புகைச்சல், முதலிய சகல பித்த ரோகங்கள் தீரும். பந்தியம்—புளி தள்ளவும்.

பொன்னாங்காணித் தயிலம்.

பொன்னாங்காணிச்சாறு, பசும்பால், நல்லெண்ணெய், வகைக்குப்படி 1 சேர்த்து அதில் அதிமதுரம், அதிவிடையம், வகைக்குப்பலம் 1 பசும்பாலால் அரைத்து கரைத்து எரித்து வடித்து ஸ்நானஞ்செய்துவர கை கால் எரிவு, கண்ணெரிவு, கபாலசூலை, தேகஎரிவு, தேகவலி, குன்மம், முதலியவைகள் குணமாகும்.

கையாந்தகரைத் தயிலம்.

கையாந்தகரைச் சாறு, நெல்லிக்காய்ச்சாறு, பசும்பால், வகைக்குப்படி (1½) ஒன்றரை, நல்லெண்ணெய் படி 2, இவைகளைச்சேர்த்து அதில் வெட்டிவேர், விலாமிச்சுவேர், அதிமதுரம், கோஷ்டம், ஏலம், கிராம்பு, சண்பகப்பூ, சந்தனம், வகைக்குப் பலம் (½) அரை பசும்பாலால் அரைத்துக் கரைத்து எரித்து வடித்து ஸ்நானஞ் செய்துவர—கண்படலம், கண்காசம் (5) முதலிய நேத்திரரோகங்கள் (94)-ம் குணமாகும்.

முசுமுசுக்கைத் தயிலம்.

முசு முசுக்கை, கையாந்தகரை, தாழை விழுது, பொன்னாங்காணி, இவைகளின் சாறு, செவ்விழநீர் ஜலம், முலைப்பால், நல்லெண்ணெய், வகைக்குப்படி 2 சேர்த்து, மூன்று நாள் வெய்யிலில் வைத்து, பிறகு அதில் கோஷ்டம், செங்கழுநீர்க் கிழங்கு, சந்தனம், அதிமதுரம், விலாமிச்சுவேர், வெட்டிவேர் வகைக்கு விராகனிடை 2, குங்குமப்பூ விராகனிடை ¼ (வ), கிராம்பு விராகனிடை 1¼ (கவ), இவைகளை பசும்பலால் அரைத்து சேர்த்து எரித்து, வடித்து, ஸ்நானஞ்செய்துவர—பித்தகாசம், கண்புகைச்சல், சுற்றுநாற்றம், பித்தமயக்கம், சொறி, சிரங்கு, கண்ணெரிவு முதலிய அநேக ரோகங்கள் குணமாகும்.

நெல்லிக்காய்த் தயிலம்.

நெல்லிக்காய்ச்சாறு, கையாந்தகரைசாறு வகைக்குப்படி 1, பசும்பால், நல்லெண்ணெய் வகைக்குப்படி ¼ (வு) இவைகளைச்சேர்த்து அதில் அதிமதுரம் பலம் ¼ (வு) பசும்பாலால் அரைத்துக் கரைத்து எரித்து வடித்து ஸ்நானஞ்செய்துவர—கண்படலம், கண்காசம் (5) கண்ணெரிவு, கபாலவரட்சி முதலிய நேத்திரரோகங்கள் (94)-ம் குணமாகும்.

கருஞ்செம்பைத் தயிலம்.

2 படி கருஞ்செம்பைச் சாறும், 1 படி முலைப்பாலும், 1 படி நல்லெண்ணெயில் சேர்த்து, அதில் பூண்டு, வசம்பு, வகைக்குப்பலம் (½) அரை, வால்மிளகு பலம் 1, மிளகு பலம் 2, இவைகளை பசும்பாலால் அரைத்துக்கரைத்துஎரித்து வடித்து ஸ்நானஞ்செய்துவர—நேத்திரவாயு குணமாகும்.

பீநச நாச கணபதித் தயிலம்.

இஞ்சுச்சாறுபடி ¼ (வு), நல்லெண்ணெய் படி ½ (வு), பசும்பால் படி ⅛ (வ), நொச்சிச்சாறு படி ⅛ (வ), இவைகளைச்சேர்த்து எரித்து வடித்து ஸ்நானஞ்செய்துவர—பீநசரோகம் (18), மண்டையிடி, கபாலசூலை திரும்.

காளித் தயிலம்.

2 சேர் நல்லெண்ணெயில் அதிமதுரம் பலம் 2, மிளகு பலம் (½) அரை இவைகளை பசும்பாலால் அரைத்துக்கரைத்து எரித்து வடித்து ஸ்நானஞ்செய்து வர—நேத்திரத்தில் இறங்கின மேகநீர் குணமாகும்.

இஞ்சித் தயிலம்.

இஞ்சிச்சாறும், நல்லெண்ணெயும் சமமாகச் சேர்த்து எரித்து வடித்து ஸ்நானஞ்செய்துவர—கர்ணரோகம் (25), சிரோரோகம் (19) குணமாகும்.

சீரகத்தயிலம்.

(1½) ஒன்றரை சேர் நல்லெண்ணெயை காய்ச்சி, அதில் 2 பலம் நற்சீரகத்தைப்போட்டு, சீரகத்தை உடையும் பதத்தில் வடித்து ஸ்நானஞ்செய்துவர-தலைச்சுற்றல், ஒற்றைதலைவலி, சிரோரோகம் (19) குணமாகும்.

☞ இன்னும் அநேக தைலங்கள் பிராணரக்ஷாமிர்த சிந்து 2-வது பாகத்தில் காண்க.

31-வது அத்தியாயம்.

எண்ணெய்கள்.

சர்வாந்தரயாமியாயிருக்கின்ற கடவுளானவர் அனுக்கிரகஞ்செய்திருக்கின்ற எண்ணெய்களில் அநேக நல்ல லகுமுறைகள் சகல ஜன

ங்களுக்கும் உபயோகமாகும்பொருட்டு இந்த அத்தியாயத்தில் சொல்லப்படும். அவைகளைச்சாப்பிட்டால் குடல் முழுமையும் வியாபித்து ஜீர்ண உறுப்புகளுக்கு வலுவை உண்டாக்கி வாதபித்தசிலேஷ்ம நீர்களை வெளியாக்கி வயிற்றில் யாதொரு வேதனையும் உண்டாக்காமல் பேதியாகும்படி செய்து சிரோரோகங்கள், மேகரோகங்கள், சூலை ரோகங்கள், கிரந்திரோகங்கள், கபரோகங்கள், அண்டரோகங்கள் முதலிய பற்பல மஹாபயங்கரமான ரோகங்களை அதிசீக்கிரத்தில் நிவர்த்தியாக்கும். விரேசனகாரிகளில் எண்ணெய்கள்தான் மஹா சிலாக்கியமானவைகள். ஆகையால் எண்ணெய்கள்சாப்பிட்டு வருகின்றவர்களுக்கு வியாதிகளே அணுகாது.

குஷ்டக் குடாரி எண்ணெய்.

புங்கு, புன்னை, தான்றி, அழிஞ்சி இவைகளின் வித்து, மிளகு, கடுக்காய், கார்போகரிசி, இவைகளை சமமாகச்சேர்த்து அமுரியில் 20 நாள் ஊற வைத்து உலர்த்தி ஒரு மண்பாண்டத்தில் போட்டு அகலால் மூடிவலுவாய்ச் சீலைமண்செய்து அந்த பாண்டத்தின் அடியில் ஒரு சிறு துவாரமிட்டு, தரையில் ஒரு குழியை வெட்டி அதில் ஒரு சிறு பாத்திரம் வைத்து அதின் மேல் அந்தப்பாண்டத்தின் துவாரம் பாத்திரத்தின் மத்தியில் வரும்படியாக வைத்து குழியைச்சுற்றியும் பாண்டத்தின்மேலும் எரு போட்டு புடம் போட தயிலம் பாத்திரத்தில் இறங்கும். அதை யெடுத்துக்கொண்டு ஒரு விராகனிடை வீதம் வெற்றிலையில் வைத்து 48 நாள் உள்ளுக்குச்சாப்பிட்டு மேலுக்கும்பூசிவர குஷ்டம் (18), மேகம் (20), வெடிசூலை, கண்டமாலை, பிளவை, ரணம், பற்று, சொறி, தலைப்புழுவெட்டு தீரும். தலைக்குத் தடவிவர நரைமயிர்க்கருக்கும். உப்பில்லாபத்தியம்.

காலபயிரவ எண்ணெய்.

சுத்திசெய்த சேங்கொட்டை 30, சுத்திசெய்த கந்தகம் விராகனிடை 10, இவைகளைச்சேர்த்து ¼ (வ) படி சிற்றாமணக்கெண்ணையில் போட்டு எரித்து சேங்கொட்டை வெடிக்கும் சமயத்தில் தயிலத்தை வடித்து 2 விராகனிடை ரசமும், 2 விராகனிடை தயிலமும், 2 விராகனிடை ஆவின் நெய்யும் சேர்த்து மிஸ்ரித்து ஆறு பங்குகளாக்கி ஒரு பங்கு வீதம் தினம் 2 தடவைச்சாப்பிட்டுவர கண்டமாலை (18), மேகரணம், மேகஊறல், கைகால் முடக்கு, சூலை (18), சடிப்பு, சொறி, வெள்ளைவிழுதல், குஷ்டம் (18), பெரும் வியாதி, கிரந்தி (5), அரையாப்பு, படர்தாமரை, துடைவாளை,

லிங்கப்புற்று, யோனிப்புற்று முதலிய அநேக பயங்கரமான ரோகங்கள் தீரும்.-பத்தியம்—உப்பு, புளி, வாயு பதார்த்தங்கள் நீக்கி, பசும்பால், நெய், சேர்க்கவும். சிற்றாமணக்கெண்ணெய், தேய்த்து ஸ்நானஞ்செய்து வரவும்.

சந்திரபிரபாவ எண்ணெய்.

சிற்றாமணக்கெண்ணெய், வெங்காயச் சாறு, எலுமிச்சம் பழச் சாறு, புளியாரைச்சாறு, வல்லாரைச்சாறு, வகைக்குப்படி 1 சேர்த்து, 3 நாள் சூரியப்புடம்வைத்து, பிறகு தீபாக்கினியாக எரித்து வடித்து சீசாவில்போட்டு, அதில் கோரோசனை விராகனிடை (½) அரை சூர்ணித்துப் போட்டு தினம் காலை மாலை 2 விராகனிடை வீதம் சாப்பிட்டுவர மூலச்சூடு, கைகால் எரிவு, சொறிசிரங்கு தீரும். இச்சாபத்தியம்.

வாதராக்ஷச எண்ணெய்.

சிற்றாமணக்கெண்ணெய், நல்லெண்ணெய், வேப்பெண்ணெய், பசும் நெய், வாதமடக்கி இலைச்சாறு, பிரமி இலைச்சாறு, கழற்சியிலைச்சாறு வகைக்குப்படி 1 சேர்த்து, அதில் முடக்கொத்தான் கொழுந்து, வெள்ளைப்பூண்டு வகைக்குப்பலம் 4; திப்பிலி, இந்துப்பு, கருஞ்சீரகம் வகைக்கு விராகனிடை 8, பெருங்காயம் விராகனிடை 4, கழற்சிப்பருப்பு விராகனிடை 12, இவைகளை ஷை சாற்றால் அரைத்துக் கரைத்து எரித்து வடித்து தினம் காலை மாலை 1-2 விராகனிடை கொடுத்துவர குடல்வாதம், அண்டவாதம், முதலிய சகல குடல் ரோகங்களும், அண்டரோகங்களும் குணமாகும். இச்சாபத்தியம்.

வாதகோபநாச எண்ணெய்.

வில்வவேர், ஆடாதொடை வேர், கடுக்காய் வேர், வெண்சாரடை வேர், சித்திரமூலவேர், சரக்கொன்றைவேர் வகைக்குப்பலம் 1, இடித்து 12 படி ஆற்று ஜலத்தில் போட்டு எரித்து கால்பங்காக்கின கசாயத்துடன் சிற்றாமணக்கெண்ணெய் படி 3 சேர்த்து அதில் சுத்திசெய்த நேர்வாளம்பருப்பு, சுக்கு, மிளகு, திப்பிலி, இந்துப்பு, வெள்ளைப்பூண்டு, கடுரோகணி, வகைக்கு விராகனிடை 4, ஷை கசாயத்தால் அரைத்துக் கரைத்து எரித்து வடித்து தினம் காலையில் 2-3 விராகனிடை வீதம் 3-4 தினம் சாப்பிட்டுவர சூலை (18), கைகால் முடக்கு குணமாகும், இச்சாபத்தியம்.

விழுதி எண்ணெய்.

சிற்றாமணக்கெண்ணெய், பசும்நெய், விழுதிச்சாறு வகைக்குப்படி 1, சேர்த்து அதில் சுக்கு, மிளகு, திப்பிலி, வசம்பு, வெங்காரம், கோஷ்டம்,

லவங்கம், ஏலம் வகைக்குப்பலம் ¼ (வ) பசும்பாலால் அரைத்து கரைத்து எரித்து வடித்து ¼ (வ) சேர் வீதம் 3 நாள் காலையில் சாப்பிட்டு உப்பில்லா பத்தியமாகயிருக்க கர்ப்பவாயு, சூதகவலி, கர்ப்பத்தில் உண்டாகும் புழுக்கள், கர்ப்பசூலை, முதலிய சகல கர்பரோகங்களும், இசிவும் குணமாகும். கர்பம் உண்டாகும்.

கரப்பான் எண்ணெய்.

பூவரசம்பட்டை, செங்கத்தாரிப்பட்டை, பூதகரப்பான், கண்டங்கத்திரி, நிலவாகை, வகைக்குப் பலம் 10, நொறுக்கி தூணி ஜலத்தில் போட்டு எரித்து எட்டிலொன்றாக்கின கசாயத்தில் சிற்றாமணக்கெண்ணெய், வெள்ளாட்டுப்பால் வகைக்குப்படி 1 சேர்த்து அதில், மிளகு, கருஞ்சீரகம், கார்கோலம், வெள்ளைப்பூண்டு, வசம்பு, சதகுப்பை, வலம்புரிக்காய், பறங்கிப்பட்டை வகைக்கு விராகனிடை 2, ஷை பாலாலரைத்துக் கரைத்து எரித்து வடித்து 5 — 10 விராகனிடை வீதம் கொடுத்துவர சகல கரப்பான்களும். ரணங்களும் குணமாகும்.

மேகத்தெண்ணெய்

கோவைச்சாறு, பொன்னாங்காணிச்சாறு, வல்லாரைச்சாறு, சிறுசெருப்படைச்சாறு, யானைநெரிஞ்சிச்சாறு, சீந்திற்தண்டுச்சாறு, அரசன்பட்டைச்சாறு, வகைக்குப்படி (½) அரை, சிற்றாமணக்கெண்ணெய், நல்லெண்ணெய் வகைக்குப்படி ¾ (ஐ) இவைகள் யெல்லாஞ் சேர்த்து அதில் சாதிக்காய், சாதிப்பத்திரி, மாசிக்காய், கற்கடக சிங்கி, சிறுநாகப்பூ, ஏலம், குரோசாணி ஓமம், சண்பகப்பூ, காட்டாத்திப்பூ, வகைக்கு விராகனிடை 2 சேர்த்து பசும்பாலால் அரைத்துக் கரைத்து சித்திரமூல வேர்ப்பட்டை பலம் 1 சூர்ணித்துப்போட்டு எரித்து வடித்து சீசாவில் போட்டு, அதில் கற்கண்டு பலம் 2 பொடித்துச்சேர்த்து 5 விராகனிடை. வீதம் தினம் சாப்பிட்டுவர ஒரு மண்டலத்திற்குள் மேகம் (20), ரணம், கிரந்தி, லிங்கப்புற்று, யோனி புற்று, வெடிசூலை, மேகஊரல், சொறி, சிரங்கு, சிழ்ரத்த பிரமியங்கள் முதலிய கொடிய ரோகங்கள் குணமாகும். இச்சாபத்தியம்.

கணத்தெண்ணெய்.

கர்ப்பூரவள்ளி, புளியாரை, கோவை, வெங்காயம், கற்றாழை, கையாந்தகரை, பொன்னாங்காணி, இவைகளின் சாறு வகைக்குப்படி அரை, பசும்பால் படி 2, சிற்றாமணக்கெண்ணெய் படி 2, இவைகளைச் சேர்த்து அதில் லவங்கப்பட்டை, லவங்கப்பத்திரி, சீரகம், கருஞ்சீரகம், வெந்தியம், கோஷ்டம், அக்கிராகாரம், மாசிக்காய், கர்க்கடகசிங்கி, சாதிக்காய், சாதிப்பத்திரி, வெள்ளைப்பூண்டு வகைக்கு விராகனிடை 2, சேர்த்து பசும்பாலால் அரைத்துக் கரைத்து எரித்து வடித்து வெள்ளைச் சீசாவில் போட்டு அதில்

கோரோசனை, குங்குமப்பூ, சாதிக்காய், வகைக்கு விராகனிடை 2 சூர்ணித்துப்போட்டு 2-5 விராகனிடை வீதம் தினம் கொடுத்துவர கண சுரம், மாந்தம், உப்பிசம், சிரங்கு, ரணம், கர்ப்பவெட்டை, பாண்டு, வெளுத்த தேகம், நீரிழிவு, விடாசுரூடு, கைகால் எரிவு முதலிய கொடிய ரோகங்கள் குணமாகும். இச்சாபத்தியம்.

வேம்பாடம் பட்டை எண்ணெய்.

2 படி சிற்றாமணக்கெண்ணெயில், வேம்பாடம்பட்டை, பெருமரத்துப் பட்டை, பூதகரப்பன் பட்டை, செங்கத்தாரிப்பட்டை, சுழற்சிவேர், கண்டங்கத்திரிவேர், நன்னாரிவேர், வேலிப்பருத்திவேர், இரந்திநாயகம், சுக்கு, திப்பிலி, கடுக்காய் வகைக்கு விராகனிடை 4, பசும்பாலால் அரைத்துக் கரைத்து எரித்து வடித்து சீசாவில் போட்டு வைத்துக்கொண்டு 2 விராகனிடை வீதம் தினம் 2 தடவைச்சாப்பிட்டு வர வாய், நாக்கு, தொண்டை இவைகளிலுண்டாகும் பற்று, வாய்கிரந்தி, வாய்நாற்றம், நாக்குவெடிப்பு, ஜிக்வாரோகம் (6), உதடுவெடிப்பு, உதடுரோகம் (11), நாக்குக்கொப்பளம், பல்லெயிறுக்கட்டிச்சீழ் வடிதல், முதலிய பயங்கரமான ரோகங்கள் குணமாகும். பத்தியம்—வாயு பதார்த்தங்களை நீக்கவும்.

முடக்கோத்தான் எண்ணெய்.

முடக்கொத்தான் சாறு, சொடிக்கள்ளியை வாட்டிப்பிழிந்தசாறு, வகைக்குப்படி (1½) ஒன்றரை, சிற்றாமணக்கெண்ணெய்படி 3 இவைகளைச் சேர்த்து அதில் கழற்சிப்பருப்பு, தேவதாரம், இந்துப்பு, திப்பிலி, பெருங்காயம், கடுகுரோகணி, கொடிவேலிவேர், சிவதைவேர், வெள்ளைக்காக்கணம்வேர், சித்தரத்தை, சதகுப்பை வகைக்குப்பலம் 2; சுத்திசெய்த நேர்வாளப்பருப்பு 40; வெள்ளைப்பூண்டு பலம் 4, இவைகளை மைபோலரைத்துக் கரைத்து எரித்து வடித்து 5 முதல் 10 விராகனிடை வீதம் சாப்பிட்டுவர குடல்வாதம், அண்டவாதம் முதலிய சகல குடல் ரோகங்களும், அண்டரோகங்களும் குணமாகும். உப்பில்லாபத்தியம்.

ஸ்ரீதேவி எண்ணெய் (ஆமக்கட்டிஎண்ணெய்.)

உத்தாமணி, வெள்ளைச்சாரணை, முடக்கத்தான், சித்திரமூலம், வெண்சிவதை, இவைகளின் வேர் வகைக்குப்பலம் 25, சதுரக்கள்ளி, திருகுக்கள்ளி இவைகளின் வேர் வகைக்குப்பலம் 50, இவைகளையெல்லாம் சிதைத்து 4 மரக்கால் ஆற்று ஜலத்தில் கரைத்து எரித்து (½) அரை மரக்காலாக்கின கசாயத்தில் செவ்வள்ளிக்கொடி, கடுகு, திப்பிலிமூலம், கடுக்காய், தானிக்காய், நெல்லிவற்றல், சுக்கு, மிளகு, திப்பிலி, கடுகுரோகணி, விழாவரிசி, நிலவேம்பு, செவ்வியம், கடுக்காய்ப்பிஞ்சி, கர்க்கடகசிங்கி, யானைத்திப்பிலி, ஓமம், வெள்ளைப்பூண்டு, பெருங்காயம், இந்துப்பு, காய்ச்சுலவணம், வகை

க்குப்பலம் (½) அரை இவைகளை சூர்ணித்து தேக்காய்ப்பாலால் அரைத்துக் கரைத்து நல்லெண்ணெய், தேங்காய்ப்பால் வகைக்கு அரைமரக்கால் விட்டு மிஸ்ரித்து எரித்து வடித்து, கால்மண்டலம் நெற்புடம் வைத்து எடுத்து, 5 முதல் 10 விராகனிடை வீதம் தினம் காலையில் சாப்பிட்டுவர சூதகஜன்னி, சூதகவாயு, சூதகவலி, சூதகசூலை முதலிய சூதக சம்பந்தமான சகல கடூர ரோகங்கள், மூர்ச்சை ரோகம் (4), வித்திரதி (6), குன்மம் (8) உன்மாதரோகம் (6), வாதரோகம் (80), வலிப்பு (5), குணமாகும். பத்தியம் கடூர ரோகங்களுக்கு உப்பில்லாபத்தியமும், அற்ப ரோகங்களுக்கு இச்சா பத்தியமுமாக இருக்கவும்.

பாலை எண்ணெய்,

ஒரு வீசை பாலை மரத்துப்பட்டையை இடித்து ஒரு தூணி ஆற்று ஜலத்தில் போட்டு கமலாக்கினியாய் எரித்து எட்டிலொரு பாகமாக்கின கசாயத்தில் நல்லெண்ணெய் படி 1 சேர்த்து அதில் சுரபுன்னைப்பூ, சிறுநாகப்பூ, ஏலம், சேங்கொட்டை, நாணற்குருது, சாடாமாஞ்சில், வெட்டிவேர், சிறு, காஞ்சொறிவேர், கச்சோலம், லவங்கப்பட்டை, கிரந்திதகரம், தூணியங்கம்பிப்பிசின், சாதிக்காய், சுக்கு, புலிநகம், தேவதாரம், அகில் கட்டை ஸ்ரீவச்சகம், குங்குமப்பூ, வன்னக்குங்குலு, குங்குல், வகைக்கு விராகனிடை 2 சேர்த்து பசும்பாலாலரைத்துக் கரைத்து எரித்து வடித்து 2 விராகனிடை வீதம் தினம் உள்ளுக்குச்சாப்பிட்டு இரண்டு நாளைக்கு ஒருதரம் ஸ்நானஞ்செய்துவர ஒட்டுகின்ற வாதமேகரோகம், தேகம் கைகால் எரிவு முதலிய அநேக பலமான ரோகங்கள் குணமாகும். இச்சாபத்தியம்.

எண்ணெய் உருண்டை.

கடுக்காய், வெள்ளைப்பூண்டு வகைக்கு விராகனிடை 2, கழற்சிப் பருப்பு விராகனிடை 4, ஒட்டடை விராகனிடை 8 இவைகளை ஜலமிட்டு அரைத்து சிறு கொட்டைப்பாக்களவு வேப்பெண்ணெயில் கொடுக்க வலிப்பு (5) தீரும்.

நெய்க்கோட்டான் பழத்தெண்ணெய்.

வசம்பு, வெள்ளைப்பூண்டு, நெய்க்கொட்டான் பழம், மயில் இறகின் சாம்பல் வகைக்குப்பலம் (½) அரை ஜலத்தாலரைத்து அரைப்படி வேப்பெண்ணெயில் கரைத்து எரித்து வடித்து 2-3 விராகனிடை வீதம் தினம் உள்ளுக்குக் கொடுத்து மேலுக்கும் தடவிவர குழந்தைகளுக்குக் காணும் குமரகண்ட வலிப்புத்தீரும்.

வெங்காய எண்ணெய்.

வெங்காயம் பலம் 1, வெந்தியம் பலம் அரை இவ்விரண்டையுமரைத்து எட்டு தடவை ஜலத்தால் அலம்பி எடுத்தக் கற்றாழைச்சாறு படி அரை,

சிற்றுமணக்கெண்ணெய் படி 1 இவ்விரண்டும் சேர்த்து அதில் கரைத்து எரித்து வடித்து 4-5 விராகனிடை வீதம் தினம் கொடுத்துவர கண ரோகம் (18), மூலச்சூடு, தேக எரிவு, முதலிய உஷ்ண ரோகங்கள் குணமாகும்.

வேந்திய எண்ணெய்.

ஒரு கற்றாழையை இரண்டாகப் பிளந்து அதில் வெங்கியம் பலம் 1 வைத்து மூடி நூலால் சுற்றிலும் கட்டி மூன்று நாள் வைத்து பிறகு எடுத்து கற்றாழைச சாற்றால் மைபோலரைத்து ஒரு சேர் சிற்றுமணக்கெண்ணெயில் கரைத்து தீபாக்கினியாக எரித்து வடித்து ஒரு சுத்தமான சீசாவில் போட்டு, அதில் மிளகு, காசா ஏலம், கற்கண்டு வகைக்கு பலம் (½) அரை சூர்ணித்துப் போட்டு மிஸ்ரித்து சிறு குழந்தைக்கு நாக்கில் தடவி வருவதாலும், பெரியவர்களுக்கு ஒரு விராகனிடை வீதம் கொடுத்துவருவதாலும் கணம் (18), தேகஎரிவு, முதலிய பலமான உஷ்ண ரோகங்கள் குணமாகும்.

புளியாரை எண்ணெய்

சிற்றுமணக்கெண்ணெயும், கையாந்தகரை, எலும்மிச்சம் பழம், புளியாரை, வல்லாரை இவைகளின் சாறும் வகைக்கு படி 1 சேர்த்தெரித்து வடித்து அதில் கோரோசனை விராகனிடை (½) அரை சூர்ணித்துப் போட்டு தினம் காலை மாலை 3 விராகனிடை வீதம் கொடுக்க மூலச்சூடு, தேகஎரிவு, கணச்சூடு, தேககாங்கை முதலிய சகல உஷ்ண ரோகங்கள் குணமாகும்.

வேங்கடேச எண்ணெய்,

ஒரு சேர் சிற்றுமணக்கெண்ணெயில் (½) அரை பலம் திரிமென்சன்பட்டைச் சூர்ணத்தைச் சேர்த்து ரவியில் ஒரு நாள் வைத்து 9 விராகனிடை வீதம் 2 நாளுக்கு ஒரு தடவைச் சாப்பிட்டு மேலுக்கும் தடவிவர மேகஊறல், கடி, சொறி முதலியவைகள் தீரும். பத்தியம்-புளி, வாயுபதார்த்தங்கள் தள்ளவும்.

☞ இன்னும் அநேக வித எண்ணெய்களை பிராணாரக்ஷாமிர்த சிந்து 2-வது பாகத்தில் காண்க.

32-வது அத்தியாயம்.

சூர்ணங்கள்.

நம்மைப் படைத்த கடவுளானவர் சகல ரோகங்களையும் போக்கி தேகத்தைக் காப்பாற்றும் பொருட்டு அனுக்கிரகஞ் செய்திருக்கி

ன்ற சூர்ணங்களில் அநேக சிரேஷ்டமானதும், எளிதில் செய்யக்கூடியதுமான சூர்ணங்களை அநேக கிரந்தங்களைப் பார்வையிட்டு, சர்வஜன உபகாரமாக இந்த அத்தியாயத்தில் சொல்லப்படும். நோயாளிகள் சூர்ணரூபமாய் இருக்கின்ற அவுஷதங்களைச் சாப்பிட்டால் அவர்களின் ரோகங்கள் சூர்ணமாகும், அதாவது ரோகங்கள் படிப்படியாய் குணமாகுமென்பதற்குச் சந்தேகமில்லை.

ஆனந்தரசவிநோதச் சூர்ணம்.

வறுத்த சேங்கொட்டை பலம் 5, எட்டிவிதை பலம் 1, கொடிவேலி வேர்ப்பட்டை பலம் (1½) ஒன்றரை, பறங்கிப்பட்டை பலம் 4, ரசம், கந்தகம் வகைக்கு பலம் 1, அரிதாளம் பலம் 2 இவைகளைச் சுத்திசெய்து சேர்த்து சூர்ணித்து இரண்டு குன்றிமணியிடை சூர்ணித்தில் ஒரு துளி குஷ்டக்குடாரி தயிலத்தைச்சேர்த்துக் கொடுக்க வெங்குஷ்டம், கருங்குஷ்டம், கிரந்தி, புண், அரையாப்பு, மூலம் முதலிய அநேக கொடிய ரோகங்கள் குணமாகும்.

லவணச்சூர்ணம்.

பூநீர், கறி உப்பு, வகைக்குப்படி 2, வெடியுப்பு படி 1, இவைகளைத் தனித்தனியாய் ஜலத்தில் கரைத்து வைத்து மறுநாள் தெளிவை எடுத்து ஒன்றாக்கி அதில் 8 விராகனிடை பெருங்காயத்தைச் சேர்த்து உப்பைக் கட்டும் வரையில் எரித்து சூர்ணித்து கற்கார்க்கு சீசாவில் போட்டு வைத்துக்கொண்டு தினம் காலையில் நீராகாரத்தில் விருகனிடை 1 போட்டுச் சாப்பிட்டுவர வயிறு பொருமல், குன்மம், வயிற்றுவலி, வயிற்றுக்குத்தல், உப்பிசம் முதலிய பலமான ரோகங்கள் குணமாகும்.

கலிங்காதிச் சூர்ணம்.

வரிக்கும்மட்டிக்காய்ச் சாறு, எருமை மோர், கறி உப்பு, வகைக்குப்படி 2 சேர்த்து அதில் சுக்கு, குரோசாணி ஓமம், வெடியுப்பு, இந்துப்பு, வளையலுப்பு, சவுட்டுப்பு, வகைக்கு விராகனிடை 2 போட்டு சுண்டக்காய்ச்சி, எடுத்து சூர்ணித்து கற்கார்க்கு சீசாவில் போட்டு வைத்துக்கொண்டு தினம் விராகனிடை 1 வீதம் நீராகாரத்தில் காலையில் சாப்பிட்டுவர குன்மம், வயிற்றுவலி, அஜீர்ணம், பொருமல், விக்கல் முதலிய பற்பல கடூர ரோகங்கள் குணமாகும்.

இராஜகேசரிச் சூர்ணம்.

அதிமதுரம், ஏலம், கிராம்பு, சுக்கு, திப்பிலி, லவங்கப்பட்டை, தம்பராஷ்டகம், மாசிக்காய், வால்மிளகு, வகைக்குப்பலம் ¼ (கா), சாதிக்காய்த்

தூள் பலம் ⅛ அரைக்கால், கஸ்தூரி விராகனிடை 1 இவைகளை வெவ்வேறு கச்சூர்ணித்து ஒன்றாகச்சேர்த்து அதில் (½) அரை விராகனிடை வீதம் தினம் 2-3 தடவை வெற்றிலைச்சாற்றிலாவது, தேனிலாவது கொடுக்க காசம் (5), சுவாசம் (5), க்ஷயம் (4) சிலேஷ்மம் (20), இருமல் சகல கபரோகங்கள் குணமாகும்.

சாமுதரச்சூர்ணம்.

இந்துப்பு, எவக்ஷாரம், ஓமம், கடுக்காய், திப்பிலி, இஞ்சி, பெருங்காயம், வாய்விளங்கம், கல்லுப்பு, சமமாக சேர்த்துச் சூர்ணித்து போஜனஞ் செய்ம்போது முதல் அன்னத்தில் 3 விராகனிடை சூர்ணத்தையும், 5 விராகனிடை பசுவின் நெய்யுஞ்சேர்த்துச் சாப்பிட்டுவர வயிற்றுப்பல், வாயு, குன்மம் (8), வயிற்றுவலி, அஜீர்ணம், வாதம் (80), கிரகணி (11), மூலம் (8), பாண்டு (5), மகோதரம் (8) முதலிய பயங்கரமான ரோகங்கள் குணமாகும்.

அமுர்தவல்லிச் சூர்ணம்.

லவங்கப்பட்டை, சுக்கு, மிளகு, திப்பிலி, ஏலம், கிராம்பு, சித்தாத்தை, அதிமதுரம், அதிவிடையம், அக்கிராகாரம் வகைக்கு விராகனிடை 5, உலர்த்தி சூர்ணித்து வஸ்திரகாயம் செய்து கற்கார்க்கு சீசாவில் போட்டு வைத்துக் கொண்டு, அதில் கொஞ்சம் எடுத்து தேனில் கலந்து நாக்கில் தடவிவர நாக்கில் ஜலம் ஊறும். இத்துடன் வெங்காரம் சேர்த்துக்கொடுக்க நீர் இறங்கும்; விரேசனகாரிகள் சேர்த்துக் கொடுக்க மலம் உதைக்கும். கண்டா அவுஷதத்தில் இதைச்சேர்த்துக் கொடுக்க, அதின்குணம் விசேஷிக்கும். கஸ்தூரி, குங்குமப்பூ, ரசபஸ்பம் இம்மூன்றுசேர்த்துச் சூர்ணத்து அத்துடன் இதை சேர்த்துக்கொடுக்க சன்னி, பயித்தியம் தீரும்.

குன்மகுடாரிச் சூர்ணம்.

வரிக்குமட்டிக் காய்ச்சாறு, எருமைமோர், கறிஉப்பு வகைக்குப்படி 2 சேர்த்து, அதில் வெடிஉப்பு, இந்துப்பு, வளையலுப்பு, சவுட்டுப்பு வகைக்கு விராகனிடை 2 போட்டு சுண்டக்காய்ச்சி சூர்ணித்து 5 துளி பெப்பர்மென்டு தைலத்தை விட்டு மிஸ்ரித்து ஒரு கல்கார்க்கு சீசாவில்போட்டு தினம் ஒரு விராகனிடை வீதம் நீராகாரத்தில் கொடுக்க குன்மம் (8)ம் தீரும்.

ராஜ அமிர்த சஞ்சீவிச் சூர்ணம்.

ஏலம், கிராம்பு, சாதிக்காய், சாதிபத்திரி, வால்மிளகு, கசகசா, மாசிக்காய், தாளிசப்பத்திரி வகைக்குப் பலம் 1 சூர்ணித்து, சீனி, சீந்திற் சர்க்கரை, வகைக்குப்பலம் 6, அத்துடன் சேர்த்து திரிக்கடிசூர்ணத்தில் ரசபஸ்

மம் வைத்து, பசும் நெய்யில் தினம் 2 தடவைச் சாப்பிட்டுவா, மேகநீர், மூலச்சூடு, பிரமேகம், பிரமியம், வெட்டை, அஸ்திசுரம், மேக ஊறல், கைகாலெரிவு, பித்தம் தீரும்.

ராஜஏலாதிச் சூர்ணம்.

ஏலம் விராகனிடை 64, சுக்கு விராகனிடை 32, கூகைநீர் விராகனிடை 16, தாளிசப்பத்திரி விராகனிடை 8, சிறுநாகப்பூ, விராகனிடை 4, மிளகு விராகனிடை 2, கிராம்பு விராகனிடை 1, இவைகளை உலர்த்திச்சூர்ணித்து அத்துடன் சீனி சேர் 1¼ (கஉ) சேர்த்து தினம் திரிக்கடிவீதம் அக்கினிசந்தி சாப்பிட்டுவர ரணம், மேகவூறல், அக்கினிமந்தம், வாயுகிரந்தி, பித்தம் (40), வாதம் (80), பெரும்பாடு, எலும்புருக்கி, சொறிசிரங்கு முதலிய பயங்கரமான ரோகங்கள் குணமாகும்.

மஹா தாளிசப்பத்திரிச் சூர்ணம்.

தாளிசப்பத்திரி பலம் 5, ஏலம், கிராம்பு, சாதிக்காய், சாதிப்பத்திரி, வால்மிளகு, லவங்கப்பட்டை, வாய்விளங்கம், மல்லி, சீரகம், திப்பிலி, கோஷ்டம், அக்கிரகாரம், கடுக்காய், தானிக்காய், நெல்லிவற்றல், சடாமாஞ்சில், சோம்பு வகைக்குப் பலம் ¼ (ச) இளவறுப்பாய் வறுத்து சூர்ணித்து அத்துடன் 10 பலம் சீனியைச்சேர்த்து தினம் 2 தடவை திரிக்கடிவீதம் சாப்பிட்டுவர, காசம் (5), க்ஷயம் (4), பித்தபாண்டு, பித்தவெட்டை, ஈளை, அஸ்திசுரம், அஸ்திவெட்டை, தாகம், கைகாலெரிவு, கிரகணி, விக்கல், பொருமல், சுரம் முதலிய அநேக பலமான ரோகங்கள் குணமாகும்.

மஹா அசுவகந்திச் சூர்ணம்.

லவங்கம் பலம் 1, சிறுநாகப்பூ பலம் 2, காசாஏலம் பலம் 4, நற்சீரகம் பலம் 8, திப்பிலி பலம் 16, சுக்கு பலம் 32, சுத்திசெய்த அமுக்கிராகிழங்கு பலம் 64 இவைகளை இளவறுப்பாக வறுத்துச் சூர்ணித்து சீனுகற்கண்டுப் பொடி சேர் 7 சேர்த்து திரிக்கடிவீதம் பசும்பாலிலாவது, நெய்யிலாவதுச் சாப்பிட்டுவர மேகம் (18), சுவாசம் (5), காசம் (5), பாண்டு (5) குன்மம் (8), அஸ்திசுரம், முதலிய கொடிய ரோகங்கள் குணமாகும், ரத்த விர்த்தியாகும்.

திரிநேத்திரச் சூர்ணம்.

சுக்கு, மிளகு, திப்பிலி, வகைக்குப்பலம் 1 இளவறுப்பாய் வறுத்துச் சூர்ணித்து பொற்றலைகையாந்தகரையை ஆவிநீரில் போட்டு 2 நிமிஷம் மூடிவைத்து பிறகு எடுத்து அரைத்து ஒருபடிசாறுஎடுத்து அதில் ஷை சூர்ணத்

சைக்கரைத்து அரைத்து பில்லை தட்டி உலர்த்தி சூர்ணித்து அதற்கு இரட்டிப்பு கற்கண்டுப் பொடியைச்சேர்த்து திரிக்கடி வீதம் தினம் காலை மாலைச்சாப்பிட்டுவர பித்தம் (40), பித்தவாயு, உஷ்ணவாயு, அக்கினிமந்தம் முதலிய கொடிய ரோகங்களெல்லாம் குணமாகும். தாதுபுஷ்டியும், ரத்தவிர்த்தியும் உண்டாகும்.

மஹாதூதுளைச் சூர்ணம்.

தூதுளைப்பழம், சிவதரங்கைபழம், கண்டங்கத்திரிப்பழம் வகைக்குப் பலம் (5), கோரோசனை விராகனிடை 1 இவைகளை உலர்த்திச் சூர்ணித்து அத்துடன் தாளிசபத்திரி பலம் 3, சிற்றரத்தை பலம் 1, மிளகு பலம் 1, இவைகளை இளவறுப்பாய் வறுத்து சூர்ணித்துச் சேர்த்து திரிக்கடிவீதம் நெய்யிலாவது, சர்க்கரையிலாவது கொடுக்க மகா பயங்கரமான சகலவித கபரோகங்கள் குணமாகும்,

லகுதூதுளைச் சூர்ணம்.

தூதுளை, திப்பிலி, முருங்கப்பட்டை, சீனி வகைக்குப்பலம் 2, உலர்த்திச் சூர்ணித்து தினம் 2 தடவை, 3 விராகனிடை பசும் வெண்ணெயில் கொடுக்க ஈளை, இருமல், சகலபலமான கபரோகங்கள் குணமாகும்.

சொர்ஹனந்தச் சூர்ணம்.

நறுக்கி உலர்த்தின இஞ்சி பலம் 4, அதிமதுரம் பலம் 3, திப்பிலி பலம் 2¼ (உ௴) இவைகளைச் சூர்ணித்து வஸ்திரகாயஞ்செய்து அத்துடன் ஒருசேர் கற்கண்டுபொடியைச் சேர்த்து தினம் திரிக்கடிவீதம் சாப்பிட்டுவர வயிற்றுவலி, பொருமல், அக்கினிமந்தம் முதலிய மகா உபத்திரவத்தை உண்டாக்குகிற ரோகங்களெல்லாம் குணமாகும்.

பயிரவச் சூர்ணம்.

இந்துப்பு பலம் 1, சீரகம் பலம் 2, ஓமம் பலம் 3, சுக்கு பலம் 4, திப்பிலி பலம் 5, மிளகு பலம் 6, விதை நீக்கினகடுக்காய் பலம் 20, சூர்ணித்து வஸ்திரகாயஞ் செய்து சீனி பலம் 40 சேர்த்து தினம் அந்திசந்தி திரிக்கடிவீதம் சாப்பிட்டுவர அக்கினிமந்தரோகம், வயிற்றுவலி, வயிறுஉப்பல் குன்மம், அஜீர்ணம், மலக்கட்டு முதலிய கொடிய ரோகங்கள் குணமாகும்.

சேண்முகச் சூர்ணம்.

மிளகு, திப்பிலி, சீரகம், இந்துப்பு இவைகளின் தூள் வகைக்குப்பலம் 1, பெருங்காயம் பலம் ($\frac{1}{8}$) அரைக்கால், கறியபிலைத்தூள் பலம் ($\frac{1}{2}$) அரை, இவைகளைச்சேர்த்து ஒரு விராகனிடை வீதம் முதல் அன்னத்தின்மேல்

போட்டு நெய்யைக்காய்ச்சி விட்டுச்சாப்பிட அஜீர்ணம், வயிற்றுக் கடுப்பு, அக்கினிமந்தம், குன்மம், வாயு முதலிய கடூரரோகங்கள் குணமாகும்.

அக்கினிச் சூர்ணம்.

சுக்கு, மிளகு, திப்பிலி, சீரகம், லவங்கம் வகைக்கு பலம் 1 இவைவறுப் பாய் வறுத்து சூர்ணித்து ஒரு விராகனிடை வீதம் தினம் 2 தடவை நெய்யி லாவது, சீனியிலாவது கொடுத்துவர அக்கினிமந்தம், வயிற்றுவலி, குன்மம் வாதம் முதலிய கொடிய ரோகங்கள் குணமாகும்.

ராஜலவணச் சூர்ணம்.

காந்தம், கறிஉப்பு, வெடியுப்பு, வளையலுப்பு, பெருங்காயம், வகைக்குப் பலம் 2 சூர்ணித்து 3 படி பசும்பாலில் போட்டு சுண்டக்காய்ச்சி சூர்ணித்து தினம் திரிக்கடிவீதம் வெந்நீரில் கொடுக்க குன்மம் (8), வாயு, அஜீர்ணம், வயிற்றுவலி முதலிய பலமான ரோகங்கள் குணமாகும்.

லவணச்சூர்ணம்.

பூநீர், கறி உப்பு, வகைக்குப்படி 2, வடிஉப்பு படி 1, இவைகளைத் தனி த்தனியாய் ஜலத்தில் கரைத்து வைத்து, மறுநாள் தெளிவை எடுத்து ஒன் றாகச்சேர்த்து அதில் 8 விராகனிடை பெருங்காயத்தைச் சேர்த்து சுண்ட எரித்து சூர்ணித்து கற்கார்க்கு சீசாவில் போட்டு வைத்துக்கொண்டு தின ம் காலையில் நீராகாரத்தில் ஒரு விராகனிடை போட்டுச் சாப்பிட்டுவர வயி றுபொருமல், குன்மம், உதரரோகம், மலக்கட்டு, வயிற்றுவலி, அஜீர்ணம் முதலிய அநேக கடூரரோகங்கள் குணமாகும்.

பஞ்சமுகச் சூர்ணம்.

சுக்கு, மிளகு, ஓமம், நிலவாகை சமூலம், வாய் விளங்கம் வகைக்குச் சேர் 1 ரவியிலுலர்த்தி சூர்ணித்து அத்துடன் சீனி ஒரு வீசை சேர்த்து திரி க்கடிவிதம் சாப்பிட்டுவர பொருமல், வாயு, உஷ்ணம், பித்தம், கபம், வாந்தி முதலிய மகா உபத்திரவத்தைத் தருகின்ற ரோகங்கள் எல்லாம் குணமா கும்.

கட்டுவாதிச் சூர்ணம்.

மாம்பருப்பு, நெல்லிக்காய், மாதுளம்பழத்தோல், கறிவேப்பிலை, சுண் டக்காய், வெந்தியம் இவைகளை உலர்த்தி சூர்ணித்து ஒரு விராகனிடை வீதம் எருமைதயிரில் கொடுக்க அதிசாரம் (6), சீதபேதி, கிரகணி (11), குணமாகும்.

பித்தராஜாங்கச் சூர்ணம்.

கொத்தமல்லிவிதை பலம் 6, சதகுப்பை, சீரகம், அதிமதுரம், கிராம்பு, கருஞ்சீரகம், கருவாப்பட்டை வகைக்குப் பலம் 1 இவைகளை இளவறுப்பாய் வறுத்துச் சூர்ணித்து அத்துடன் கற்கண்டு பலம் 6, பொடித்துச் சேர்த்து திரிகடி வீதம் தினம் காலையில் கொடுக்க, பித்தவாயு, பித்தவெட்டை, பித்தவாந்தி, அஜீர்ணம், வாயூறல், முதலிய பித்தரோகங்கள் எல்லாம் குணமாகும்.

பறங்கிப்பட்டைச் சூர்ணம்.

நீரடிமுத்து, பறங்கிப்பட்டை, கடுக்காய், தானிக்காய், நெல்லிமுள்ளி, திப்பிலி, ஓமம், திப்பிலிமூலம் வகைக்குப் பலம் 1, அமுக்கிராவேர் பலம் 4, கிராம்பு, சாதிக்காய், சாதிப்பத்திரி வகைக்கு விராகனிடை 1, இவைகளை இளவறுப்பாய் வறுத்துச் சூர்ணித்து சீனிபலம் 6, சேர்த்து திரிக்கடி வீதம் தேனில் கொள்ள மேகசூலை, மேகஊறல், மேககாங்கை, மேகத்தடிப்பு, மேக வாயு முதலிய கரேரோகங்கள் குணமாகும். பத்தியம் புளி, உப்புத்தள்ளவும்.

திப்பிலிச் சூர்ணம்.

திப்பிலி, உலர்ந்த குப்பைமேனி, இவைகளின் சூர்ணம் வகைக்கு சேர் 1, சேர்த்து திரிக்கடிவீதம் பசு நெய்யில் கொடுக்க பவுத்திரம் (15), குணமாகும்.

பலகாரிச் சூர்ணம்.

கலம்பாவேர் சூர்ணம், அயச்செந்தூரம், சுக்குத்தூள் வகைக்குப் பலம் 2, ரேவல்சின்னித்தூள்பலம்1, இவைகளைச்சேர்த்து($\frac{1}{2}$) அரைவிராகனிடை வீதம், தினம் 2-3 தடவைக்கொடுக்க ரத்தம் ஊறும், பலம் வரும், பாண்டு (5) குணமாகும்.

பித்தஹரச் சூர்ணம்.

இஞ்சி, வில்வவேர், சுக்கு, ஏலம், நெல்லிவற்றல், அதிமதுரம் வகைக்குப்பலம் 1 உலர்த்திச் சூர்ணித்து, அத்துடன் சீரகத்தூள், நெற்பொறித்தூள் வகைக்குப்பலம் 6, சீனி பலம் 3, இவைகளைச் சேர்த்து, தினம் 2 தடவை 3 விராகனிடை வீதம் பசும் நெய்யில் சாப்பிட பித்தஞ் சமனமாகும்.

இஞ்சிச்சூர்ணம்.

தோலே நீக்கிநறுக்கின இஞ்சி சேர் 4, சீரகம் சேர் 1 இவைகளை, எலுமிச்சம்பழச்சாறு, கரிப்பான்சாறு, புளியாரைச்சாறு, கரும்புச்சாறு, இவைகளில் ஒவ்வொன்றிலும் ஊறவைத்து நிழலில் உலர்த்தி அத்துடன் (½) அரை பலம் மிளகையும், ¼ (வ) பலம் கிராம்பையும், சேர்த்துச் சூர்ணித்து தேவையான சீனியும் நெய்யும் சேர்த்து தினம் இரண்டு தடவை பாக்களவுச்சாப்பிட்டுவர பித்த வாயு, பித்தகாங்கை, அரோசிகம், அன்னத்துவேசம், குன்மம், முதலிய பலமான ரோகங்கள் குணமாகும்.

தாதுபுஷ்டிச் சூர்ணம்.

சுத்திசெய்த சாதிக்காய் சேர் 1, நீர் முள்ளிவிதை சேர் 2, இஸ்கோல் விதை சேர் 2, சீனுகற்கண்டு சேர் 6, இவைகள் யெல்லாம் சூர்ணித்துச் சேர்த்து திரிக்கடி வீதம் தினம் 2 தடவைச் சாப்பிட்டுவர தாதுபுஷ்டிஉண்டாகும், பலம்வரும்.

☞ இன்னும் அநேக அநுபோகமுள்ள சூர்ணங்களை பிராணரக்ஷாமிர்தசிந்து 2–வது பாகத்தில் காண்க.

33-வது அத்தியாயம்.

லேகியங்கள்.

பரிபூரணமாக நிறைந்திருக்கின்ற கடவுளானவர் ரோகங்களைப் போக்கி சரீரத்தை காப்பாற்றும் பொருட்டு அனுக்கிரகஞ் செய்திருக்கின்ற லேகியங்களில் சாதாரண ஜனங்களும், வைத்தியர்களும் செய்யக்கூடியதுமானதும், பலமான ரோகங்களை எளிதில் குணமாக்க வல்லமையுள்ளதுமான அநேக கிரந்தங்களைப் பார்வையிட்டு இந்த அத்தியாயத்தில் சொல்லப்படும். லேகியங்கள் சூர்ணங்களைப் பார்க்கிலும் வெகுவல்லமையுள்ளது. எனெனில் லேகியத்தில் செந்தூரம் அல்லது பஸ்பம் வைத்துச்சாப்பிடவேண்டியது. இப்படிசாப்பிடுவதால், செந்தூரம் பஷ்பம், இவைகளின் செய்கைகள் லேகியத்தின் செய்கையுடன் சேர்ந்து அதிவிசேஷமான குணத்தை உண்டாக்கி ரோகிகளின் வியாதிகளை அதிசீக்கிரத்தில் நிவர்த்திக்குமென்பதற்குச்சந்தேகமில்லை.

ராஜமார்த்தாண்ட லேகியம்.

ஏலம், கிராம்பு, பெருங்காயம், திப்பிலி, திப்பிலிமூலம், சாதிக்காய், சிறுதேக்கு, முத்தகாசு வகைக்கு விராகனிடை 2, சீரகம், கருஞ்சீரகம், சிறுநாகப்பூ வகைக்கு விராகனிடை 3, கூகைநீர் விராகனிடை 4, இவைக ளை உலர்த்திச் சூர்ணித்து, சங்கம்வேர் சேர் 1¼ (கவ), கண்டக்கத்திரி வேர், செவ்வியம் வகைக்குப் பலம் 5, சிற்றாமுட்டி, வெட்டிவேர், கொடிவேலி, சீந் தில், வில்வம், நிலப்பனை இவைகளின் வேர், திப்பிலிமூலம் வகைக்குப்பலம் 2½ (உ௰) இவைகளை இடித்து ஒரு மரக்கால் ஜலத்தில் போட்டுக்காய்ச்சி (⅛) அரைக்கால் மரக்காலாக்கின கசாயத்தில் சீனி சேர் 1½ (க௰) சேர்த்து பாகு செய்து, அதில் ஷை சூர்ணத்தையும், 2 பலம் சுக்குச்சூர்ணத்தையும், 2 பலம் மிளகுச் சூர்ணத்தையும் போட்டு, நெய் பலம் 4, தேன் பலம் 4 சே ர்த்துக்கிண்டி, லேகியமாக்கி தினம் 2 தடவை பாக்களவு 48 நாள்ச்சாப்பிட, கபரோகம் (96), வாதரோகம் (80), குன்மம் (8), விக்கல் (5), பீநசம் (18), சன்னி (13), சுரம் (64), உப்பிசம், செரியாமை, நெஞ்சி எரிவு, பித்தம் (40), வாந்தி (5), அக்கினிமந்தம் முதலிய மஹாகொடிய ரோகங்கள் குண மாகும்.

ராஜவில்வாதி லேகியம்.

பட்டை நீக்கின வில்வவேர் சேர் 3, இடித்து 4 மரக்கால் ஜலத்தில் போட்டு எரித்து ஒரு மரக்காலாக்கினக் கசாயத்தில் ஆறு பலம் சீனியைக் கரைத்து பாகுசெய்து, அதில் ஏலம், கிராம்பு, சுக்கு, தாளிசப்பத்திரி, சிறு நாகப்பூ, வகைக்குவிராகனிடை 2½ (உ௰), திப்பிலி, செவ்வியம், மிளகு வகை க்குப்பலம் 2 இவைகளை உலர்த்திச் சூர்ணித்து போட்டு, தேன் பலம் 2½ (உ௰), நெய் பலம் 2½ (இரண்டரை), விட்டு லேகியமாக்கி தினம் 2 தடவை பாக்களவுச் சாப்பிட்டுவர குன்மம் (8), காசம் (5), கிரகணி (11), அதிசாரம் (6), சுரம் (64), வாந்தி (5), பித்தம் (40), இருமல், ஈளை, விக்கல் (5), நெஞ் எரிவு, தேக எரிவு, நீர்க்கட்டு, விஷபாண்டு, உப்பிசம், மலக்கட்டு முத லிய மஹாபயங்கரமான ரோகங்கள் குணமாகும்.

மஹா கூழ்மாண்ட லேகியம்.

பெரும் பூசனிக்காய்ச்சாறுபடி 6, எலுமிச்சம்பழச்சாறு, தாழைவிழுதுச் சாறு, தென்னம்பூச்சாறு வகைக்குப்படி 1½ (ஒன்றரை), பசும்பால் படி 3, இவைகளைச்சேர்த்து அதில் 2 சேர் சீனியைப்போட்டு பாகுசெய்து அதில் அதிமதுரம், தாளிசப்பத்திரி, சீரகம், கோஷ்டம், மல்லி, மாசிக்காய், மிள கு, ஏலம், சாதிக்காய், சாதிப்பத்திரி, வகைக்கு விராகனிடை 15, உலர்த்தி

ச்சூர்ணித்துப்போட்டு, நெய்படி ¾ (ஐ), தேன் படி ¾ (ஐ), விட்டு லேகியம் ஆக்கி தினம் 2 தடவை, 5 விராகனிடை வீதம் சாப்பிட்டுவர அஸ்திசுரம், அஸ்திவெட்டை, சோகை (9), காமாலை (13), பிரமியம் (20), நீர்சுருக்கு, உஷ்ணரோகங்கள், வெள்ளைவிழுதல், முதலிய மஹாபயங்கரமான ரோகங்கள் தீரும், விந்தூறும், தேகம் புஷ்டிக்கும். பந்தியம்—புளி, புகையிலை, ஸ்திரிபோகம் நீக்கவும்.

ராஜசிந்தாதி லேகியம்.

புளித்தமோர் படி 3, நாறுமாதத்திய காடி படி 3, இவைகளைச்சேர்த்து அதில் 2 சேர் இடித்த புளியிலை, 1½ சேர் துருப்பிடித்த இரும்பு இவைகளைப்போட்டு எரித்து எட்டில் ஒரு பாகமாகும்படி காய்ச்சி, வடித்து, அத்துடன் தென்னம்பூ, இஞ்சி, எலுமிச்சம்பழம், சிறுகீரை, சிறுசெருப்படை, நெரிஞ்சி, கீழ்க்காய்நெல்லி இவைகளின் சாறு வகைக்குப்படி (வ), கையாந்தகரைச்சாறு படி ½ (அரை), பசும்பால் படி 1, இவைகளைச்சேர்த்து, அதில் 3 பலம் சீனியைக்கரைத்து பாகு செய்து, அதில் ஏலம், கிராம்பு, லவங்கப்பட்டை, தாளிசப்பத்திரி, சுக்கு, மிளகு, திப்பிலி, கடுக்காய், தானிக்காய், நெல்லிவற்றல், ஓமம், கோஷ்டம், சடாமாஞ்சில், சீரகம், வால்மிளகு, ஆனைத்திப்பிலி வகைக்குப்பலம் ¼ (வ), இவைகளை இளவறுப்பாய் வறுத்துச்சூர்ணித்துச் சேர்த்து தேன்படி ¼ (வ), நெய் படி ¼ (வ), விட்டுக்கிண்டி லேகியமாக்கி தினம் பாக்களவு அந்தி சந்திச் சாப்பிட்டுவர பித்தவெட்டை, பாண்டு (5), அக்கினிமந்தம், பொருமல், வாயு, கிரகணி (11), சோகை (9), தேகஇளைப்பு, தேகவெளுப்பு, முதலிய கடூரமான ரோகங்கள் குணமாகும்.

மஹாதாதுவிருத்தி லேகியம்.

ஆவாரம்பூ பலம் 6, முருங்கப்பூ பலம் 6, சதாவேரி கிழங்கு, பலம் 4¼ (நான்கரை), நன்னாரிவேர் பலம் 3, நெரிஞ்சிமுள் பலம் 1½ ஒன்றரை, நிலப்பனைக்கிழங்கு பலம் 1½ (ஒன்றரை), இவைகளைச்சூர்ணித்து ஒரு படி ஆவின்பாலில் 2 சேர் சீனியைப்போட்டுக் காய்ச்சி பாகுசெய்து அதில் மேற்படி சூர்ணத்தைப்போட்டு நெய் படி ¾ (ஐ), தேன்படி (⅜) காலேயரைக்கால் விட்டுக்கிண்டி லேகியமாக்கி தினம் 2 தடவை பாக்களவு கொடுக்க மேகம் (20), பிரமியம் (20), பிரமேகம (21), எலும்புருக்கி முதலிய மஹா பயங்கரமான ரோகங்கள் குணமாகும்.

ராஜஅமிர்த சஞ்சீவி லேகியம்.

5 படி பசும்பாலும், 5 படி இளநீர்ஜலமும், தாழை விழுது, வல்லாரை, கொடுப்பை, சிற்றாமுட்டி, சிறு புள்ளடி, வகைக்குச் சேர் 1¼ (கவ) இடித்து

20 மரக்கால் ஜலத்தில் போட்டு எரித்து ஒருபடியாக்கின கஷாயமும் ஒன்று கச்சேர்த்து, அதில் மேல் தோல் நீக்கின 2½ (இரண்டரை) சேர் இஞ்சியை மைபோலரைத்துக் கரைத்து மறுபடியும் எரித்து ஒரு படியாக வற்றவைத்து அத்துடன் சீனி சேர் 2, கற்கண்டு சேர் 2 சேர்த்து பாகுசெய்து அதில் கடுக்காய், தானிக்காய், நெல்லிவற்றல், ஏலம், கிராம்பு, ஜாதிக்காய், வால் மிளகு, கோஷ்டம், சீரகம், கருஞ்சீரகம், அக்கிறுகாரம், சிவதை வேர், ஓமம், நறுக்கு மூலம், சுக்கு, மிளகு, திப்பிலி, அரத்தை, ஜாதிப்பத்திரி, தாளிசப்பத்திரி, அதிவிடையம் வகைக்கு விராகனிடை 10, இவைகளை இளவறுப்பாய் வறுத்துச் சூர்ணித்து வில்வப்பூ, சுத்திசெய்த பறங்கிப்பட்டை, வகைக்குப்பலம் 4, பேரிச்சம்பழம், அன்னபேதி, பெருங்காயம், திராட்சப்பழம், கூகைநீர், வகைக்குப்பலம் 1, பச்சைகர்ப்பூரம், கோரோசனை, குங்குமப்பூ, கஸ்தூரி, அபினி வகைக்கு விராகனிடை 1 இவைகளின் சூர்ணத்தையும், தேற்றுவிதை பலம் 1 பசும்பாலில் ஊறவைத்து அரைத்து அதையும், சீந்திற் சர்க்கரை பலம் 8, நெய்சேர் 2 இவைகளையும் போட்டுக்கிண்டி பதத்திலிறக்கி, தேன் சேர் 2 விட்டுப்பிசைந்து ஒரு தகர டப்பாவில் வைத்துக்கொண்டு தினம் பாக்களவு சாப்பிட்டுவர மேகம் (20), அஸ்திசுரம், அஸ்திகாங்கை, சீத ரத்தம் விழுதல், காமாலை (13), வாயு, பாண்டு (5), சோகை (9), கிரகணி (11) முதலிய சகல கரோ ரோகங்கள் குணமாகும்.

தக்ஷிணாமூர்த்தி லேகியம்.

ஒரு பலம் சேங்கொட்டை நொறுக்கி ஒரு படி பசும் நெய்யில் போட்டுக்காய்ச்சி வடித்து அதில் அமுக்கிறுவேர், சங்கம்வேர், மூக்கரட்டிவேர், கொடிவேலிவேர், இவைகளின் சூர்ணம் வகைக்கு பலம் 2, கோதுமைமாவு படி கால், சீனி பலம் 5 சேர்த்து செவ்வையாய் மிஸ்ரித்து தினம் காலையில் பாக்களவு பத்து நாள் சாப்பிட சூலை (18), குணமாகும். பத்தியம்—உப்பில்லாமை.

வச்சிரவல்லி லேகியம்.

சித்தரத்தை, திப்பிலி, தாளிசப்பத்திரி, அக்கிறுகாரம் வகைக்குப்பலம் 2, கண்டங்கத்திரிவேர் பலம் 8, இவைகளை இளவறுப்பாய் வறுத்துச்சூர்ணித்து 1½ (ஒன்றரை) சேர் சீனியை ¼ (வ) படி பாலிலிட்டுப் பாகு செய்து அதில் ஷை சூர்ணத்தைப்போட்டு நெய், தேன் வகைக்குப்படி ¼ (வ) விட்டு லேகியமாக்கி பாக்களவு தினம் 2 தடவைச் சாப்பிட்டுவர ஈளை, இருமல் சகல கபரோகங்கள் தீரும்.

அருணாசல லேகியம்.

பறங்கிப்பட்டை, சங்கம் வேர், அமுக்கிறுகிழங்கு, சித்திரமூலம்வேர் பட்டை, வகைக்குப் பலம் 6, ஏலம், சீரகம், சுக்கு, மிளகு, திப்பிலி, வகைக்

குப்பலம் 1 இவைகளைச்சூர்ணித்து, 16 பலம் சீனியுடன் தேவையான பசும் பாலைச்சேர்த்து பாகு செய்து அதில் ஷெ. சூர்ணத்தையும், தேன் பலம் 5 யும், நெய் பலம் 15 யும் சேர்த்து லேகியமாக்கி தினம் 2 தடவை பாக்களவு சாப்பிட்டுவர மேகவாயு, மேகசூலை, மேகஊறல், மேகதடிப்பு, மேககாங்கை முதலிய சகலமேகரோகங்கள் தீரும்.

தாதுபுஷ்டி லேகியம்.

நீர்முள்ளி விதை பலம் 4, எள்ளுபலம் 1, கடலைமாவு பலம் 2, சாதிக்காய், சாதிப்பத்திரி, கிராம்பு, வகைக்கு விராகனிடை 1, புரசன் பிசின் விராகனிடை 3, கிலக்கடம்பு விருகனிடை 2, இவைகளைச் சூர்ணித்து ஒரு முற்றின தேங்காயில் செருகி வாயைமூடி 3 விரற்கடை கனத்தில் அதற்கு சாணியால் கவசஞ்செய்து புடம் போட்டு தேங்காய் வெடித்த உடனே எடுத்து அதிலுள்ள மருந்தையும், 5 பலம் வெல்லமும், சேர்த்து லேகியமாக்கி தினம் 2 தடவை பாக்களவுச் சாப்பிட்டுவர வீரிய விருத்தியுண்டாகும், இடுப்பு வலி தீரும். இது வெகு நல்ல மருந்து.

கந்தக லேகியம்.

சுத்திசெய்த ஒரு பலம் கந்தகத்தை உருக்கி வெள்ளை அம்மான் பச்சையரிசிச் சாற்றில் வார்த்து எடுத்துச் சூர்ணித்து அத்துடன் சமமாக கற்கண்டு பொடியைச் சேர்த்து, பிறகு 30 ரஸ்தாளிப்பழச்சாறு, தேன் சேர் ¼ (வ), நெய் சேர் ¼ (வ), இவைகளில் சேர்த்து லேகிய பதமாக வரும் வரையில் சூர்யபுடம் வைத்து கழற்சிக்காய் அளவு தினம் 2 தடவைச் சாப்பிட்டு வர, மேகவாயு, மேக ரணம், மேகஊறல், மேகக்கரப்பான், மேககிரந்தி முதலிய பயங்கரமான ரோகங்கள் குணமாகும். இச்சாபந்தியம்.

பூர்ணாதி லேகியம்.

சுத்திசெய்த கஞ்சா, லவங்கப்பத்திரி, சிறுலவங்கப்பட்டை, கசகசா, சோம்பு, எலம், தும்பராஷ்டகம், சிறுநாகப்பூ, சீரகம், அதிமதுரம், சுக்கு, திப்பிலி, தாளிசப்பத்திரி, கிராம்பு, வகைக்குப் பலம் 5, சாதிக்காய், சாதிப்பத்திரி வகைக்குப் பலம் 2½ (இரண்டரை), மிளகு, தேன் வகைக்குப்பலம் 10, நெய் பலம் 20, சர்க்கரை சேர் 15, எலுமிச்சம்பழம் அல்லது புளிப்பு நார்த்தம்பழ ரசம் படி ¾ (ஞ), சூர்ணிக்கிற பதார்த்தங்களை இளவறுப்பாய் வறுத்துச் சூர்ணித்து, பழச்சாற்றில் சர்க்கரை சேர்த்து பாகுசெய்து அதில் ஷெ சூர்ணத்தைப்போட்டுக்கிளறி தேனையும், நெய்யையும் விட்டு மறுபடியும் கிளறி ஒரு வாயகன்ற ஜாடியில் போட்டு மூடிவைத்துக் கொண்டு பெரியவர்களுக்கு பாக்களவும், சிறியவர்களுக்கு குன்றிமணி அளவும் கொடுக்க மாந்தம், அஜீர்ணம் உஷ்ணபேதி, வயிற்றிரைச்சல், மந்தம், பசியில்லாமை

முதலிய பற்பல ரோகங்கள் குணமாகும். தாதுபுஷ்டியுண்டாகும்.

☞ குழந்தைகளுக்குச் சொரிப்பதரிது.

பூர்ணசந்த்ரோதய லேகியம்.

ஒரு சேர் மேல் தோல் நீக்கின இஞ்சியை கத்தியால் பில்லைகளாக்கி பசும் நெய்யில் பொன்னிறமாய் வறுத்துச் சூர்ணித்து; அத்துடன் சுக்கு, மிளகு, திப்பிலி, கோஷ்டம், அதிமதுரம், சீரகம், மல்லி, ஏலம், சாதிக்காய், சாதிப்பத்திரி, வால்மிளகு, கிராம்பு, வகைக்கு விராகனிடை 5, இவைகளை இளவறுப்பாய் வறுத்து சூர்ணித்துச் சேர்த்து வைத்துக்கொண்டு, ஒரு சேர் சீனாகற்கண்டை பசும்பாலில் போட்டு பாகு செய்து அதில் ஷை சூர்ணத்தைப்போட்டு, தேன் சேர் ¼ (வ), நெய் சேர் 3 விட்டுக்கிண்டி செவ்வையாய் மிஸ்ரித்து பதத்தில் இறக்கி ஒரு பீங்கான் அல்லது தகரடப்பாவில் போட்டு வைத்துக்கொண்டு தினம் 2 தடவை பாக்களவுச் சாப்பிட்டுவர உஷ்ணவாயு, அஜீர்ணம், அக்கினிமந்தம், வயிற்றுவலி, குன்மம், காசம், முதலிய பற்பல பலமான ரோகங்கள் குணமாகும்.

கதலி லேகியம்.

100 கஸ்தாளிபழத்துடன் பெரும் உமியைச் சேர்த்துப் பிசைந்து இளநீர் ஜலம்போல் வருவதை எடுத்து அத்துடன் சீரகம் பலம் 1, கசகசா பலம் 1, இவைகளை இளவறுப்பாய் வறுத்துச் சூர்ணித்தப் பொடியையும் சீனி சேர் 1, சாதிக்காய்த்தூள், சாதிப்பத்திரித்தூள், வகைக்குப் பலம் ½ (அரை), இவைகளையும் சேர்த்து 15 நாள் சூரியபுடம் போட்டு லேகியபதத்தில் எடுத்து வைத்துக்கொண்டு 5 விராகனிடை வீதம், தினம் 2 தடவைச்சாப்பிட்டுவர உஷ்ணவாயு, பித்தவாயு, அரோசகம், அன்னத்துவேசம் குணமாகும்.

கண்டத்திப்பிலி லேகியம்.

சுக்கு, கண்டத்திப்பிலி வகைக்குப் பலம் 1, ஓமம் பலம் 2 இவைகளைச் சூர்ணித்து, 4 பலம் பனைவெல்லத்தை ஜலத்தில் போட்டு பாகு செய்து அதில் சேர்த்து நெய் பலம் 1, விட்டு லேகியமாக்கி தினம் பாக்களவு 2 தடவைச்சாப்பிட்டுவர வாயு, அஜீர்ணம், மந்தாக்கினி, மலபந்தம் குணமாகும்.

இஞ்சி லேகியம்.

இஞ்சி, கண்டங்கத்திரி, நெரிஞ்சி, முள்ளங்கி, எலுமிச்சம்பழம் இவைகளின் சாறு வகைக்குப்படி ½ (அரை), பசும்பால் படி ¼ (வ) இவைகளைச் சேர்த்து அத்துடன் 4 பலம் சீனியைக்கரைத்து பாகு செய்துஅதில் சுக்கு, மிளகு, திப்பிலி, ஏலம், கிராம்பு, சீரகம், வாய்விளங்கம், தாளிசப்பத்திரி வகைக்கு விராகனிடை 5 சூர்ணித்துப்போட்டு, தேன்படி ¼ (வ), நெய் படி ¼ (வ) விட்டு லேகியமாக்கி தினம் 2 தடவை பாக்களவு 48 நாள் சாப்பிட்டு

வர, வாந்தி (5) சூலை (18), வாதம் (80), பித்தம் (40), இரிவு, குன்மம் (8), அரோசகம், பொருமல், கடுப்பு, மயக்கம், கபாலக்குத்து, பித்த எரிவு, அன்னத்துவேஷம் தீரும். (புச்சபத்தியம்.

☞ இன்னும் அநேக லேகியங்களைப் பிராணரக்ஷாமிர்தசிந்து 2-வது பாகத்தில் காண்க.

34-வது அத்தியாயம்.

கிருதங்கள்.

பரமோபகாரிகள் சேருவதற்குரிய பொருளுமாயிருக்கின்ற கடவுளானவர் ஜனங்களின் ரோகங்களை குணமாகும் பொருட்டு அனுக்கிரகஞ்செய்திருக்கின்ற கிருதங்களில் சர்வரோகங்களை நிவர்த்திச்செய்ய மஹா வல்லமையுள்ள அநேக சிலாக்கியமான கிருதங்களை பற்பல வைத்திய கிரந்தங்களைக்கொண்டு இந்த அத்தியாயத்தில் சொல்லப்படும்.

நட்சத்திரமாணிக்கக்கிருதம்.

தேங்காய்ப்பால், பொடுதலைச்சாறு வகைக்குப்படி 2 சேர்த்து, அதில் 16 படி ஆற்று ஜலத்தை எட்டிலொன்றாகும்படி காய்ச்சி சேர்த்து எரித்து நெய்யை வடித்து ஒரு விராகனிடை வீதம் தினம் காலை மாலை கொடுத்து வர—கருநாக்குச்சூலை, மேல் வாய்ப்புண், உண்ணாக்கை அரிக்கும் கிரந்தி, பல்லிறை அரித்துத்தின்னும் கிரந்தி, நாக்கு அரிப்பு, நாக்குப்புண் முதலிய மஹா கொடிய ரோகங்கள் குணமாகும்.

மஹா புளியாரை கிருதம்.

புளியாரைச் சாறு படி 2, பசும் நெய், தயிர்தண்ணீர், வெள்ளாட்டுப் பால் வகைக்குப்படி ½ (அரை) இவைகளைச் சேர்த்து, அதில் சுக்கு, மிளகு, திப்பிலி, வில்வப்பிஞ்சி, வாலுழுவை அரிசி, காட்டாத்திப்பூ, கோரைக்கிழங்கு, சீரகம், அதிவிடையம், இலவம்பிசின், மல்லி, நெய்தற்கிழங்கு, விலாமுச்சுவேர், சிற்றாமுட்டி, ஓமம், இஞ்சி, பொன்முசட்டை, கண்டத்திப்பிலி, மாதுளம் பிஞ்சி, வகைக்கு விராகனிடை 2½ (இரண்டரை), ஜலத்தால் அரைத்துக்கரைத்து எரித்து பதத்தில் இறக்கி, தினம் 2 தடவை ஒரு விராகனிடை வீதம் கொடுத்துவர குன்மம் (8), கிரகணி (11), வயிற்றுவலி, சுரம், தாபம், அரோசிகம், சோகை (9), பிலீகம் (4), விவர்வியாதி, மூலம் (8), ஆமக்கட்டிகள், கிருமிரோகம், முதலிய கடேரரோகங்கள் குணமாகும். பலம், தேஜசு, தீடனம் இவைகள் உண்டாகும்.

மஹாகூழ்ப்பாண்ட கிருதம்.

பெரும்பூசனிக்காயச் சாறு படி 1, செவ்விளநீர் ஜலம், குமரிச்சாறு, தென்னம்பூச்சாறு, சாமைவிழுதுச்சாறு வகைக்குப்படி ½ (அரை), பசும்பால், நெய் வகைக்குப்படி 1, இவைகளைச்சேர்த்து, அதில் குரோசாணி ஓமம், மல்லி, கற்கடகசிங்கி, காட்டாத்திப்பூ, சாதிக்காய், சாதிப்பத்திரி, மாசிக்காய், கடுக்காய், தானிக்காய், நெல்லிவற்றல், வால்மிளகு, சீரகம், ஏலம் வகைக்கு விராகனிடை 1½ (ஒன்றரை), பசும்பாலால் அரைத்து கரைத்தெரித்து வடித்து ஒரு பலம் கற்கண்டை பொடித்துப்போட்டு வைத்துக்கொண்டு 3 விராகனிடை கிருதத்தில் கொஞ்சம் அப்பிரேக செந்தூரத்தை வைத்துக்கொடுக்க மேகம் (20), பிரமேகம் (21), காமாலை (13), கிரகணி (11), பித்தம் (40), உஷ்ணம், கைகால் எரிவு, நீர்குத்து, அஸ்திவெட்டை, அஸ்திகாங்கை, எலும்புருக்கி முதலிய பயங்கரமான ரோகங்கள் அதிசீக்கிரத்தில் குணமாகும்.

திரிலோச்சன கிருதம்.

பெரும்பூசனிக்காய், நெல்லிக்காய், குழிமிட்டான் கிழங்கு, கரும்பு, இவைகளின் சாறு வகைக்குப்படி ½ (அரை), சதாவேரிக்கிழங்குச்சாறு குருணி 5, நெய்படி 2, இவைகளைச்சேர்த்து அதில் இந்துப்பு, ஓமம், சிறுதேக்கு, கோரைக்கிழங்கு, கோஷ்டம், சந்தனம், சுக்கு, மிளகு, திப்பிலி, கடுக்காய், தானிக்காய், நெல்லிவற்றல், வெட்பாலையரிசி, மல்லி, ஏலம், கிராம்பு, லவங்கப்பத்திரி, சிறுநாகப்பூ, சீரகம், விளாமிச்சுவேர், கூகைநீர், அதிமதுரம், திராக்ஷை, பேரீச்சங்காய், வகைக்கு விராகனிடை 1½ (ஒன்றரை), அரைத்து கரைத்து எரித்து வடித்து 1 கரண்டி வீதம் தினம் 2 தடவை சாப்பிட்டுவர கிரிச்சரம், நீர்கடுப்பு, எலும்புருக்கி, மேகசுரம், கைகால் எரிவு தீரும். தாதுவிருத்தி, தேகபுஷ்டி உண்டாகும்.

மஹா வல்லாரை கிருதம்.

வல்லாரை, பொடுதலை, பொன்னாங்காணி இவைகளின் சாறு படி 2, எலுமிச்சம்பழச்சாறு படி 2, ஆவின்பால், நெய் வகைக்குப்படி 4, இவைகளைச்சேர்த்து அதில் அதிமதுரம், ஏலம். கிராம்பு, வால்மிளகு, சாதிக்காய், சாதிப்பத்திரி, மாசுக்காய், கடுக்காய்ப்பூ, வகைக்கு விராகனிடை 4, ஷை பாலால் அரைத்துக் கரைத்து எரித்து வடித்து அதில் 4 பலம் கற்கண்டுபொடியைச் சேர்த்து தினம் 3 விராகனிடை கிருதத்தில் கொஞ்சம் ரசபஸ்பம் சேர்த்துக்கொடுக்க மேகம் (20), கிரந்தி (9), பிரமியம் (20), குஷ்டம் (18) மேகசூலை, சொறி, சிரங்கு, நாபிநோய், யோனிப்புற்று, நீர்கடுப்பு முதலிய மகாகொடிய ரோகங்கள் குணமாகும்.

மஹாதுதுளை கிருதம்.

தூதுளைச்சமூலம் பலம் 100, கண்டங்கத்திரி, கரிமுள்ளிவேர், வகைக் குப்பலம் 50 இவைகளை இடித்து 80 படி ஜலத்தில் போட்டு எரித்து 10 படியாக்கின கஷாயத்தில் பசும்நெய், பால் வகைக்குப்படி 5, இஞ்சிச்சாறு படி 1¼ (கவ) சேர்த்து, அதில் சிறுநாகப்பூ, நன்னாரிவேர், கொடிவேலி வேர், சுக்கு, மிளகு, திப்பிலி, கடுக்காய், தானிக்காய், நெல்லிவற்றல், கோஷ்டம், தாளிசபத்திரி, வகைக்கு வராகனிடை 5, செவ்வல்லிக்கொடி, சடாமாஞ் சில், சிறுகாஞ்சொறிவேர், ஆடாதொடைவேர், அதிமதுரம், சீரகம், தேற்று விதை, வகைக்குப்பலம் 1¼ (கவ), கண்டங்கத்திரிவேர், முசுமுசுக்கைவேர் வகைக்குப்பலம் 2½ (இரண்டரை) இடி பாலால் அரைத்துக் கரைத்து எரி த்து வடித்து அதில் தேன் படி ½ (அரை), கற்கண்டு பலம் 5 சேர்த்து தின ம் 2 தடவை 2 விராகனிடை வீதம் கொடுக்க—ஈளை, இருமல், சுவாசம் (5), காசம் (5), பொருமல், இரைப்பு முதலிய கபரோகங்களெல்லாம் தீரும்.

மரத்துவெள்ளை (வெள்ளைக்குங்கிலியம்) நவநீதம்.

நல்லெண்ணெய், கருநொச்சிச்சாறு, பசும்பால், எலிமிச்சம்பழச்சாறுவ கைக்குச்சேர் ¼ (வ), சேர்த்துக்காய்ச்சி வடித்து அதில் மரத்துவெள்ளை பல ம் 2, கல்நார்பஸ்மம் பலம் 1, கர்ப்பூரகலாசத்துபஸ்மம் பலம் 1 இவைகளைச் சூர்ணித்துச்சேர்த்து மறுபடியும் எரித்து ஜலத்தில் ஒருதுளிபோட, அது முழுகிப்போகும்பதத்தில் இறக்கி ஒரு சட்டியில் ஜலத்தை வைத்துக்கொ ண்டு அதில் ஊற்றிக்கசக்கி ஜலத்தை நீக்கவும். இவ்விதமாய் 4—5 தட வைகசக்கி ஜலத்தைநீக்கி அத்துடன் எருமை வெண்ணெய் சேர் ½ (அரை), சேர்த்து ஜலத்தில் போட்டுக்கசக்கி ஜலத்தை நீக்கி, மறுபடியும் புதுஜலத் தைச்சேர்த்துக் கசக்கவும். இவ்விதமாக 24 தடவைக்கசக்கி எடுத்து தின ம் 2 தடவை பாக்களவு கற்கண்டு பொடியில் சாப்பிட உஷ்ணம், வயிற்றிலு ள்ள ரணம், நீரெரிவு, நீர்த்தாரைப்புண், முதலியவைகள் குணமாகும். இ தை தினம் புது ஜலத்தில் போட்டுவைக்கவேண்டியது.

பேர்ச்செங்காய் கிருதம்.

கிராம்பு, சீரகம், மிளகு, திப்பிலி, வகைக்குப்பலம் ½ (அரை), சாதிக் காய், கசகசா வகைக்குப்பலம் ¼ (வ), இவைகளைச்சூர்ணித்து ஒருபலம் கொ ட்டைநீக்கின பேர்ச்செங்காயில் செலுத்தி அவைகளை ஒரு சேர் பசும்நெய் யில் போட்டு, தேன் சேர் ⅜ (காலேலரைக்கால்) விட்டுக் காய்ச்சி எடுத்து தி னம் ஒரு பேர்ச்சங்காய் வீதம் சாப்பிட்டுவர உஷ்ணவாயு, பித்தவாயு, ஆக்

கினிமந்தம், அன்னத்துவேஷம், பாண்டு, சோபை, முதலியவைகள் குண மாகும். ரத்தத்தை விருத்திக்கும்.

பொன்னுங்காணி கிருதம்.

பொன்னுங்காணி, பொற்றலைகையாந்தகரை, எலுமிச்சம்பழம் இவை களின் சாறு, பசும்நெய், பசும்பால், வகைக்குப்படி 2 சேர்த்து, அதில் அதி மதுரம் பலம் 4, பசும்பாலால் அரைத்துக் கரைத்து எரித்து வடித்து ஒரு சீசாவில் போட்டு, அதில் சாதிக்காய், சாதிப்பத்திரி, கோரோசனை, சற்கண் டு வகைக்கு விராகனிடை 2 சூர்ணித்துப்போட்டு தினம் காலைமாலை 2 விரா கனிடை வீதம் கொடுக்க மூலச்சூடு, உஷ்ணரோகங்கள், கைகால் எரிவு, தேகஎரிவு, மேகம், வாய்நாற்றம், பிரமியங்கள் (20) குணமாகும். கண்கள் குளிர்ச்சியாகும்.

புளியாரை கிருதம்.

புளியாரை, வள்ளிக்கிழங்கு, பொன்னுங்காணி இவைகளின் சாறு வகை க்குப்படி 2, செவ்விளநீர் ஜலம் படி 4, ஆவின் நெய், ஆவின்பால் வகைக்குப் படி 10, இவைகளைச்சேர்த்து, அதில் சீரகம், மாசிக்காய், அதிமதுரம் வகை க்கு விராகனிடை 8, பசும்பாலால் அரைத்துக்கரைத்து எரித்து வடித்து ஒரு சீசாவில் போட்டு அதில் ஏலம், சாதிக்காய், சாதிப்பத்திரி வகைக்கு விராகனிடை 4, கற்கண்டு பலம் 2, இவைகளைச்சூர்ணித்து போட்டு தினம் 2தடவை 3 விராகனிடை வீதம் கொடுக்க பித்தவாயு, பித்தவெட்டை, பித் தஎரிவு, பித்தமயக்கம் நீர்சுருக்கு, வாந்தி, அரோசகம் குணமாகும்.

35வது அத்தியாயம்.

பஸ்மங்கள்

யுனானி, கர்நாடக அவுஷதங்களில் பஸ்மங்கள் மஹாசிரேஷ்டமா ன மருந்தாகவும் அதிவிசேஷகுணத்தையுடையதாகவும் இருக்கின்ற படியால் அநேக கிரந்தங்களைக்கொண்டு எல்லோரும் எளிதில் செய்ய க்கூடியவைகளாயும், மஹா வல்லமை பொருந்தியவைகளாயும் இருக்கி ன்ற அநேக நல்ல பஸ்மங்களை இந்த அத்தியாயத்தில் சொல்லப்படும். வியாதியஸ்தர்கள் அவைகளை செய்துச்சாப்பிடுவார்களாகில் அவர்களின் ரோகங்கள் உடனே பஸ்மமாகும் என்பதற்குச் சந்தேகமில்லை.

மஹா ரஜத பஸ்மம்.

1. அரிதாரம் பலம் 1, கல்வத்திலிட்டு எலுமிச்சம்பழச்சாற்றால் ஒரு ஜாமம் அரைத்து சுத்திசெய்த வெள்ளித் தகடுபலம் 3-க்கு கவசமிட்டு சீலை

மண்செய்து 30 எருவில் புடம்போடவும். இவ்விதமாகவே 14 புடம்போட்டு எடுத்துப் பார்க்க மஹா வெண்மையான பஸ்மமாயிருக்கும். இதை அநுபானத்திலிட மேகம், பிரமேகம், கிரிச்சரம், மூத்திரரோகம், அஸ்தி சுரம் முதலிய அநேக பயங்கரமான ரோகங்கள் குணமாகும்.

2. ஜெரிகை வெள்ளியின் தகட்டை சிறுதுண்டுகளாக்கி ரசபஸ்மம், வங்கபஸ்மம், நாகபஸ்மம் இம்மூன்றையும் சமம்கூட்டி உமிழ்நீர்விட்டு அரைத்து வெள்ளிக்குச்சமயிடைச்சேர்த்து ரவியில்உலர்த்தி சீலமண்செய்து, சுண்ணாம்புக்குள் வைத்து வராகபுடம் போட்டு எடுத்துப் பார்க்க பஸ்மமாயிருக்கும், அதில்ஒரு குன்றிமணியிடை தேனிலிட கல்லடைப்பு, சதையடைப்பு, கிரிச்சரம், காசம், இரைப்பு, லிங்கப்புற்று, யோனிப்புற்று, கிரந்தி, மேகம், முதலிய பயங்கரமான ரோகங்கள் குணமாகும்.

மஹா தாம்பிர பஸ்மம்.

அண்டத்தோல் பலம் 2, வீரம், பூநீர், சீனாகாரம், வெங்காரம், நவக்ஷாரம், பூரம், வெடிஉப்பு வகைக்கு விராகனிடை 2, ஒருபடி எலுமிச்சம்பழச்சாற்றால் அரைத்து பில்லைத்தட்டி உலர்த்தி, பத்து பலம் நாகூர் செல்வியை குகையில்போட்டு உருக்கி அதின் முகத்தில் ஒவ்வொரு பில்லைக்கொடுத்து, மறுபடியும் உருக்கி 2 படி எலுமிச்சம்பழச்சாறும், ¼ (?) படி முலைப்பாலும் சேர்த்து ஒவ்வொரு துளியாகவிட்டு சுருக்குக் கொடுத்து தாளகம் பலம் 2, வெங்காரம், நவக்ஷாரம், வகைக்குப்பலம் 5, இவைகள் மூன்றும் கல்வத்திலிட்டு, திருக்கள்ளிப்பால் படி 2, பூநீர், பூரம், வெடியுப்பு, சீனாகாரம், நவக்ஷாரம், வீரம், கல்லுப்பு வகைக்கு விராகனிடை 2, இவைகள் எட்டும், 3 நாள் சேர்த்துவைத்து, அதின் ஜலத்தால் 3 நாள் அரைத்து பில்லைத்தட்டி உலர்த்தி முதலில் கொடுத்தபடி ஒவ்வொரு வில்லையாக உருக்கின முகத்தில் கொடுக்க வெங்கலம்போலாகும். இந்த தாம்பிரம், ரசம், வீரம், கர்ப்பூரம், வெள்ளுரம் வகைக்குப் பலம் 4, வெள்ளைப்பாஷாணம் பலம் 1, இவைகள் ஆறும் வெள்ளெருக்கம்பாலால் 8 ஜாமம் அரைத்து, பில்லைதட்டி உலர்த்தி ஒரு சிறு கலயத்தில் போட்டு ஒரு ஓட்டால் வாயை மூடி எழுசீலை மண் வலுவாய்ச்செய்து கஜபுடம் போட பஸ்மமாகும். அதில் ¼-1 குன்றிமணியிடை தகுந்த அநுபானத்திலிட மேகம் (20), குஷ்டம் (18), பிரமேகம் (21), க்ஷயம் (4), சூலை (18), பவுத்திரம் (15), குன்மம் (8), வாதம் (80), பித்தம் (40), சிலேஷ்மம் (20), கபரோகங்கள் (96) முதலிய மஹா பயங்கரமான ரோகங்கள் குணமாகும். பத்தியம்—அன்னமும் பசும்பாலும் சாப்பிடவும்.

மஹா வங்க பஸ்மம்.

மஞ்ஞெசிலே வெற்றிலைச்சாற்றால் அரைத்து சமமாக சுத்தி செய்த ஈயத் தகடுகளுக்கு கவசமிட்டு ஓட்டிலிட்டு மேல் ஓட்டால் மூடி சீலைமண் செய்து கஜபுடம்போடவும். இவ்விதமாகவே 32 புடங்கள் போட்டு எடுத்துப்பார்க்க வெகு வெண்மையான பஸ்மமாயிருக்கும். அதை அநுபானத்திலிட மூர்ச்சை, அபஸ்மாரம், கபரோகம், அதிசாரம், கிரகணி, பேதி முதலிய அநேக பலமான ரோகங்கள் குணமாகும்.

மஹா கருவங்க பஸ்மம்.

சுத்திசெய்த 3 சேர் காரீயத்தை உருக்கி, 8 சேர் சங்க இலைச்சாற்றில் 21 தடவை வார்த்து, பிறகு அதை ஒரு கம்பியாக்கி கத்தியால் சீவினபொடியை தாமரை இலைச்சாற்றால் 4 ஜாமம் அரைத்து, கல்வத்தோடு ரவியில் வைத்து உலர்த்தி, பிறகு அதை ஒரு சட்டியில் போட்டு ஆகாசத்தாமரையிலையை கொஞ்சங் கொஞ்சமாகப்போட்டு வறுக்க ஈயத்தை பொடியாக்கி விடும். அந்தப்பொடியும் அதற்குச்சரியான யிடை கோழிக்குஞ்சு பொரித்த முட்டையின் உள்தோலை நீக்கி மேலோட்டைச்சேர்த்துச் சூர்ணித்து ஒரு குகையில் போட்டு ஓட்டால் வாயை மூடி 7 சீலைமண் வலுவாய்ச்செய்து உலர்த்தி உலையில் வைத்து துருத்தியால் 3–4 மூட்டம்போட்டு குகையை உருகுஞ்சமயத்தில் எடுத்து ஆற்றி, குகையை உடைத்துப் பார்க்க பஸ்மமாயிருக்கும். அதில் ⅛ (?)-1 குன்றிமணியிடை நெய்யில் தினம் காலை மாலை 3–4 நாள் கொடுத்து பிறகு பத்து நாள் பொறுத்து 3–4 நாள் கொடுக்க மூர்ச்சை (4), அபஸ்மாரம் (4), பயித்தியம் (6) முதலிய மஹாகொடிய ரோகங்கள் குணமாகும்.

மஹா ரச பஸ்மம்.

ஒருமண்பாண்டத்தில் 1 பலம் கந்தகத்தைப்போட்டு காடாக்கினியாய் எரித்து கந்தகம் உருகும் சமயத்தில் 2 பலம் ரசத்தைவிட்டு துளாவிக்கொண்டிருந்தால் ரசம் கந்தகத்துடன் கலந்து கறுத்துத்தூளாகி விடும், பிறகு வேறொருபாண்டத்தில் பாதிக்குச்செங்கல் பொடியைப்போட்டு அதின்மேல் 8 ஆழாக்கு கறிஉப்பைக்கொட்டி, அதின்மேல் ரசகந்தியை வைத்து வேறொருபாண்டத்தால் மூடி பொருத்து வாய்க்குக் களிமண் தடவிஎழு சீலைமண் வலுவாய்ச்செய்து காடாக்கினியாய் நாலுஜாமம் எரித்துக் குளிரவைத்து உடைத்துப்பார்த்தால் மேல்பாண்டத்தில் ரசபஸ்மம் பதங்கித்திருக்கும். அதை எடுத்து ⅛ (?), பணவிடை வீதம் அநுபானத்திலிட சுரம் (64), மாந்தம் (8), காசம் (5), சன்னி (13), நேத்திரரோகம் (94), அதிசாரம் (6), மேகம் (20) முதலிய பற்பல கரேரோகங்கள் குணமாகும்.

மஹா சுவர்ண பஸ்மம்.

தங்கத்தை சுத்திசெய்து அரத்தால் ராவினபொடி பங்கு 1, சுத்திசெய்த ரசம் பங்கு 2, சேர்த்து கல்வத்திலிட்டு எலுமிச்சம்பழச்சாற்றால் அரைத்து அதற்கு சரிஇடை நெல்லிக்காய்கந்தகத்தை சூர்ணித்து அதில் கொஞ்சம் எடுத்து தங்கரச கலவையில் சேர்த்து பில்லையாக்கி உலர்த்தி பாக்கி கந்தகத்தில்பாதியை ஒட்டிலிட்டு அதின்மேல் ஷெ பில்லையைவைத்து அதின்மேல் பாக்கி பாதிகந்தகத்தை போட்டு ஒட்டால் மூடி சீலமண் செய்து 30 எருவில் புடம்போடவும். இவ்விதமாகவே 14 புடம்போட மஹா திவ்வியமான பஸ்மமாகும். ஒவ்வொரு புடத்திலும் கந்தகத்தை மேல்சொல்லியபடி சேர்த்து வரவும். இதில் ¼ (வ) குன்றிமணியிடை அனுபானத்தில் கொடுக்க புத்தி, வித்தை, ஸ்மரணம், இம்மூன்றையும் வெகு விலாசப்படுத்தும். விஷபாதைத்தீரும்.

சுவர்ண ரஜத பஸ்மம்.

உப்பிலாங்கொடி இலையை, 3 பலம் ஜெரிகை வெள்ளித்தகடுகளுக்கும் 5 பலம் தங்கத்தகடுகளுக்கும் கவசமிட்டு சீலமண் செய்து வராகபுடம்போட பஸ்மமாகும். அவைகளை மிஸ்ரித்து ஒரு குன்றிமணியிடை அனுபானத்திலிட மேகம் (20), சுரம் (64), அதிசாரம் (6), மாந்தம், தாது நஷ்டம் முதலிய மஹா கொடிய ரோகங்கள் குணமாகும்.

சுவர்ண பஸ்மம்.

சுத்திசெய்த தங்கப்பொடியை கல்வத்திலிட்டு அம்மான் பச்சரிசி சாற்றால் 4 ஜாமம் அரைத்து பில்லைத்தட்டி உலர்த்தி கடம்பிலையை அரைத்து அதற்குக் கவசமிட்டு, ஒட்டிலிட்டு மூடி 9 சீலமண்செய்து கஜபுடம் போட பஸ்மமாகும். இதை அனுபானத்திலிட வெண்குஷ்டம், செங்குஷ்டம், கருங்குஷ்டம், குஷ்டம் (18), முதலிய பலமானரோகங்கள் குணமாகும். கிராம்பைச் சூர்ணித்து பசும் வெண்ணெயில் சேர்த்து அதில் ஒரு குன்றிமணியிடை பஸ்மம் வைத்து உட்கொண்டு பாலும் அன்னமும் சாப்பிட தேகம் பலக்கும், விந்து ஊறும், தாதுகட்டும்.

வீர பஸ்மம்.

அமுரி நாலுபடியும், பூநீர் ஒரு படியும் சேர்த்து ஒரு சட்டியிலிட்டு துணியால் அதின் வாயைக்கட்டி அதின்மேல் வீரம் பலம் ½ (அரை), வைத்து மூடி சீலமண் செய்து நீர்வற்றும் வரையில் தீபாக்கினியாய் எரித்து எடுத்து கிரந்தி நாயகச்சாற்றால் 3 நாள் அரைத்து பில்லைசெய்து உலர்த்தி ஷெ இலையை அரைத்து குகைசெய்து அதில்வைத்து மூடி ஒருசட்டியில் மணல் கொட்டி அதின்மேல் இதை வைத்து ஒரு ஜாமம் தீபாக்கினியாய் எரிக்க

பஸ்மமாகும். அதில் அரிசியிடை அனுபானத்திலிட ஜன்னி (13), தோஷம், கபரோகங்கள் (96), வாதம் (80) முதலிய கடோமான ரோகங்கள் குணமாகும்.

அப்பிரக பஸ்மம்.

சுத்திசெய்த அப்பிரக பொடியை கல்வத்திலிட்டு குமிளம்பட்டைச்சாற்றால் 4 ஜாமம் அரைத்து பில்லைதட்டி உலர்த்தி வராக புடம் போட்டு எடுத்து; அப்படியே ஆலம்பாலால் அரைத்து 2 புடங்களும், எலுமிச்சம்பழச்சாற்றால் ஒரு புடமும்போட்டு எடுத்து அனுபானத்திலிட க்ஷயம் (4), மேகம் (20), கிரிச்சரம் (4), பிரமேகம் (21), மேகவாயு, கிரகணி (11), ஜன்னி (13), அஸ்திச்சுரம், அஸ்திவெட்டை, கைகால் எரிவு முதலிய மஹா பயங்கரமான ரோகங்கள் குணமாகும்,

தாளக பஸ்மம்.

இரண்டு பலம் சுத்திசெய்த தாளகத்தை வாழைக்கிழங்குக்குள் வைத்து மூடி எட்டு சீலைமண் வலுவாய்ச் செய்து உலர்த்தி வராக புடம்போட்டாலும் சரி, அல்லது மூக்கரைச்சாரணைச் சமூலம் ஒருநார்த்தங்காய் அளவு அரைத்து அதின் மத்தியில் தாளகக்கட்டியை வைத்து மூடி ஒரு வாய் அகன்ற கலயத்தில் வைத்து அகலால் மூடி எட்டு சீலைமண் வலுவாய்ச்செய்து 12 மணிநேரம் தீபாக்கினியாக எரித்தாலும்சரி, அது பஸ்மமாகும். அதில் ½ (அரை) முதல் 2 குன்றிமணியிடை அனுபானத்தில்கொடுக்க க்ஷயம் (4), கிரந்தி (9), சூலை (18), சுரம் (64), குஷ்டம் (18), மேகம் (20) முதலிய பற்பல கடோரோகங்கள் குணமாகும்.

லகு தாம்பிர பஸ்மம்.

தாம்பிரத்தை சுத்திசெய்து அரத்தால் ராவின பொடியை ஒரு புது வாணலில் போட்டு தீபாக்கினியாக எரித்து ஒரு படி புளியாரைச்சாற்றால் சுருக்குக்கொடுக்க பஸ்மமாகும். அதை 1½ அரிசியிடை நெய்யில் 2 நாளைக்கு ஒருதரம் சாப்பிட மேகம் (20), கிரந்தி (9), சூலை (18), முதலிய கடோரோகங்கள் குணமாகும். வெண்குஷ்டம் என்னும் வெள்ளை மேகத்திற்கு இதைப்பத்துபோட தீரும். கருமேகத்திற்கு ஆட்டுப்பாலில் கலந்து வேறு யிடத்தில்படாமல் தடவிவர தீரும். பத்தியம்-வெந்நீர் ஸ்நானஞ்செய்யவும். தயிர், மோர் தள்ளவும்.

கர்ப்பூர சலாசத்து பஸ்மம்.

1. சுத்திசெய்த கர்ப்பூரசலாசத்தை துத்தியிலைச்சாற்றிலும், சிறுசெருப்படைச்சாற்றாலும் 4 ஜாமம் அரைத்து பில்லைதட்டி உலர்த்தி ஒரு கலயத்தில் வைத்து ஒட்டால் மூடி 5 சீலைமண் செய்து வராக புடம் போடவும் இவ்விதமாக மூன்று புடம்போட பஸ்மமாகும். அதில் ¼ (வ) விராகனிடை

வீதம் பசுவின் நெய்யில் கொடுக்க நீர்க்கடுப்பு, தேக எரிவு, பித்த வெட்டை தீரும். இத்துடன் வெங்காரத்தைச்சேர்த்து ஜலத்தில் கொடுக்க கல்லடைப்பு, நீர் அடைப்பு, சதையடைப்பு, நீர்எரிவு முதலியவைகள் குணமாகும்.

2. சுத்திசெய்த கர்ப்பூரசலாசத்துக்கு துத்தியிலையை அரைத்துக்கவசமிட்டு வராக புடம்போட்டு எடுத்து ¼(வ) விருகணிடை வீதம் பசுவின் வெண்ணெயிலிட உஷ்ணரோகங்கள், பித்தவெட்டை முதலியவைகள்குணமாகும்.

3 கோவை இலையை அரைத்து அதர்குள் கர்ப்பூரசலாசத்தை வைத்து சீலைமண்செய்து சிறு புடம்போட பஸ்மமாகும். அனுபானத்தில் கொடுக்க ஷை ரோகங்கள் குணமாகும்.

நாக பஸ்பம்.

ஒரு சேர் நாகத்தைக்குகையில் உருக்கி கீழ்க்காய்நெல்லிச்சமூலத்தின் சூர்ணம் சேர் 1 அதில் தூவிக்கிளற பஸ்மம் போலாகும். அத்துடன் சரியிடை ரசம் சேர்த்து பனைமட்டைச் சாற்றாலரைத்து பில்லை செய்து உலர்த்தி குக்குடம் புடம்போடச் சுத்த பஸ்மமாகும். அதில் 2—4 கிறேன்ஸ் வெண்ணெயிலாவது அல்லது வேறுஅனுபானத்திலாவது கொடுக்க குன்மம் (8), மூலமூளை. வயிற்றுக்கடுப்பு, கைகால் ஊறல், வெள்ளை, வெட்டை, மூலம் முதலியவைகள் குணமாகும்.

ராஜ லோகநாத ரசபஸ்மம்.

ரசம், கந்தகம் வகைக்கு பலம் 1 சுத்திசெய்து கல்வத்திலிட்டு அரைத்து 4 பலம் பலகறை (கவடி) யில் செலுத்தி பிறகு வெங்காரம் பலம் 1 பசும்பாலால் அரைத்து ஷை பலகறையின் வாயில் அடைத்து, பிறகு சங்கை துண்டுகளாக்கி பசும்பாலில் வேகவைத்து சுத்திசெய்து 8 பலம்தூக்கி, சுண்ணாம்பைப்பூசின ஒட்டில் சங்கு துண்டுகளில் பாதிபோட்டு அதின்மத்தியில் ஷை பலகறை வைத்து அதின்மேல் பாக்கி பாதி சங்குத் துண்டுகளை போட்டு சுண்ணாம்பைப்பூசின ஒட்டால் மூடி சீலைமண் செய்து கஜபுடம், போட ஒட்டிலுள்ளவைகள் எல்லாம் பஸ்மமாகும். அவைகளை எடுத்து மிஸ்ரித்து 6 குன்றிமணி இடையை 29 மிளகின் சூர்ணத்தில் சேர்த்து வாதம் (80)க்கு நெய்யிலும், பித்தம் (40)க்கு வெண்ணெயிலும், கபரோகம் (96)க்கு தேனிலும் கொடுக்க அதிசாரம், க்ஷயம், கிரகணி, அக்கினிமந்தம், இருமல். சுவாசம், குன்மம் முதலிய மற்ற பயங்கரமான ரோகங்கள் குணமாகும். பத்தியம்—புளிப்புதள்ளி, நெய், பால், சேர்த்துக் கொள்ளவும்,

சிங்கி பஸ்மம்.

குப்பைமேனிஇலையை அரைத்து மான்கொம்புக்குக்கவசமிட்டு 20 எருவில் புடம்போட பஸ்மமாகும். இதுவும் பவள பஸ்மமும்சமமாகச் சேர்த்து

4 கிறேன்ஸ் வீதம் தினம் 2 தடவை அனுபானத்திலிட இருமல், சுவாசம் (5), காசம் (5), க்ஷயம் (4) முதலிய கபரோகங்கள் (96) குணமாகும்.

ரஜத பஸ்மம்.

ஜெரிகை உருக்கின வெள்ளியை அரத்தால் ராவி பொடியாக்கி குன்றி மணியிலைச் சாற்றால் 4 ஜாமம் அரைத்து பில்லைத்தட்டி உலர்த்தி ஓட்டிலிட்டு சீலைமண் செய்து வராக புடம்போட்டு எடுத்து மறுபடியும் கல்வத்திலிட்டு அம்மான் பச்சரிசிச் சாற்றால் 2 ஜாமம் அரைத்து முன்போல இரண்டு புடம்போட்டு எடுத்துப்பார்க்க பஸ்மமாயிருக்கும். அதில் ½ (அரை) பணவிடை வீதம் அனுபானத்திலிட மேகம் (20), பிரமேகம் (21), மூத்திர ரோகம் (12), கிரிச்சரம் (4), அஸ்தி சுரம் முதலிய கரேரோகங்கள் குணமாகும். பசி உண்டாகும்.

ரஸ பஸ்மம்.

ரசம் பலம் 2, கல்வத்திலிட்டு அதில் ஆடுதீண்டாப்பாளை இலைச்சாறு, பொன்னாவரை இலைச்சாறு, கும்பைமேனி இலைச்சாறுஇம்மூன்றும் சமமாக சேர்த்துவைத்துக்கொண்டு கொஞ்சம் கொஞ்சமாக விட்டு 4 சாமம் அரைத்து ஓட்டிலிட்டு 7 சீலைமண் வலுவாய்ச்செய்து குக்குட புடம்போட பஸ்மமாகும். அதில் ½ (அரை)-1 குன்றிமணி இடை அனுபானத்திலிட மேகம் (20) வாயு, சன்னி (13), வாதம் (80), முதலிய அநேக கரேரோகங்கள் குணமாகும்.

கல்நார் பஸ்மம்.

1. கல் சுண்ணாம்புத் தண்ணீரில் கல்நார் பலம் 2 போட்டு இரண்டு நாள்ஊறவைத்து எடுத்து பொடுதலை அல்லது கையாந்தகரை அரைத்துகவசமிட்டு குக்குடபுடம்போட பஸ்மமாகும். அதில் ¼ (வ) விராகனிடை வீதம் அனுபானத்திலிட கபரோகங்கள், மேககர்ங்கை முதலியவைகள் தீரும். தந்தசுத்தி செய்துவர தந்தம் இறுகும்.

2. சுத்திசெய்த கல்நாரை துண்டுகளாக்கி ஒரு சிறு கலத்தில்போட்டு அதற்கு கீழும் மேலும் எருக்கம் வேர்த்தூளைப்போட்டு மூடி, சீலைமண்செய்து வராக புடம்போட்டு எடுத்து, கொங்கிலவம்பட்டைக் கசாயத்தால் ஒவ்வொரு ஜாமம் அரைத்து இரண்டு புடம்போட்டு எடுத்துப் பார்க்க பஸ்மமாயிருக்கும். அதில் ¼ (வ) விராகனிடை வீதம் அனுபானத்திலிட க்ஷய ரோகங்களெல்லாம் குணமாகும்.

பவள பஸ்மம்.

1, சுத்திசெய்த பவளத்தை தேள்கொடுக்கிலையிலாவது கீழ்க்காய்நெல்லியாவது அல்லது இலந்தையிலையாலது அரைத்து குகை செய்து அதில் வைத்து மூடி 9 சீலைமண்செய்து உலர்த்தி வராக புடம்போட பஸ்மமா

கும். ¼ (வ) விருகனிடை அனுபானத்திலிட பித்தம் (40), கண்புகைச்சல், ஈளை, இருமல், உப்பிசம், சுரம் (64), க்ஷயம் (4), காசம் (5), நீர்க்கடுப்பு முதலியவைகள் குணமாகும்.

2. சுத்திசெய்த பவளம் பலம் 1, கர்ப்பூரசலாசத்து பலம் 1, இவைகளைக் கல்வத்திலிட்டு பிரண்டைச்சாற்றால் 3 ஜாமம் அரைத்து முன்போல புடம் போட்டு எடுத்து பணவிடை வீதம் பசுவின் வெண்ணெயிலிட மேகம் (20), அஸ்திமேகம், மதுமேகம், எலும்புருக்கி முதலிய கோர மேகங்களும், தேனிலிட குன்மம் (8), மேகஊறல் முதலியவைகளும் தீரும்.

3. ஒரு பலம் சுத்திசெய்த பவளத்தை கடப்பாறையால் இடித்து தூளாக்கி வெள்ளை எருக்கம்பாலால் 3 ஜாமம் அரைத்து 20 எருவில் புடம் போட வெகு நல்ல பஸ்மமாகும். 2—3 குன்றிமணி இடை அனுபானத்தில் கொடுக்க சகல கபரோகங்கள் குணமாகும்.

வெள்ளீய பஸ்மம்.

வெள்ளீயம் சேர் 1 ஒரு இரும்பு சட்டியில் போட்டு வேறு 3 பாத்திரங்களில் ஒவ்வொன்றிலும் 4 சேர் நல்லெண்ணெய்யை விட்டு ஷை ஈயத்தை உருக்கி ஒவ்வொரு பாத்திரத்திலும 7 தடவை வார்க்கவும். இவ்விதமாகவே இலுப்பநெய், எலுமிச்சம்பழச்சாறு, காடி, புளித்த மோர், கோமூத்திரம் இவைகளில் ஒவ்வொன்றிலும் 21 தடவை உருக்கி வார்க்கவும். பழச்சாறு முதலிய ஜலசம்பந்தமானவைகள் மாத்திரம் கல்லுரலில் போட்டு அதின்மேல் திருகையை வைத்து, அதின் சிறு துவாரத்தில் ஷை ஈயத்தை உருக்கி வார்க்கவேணும். இப்படிக்குச் செய்யாவிடில் ஈயம் பறக்கும். இவ்விதமாய் சுத்திசெய்த ஈயத்தை வெங்காயத்தோல்போல் லேசாக அடித்து சிறுதுண்டுகளாக்கி 2–முழ அகலமும், 3-4 முழ நீளமுமுள்ள ஒரு துணியைப்பறப்பி அதின் மேல் வெண்ணொச்சி இலையையும், பூவும் சேர்ந்தச் சூர்ணத்தைச் போட்டு அதில் ஷை ஈயத்தகட்டை ஒன்றின் மேலொன்று படாமல் பறப்பித்திரியைப் போலச்சுற்றி காற்றில்லாத யிடத்தில் இரு பக்கமும் கொளுத்தி விட்டு ஆறின பிறகு பார்த்தால் தகடுகள் பொறியாயிருக்கும். அவைகளை மாத்திரம் எடுத்து சூர்ணிக்க பஸ்மமாகும். அதில் ஒரு குன்றிமணி யிடை சீரகமும், கற்கண்டும், நெய்யும் சேர்ந்த சூர்ணத்தில் கால்மண்டலம் கொடுக்க கபரோகம், வெள்ளை, வயிற்றுக்கடுப்பு முதலியவைகள்குணமாகும். இத்துடன் காந்த செந்தூரத்தைச் சேர்த்துக்கொடுக்க அதிசாரம், கிரகணி, பேதி, முதலியவைகள் குணமாகும்.

உருக்கு பஸ்மம்.

சுத்திசெய்த உருக்கைத் தகடுகளாக்கி ஆகாசகருடக்கிழங்கில் பொதிந்து சீலைமண் செய்து வராகபுடம்போட பஸ்மமாகும். அதில் பணவிடை அனுபானத்திலிட தேகபலமும், நரைதிரை மாறுதலும் உண்டாகும்.

அய பஸ்மம்.

சுத்திசெய்த அரப்பொடியை குப்பைமேனிச்சாற்றால் 2-ஜாமம் அரைத்து உலர்த்தி முந்திரி மரத்தின் ஒருசிறு கட்டையை துளைத்து அதிலிட்டு ஷை மரத்தின் சக்கையால் மூடி சீலைமண் செய்து கஜபுடம்போட பஸ்மமா

சம். இதில் ½ (அரை)—1 விராகனிடை அனுபானத்திலிட, பித்தவெட்டை, பாண்டு, சோகை (9) முதலியவைகள் குணமாகும். தேகம் இறுகும், விந்து வளரும், தாது கட்டும்.

துரிசு பஸ்மம்.

1. துரிசு விராகனிடை 3, வெடியுப்பு விராகனிடை 2, இவைகளை குப்பைமேனி இலைச்சாற்றால் அரைத்து பில்லைத்தட்டி ஒரு ஓட்டிலிட்டு சீலைமண்செய்து குக்குட புடம்போட பஸ்மமாகும். இதில் ¼ (?) முதல் 2 குன்றிமணியெடை வீதம் அனுபானத்திலிட வயிற்றுவலி, கபரோகங்கள் (96) தீரும்.

2. துரிசுயை வெருகம்பைச்சாற்றில் ஊறவைத்து உலர்த்தி கல்வத்திலிட்டு ஷெ சாற்றால் ஒரு ஜாமம் அரைத்து பில்லைத்தட்டி உலர்த்தி கை இலையை அரைத்து கவசமிட்டு 9 சீலைமண் செய்து கவுசாரி புடம்போட்டு எடுத்து கருஊமத்தைச்சாற்றால் ஒரு ஜாமம் அரைத்து உலர்த்தி ஷெ இலையையரைத்துக்கவசமிட்டு முன்போல் புடம்போட பஸ்மமாகும் அதில் 1-2 குன்றிமணியெடை வீதம் தகுந்த அனுபானத்திலிட ஜன்னி (13), தோஷம், சுரம் (64), குன்மம் (8), பக்கவாயு, சோகை (9), பாண்டு (5), பித்தம் (40), ஈளை, காசம் (5), இரைப்பு, பெருவயிறு, காமாலை (13), முதலிய பற்பல கபரோகங்கள் குணமாகும்.

கதலி பஸ்மம்.

ஈசுவரமூலி வேரை ரஸ்தாளிபழத்தின் மத்தியில் வைத்தாவது அல்லது ரஸ்தாளிபழத்தைக்கீறி இரண்டயிலையை மத்தியிலும் மேலும் கீழும் வைத்தாவது சீலைமண் செய்து குக்குட புடம்போட பஸ்மமாகும். அதில் ஒரு விராகனிடை வீதம் அனுபானத்திலிட உஷ்ணவாயு, வாயு, வயிற்றுவலி தீரும்.

லவண பஸ்மம்.

இந்துப்பு, பொட்டிலுப்பு, வெங்காரம், சீனகாரம் வகைக்குப் பலம் 1, கர்ப்பூரசிலாசத்து பலம் 4, இவைகளை சுத்தி செய்து குப்பைமேனிச் சாற்றால் ஒரு நாள் அரைத்து பில்லைத்தட்டி ஒரு சிறு கலயத்தில் வைத்து வாயைமூடி 7 சீலைமண்செய்து கஜபுடம்போட பஸ்மமாகும். அதில் 2—3 பணவிடை வீதம் தேனில் கொடுத்துவர அஜீர்ணம், வாயு, மந்தாக்கினி, குன்மம் முதலியவைகள் தீரும். தீபனம் உண்டாகும்.

36-வது அத்தியாயம்.

செந்தூரங்கள்.

சச்சிதானந்த ஸ்வரூபராய் இருக்கின்ற கடவுளானவர் சர்வரோகங்கள் நிவர்த்தியாகும் பொருட்டு அனுக்கிரகஞ் செய்திருக்கின்ற செந்

ருத்திர செந்தூரம்.

வீரம், பூரம், லிங்கம், ரசம், வகைக்கு விராகனிடை 6, அரப்பொடி விராகனிடை 3 இவ்வைந்தும் சுத்திசெய்து கல்வத்திலிட்டு எலுமிச்சம்பழச்சாற்றால் 3 சாமம் அரைத்து வில்லைதட்டி ஒரு சிறு கலயத்தில் வைத்து அகலால்மூடி 10 சீலை மண் வலுவாய் செய்து வராக புடம்போட்டு எடுத்து இவ்விதமாகவே இஞ்சிச் சாற்றுலும், பொற்றலை கையாந்தகரைச் சாற்றாலும், தனித்தனியே ஒவ்வொரு புடம்போட்டு எடுத்து அத்துடன் ரசசெந்தூரம் அல்லது ரசபஸ்பம் விராகனிடை 6 சேர்த்து மிஸ்ரித்து ஒரு சீசாவில்போட்டு வைத்துக்கொண்டு ¼ (காலரை) குன்றிமணிஎடை அனுபானத்திலிட மேகம் (20), சன்னி (13), சூலை (18), குஷ்டம் (18), சுரம் (64) முதலிய அநேக மஹா கடூர ரோகங்கள் குணமாகும்.

சுவர்ண செந்தூரம்.

சுத்திசெய்த தங்கம் விராகனிடை 5, சுத்திசெய்த ரசம் பலம் 4, சுத்திசெய்த கந்தகம் சேர் 1, கல்வத்திலிட்டு ½ (அரை) நாள் செம்பரத்தம்பூச்சாற்றாலும், 1 நாள் குமரிவேர் சாற்றாலும் அரைத்து நிழலில் உலர்த்தி காசிக்குப்பியிலிட்டு பளப்பக்கல்லால் வாயை மூடி 7 சீலைமண் வலுவாய் செய்து உலர்த்தி, வீரபத்திர சிந்தாமணியைச்செய்யும் விதமாக இதையும் செய்து ¼ குன்றிமணியிடை வீதம் தகுந்த அனுபானத்திலிட நீரிழிவு, இருமல், காசம் (5), சன்னி (13), மகோதரம் (8), க்ஷயம் (4), குன்மம் (8), மூலம் (8), வலி (5), வாதம் (80), பித்தம் (40), கிரகணி (11), பெரும்பாடு, பிரமேகம் (21), சூலை (18), குஷ்டம் (18), கிரந்தி (9), உட்சுரம் முதலிய மகா கொடிய ரோகங்கள் அதி சீக்கிரத்தில் குணமாகும்.

ரசபயிரவ செந்தூரம்.

ரசம், லிங்கம், நாவி, கந்தகம் சீனக்காரம் இவ்வைந்தும் சுத்திசெய்து வகைக்கு விராகனிடை 5 சேர்த்து கல்வத்திலிட்டு கொடிவேலி வேரின் கஷாயத்தால் ஒரு நாள் அரைத்து உலர்த்திக் காசிக்குப்பியில் போட்டு வாயைமூடி சீலைமண்செய்து ஒரு சட்டியில் 8 விரற்கடை மணல் கொட்டி அதின்மேல் ஷை குப்பியைவைத்து அதை மணலால் மூடி கமலாக்கினியாய் 2 ஜாமம் எரித்து சூர்ணித்து ஒரு குன்றிமணிஎடை வீதம் அனுபானத்தில் கொடுக்க பித்தசுரம், சன்னிபாதசுரம், சிலேஷ்மசுரம் முதலிய சகல சுரங்களும் குணமாகும்.

திரிவிக்கிரம ரச செந்தூரம்.

ரசம், வெள்ளைப்பாஷாணம், அரிதாரம் இம்மூன்றும் சுத்திசெய்து வகைக்கு விராகனிடை 15 சேர்த்து கல்வத்திலிட்டு கையாந்தகரைச் சாற்

ருல் 4 ஜாமம் அரைத்து நிழலில் உலர்த்தி காசிக்குப்பியில் போட்டு வாயை மூடி 7 சீலைமண் வலுவாய்ச்செய்து ஒரு சட்டியில் ஆறு விரற்கடை மணலை கொட்டி. அதின்மேல் குப்பியை வைத்து மணலால் மூடி கமலாக்கினியாய் 4 ஜாமம் எரித்து எடுத்துச் சூர்ணித்து ஒரு சீசாவில் போட்டு வைத்துக் கொண்டு ½ (அ) குன்றிமணிஎடை நொச்சிச்சாற்றில் கொடுக்க சன்னிபாத சுரம் (13), சுவாசம் (5), காசம் (5), க்ஷயம் (4) முதலிய கடோ ரோகங்கள் குணமாகும்.

ஏகாதசருந்திர செந்தூரம்.

லிங்கம் பலம் 1, ரச செந்தூரம் பலம் 1, வீரம் பலம் ½ (அரை) இவை களைச்சுத்திசெய்து முதலில் லிங்கத்தைக்கல்வத்திலிட்டு சூர்ணித்து பிறகு ரசசெந்தூரம் சேர்த்து அரைத்து பிறகு வீரத்தைச்சேர்த்து அரைத்து எல்லாம் சேர்ந்து வந்தவுடனே காடிக்காரம் பலம் ⅛ (அரைக்கால்) சேர்த்து 4 ஜாமம் அரைக்கவும். இப்படி அரைக்கையில் ஈரங்கண்டால் 2 நாழிகை ரவியில் வைத்து அரைத்துக்கொள்ள செந்தூரமாகும். அதை ஒரு சீசாவி ல்போட்டு வைத்துக்கொண்டு ½ (அரை) முதல் 1 அல்லது 2 நெல்லிடை ரோகத்தின் பலாபலங்களை அறிந்து வெல்லத்தில் வைத்து மூடி முழுங்க வும். இந்த செந்தூரம் காடிக்காரத்தைச் சேர்க்காமலும் செய்து கொள்ள லாம். இதைக் கொடுக்க, சூதகவாயு, சூதகக்கட்டு, சூதகசன்னி, சுரம், சந் நிபாதசுரம், திரிதோஷசுரம் முதலிய மஹா கடோ ரோகங்கள் குணமாகும்.

நாராயண மண்டூர செந்தூரம்.

அரப்பொடி, மண்டூரம், காந்தம், சங்கு, கடல்நுரை, கந்தகம், கல்நார், வெங்காரம், நவச்சாரம் இவைகளைச் சுத்திசெய்து வகைக்குப்பலம் 1 கல்வ த்திலிட்டு கற்றாழைச்சாற்றால் ஒரு நாள் அரைத்து சூர்ய புடம்போட செந் தூரமாகும். அதில் ஒரு பணவிடை அனுபானத்திலிட அக்கினி மந்தம், வாயு, பாண்டு (5), சோகை (5) முதலியவைகள்தீரும். ரத்தவிருத்தியாகும்.

திரிமூர்த்தி செந்தூரம்.

கந்தகம், ரசம், நவக்ஷாரம் வகைக்குப்பலம் 1, சுத்திசெய்து முருங்கப் பூச்சாற்றால் ஒரு நாள் அரைத்து நிழலில் உலர்த்தி காசிகுப்பியில் போட்டு பளபக்கல்லால் வாயைமூடி 7 சீலைமண்செய்து, சட்டியில் 3 விரற்கடை உய ரம் உப்பைப்போட்டு அதின் மேல் குப்பியைவைத்து அதைச் சுற்றிலும் உப் பைக்கொட்டி அதின் மேல் மணலால் மூடி வேறு சட்டியால் வாயை மூடி 7 சீலைமண் செய்து காலாக்கினியாய் 2 நாள் எரிக்க செந்தூரமாகும். அதில்குன்றிமணிஎடை அனுபானத்திலிட குன்மம் (8), சூலை (18), கைகால் இழுத்துக்கொள்ளல், ரணம் முதலிய மஹா கடோ ரோகங்கள் குணமாகும்.

டைச்சாற்றால் ஷை புடம் 5 போட்டு எடுக்க செந்தூரமாகும். அதில் 2 பணவிடை வீதம் அநுபானத்திலிட பாண்டு (5), பித்தம் (40), காமாலை (13), சிலேஷ்மம் (20), தேகவெளுப்பு குணமாகும்.

உருக்கு செந்தூரம்.

எட்டிக்கொட்டை இலைச்சாறும், வெள்ளாட்டு மூத்திரமும் சமமாகச் சேர்த்து அதில் எகுலை சிவக்கக்காய்ச்சி 21 தடவைத்தோய்க்க வெட்டை யாகும். அதை சூர்ணித்து ஷை சாற்றில் 10 நாள் ஊறவைத்து எடுக்க மெழுகுபோலிருக்கும். அதை ஷை சாற்றால் அரைத்து 20 வராக புடம் போட செந்தூரமாகும். அதின் குணம் சுவர்ண செந்தூரத்துக்கும் மேலான து. இதில் பணவிடை வீதம் அநுபானத்திலிட தேகம் பலக்கும்: நரைத்திரை மாறும்.

தாம்பிர செந்தூரம்.

பஸ்மம் அத்தியாயத்தில் சொல்லிய தாம்பிரபஸ்மத்தை பொற்றலைக் கரிப்பான் சாற்றால் அரைத்து புடம்போட செந்தூரமாகும். பஸ்மம் குண மாக்கும் ரோகங்களை செந்தூரமும் குணமாக்கும்.

சுயமக்கினி.

மனோசிலை பலம் 1, ரசம் பலம் 2, கந்தகம் பலம் 4, காந்தம் பலம் 8, அரப்பொடி பலம் 16, இவைகளைச் சுத்திசெய்து கற்றாழைச்சாற்றால் ஒரு நாள் அரைத்து பில்லை செய்து பீங்கானில் வைத்து சூரியபுடம்போட செந்தூரமாகும். அதில் குன்றிமணிஎடை இஞ்சிச்சாற்றில் கொடுக்க உள் மூலம், பித்தபாண்டு, கிரகணி, சோகை முதலியவைகள் தீரும்.

வீர செந்தூரம்.

(1) கந்தகமும், அயமும் சமமாகச் சேர்த்து எலுமிச்சம்பழச் சாற்றால் அரைத்து கட்டின வீரத்துக்குக் கவசமிட்டு அதின் மேல் உப்பை அரைத்து கவசமிட்டு உலர்த்தி ஒரு சட்டியில் 3 விரற்கடை மணலைக் கொட்டி அதின் மேல் ஷை வீரத்தை வைத்து மணலால் மூடி சமலாக்கினியாய் ஒரு ஜாமம் எரித்து எடுக்க செந்தூரமாகும். அதில் அரிசி எடை வீதம் அநுபானத்திலிட சன்னி (13), வாதம் (80), மேகம் (20), தோஷம் முதலிய சகல கரே ரோகங்களும் குணமாகும்

(2) ஒரு பலம் சுத்திசெய்த வீரத்தை பொடித்து உத்தாமணிச்சாற்றை 5 தடவை உடபுரம் தடவி உலர்த்தின 2 சட்டிகளில் ஒரு சட்டியில் போட்டுப் பறப்பி அதின்மேல் ஷை சாறுபூசின 2-வது சட்டியால் மூடி எழு சீலைமண் வலுவாய்ச்செய்து அடுப்பிலேற்றி தீபாக்கினியாய் நாலுஜாமம் எரித்து எடுத்துப்பார்க்கமேல் சட்டியில் பதங்கித்திருக்கிற வீரப்பதங்கத்தை எடுத்து முன்போலவே சட்டியில் பறப்பி சீலைமண்செய்து எரித்து எடுத்து பார்க்க மறுபடியும் பதங்கித்திருக்கிற வீரப்பதங்கத்தை 3-4 தடவை இவ்வி தமாகப் பதங்கிக்கவெடுக்க அதிறல்லிய சிவந்த நிறமுள்ள செந்தூரமாகும். அதில்ஒருஅரிசியிடை,வீதம் அநுபானத்திலிடசன்னி(13)கபரோகங்கள்(96),

மேகம் (20), சுவாசம் (5), காசம் (5), கண்டமாலை (18), முதலிய அநேகவித பயங்கரமான ரோகங்கள் நிவர்த்தியாகும்.

☞ வீரசுத்தி—நாகம், ரசம் இவ்விரண்டும் சமமாக கல்வத்திலிட்டு அதற்கு சமமாக கந்தகம், பொரிகாரம் சேர்த்து முலைப்பாலால் அரைத்து வீரத்துக்கு கவசமிட்டு ரவியில் உலர்த்தி அதின்மேல் உப்பும் சுண்ணும்பும் சேர்த்து எலுமிச்சம்பழச்சாற்றால் அரைத்து துணியில் தடவி சீலமண் செய்வதுபோல் இதினால் செய்து குக்குடப்புடம்போட வெகு நல்ல சுத்தியாகும்.

லிங்க சேந்தூரம்.

சுத்திசெய்த ஒரு உலாந்தா லிங்கக்கட்டிக்கு மரதாணி இலையை மைப்போலரைத்து 2 விரற்கனமாய்க் கவசமிட்டு ஒரு சிறு கலயத்தில் வைத்து ஓட்டால் மூடி எழு சீலைமண் செய்து கவுதாரிப்புடம் போட்டு எடுக்க செந்தூரமாகும். அதில் பணவிடை அனுபானத்திலிட வாதம் (80) சுரம் (64), சன்னி (13), தோஷம் முதலியவைகள் தீரும்.

ரச சேந்தூரம்.

ரசம் பலம் 1, கந்தகம் பலம் 1, இவைகளை சுத்திசெய்து கல்வத்திலிட்டு கருந்துளசி சாற்றால் 2 நாள் அரைத்து உலர்த்தி காசிக்குப்பியில் போட்டு வாய்மூடி எழு சீலமண் செய்து ஒரு பெரிய சட்டியில் ஆறு விரற்கடை மணல் போட்டு அதின்மேல் குப்பியை வைத்து மணலால் மூடி அடுப்பிலேற்றி, தீபாக்கினியாயும், கமலாக்கினியாயும், காடாக்கினியாயும் ஒவ்வொரு நாள் எரித்து ஆற்றி குப்பியை உடைத்துப் பார்க்க மாதுளம்பூ நிறம்போல் செந்தூரமாயிருக்கும். அதில் ஒரு குன்றிமணி எடை வீதம் அனுபானத்திலிட சன்னி (13), வாதம் (80), சுரம் (64), சூலை (18), முதலிய கரோ ரோகங்கள் குணமாகும்.

கல்லுப்பு சேந்தூரம்.

1. ஒரு சேர் கல்லுப்பை பொடுதலை, ஆகாசதாமரை, கையாந்தகரை, எலுமிச்சம்பழம் இவைகளின்சாற்றால் தனித்தனியே ஒருஜாமம் அரைத்து ஒவ்வொன்றிலும் ஒரு கவுதாரி புடம்போட்டு எடுத்து அரைவிராகனிடை வீதம் அனுபானத்திலிட அக்கினி மந்தம், அஜீர்ணம், பேதி வயிற்றுவலி, குன்மம், குணமாகும்.

2. ஒரு சேர் கல்லுப்பை துத்தியிலைச் சாற்றாலரைத்து 10 கவுதாரி புடம்போட்டு ½ (அரை) விராகனிடைவீதம் இஞ்சிச்சாற்றில் கொடுக்க சகல வாயு, குன்மம், அஜீரணம், உதரரோகம் குணமாகும்.

36 A-வது அத்தியாயம்.

அநேக யுனானி கிரந்தங்களைப் பார்வையிட்டு ஸ்திரிபோகத்தால் உண்டாகும் உஷ்ணத்தைத் தணிக்கவும், மேகஊறல் முதலான மேகரோகங்களைப் போக்கவும், தேகத்தில் ரத்தம் ஊறவும், கைகால் எரிவு முதலிய பலமான ரோகங்களை குணமாக்கும் மஹா வல்லமையுள்ள அநேக நல்ல ஷர்பத்துகளை இந்த அத்தியாயத்தில் சொல்லப்படும்.

மேகசூலாந்தக ஷர்பத்து.

நன்னாரிவேர் வீசை 1, பறங்கிப்பட்டை சேர் 2, இவைகள் பொடித்து இருநாழி ஜலத்தில் போட்டுக்காய்ச்சி ஒரு குருணியாக்கி வடித்த கசாயத்தில் இரண்டு வீசை சீனியைப்போட்டு தேனைப்போல் தடிப்பான பதத்தில் காய்ச்சி சீசாவில் போட்டு வைத்துக்கொண்டு தினம் ஒருபலம் அல்லது ஒரு அவுன்ஸ் வீதம் 2 தடவை சாப்பிட்டுவர மேக காங்கை, மேகஊறல், நீர்க்கட்டு, சூலைக்கட்டு, ஸ்திரிபோகத்தால் உண்டாகிற உஷ்ணம் குணமாகும். இத்துடன் ஐயோடைட் ஆப் போடாஸியம் கொஞ்சம் சேர்த்தாவது அல்லது வீரபத்திர சிந்தாமணி ½ (அரை) குன்றிமணியிடை சேர்த்தாவது சாப்பிட்டுவர சகல மேகங்களும் குணமாகும்.

கூழ்ப்பாண்ட ஷர்பத்து.

பெரும்பூசனிக்காய்ச்சாறு படி 20, வெள்ளை சுக்கை ஜலத்தால் அரைத்து எடுத்தச் சாறு படி 1 இவைகளைச் சேர்த்துக் காய்ச்சி 2 படியாக வற்றவைத்து அதில் சீனி வீசை 2 போட்டு தேன்பதத்தில் காய்ச்சி சீசாவில் போட்டு வைத்துக்கொண்டு தினம் 2 தடவை ஒரு அவுன்ஸ் வீதம் சாப்பிட்டுவர மேகம், பிரமியம், உஷ்ணம், கை கால் எரிவு, அஸ்திகாங்கை, அஸ்திவெட்டை, நீர் அடைப்பு தீரும்.

மாதுளம்பழ ஷர்பத்து.

மாதுளம் பழச்சாறு படி 1, சீனி சேர் 8, பன்னீர் சேர் 1, இவைகளைச் சேர்த்து தேன் பதத்தில் காய்ச்சி சீசாவில் போட்டு வைத்துக்கொண்டு சாப்பிட்டுவர பித்தம் (40) குணமாகும்.

இஞ்சி ஷர்பத்து.

இஞ்சிச்சாறு படி ½ (அரை), இரண்டு நாழிகை வைத்து தெளிவை எடுத்து அத்துடன் சீனி வீசை 1, சேர்த்து தேன் பதத்தில் காய்ச்சி சீசாவில் போட்டு வைத்துக்கொண்டு தினம் ½ (அரை) அவுன்ஸ் வீதம் ஜலத்தில் சாப்பிட்டுவர பசி உண்டாகும்.

திராக்ஷப்பழ ஷர்பத்து.

திராக்ஷப்பழச்சாறு படி 1, பன்னீர் சேர் ¼ (கால்), சீனுக்கற்கண்டு தூள் சேர் 8 இவைகளைச் சேர்த்து தேன் பதத்தில் காய்ச்சி சீசாவில் போட்டு வைத்துக்கொண்டு தினம் 2 தடவை ஒரு அவுன்ஸ் வீதம் சாப்பிட்டுவர பித்தகாங்கை, கை கால் எரிவு, முதலியவைகள் தீரும். ரத்த விருத்தியாகும்.

சந்தன ஷர்பத்து.

வாசனையுள்ள மலாக்கா சந்தனத்தூள் பலம் 40, காலுபடி ஜலத்தில் போட்டு ஒருநாள் ஊறவைத்துக் காய்ச்சி ஒரு படியாக்கி வடித்து அதில் கற்கண்டு தூள் சேர் 5, பன்னீர் சேர் 1, இவைகள் சேர்த்து தேன்பதத்தில் காய்ச்சி சீசாவில் போட்டுவைத்துக்கொண்டு தினம் 2 தடவை ½ (அரை) அவுன்ஸ் வீதம் ஜலத்தில் சாப்பிட பிரமேகங்கள் (21), மூலச்சூடு தீரும்.

நன்னாரி ஷர்பத்து.

ஒரு வீசை நொறுக்கின நன்னாரிவேரை, 2 தூணி ஜலத்தில் போட்டு எரித்து 2 படியாக்கி வடித்து 2 வீசை சீனியை சேர்த்து தேன்பதத்தில் காய்ச்சி சீசாவில் போட்டு வைத்துக்கொண்டு தினம் 2 தடவை ஒரு அவுன்ஸ் வீதம் ஜலத்தில் சாப்பிட்டுவர நீர்க்கட்டு, மேககாங்கை, பிரமேகம், மேகநீர், கை கால் எரிவு, ஸ்திரிபோகஉஷ்ணம் இவைகள் தீரும்.

37-வது அத்தியாயம்.

கட்டுகள்.

புஷ்பரசங்களாலும், பால்வகைகளாலும், மூலிகைகளாலும், ஜெய்நீர்களாலும், தயிலங்களாலும், சுருக்குக் கொடுத்துக் கெட்டியாக்கின பதார்த்தங்களுக்குக் கட்டுகள் என்று பெயர். அநேக கிரந்தங்களை சோதித்து நல்லமுறைகளாகவும் எளிதில் செய்யக்கூடியதுமான கட்டு வகைகளை எல்லாருக்கும் உபயோகமாகும்பொருட்டு இந்த அத்தியாயத்தில் சொல்லப்படும். அவைகளை வயதுக்குத் தக்கபடி அளவை நிதானித்து உரைத்து அநுபானங்களில் சாப்பிட்டு வருகின்றவர்களின் தீராத ரோகங்கள், அதாவது வாதபித்த சிலேஷ்மநீர்களால் பலத்தை அடைந்து கட்டுகளைப்போல் உருதியாய் நிலைபெற்ற ரோகங்கள் எல்லாம் அதிசீக்கிரத்தில் குணமாகுமென்பதற்குச் சந்தேகமில்லை.

தாளகக்கட்டு.

(1) சுத்திசெய்த ஒரு பலம் தாளகத்துக்கு சிவகரந்தை சாறு, கரிப்பான் சாறு வகைக்குப்படி 1, சுருக்குக்கொடுத்து உலர்த்தி, கறி உப்பை

வெடிப்பு அடங்க வறுத்து எலுமிச்சம் பழச்சாற்றால் அரைத்து மூன்று புடம்போட்ட 15 விராகனிடை கறிஉப்பை சிறுநீர்விட்டு அரைத்து தாளகத்துக்கு கவசமிட்டு உலர்த்தி எழு சீலைமண்செய்து 15 எருவில் புடம் போட கட்டும். இதை அனுபானத்திலிட ஈளை, காசம், உளைமாந்தம், சுரம் முதலிய கரே ரோகங்கள் தீரும்.

(2) வெங்காரம், எவக்ஷாரம், வகைக்குப்பலம் 2, சீனகாரம், வெடியுப்பு வகைக்கு பலம் 4, இவைகளைசேர்த்து அதில் 9 விரா. ஒரு இரும்பு வாணலில் போட்டு எரிக்க உருகி பொங்கும்போது அதில் சுத்திசெய்த ஒரு பலம் தாளகக்கட்டியை போட்டு துளாவி, எடுத்து பாக்கி விரா. 3 அரைத்து அதற்கு கவசமிட்டு உலர்த்தி கல்சுண்ணும்பு நீறும், பூ நீறும், சேர்த்து அரைத்து துணியில்தடவி அதற்கு எழு சீலைமண் செய்வது போல் செய்து காடை புடம் போட்டு எடுத்து அனுபானத்திலிட குளிர் சுரம், காசம், ஈளை முதலிய பற்பல கொடிய ரோகங்கள் தீரும்.

லிங்கக்கட்டு.

(1) ஒரு பலம் லிங்கத்தை ஒரு சட்டியில் போட்டு எரிக்கையில் கொக்குமந்தாரைப்பூச்சாற்றால் 4 சாமம் சுருக்குக்கொடுத்து எடுத்து ஷை பூவை அரைத்து அதற்கு கவசமிட்டு 4 படி மாக்கரியை கொட்டி அதின் மேல் லிங்கத்தை வைத்து அதின்மேல் 8 படி கரியை போட்டு தீயாக்கி, ஆற்றி எடுத்து குன்றிமணியிடை அனுபானத்திலிட சகலவித நாள்பட்ட ரோகங்களும் தீரும்.

(2) 8 பலம் லிங்கத்தை ஒரு சட்டியில் போட்டு எலுமிச்சம்பழச்சாறு, முலைப்பால், தைவேளைச்சாறு, வெடியுப்பு ஜெயநீர் இவைகளால் வகைக்கு ஒரு சாமம் சுருக்குக்கொடுத்து எடுத்து 8 விராகனிடை தங்க ரேக்கைச்சுற்றி, பிறகு வெடியுப்பு, நவக்ஷாரம், சீனகாரம், வெங்காரம் வகைக்குப்பலம் 8, வெண்கருவாலாட்டி கவசமிட்டு உலர்த்தி குகையில் வைத்து ஒட்டால் மூடி எழு சீலைமண் செய்து உலர்த்தி, 3 கூடை உமியைக்கொட்டி அதின்மத்தியில் இதைவைத்து தீப்போட்டு எரித்து ஆற்றி எடுக்க உருகி மணியாகிருக்கும். குன்றிமணியிடை அனுபானத்திலிட சகல தீராத ரோகங்கள் தீரும்.

(3) ஒருபலம் லிங்கத்தை கல்வத்திலிட்டு சிவகரந்தைச் சாற்றால் ஒரு சாமம் அரைத்து பில்லைதட்டி உலர்த்தி கத்தை கிளிஞ்சிலில் வைத்து மூடி, கற்சுண்ணும்பை ஜலமிட்டு அரைத்து அதற்கு கவசமிட்டு பிறகு துணியில் தடவி சீலைமண் செய்வதுபோல் செய்து அதின் மேலும் கவசமிட்டு உலர்த்தி குக்குடபுடம் போட்டெடுத்து பார்க்க பில்லை அப்படியே இருக்கும். குன்றிமணியிடை அனுபானத்திலிட சகல கொடியரோகங்களும் தீரும்.

(4) லிங்கத்தை சட்டியிலிட்டு சிவக்காந்தைச் சாறு, செவ்வெளநீர் ஜலம், கோவைச்சாறு, அறுகம்புல்லுச்சாறு, வேப்பம் பழச்சாறு இவைகளில் எதிலாகிலும் சுருக்குக் கொடுக்கக் கட்டும். குன்றிமணியிடை சகல பலமான ரோகங்களுக்கும் கொடுக்கலாம்.

(5) நந்தைசூரி இலையை அரைத்து லிங்கத்துக்கு கவசமிட்டு, சீலை மண் செய்து, மேல் உலர்ந்தவுடனே குக்குடப் புடம் போட்டு எடுக்க வைத்தபடியே இருக்கும். குன்றிமணியிடை அநுபானத்திலிட சன்னி, வாயு முதலிய சகல கரோ ரோகங்களும் தீரும்.

வீரக்கட்டு.

ரசம், நாகம் வகைக்கு பலம் 5 சேர்த்து அரைத்து பிறகு பொரிகாரம், கந்தகம் வகைக்கு பலம் 5 சேர்த்து முலைப்பாலால் ஆட்டி வீரத்துக்கு கவசஞ்செய்து ரவியிலுலர்த்தி அதின் மேல் கற்சுண்ணாம்பும் உப்பும் சேர்த்து எலுமிச்சம் பழச்சாற்றால் அரைத்து துணியில் தடவி சீலைமண் செய்வதுபோல செய்து குக்குட புடம் போடக்கட்டும். இவ்விதமாகவே லிங்கத்தையும் கட்டலாம். இந்தக்கட்டின் வீரத்தை ½ (வ) முதல் ஒரு நெல்லிடை வரையில் தேனில் உரைத்து அநுபானத்துடன் கொடுக்க மேகம் (20), சுவாசம் (5), காசம் (5), சிலேஷ்மம் (20), வாதம் (80), கண்டமாலை (18), சன்னி (13) முதலிய கரோரோகங்கள் தீரும்.

ஷ வீரத்தை இளநீரால் சுத்திசெய்து பிறகு முளக்கீரை இலையை அரைத்து அதற்குள் வைத்து 1, 2, எருவில் வெகு சிறுபுடம் போட்டு எடுக்க பூர்த்தியாய் சுத்தியாகும். அதை எடுத்து, மிளகரணை இலையை அரைத்து அதற்குள் வைத்து 4, 5, எருவில் புடம்போட்டு எடுத்து பார்க்க செந்தூரமாகி யிருக்கும் அதை எடுத்து சீசாவில் போட்டு வைத்துக்கொண்டு 1, 2, அரிசி இடை அநுபானத்தில் கொடுக்க மேகம் (20), குஷ்டம் (18), கிரந்தி (9), சுவாசம் (5), காசம் (5), சன்னி (13), கபரோகங்கள் (96) முதலியவைகள் குணமாகும். இது கைகண்ட மருந்து.

ரசகர்ப்பூரக்கட்டு.

(1) ரசகர்ப்பூரம் விராகனிடை 5 ஒரு வாணலியிலிட்டு எரித்து நாட்டுக்காட்டாமணக்கு பால் படி ½ (அரை) அதற்கு சுருக்குக் கொடுக்க உருகிக்கட்டும். வாய் பிடிக்காது. அநுபானத்தில் ஒரு பணவிடை கொடுக்க வாதம் (80), சுரம் (64), சூலை (18), மேகம் (20), முதலிய பற்பல பலமான ரோகங்கள் தீரும்.

(2) வெடியுப்பு பலம் ½ (அரை), சீனக்காரம் பலம் ½ (அரை) இவைகளைப்பொடித்து ஒரு சிறு வாணலில் கொஞ்சம் பொடி போட்டு அதின் மேல் ரசகர்ப்பூரம் விராகனிடை 2 வைத்து அதின் பேரில் திரி

கடி பொடியை போட்டு சிறு தீயிட்டு எரித்து ஒரு மூங்கிக் குச்சியால் அந்த மருந்தை பிரட்டிக்கொண்டே பொடியை கொஞ்சம் கொஞ்சமாக விடவும். இப்படி செய்வதில் ரசகர்ப்பூரம் உருகிக் கட்டியாயிருக்கும். ஒரு பணவிடை அனுபானத்திலிட வாயு, மேகம் (20), குஷ்டம் (18), வாதம் (80), முதலிய தீராத ரோகங்களும் குணமாகும்.

(3) ஒரு பலம் ரசகர்ப்பூரத்தை கொக்கு மந்தாரைப் பூச்சாற்றால் 1 சாமம் கருக்குக் கொடுத்து பின்பு ஷை பூவை அரைத்து அதற்கு கவசமிட்டு ஒரு கூடை உமிக்குள் வைத்து தீயிட்டெரித்து ஆறின பிறகு எடுத்து ஒரு பணவிடை கொடுக்க சகல கடோ ரோகங்கள் தீரும். இவ் விதமாக லிங்கத்தையும் கட்டிக்கொள்ளலாம்.

பாஷாணக்கட்டு.

ஒரு பலம் வெள்ளைப் பாஷாணத்தை ஒரு வாணலியில் போட்டு எரித்து ஒரு மூங்கிக் குச்சிக்கு சிறு துணியை கட்டி, கொக்கு மந்தாரைப் பூச்சாற்றில் தோய்த்து ஷை பாஷாணத்துக்கு 4 சாமம் சுருக்கு கொடுத்து எடுத்து ஷை பூவை அரைத்து அதற்கு கவசமிட்டு 2 கூடை உமிக்குள் வைத்து தீயிட்டு எரித்து ஆறினபிறகு எடுத்து அரிசி இடை அனுபானத்தில் உரைத்துக்கொடுக்க சுரம் (64), சன்னி (13), தோஷம் முதலிய கடோ ரோகங்கள் குணமாகும்.

37 A-வது அத்தியாயம்.

மாத்திரைகள்.

சச்சிதானந்த சோரூபராகிய சகலபுவன கர்த்தாவானவர் பயங்கரமான ரோகங்களை அதி சீக்கிரத்தில் குணமாக்கும் பொருட்டு அனுக்கிரகஞ் செய்திருக்கின்ற அவுஷதங்களில் மஹா சிரேஷ்டமானதும், எளிதில் செய்யக்கூடியதுமான மாத்திரைகள் சர்வஜன உபகாரமாக இந்த அத்தியாயத்தில் சொல்லப்படும்.

அஜீர்ண கண்டக ரச மாத்திரை.

சுத்திசெய்த ரசம். சுத்திசெய்த வச்சநாவி, சுத்திசெய்த கந்தகம் வகைக்கு பலம் 1, மிளகு பலம் 3 இவைகளை கல்வத்திலிட்டு கண்டங்கத்திரிபழச்சாற்றால் அரைத்து உலர்த்தவும். இவ்விதமாக ஷை சாற்றால் 21 தடவை அரைத்து உலர்த்தி 3 குன்றிமணி அளவாக மாத்திரைகளாக்கி ஒருமாத்திரை வீதம் கொடுத்துவர அஜீர்ண ரோகங்கள் (6), பேதி இவைகள் அதிசீக்கிரத்தில் குணமாகும்.

பிரமானந்த பயிரவ மாத்திரை.

மனோசிலை, கல்நார், தாளகம், பூரம், வகைக்கு விரா. 5, சுத்திசெய்து அத்துடன் அக்கிராகாரம் விரா. 5, சேர்த்து கல்வத்திலிட்டுக் கொடிக்கள்ளிப்பாலால் 3 ஜாமம் அரைத்துஉலர்த்தி ஒரு குகையில் போட்டு மூடி 9 சீலைமண் செய்து குக்குடப்புடம் போட்டு எடுத்து, பசும்பால், கொடிகள்ளிப்பால், எலுமிச்சம்பழச்சாறு, கற்றாழைச்சாறு, கரிப்பான் சாறு இவைகளில் முறையே ஒவ்வொரு ஜாமம் அரைத்து குன்றிமணி அளவாக மாத்திரைகளாக்கி ஒரு மாத்திரை வீதம் சர்க்கரையில் தினம் காலை மாலை ஒரு மண்டலம் கொடுக்க மூல மூளை அற்றுபோகும். மூல ரோகம் (9) குணமாகும்.

திரிலோக ரக்ஷாமணி மாத்திரை.

லிங்கம், தாளகம், மனோசிலை, வெங்காரம், கருநாவி, வகைக்கு பலம் 2 சுத்திசெய்து, அத்துடன் சுக்கு, மிளகு, திப்பிலி, வகைக்குப் பலம் 2 சேர்த்து கல்வத்திலிட்டு இஞ்சிச்சாற்றால் 4 ஜாமமரைத்து குன்றிமணி அளவாக மாத்திரைகளாக்கி உலர்த்தி தினம் 2 தடவை ஒரு மாத்திரை வீதம் சித்தரத்தைச்சாறு, இஞ்சிச்சாறு, முலைப்பால், இவைகளில் எதிலாகிலும் கொடுக்க க்ஷயம், (4), சுவாசம் (5), காசம், (5), ஈளை, மந்தார காசம், சுரம் (94) முதலிய கரேரோகங்கள் குணமாகும்.

காலமேக ராஜாங்க மாத்திரை.

ரசம், அரிதாரம், மனோசிலை, இவைகள் வகைக்குப் பலம் 2 சுத்திசெய்து அத்துடன் தேற்றாவிதை, வெள்ளைகுங்கிலியம், விளாம்பிசின், வகைக்கு பலம் 2 சேர்த்து சூர்ணித்து ஒரு துணியில் போட்டு முடிந்து பச்சரிசிக்கழுநீரில் 3 நாள் ஊறவைத்து எடுத்து கல்வத்தில் போட்டு காடியைவிட்டு ஒரு ஜாமமரைத்து உளுந்து அளவாக மாத்திரைகளாக்கி தினம் 1, 2, மாத்திரை காலை மாலை மோரிலாவது தேனிலாவது 49 நாள் கொடுக்க மேகம் (20) ம், நீர்முள்ளிவிதை, முள்ளிவிதை, முதலிய அநுபானத்திலிட பிரமேகம் (21) ம், மேக ஊறல், மேகத்தடிப்பு, மேககாங்கை, மேகரணம், முதலிய மேக சம்பந்தமான சகல ரோகங்களும் குணமாகும்.

மேககுலாந்தக மாத்திரை.

சுத்திசெய்த அப்பிரேகப்பொடி பலம் 3, சுத்திசெய்த காரீயம், சுத்திசெய்த வெள்ளீயம் வகைக்கு பலம் 1 இவைகளைச் சேர்த்து உருக்கி எடுத்து, அதற்கு ¼ (வ) பங்கு சுத்திசெய்த ரசமும், ரசத்துக்கு இரட்டிப்பு கந்தகமும் சேர்த்து தைவேளைச்சாற்றால் ஒரு ஜாமம் அரைத்து உலர்த்தி காசிகுப்பியில் போட்டு வாய்மூடி 9 சீலைமண் செய்து ஒரு சட்டி

யில் 3 விரற்கடை மணலைக்கொட்டி அதின் மேல் குப்பியைவைத்து, பிறகு மணலால்மூடி ஒரு ஜாமம் கமலாக்கினியாய் எரித்து எடுத்து அதற்கு சமமாய் கந்தகத்தைச்சேர்த்து கரிசாலைச்சாற்றால் ஒரு ஜாமம் அரைத்து வில்லைத்தட்டி வராக புடம்போட்டு சிவக்காவிட்டால் அதை சிவப்பாகிறவரையில் கந்தகத்தைச் சேர்த்து ஷை சாற்றாலரைத்து ஷை புடம் போடவும். சிவந்த பிறகு அதற்கு பாதியிடை கட்டின லிங்கத்தைச் சேர்த்து முலைப்பாலால் அரைத்து சிறுப்பயிறு அளவாக மாத்திரைகளாக்கி ஒரு மாத்திரை விதம் தினம் 2 தடவைக்கொடுக்க பிரமேகம் (21), நீரிழிவு, பிரமியம் (20), மேக ஊறல், மேகம் (20) குணமாகும்.

☞ அடியில் கண்ட மருந்துகளின் முறைகளை ஸ்திரீஜென்ம சார்த்தக மென்னும் மருந்துவ சாஸ்திரத்தில் காண்க.

1. கலிங்காதி எண்ணெய்.
2. கர்ப்பரோகநாசகிருதம்.
3. பாலாமடக்குத்தைலம்.
4. மகாகலிங்காதி எண்ணெய்.
5. கட்டுவாதிச் சூர்ணம்.
6. பூவந்திப்பட்டை எண்ணெய்.
7. மயனத்தைலம்.
8. கேஸரன்ஜகத்தைலம்.
9. சுரஹரி கஷாயம்.
10. அர்த்தாங்கிசுவர மாத்திரை.
11. பாதரசத்தைலம்.
12. மெருகுள்ளித்தைலம்.
13. துஷ்டவர்க்கச்சுடர் தைலம்.
14. வாதஹரி எண்ணெய்.
15. சடாக்ஷரசெந்தூரம்.
16. நீலகண்டசுடர்த்தைலம்.
17. நவபாஷாணத்தைலம்.
18. மகாமுசுறுமுட்டை எண்ணெய்.
19. ஜன்னி நிவர்த்தனி.
20. பூவரசம்பட்டை மருந்து.
21. கௌரிசங்கரத்தைலம்.
22. பஞ்சரசமெழுகு.
23. தந்தரோகஹரி.
24. தேத்தான்கொட்டைலேகியம்.
25. பூவரசங்காய் எண்ணெய்.
26. மகாபூவரசங்காய் எண்ணெய்.
27. பவானிஅம்மன்குங்குமக்களிப்பு
28. முசுறுமுட்டை எண்ணெய்.

திரிலோகசூடாமணி மாத்திரை.

சுத்திசெய்த கௌவுரிப்பாஷாணம், சுத்திசெய்த ரசகர்ப்பூரம், சுத்திசெய்த கஞ்சா, கோரைக்கிழங்கு, வெடியுப்பு, கர்க்கடகசிங்கி, அதிமதூரம், அக்கிரகாரம் இவைகள் வகைக்கு 7 விராகனிடை சேர்த்து எலுமிச்சம்பழச்சாற்றால் ஒரு ஜாமமும், இஞ்சிச்சாற்றால் 4 ஜாமமும், முலைப்பாலால் 2 ஜாமமும், அரைத்து சிறுப்பயிறு அளவாக மாத்திரைகளாக்கி உலர்த்தி ½ (அரை) முதல் 1 மாத்திரை தேனிலிட ஜன்னி (13), விஷஜன்னி, தோஷம், வாதம் (80) முதலிய சகல கடூர ரோகங்கள் தீரும்.

ராஜ கஜகேஸரி மாத்திரை.

சுத்திசெய்த கந்தகம் பலம் 2, சுத்திசெய்த ரசம் பலம் 1 இவ்விரண்டும் கல்வத்திலிட்டு ஒரு ஜாமம் அரைத்து, 5 பலம் சுத்திசெய்த தாம்பிரத்தால் குடுக்கைசெய்து அதில் நிறப்பி, குடுக்கின் வாயை தாம்பிரத்தால் மூடி ; 1 கலயத்தில் பாதிக்கு உப்பைகொட்டி, அதின்மேல் இந்த குடுக்கையை வைத்து அதில் உப்பை நிறையபோட்டு மேல் கலயம் மூடி ஏழு சீலைமண் வலுவாய் செய்து கஜபுடம் போட்டு எடுத்து சூர்ணித்து வெற்றிலை சாற்றால் அரைத்து மாத்திரைகளாக்கி 1—2 குன்றிமணி எடை வீதம் கொடுத்து, உடனே சுக்கு, காயம், மிளகு, திப்பிலி, வசம்பு இவைகளின் சூர்ணத்தில் 1 விரா. எடுத்து ஜலத்தில் கரைத்துக்கொடுக்க மஹா உபத்திரவத்தை தருகின்ற சகல சூலைரோகங்கள் அதிசீக்கிரத்தில் குணமாகும்.

சந்திரோதய மாத்திரை.

சுத்திசெய்த வெள்ளைப்பாஷாணம், சுத்திசெய்த ரசம், வகைக்கு பலம் 1, கல்வத்திலிட்டு கொடிவேலிவேர் கஷாயத்தால் 5 ஜாமம் அரைத்து பில்லைத்தட்டி உலர்த்தி வச்சிரக் குகையில் போட்டு வாய்மூடி 9 சீலைமண் செய்து உலர்ந்த தரையில் ஒரு குழியாக்கி அதில் பாதி மணலை போட்டு குகையை வைத்து மணலால் குழியைமூடி அதின்மேல் வராக புடம்போட்டு எடுத்து, அத்துடன் கால்பங்கு சுத்தி செய்த கருநாவியும் சுக்கு, மிளகு, திப்பிலி, வகைக்கு 2 பலமும் சேர்த்து நொருஞ்சி, சின்னியிலை, முள்ளியிலை, இவைகளின் சாற்றால் தனித்தனியே ஒரு ஜாமம் அரைத்து சிறுப்பயிறு அளவாக மாத்திரைகளாக்கி நிழலில் உலர்த்தி ஒரு மாத்திரை அனுபானத்திலிட சந்நிபாதசுரம் (13), விஷசுரம், தோஷம், வாதம் (80) முதலிய கடூரரோகங்கள் குணமாகும்.

அர்த்தநாரிஸ்வரன் மாத்திரை.

சுத்திசெய்த தாளகம், சுத்திசெய்த நேர்வாளப்பருப்பு, காவிக்கல், இவைகள் வகைக்கு விராகனிடை 10 சேர்த்து கல்வத்திலிட்டு, கவுத்தும்பை, நல்லத்தும்பை, பெருந்தும்பை இவைகளின் சாற்றால் வகைக்கு ஒரு ஜாமம் அரைத்து குன்றிமணி அளவாக மாத்திரைகளாக்கி ஒரு மாத்திரை குளிர்சுரத்துக்கு மோரை முறித்தத் தண்ணீரிலும்; அதிசாரசுரத்துக்கு சுக்குக்கசாயத்திலும், பழயசுரத்துக்கு பேயப்புடலும், சுக்கும் சேர்த்தக் கசாயத்திலும்; சிலேஷ்ம சுரத்துக்கும் இருமலுக்கும் தேன் கலந்த திப்பிலித்தூளிலும்; தாபசுரத்துக்கு வில்வவேரும் சுக்கும் சேர்ந்தக் கசாயத்திலும்; அஸ்திசுரத்துக்கு பசும் நெய்யிலும்; வாதசுரத்துக்கு வாதமடக்கி கசாயத்திலும்; கொடுக்க குணமாகும். பத்தியம்—

புளி, உப்பு, தள்ளவும். பேதி அதிகமானால் மா, ஆல், இலுப்பை இலைகளின் கொழுந்தை ஜலத்திலிட்டுக் காய்ச்சிக்கொடுக்க பேதியை நிற்கும்.

பயிரவவடி மாத்திரை.

சாதிப்பத்திரி, சன்ன லவங்கப்பட்டை, அக்கிராகாரம், திப்பிலி, கிராம்பு, சுக்கு, கட்டின லிங்கம், சுத்திசெய்த கருநாவி, இவைகளை சமமாக சேர்த்து கல்வத்திலிட்டு வெற்றிலைச்சாறு, இஞ்சிச்சாறு, இவைகளால் வகைக்கு ஒருஜாமம் அரைத்து குன்றிமணி அளவாக மாத்திரைகளாக்கி ஒரு மாத்திரை வீதம் அனுபானத்திலிட இருமல், வாயு, அதிசாரம், குன்மம் முதலியவைகள் குணமாகும்.

இராஜ சங்குவடி மாத்திரை.

திருகக்கள்ளி, எருக்கம், புளி, நாயுருவி, வாழை, ஆமணக்கு, புரசன் இவைகளின் சமூலத்தை தனித்தனியே உலர்த்தி எரித்து சாம்பலாக்கி ஜலத்தில் கரைத்து வடித்து எரிக்க உப்பைக்கட்டும். அந்த உப்புகள் வகைக்குப் பலம் 4, கல்லுப்பு, இந்துப்பு, செவுட்டுப்பு, வளயலுப்பு, வெடியுப்பு, வகைக்கு பலம் 4, எவக்ஷாரம், வெங்காரம், சத்திக்ஷாரம், சவுக்காரம், வகைக்கு பலம் 1¼ (ஒன்ணேகால்) இவைகளை, 4 பலம் வெள்ளை சங்குத்துண்டுகளை நெருப்பில் காய்ச்சி 8 சேர் எலுமிச்சம்பழச் சாற்றில் தோய்த்து இவ்விதமாய் சங்கத்துண்டுகள் பஸ்மமாகிக் கரைந்துவிடும் வரையில் காய்ச்சி தோய்த்து, அதில் மேலுப்புகளை எல்லாம் சேர்த்து அத்துடன் சுக்கு பலம் 12, மிளகு பலம் 8, திப்பிலி பலம் 4, வறுத்த பெருங்காயம், கண்டதிப்பிலி, சித்திரமூலம், ஓமம், சீரகம், சாதிக்காய், கிராம்பு, வகைக்கு பலம் 2, ரசம், கந்தகம், கருநாவி, வெங்காரம், மனோசிலை, வகைக்கு பலம் 1, இவைகளில் சுத்திசெய்ய வேண்டியவைகளைச் சுத்திசெய்து சூர்ணித்துச்சேர்த்து அரைத்து பிறகு புளியாரைச் சாறு சேர் 2, விட்டு அரைத்து உளுந்து அளவாக மாத்திரைகளாக்கி தினம் 2 தடவை ஒரு மாத்திரை வீதம் கொடுக்க அஜீர்ணம், குன்மம், அக்கினிமந்தம், மகோதரம், உதரரோகங்கள் குணமாகும்.

மஹாகாலாக்கினி மாத்திரை.

ரசபஸ்மம் (Calomel), சுத்திசெய்த வெங்காரம், சுத்திசெய்த மனோசிலை, சுத்திசெய்த அரிதாரம், சுத்திசெய்த நேர்வாளப்பருப்பு, பெருங்காயம், கடுகு, இந்துப்பு, திப்பிலி, கருஞ்சீரகம், வகைக்கு விராகனிடை 9 சேர்த்து கல்வத்தில் போட்டு எலுமிச்சம்பழச்சாற்றால் 2 ஜாமமரைத்து மிளகு அளவாக மாத்திரைகளாக்கி ஒருமாத்திரை வீதம் அடியில் கண்ட அனுபானத்தில் கொடுக்க ரோகங்கள் நிவர்த்தியாகும்.

அடியில் கண்ட அனுபானத்தில் ஒரு மாத்திரைக் கொடுக்கவும்.	மாத்திரைச் சாப்பிடுவதால் நிவர்த்தியாகும் ரோகங்கள்.
சுக்கு கஷாயம்	சுரம் (64).
சுக்கு மிளகு கஷாயம்	குளிர் சுரம்.
வெள்ளைவெங்காயச்சாறு	பாண்டு(5), மகோதரம், சோபை(5), வீக்கம்.
இஞ்சிச்சாறு	சன்னி (13).
கடுக்காய் கஷாயம்	இருமல்.
எருமை நெய்	ரத்தமூலம்.

பாணு பிரகாச மாத்திரை.

ரசபஸ்மம், ரசசெந்தூரம், வெங்காரம், லிங்கம், சுக்கு, கடுகுரோகணி, குரோசாணி ஓமம், கோஷ்டம் வகைக்கு பலம் 1, நேர்வாளப்பருப்பு பலம் 16 இவைகளை சுத்திசெய்து கல்வத்திலிட்டு விளாம்பிசின் ஜலத்தால் அரைத்து குன்றிமணி அளவாக மாத்திரைகளாக்கி 1–2 மாத்திரைக் கொடுக்க வாத, பித்த, சிலேஷ்மரோகங்களை கண்டித்து செவ்வையாய் பேதியாகும். பேதி அதிகமானால் புளித்தமோரும் அன்னமும் சாப்பிடவும். அன்றியும் சுரம் (64), சன்னி (13), வாதம் (80), பித்தம் (40), கபசம்பந்தமான ரோகங்கள் முதலிய அநேக கரரோகங்களுக்கு குறைந்த அளவில் கொடுக்க ரோகங்கள் குணமாகும்.

பயிரவ மாத்திரை.

கருநாவி, லிங்கம், அரிதாரம், ரசகர்ப்பூரம், கந்தகம், நேர்வாளப்பருப்பு, இவைகளை சுத்திசெய்து வகைக்கு விராகனிடை 9 சேர்த்து கல்வத்திலிட்டு சூர்ணித்து அத்துடன் ரசபஸ்மம், ரசசெந்தூரம், சுக்கு, மிளகு, திப்பிலி, கடுக்காய், தானிக்காய், நெல்லிமுள்ளி, கிராம்பு, ஏலம், சாதிப்பத்திரி வகைக்கு பலம் 1, சேர்த்து முலைப்பாலால் 2 ஜாமமும், வேப்பங்கொட்டை, கற்றாழை, கொன்றைப்பூ, இவைகளின் சாற்றால் முறையே 3 ஜாமம் அரைத்து உளுந்து அளவாக மாத்திரைகளாக்கி ஒரு மாத்திரை முலைப்பாலிலாவது, தேனிலாவது கொடுக்க சந்நிபாத

சுரம் (13), சுரம் (64), தோஷம், வாதம் (80), பித்தம் (30), சிலேஷ்மம் (20) முதலிய அநேக பலமான ரோகங்கள் குணமாகும்.

சூர்யாவர்த்தனமாத்திரை.

சுத்திசெய்த ரசம் பலம் 1, சுத்திசெய்த கந்தகம் பலம் ½ (அரை) இவ்விரண்டும் கற்றாழைச்சாற்றால் 1 ஜாமம் அரைத்து 1½ (ஒன்னரை) பலம் சுத்திசெய்த தாம்பிரத்தகடுகளுக்கு கவசமிட்டு ஓட்டில் வைத்து மேல் ஓட்டால் மூடி சீலமண் வலுவாகசெய்து காடாக்கினியாய் 1 நாள் எரித்து எடுத்து சூர்ணித்து அத்துடன் சுக்குத்தூளும் பெருங்காயமும் வகைக்கு விரா. 2 சேர்த்து மாத்திரைகளாக்கி 2 குன்றிமணிஎடை கொடுக்க சுவாசம் (5) குணமாகும்.

ஆனந்த பயிரவ மாத்திரை.

மனோசிலை, ரசம், கந்தகம், கருநாவி, லிங்கம், வெங்காரம், வகைக்கு பலம் 1, சுத்திசெய்து கல்வத்திலிட்டு எலுமிச்சம்பழச்சாற்றால் ஒருஜாமம் அரைத்து உளுந்து அளவாக மாத்திரைகளாக்கி ஒரு மாத்திரை முலைப்பாலில் கொடுக்க சந்நிபாதசுரம் (13), சுரம் (64), வாதம் (80), கபரோகங்கள், முதலிய பலமான ரோகங்கள் குணமாகும்.

சுரபூபதி மாத்திரை.

மனோசிலை, தாளகம், லிங்கம், வகைக்கு விரா. 2, சுத்திசெய்து கறிக்காளை, அல்லது காட்டுக்கறிணைக்கிழங்கை நோண்டி அதில் வைத்து மூடி சீலமண் செய்து உலர்த்தி 2 படி உமிக்குள் வைத்து புடம்போட்டு எடுத்து வேலிப்பருத்திச்சாற்றால் 8 ஜாமம் அரைத்து சிறு பயிறு அளவாக மாத்திரைகளாக்கி ஒரு மாத்திரைவீதம் கொடுத்துவர சுரம் (64), வாதம் (80), கபரோகங்கள் குணமாகும். பத்தியம்—புளி, உப்பு, தள்ளவும்.

அஜாஷ்டக மாத்திரை.

சீரகம், மிளகு, சுக்கு, திப்பிலி, வெள்ளைப்பூண்டு, பெருங்காயம், இந்துப்பு, சுத்திசெய்த கந்தகம் வகைக்குப் பலம் 2 கல்வத்திலிட்டு எலுமிச்சம்பழச்சாற்றால் 4 ஜாமம் அரைத்து சுண்டக்காய் அளவாக மாத்திரைகளாக்கி தினம் 2 தடவை ஒரு மாத்திரை விதம் சாப்பிட்டுவர அக்கினிமந்தம், பித்தவாயு, சூதகவாயு உஷ்ணவாயு, கிரகணி, குன்மம், உதரரோகம், வாந்திபேதி குணமாகும்.

ஹிங்காஷ்டக மாத்திரை.

பெருங்காயம், இந்துப்பு, திப்பிலி, வகைக்கு பலம் 5, ஓமம், சீரகம், வகைக்கு பலம் 2, கருஞ்சீரகம் பலம் 6, மிளகு பலம் 9, சுக்கு பலம் 7 இவைகளை உலர்த்தி சூர்ணித்து எலுமிச்சம்பழச்சாற்றால் ஒரு ஜாமம் அரைத்து சுண்டக்காய் அளவாக மாத்திரைகளாக்கி தினம் காலையில் ஒரு மாத்திரை விதம் சாப்பிட்டுவர அக்கினிமந்தம், குன்மம், வாயு, பித்தம், கிரகணி குணமாகும்.

போஜனகுடாரி மாத்திரை.

சுக்கு, பெருங்காயம், வகைக்கு பலம் 1, இஞ்சி, இந்துப்பு வகைக்கு பலம் 2, சீரகம், மிளகு வகைக்கு பலம் 3, இவைகளை எலுமிச்சம்பழச் சாற்றால் 2 ஜாமம் அரைத்து சுண்டக்காய் அளவாக மாத்திரைகளாக்கி தினம் காலையில் ஒரு மாத்திரை சாப்பிட்டுவர அக்கினிமந்தம், குன்மம், வயிற்றுவலி, வாயு, பித்தவாயு, சூதகவாயு, கிரகணி முதலியவைகள் குணமாகும்.

லிம்பாஷ்டக மாத்திரை.

வேப்பம்பூ விரா. 10, பெருங்காயம் விரா. 1, மிளகு, சுக்கு, கொத்தமல்லிவிதை, கறியப்பிலை வகைக்கு விரா. 2, இந்துப்பு விரா. 2½ (இரண்டரை), போனவருஷத்திய புளி விரா. 4 இவைகளில் வேப்பம்பூவை நெய்யால் வறுத்து சூர்ணித்து பிறகு எல்லாம் ஒன்றாக்கி தேவையான ஜலத்தை விட்டு மைபோல் அரைத்து கழற்சிக்காய் அளவாக மாத்திரைகளாக்கி தினம் 2 தடவை ஒரு மாத்திரை வீதம் சாப்பிட்டுவர, பித்தம், வாயு, அரோசிகம், அஜீர்ணம், மலபந்தம் குணமாகும்.

சுவர்ணமணி மாத்திரை.

8 படி ஜலத்தில் புரசன் பிசின், சாதிக்காய், சிறுப்பூளைக்காலி விதை, சாலாமிசிரி, நிலக்கடம்பு, நீர்முள்ளிவிதை, கோஷ்டம், அமுக்கிராக்கிழங்கு, வாதுமைப்பருப்பு வகைக்கு பலம் 3 சூர்ணித்துப்போட்டு காய்ச்சி 2 படியாக்கி, அதை மறுபடியும் எரித்து இளகியபதத்தில் இறக்கி கல்வத்திலிட்டு முத்து, அப்பிரகசெந்தூரம், ரஜதபஸ்மம், பவளபஸ்மம், மண்டூரசெந்தூரம் வகைக்கு விரா. 1 சேர்த்து மைபோலரைத்து குன்றிமணி அளவாக மாத்திரைகளாக்கி கொஞ்சம் ஈரமிருக்கையில் மாத்திரை ஒன்றுக்கு ⅛ (அரைக்கால்) சுவர்ணரேக்கை கவசமிட்டு சுவர்ணமணிபோல மாத்திரைகள் உருட்டி உலர்த்தி 1–2 மாத்திரை சாப்பிட்டு உடனே 2 சேர் பசும்பாலைக்காய்ச்சி ஒரு சேராக்கி சாப்பிட்டுவர ரத்தம் ஊறும், விந்துக்கட்டும் தாதுப்புஷ்டி உண்டாகும். பத்தியம்—அதிக புளிப்பு, காரம், புகை நீக்கவும்.

ராஜ ஹ்ஸபோடலி மாத்திரை.

சங்குபஸ்மம் செய்வதுபோல் பலகறைகளை பஸ்மமாக்கி ஒரு பலம் தூக்கி அத்துடன் சுக்கு, மிளகு, திப்பிலி, சுத்திசெய்தநாவி, சுத்திசெய்த கந்தகம், சுத்திசெய்த ரசம், பொறித்த வெங்காரம், வகைக்கு பலம் 1 சேர்த்து எலுமிச்சம்பழச்சாற்றால் அரைத்து மாத்திரைகளாக்கி 1—2 குன்றிமணிஎடை வீதம் மிளகு தூளும் நெய்யும் சேர்த்து அதில் வைத்துக்கொடுக்க கிரகணி (11) குணமாகும்.

அஜமோதாஷ்டக மாத்திரை.

ஓமம், பெருங்காயம், சித்திரமூலம், கோஷ்டம், வசம்பு, சிறுதேக்கு, இந்துப்பு, ஏலரிசி, வகைக்கு விராகனிடை 5 இவைகளை சூர்ணித்து ஜலத்தால் மைபோலரைத்து கழற்சிக்காய் அளவாக மாத்திரைகளாக்கி தினம் 2 தடவை ஒரு மாத்திரைவீதம் ஜலத்தில் கொடுத்துவர வயிற்றுப்பல், குன்மக்கட்டி, குன்மம் (8), வாந்தி, அஜீர்ணம், முதலிய பலமானரோகங்கள் குணமாகும்.

ரச மாத்திரை.

சுத்திசெய்த ரசம், கந்தகம், வெங்காரம், சுக்கு வகைக்கு விரா. 5, சுத்திசெய்த நேர்வாளப்பருப்பு விரா. 15, இவைகளில் ரசமும் கந்தகமும் கல்வத்திலிட்டு அரைத்து பிறகு மற்ற சரக்குகளைப்போட்டு மைபோல் ஜலத்தால் அரைத்து மிளகு அளவாக மாத்திரைகளாக்கி ஒருமாத்திரை ஜலத்திலிட ஷுதமாந்தம், வாதம், பொருமல், முதலிய பல ரோகங்கள் குணமாகும். பெரியவர்களுக்கு 5 மாத்திரைகள் கொடுக்க வாதம், சுரம், வாயு. முதலியவைகள் குணமாகும்.

சித்தாநந்த பயிரவ மாத்திரை.

கட்டினலிங்கம், சுத்திசெய்தகருநாவி, சுத்திசெய்த வெங்காரம், சுக்கு, மிளகு, திப்பிலி, பெருங்காயம் வகைக்கு பலம் 1, கல்வத்திலிட்டு எலுமிச்சம்பழச்சாற்றால் அரைத்து குன்றிமணி அளவாக மாத்திரைகளாக்கி உலர்த்தி ஒரு மாத்திரை இஞ்சிச்சாறு, முலைப்பால் ஏதிலாகிலும் கொடுக்க சன்னி (13), வாதம் (80), குணமாகும். தேனிலிட தோஷம் தீரும்.

ரசாநந்த பயிரவ மாத்திரை.

கட்டின லிங்கம் பலம் 4, சுத்திசெய்த வெங்காரம் பலம் 8, சுத்திசெய்த கருநாவி பலம் 12, திப்பிலி பலம் 12 இவைகளை கல்வத்திலிட்டு இஞ்சிச்சாற்றால் காலுஜாமம் அரைத்து குன்றிமணி அளவாக மாத்திரைகளாக்கி நிழலில் உலர்த்தி ஒரு மாத்திரை அனுபானத்திலிட சந்நிபாதரோகம் (13), வாதம் (80) முதலிய கொடியரோகங்கள் குணமாகும்.

வாத ராக்ஷச மாத்திரை.

ரசம், கந்தகம், காந்தம், அப்பிரேகம் வகைக்கு ஒரு பலம் சுத்திசெய்து அத்துடன் தாம்பிரபஸ்மம் பலம் 1 சேர்த்து கல்வத்திலிட்டு வெள்ளைச்சாரணைச் சாற்றால் 4 ஜாமம் அரைத்து பிறகு சிந்திற்கொடிக் கசாயத்தால் 4 ஜாமமும், கொடிவேலிவேர்க் கசாயம், துளசிச்சாறு, கடுக்காய், தானிக்காய், நெல்லிமுள்ளி இவைகள் சேர்ந்த கசாயம் இவைகளால் தனித்தனி 2 ஜாமமும் அரைத்து பில்லைசெய்து வெள்ளைச்சாரணை இலையை அரைத்து அதற்கு 3 விரற்கடை கனமாய் கவசமிட்டு அந்த கவ

சம் கருகும்படி புடம்போட்டு எடுத்து சித்திரமூலகசாயத்தால் 4 ஜாமம் அரைத்து குன்றிமணி அளவாக மாத்திரைகளாக்கி ஒரு மாத்திரை அநுபானத்திலிட சன்னி (13), தோஷம், வாதம் (80) முதலிய கடோரரோகங்கள் குணமாகும்.

லகுசங்குவடி மாத்திரை.

புளிசமூலம் (இலை, பட்டை, வேர்முதலியவைகள்) உலர்த்தி எரித்து சாம்பலை ஜலத்தில் கரைத்து வடித்து எரித்து எடுத்த உப்பு பலம் 5, கல்லுப்பு, இந்துப்பு சௌட்டுப்பு, வளையலுப்பு, வெடியுப்புவகைக்குபலம் 1, ஐந்துபலம் வெள்ளைசங்கு துண்டுகளை எலுமிச்சம்பழச்சாற்றில் போட்டு, சங்கு கையால்தூளாகிறவரையில் காய்ச்சி, பிறகு ரசம் பலம் 2, கந்தகம் பலம் 2, லிங்கம் பலம் 5, இவைகளை சுத்திசெய்து சேர்த்து எல்லாம் கல்வத்திலிட்டு, ஷை சாற்றால் அரைத்து குன்றிமணி அளவாக மாத்திரைகளாக்கி ஒருமாத்திரை அநுபானத்தில்கொடுக்க கிரகணி (11), குன்மம் (8), அக்கினிமந்தம், அஜீர்ணம், வாயு, உதரரோகம் குணமாகும்.

சுவர்ண கோரோசன மாத்திரை.

தங்கரேக்கு, முத்து, பவளபஸ்மம், ரசசெந்தூரம், சுத்திசெய்தரசகர்ப்பூரம், பச்சைக்கர்ப்பூரம், அப்பிரகசெந்தூரம், கோரோசனை, குங்குமப்பூ, ஏலம், கிராம்பு, சாதிக்காய், கோஷடம், அக்கிராகாரம், இவைகள் வகைக்கு விராகனிடை 1 சேர்த்து கல்வத்திலிட்டு வெற்றிலைச்சாறு, சந்தனக்கசாயம், சண்பகப்பூ கசாயம் இவைகளால் தனித்தனியே 3 ஜாமம் அரைத்து உளுந்துஅளவாக மாத்திரைகளாக்கி நிழலில்உலர்த்தி ஒரு மாத்திரைவீதம்தகுந்த அநுபானத்தில்கொடுக்க சுரம் (64), சன்னி (13), காசம் (5), சுவாசம் (5), வலிப்பு (5), இசிவு, இருமல், ஜலுப்பு, முதலிய பற்பல கடோரரோகங்கள் குணமாகும். இதை குழந்தைகளுக்கு ஒரு மாத்திரை வீதம் கொடுக்கலாம்

அப்பிரக கோரோசன மாத்திரை.

அப்பிரகசெந்தூரம், ரசசெந்தூரம், ரசக்கர்ப்பூரம், கோரோசனை, பச்சைக்கர்ப்பூரம், குங்குமப்பூ, ஏலம், கிராம்பு, சாதிக்காய், கோஷ்டம், அக்கிராகாரம், வகைக்கு பலம் 1, கல்வத்திலிட்டு வெற்றிலைச்சாறு, சந்தனக்கசாயம், சண்பகப்பூகசாயம், இவைகளால் தனித்தனியாய் 3 ஜாமம் அரைத்து சிறுபயிறு அளவாக மாத்திரைகளாக்கி ஒரு மாத்திரைவீதம் குழந்தைகளுக்கு அநுபானத்திலிட சுரம், கபம், ஜன்னி, வாதம், இசிவு, ஜலுப்பு முதலிய பற்பல பலமான ரோகங்கள் குணமாகும்.

கோரோசன மாத்திரை (லகுமுறை.)

கோரோசனை, குங்குமப்பூ, சுத்திசெய்த கர்ப்பூரம், பச்சைகர்ப்பூரம், ஏலம், கிராம்பு, கோஷ்டம், அக்கிராகாரம், ரசபஸ்மம், வகைக்கு விராக

ணிடை 1 கல்வத்திலிட்டு சந்தனக்கசாயத்தால் மைபோலரைத்து உளு ந்து அளவாக மாத்திரைகளாக்கி ஒரு மாத்திரை விதம் அநுபானத்தில் கொடுக்க குழந்தையின் சுரம், ஜலுப்பு, மாந்தம் முதலியவைகள் தீரும்.

கஸ்தூரி மாத்திரை.

கஸ்தூரி விராகனிடை 1, குங்குமப்பூ விராகனிடை 3, சுக்கு விரா கனிடை 4, கிராம்பு, சாதிக்காய், கோஷ்டம், அக்கிராகாரம், வகைக்கு விராகனிடை 2, இவைகளை கல்வத்திலிட்டு முலைப்பாலால் மைபோல ரைத்து கடுகு அளவாக மாத்திரைகளாக்கி நிழலில் உலர்த்தி 1 மாத்திரை முலைப்பாலில் கொடுக்க குழந்தையின் மாந்தம், சுரம், சன்னி, வலிப்பு, இசிவு, கபரோகங்கள் முதலிய கரேரோகங்கள் குணமாகும். பெரியவ ருக்கு 4—6 மாத்திரை கொடுக்கலாம்.

லிங்க மாத்திரை.

கட்டினலிங்கம் விராகனிடை 8, மிளகு, திப்பிலி வகைக்கு விராக னிடை 2, கல்வத்திலிட்டு முலைப்பாலாலரைத்து உளுந்துஅளவாக மாத் திரைகள் செய்து ஒரு மாத்திரை அநுபானத்திலிட சுரம், வாதம், குடல் வாயு, அபானவாயு குணமாகும்.

ரசலிங்க பேதி மாத்திரை.

ரசபஸ்மம், சுத்திசெய்த லிங்கம், சுத்திசெய்த வெங்காரம், வகைக் குப்பலம் 2, சுத்திசெய்த சேர்வாளப்பருப்பு பலம் 8, ஆமணக்குப்பருப்பு பலம் 4 இவைகளை கல்வத்திலிட்டு விளாம்பிசின் ஜலத்தால் அரைத்து, உளுந்து அளவாக மாத்திரைகளாக்கி 1-2 மாத்திரைகொடுக்க சுரம், வாதம், குடல்வாயு முதலியவைகள் குணமாகும்.

ரசகர்ப்பூர மாத்திரை.

சுத்திசெய்த ரசகர்ப்பூரம், அழிஞ்சிவேர்ப்பட்டை, கொடிவேலிவே ர்ப்பட்டை, வகைக்கு விராகனிடை 5, சுத்திசெய்த சேர்வாளப்பருப்பு வி ராகனிடை 20 இவைகளை கல்வத்தில்போட்டு முலைப்பால், கையாந்தரை ச்சாறு இவைகளால் வகைக்கு ஒரு ஜாமம் அரைத்து உளுந்து அளவாக மாத்திரைகளாக்கி ஒரு மாத்திரை தேனிலிட சகலசுரமும், வாதம் (80)ம் தீரும்.

தாளக மாத்திரை.

தாளகம், ரசம், கந்தகம், கருநாவி வகைக்கு விராகனிடை 1, சுத்தி செய்து அத்துடன் கடுரோகணி, சுக்கு, திப்பிலி வகைக்கு விராகனி டை 5 சேர்த்து கல்வத்திலிட்டு எலுமிச்சம்பழச்சாற்றால் மைபோலரை த்து சிறுப்பயிறு அளவாக மாத்திரைகளாக்கி 1-2 மாத்திரை தினம் 2 த டவைக்கொடுக்க சகல சுரமும் குணமாகும்.

ரசலிங்க மாத்திரை.

ரசபஸ்மம், கட்டினலிங்கம், பச்சைகர்ப்பூரம், சாதிக்காய், சுத்தி செய்த நேர்வாளப்பருப்பு இவைகள் வகைக்கு விராகனிடை 1 சேர்த்து கல்வத்திலிட்டு கற்றாழைச்சாற்றால் அரைத்து உளுந்து அளவாக மாத்திரைகளாக்கி 2-3 மாத்திரை அனுபானத்தில் கொடுக்க சகல சுரங்கள் உடனே குணமாகும்.

மனோசிலை மாத்திரை.

சுத்திசெய்த மனோசிலை, சுக்கு, மிளகு, திப்பிலி, திப்பிலிமூலம் வகைக்கு விரா. 1 சேர்த்து கல்வத்தில்போட்டு துளசிச்சாறு, வெள்ளாட்டு மூத்திரம் இவைகளால் வகைக்கு ஒரு ஜாமம் அரைத்து குன்றிமணி அளவாக மாத்திரைகளாக்கி ஒரு மாத்திரை வெந்நீரில் மூன்றும் நான்காம்முறை சுரத்துக்கும், குப்பைமேனிச்சாற்றில் சன்னிக்கும், ஜலத்தில் வாயுவுக்கும், கொடுக்க குணமாகும்.

பாஷாண மாத்திரை.

வெள்ளைப்பாஷாணம், கௌரிப்பாஷாணம், ரசம், வகைக்கு விரா. ½ (அரை) சுத்திசெய்து அத்துடன் மிளகு விரா.10 சேர்த்துகல்வத்திலிட்டு மிளகு கஷாயம், கருஊமத்தையிலைச்சாறு, கொம்புப்பாகல் இலைச்சாறு இவைகளால் வகைக்கு ஒரு ஜாமம் அரைத்து சிறு பயிறு அளவு மாத்திரைகளாக்கி மோர், காடி இவைகளில் எதிலாகிலும் ஒரு மாத்திரை கொடுக்க சுரம், (64) குணமாகும் பத்தியம்—புளி, உப்பு, தள்ளவும்.

சுரகுடாரி மாத்திரை.

கழற்சிப்பருப்பு 200 கிரேன்ஸ், மிளகு 80 கிரேன்ஸ், பெருங்காயம் 40 கிரேன்ஸ், இவைகளை கல்வத்திலிட்டு தேன் சேர்த்து அரைத்து 30 மாத்திரைகளாக்கி ஒரு மாத்திரை விதம் தினம் 2 தடவைக்கொடுக்க குளிர் சுரம் குணமாகும்.

லகுகட்டுவாங்க மாத்திரை.

கொடிகுறுஞ்சாயிலை தூள் விரா 4, விளாம்பிசின் விரா. 20, அபின் விரா. ½ அரை இவைகள் கல்வத்திலிட்டு அரைத்து 50 மாத்திரைகளாக்கி ஒருமாத்திரை வீதம் கொடுத்துவர பேதி, சீதபேதி, இருமல், கக்குவான், அதிசாரபேதி குணமாகும்.

லிங்கபேதி மாத்திரை.

கட்டின லிங்கம், வலம், சண்பகப்பூ, கடுரோகிணி, கோஷ்டம், வகைக்கு விரா. 3, சுத்திசெய்த நேர்வாளப்பருப்பு விரா 15, இவைகளை கல்வத்திலிட்டு விளாம்பிசின ஜலத்தால் அரைத்து குன்றிமணி அளவாக மாத்திரைகளாக்கி உள்ளுக்கு ஒரு மாத்திரை கொடுக்க செவ்வையாய் பேதியாகும். பேதி அதிகமானால் புளித்தமோரும் அன்னமும சாப்பிட பேதி நிற்கும்.

பாலசுரஹர மாத்திரை.

குங்குமப்பூ விரா. 10, கிராம்பு, ஏலம், ஜாதிக்காய், சந்தனம், சுக்கு, மிளகு, திப்பிலி, கடுக்காய், தானிக்காய், நெல்லவற்றல், கடுகுரோகிணி, தேவதாரம், வகைக்கு விரா. 5 இவைகளை கல்வத்திலிட்டு எலுமிச்சம்பழச்சாற்றாலும், கண்டங்கத்திரிபழச்சாற்றாலும் வகைக்கு 2 ஜாமம் அரைத்து உளுந்து அளவாக மாத்திரைகளாக்கி, ஒரு மாத்திரை விதம் அநுபானத்தில் கொடுக்க குளிர்சுரம், சன்னி, சுரம் குணமாகும்.

பாலசஞ்சீவி மாத்திரை.

கோரோசனை, வெங்காரம், கடுகுரோகிணி, சுக்கு, சுத்திசெய்த நேர்வாளப்பருப்பு வகைக்கு விரா. 7 சேர்த்து கல்வத்திலிட்டு முலைப்பாலால் அரைத்து கடுகு அளவாக மாத்திரைகளாக்கி 1, 2 மாத்திரை அநுபானத்தில் கொடுக்க சகல சுரம், மார்தம் முதலிய பற்பல ரோகங்கள் குணமாகும்.

பாலசுர குடாரி மாத்திரை.

கோரோசனை பலம் 6, பெருஞ்சீரகம், கருஞ்சீரகம், அதிமதுரம், கோஷ்டம், இந்துப்பு, இலுப்பைப்பருப்பு, சாஸ்திரபேதி, வகைக்கு பலம் 2 கல்வத்திலிட்டு, குமரிச்சாறு, முலைப்பால் இவைகளால் வகைக்கு 2 ஜாமம் அரைத்து உளுந்து அளவாக மாத்திரைகளாக்கி ஒரு மாத்திரை வீதம் முலைப்பாலில் கொடுத்துவர சகல சுரங்கள் குணமாகும்.

பாலவிநோத சஞ்சீவிமாத்திரை.

சுத்திசெய்த நேர்வாளப்பருப்பு பலம் 1, பச்சைக்கர்ப்பூரம், சுக்கு, சாதிக்காய், கருவாப்பட்டை, வகைக்குப்பலம் 1, இவைகளை கல்வத்திலிட்டு நற்குமைழச்சாற்றால் மைபோல் அரைத்து கடுகு அளவாக மாத்திரைகளாக்கி 1, 2 மாத்திரை அநுபானத்திலிட குழந்தைகளுக்குக்காணும் சுரம் மார்தம் முதலியவைகள் குணமாகும்.

காக்கணன்வேர்பேதி மாத்திரை.

வெள்ளைக்காக்கான்வேர், திப்பிலி வகைக்கு விரா. 2, சுக்கு, மிளகு வகைக்கு விரா. 3, விளாம்பிசின் விரா. 2, இவைகளை கல்வத்திலிட்டு ஜலத்தால் அரைத்து குன்றிமணி அளவாக மாத்திரைகளாக்கி ஒரு மாத்திரை ஜலத்தில் கொடுக்க பேதி நன்றாய் ஆகும். குழந்தைகளுக்கு ½ (அரை) மாத்திரை கொடுக்கவும்.

பாலசுர விஷஹரமாத்திரை.

கருவாப்பட்டையும், நிழலில் உலர்த்தின ஆடுதீண்டாப்பாளை வேர் பட்டையும், வகைக்கு விரா. 10 சேர்த்து கல்வத்திலிட்டு எலுமிச்சம்பழச்சாற்றால் ஒரு ஜாமம் அரைத்து கடுகு அளவாக மாத்திரைகளாக்கி ஒரு மாத்திரை அநுபானத்தில் கொடுக்க குழந்தையின் சுரம், விஷம், முதலியவைகள் குணமாகும்.

ஆதிசேஷவிஷஹர மாத்திரை.

கோடகசாலையிலை பிடி 2, எருக்கம்பழுப்பு பிடி 2, மிளகு பலம் 1, இவைகளை கல்வத்திலிட்டு மைபோல் அரைத்து சுண்டக்காய் அளவாக மாத்திரைகளாக்கி நிழலில் உலர்த்தி ஒரு மாத்திரை 1-2 மணிக்கு ஒரு தடவைக்கொடுக்க நல்லபாம்பு விஷக்கடி, பூரூன், ஜலமண்டலி, முதலிய வைகளின் விஷக்கடிகள் தீரும். எலி, தேள் இவைகளின் விஷக்கடிகளுக்கு இதை கொடுக்கக்கூடாது.

உதயாதித்திய மாத்திரை.

சுத்திசெய்த ரசம் பலம் 1, சுத்திசெய்த கந்தகம் பலம் 2, கல்வத்திலிட்டு கற்றாழைச்சாற்றால் ஒருநாள் அரைத்து ஒரு கலயத்தில் வைத்து, அந்த மொத்தையின்பேரில் 2 பலம் சுத்திசெய்த தாம்பிரத்தை கிண்ணியாக்கி கவிழ்த்து கிண்ணின் சந்துவாயில் எருவின் சாம்பலைப்போட்டு அதின்மேல் சாணியும் ஜலமுஞ்சேர்த்துப்போட்டு கிண்ணத்தை மறைத்து பிறகு அந்த கலயத்தை அடுப்பின்மேல் வைத்து காடாக்கினியாய் 2 ஜாமம் எரித்து எடுத்து கல்வத்திலிட்டு கருஅத்தி, சித்திரமூலம், கடுக்காய், தானிக்காய்; நெல்லிமுள்ளி, முருங்கைக்காயின் உள்பசை, வாய்விளங்கம், சிவதைவேர் அவைகளின் கசாயங்களால் தனித்தனியே ஒவ்வொரு நாள் அரைத்து குன்றிமணி அளவாக மாத்திரைகளாக்கி ஒரு மாத்திரை வீதம் பசும்பாலிலாவது அல்லது கடுக்காய், தானிக்காய் நெல்லிவற்றல் இவைகளை சேர்த்து காய்ச்சின கசாயத்திலாவது கொடுத்துவர வெண்குஷ்டம், விசர்சிகாரோகம் குணமாகும். வெண்குஷ்டரோகி இதை சாப்பிட்டால் 4வது அல்லது 7வது நாளில் தேகத்தில் சிரங்குகள் காணும். அப்போது குன்றிமணி விதையும் சித்திமூலமும் சூர்ணித்து ஜலத்தில்கரைத்து உடம்பில் பூசிக்கொள்வதாலும், அல்லது மனோசிலை, நாயுருவியின் சாம்பல் இவைகளை ஜலத்தில் கரைத்து உடம்பில் பூசிக்கொள்வதாலும் குணமாகும்.

38-வது அத்தியாயம்.

மெழுகுகள்.

இங்கிலீஷ், யுனானி, கர்நாடகவைத்திய கிரந்தங்களைப் பார்வையிட்டு அடிக்கடி உபயோகமுள்ளதும் கொடிய ரோகங்களை எளிதில் குணமாக்க மஹாவல்லமையுள்ளதுமான மெழுகுகளை இந்த அத்தியாயத்தில் சொல்லப்படும். இந்த மெழுகுகளை அளவின்படி சாப்பிட்டுவருகின்ற ரோயாளிகளின் ரோகங்கள் மெழுகு உருகி போவதுபோல ரோகங்களும் உருகிப்போகும். அதாவது அதிசீக்கிரத்தில் குணமாகும்.

லிங்கமெழுகு.

(1) லிங்கம் பலம் 4, பூரம் பலம் 2, வெங்காரம் பலம் 1½ (ஒன்றரை) இவைகளை சுத்திசெய்து வேளையிலைச்சாற்றால் ஒருசாமம் அரைத்து, ஆம

ணக்குப்பருப்பு பலம் 4 சேர்த்து அரைத்து குன்றிமணி அளவுக்கொடுக்க சன்னி (13), தோஷம், சுவாசம், முதலிய தீராதரோகங்கள் தீரும்.

(2) லிங்கம் பலம் 4, பூரம் பலம் 4, வெங்காரம் பலம் 2, கேர் வாளப்பருப்பு பலம் 1 இவைகளை சுத்திசெய்து அத்துடன் சுக்கு, குரோசாணி ஓமம், வகைக்கு விரா. 4 சேர்த்து வெற்றிலைச்சாற்றால் ஒரு சாமம் அரைத்து, தேன்விட்டு ஒரு சாமம் அரைத்து உளுந்து அளவு கொடுக்க சுரம், ஜன்னி, வாதம், சூலை, முதலிய பற்பல கொடியரோகங்கள் குணமாகும்.

அயம்மெழுகு.

(1) ஒரு சட்டியில் மூன்று வருஷஞ்சென்ற புளி சேர் 2, இளாப் பழச்சாறு படி 1, இவைகளைச்சேர்த்து அதில் அயக்கட்டி பலம் 1 போட்டு மேல் சட்டியை மூடி சீலைமண் செய்துக்காற்றில்லாத இடத்தில் அசையாமல் உரியில் வைக்கவும். ஒருமண்டலம்சென்று எடுத்துப்பார்க்க மெழுகுபோலிருக்கும். அதில் ஒரு மிளகு அளவு கொடுத்துவர தேக வெளிப்பு, சோகை (9), பாண்டு (5), காமாலை (13), பித்தவெட்டை குணமாகும். ரத்தம் ஊறும்.

(2) ஒரு பலம் சுத்திசெய்த அரப்பொடியை கல்வத்திலிட்டு இன்புராசமூலம் இடித்து எடுத்தச்சாறு படி ¼ (கால்) விட்டு ரவியில் வைத்து உலர்த்தி பின்பு புளிப்பு மாதுளைச்சாறு விட்டு 4 சாமம் அரைத்து உலர்த்தி தேவையான தேன்விட்டு மெழுகுபதத்தில் ஒருசாமம் அரைத்து எடுத்து தினம் குன்றிமணிஅளவு கொடுத்துவர பித்தவெட்டை, சோகை, பாண்டு முதலியவைகள் தீரும்.

ரசமெழுகு.

4 பலம் பசும் வெண்ணெயும், 3 பலம் கந்தகமும் சேர்த்து மைபோல் அரைத்து துணியில் தடவி திரியாக்கி கொளுத்தி சுடர் தயிலம் இறக்கி கல்வத்திலிட்டு ஒருபலம் ரசம் சேர்த்து, ரசம் கண்களுக்கு தோன்றாத வரையில் அரைத்து எடுத்து ஒரு குன்றியணியிடை பழைவெல்லத்தில் வைத்துக்கொடுக்க 3 நாள்களில் வாதம், சூலை முதலியவைகள் குணமாகும். சங்கங்குப்பிச்சாற்றில் கொடுக்க கிரந்தி, அரையாப்பு, பவுத்திரம் தீரும். சிறு செருப்படைச்சாற்றில் கொடுக்க, சிரங்கு, சொறி, தீரும்.

ரசலிங்கமெழுகு.

ரசகர்ப்பூரம், லிங்கம், சமமாக சேர்த்து கல்வத்திலிட்டு முலைப்பாலால் ஒரு சாமமும், எலுமிச்சம்பழச்சாற்றால் ஒரு சாமமும், தேனால் ஒரு சாமமும், அரைத்து ஒரு இரும்புக்கரண்டியில் போட்டு ஷைச்சாறு கொஞ்சம்விட்டு தீபத்தின்மேல் பிடிக்க உருகி மெழுகாகும். அதில் பணவிடை பழைவெல்லத்தில் வைத்துக்கொடுக்க குதகவலி, வயிற்றுவலி, வாயு முதலியவைகள் குணமாகும்.

பாஷாணமெழுகு.

ஒரு பானையில் 4 படி மூத்திரமும், 1 படி பூநீரையும்விட்டு ஒரு பலம் வெள்ளைபாஷாணத்தை துணியால் முடித்து பானைக்குள் தொங்கும்படிக்கட்டி, பானையின் வாய்மூடி சீலைமண்செய்து அடுப்பில் ஏற்றி ஒரு சாமம் கமலாக்கினியாய் எரித்து, எடுத்து அதற்கு ஒருபுட்டி போர்ட்வைன் சாராயத்தால் சுருக்குக்கொடுத்து பின்பு பிராயம்பட்டைத்தயிலத்தால் மெழுகாகும்வரையில் சுருக்குக்கொடுத்து அரிசியிடை அநுபானத்திலிட, ஜன்னி, சுரம், தோஷம், முதலிய கொடியரோகங்கள் குணமாகும்.

தாம்பிர மெழுகு.

சுத்திசெய்த தாம்பிரத்தகடுகள் சேர் ½ (அரை), சுத்திசெய்த நெல்லிக்காய் கந்தகம் சேர் 1, இவைகளில் கந்தகத்தை சூர்ணித்து ஒரு பீங்கானில் கொஞ்சமிட்டு அதின்மேல் ஒருதகட்டைவைத்து அதின் மேல் கந்தகத்தைபோட்டு தகட்டைவைக்கவும் இவ்விதமாய் எல்லாத் தகடுகளையும் வைத்து, எலும்மிச்சம்பழச்சாறு, மேல்தகட்டின் மேல் ½ (அரை), விரற்கடை வரும்படியாக விட்டு ரவியில்வைத்து மறுநாளும் டி சாற்றைவிட்டு ரவியில்வைக்கவும், இவ்விதமாய் 20 நாள்வைக்க மெழுகு போலாகும். அதை எடுத்து ஒரு வாயகன்ற கற்கார்க்கு சீசாவில் போட்டு வைத்துக்கொண்டு 1 முதல் 4 கிறேன்ஸ் கொடுத்துவர மேகத்தடிப்பு கருமேகம், குஷ்டம், மேகப்புடை, மேகரணம் முதலிய அநேக கொடிய ரோகங்கள் குணமாகும்.

(இங்கிலீஷ்) ரசமெழுகு. Blue Pill—பிளு பில்.

செய்முறை.—½ (அரை) அவுன்ஸ் சுத்திசெய்த ரசத்துடன், 6 திராம் குல்கந்து சேர்த்து ரசம் கண்ணுக்கு தெரியாமல் போகிறவரையில் அரைத்து, 2 திராம் அதிமதுரத்தூள் சேர்த்து இடித்துக்கொள்ள வேண்டியது. இதை கடுதாசியின் மேல் தேய்த்தால் ரசம் கண்களுக்கு அகப்படக்கூடாது.

செய்கை.—வியதாபேதகாரி, விரேசனகாரி.

உபயோகம்.—இத்துடன் இபிகாகியூ என சேர்த்துக்கொடுக்க அஜீர்ணம் குணமாகும். இதில் 5 கிறேன்ஸ் இரவில் சாப்பிட்டு காலையில் நிலாவரை கசாயம் சாப்பிட பேதியாகி பித்தநீரை வெளிப்படுத்தும். இதை திரிதோஷம், கொருக்கை முதலிய வியாதிகளுக்குக் கொடுக்கத் தகுதியானது.

வீரமெழுகு.

(1) கட்டின வீரம் விரா. 1, கட்டின லிங்கம் விரா. 2, ஒரு சட்டியில் போட்டு செம்நெருஞ்சிச்சாற்றால் 3 சாமம் சுருக்குக்கொடுத்து

சூர்ணித்து, அத்துடன் சுக்கு, மிளகு, திப்பிலி, வகைக்கு விரா. 2 சூர்ணித்து சேர்த்து தேன்விட்டு 2 சாமம் அரைத்து எடுத்து உளுந்து அளவாக கொடுத்துவர ஜன்னி (13), வாதம் (80), சுரம் (64), சூலை (18), மேகம் (20), குஷ்டம் (18), முதலிய பற்பல கபரோகங்கள் குணமாகும்.

(2) கட்டின வீரம் பலம் 1 கல்வத்திலிட்டு பிரமதண்டுச்சாற்றால் 4 சாமம் அரைத்து, சுக்கு, மிளகு, திப்பிலி, வகைக்கு பலம் 2 சூர்ணித்து சேர்த்து தேன்விட்டு ஒருசாமம் அரைத்து உளுந்து அளவு கொடுக்க மேல்சொல்லிய ரோகங்கள் தீரும்.

39-வது அத்தியாயம்.

குழம்புகள்.

யுனானி, கர்நாடக கிரந்தங்களிலிருந்து கபரோகங்களை அதிசீக்கிரத்தில் நிவர்த்தியாக்க மஹா வல்லமைபொருந்திய குழம்புகள் இந்த அத்தியாயத்தில் சொல்லப்படும். அளவின்படி இவைகளைச்சாப்பிட்டால் நன்றாய் விரேசனமாகி பலமான ரோகங்களைப் போக்கும்.

குமட்டிக்காய் குழம்பு.

(1) 50 வறி குமட்டிக்காயின் சாறு, இலைக்கள்ளிப்பால் படி 1, கல்லுப்பு படி 1, வெடியுப்பு, வளையலுப்பு, இந்துப்பு, சுக்கு, திப்பிலி, பெருங்காயம் வகைக்கு பலம் 1, இவைகளைசேர்த்துக் காய்ச்சி, மெழுகு பதத்தில் எடுத்து ஒரு விராகனிடை வீதம் கொடுக்க உதரரோகம், குதகக்கட்டு, குதகவலி முதலியவைகள் தீரும். மலம் இறக்கும்.

(2) குமட்டிக்காய்ச் சாறு படி 2, இந்துப்பு, வெங்காரம், கடுகுரோகிணி, கருஞ்சீரகம், வால்மிளகு, வகைக்குப் பலம் ½ (அரை), பெருங்காயம் பலம் 2, இவைகளை சேர்த்துக்காய்ச்சி மெழுகுபதத்தில் எடுத்து ஒரு குன்றிமணி அளவு கொடுக்க குன்மம் (8), சூலை (18), வாதம் (80), கைகால் முடக்கு, குணமாகும், விரேசனமாகும்.

லிங்கக் குழம்பு.

(1) கட்டினலிங்கம், சுத்திசெய்த வெங்காரம் வகைக்கு பலம் 1, சுத்திசெய்த கோர்வாளப்பருப்பு, இந்துப்பு, வகைக்குப் பலம் 2, ஆமணக்குப் பருப்பு பலம் 4, இவைகளைச்சேர்த்து மைபோல் அரைத்து குன்றிமணியிடை அனுபானத்திலிட விரேசனமாகி, மகோதரம், வாதம், நுன்மக்கட்டி முதலியவைகள் தீரும்.

(2) கட்டின லிங்கம் பலம் 1, வெங்காரம் பலம் 2, நேர்வாளப் பருப்பு பலம் 4, இவைகள் சுத்திசெய்து அத்துடன் ஆமணக்குப்பருப்பு பலம் 8, முப்பு பலம் 1. இவைகளெல்லாம் கல்வத்திலிட்டு மைபோலரைத்து ஒரு குன்றிமணி அளவுகொடுக்க விரேசனமாகி சுரம், மகோதரம், குன்மம், வாதம், முதலியவைகள் குணமாகும்.

அகஸ்தியர் குழம்பு.

மனோசிலை, அரிதாரம், கருநாவி, ரசம், வெங்காரம் இவ்வைந்தும் சுத்திசெய்து வகைக்கு விராகனிடை 2½ (இரண்டரை), சேர்த்து அத்துடன் கடுகு ரோகணி, கருஞ்சீரகம், திப்பிலி, பெருங்காயம், இந்துப்பு வகைக்கு விராகனிடை 2½, சுத்திசெய்த நேர்வாளப்பருப்பு விராகனிடை 25, நாட்டுக்காட்டாமணக்கின் பருப்பு விரா. 12½ (பனிரெண்டரை) இவைகளைச்சேர்த்து அரைத்துப் பீங்கான் டப்பியில் போட்டுவைத்துக்கொண்டு ½ (அரை) பணவிடை வீதம் அடியில் கண்ட அனுபானங்களில் கொடுக்க அடியில்கண்ட ரோகங்கள் தீரும்.

அனுபானங்கள்	நிவர்த்தியாகும் ரோகங்கள்
இஞ்சிச்சாறு	குளிர்சுரம், வாதசுரம், சன்னி, அண்டவாதம், மூலவாயு.
சங்கங்குப்பிச்சாறு அல்லது இளநீர் ஜலம்	நீர்க்கடுப்பு, நீர்சுருக்கு, கல்லடைப்பு.
வெங்காயச்சாறு	தேள்கொட்டல்.
அகத்தியிலைச்சாறு	மகோதரம், வெட்டை.
நொச்சியிலைச்சாறு	வாதசுரம்.
வெற்றிலைச்சாறு	விஷம்.
கடுக்காய் அல்லது கொத்தமல்லிக்கசாயம்	பித்தசுரம்.
திப்பிலிக்கசாயம்	சிலேஷ்மசுரம்.
விலாமிச்சுவேர் கசாயம்... ...	பித்தவெட்டை.
கடுக்காய்த்தூள்...	இருமல்.
சாதிக்காய்த்தூள்	அதிசாரசுரம்.
பசுநெய்	ரத்தமூலம்.
தேங்காய்ப்பால்	வாதம்.
பசும்பால்	பாண்டு, பித்தம்.
செம்மறியாட்டுப்பால்	திரளாதபெண்ணுக்கு 9 நாள்.
வெள்ளைப்பூண்டுத்தயிலம் ...	சன்னி (13).
ஆமணக்கெண்ணெய்	வாயு.
வெள்ளாட்டுத்தயிர்	சூதகவாயு.

40-வது அத்தியாயம்.

ரசாயனங்கள்.

கர்நாடக, யுனானிவைத்திய கிரந்தங்களில் சொல்லிய ரசாயனங்களில், பற்பல கடூரரோகங்களை நிவர்த்தி செய்வதில் வெகு வல்லமையுள்ள ரசாயனங்களை இந்த அத்தியாயத்தில் சொல்லப்படும். இவைகள் நோயாளிகளின் வியாதிகளை நாளுக்கு நாள் குணமாக்குவதை, நோயாளிகள் நன்றாய் அறிந்துகொள்ளும்படியான ரசாயனங்களாம்.

மஹா அசுவகெந்தி ரசாயனம்.

அமுக்கிராகிழங்கு, பறங்கிப்பட்டை வகைக்கு பலம் 4. கொடிவேலிவேர், முருங்கைப்பட்டை வகைக்கு பலம் 1, நன்னாரிவேர், சங்கம்வேர், நீர்முள்ளிவேர், சங்கத்தாரிப்பட்டை, சன்னலவங்கப்பட்டை, சுக்கு, மிளகு, திப்பிலி, வாய்விளங்கம், கிராம்பு, சாதிக்காய், சாதிப்பத்திரி, காசா ஏலம், நற்சீரகம், கருஞ்சீரகம், கோஷ்டம், அதிமதுரம், கொத்தமல்லிவிதை, ஓமரிசி, கசகசா, கோரைக்கிழங்கு, கடுக்காய், தானிக்காய், நெல்லிவற்றல், குரோசாணி ஓமம், சிறுநாகப்பூ, கண்டத்திப்பிலி, திப்பிலிமூலம், தாளிசப்பத்திரி, சடாமாஞ்சி, வெள்ளருகு, நிலப்பனைக்கிழங்கு, திராக்ஷப்பழம், பேரீச்சம்பழம் வகைக்கு விரா. 4 இவைகளில் கடைசியான 2 சரக்குகள் தவிர மற்றவைகளை உலர்த்தி சூர்ணித்து வஸ்திரத்தால் வடிகட்டி அத்துடன் ஷை திராக்ஷப்பழம், பேரீச்சம்பழம், நொறுக்கி சேர்த்து தேன் சேர் ½ (அரை), சர்க்கரை சேர் 1, பசுவின் நெய் சேர் 1 போட்டு அரைத்து பீங்கானில் போட்டு மேல் காகிதத்தால் மூடி தினம் அதில் 2 கொட்டைப்பாக்களவு அந்தி சந்தி சாப்பிட்டுவர வாதம் (80), மேகம் (20), சூலை (18), மேகவாயு, முதலிய அநேக கடூர ரோகங்கள் குணமாகும்.

பத்தியம்—உப்பு, புளி, காரம் இவைகளை நீக்கி பசுவின்பால், தயிர், நெய், கத்தரிப்பிஞ்சு, முருங்கைப்பிஞ்சு, புடலம்பிஞ்சு, துவரைப்பருப்பு முதலியவைகள் சேர்த்துக்கொள்ளலாம்.

வியாக்கிரியாதி ரசாயனம்.

கண்டங்கத்திரிச்சாறு பலம் 1, கருந்துளசிச்சாறு பலம் 2, ஆடாதோடைச்சாறு பலம் 3, தேன் பலம் 6 இவைகளைச்சேர்த்து ஒரு சிறு சட்டியிலிட்டு அதில் கிராம்பு, ஏலம், சாதிக்காய். சாதிப்பத்திரி, லவங்கப்பட்டை, சுக்கு. மிளகு, திப்பிலி, கடுக்காய், தானிக்காய், நெல்லிமுள்ளி, சித்தரத்தை, பேரரத்தை, அதிமதுரம், தாளிசப்பத்திரி, வகைக்கு விராகனிடை ½ (அரை) உலர்த்தி சூர்ணித்து போட்டு காய்ச்சி, பாகு

பதத்தில் இறக்கி சோவில் போட்டு தினம் பகலில் 3 தடவையும், இரவில் 3 தடவையும் குழந்தையின் நாக்கில் தடவிவர கக்குவான் என்றகக்கு இருமல் தீரும். கத்து இருமலுக்கு இது சஞ்சீவி.

திப்பிலி ரசாயனம்.

திப்பிலி பலம் 20, மிளகு பலம் 10, சுக்கு பலம் 20. குரோசாணி ஓமம், சோம்பு, சீரகம், சன்னராஷ்டகம், தும்பராஷ்டகம், தாளிசபத்திரி, லவங்கப்பத்திரி, லவங்கப்பட்டை, கடுக்காய், தானிக்காய், நெல்லிமுள்ளி, லவங்கம், ஏலம், சித்திரமூலம், வகைக்கு பலம் 2 இவைகளை இளவருப்பாய் வறுத்து சூர்ணித்து சமனிடை சர்க்கரையைச் சேர்த்து தேன்விட்டுப்பிசைந்து பீங்கானில் வைத்துக்கொண்டு கொட்டைப்பாக்கு அளவு 40 நாள் சாப்பிட்டால் காசம் (5), சிலேஷ்மரோகங்கள் (96), வாதரோகம் (80), இருமல், வாந்தி முதலியவைகள் குணமாகும்.

கந்தக ரசாயனம்.

சுத்திசெய்த கந்தகம் பலம் 6, கடுக்காய், தானிக்காய், நெல்லிமுள்ளி வெப்பாலே அரிசி, சுக்கு, மிளகு, திப்பிலி, ஏலம், கிராம்பு, லவங்கப்பத்திரி, நீர்முள்ளிவித்து, சுத்திசெய்த சேங்கொட்டை வகைக்கு பலம் 1, இவைகளெல்லாம் சூர்ணித்து சமஇடை சர்க்கரையைச்சேர்த்து தேன், நெய் இவைகள் விட்டு பிசைந்து பீங்கானில் வைத்துக்கொண்டு கொட்டைப்பாக்களவு 48 நாள் கொடுக்க குஷ்டம் (18), கிரகணி (11), அக்னிமந்தம், அதிசாரம் (6), உதரரோகம் குணமாகும். தாது விருத்தியுண்டாகும்.

பறங்கிப்பட்டை ரசாயனம்.

பறங்கிப்பட்டை பலம் 17, கொடிவேலிவேர், சங்குவேர், நன்னாரிவேர், அமுக்கிராக்கிழங்கு, நிலப்பனைக்கிழங்கு, திப்பிலிமூலம், தாளிசப்பத்திரி, லவங்கப்பத்திரி, மிளகு, திப்பிலி, ஓமம், குரோசாணிஓமம், கருஞ்சீரகம், சித்தரத்தை, பேரரத்தை, கடுக்காய், தானிக்காய், நெல்லிமுள்ளி, செவ்வியம், வால்மிளகு, கோஷ்டம், கசகசா, மல்லி, ஜடாமாஞ்சில், கிராம்பு, சாதிக்காய், லவங்கப்பட்டை, சுக்கு வகைக்கு பலம் ½ (அரை), சீரகம், ஏலம் வகைக்கு பலம் 1, இவைகளை உலர்த்தி சூர்ணித்து, பசும்பாலில் பிட்டம்வைத்து உலர்த்தி அத்துடன் நெய் படி 2, சீனிசேர் 2, தேன் படி 1¼ (ஒன்றேகால்), சேர்த்து பிசைத்து, ஒரு பீங்கானில் வைத்துக்கொண்டு பாக்களவு தினம் 2 தடவை சாப்பிட்டுவர வாதம் (80), மேகம் (20), மேகவாயு, மேகத்தடிப்பு, மேகஊறல் முதலிய சகல மேகசம்பந்தமான ரோகங்கள் குணமாகும். பத்தியம் புளி, புகை, ஸ்திரீபோகம் தள்ளவும்.

41-வது அத்தியாயம்.

வடகங்கள்.

புனுனி, கர்காடக ஸிரந்தங்களைப்பார்வையிட்டு மேக ராஜசுவர்ண வடகம், மதனபோக சுவர்ணவடகம் முதலிய மகா ஸிலாக்கியமான வடகங்கள் இந்த அத்தியாயத்தில் சொல்லப்படும்.

மேகராஜசுவர்ணவடகம்.

பறங்கிப்பட்டை, நன்னாரிவேர், வகைக்கு பலம் 40, பொடித்து இருதூணி ஜலத்திலபோட்டு எட்டிலொன்றாகக்காய்ச்சி வடித்த கசாயத்தில் சீனி கற்கண்டு சேர் 1 போட்டுப்பாகுசெய்து, அதில் சுக்கு, மிளகு, திப்பிலி, வகைக்குப் பலம் 2, சூர்ணித்து சேர்த்து பதத்தில் எடுத்து அதில் ஒரு விரா. வீதம் எடுத்து அதில் ¼ (வ) குன்றிமணியிடை ஸமசிவாய செந்தூரம், அல்லது ¼ (வ) குன்றிமணி யிடை ரசசெந்தூரமும், அரிசியிடை வீரசெந்தூரமும், சேர்த்துவைத்து மூடி சிறுத்தட்டைபில்லையாக்கி அதற்கு தங்கரேக்குகளால் கவசமிட்டு உலர்த்தி ஒரு கற்கார்க்கு சீசாவில்போட்டுவைத்துக்கொண்டு ஒரு பில்லை வீதம் தினம் 2 தடவை சாப்பிட்டுவர மேகம் (20) தீரும், தாதுபுஷ்டி உண்டாகும். பத்தியம் —பாலும் அன்னமுஞ் சாப்பிடவும்.

வாதஹரவடகம்.

ஒரு சேர் சீனியுடன் தேவையான ஜலத்தைச்சேர்த்து பாகுசெய்து அதில் வஸ்திரகாயஞ்செய்த வெண்மைநிறமுள்ள சுக்குத்தூள் சேர் 1 போட்டுக்கிண்டி பதத்தில் வரும்போது 10 துளி பெப்பர்மெண்ட் தயிலத்தை (Pepporment oil) விட்டு துளாவி எடுத்து ஒரு விரா. வீதம் பில்லைகளாக்கி சீசாவில்போட்டு வைத்துக்கொண்டு தினம் ஒரு பில்லைசாப்பிட்டுவர வாயு தீரும், பசி உண்டாகும். ரசபஸ்பம் தேனில் சாப்பிட்டு பிறகு இதைச்சாப்பிட மெத்த நன்மை செய்யும்.

சென்முக வடகம்.

3 பலம் நாறு இல்லாததும் தோலை நீக்கினதுமான இஞ்சியை சிறு துண்டுகளாக்கி அத்துடன் சீரகம், மிளகு, கொத்தமல்லிவிதையின் பருப்பு, இந்துப்பு, வகைக்கு பலம் 2 சேர்த்து, ஒரு பீங்கானில் போட்டு 3 நாள் போதுமான எலுமிச்சம் பழச்சாறுவிட்டு ஊறவைத்து, ரவியில் உலர்த்தி, மறுபடியும் புளிப்பு மாதுளைச்சாற்றால் 3 நாள் ஊறவைத்து பெருங்காயம் விரா. 1 சேர்த்து அரைத்து ஒரு பைசா அளவாக பில்லைகளாக்கி ரவியில் உலர்த்தி தினம் ஒரு பில்லைச்சாப்பிட்டுவர, அஜீர்ணம், அக்கினிமர்தம், பித்தம், வாதம் தீரும், பசி உண்டாகும்.

மதனபோக சுவர்ண வடகம்.

4 குருணி ஜலத்தில் மலாக்கா சந்தனக்கட்டை, பட்டை நீக்கின வில்வவேர், இவைகளின் கத்தியால் சீவின சீவல் வகைக்கு சேர் 5, நன்னாரிவேர் சேர் 4, விலாமிச்சுவேர் சேர் 2, கொறுக்கிப்போட்டு எரித்து ஒரு குருணியாக்கி வடித்த கசாயத்தில் சுக்கு, மிளகு, திப்பிலி, பறங்கிப் பட்டை, புரஷன்பிசின், வகைக்கு விரா. 5, எட்டிக்கொட்டை விரா. 1, சுத்திசெய்த கஞ்சா விரா. 1, பொடித்துப்போட்டு சுண்டக்காய்ச்சி, உலர்த்தி, அத்துடன் குங்குமப்பூ விரா. ½ (அரை], அபினி விரா. ½ (அரை) சேர்த்து கல்வத்திலிட்டு பன்னீரால் 2 ஜாமம் அரைத்து ½ (அரை) விரா. வீதம் சிறு பில்லைகளாக்கி ஒவ்வொரு பில்லைக்கும் தங்கரேக்கால் கவசமிட்டு சுவர்ணபில்லைபோலாக்கி உலர்த்தி தினம் 1 அல்லது 2 தடவை ஒரு பில்லை வீதம் சாப்பிட்டு உடனே பசும்பால் சேர் 1 குடித்துவர தாதுவிருத்தி, சுக்கிலத்தடிப்பு, தீபனம், தேகதேஜசு, உண்டாகும்.

சவுபாக்கிய வடகம்.

2½ சேர் இஞ்சிச்சாற்றில் 4 சேர் சீனியை சேர்த்து பாகுசெய்து அதில் சுக்கு. மிளகு, ஓமம், வகைக்கு பலம் 8, திப்பிலி, மல்லி, கோஷ்டம், அதிமதுரம், அக்கிராகாரம், பறங்கிப்பட்டை, கருவாப்பட்டை, குரோசாணி ஓமம், தாளிசப்பத்திரி, சித்தரத்தை, கண்டத்திப்பிலி, வகைக்கு பலம் 1, காசாவலம், கிராம்பு, சாதிக்காய், சாதிப்பத்திரி, வால்மிளகு, வகைக்கு விரா. 2½ (இரண்டரை) இவைகளை சூர்ணித்து சேர்த்துக்கிண்டி ஒரு சுத்தமான பலகையின் மேல் நெய்யைத்தடவி அதின்மேல் கொட்டி நெய்யைத்தடவின வாழை இலையால் ஒரே மட்டமாக்கிக் கத்தியால் சதுரபில்லைகளாக்கி 2-3 விரா. வீதம் தினம் காலையில் பிரசவித்த ஸ்திரீகள் பிரசவித்த 11-வது நாள் முதல் சாப்பிட்டுவர வாயுவை கண்டித்து தீபனத்தை உண்டாக்கி நிரோகிகளாக இருக்கச்செய்யும்.

ஸ்திரீபோகரத்ன வடகம்.

பட்டை நீக்கின வில்வவேர், நன்னாரிவேர், விலாமிச்சுவேர், மலாக்கா சந்தனக்கட்டை வகைக்கு வீசை 1, பொடித்து, இருதூணி ஜலத்தில் போட்டு எரித்து எட்டிலொன்றாக்கி வடிக்கவும். இந்த வடித்த கசாயத்தை மறுபடியும் எரித்து ஒரு ஆழாக்காக்கி அத்துடன் சீனிகற்கண்டு சேர் 1½ சேர்த்து பாகுசெய்து, அதில் சுத்திசெய்த ஜாதிக்காய், வால்மிளகு, நீர்முள்ளிவிதை, சிறு பூனைக்காலிவிதை, புது முருங்கைவிதை, நிலைப்பனைக்கிழங்கு, புரசன் பிசின், நிலக்கடம்பு, வகைக்குப் பலம் 1, சூர்ணித்து வஸ்திரகாயஞ்செய்ததூளும், கோரோசனை, குங்குமப்பூ, சுத்திசெய்த கஞ்சா, அபினி வகைக்கு விரா. 1 இவைகளின் தூளும், சேர்த்

துக்கின்டி பதத்தில் எடுத்து, ¼ (கால்) அணா அளவாக பில்லைகளா க்கி ஒவ்வொரு பில்லையின்மேல் (ஒருபக்கத்தில்) ¼ (கால்) அணா அளவாக தங்கரேக்கைத்தடவி ஒரு கற்றார்கு சீசாவில் போட்டுவைத்துக்கொண் டு தினம் ஒரு பில்லை சாப்பிட்டு அதின்மேல் 2 சேர் காய்ச்சின பசும் பாலை சாப்பிட்டுவர தாதுபுஷ்டி, சுக்கிலத்தடிப்பு, தேகதேஜசு, தீபனம், ஸ்திரிபோகவிருப்பம் இவைகள் உண்டாகும்.

அயக்காந்தவடகம்.

அரப்பொடி, காந்தம், ரசம், கந்தகம், லிங்கம், வகைக்கு பலம் 1 சுத்திசெய்து அத்துடன் பெருங்காயம் பலம் 1 சேர்த்து கல்வத்திலிட்டு கற்றாழைச்சாற்றால் 4 சாமம் அரைத்து அத்துடன் சுக்கு, மிளகு, திப் பிலி வகைக்கு பலம் 1 சூர்ணித்து சேர்த்து மறுபடியும் ஒரு சாமம் டை சாற்றால் அரைத்து ஒரு பைசா அளவாக பில்லைகளாக்கி உலர்த்தி சீசா வில்போட்டு வைத்துக்கொண்டு ஒரு பில்லை தேனில் தோய்த்து தினம் சாப்பிட்டுவர பாண்டு, சோகை, வீக்கம், குன்மம், சன்னி, வாயு தீரும்.

42-வது அத்தியாயம்.

* பாவனங்கள்.

பதார்த்தங்களை பற்பல ரசங்களில் ஊறவைத்து பக்குவப்படுத்துவ தால், ரசங்களின் குணங்களை பதார்த்தங்களின் குணங்களுடன் சேர் த்து அந்த பதார்த்தங்களுக்கு அதிவிசேஷ குணத்தை உண்டாக்கி அ நேக வித பலமான ரோகங்களை அதி சீக்கிரத்தில் குணமாக்க வல்லமை யுள்ள பாவனங்கள் இந்த அத்தியாயத்தில் சொல்லப்படும்.

பாவனக் கடுக்காய்.

100 பெருங்கடுக்காயை கழுநீரில் ஒரு நாள் ஊறவைத்து மறுநாளும் புதுக்கழுநீரில் ஊறவைக்கவும். இப்படி 9 தடவை செய்து எடுத்து கொ ட்டைகளை நீக்கி எலுமிச்சம்பழச்சாற்றில் ஒரு நாள் ஊறவைத்து எடுத்து 4 படி புளித்தமோரில் போட்டு சுண்டக்காய்ச்சி எடுத்துக்கொள்ளவும். மிளகு, சீரகம், திப்பிலி, சுக்கு, பெருங்காயம், வகைக்குப் பலம் 1, இந்து ப்பு பலம் 3, இவைகளைச் சூர்ணித்து டை கடுக்காய்களில் செலுத்தி உல ர்த்தி ஒரு ஜாடியில் வைத்துக்கொண்டு தினம் ஒரு கடுக்காய் காலையில் சாப்பிட்டுவர அரோசிகம், பித்தம், அக்கினிமந்தம், வாயு, குன்மம், தீரும், மலமிறங்கும்.

---

* சாற்றில் ஊறவைத்துப் பக்குவப்படுத்தப்படும் பதார்த்தத்திற்கு பாவனம் என்று பெயர்.

பாவனச் சீரகம்.

2 சேர் சீரகத்தை வல்லாரை, கையாந்தகரை, பொன்னாங்காணி, புளியாரை, இஞ்சி, எலுமிச்சம்பழம், இவைகளின் சாறுகளில் தனித்தனியே ஒரு நாள் ஊறவைத்து நிழலில் உலர்த்தி தினம் காலையில் 2 விராகனிடை வீதம் சாப்பிட்டுவர பித்தவாயு, உஷ்ணம், அக்கினி மந்தம், மலபந்தம், தீரும். ரத்த விருத்தி, தாது புஷ்டி உண்டாகும்.

பாவன மிளகு.

ஒரு சேர் நல்லமிளகை 2 சேர் கையாந்தகரைச்சாற்றில் போட்டுச் சுண்டக்காய்ச்சி, பிறகு 2 சேர் எலுமிச்சம்பழச் சாற்றில் போட்டு இந்துப்பு சேர் ½ சேர்த்துச் சுண்டக்காய்ச்சி நிழலில் உலர்த்தி தினம் காலை, மாலை 5-10 மிளகு சாப்பிட்டுவர அக்கினிமந்தம் உஷ்ணவாயு, தீரும். ரத்தவிருத்தியாகும்.

பாவனத்திப்பிலி.

ஒரு சேர் (பெரிய) அரிசித்திப்பிலியை கையாந்தகரை, வல்லாரை, நெய்ச்சுட்டி, சிறுகீரை, இஞ்சி, முசுமுசுக்கை, பொன்னாங்காணி, கீழாநெல்லி, நாயுருவி இவைகளின் சாற்றில் வகைக்கு மூன்று நாள் ஊறவைத்து, பிறகு எலுமிச்சம்பழச்சாறு சேர் 1, இந்துப்பு சேர் ½ இவ்விரண்டும் சேர்த்து அதில் 3 நாள் ஊறவைத்து உலர்த்தி தினம் காலையில் ஒரு திப்பிலியை சாப்பிட்டுவர காசம் (5), சுவாசம் (5), உஷ்ணவாயு, முதலியவைகள் தீரும், பசியை உண்டாக்கும்.

பாவன ஓமம்.

ஒரு சேர், ஓமத்தின் அரிசியை ஒரு நாள் புளித்த மோரில் ஊறவைத்து உலர்த்தி, பிறகு 2 சேர் எலுமிச்சம் பழச்சாறும், ½ சேர் இந்துப்பும் சேர்த்து அதில் 2 நாள் ஊறவைத்து உலர்த்தி தினம் 2 தடவை ஒரு விராகனிடைவீதம் கொடுக்க வயிற்றுவலி, அக்கினிமந்தம், வாயு, வயிற்றுப்பல், அஜீர்ணம் குன்மம், முதலிய பற்பல ரோகங்கள் குணமாகும்.

43-வது அத்தியாயம்.

ஹல்வாக்கள்.

யுனானி, கர்நாடக வைத்திய கிரந்தங்களில் சொல்லிய ஹல்வாக்களில் மோகவல்லி ஹல்வா, மதனசஞ்சீவி ஹல்வா, போகவல்லி ஹல்வா, முதலிய வெகு நல்ல ஹல்வாக்களை இந்த அத்தியாயத்தில் சொல்லப்படும். இவைகளைச்சாப்பிட்டு வருகின்றவர்களுக்கு தாது புஷ்டியையுண்டாக்கி அதின்திரி போகவிருப்பம் உண்டாகுமென்பதற்கு சந்தேகமில்லை.

மோகவல்லி ஹல்வா.

கார்ன் புளோர் (Corn Flour) மாவு சேர் 1, எருமை வெண்ணெய் சேர் 2, இவ்விரண்டும் சேர்த்து நுரை எழும்பும் வரையில் மத்தித்து 4 சேர் பாலில்கரைத்து அத்துடன் சுத்திசெய்த வாதுமைபருப்பு சேர் 1, கசகசா விராகனிடை 5, ஏலம் விராகனிடை 2, குங்குமப்பூ விராகனிடை ½ (அரை), இவைகளை பாலால் மைபோல் அரைத்துச்சேர்த்து, சீனி சேர் 2, பந்நீர் சேர் ½ (அரை), நெய் சேர் ½ (அரை), போட்டு எரித்து அடிக்கடி துழாவி சரியான பதத்தில் எடுத்து ¼ (கால்) சேர் வீதம் தினம் சாப்பிட்டுவர தேகபுஷ்டி, தாதுவிருத்தி, சுக்கிலத்தடிப்பு, உண்டாகும்.

மதன சஞ்சீவி ஹல்வா.

ஒருசேர் வாதுமைப்பருப்பை ஜலத்திலிட்டு ஊறவைத்து தோலை நீக்கி அத்துடன் ஏலம், ஜாதிக்காய், கிராம்பு, சாதிபத்திரி, வால்மிளகு வகைக்கு விராகனிடை 2½ (இரண்டரை), நெய்யில் வறுத்து சேர்த்து, கசகசா சேர் ½ (அரை), சாலாமிசரி சேர் ¼ (கால்) இவைகளையெல்லாம் சேர்த்து, பாலாலரைத்து 6 சேர் பசும்பாலில் கரைத்து எரித்து இடைவிடாமல் துழாயிக்கொண்டேயிருக்கவும். தடிப்பாய் வரும் சமயத்தில் நீர்முள்ளிவிதை, சிறு பூனைக்காலிவிதை வகைக்குப் பலம் 1, குங்குமப்பூ விராகனிடை ½ இவைகளை சூர்ணித்துப் போட்டுக்கிண்டி, பிறகு பந்நீர் சேர் ¼ (கால்), பசும்நெய் சேர் 1, சீனிக்கற்கண்டுத்தூள் சேர் 2, சேர்த்து பதத்தில் எடுத்து தினம் ¼ (கால்) சேர் வீதம் சாப்பிட்டுவர ஸ்திரீ போகத்தாலுண்டாகும் மேகம் முதலியவைகள் தீரும், தாதுபுஷ்டி உண்டாகும்.

போகவல்லி ஹல்வா.

சுத்திசெய்த வாதுமைப்பருப்பு பலம் 8, கசகசா பலம் 4, சாலாமிசரி பலம் 2, நீர்முள்ளிவிதை பலம் 1, ஜாதிக்காய் பலம் ½, வால்மிளகு பலம் ¼ (கால்), ஏலம் பலம் ⅛ (அரைக்கால்) இவைகள் பசும்பாலாலரைத்து 6 சேர் பசும்பாலில் கரைத்து 2 சேர் ஆக்கி அதில் பந்நீர் சேர் ½, நெய்சேர் 1, சீனிசேர் 2, போட்டுக்காய்ச்சி பதத்தில் எடுத்து தினம் ¼ (கால்) சேர் வீதம் சாப்பிட்டுவர நீர் எரிவு, போகத்தாலுண்டாகும் உஷ்ணம் தீரும். தாதுபுஷ்டி உண்டாகும்.

வாதுமை ஹல்வா.

கோதுமை, கசகசா, சவ்வரிசி, சுத்திசெய்த வாதுமைப்பருப்பு வகைக்கு சேர் ¼ (கால்), ஜலத்தில் ஊறவைத்து மைபோல் அரைத்து 4 சேர் பசும்பாலில் கரைத்து அதில் சீனி சேர் 1, பந்நீர் சேர் ¼ (கால்), நெய் சேர் ¼ (கால்), சேர்த்துக்காய்ச்சி பதத்தில் எடுத்து ¼ சேர் வீதம் சாப்பிட்டுவர தாதுபுஷ்டி உண்டாகும்.

கோதுமை ஹல்வா.

கோதுமையின் வெண்மையான ரவா (நொய்) யை எந்திரத்தி லிட்டு மாவாக்கினமாவும், பச்சை சம்பா அரிசியை ஜலத்தில் ஊறவைத்து எடுத்து இடித்து வஸ்திர காயம்செய்த மாவும் வகைக்கு ஆழாக்கு 1, எருமைப்பால், முற்றின தேங்காய்ப்பால் வகைக்கு படி 1, இவைகளில் சேர்த்துக் கரைத்து எரித்து அடிக்கடி துழாவிக்கொடுத்து பதத்தில் சீனி சேர் 1½, ஏலரிசிதூள் விராகனிடை 2, சுத்திசெய்த வாதுமைப்பருப்பு சேர் ¼ (கால்), நெய் சேர் ½, பந்நீர் சேர் ½ இவைகளை எல்லாம் சேர்த்து சரியான பதத்தில் எடுத்து ¼ (கால்) சேர் வீதம் தினம் சாப்பிட்டுவர தாதுபுஷ்டி உண்டாகும்.

44-வது அத்தியாயம்.

தாதுபுஷ்டி அவுஷதங்கள்.

இங்கிலீஷ், யுனானி, கர்நாடக கிரந்தங்களை பார்வையிட்டு மஹா சிரேஷ்டமான பலகாரிகள், தாதுபுஷ்டி, தேகபுஷ்டி, ரத்தவிருத்தி உண்டாகும் மருந்துகள் சர்வஜன உபகாரமாக இந்த அத்தியாயத்தில் சொல்லப்படும். அவைகளை சாப்பிட்டு வருகின்றவர்களுக்கு தேகத்தில் பலமும், தாதுபுஷ்டியும், தேகபுஷ்டியும், ரத்தவிருத்தியும் உண்டாகுவதற்கு யாதொரு சந்தேகமுமில்லை.

தேகத்தில் பலம் உண்டாக:—

1. விளாவின கந்தகத்திராவகம் 15 துளி, நிலவேம்புக்கசாயம் 10 கிராம், ஆரஞ்சிப்பழத்தோல் பாணிதம் 1 கிராம், இவைகளைச் சேர்த்து தினம் 3 தடவைக்கொடுக்க பலத்தை உண்டாக்கும்.

2. 5 கிரா. சிரகத்தை இரவில் ஒரு மண்குண்டானில் போட்டு, 4 அவுன்ஸ் ஜலத்தை விட்டு ஊறவைத்துக் காலையில் ஒரு கருங்கொச்சிக்கட்டையால் அரைத்துச் சாப்பிட்டுவர வச்சிர சரீரமுண்டாகும்.

3. விளாவின கந்தகத்திராவகம் 1½ கிராம், ஷின்கோனக்கசாயம் 6 அவுன்ஸ், இவைகளைச் சேர்த்து ஒரு அவுன்ஸ் வீதம் கொடுக்க பலத்தை உண்டாக்கும்.

4. நாகபஸ்மம் (Oxide of Zinc) 5 கிறேன்ஸ், ஜென்சன் சத்து 5 கிறேன்ஸ் இவைகளைச் சேர்த்து 2 மாத்திரைகளாக்கி காலையில் ஒன்றும், மாலையில் ஒன்றும் கொடுத்துவர பலத்தை உண்டாக்கும்.

5. பால் துத்தம் 1 திராம், ஜெண்சன் சத்து 20 கிறேன்ஸ், குவைனு ½ (அரை) திராம், மைசாமக்திப்பூத்தயிலம் 6 துளி இவைகளைச் சேர்த்து 30 மாத்திரைகளாக்கி தினம் 3 தடவை ஒரு மாத்திரை வீதம் கொடுத்துவர பலத்தை உண்டாக்கும். (Dr. Golding Bird).

6. பால்த்துத்தம் 6 கிறேன்ஸ், விளாவின கந்தகத்திராவகம் 45 துளி, ஆரஞ்சித்தோல் பாணிதம் ½ (அரை) அவுன்ஸ், ஆரஞ்சித்தோல் க்கசாயம் 5½ அவுன்ஸ், இவைகளைச் சேர்த்து ஒரு அவுன்ஸ் வீதம் தினம் 3 தடவைக் கொடுத்துவர பலத்தை உண்டாக்கும். (Dr. Druitt).

தேகத்தில் ரத்தம் ஊற:—

1. ஒருபலம் கிராம்பை இரவில் முலைப்பாலில் ஊறவைத்து மறுநாள் அந்தப்பாலால் மைபோலரைத்து தேன் பலம் ¾ (முக்கால்) விட்டு கொதிக்கவைத்து பதத்தில் எடுத்து கடலை அளவாக கொடுத்துவர, தீபனம், ரத்தவிருத்தி உண்டாகும்.

2. வெந்தியம், கோதுமை வகைக்கு ½ அவுன்ஸ் வறுத்து இரவில் பசும் பாலில் ஊறவைத்துக் காலையில் அதைக்கடைந்து வடித்து நெய், தேன், சர்க்கரை வகைக்கு ½ அவுன்ஸ் சேர்த்து தினம் காலையில் சாப்பிட்டுவர ரத்தவிருத்தி உண்டாகும், விந்து ஊறும்.

3. பலகாரிச்சூர்ணம்.
4. போஜனக்குடாரி மாத்திரை.
5. சுவர்ணமணி மாத்திரை.
6. நாராயண மண்டூர செந்தூரம்.
7. திரிலோகச் செந்தூரம்.
8. அயச்செந்தூரம்.
9. உருக்கு பஸ்மம்.
10. அயபஸ்மம்.
11. திராக்ஷ ஷர்பத்து.
12. பாவன சீரகம்.
13. பாவன மிளகு.

இவைகளை இந்த புஸ்தகத்தில் சொல்லியபடி செய்துக்கொடுக்க ரத்தவிருத்தி உண்டாகும்.

தாதுபுஷ்டி உண்டாக:—

1. ஒரு பிடி பச்சைக்கடலை இரவில் ½ (அரை) சேர் ஜலத்தில் போட்டு ஊறவைத்து காலையில் வடித்து அந்த ஜலத்தில் சாதிக்காய், சாதிப்பத்திரி வகைக்கு ½ (வ) திராம், சூர்ணித்துப்போட்டு, தேன் 2 திராம் சேர்த்துக்கொடுத்து வர வீரிய விருத்தி உண்டாகும்.

2. கசகசா, வால்மிளகு, வகைக்கு பலம் 2 இளவறுப்பாய் வறுத்து அத்துடன் வாதுமைப்பருப்பு, சீனி கற்கண்டு வகைக்கு பலம் 2 சேர்த்து கல் உரலில் போட்டுக் கடப்பாறையால் இடித்து லேகியமாக செய்து பாக்களவு தினம் 2 தடவை சாப்பிட்டுவர தாதுபுஷ்டி உண்டாகும்.

3. தாதுபுஷ்டிசூர்ணம்.
4. தாதுபுஷ்டி லேகியம்.
5. அயபஸ்மம்.
6. அப்பிரேக பஸ்மம்.
7. சுவர்ண பஸ்மம்.
8. சுவர்ண ரஜத பஸ்மம்.
9. அயகாந்த செந்தூரம்.
10. அயசெந்தூரம்
11. சுவர்ணமணி மாத்திரை.
12. கந்தக ரசாயனம்.
13. மதனபோக சுவர்ண வடகம்.
14. ஸ்திரீபோக ரத்தின வடகம்.
15. பாவன சீரகம்.
16. மோகவல்லி ஹல்வா.
17. மதன சஞ்சீவி ஹல்வா.
18. போகவல்லி ஹல்வா.
19. வாதுமை ஹல்வா.
20. கோதுமை ஹல்வா.

இவைகளில் எதைச் செய்து கொடுத்தபோதிலும் தாதுப்புஷ்டி உண்டாகும். இவைகளின் செய்முறை இந்த புஸ்தகத்தில் காண்க.

தேகப்புஷ்டி உண்டாக :—

1. மகாகூழ்ப்பாண்ட லேகியம்.
2. போகவல்லி ஹல்வா.
3. மீன் எண்ணெய் (Codliver oil).

இவைகளை இப்புஸ்தகத்தில் சொல்லியபடி செய்துக்கொடுக்க தேகபுஷ்டி உண்டாக்கும்.

☞ இன்னும் அநேக மருந்துகள் 13-வது அத்தியாயத்தில் காண்க.

45-வது அத்தியாயம்.

நஸ்யங்கள்.

கர்நாடக கிரந்தங்களில் சொல்லிய நஸ்யங்களில், அபஸ்மாரம், சன்னி முதலிய மகா கரேமுள்ள ரோகங்களை குணமாக்குவதில் வெகு கீர்த்தியைப்பெற்ற நஸ்யங்களை இந்த அத்தியாயத்தில் சொல்லப்படும். இவைகள் சாமான்யமானவைகளல்ல.

வங்கேசுவர ரசநஸ்யம்.

ரசம், மனோசிலை, கந்தகம், சுக்கு, திப்பிலி, அக்கிராகாரம், வெண்நாவி, கருநாவி, வெங்காரம் வகைக்கு விரா. 1, மிளகு விரா. 9, இவைகளில் ரசமும் கந்தகமும் கல்வத்திலிட்டு அரைத்து பிறகு கொஞ்சம்

மிளகும் மற்ற சரக்குகளும் போட்டு அரைத்து நீல நிறமாக தோன்றின வுடனே பாக்கி மிளகை போட்டு 4 ஜாமம் அரைத்து ஒரு சீசாவில் போட்டு வைத்துக்கொண்டு கொஞ்சம் எடுத்து நஸ்யமிட, சன்னி, தோஷம், மண்டைசிலேஷ்மம் முதலிய பலமான ரோகங்கள் குண மாகும்.

சர்வேசுவர ரசநஸ்யம்.

ரசம், கந்தகம், நாவி, மனோசிலை, வெங்காரம், சுக்கு, மிளகு, திப்பிலி, இலைகளை சமமாக சேர்த்து, கல்வத்திலிட்டு 4 ஜாமம் அரைத்து ஒரு சீசாவில் போட்டு வைத்துக்கொண்டு, கொஞ்சம் எடுத்து நஸ்ய மிட, சன்னி, மயக்கம், மண்டைகபம் முதலிய பற்பல கொடிய ரோகங் கள் குணமாகும்.

காலபைரவ நஸ்யம்.

ஒரு துணியை மூட்டைப்பூச்சிகளின் ரத்தத்தில் நனைத்து உலர் த்தி, ஒரு கற்கார்க்கு சீசாவில் போட்டுவைத்துக்கொண்டு, 4 வித அபஸ் மார ரோகங்களுக்கு, கழுதை மூத்திரத்தில் நனைத்து 3 நாள் நஸ்யமிட நாள்பட்ட ரோகமாயிருந்தபோதிலும் குணமாகும்.

46-வது அத்தியாயம்.

புகைச்சல்கள்.

கந்தகப்புகைச்சல்.—Sulphur vapour bath.

மூங்கிற்பத்தைகளால் கோழிக்கூடுபோல் ஒரு கூடுசெய்து சிரசு நுழையும்படி ஒருதுவாரம் மேல்பக்கத்தில் வைத்து, மெழுகுதுணியால் பக்குவமாய் மூடி, அதில் சிரசு வெளியில் இருக்கும்படி நோயாளியை உட்காரவைத்து, புகை வெளிப்படாமல் இருக்க கழுத்திருக்கிற இடத்தில் துணியாலடைத்து, கந்தகத்தை ஒரு சிறு தட்டில் போட்டு நெருப்பின்மேல் வைத்து கூண்டுக்குள் வைக்க, கந்தகம் புகைந்து சரீர மெங்கும் படும். 10–15 நிமிஷம் வரையில் நோயாளியை வைத்திருந்து பிறகு வெளிப்படுத்திவிடவேண்டியது. இந்தச்சிகிச்சை கருமரோகங் கள், கீல்வாத ரோகம் இவைகளுக்குச்செய்தால் வெகு நன்மைசெய்யும்.

ரசப்புகைச்சல்—Fumigation.

மேல்சொல்லியபடி ஒருகூடு செய்து அந்தக்கூட்டில் நோயாளியின் தலை வெளியிலிருக்கும்படி உட்காரவைத்து 1 அல்லது 2 கிராம் பிளாக் ஆக்ஸைட் ஆப் மெர்க்யூரி (Black Oxide of Mercury) என்னும் ரஸ ப்ஸ்பத்தை இரும்புத்தட்டில் போட்டுச் சுடவைத்தால், அதிலிருந்து

புகை எழும்பி தேகமெங்கும் படும்; அந்தப்புகையை ஆக்கிராணித்தால் சீக்கிரத்தில் வாயைப்பிடிக்கும். ரணம் முதலியவைகளுக்கு ரசப் புகை போட்டால் வெகு நன்மைசெய்யும்.

47-வது அத்தியாயம்.

விரேசனகாரிகள்.

அநேக ரோகங்கள் மலபந்தத்தால் உண்டாகுவதால் மலத்தை கிரமப்படுத்த மஹாசிரேஷ்டமான அவுஷதங்களாகிய மாத்திரைகள், சூர்ணங்கள், லவணங்கள், குழம்புகள், எண்ணெய்கள் முதலிய அநேக வித ரூபங்களாக இருக்கின்ற விரேசனகாரிகள் சகலஜனங்களுக்கு அதி உபயோகமாகும்பொருட்டு இந்த அத்தியாயத்தில் சொல்லப்படும். அவைகளை சாப்பிட்டால் வாதபித்தசிலேஷ்ம கெட்டநீர்களை வெளியாக்கி அரோக்கிய ஸ்திதியில் வைக்கும் என்பதற்குச் சந்தேகமில்லை.

மாத்திரைகள்:—

(1) ரசபஸ்மம் பலம் 1, சுத்திசெய்த லிங்கம் பலம் 2, சுத்திசெய்த வெங்காரம் பலம் 3, சுக்கு பலம் 4, சுத்திசெய்த நேர்வாளப் பருப்பு பலம் 5, இவைகளை கல்வத்திலிட்டு குரோசாணி ஓமம் கசாயத்தால் மைபோலரைத்து குன்றிமணி அளவாக மாத்திரைகளாக்கி ஒரு மாத்திரைகொடுக்க நன்றாய் பேதியாகும். பேதி அதிகமானால் மோரும் அன்னமும் சேர்த்துச்சாப்பிடவும்.

(2) சுக்கு பலம் 1, ரோஜாமொட்டு பலம் 2, சுத்திசெய்த நேர்வாளப் பருப்பு பலம் 3, இவைகளை கல்வத்திலிட்டு சந்தனக்கட்டை, சண்பகப்பூ இவைகளின் கசாயத்தால் ஒரு ஜாமம் அரைத்து குன்றிமணி அளவாக மாத்திரைகளாக்கி ஒரு மாத்திரைகொடுக்க செவ்வையாய் பேதியாகும்.

(3) சுத்திசெய்த நேர்வாளப்பருப்பு பலம் 5, சுத்திசெய்த லிங்கம், சுத்திசெய்த வெங்காரம், ரசபஸ்மம், ரசசெந்தூரம் வகைக்கு பலம் ½, சுக்கு பலம் 2, மிளகு பலம் 1, திப்பிலி பலம் ½ இவைகள் எல்லாம் கல்வத்திலிட்டு விளாம்பிசின் ஜலத்தால் மைபோலரைத்து குன்றிமணி அளவாக மாத்திரைகளாக்கி ஒரு மாத்திரைகொடுக்க வாதம், பித்தம், சிலேஷ்மம் இவைகளைக் கண்டித்து செவ்வையாய் பேதியாகும்.

(4) லிங்கபேதிமாத்திரை ...	இவைகளில் எதைசெய்து கொடுத்தபோதிலும் வாத பித்த சிலேஷ்மரோகங்களை கண்டித்து செவ்வையாய் பேதியாகும். செய்முறை இந்தப்புஸ்தகத்தில் காண்க.
(5) காக்கணன்வேர் பேதிமாத்திரை	
(6) ரசலிங்கபேதி மாத்திரை ...	
(7) பானுபிரகாச மாத்திரை ...	
(8) ரசமாத்திரை ...	

சூர்ணங்கள் :—

(1) ¼ (கால்) பலம் உலர்ந்த ரோஜாமொட்டுகள் நெய்யில் வறுத்து சூர்ணித்து அதற்கு சமமாக சர்க்கரை சேர்த்துச்சாப்பிட, தண்ணீர் தண்ணீராய் பேதியாகும்.

(2) கலவை ஜாலப் சூர்ணம்
(3) கலவை ஸ்காமொனிச்சூர்ணம்
(4) கலவை ரூபார்ப் சூர்ணம்
} இவைகளை புஸ்தகத்தில் பார்வையிட்டு செய்துக்கொடுக்க பேதியாகும்.

உப்புகள் :—

(1) எப்சம் ஸால்ட்
(2) ரோசல் ஸால்ட்
(3) பாஸ்பேட் ஆப் சோடா
} இவைகளில் எதையாகிலும் அளவை புஸ்தகத்தில் பார்வையிட்டு அனுபானத்தில் கொடுக்க செவ்வையாய் பேதியாகும்.

எண்ணெய்கள் :—

(1) சேர்வாள எண்ணெய் } ½-1 துளி சர்க்கரையில் அவசியமாய் இருந்தால் கொடுக்கலாம். அதிகமாய் பேதியாகும்.

(2) சிற்றாமணக்கெண்ணெய் } கசாயம் முதலிய அனுபானத்தில் கொடுக்க பேதி செவ்வையாய் ஆகும்.

(3) கணத்தெண்ணெய் } இப்புஸ்தகத்தில் பார்வையிட்டு செய்து கொடுக்க பேதியாகும்.

குழம்புகள் :—

(1) கும்மட்டிக்காய்க் குழம்பு
(2) லிங்கக்குழம்பு
} இவைகளில் எதையாகிலும் இப்புஸ்தகத்தில் பார்வையிட்டு செய்துகொடுக்க பேதியாகும்.

மிக்ஸ்சேர்கள் (mixtures) :—

(1) பைசல்பேட் ஆப் பொட்டாஸ், கார்போனெட் ஆப் சோடா வகைக்கு ஒரு கிராம், வெவ்வேறாக 2 அவுன்ஸ் ஜலத்தில் கரைத்து சேர்க்க, பொங்கும்போது சாப்பிடவும். மலத்தை உதைக்கும், உஷ்ணத்தைத்தணிக்கும். (Dr. Barker)

(2) மாக்னிஷியா கார்போனெட் 40 கிறேன்ஸ், ரேவல்சின்னி (Rhubarb) 15 கிறேன்ஸ், சுக்குத்தூள் 5 கிறேன்ஸ், இவைகளை சேர்த்துக்கொடுக்க மலம் இறங்கும்.

(3) ரோஜாப்பூக்கஷாயம் 5½ அவுன்ஸ், எப்ஸம் ஸால்ட 6 கிராம், எலுமிச்சம்பழப்பாணிதம் ½ அவுன்ஸ், இவைகளைச்சேர்த்து 4–8 கிராம் கொடுக்க மலம் இறங்கும்.

(4) சீமை இந்துப்பு (Epsom salt) 6 கிராம், மேனா 2 கிராம், வெந்நீர் 1½ அவுன்ஸ் இவைகளை சேர்த்துக்கொடுக்க செவ்வையாய் பேதியாகும்.

துவையல்கள் :—

சரக்கொன்றைப்புளி, மொளகாய், உப்பு, புளி, இஞ்சி, பெருங்காயம் இவைகளைச்சேர்த்து துவையல்செய்து இராச்சாப்பாட்டுடன் 1-2 கொட்டைப்பாக்கு அளவுச்சாப்பிட காலையில் மலம் தாராளமாயிறங்கும்.

லேகியங்கள் :—

(1). கடுக்காய்பிஞ்சு, சூரத்துக்கடுக்காய், சூரத்துக்கருப்பு, உப்பு, சுக்கு, சோம்பு, தான்றிக்காய், நெல்லிவற்றல், வகைக்கு பலம் 1, கடுக்காய், நிலாவாரை வகைக்கு பலம் 2, கொத்தமல்லிவிதை பலம் 3, இவைகளை சூர்ணித்து வஸ்திரகாயஞ்செய்து அத்துடன் தேன் தேவையானது சேர்த்து லேகியமாக்கி 1-3 கொட்டைப்பாக்களவு படுக்கைக்குபோகுமுன் தினம் சாப்பிட காலையில் மலம் தாராளமாய் இறங்கும்.

(2). சிற்றாமணக்கெண்ணெய் படி 1, இதில் பேயன்வாழைப்பழம் 30, கற்கண்டுத் தூள், சிரகத்தூள் வகைக்கு சேர் ½, சேர்த்து ஒரு பீங்கானில் போட்டு வெய்யிலில் 8 நாள் வைத்து லேகியபதமாக்கி காலையில் 2-4 பாக்களவு சாப்பிட்டுவர மலம் இறங்கும். உஷ்ணம் போகும்.

☞ இன்னும் அநேக மருந்துகள் 13-வது அத்தியாயத்தில் காண்க.

48-வது அத்தியாயம்.

பிளாஸ்திரிகள்.

இங்கிலிஷ், யுனானி, கர்நாடக கிரந்தங்களில் சொல்லிய பிளாஸ்திரிகளில் மேகரணம், தீப்பட்டரணம், ஆறாதரணம், கத்திகாயம், முதலிய பற்பல ரணங்களை ஆற்றவும்; மேக கட்டிகள், வாயுகட்டிகள் முதலியவைகளைக் கரைக்கவும் கைகண்ட பிளாஸ்திரிகளை இந்த அத்தியாயத்தில் சொல்லப்படும்.

ஈயப்பிளாஸ்திரி—(கர்நாடகமுறை).

ஈயச்செந்தூரம் பலம் 1, ரசகர்ப்பூரம் விரா. ½ (அரை), மிருதார்சிங்கு விரா. ½ (அரை), முத்துவெள்ளை விரா. 1, நல்லெண்ணெய் சேர் ¼ (வ), இவைகளைச்சேர்த்துக் கறுப்பு நிறம் வரும் பதத்தில் காய்ச்சி எடுத்து ஒரு தகர டப்பாவில் போட்டுவைத்துக்கொண்டு கொஞ்சம் எடுத்து துணியில் தடவிபோட ரணம் ஆறும்.

ரசப்பிளாஸ்திரி—Mercury plaster.

இங்கிலீஷ்முறை.

ஒரு அவுன்ஸ் ஆலிவ் எண்ணெயில் கந்தகம் 64 கிறேன்ஸ் சேர்த்து அரைத்து, பிறகு 24 அவுன்ஸ் ரசத்தைச் சேர்த்து, ரசஅணுக்கள் கண்களுக்குத் தெரியாமல் போகிறவரையில் அரைத்து, அத்துடன் 4 பவுண்டு மிருதார்சிங்கு பிளாஸ்திரியை சிறு தீயிட்டு உருக்கி கொஞ்சம் கொஞ்சமாய் சேர்த்துக்கொள்ளவேண்டியது.

செய்கை:—உஷ்ணகாரி, சோபாகாசகாரி.

உபயோகம்:—இதை துணி அல்லது தோலின்மேல் தடவி கட்டிகள், தடிப்புகள், வீக்கங்கள் இவைகளுக்குப் போடகரைத்துவிடும்.

மிருதார்சிங்கு பிளாஸ்திரி—Lead plaster.

ஒரு பவுண்டு மிருதார்சிக்குத்தூளை, 8 பைண்ட் ஆலிவ் எண்ணெய், 2 பைண்ட் ஜலம் இவைகளுடன் சேர்த்து சிறுதீயிட்டு எரித்து இடைவிடாமல் துழாவிகொண்டே இருக்கவும். பிளாஸ்திரி பதத்துக்கு வரும் வரையில் ஜலம்சுண்டிப்போனால் தீ நீரை கொஞ்சம் சேர்த்துக்கொள்ள வேண்டியது.

உபயோகம்:—இதை கத்திவெட்டு காயத்தின் இரண்டு பிரிவுகளை சேர்க்கவும், கட்டிகளை க் கரைக்கவும் உபயோகிக்கப்படும்.

ஸ்டிக்கிங் பிளாஸ்திரி—Sticking plaster.

3 பவுண்ட் மிருதார்சிக்கு பிளாஸ்திரியை உருக்கி, அத்துடன் ½ (அரை), பவுண்ட், ரோஜனத்தையும் உருக்கி சேர்த்துக்கொள்ளவேண்டியது.

உபயோகம்:—இது சருமத்தை உஷ்ணிப்பதால் சில வியாதிகளுக்கு உபயோகிக்கலாகாது. இதை துணியில் தடவி காயங்கள், கட்டிகள், ரணம் இவைகளுக்குபோடப்படும்.

ஐயோடைட் ஆப் போடாஸியம் பிளாஸ்திரி.

Iodide of pottassium plaster.

3 அவுன்ஸ் சாம்பிராணியும், 3 திரா. மெழுகும் சேர்த்து உருக்கி அதில் ½ (அரை), அவுன்ஸ் ஐயோடைட் ஆப் போடாஸ்ஸியத்தை, 1 திராம் ஆலிவ் எண்ணெயில் அரைத்து சேர்த்து, அனலை விட்டிறக்கி குளிருகிற வரையில் துழாவவேண்டியது.

உபயோகம்:—இதை துணியில் தடவி வீக்கம், கட்டிகள் இவைகளுக்கு போடக்கரையும்.

கால்பேனம் பிளாஸ்திரி—Galbanam plaster.

4 அவுன்ஸ் கால்பேனம், 4 திராம் டர்பன்டயின் இவைகளைச் சேர்த்து உருக்கி, அத்துடன் 12 திராம் குக்கிரகம் பிசின், 18 அவுன்ஸ் மிருதார்சிங்குப் பிளாஸ்திரி இவைகளை முதலில் சிறு தீயால் உருக்கி சேர்த்துக்கொள்ளவும்.

உபயோகம்:—இதை துணியில் தடவிக் கட்டிகளுக்குப்போட கட்டிகள் கரையும்.

மடல்துத்தச்சேந்தூரப் பிளாஸ்திரி.

Calamine plaster.

15 அவுன்ஸ் மெழுகை உருக்கி. 2 பையின்ட் ஆலிவ் எண்ணெயைச் சேர்த்து காய்ச்சி, தீயை விட்டிறக்கி, இறுகிபோகிற பதத்தில் 15 அவுன்ஸ் மடல்துத்தச் செந்தூரத்தைச் சேர்த்து குளிர்ச்சியாகிற வரையில் விடாமல் துழாவ வேண்டியது.

உபயோகம்:—இதை துணியில் தடவி அக்கினி ரணம், தோலெரிவு, ரணங்கள் முதலியவைகளுக்கு போட குணமாகும்.

எரிவண்டுப் பிளாஸ்திரி—Cantharidis plaster.

12 அவுன்ஸ் பன்றிநெய், 15 அவுன்ஸ் மெழுகு, 15 அவுன்ஸ் ஆட்டுக்கொழுப்பு, இவைகளை சேர்த்து உருக்கி, 6 அவுன்ஸ் ரோஜனத்தை முன்னதாகவே உருக்கி சேர்த்து, நெருப்பைவிட்டு இறக்கி, உறைந்து போக ஆரம்பிக்கிற தருணத்தில் 2 பவுண்ட் எரிவண்டுச் சூரணத்தைப் போட்டு மிஸ்ரித்துக் கொள்ளவேண்டியது.

உபயோகம்—இதை கொப்புளம் எழுப்பி புண்ணாக்க உபயோகிக்கப்படும். சிலவேளை புண்ணாக்கவேண்டிய இடத்தில் கடுகை அரைத்து போட்டு பிறகு இதைப் போடவேண்டியதாயிருக்கும்.

49-வது அத்தியாயம்.

தூபங்கள்.

நோயாளிகள் படுத்திருக்கும் அறை முதலிய இடங்களிலுள்ள நாற்றங்களை வெளியாக்க தூபங்கள் போடப்படும். சூர்ணரூபமாயும் வத்திரூபமாயும் இருக்கின்றவைகள் இந்த அத்தியாயத்தில் சொல்லப்படும்.

☞ இந்த தூபங்கள் சுவாமிகளுக்கும், சுபகாரியங்களுக்கும் அதிவிசேஷமாய் உபயோகப்படுத்திவருகிறார்கள்.

கோஹலாப்பூர் தேசத்திய தசாங்குச் சூர்ணம்.

அகிற்கட்டை, மலாகா சந்தனக்கட்டை, தேவதாருக்கட்டை, அனுசிப்பூ, சன்னலவங்கப்பட்டை, ஏலம், கிராம்பு, சாதிக்காய், சாதிப்பத்திரி, உலர்ந்த மருக்கொழுந்து, வெட்டிவேர், கல்பாசி, கர்ப்பூரம், கார்போகரிசி, கோரைக்கிழங்கு, சாம்பிராணி, மட்டிப்பால், மகளம்பூ, கருவாப்பட்டை, பச்சைஇலை, பூசாந்திப்பட்டை, கிளியூரம்பட்டை, பலகைமஞ்சள், பூலாங்கிழங்கு, சடாமாஞ்சி, தாளிசப்பத்திரி, லவங்கப்பத்திரி, கோஷ்டம் சித்தரத்தை, அதிமதூரம், லவங்கப்பட்டை, பிசின்பட்டை, தேன், பசுவின் நெய், சோம்பு, நன்னாரிவேர், விலாமிச்சுவேர், சிறுநாகப்பூ, நிரயாசிப்பால், குகிலு, சண்பகமொக்கு, இவைகள் எல்லாம் சமமாக சூர்ணித்து ஒருஜாடியில் போட்டுவைத்துக்கொண்டு நோயாளி படுக்கையின் இடத்தில் நெருப்பின்மேல் போடப் புகைந்து நாற்றத்தை போக்கும். இந்த தசாங்கு சுவாமிகளுக்கும் விசேஷமாய் உபயோகப் படுத்திவருகிறார்கள்.

பண்டரிப்பூர் தேசத்திய தசாங்குச் சூர்ணம்.

பூலாக்கிழங்கு, தேவதாரக்கட்டை, அகிற்கட்டை, அகருக்கட்டை, கருங்குங்கிலியம், தாளிசப்பத்திரி, நன்னாரிவேர், சாம்பிராணி, வகைக்குப்பலம் 2, மலாகா சந்தனக்கட்டை பலம் 6, பூஞ்சாந்துப்பட்டை பலம் 3, கிளியூரம்பட்டை, கோஷ்டம், பச்சைஇலை, வகைக்கு பலம் 1½, கொம்பரக்கு, கல்பாசி, சண்பகமொக்கு, மட்டிப்பால், அனுசிப்பூ, குகிலு, நிரயாசிப்பால், வெட்டிவேர், விலாமிச்சுவேர், லவங்கப்பத்திரி, சடாமாஞ்சி, சாதிக்காய் வகைக்கு பலம் 1, உலர்ந்த மருக்கொழுந்து, சிறுநாகப்பூ, கிராம்பு வகைக்கு பலம் ¾ (முக்கால்) சித்தரத்தை, கோரைக்கிழங்கு, மல்லி, ஏலம், கஸ்தூரிமஞ்சள், சோம்பு, வகைக்கு பலம் ½, தேன் பலம் 1¼ (ஒன்றேகால்), வெல்லச்சர்க்கரை பலம் 2, பசும்நெய் பலம் 2, இவைகள் எல்லாம் சூர்ணித்து ஷை நெய்யில் கலந்து ஜாடியில் போட்டு வைத்துக்கொண்டு மேல்சொல்லியபடி உபயோகப் படுத்திக்கொள்ளவும்.

காசிதேசத்திய தசாங்குச் சூர்ணம்.

பூலாக்கிழங்கு பலம் 1½ (ஒன்றரை), அகிற்கட்டை, தேவதாருக்கட்டை, மலாக்கா சந்தனக்கட்டை, கருங்குங்கிலியம், வகைக்கு பலம் 2, கிளியூரம்பட்டை, மட்டிப்பால், நிரயாசிப்பால், பெருஞ்சீரகம், சமுத்திராபச்சை, வகைக்கு பலம் 1, கோஷ்டம், ஏலம், சிறுநாகப்பூ, சன்னலவங்கப்பட்டை, தாளிசபத்திரி, சடாமாஞ்சில், கஸ்தூரிமஞ்சள், மருக்கொழுந்து, சண்பகமொக்கு, சித்தரத்தை, மல்லி, விலாமிச்சுவேர், நன்னாரிவேர், அனுசிப்பூ, நாகணம், புனுகுச்சட்டம், வெற்றிவேர்,

வகைக்குப் பலம் ½ (அரை), பசும்நெய் பலம் 2, இவைகளில் நாகணம், அறுசிப்பூ, சிறுநாகப்பூ, சண்பகப்பூ, பெருஞ்சீரகம், இவைகள் நெய்யால் கொஞ்சம் வறுத்து சூர்ணித்து அத்துடன் மற்ற சரக்குகளை உலர்த்தி சூர்ணித்து சேர்த்து ஷை நெய்யில் மிஸ்ரித்து ஜாடியில் போட்டு வைத்துக்கொண்டு மேல் சொல்லியபடி உபயோகித்துக்கொள்க.

லக்னோதேசத்திய தூபவத்தி.

1. பூஞ்சாந்திப்பட்டை, லவங்கம், மலாக்கா சந்தனம், நிரயாசிப் பால் வகைக்கு பலம் 1½ (ஒன்றரை), மட்டிப்பால் பலம் 2, சாம்பிராணி, அகருக்கட்டை வகைக்கு பலம் 3, கல்பாசி, லவங்கப்பட்டை, கோஷ்டம், சடாமாஞ்சில், வெட்டிவேர், தேவதாருக்கட்டை, கற்கண்டு, தேன் வகைக்குப் பலம் 1, தாளிசப்பத்திரி, சன்னலவங்கப்பட்டை, அகிற் கட்டை வகைக்கு பலம் ¾ (முக்கால்), இளியூரம்பட்டை, லவங்கப்பத்திரி, நன்னாரிவேர், விலாமிச்சுவேர், அதிமதுரம், சிறுநாகப்பூ, வகைக்கு பலம் (அரை), பச்சையிலை, சித்தரத்தை, மல்லி வகைக்கு பலம் ¼ (கால்) இவைகள் எல்லாம் பொடித்து அரைத்துக்கொண்டு, மறுபடியும் இரண்டாந்தடவை அரைக்கையில் பிசின் பட்டை பலம் 1 சேர்த்து அரைத்துக்கொள்க. பிறகு அத்துடன் புனுகுச்சட்டம், பூலாக்கிழங்கு, பூர்ஜப் பத்திரி, ஜௌலம் வகைக்கு விராகனிடை 1, கைநீர் விராகனிடை (அரை), பச்சைக்கர்ப்பூரம், கஸ்தூரி வகைக்கு விரா. ⅛ (அரைக்கால்), இவைகளை மைபோலரைத்துச் சேர்த்து மிஸ்ரித்துக்கொண்டு, பிசின்பட்டை ஒரு பாத்திரத்தில் ஊறவைத்து அந்த ஜலத்தை மூங்கிலின் சீவின குச்சிகளுக்குத் தடவி பின்பு அரைத்த மொத்தையில் கொஞ்சம் கொஞ்சமாக அப்பி பலகையின்மேல் உருட்டி வத்திகளாக்கி உலர்த்தி கொளுத்திவைக்க நாற்றத்தைப் போக்கும்.

2. மலாகா சந்தனக்கட்டை பலம் 5, சாம்பிராணி பலம் 2½, வெல்லசர்க்கரை பலம் 2¼ (இரண்டேகால்), பூஞ்சாந்திப்பட்டை, கோஷ்டம், கற்கண்டு, சடாமாஞ்சில், விளாம்பிசின் வகைக்கு பலம் 2, காரப்போகரிசி பலம் 1¾ (ஒன்றேமுக்கால்), தேன், மட்டிப்பால், நிரயாசிப் பால், வகைக்குப் பலம் 1¼ (கவ), தாளிசப்பத்திரி, விலாமிச்சுவேர், இளியூரம்பட்டை, கஸ்தூரிமஞ்சள், சிறுநாகப்பூ, அகிற்கட்டை, தேவதாருக் கட்டை, பூலாக்கிழங்கு, நன்னாரிவேர், பச்சையிலை, லவங்கப்பட்டை, வெட்டிவேர், சண்பகமொக்கு, கோரைக்கிழங்கு, வகைக்கு பலம் 1, கிராம்பு பலம் ¾ (முக்கால்), சாதிக்காய், சாதிப்பத்திரி, ஏலம் வகைக்குப் பலம் ½ (அரை) இவைகளை எல்லாம் சூர்ணித்து மேல் சொல்லிய படி செய்துக்கொள்க. வத்திகளைக் கொளுத்திவைக்க நாற்றத்தைப் போக்கும்.

☞ இந்த வத்திகள் சுவாமிகளுக்கும் அதி விசேஷமாய் உபயோகித்து வருகிறார்கள்.

50-வது அத்தியாயம்.

* லேபனங்கள்.

சில மனிதர்களின் தேகத்தில் கற்றாழை நாற்றம், கருவாடு நாற்றம் வீசுவதால், உள்ளுக்கு மருந்துகளைச் சாப்பிடுவதுந்தவிர மேலுக்கு லேபனஞ்செய்வதில் சகுணத்தைத் தருவதால் அவைகள் இந்த அத்தியாயத்தில் சொல்லப்படும்.

புதுக்கோட்டை சந்தனபில்லை.

1. தாளிசப்பத்திரி பலம் 32, பூலாக்கிழங்கு பலம் 24, சடாமாஞ்சில், கிளியூரம்பட்டை, வகைக்குப்பலம் 16, கோஷ்டம், சோம்பு, வெட்டிவேர், கஹாலம், நாகணம், வகைக்குப்பலம் 8, சாதிக்காய், கருவாப்பட்டை, சித்தரத்தை, கோரைக் கிழங்கு, வகைக்குப் பலம் 5, இவைகளை பொன் நிறமாய் வறுத்து சூர்ணித்து அத்துடன் ஏலம், கிராம்பு, பச்சையிலை, புனுகுச்செக்கை, வகைக்குப் பலம் 8, குங்குமப்பூ, கோரோசனை வகைக்குப்பலம் 10, பச்சைக்கர்ப்பூரம் பலம் 4, இவைகளை உலர்த்தி சூர்ணித்து சேர்த்து மைபோல் பன்னீரால் அரைத்து அத்துடன் 40 பலம் மலாக்கா சந்தனக்கட்டை அரைத்து சேர்த்து, பிறகு எல்லாம் சேர்த்து அரைத்து, அத்துடன் சவ்வாது விராகனிடை 2 சேர்த்து மிஸ்ரித்து, பில்லைகளாக அச்சியால் தட்டி உலர்த்தி ஒரு சீசாவில் போட்டு வைத்துக்கொண்டு தினம் 2 தடவை கொஞ்சம் ஜலத்தில் சேர்த்து உடம்பில் பூசிக்கொள்ள கற்றாழை நாற்றம், கருவாடுநாற்றம் குணமாகும். ஸ்திரீபோக விருப்பம் உண்டாகும்.

2. பச்சைகர்ப்பூரம், குங்குமப்பூ, வகைக்கு விராகனிடை ¾ (முக்கால்), ஏலம், கிராம்பு, சாதிப்பத்திரி, வகைக்கு விராகனிடை ½ (அரை), சாதிக்காய், விராகனிடை 1, புனுகுச்சட்டம், குலாபு அத்தர், சாம்பிராணித்தயிலம் வகைக்கு விராகனிடை 3, பன்னீர் விராகனிடை 6, கிரயாசிப்பால் விராகனிடை 2, மட்டிப்பால் விராகனிடை 2½ (இரண்டரை) சந்தகாதி அத்தர் விராகனிடை 5, சவ்வாது விராகனிடை ½ (அரை), மலாக்கா சந்தனக்கட்டை விராகனிடை 16, இவைகளில் ஏலம், கிராம்பு, சாதிக்காய் சாதிப்பத்திரி, இந்நான்கும் ஜலத்தால் மைபோல் அரைத்து பிறகு அத்துடன் சந்தனக்கட்டை ஜலத்தால் அரைத்து

* லேபனம் என்பது வாசனத்திரவியங்களைச் சேர்த்து உண்டான சந்தனம் (இதற்கு சந்தனபில்லைகள் என்று சொல்லப்படும்) ஜலத்தில் கரைத்து உடம்பில் பூசிக்கொள்வதாம்.

சேர்த்து, பிறகு மற்றவைகளும் சேர்த்து மைபோல் அரைத்து அச்சியால் பில்லைகளாக்கி உலர்த்தி, கொஞ்சம் ஜலத்தில் கரைத்து உடம்பில் பூசியரவை வியாதிகள் தீரும்.

இந்த சந்தனபில்லைகள் சுபகாரியங்களுக்கு அதிவிசேஷமாக உபயோகித்து வருகிறார்கள்.

51-வது அத்தியாயம்.

இதுவரையிலும் அவுஷ்தங்களின் குணங்கள், செய்கைகள், அவைகளால் குணமாகும் ரோகங்கள் முதலிய அநேக விஷயங்களை சொல்லலாயிற்று. இனி, ரோகங்களின் வகுப்புகளும், பெயர்களும், அவைகள் குணமாவதற்கு அவுஷ்தங்களும் இந்த அத்தியாயத்தில் சொல்லப்படும்.

ரோகங்களின் லக்ஷணங்களால் இன்னரோகம் என்றும், இன்னவகுப்பில் சேர்ந்ததென்றும், இன்ன மருந்தை கொடுத்து அநுகூலப்படுத்தலாமென்றும் நிச்சயிக்க "ரோகநிர்ணய சாரம்" என்னும் புஸ்தகத்தில் பார்வையிடவும்.

குழந்தைகளின் ரோகங்களுக்கு அவுஷதங்கள்.

சுரமாந்தத்திற்கு :—

(1) பாலசஞ்சீவி மாத்திரை.
(2) கோரோசன மாத்திரை.
(3) பாலவிநோத சஞ்சீவி மாத்திரை.
(4) கஸ்தூரி மாத்திரை.
(5) மஹாரச பஸ்மம்.
(6) சுவர்ணரஜத பஸ்மம்.
(7) வீரபத்திர சிந்தாமணி.

இவைகள இந்த புஸ்தகத்தில் சொல்லியபடி செய்துக்கொடுக்க குணமாகும்.

(8) குட்டிவிளா இலை, வெள்ளைப்பூண்டு, அவுரி இலை இவைகளை வகைக்கு 1 அவுன்ஸ் வெதுப்பிக் கசாயஞ் செய்து ஒரு பாலடை வீதம் கொடுத்துவர குணமாகும்.

ஊதுமாந்தத்திற்கு :—

(1) வேலிப்பருத்தியிலையை வதக்கி எடுத்தச் சாற்றுடன் சீரகம், கடுகுரோகிணி சமமாக சேர்த்து அரைத்துப்பிழிந்தச் சாற்றில் ஒரு பாலடை வீதம் முலைப்பாலில் கொடுக்க குணமாகும்.

(2) ரசமாத்திரை இப்புஸ்தகத்தில் சொல்லியபடி செய்துக்கொடுக்க குணமாகும்.

விஷமாந்தத்திற்கு :—

நுணாவேர், நொச்சிவேர், வேளைவேர், ஓமம், பொடுதலை, வெள்ளைப்பூண்டு, வசம்பு இவைகள் வகைக்கு விராகனிடை 1 கொறுக்கி வெதுப்பி கசாயஞ்செய்து ஒரு பாலடை வீதம் கொடுக்க குணமாகும்.

நீர்மாந்தத்திற்கு :—

மூக்கரட்டை, வெங்காயம் இவைகளின்சாறு வகைக்கு படி ⅛ (அரைக்கால்), ஆமணக்கெண்ணெய் படி ⅛ (அரைக்கால்) சேர்த்துக்காய்ச்சி வடித்து ஒரு பாலடை வீதம் கொடுத்துவர குணமாகும்.

பால்மாந்தத்திற்கு :—

வெள்ளைப்பூண்டு, மிளகு, வசம்பு, இந்துப்பு, பொடுதலைக்காய் இவைகள் வகைக்கு ஒரு கிராம் நொறுக்கி வெதுப்பிக் கசாயஞ்செய்து 1 பாலடை வீதம் கொடுத்துவர குணமாகும்.

செரியாமாந்தத்திற்கு :—

வசம்பு, சடாமாஞ்சில், ஓமம், சுக்கு, மிளகு, வெள்ளைப்பூண்டு, கருஞ்சீரகம், ஆமை ஓடு, இவைகள் சமமாக நொறுக்கி கசாயஞ்செய்து ஒரு பாலடை வீதம் கொடுத்துவர குணமாகும்,

சுழிமாந்தத்திற்கு :—

(1) இண்டின்சாறு, வெங்காயச்சாறு, ஆமணக்கெண்ணெய் வகைக்கு 2 அவுன்ஸ் சேர்த்து எரித்து வடித்து ஒரு பாலடை வீதம் கொடுத்துவர குணமாகும்.

(2) சுக்கு, கழற்சிப்பருப்பு, மஞ்சள், ஒற்றலைப்பூண்டு, பெருங்காயம் வகைக்கு விராகனிடை 1, சேர்த்து முலைப்பாலால் அரைத்து ½ சேர் வேப்பெண்ணெயில் கலந்து எரித்து வடித்து ஒரு விரா. வீதம் முலைப்பாலில் சேர்த்துக்கொடுத்துவர குணமாகும்.

தலைமாந்தத்திற்கு :—

வெள்ளறுகு, வெதுப்படக்கி, வேலிப்பருத்தி, பெருந்தும்பை இவைகளின்சாறு வகைக்கு 1 அவுன்ஸ்சேர்த்து அதில் திப்பிலி, வசம்பு, பூண்டு, சதகுப்பை, தேசாவரம், வகைக்கு ஒரு கிராம் அரைத்துக்கரைத்து வடிக்கட்டி ஒரு பாலடை வீதம் கொடுத்துவர குணமாகும்.

☞ மேல் சொல்லிய 8 வித மாந்தரோகங்களைத்தவிர வயிறு உப்பினால் உப்பு மாந்தமென்றும், மலங்கட்டினால் கட்டுமாந்தமென்றும், கண்சொருகினால் சொருகிமாந்த மென்றும், வாதமதிகமானால் வாதமாந்தமென்றும் இவ்விதமாக பித்த மாந்தமென்றும், சிலேஷ்மமாந்தமென்றும், இழுப்பு மாந்தமென்றும், சந்நிபாத மாந்தமென்றும் பலவாறாக சொல்வார்கள். ஆகையால் ரோகங்களின் லக்ஷணங்களை அறிந்து மருந்துகளை சேர்த்துக்கொடுக்கவேண்டியது.

மாந்தரோகங்கள் (8)-க்கு :—

(1) ரோசல் சால்ட்டு 10 கிரேன்ஸ், ரேவல்சின்னி 3—7 கிரேன்ஸ் இவைகளைச் சேர்த்து காலையில் மாத்திரம் 15 நாள் ஜலத்தில் கொடுக்க குணமாகும். (Dr. Fordyce).

(2) சீமைச்சுண்ணாம்புக் கலவைச்சூர்ணம் 18 கிறேன்ஸ், வறுத்த கார்பொனேட் சோடா 6 கிறேன்ஸ், வீளாம்பிசின் 12 கிறேன்ஸ் இவைகளைச் சேர்த்து 6 பாகமாக்கி 3 மணிக்கு ஒருதரம் ஒரு பாகம் ஜலத்தில் கொடுக்க குணமாகும்.

(3) கிறேபவுடர் 6 முதல் 9 கிறேன்ஸ், கலவை சீமை சுண்ணாம்பு 9 கிறேன்ஸ் இவைகளைச் சேர்த்து 3 பங்காக்கி ஒரு பங்கு வீதம் ஜலத்தில் 3 தடவை தினம் கொடுக்க குணமாகும்.

(4) வல்லாரை, சிக்கில்தண்டு, கஞ்சாங்கோரை, துளசி, பிரமதண்டு, பழம்பாசி, குட்டிவிளா, வசம்பு, வெள்ளைப்பூண்டு, கடுகுரோகணி, வகைக்கு விராகனிடை 2 வீதம் பொடித்து 2¼ (உவ) படி ஆமணக்கெண்ணெயுடன் சேர்த்து எரித்து வடித்து ஒரு பாலடை வீதம் கொடுக்க குணமாகும்.

(5) முருங்கைப்பட்டைச்சாறு படி 2, நல்லெண்ணெய் படி 1, இவைகளைச் சேர்த்து, அதில் வசம்பின் சாம்பல் விராகனிடை 5, வெள்ளைப்பூண்டு விராகனிடை 2, பசும்பாலாலரைத்துக் கரைத்து எரித்து வடித்து ஒரு பாலடைவீதம் கொடுக்க குணமாகும்.

மாந்தவலிப்புக்கு :—

(1) குப்பைமேனிச்சாறு, முடக்கொத்தான் இலைச்சாறு, மூக்கரச்சாரனை சமூலச்சாறு வகைக்கு 1 அவுன்ஸ், ஆமணக்கெண்ணெய் 1 அவுன்ஸ் சேர்த்து எரித்து வடித்து ஒரு பாலடை வீதம் கொடுத்துவர குணமாகும்.

(2) அப்பிரக கோரோசன மாத்திரை
(3) சுவர்ண கோரோசன மாத்திரை
} இப்புஸ்தகத்தில் சொல்லிய படி இவைகளைசெய்துக் கொடுக்க குணமாகும்.

தமரகண்டவலிப்புக்கு :—

செய்கொட்டான் பழத்தெண்ணையை இப்புஸ்தகத்தில் சொல்லிய படி செய்துகொடுக்க குணமாகும்.

வயற்றுப் பொருமல் மாந்தத்திற்கு :—

(1) குப்பைமேனிவேர்ப் பட்டை பலம் 4, வறுத்த ஓமம் விராகனிடை 2 இவைகள் ½ (அரை) படி ஜலத்தில் போட்டுக் காய்ச்சி கசாயமாக்கி ஒரு பாலடை வீதம் கொடுக்க குணமாகும்.

(2) ஓமம், வசம்பு வகைக்கு 1 திராம் இளவருப்பாய் வறுத்துச் சூர்ணித்து வேலிப்பருத்தி யிலையை வதக்கி எடுத்துச் சாற்றில் சேர்த்து ஒரு பாலடைவீதம் கொடுக்க குணமாகும்.

கருங்கிராந்திக்கு:—

(1) ஆமணக்கெண்ணெய், கருங்கழுதை லத்திச்சாறு, அவுரியிலைச்சாறு வகைக்கு படி ¼ (கால்), சேர்த்து அதில் வசம்பு, வெள்ளைப்பூண்டு வகைக்கு விராகனிடை 2, பொடித்துபோட்டு எரித்துவடித்து ஒரு பாலடை வீதம் கொடுத்துவர குணமாகும்.

(2) ஒரு பாலடை கழுதைப்பாலில் 2-3 துளி ஓணான் ரத்தத்தை விட்டு கொடுக்க குணமாகும். கடும்பத்தியமாயிருக்கவும்.

செங்கிராந்திக்கு :—

(1) முருங்கையிலைச்சாற்றை முறித்து ஒருபாலடைக் கொடுக்க தீரும்.

(2) முலைப்பாலில் கோரோசனையை உரைத்துக்கொடுக்க குணமாகும்.

கிராந்தி 9 க்கும் .—

செம்பருத்தி எண்ணெய் :—செம்பருத்திச்சாறு, தேங்காய்ப்பால், ஆமணக்கெண்ணெய் வகைக்குப் படி 2, சேர்த்து அதில் சுக்கு, மிளகு, திப்பிலி, ஏலம், கிராம்பு, சுத்திசெய்த ரசக்கர்ப்பூரம் வகைக்கு விரா. 2 ஷை தேங்காய்ப்பாலால் அரைத்துக் கரைத்து, எரித்து, வடித்து ஒரு விராகனிடைவீதம் கொடுத்துவர குணமாகும். இந்த எண்ணெய் சூலை 18 க்கும் கொடுக்கலாம். நல்ல மருந்து.

சுரந்துக்கு :—

1. கீழ்க்காய்நெல்லிவேர்ச்சாறு, பாதிரிவேர்ச்சாறு வகைக்கு ஒருகிராம், முலைப்பால் 2 கிராம் சேர்த்துக்கொடுத்துவர குணமாகும்.
2. கோரோசனமாத்திரை
3. சுரபூபதிமாத்திரை
4. பால சுரஹர மாத்திரை
5. பாலவிநோதசஞ்சீவிமாத்திரை
6. பால சஞ்சீவி மாத்திரை
7. பாலசுரகுடாரிமாத்திரை
8. பாலசுர விஷஹர மாத்திரை

ஷை மாத்திரைகள் கொடுக்க குணமாகும்.

தோஷம் 9 க்கு :—

மஞ்சள், வசம்பு, அதிமதுரம், முத்தகாசு, தேவதாரம், கடுக்காய் வகைக்கு விராகனிடை 4 சூர்ணித்து பொடுதலைச்சாற்றால் அரைத்து பருத்திவிதை அளவாக மாத்திரைகளாக்கி உலர்த்தி ஒருமாத்திரை வீதம் தேன் அல்லது முலைப்பாலில் உரைத்துக்கொடுக்க குணமாகும்

கணம் 8 க்கு :—

(1) கணத்தெண்ணெய், (2) வெங்காய எண்ணெய், (3) வெந்திய எண்ணெய், இந்த எண்ணெய்கள் கொடுக்க குணமாகும். இப்புஸ்தகத்தில் செய்முறைகள் பார்வையிடவும்.

கணசுரத்துக்கு :—கணத்தெண்ணெய் கொடுக்க குணமாகும்,

அதிசாரத்திற்கு :—

ஒரு சாதிக்காயை துளைத்து 2 கிறேன்ஸ் அபினியை அதில் வைத்து மஞ்சளை அரைத்து அதற்கு கவசமிட்டு புடம்போட்டு வெந்தவுடனே மஞ்சளை நீக்கி முலைப்பாலால் ஒருமணிநேரமரைத்து கடுகு பிரமாணம் மாத்திரைகளாக்கி நிழலில் உலர்த்தி ஒரு மாத்திரை வீதம் முலைப்பாலில் உரைத்துக் கொடுத்துவர குணமாகும். அதிகமாய் கொடுத்தால் மயக்கம் காணும், கெடுதி நேரிடும்.

சீதபேதிக்கு :—

1. கட்டுவாதிச் சூர்ணம் கொடுக்க குணமாகும். இப்புஸ்தகத்தில் காண்க.

2. வில்வப்பழத்து ஓடு சதையுடன் உலர்ந்ததை நொறுக்கி ஜலத்தில் போட்டுக் காய்ச்சின கசாயத்தில் ஒரு அவுன்ஸ் வீதம் கொடுத்து வர குணமாகும்.

3. கார்ன் பிளோர் (Corn flour) கஞ்சியைக் கொடுக்க குணமாகும்.

4. கைநொச் சூர்ணம், 5—10 கிறேன்ஸ் ஜலத்தில் கொடுத்து வர தீரும்.

5. குளோரோடின் (Chlorodyne) 5—10 துளி ஜலத்திலாவது அல்லது காசிக்கட்டிக் கசாயத்திலாவது கொடுக்க குணமாகும்.

கரப்பான் (18)-க்கு :—1. கரப்பான் எண்ணெய், 2. உலகோத்தம செந்தூரம், இவைகள் கொடுக்க குணமாகும்.

சிரங்குக்கு :—சந்தனம், நீர்வேட்டி முத்து வகைக்கு விராகனிடை 5, ஜலத்தால் அரைத்து பூசிவர குணமாகும்.

கால்க்கடுவானுக்கும், மண்டைக்கடுவானுக்கும் :—

1. ஆமணக்கெண்ணெய் படி $\frac{1}{4}$ (வ) வில் வெங்காயம், வசம்பு, இலுப்பை பட்டை, சதுரக்கள்ளிப்பட்டை, பாலப்பட்டை, வகைக்கு விராகனிடை 5 ஜலத்தால் அரைத்துக் கரைத்து எரித்து வடித்து ஒரு பாலடை வீதம் 2 நாள் கொடுக்க குணமாகும்.

2. செம்மரத்தை ஜலத்தால் உரைத்து தடவிவர குணமாகும்.

3. கோவைக்கொடியை துண்டுகளாக்கி ஒவ்வொரு துண்டின் துவாரத்தில் ஊதினால் வரும் பாலை பூசிவர குணமாகும்.

4. நீரடிமுத்து தயிலம்.
5. முருதார்சிங்கி தயிலம்.
} இவை இரண்டுமுறைகள் பிராணரக்ஷாமிர்த சிந்து 2-வது பாகத்தில் காண்க.

துளிர்சுரத்திற்கு :—பாலசுரஹர மாத்திரை கொடுக்க குணமாகும்.

கலிவிக்கும், மாந்தவலிப்புக்கும் :—

1. பாலசுரஹரமாத்திரை, 2. கஸ்தூரி மாத்திரை, 3. சுவர்ண கோரோசனமாத்திரை, (4). அப்பிரேககோரோசன மாத்திரை.

இசிவுக்கு :—

(1) சுவர்ணகோரோசன மாத்திரை. (2). அப்பிரேக கோரோசன மாத்திரை. (3). மகாரசபஸ்மம். (4). கஸ்தூரிமாத்திரை. இவைகள் கொடுக்க குணமாகும்.

வயிறுஉப்பல். மந்தத்துக்கு:—

உப்பை வறுத்துக்கொட்டின ஒரு சட்டியில் 5 விரா. வெள்ளைப்பூண்டை போட்டு வறுத்து சிவக்கும்போது 2½ விரா. ஓமத்தைச்சேர்த்து வறுத்து ஜலஞ் சேர் ⅛ (அரை), விட்டுக்காய்ச்சி ¼ (வ) சேர் ஆக்கி, அதில் ¼ (வ) விராக பெருங்காயத்தைச் சேர்த்து 2—3 பாலடை வீதம் கொடுத்துவர குணமாகும்.

வயிற்றுப்பலுக்கு :—

நுணாயிலை ஒருபிடி, ஓமம், மிளகு, சுக்கு, வேப்பிலை வகைக்கு விரா. 2 இவைகளில் நுணாயிலையும் வேப்பிலையும் ஒரு சட்டியில் போட்டு வறுத்து சிவக்கும்போது மற்றவைகள் பொடித்துப்போட்டு ஒரு சேர் ஜலமிட்டுக்காய்ச்சி ¼ (வ) சேராக்கி அதில் 4 பாலடை வீதம் கொடுத்துவரத்தீரும்.

தொப்புள்புண்ணுக்கு :—

சீனாகாரத்தை தூளாக்கி மேல்போட்டுவர தீரும்.

இருமலுக்கும்—ரத்தவிருத்திக்கும் :—

¼ (வ) படி கோதுமையை ஒருபடி ஜலத்தில் ஒரு நாள் ஊறவைத்து மைபோல் அரைத்து அந்த ஜலத்தில் கரைத்து வடித்துக்காய்ச்சி ¼ (வ) சேராக்கி சர்க்கரை (சீனி) சேர் 1, சேர்த்து கண்டக்காய்ச்சி புன்னைக்காய் அளவு தினம் 2 தடவைக் கொடுத்துவர குணமாகும்.

கபரோகங்களுக்கு :—

அப்பிரேக கோரோசன மாத்திரை இப்புத்தகத்தில் சொல்லியபடி செய்துக்கொடுக்க குணமாகும்.

வயிற்றில் எண்ணெய் தங்கிறல்:—

(1) வெந்தியமும் ஜலமும் சேர்த்து கசாயமிட்டு கொடுக்க குணமாகும்.

(2) ஆவாரைவேரும் ஜலமும் சேர்த்து கசாயமிட்டு கொடுக்க தீரும்.

(3) ஆமணக்கு வேரும் ஜலமும் சேர்த்து கசாயமிட்டு கொடுக்க தீரும்.

(4) நாயுருவி வேரும் ஜலமும் சேர்த்து கசாயமிட்டு கொடுக்க தீரும்.

சாய்பல், மஞ், சாப்பிட்டால் :—

(1) கத்தரிக்காய் சாற்றில் பெருங்காயத்தைச் சேர்த்து ஒரு பாலடை வீதம் கொடுத்துவர தீரும்.

(2) முள்ளங்கிச்சாற்றில் பெருங்காயத்தைச் சேர்த்துக்கொடுக்க தீரும்.

(3) எருமைச்சாணியை ஒரு துணியில்போட்டு பிழிந்து ஒரு பாலடை வீதம் கொடுத்துவரத் தீரும்.

பால் உண்ணாவிடில் :—

அதிமதுரத்தை முலைப்பாலால் உரைத்து முலைக்காம்புக்குத்தடவி வாயில் வைத்துக்குடிக்கச் செய்ய பால் குடிக்கும்.

குடித்தபாலை கக்கினால் :—

வெள்ளைப்பூண்டும் ஓமமும் வெதுப்பி கசாயஞ்செய்துக் கொடுத்துவர குணமாகும்.

வாந்தியை நிற்க :—

கன்னாரிவேர்ப்பட்டைச்சாற்றில் மயில் இறகு சாம்பல் அல்லது மிளகு, வசம்பு இவைகளின் சாம்பலை சேர்த்துக்கொடுக்கத்தீரும்.

ஜலுப்புக்கு :—

1. துதுளைச்சாறு ஒரு பாலடை உள்ளுக்குக் கொடுக்கதீரும்.

2. துளசிஇலைச்சாறு ஒரு பாலடை உள்ளுக்குக் கொடுக்கத் தீரும்.

3. வெற்றிலைச் சாற்றில் குங்குமம் சேர்த்துக் கொதிக்கவைத்து மூக்கு, புருவம் முதலிய இடங்களில் பற்றுப்போட குணமாகும்.

4. சாதிக்காயை ஜலத்தில் உரைத்து சுடவைத்துப் பற்றுப்போட குணமாகும்.

5. கோரோசன மாத்திரைக் கொடுக்க குணமாகும்.

பேதியை நிற்க :—

மரமஞ்சள், கடுக்காய்ப்பூ, அதிவிடையம், சிறுநாகப்பூ, போஸ்தக்காய் வகைக்கு பலம் 1, சடாமாஞ்சில் பலம் ¼ (வ) இவைகளைச் சூர்ணித்து ½ படி கொதிக்கும் ஜலத்தில் போட்டு 2-3 மணிநேரம் ஊற வைத்து வடித்து 2 பாலடை வீதம் 5—6 மணிநேரத்துக்கு ஒரு தடவை கொடுத்துவர தீரும்.

பேதிஉண்டாக :—

1. காட்டுக்காட்டாமணக்குச்சாறு ஒரு பாலடை கொடுக்க மலங்கழியும்.

2. ரஸபஸ்மம் 1—2 கிறேன்ஸ் தேனில் கொடுத்து அதின்மேல் வெற்றிலைச் சாற்றில் கோரோசனை உரைத்துக் கொடுக்க மலங்கழியும்.

3. சிற்றாமணக்கெண்ணெயும் முலைப்பாலும் சமமாக சேர்த்து கொடுக்க மலம் இறங்கும்.

பேதி, வாந்தி, வயிற்றுவலி, அஜீர்ணம், மாந்தம் இவைகளுக்கு :—

ஓமத் தீநீர் (Omum Water)-ஓமத்தயிலம் (Omum Oil):—2 வீசை ஓமத்தை மெல்லிய துணியில் முடித்து அடியில் படாமல் வாலை

யில் தொங்கவைத்து 6 படி ஜலம் விட்டு எரித்து 4 படியாக்கி வடித்துக்கொள்ளவும், த்ரின்யேல் தயிலம் மிதக்கும். கோழி இறகால் அதை சேகரித்துக்கொள்ளவும். ½ (அரை) முதல் 1 அவுன்ஸ் ஓமத் தீநீரை ½ (அரை)—1 அவுன்ஸ் ஜலத்தில் சேர்த்துக்கொடுக்கவும்; அல்லது 1 முதல் 2 துளி ஓமத்தயிலத்தை சர்க்கரையில் சேர்த்துக்கொடுக்க குணமாகும்.

சந்நுவாயுக்கு :—

1. வருகட்டிவாய்க மாத்திரை }
2. வியாக்கிரியாதி ரசாயனம் } இவைகளை இப்புஸ்தகத்தில் சொல்லியபடி செய்துக்கொடுக்க குணமாகும்.
3. முள்ளு எலிச்சதை, வெளவால்சதை, நத்தைசதை, வேங்கைப்புலியின் கண்டத்தோல் இவைகளில் எதையாகிலும் பசும் நெய்யில் போட்டுக்காய்ச்சி வடித்த நெய் 3—4 வீராகனிடை வீதம் கொடுத்து வர குணமாகும்.
4. மிளகு, மயிலிறகு இவைகளின் சாம்பலை சமமாக சேர்த்து ½ (அரை) வீராகனிடை வீதம் பசும் நெய்யில் கொடுக்க குணமாகும்.

வாய்ரணத்துக்கு :—

1. 20 கிறேன்ஸ் படிகாரத்தூள், 1 அவுன்ஸ் தேன் இவைகளைச்சேர்த்து காலைமாலை குழந்தையின் வாய் ரணத்துக்குத் தடவிவர குணமாகும்.
2. பசும் நெய்யில் கோரோசனை உரைத்து வாய் ரணத்துக்குத் தடவிவர குணமாகும்.

நீர்க்கட்டுக்கு :—

வெங்காரத்தைப் பொரித்து 1 முதல் 5 கிறேன்ஸ் (வயதுக்குத்தக்கப்படி) முலைப்பாலில் கொடுக்க குணமாகும்.

நீர்அண்டத்திற்கு—

லைகர் அமோனிய அஸிடேடிஸ் 2 அவுன்ஸ், நவச்சாரம் 1 டிராம், ஜலம் 4 அவுன்ஸ், இவைகளைச்சேர்த்து அதில் துணியை நனைத்து மடித்து நீர் அண்டத்தின்மேல் போட்டு அடிக்கடி அதின்மேல் இந்த மருந்தைப்போட்டு ஈரம் காக்க குணமாகும். (Mr. Bronsby Cooper)

அண்டவீக்கத்திற்கு :—

1. நவச்சாரம் 1 அவுன்ஸ், இரட்டித்து வடித்த சாராயம் 1 அவுன்ஸ், ஜலம் 15 அவுன்ஸ் இவைகளைச் சேர்த்து அதில் துணியை மடித்து நனைத்து நீர் அண்டம், கட்டி இவைகளின் மேல் போட்டு ஈரங்காக்க குணமாகும்.
2. பத்திரகாளி எண்ணெய் :— ஒருபடி ஆமணக்கெண்ணெயில் கழற்சிப்பருப்பு பலம் 4, வெள்ளைப்பூண்டு பலம் 1, மிளகு, சுக்கு, வகைக்கு பலம் ¼ (வ), கொச்சியிலை பலம் ½ (அரை) இவைகளை பசும்பாலலரைத்துக் கரைத்து எரித்து வடித்து ஒருபாலடை வீதம் 3 நாள் கொடுக்க குணமாகும்.
3. சிற்றாமணக்கெண்ணெயும் சிற்றாமணக்கு இலையும் சேர்த்து வதக்கிக் கட்ட குணமாகும்.

4. கழற்சிப்பருப்பு, சுக்கு, சாரணைவேர், முடக்கொத்தான்வேர் வகைக்கு 1 அவுன்ஸ்பொடித்து, 12 அவுன்ஸ் ஜலத்தில் போட்டு 6 அவுன்ஸ் கஷாயமாகும்படி எரித்து வடித்து ஒருபாலடை வீதம் தினம் 2 தடவை கொடுக்க குணமாகும்.

ஸ்திரீகளுக்குக்காணும் ரோகங்களுக்கு அவுஷதம்.

மலட்டுரோகங்களுக்கு அவுஷதங்கள்.

மலடு வகைகள்.	மலடு ரோகங்களின் தொகைகள்.	புருஷன் ஸ்திரீயுடன் சம்போகஞ் செய்யுங்காலத்தில் ஸ்திரீக்கு காணும் ரோகங்களின் குறிகள்.	ஸ்திரீயின் கருகுழியில் உண்டாயிருக்கும் ரோகங்கள்.	ரோகங்களை நிவர்த்தியாக்கமருந்துகள்.
பெண்மலடு	1	தலைநோவு	பாசிஉண்டாயிருக்கிறது	இவ்வாறு ரோகங்களுக்கும் விழுதி எண்ணெய்ச்சாப்பிட்டுவர குணமாகும். இந்த புஸ்தகத்தில் காண்க.
	2	சர்வாங்கநோவு ...	வாயு ௸	
	3	நெஞ்சுவலி	சதைவளர்ந்திருக்கிறது	
	4	முதுகுநோவு ...	கிருமிகள் உண்டாயிருக்கிறது	
	5	கண்டச்சதைநோவு	ரத்தங்கட்டிருக்கிறது	
	6	எப்பங்காணுதல் ...	மதத்துக்கொழுப்படைந்திருக்கிறது	
ஆண்மலடு	1	விந்து தித்திப்பு இராது		இம்மூன்றுரோகங்களுக்கு இப்புஸ்தகத்தில் சொல்லிய தாதுபுஷ்டி அவுஷதங்களைச் சாப்பிட்டுவர தீரும்.
	2	விந்து ஜலத்திலிட கரைந்து மிதக்கும்		
	3	மூத்திரத்தில் நுரைகள் கட்டும்		

தூதகங்கட்டுக்கு:—

(1) அயச்செந்தூரம் (English-oxide of Iron) ½ (அரை) கிராம், வாலேக்கிர பௌலம் 20 கிறேன்ஸ், சக்குப் பாஷாணம் தேவையானது இவைகளைசேர்த்து 18 மாத்திரைகளாக்கி 2–3 மாத்திரை வீதம் அந்திசந்தி கொடுத்துவர தீரும் (Mr. Savory).

(2) காட்டாமணக்குக் கிழங்கை அரைத்து பாக்களவு பசும்பாலில் கொடுத்துவர தீரும்.

(3) குருஞ்சாச்சாறும் பசும்பாலும் வகைக்கு ஒருபடி சேர்த்து ஒரு ஆழாக்கு வீதம் 8 நாள் காலையில் கொடுக்க குணமாகும்.

(4) ஏகாதபிருத்திர செந்தூரம். (5) குமட்டிக்காய்க் குழம்பு

(6) ஸ்ரீதேவி எண்ணெய். இவைகளைக்கொடுக்க குணமாகும்.

சூதகந்தைக் கிரமமாக உண்டாக்க :—

வெங்காரத்தூள் 15 கிறேன்ஸ், கிராம்புத்தயிலம் ஒருதுளி, வாலேந்திர பொலம் 12 கிறேன்ஸ், குங்குமப்பூ 3 கிறேன்ஸ் இவைகளை சேர்த்து அரைத்து தினம் 1 அல்லது 2 தடவை கொடுக்க குணமாகும். (Dr. T. Fuller)

கர்ப்பவெட்டைக்கு :—

களாத்தெண்ணெய்க்கொடுக்க குணமாகும்.

கர்ப்ப ஸ்திரிகளுக்கு 10-மாதங்களில் வரும் கர்ப்பவலிக்கு அவுஷதங்கள் அடியில் காண்க.

அடியில் கண்ட மாதங்களில் கர்ப்பம் வலித்தால்	அவுஷதங்கள்.
1வது மாதத்தில்	தாமரைப்பூ, சந்தனம், விலாமிச்சுவேர்வகைக்கு விரா. 2 அரைத்து பாக்களவு பசும்பாலில்கொடுக்க குணமாகும்.
2-வது ௸	தக்கோலமும் தாமரைப்பூவும் வகைக்கு விரா. 5 சேர்த்து அரைத்து பாக்களவு பசும்பாலில் கொடுத்துவர குணமாகும்.
3-வது ௸	வெந்தாமரைப்பூ, செங்கழுநீர்கிழங்கு வகைக்கு விரா. 2 அரைத்து பாக்களவு பசும்பாலில் கொடுத்துவர குணமாகும்.
4-வது ௸	நெய்தற்கிழங்கு, நொச்சிவேர் வகைக்கு விரா. 3 அரைத்து பாக்களவு பசும்பாலில் கொடுத்துவர குணமாகும்.
5-வது ௸	ஆம்பற் பூவும், விலாமிச்சிவேரும் வகைக்கு விரா. 3 அரைத்து பாக்களவு பசும்பாலில் கொடுத்துவர குணமாகும்.
6-வது ௸	திப்பிலி, திராக்ஷை, நெய்தற்கிழங்கு வகைக்கு விரா. 2 அரைத்து பாக்களவு பசும்பாலில் கொடுத்துவர குணமாகும்.
7-வது ௸	விலாமிச்சவேர், சந்தனம், தக்கொலம்வகைக்கு விரா. 1 அரைத்து பாக்களவு பசும்பாலில் கொடுத்துவர குணமாகும்.
8-வது ௸	தாமரைப்பூ, நெய்தற்கிழங்கு வகைக்குவிரா. 2 அரைத்து பாக்களவு பசும்பாலில் கொடுத்துவர குணமாகும்.
9-வது ௸	அரசம்பட்டை, மருதம்பட்டை வகைக்கு விரா. 3 அரைத்து பாக்களவு பசும்பாலில் கொடுத்துவர குணமாகும்.
10-வது ௸	சர்க்கரையும், இலுப்பைப்பூவும் வகைக்கு விரா. 2 அரைத்து பாக்களவு பசும்பாலில் கொடுத்துவர குணமாகும்.

சூதகவாயு, சூசிகாவாயு இவைகளுக்கு :—

(1) குப்பைமேனி, பொற்றலைக்கரிப்பான், சிறுசெருப்படை, நிலவாகை வேர் இவைகளை உலர்த்தி வகைக்கு விரா. 5 சேர்த்து சூர்ணித்து திரிக்கடிவீதம் தேனில் 20 நாள் கொடுக்க குணமாகும்.

(2) ஸ்ரீதேவி எண்ணெய் செய்துக்கொடுக்க குணமாகும்.

சூதகவாயுக்கு :—

(1) ஏகாதசி ருத்திர செந்தூரம்.

(2) போஜனகுடாரி மாத்திரை.

(3) அகஸ்தியர் குழம்பு.

(4) ஸ்ரீதேவி எண்ணெய் இவைகள்கொடுக்க குணமாகும். இவைகளின் செய்முறைகள் இந்த புஸ்தகத்தில் காண்க.

சூதகவலிக்கு :—

(1) துத்தியிலை, மிளகு, வெள்ளைப்பூண்டு வகைக்கு பலம் 1, வசம்பு விரா. 1 இவைகளை ஜலம்விட்டு அரைத்து 3 பங்காக்கி மாதாந்திர ருதுகாலமாகிய 3 நாளைக்கும் காலையில் ஒருபாகம் கொடுக்க குணமாகும்.

(2) விழுதி எண்ணெய் ...
(3) ஸ்ரீதேவி எண்ணெய் ...
(4) ரசலிங்க மெழுகு ...
(5) கும்மட்டிக்காய் குழம்பு ...
} இவைகளைக் கொடுக்க குணமாகும். இவைகளின் செய்முறைகள் இந்த புஸ்தகத்தில் காண்க.

கர்ப்பநூலை, சூதகவலி, சூசிகாவாயு இவைகளுக்கு :—

(1) கல்லுப்பு சேர் 4, ரசம் சேர் 1, இவைகளை வில்வயிலைச்சாற்றால் நாலு சாமம் அரைத்து உலர்த்தி குகையிலிட்டு உருக்கி எடுத்து அதை ஆகாச தாமரையிலைச்சாற்றால் 4 சாமம் அரைத்து பில்லை தட்டி உலர்த்தி வராகல் புடம்போட்டு எடுத்து ஒரு பணவிடை வீதம் தேனில் காலை மாலை 3 நாள் கொடுக்க குணமாகும்.

(2) ஸ்ரீதேவி எண்ணெய் செய்துகொடுக்க குணமாகும்.

சூதக ஜன்னிக்கு :—

(1). இங்கு நவச்சாரமது 5 திராம், கர்ப்பூர ஜலம் 5 அவுன்ஸ், குங்குமப் பூ 1½ (ஒன்றரை) கிறேன்ஸ், ஜலம் 3 திராம் இவைகளில் குங்குமப்பூவை ஜலத்தில் அரைத்து பின்பு எல்லாம்சேர்த்து தினம் 2 பெரியக்கரண்டிவீதம் கொடுத்துவர குணமாகும்.

(2) ஸ்ரீதேவி எண்ணெய்
(3) ஏகாதசிருத்திர செந்தூரம்
} இவைகளைக் கொடுக்க குணமாகும். செய்முறை இப்புஸ்தகத்தில் காண்க.

கர்ப்பஸ்திரீக்கு காணும் ஜுவாலைக்கு :—

செய்தற்கிழங்கு, அதிமதுரம், சந்தனம், நன்னாரிவேர், வெள்ளிலோத்திரம் வகைக்கு விரா. ½ (அரை) அரைத்து பச்சரிசி கழுநீரில் கொடுக்க குணமாகும்.

ஷை. ஜுவாலையால்காணும் தாகம், மூர்ச்சைக்கு :—

அரசு, ஆல், மா, அத்தி, இவைகளின் கொழுந்தை வகைக்கு 1 அவுன்ஸ்சேர்த்துக்கசாயம் செய்து ¼ (கால்) சேர் வீதம் கொடுக்க குணமாகும்.

கர்ப்பஸ்திரீயின் சுரத்துக்கு :—

(1) சிறுமுட்டிவேர், பேராமுட்டிவேர், சீந்திற்கொடி, திப்பிலி, சுக்கு, நிலவேம்பு வகைக்கு விரா. 1, பொடித்துப்போட்டுக் கசாயம் செய்து ¼ (கால்) சேர் வீதம் தினம் 2 தடவைக் கொடுத்துவர குணமாகும்.

(2) குவைனா பில்ஸ் (Quina Pills) கொடுக்க குணமாகும். இதின் செய்முறை இந்த புஸ்தகத்தில் காண்க.

கர்ப்பஸ்திரீயின் நீர் சுரப்புக்கு :—

சோம்பு அல்லது நன்னாரிவேர் அல்லது ரோஜாப்பூ விரா. 3 போட்டு கசாயம் செய்துக்கொடுக்க குணமாகும்.

கர்ப்பவாயுக்கு :—

விழுதி எண்ணெய் கொடுக்ககுணமாகும். இப்புஸ்தகத்தில் காண்க.

கர்ப்பத்திலுண்டாகும் புழுக்களுக்கு :—

விழுதி எண்ணெய் கொடுக்ககுணமாகும். இப்புஸ்தகத்தில் காண்க.

கர்ப்பஸ்திரீயின் கல்லடைப்புக்கு :—

(1) பசும்பாலால் மாதுளம்பழத்து விதையை அரைத்து ஒரு கிராம் வீதம் கொடுத்துவர குணமாகும்.

(2) சிவப்பு நெருஞ்சியை முலைப்பாலால் அரைத்து ஒரு கிராம் வீதம் கொடுத்துவர குணமாகும்.

முலைக்காம்பு ரணத்துக்கு :—

வெங்காரம் 1 கிராம், சாராயம் 4 கிராம், ஜலம் 3¼ அவுன்ஸ் இவைகளைச் சேர்த்து அதில் துணியை நனைத்து ரணத்தின்மேல் போடதீரும்.

முலைக்காம்பு வெடிப்புக்கு :—

(1) காசிக்கட்டி பாவனத்திரவம் தடவிவர குணமாகும்.

(3) சிறுகாரதன் தடவிவர குணமாகும்.

ஸ்தனாரிய கட்டிக்கு :—

நவச்சாரம் 1 திராம், பன்னீர் 1 பையின்ட் இவைகளைச்சேர்த்து அதில் துணியை நனைத்து கட்டியின்மேல் போட்டுவர குணமாகும்.

குய்யத்தில் காணுந்தினவுக்கு :—

நவச்சார ஜெயனீர் ½ (அரை) முதல் 1 திராம், ஒரு பையின்ட் ஜலத்தில் கரைத்துக் குய்யத்தில் அடிக்க குணமாகும்.

பிரசூதிகாவாயு மந்தப்பட்டல் :—

எர்கோட் 20 முதல் 40 கிறேன்ஸ், வெங்காரம் 10 கிறேன்ஸ், லவங்கப்பட்டை ஜலம் 1½ (ஒன்றரை) அவுன்ஸ் இவைகளைச்சேர்த்து பிரசூதிகாவாயு மந்தப்பட்டதற்குக் கொடுக்கவும் (Dr. Rigby.)

வயிற்றில் பிள்ளை பிழைத்திருப்பதை அறிய :—

வயிற்றில் பசும் வெண்ணெய்யைத்தடவ, அது உருகினால் பிழைத்திருக்கிறதென்றும் உருகாவிட்டால் இறந்ததென்று அறிக.

வயிற்றில் இறந்தப் பிள்ளை விழ :—

(1) நிலக்குமிழம்பட்டையை ஜலத்தால் அரைத்துக் கொடுக்க விழும்.

(2) பிரண்டைவேரும் குருஞ்சாவேரும் வகைக்கு விரா. 5 அரைத்து வயிற்றில் பூச விழும்.

(3) உத்தாமணிவேரை விரா. ½ (அரை) அரைத்து பசும்பாலில் கரைத்துக்கொடுக்க விழும்.

நஞ்சுக்கொடி விழ :—

கருவேப்பிலை, வேப்பம், முருங்கை இவைகளின் கொழுந்து வகைக்கு 1 அவுன்ஸ் சேர்த்து அத்துடன் ஒரு கடுக்காய் நொறுக்கிச்சேர்த்து ஒருபடி ஜலத்தில் கரைத்து எரித்து ⅛ (அரைக்கால்) படியாக்கிக் கொடுக்க விழும்.

பிரசவித்த ஸ்திரீயின் சுவாசத்துக்கு :—

(1) முருங்கைப்பட்டை, கழற்சிப்பருப்பு, பனைவெல்லம் வகைக்கு விரா. 1 சேர்த்து மைப்போல இடித்துப் பாக்களவுக் கொடுத்துவர தீரும்.

(2) கழற்சிப்பருப்பு, பனைவெல்லம் வகைக்கு விரா. 2 சேர்த்து மைப்போல் இடித்து தினம் 2 தடவை ஒரு விரா. வீதம் கொடுத்துவர குணமாகும்.

(3) சந்தனம், அதிமதுரம், கோஷ்டம், சாஸ்திரபேதி, தக்கோலம், முல்லைவேர், கோரைக்கிழங்கு, விலாமிச்சுவேர், வெட்டிவேர், நெல்லிப் பருப்பு, இவைகளை வகைக்கு விரா. 5 சேர்த்து இளநீர் ஜலத்

தால் அரைத்து சுண்டைக்காய் அளவாக மாத்திரைகளாக்கி உலர்த்தி ஒரு மாத்திரை வீதம் நீரில் கரைத்து 12 நாள் கொடுக்க தீரும்.

பிரசவித்த ஸ்திரீயின் கீழ்வயிறு, மார்பு, சிரசு, இவைகளின் குத்தல், நோவுக்கு :—

ஏலம், சுக்கு, மிளகு, திப்பிலி, லவங்கப்பத்திரி, லவங்கப்பட்டை இவ்வாறும் வகைக்கு விரா. 2 சேர்த்து உலர்த்தி சூர்ணித்து 3 விரா. வீதம் வெல்லம் அல்லது கழுநீர் இவைகளிலெதிலாகிலுஞ் சேர்த்து 2 தடவை கொடுக்க குணமாகும்.

பிரசவித்த ஸ்திரீக்கு 3-வது மாசத்தில் காணும் ஆமாசயஸ்தானத்தின் நுகைக்கு :—

அதிவிடையம், சிற்றுமுட்டிவேர், சந்தனக்கட்டை, பற்படாகம், வெட்டிவேர், சிந்தில் தண்டு, பூனைப்புழுக்கம்வேர், கொத்தமல்லி விதை வகைக்குப்பலம் 1 சேர்த்து நாலுபடி ஜலத்தில் போட்டு எரித்து 1 படியாக்கி, ⅛ (அரைக்கால்) படி. வீதம் அக்கி சக்கி 2 தடவை குணமாகும் வரையில் கொடுத்து வரவும்.

பிரசவித்த ஸ்திரீயின் மார்பில் பால்சுரக்க :—

(1) பார்லே அரிசி கஞ்சியை கொடுத்துவர பாலுண்டாகும்.

(2) 5 விரா. தோல்நீக்கின வெள்ளைப்பூண்டை 1—2 சேர் பசுவின்பாலில் போட்டு வேகவைத்துக் கடைந்து அத்துடன் ஏலரிசித்தூள் விரா. 1, சீனி விரா. 5 சேர்த்து பாயசம் போல் செய்து தினம் காலை 6 மணிக்குக் கொடுத்து 3—4 மணி நேரம் சென்று போஜனம் செய்துவர பால் உண்டாகும்.

(3) சிற்றுமணக்கு இலையை வதக்கி மார்பில் போட பால் சுரக்கும்.

பிரசவித்த ஸ்திரீயின் மார்பின் பாலை வறண்டுபோக :—

(1) மல்லிகைப்பூ அல்லது கோளிகீரை, வைத்துக்கட்ட பால் வறண்டு போகும்.

(2) செம்மரத்தை உரைத்தாவது அல்லது துவரம்பருப்பை உரைத்தாவது, பெல்லிடோனா சத்துவும், கிளிஸரின் எண்ணெயும் சேர்த்தாவது பற்றுப்போட, மார்பு வீக்கத்தின் நோய்தீரும், பால் வறண்டு போகும். பருத்தியை வைத்துக்கட்ட பால் வறண்டும்.

பிரசவித்த ஸ்திரீயின் வயிற்றுவலிக்கு :—

அபினிப்பாவனத்திரவம் 15 முதல் 20 துளி ஜலத்தில் கொடுக்க குணமாகும்.

சுரங்கள் (64)-க்கு அவுஷதங்கள்.

இதுவரையிலும் குழந்தைகளுக்கும் ஸ்திரீகளுக்கும் உண்டாகும் ரோகங்களில் சில ரோகங்களுக்கு அவுஷதங்கள் சொல்லலாயிற்று. இனி சொல்லப்படும் அவுஷதங்கள் புருஷர்களுக்கும் ஸ்திரீகளுக்கும் குழந்தைகளுக்கும் கொடுக்கலாம்.

சுரங்கள் 64-க்கு :—

(1) சந்திரோதய மாத்திரை
(2) திரிலோகரக்ஷாமணி மாத்திரை
(3) லிங்கசெந்தூரம்
(4) ரசசெந்தூரம்
(5) பயிரவமாத்திரை
(6) சுரபூபதி மாத்திரை
(7) பானுபிரகாச மாத்திரை
(8) பாஷாண மாத்திரை
(9) ரசலிங்கமாத்திரை
(10) தாளகமாத்திரை
(11) ரசகர்ப்பூரமாத்திரை
(12) லிங்கமாத்திரை
(13) கஸ்தூரி மாத்திரை
(14) சுவர்ணகோரோசனமாத்திரை
(15) அப்பிரககோரோசனமாத்திரை
(16) சமசிவாய செந்தூரம்
(17) வீரபத்திர சிந்தாமணி
(18) பஞ்சாக்ஷர செந்தூரம்
(19) உலகோத்தம செந்தூரம்
(20) ரசபயிரவ செந்தூரம்
(21) ஏகாதசிருத்திர செந்தூரம்
(22) தாளக பஸ்மம்
(23) துரிசு பஸ்மம்
(24) பவள பஸ்மம்
(25) மகா ரசபஸ்மம்
(26) ரசகர்ப்பூரக்கட்டு
(27) பாஷாணக்கட்டு
(28) லிங்கமெழுகு
(29) வீரமெழுகு
(30) பாஷாணமெழுகு
(31) லிங்கக்குழம்பு
(32) கும்மட்டிக்காய்க்குழம்பு
(33) ராஜவில்வாதி லேகியம்
(34) ராஜமார்த்தாண்டலேகியம்

இவைகள் இப்புஸ்தகத்தில் சொல்லியபடி செய்துகொடுக்க குணமாகும். அன்றியும் 13-வது அத்தியாயத்தில் சொல்லிய அவுஷதங்களை புத்தியால் ஒன்றோடொன்று சேர்த்து மிக்ஸெர் செய்து கொடுப்பதால் அதிசீக்கிரத்தில் குணமாகும்.

உள்சுரத்துக்கு :—

(1) லைகர் அமோனிய அசிடேடிஸ் 2 திராம், கர்ப்பூரஜலம் 6 அவுன்ஸ் இவைகளைச் சேர்த்து 6 மணிக்கொருதரம் 2 அவுன்ஸ் வீதம் கொடுக்க குணமாகும், (Dr. Ainslie).

(2) சாஸ்திரபேதிதூள், சீனி, வகைக்கு விரா. 1, பசும்பாலைக்காய்ச்சி அதில் போட்டு காலையில் 5 நாள் கொடுத்துவர குணமாகும்.

நாபசுரத்துக்கு:—

(1) இந்த புஸ்தகத்தில் சொல்லிய அர்த்த நாரீஸ்வரன் மாத்திரைகொடுக்க குணமாகும்.

(2) செல்லியற்றல், வெட்டிவேர், கோஷ்டம், அதிமதுரம், விலாமிச்சவேர், முத்தகாசு, சந்தனம், நெற்பொரி, வகைக்கு விரா. 2½ சூர்ணித்து ½ படி இளநீர் ஜலத்தில் கரைத்து, ⅛ (அரைக்கால்) படி ஆகும்படி எரித்த கசாயத்தில் பாதி காலையிலும், பாக்கி பாதி மாலையிலும் கொடுக்க குணமாகும்.

குளிர் சுரத்துக்கு:—

(1) அமினி பாவன திராவகமும் ஸோப்லினிமெண்டும் சமனிடையாகச் சேர்த்து நடுமுதுகில் தேய்த்தால் குழந்தையின் குளிர்சுரத்தின் குளிர் நிற்கும்.

(2) அமினி பாவன திரவம் 30 துளி, ஸல்பியுரிக் ஈதர் ½ (அரை) கிராம், கர்ப்பூரஜலம் 1 அவுன்ஸ் இவைகளைச் சேர்த்து குளிர் வரும்போது கொடுக்க குளிர் நிற்கும்.

(3) மிளகு 40 கிரேன்ஸ், பெருங்காயம் 20 கிரேன்ஸ். கழற்சிப்பருப்பு 100 கிரேன்ஸ், தேன் தேவையானது இவைகளைச் சேர்த்து மைபோலரைத்து 30 மாத்திரைகளாக்கி பெரியவருக்கு 2 மாத்திரையும் சிறியவருக்கு 1 மாத்திரையும் தினம் 2—3 தடவை கொடுத்துவர குணமாகும்.

(4) குயினைன் 4 முதல் 20 கிரேன்ஸ் (சுரம்வருவதற்கு முன்) குல்கந்து சேர்த்து மாத்திரை ரூபமாகவாவது அல்லது ஒரு பீங்கானில் போட்டு விளாவின கந்தக திராவகம் 5 துளிவிட்டு மிஸ்ரித்து பின்பு அத்துடன் ஒரு அவுன்ஸ் பெப்பர்மென்ட் ஜலத்தை அல்லது சுத்த ஜலத்தை விட்டு சேர்த்துக்கொடுத்துவர குணமாகும்.

(5) ரசமாத்திரை

(6) அர்த்த நாரீஸ்வரன் மாத்திரை

(7) பாலசுரஹர மாத்திரை

(8) சுரகுடாரி மாத்திரை

(9) தாளகக்கட்டு

(10) அகஸ்தியர் குழம்பு

இவைகளை செய்துக்கொடுக்க குணமாகும்.

விஷசுரத்துக்கு:—

(1) சர்க்கரைபாகு 2 அவுன்ஸ், வெந்நீர் 14 அவுன்ஸ், விளாவின கறிஉப்பு திராவகம் 1 திராம் இவைகளைச் சேர்த்து 1 அவுன்ஸ் முதல் 2 அவுன்ஸ் விதம் கொடுத்துவர குணமாகும். (Dr. Gregory).

(2) விளாவின் கறிஉப்பு திராவகம் 1 திராம், பார்லி அரிசி கஞ்சி 1 பையிண்டு, சர்க்கரை ½ (அரை) அவுன்ஸ், இவைகளைச் சேர்த்து 2 முதல் 4 அவுன்ஸ் விதம் தினம் 2—3 தடவை கொடுத்துவர குணமாகும்.

(3) நிலவேம்பு, பேய்ப்புடல், ஆடாதோடையீர்க்கு, பேய்ப்பீர்க்கம்வேர், வெட்பாலையரிசி, வகைக்கு விரா. 2 பொடித்து, ½ (அரை) படி ஜலத்தில்போட்டு எரித்து காலிலொன்றாக்கின கசாயத்தைக் கொடுத்துவர குணமாகும்.

(4) நிலவேம்பு, பேய்ப்புடல், வேப்பம்பட்டை, சீந்திற்கொடி, சுக்கு, கடுக்காய், வகைக்கு விரா. 10 பொடித்து, 2 படி ஜலத்தில் போட்டு எரித்து காலிலொன்றாக்கி ½ (அரை) சேர் விதம் கொடுத்துவர குணமாகும்.

பழய சுரத்துக்கு:—

(1) இந்த புஸ்தகத்தில் சொல்லிய அர்த நாரீசுவரன் மாத்திரைக் கொடுக்க குணமாகும்.

(2) பற்படாகம், சிறுதேக்கு, கோஷ்டம், சீந்திற்கொடி, திப்பிலி, ஆடாதோடை, முத்தகாசு, நிலவேம்பு, சுக்கு, சிறுகாஞ்சோரி வகைக்கு விரா. 10, பொடித்து, 8 படி ஜலத்திலிட்டு எரித்து ஒருபடியாக்கி $\frac{1}{16}$ (வீசம்) படி விதம் கொடுத்துவர குணமாகும்.

அஸ்திசுரத்துக்கு:—

1. மகா கூழ்பாண்டலேகியம்.
2. ரஸபஸ்மம்.
3. அப்பிரக பஸ்மம்.
4. ராஜஅப்பிரேக செந்தூரம்.
5. வீரபத்திரசிந்தாமணி.
6. அர்தநாரீஸ்வரன் மாத்திரை.
7. மகா சந்தநாதித்தயிலம்.
8. ராஜாங்க கொம்பரக்குத்தயிலம்.
9. மகா அசுவகந்தி சூர்ணம்.
10. மகாதாளிசப்பத்திரி சூர்ணம்.

இவைகளை இப்புத்தகத்தில் சொல்லியபடி செய்துக்கொடுக்க குணமாகும்.

அசாத்திய சுரத்துக்கு:—

1. இந்த புஸ்தகத்தில் சொல்லிய அகஸ்தியர் குழம்பு கொடுக்க குணமாகும்.
2. தேவதாரம், சுக்கு, கொத்தமல்லி, வகைக்கு விரா. 10 சேர்த்து பொடித்து, ஒருபடி ஜலத்தில் போட்டு எரித்து, கால்படியாக்கி, இதில் காலிலொரு பாகம் தினம் 2 தடவைக் கொடுத்துவரத் தீரும்.

அதிசார சுரத்துக்கு :—

1. அர்த்த நாரீஸ்வரன் மாத்திரைக்கொடுக்க குணமாகும்.

2. வில்வப்பழச்சதை, நிலவேம்பு, முத்தக்காசு, மாம்பட்டை, சுக்கு, பெருமரத்துப்பட்டை வகைக்கு விரா. 10 பொடித்து, 2 படி ஜலத்திலிட்டு ½ (அரை) படி ஆகும்படி எரித்து வடித்து 1/16 (வீசம்) படி விதம் கொடுத்துவர குணமாகும்.

நடுக்கல் சுரத்திற்கு :—

1. சுக்கு, கோஷ்டம், தேவதாரம், கடுக்காய், பற்படாகம், குமிழ்வேர், சிறுதேக்கு, கண்டங்கத்திரி வகைக்கு விரா. 5 விதம் சேர்த்து, பொடித்து ஒருபடி ஜலத்தில் போட்டு ⅛ (அரைக்கால்) படி யாகும்படி எரித்துக் கொடுக்க குணமாகும்.

2. மிளகு விரா. 5 பொடித்து கால்படி ஜலத்திலிட்டு எரித்து 1/16 (வீசம்) படியாக்கி கொடுக்க குணமாகும்.

அஜீர்ண சுரத்திற்கு :—

1. சுக்கு, கடுக்காய், தானிக்காய், நெல்லிவற்றல், பேராமுட்டி, சிற்றுமுட்டி, வகைக்கு விரா. 1 பொடித்துப்போட்டு, கசாயம் செய்துக் கொடுக்க குணமாகும்.

2. ஓமம், வசம்பு, சுக்கு, மிளகு, திப்பிலி, கடுக்காய், தானிக்காய், சங்கம்வேர், சித்திரமூலம், திப்பிலிமூலம், வகைக்கு விரா. 1 பொடித்து 2 சேர் ஜலத்தில் போட்டு ½ (அரை) சேர் ஆகும்படி எரித்துக் கொடுக்க குணமாகும்.

விடாதசுரத்திற்கு :—

மிளகு விரா. ½, அவுரிவேர் விரா. 1, இவைகளை அரைத்து நீரில் கரைத்து அதில் சுண்ணாம்பு ½ பணவிடை போட்டு மிஸ்ரித்துக்கொடுத்துவர குணமாகும்.

வாதசுரத்திற்கு :—

1. அர்த்தநாரீஸ்வரன் மாத்திரை } இவைகள் கொடுக்க குணமாகும்,
2. அகஸ்தியர்குழம்பு ... } இந்த புஸ்தகத்தில் காண்க.

பித்தசுரத்திற்கு :—

1. சுக்கு, கிராம்பு, கோரைக்கிழங்கு, நிலவேம்பு, கொத்துமல்லிவிதை வகைக்கு விரா. 5, பேய்ப்புடல் விரா. 20, இவைகளைப்பொடித்து ஜலத்திலிட்டு, கசாயம் செய்து அத்துடன் கொஞ்சம் தேன்விட்டு 2 அவுன்ஸ் விதம் காலை மாலை கொடுத்துவர குணமாகும்.

2. ரசபயிரவ செந்தூரம். } இவைகளைக்கொடுக்க குணமாகும்.
3. அகஸ்தியர் குழம்பு. }

சிலேஷ்ம சுரத்திற்கு :—

1. செம்முள்ளி, அண்டை, நாநுணா, கண்டங்கத்திரி இவைகளின் வேர்கள், சுக்கு, வகைக்கு விரா. 6, பொடித்து 2 படி ஜலத்தில் போட்டு எரித்து ¼ (வ) படியாக்கி, $\frac{1}{16}$ (வீசம்) படி வீதம் தினம் 2 தடவை கொஞ்சம் திப்பிலிசூர்ண் சேர்த்துக்கொடுக்க குணமாகும்.

2. ரசபயிரவ செந்தூரம். 3. அர்த்த நாரீஸ்வரன் மாத்திரை, 4. அகஸ்தியர்குழம்பு இவைகளைக் கொடுக்க குணமாகும்.

திரிதோஷசுரம், விஸ்போடகசுரம் இவைகளுக்கு :—

லைகர் அமோனியா அஸிடெடிஸ் 2 அவுன்ஸ், ஸ்பிரிட் ஈதர் நைட்ரஸ், வைன், ஆண்டிமோனி வகைக்கு 2 திராம், சுத்தஜலம் 4½ (நாலரை) அவுன்ஸ் இவைகள் சேர்த்து 1½ (ஒன்றரை) அவுன்ஸ் வீதம் தினம் 2-3 தடவைக் கொடுக்க குணமாகும்.

மூன்றும் நான்கா முறை சுரத்திற்கு :—

1. சுரம் வருமுன் 15 முதல் 25 கிறேன்ஸ் குவைனவில் 5 துளி விளாவின கந்தகத் திராவகத்தை விட்டு 2 அவுன்ஸ் ஜலத்தில் மிஸ்ரித்துக்கொடுக்க குணமாகும்.

2. இந்த புஸ்தகத்தில் சொல்லிய மனோசிலை மாத்திரைக் கொடுக்க குணமாகும்.

மாறல் சுரத்திற்கு :—

டை குவைன மிக்ஸ்சர் கொடுக்க குணமாகும்.

சந்நிபாதசுரம் (சந்நி—13)க்கு :—

1. உலகோத்தம செந்தூரம்
2. ராஜ அப்பிரேக செந்தூரம்
3. ரசவீர செந்தூரம்
4. நமசிவாய செந்தூரம்
5. மகா ரசபஸ்மம்
6. வீரபஸ்மம்
7. அப்பிரேக பஸ்மம்
8. துரிசு பஸ்மம்
9. வீர செந்தூரம்
10. ருத்திர செந்தூரம்
11. லிங்க செந்தூரம்
12. ரச செந்தூரம்
13. திரிவிக்கிரம ரசசெந்தூரம்
14. ரசபயிரவ செந்தூரம்
15. ஏகாதசிருத்திர செந்தூரம்
16. சுவர்ணகோரோசனமாத்திரை
17. அப்பிரேக கோரோசன மாத்திரை
18. பயிரவ மாத்திரை
19. பானுபிரகாச மாத்திரை
20. கஸ்தூரி மாத்திரை
21. மனோசிலை மாத்திரை
22. ஆனந்தபயிரவ மாத்திரை
23. திரிலோகசூடாமணி மாத்திரை
24. சந்திரோதய மாத்திரை
25. சித்தாந்தபயிரவ மாத்திரை
26. ரசாநந்தபயிரவ மாத்திரை
27. வாதராக்ஷச மாத்திரை
28. லிங்கக்கட்டு

29. பாஷாணக் கட்டு
30. வீரக்கட்டு
31. வீரமெழுகு
32. லிங்கமெழுகு
33. பாஷாணமெழுகு
34. அகஸ்தியர் குழம்பு
35. வங்கேசுவர ரசகஸ்யம்
36. சர்வேசுவர ரசகஸ்யம்

இவைகளில் எதைக் கொடுத்தபோதிலும் குணமாகும். இவைகளின் செய்முறைகள் இந்த புஸ்தகத்தில் காண்க.

37. குளோரெட் ஆப் போடாஷ் 8 கிறேன்ஸ், கரிஉப்பு 20 கிறேன்ஸ், பைகார் பொனெட் ஆப் சோடா 30 கிறேன்ஸ், இவைகளை சேர்த்து பொடிசெய்து 2—3 மணிக்கு ஒரு தடவை ஜலத்தில் கொடுக்க குணமாகும். Dr. Stevens.

யானைக்கால் சுரத்துக்கு :—

சீந்திற்கொடி கஷாயத்தை தினம் காலையில் 6 மாதம் சாப்பிட்டு வர குணமாகும். இதைவிடாமல் சாப்பிட்டால் நின்றுவிடும்.

யானைக்கால் சுரம், குஷ்டம் இவைகளுக்கு :—

வெள்ளைப்பாஷாணம் 1 கிரேன், மிளகு 40 கிரேன்ஸ், தேன் தேவையானது இவைகளைச் சேர்த்து 10 மாத்திரைகளாக்கி ஒரு மாத்திரைவீதம் 3 தடவை கொடுக்க குணமாகும்.

யானைக்கால் ரோகம், அதின் சுரம்-பாம்புக்கடி இவைகளுக்கு :—

வெள்ளைப் பாஷாணம் 6 கிறேன்ஸ், மிளகு 1 கிராம், விளாம்பிசின் தேவையானது இவைகளைச் சேர்த்து 90 மாத்திரைகளாக்கி ஒரு மாத்திரை விதம் காலை மாலை கொடுக்க குணமாகும்.

உஷ்ணசுரத்திற்கு :—

ஒரு அவுன்ஸ் வில்வவேர் பட்டையை ஒரு பயிண்டு ஜலத்தில் போட்டு காய்ச்சி ½ (அரை) பயிண்டு ஆக்கி ¼ (அரைக்கால்) ஆழாக்கு வீதம் தினம் 1-2 தடவைக் கொடுக்க குணமாகும்.

சுரத்தில் வியர்வை பிறப்பிக்க :—

1. நவச்சார உப்பு 20 கிறேன்ஸ், எலுமிச்சம்பழச்சாறு 6 டிராம், டொலுப்பாணிதம், சாதிக்காய் பாவன திரவம் வகைக்கு ½ (அரை) டிராம், இவைகளைச் சேர்த்துக்கொடுக்கவும்.

2. லைகர் அமோனியா அசிடெடிஸ் 3 டிராம், கர்ப்பூரஜலம் 15 அவுன்ஸ், வெடி உப்பு 4 கிறேன்ஸ், ஆரஞ்சிதோல்பாணிதம் 1 டிராம், இவைகளைச் சேர்த்துக் கொடுக்கவும்.

3. பொட்டாஷ் கார்போனேட் 10 கிறேன்ஸ், கர்ப்பூர ஜலம் 12 டிராம், எலுமிச்சம்பழச்சாறு 2 டிராம் இவைகளைச் சேர்க்க பொங்கும் போது சாப்பிடவும்.

4. வெடியுப்பு 20 கிறேன்ஸ், நவச்சாரம் 12 கிறேன்ஸ், ஜலம் 3 அவுன்ஸ் இவைகளைச் சேர்த்து தினம் 2—3 தடவைக் கொடுக்கவும். (Dr. Thomas.)

5. பொட்டிலுப்பு 1½ (ஒன்றரை) கிராம், வாந்தி உப்பு 1 கிறேன், ரசபஸ்மம் 4 கிறேன்ஸ் இவைகளைச் சேர்த்து ஒரு தடவைக்கு எட்டிலொரு பாகம் 2 மணிக்கு ஒருதரம் கொடுத்துவரவும். (Dr. Dewees.)

சுரத்தில் உஷ்ணம் தணிவதற்கு:—

1. நவச்சாரம் 1 அவுன்ஸ், இரட்டித்து வடித்த சாராயம் 1 அவுன்ஸ், ஜலம் 15 அவுன்ஸ் இவைகளைச் சேர்த்து உடம்பின்மேல் துவட்டவும்.

2. வெடியுப்பு 5 அவுன்ஸ், நவச்சாரம் 5 அவுன்ஸ், ஜலம் 16 அவுன்ஸ் இவைகளைச்சேர்த்து உடம்பின்மேல் துவட்டவும். (Sir A. Cooper.)

சுரத்தில் தாகம் தணிக்க:—

1. வெடியுப்பு 10 கிறேன்ஸ், சர்க்கரை 20 கிறேன்ஸ், இவைகளைச் சேர்த்து ஒரு ஒயின்கிளாஸ் பெப்பர்மெண்டு ஜலத்தில் கரைத்துக் கொடுக்கவும். (D. R. Druitt).

2. டைலூடெட் பாஸ்பாரிக் ஆசிட் (Diluted Phosphoric Acid) 20–40 துளியை 1 அவுன்ஸ் ஜலத்தில் சேர்த்துக் கொடுக்கவும்,

3. குளோரெட் ஆப் பொடாஷ் 1 கிராம், ஜலம் ஒரு பயிண்டு இவைகளைச்சேர்த்து சன்னிபாதசுரம், விடாதசுரம் இவைகளில் காணும் தாகத்துக்குக் கொடுக்கவும். (Dr. Wotson.)

நேத்திர ரோகங்கள் 94-க்கு அவுஷதங்கள்.

நேத்திர ரோகங்கள் 94-க்கு:—

1. சிறுகீரை, பூலா, பொன்னுங்காணி இவைகளின்வேர், துத்தம், துரிசு, திப்பிலி, புளியம்பூ இவைகள் வகைக்கு விராகனிடை 5, சேர்த்து எலுமிச்சம்பழச் சாற்றால் மைபோலரைத்து நீண்ட மாத்திரைகள் செய்து உலர்த்தி ஷை பழச்சாற்றால் உரைத்துக் கண்ணிலிட குணமாகும்.

2. அமிர்தவல்லித் தயிலம். 3. மகா மிருகாமலத் தயிலம்.

நேத்திரப்பிரயாசத்தயிலம் :—

4. பொன்னாங்காணி, கறுகிரை, சிந்திற்கொடி, எலுமிச்சம்பழம், நார்த்தம்பழம் இவைகளின் சாறு, நல்லெண்ணெய், வகைக்கு படி 1, சேர்த்து அதில் முத்தகாசு, கோஷ்டம், அதிமதுரம், ஏலம், சண்பகப்பூ, சிறுநாகப்பூ, லவங்கம் வகைக்கு பலம் 1/16 (வ) டை சார்விட்டு அரைத்து கரைத்து காய்ச்சி, வடித்து முழுகிவர நீலகாசம், பித்தகாசம், மந்தாரகாசம், படலம், பில்லம், மயிர்க்குத்தல், புழுவெட்டு, அந்திமாலை, கண்வலி, கண்தினவு, நீர்வடிதல், நேத்திரவாயு குணமாகும்.

5 பால்துத்தம் பலம் ½ (அரை), துரிசு பலம் 1, வெள்ளை சங்கு பலம் 2, இவைகளை கல்வத்தில்போட்டு எலுமிச்சம் பழச்சாற்றால் மைபோலரைத்து நீளமாய் கயிறுபோல் மாத்திரைகள் செய்து உலர்த்தி முலைப்பாலில் உரைத்து கண்ணிலிட குணமாகும்.

கண்புழுவெட்டு, தூர்மாமிசம், பூவிழுதல், ஜலம்வடிதல் இவைகளுக்கு :—

ஜெரிகை வெள்ளியை உருக்கி அரத்தால் ராவினபொடி விராகனிடை 10 சுத்திசெய்து, ஜாதியிலை (பிச்சியிலை) சாற்றால் 4 ஜாமம் அரைத்து பசும்வெண்ணெயில் கலந்து பீங்கானில் வைத்துக்கொண்டு கண்ணில் மையிடுவதுபோலிட குணமாகும்.

கண் சிவப்புக்கு :—

1. நவச்சாரத்தை ஜலத்தில் கரைத்து அதில் அலிவிவிதை மாவைச்சேர்த்து போல்டிஸ் செய்து கண்களின்மேல் வைத்துக்கட்ட குணமாகும். (Tyrrell.)

2 பிரமதண்டு செடியின்பாலை கண்ணிலிட குணமாகும்.

கண்ணில் இறங்கும் மேகநீர் போக :—

காளித்தயிலத்தை செய்து ஸ்நானஞ் செய்துவர குணமாகும்.

கண் எரிவுக்கு :—

1. மகா சந்தனாதித் தயிலம்.
2. நெல்லிக்காய் தயிலம்.
3. பொன்னாங்காணித் தயிலம்.

அந்திமாலைக்கு :—

1. மகா மிருகாமலத் தயிலத்தை செய்து ஸ்நானஞ்செய்துவர குணமாகும்.

2. மிளகை வெள்ளாட்டுப் பிச்சப்பையில் கொண்டமட்டும் செலுத்தி ஜலம் வெளியே வராமல் வாயைத்தைத்து நிழலில் தூக்கிக்கட்டி வைத்து மிளகு உலர்ந்த பிறகு ஒரு மிளகை ஜலத்தால் உரைத்து தினம் 2 தடவை கண்ணிலிட குணமாகும். இதை ½ (அரை) —1 மண்டலம் கண்ணிலிடவேண்டியது.

கண் நோவுக்கு:—

1. லெகர் அமோனிய அசிடேடில் 2 அவுன்ஸ், அபினிப்பாவனத்திரவம் 1 கிராம், பன்னீர் 6 அவுன்ஸ் இவைகளைச் சேர்த்து அதில் துணியை மடித்து நனைத்து கண்களின்மேல்போட குணமாகும்.

2. 3 கிறேன்ஸ் படிகாரத்தை 1 அவுன்ஸ் ஜலத்தில் கரைத்து குழந்தையின் கண்ணோவுக்கு தினம் தினம் 4-5 தடவை கண்ணிலிடவும், கண்களைக்கழுவவும், அல்லது துணியை மடித்து நனைத்து கண்களின்மேல் போடவும். பெரியவர்களுக்கு அதிகமாய் சீனகாரத்தைச் சேர்த்துக்கொண்டு ஜலத்தை கண்ணிலிட குணமாகும்.

கண்ணில் துர்மாமிசத்திற்கு:—

தினம் காலை மாலை சிறு துருசிகட்டியால் துர்மாமிசத்தின் மேல் தேய்க்க தேய்க்க 3, 4 நாளைக்குள் கரைந்து குணமாகும்.

கண் குளிர்ச்சிக்கு:—

4 பலம் சிற்றாமணுக்கு வேரை அரைத்து ஒருபடி பசும்பாலில் சேர்த்துக்காய்ச்சி உறைகுத்திக் கடைந்தெடுத்த வெண்ணெயை கணணிலிட கண்கள் குளிர்ச்சியாகும்.

கண் ரெப்பை வீக்கத்திற்கு:—

(1) பசும்பாலைக் காய்ச்சி சுட சுட ஒற்றடம் கொடுக்க குணமாகும்.

(2) மிளகை ஜலத்தால் உரைத்துத் தடவிவர குணமாகும்.

(3) சங்குவை கறிவேப்பிலைச் சாற்றாலுரைத்துத் தடவிவர குணமாகும்.

கண் அமரத்திற்கு:—

துரிசுக்கட்டியை ரெப்பைக்குள் தடவிவர தீரும்.

கண் சிவப்பு—பூ இவைகளுக்கு:—

புளியம் விதைத்தோல், தேற்றாவிதை, கடுக்காய்த்தோல் வகைக்கு விரா. 1 மைபோலரைத்து துணியில் போட்டு முடித்து பசும்பாலில் ஊறவைத்துக் கண்ணில் பிழிந்தால் குணமாகும்.

கண் புகைச்சலுக்கு:—

(1) பவள பஸ்மம்.

(2) மகாசந்தனாதித் தயிலம்

(3) மகா அசுவகெந்தி பலாலாக்ஷாதித்தயிலம்.

(4) முசு முசுக்கைத் தயிலம்.

இவைகளை செய்து உபயோகிக்க குணமாகும்.

கண் வாயுதீர:—

கருஞ்செம்பைத்தயிலத்தை செய்து ஸ்நானஞ்செய்துவர குணமாகும்.

கண் படலம் 7-க்கு:—

(1) கையாந்தகரைத் தயிலம்.
(2) நெல்லிக்காய்த் தயிலம்.
இவைகளை ஸ்நானஞ் செய்துவர குணமாகும். இப்புஸ்தகத்தில் காண்க.

கண்காசம் 6-க்கு:—

(1) சையாந்தகனைத் தயிலம்.
(2) நெல்லிக்காய்த் தயிலம்.
(3) மகாமிருகாமலத் தயிலம்.
} இவைகளை இந்த புஸ்தகத்தில் சொல்லியபடி செய்து ஸ்நானஞ் செய்துவர குணமாகும்.

(4) வெள்ளைப்பூண்டை கோமூத்திரத்தில் அரைத்து இராத்திரியில் படுக்கைக்குப் போகும்பொழுது சிரசின்மேல் 7 நாள் பற்றுப்போட குணமாகும். பெருங்காயத்தை நீக்கி இச்சாபத்தியமாயிருக்கவும்.

(5) சமுத்திரத்திலுள்ள ஆமையின் ஓட்டை ஜலத்தில் வேகவைத்து நிழலில் உலர்த்தி முலைப்பாலால் உரைத்து கண்ணிலிட குணமாகும்.

கர்ணரோகங்கள் (25)-க்கு அவுஷதங்கள்.

கர்ணரோகங்கள் 25-க்கு:—

(1) 10 விரா. சிவப்பலைக்கிழங்கை அரைத்து ஒருபடி நல்லெண்ணெயில் சேர்த்து எரித்து வடித்து ஸ்நானஞ் செய்துவர குணமாகும்.

முசுறுமுட்டை எண்ணெய்:—

(2) குக்கில், வசம்பு, பூநாகம், முசுறு முட்டை, கோழிமுட்டை மஞ்சட்கரு, வெள்ளைப்பூண்டு, [illegible], வகைக்கு விரா. 2 சிதைத்து ½ (அ) படி வேப்பெண்ணெயில் சேர்த்து எரித்துவடித்து 4, 5 துளி காதிலிட குணமாகும்.

ரசானந்த சஞ்சீவி எண்ணெய்:—

(3) ரசம், கந்தகம், வெள்ளைப்பாஷாணம் அபினி, அபிமதுரம், வகைக்கு விரா. ½ (அரை) சூர்ணித்து நல்லெண்ணெய் சேர் 3, பசும் நெய் பலம் 6 சேர்த்து அதில் கரைத்து, எரித்து, வடித்து 4, 5 துளிகாதிலிட்டு ஸ்நானஞ்செய்துவர குணமாகும்.

(4) வெங்காயம் விரா. 2, வசம்பு விரா. 2, மஞ்சள் விரா. 4, பொடித்து ஒருபடி வேப்பெண்ணெயில் கரைத்து எரித்து வடித்து காதிலிட்டுவர குணமாகும்.

(5) அமிர்தவல்லித் தயிலத்தை ஸ்நானஞ்செய்துவர குணமாகும்.

(6) இஞ்சித்தயிலத்தை ஸ்நானஞ்செய்துவர குணமாகும்.

(7) சுக்கு. இந்துப்பு. திப்பிலி, நோனைக்கிழங்கு, பெருங்காயம், வசம்பு, வெள்ளைப்பூண்டு வகைக்கு விரா. 1 சேர்த்து 8 பலம் எருக்கம் பழுப்புச்சாற்றால் அரைத்து, 8 பலம் நல்லெண்ணெயில் சேர்த்து எரி

த்து மெழுகுபதத்தில் வடித்து ஒரு சொலில் போட்டு வைத்துக் கொண்டு 4, 5 துளி காதிலிட்டுவர குணமாகும்.

காதில் சீழ்வருதலுக்கு :—

(1) ஒருசேர் வேப்பெண்ணெயில் வசம்பு, வெள்ளைப்பூண்டு, பெருங்காயம், வகைக்கு விராக. 1 சூரணித்து போட்டு எரித்து வடித்து காதிலிட்டுவர குணமாகும்.

(2) ஒரு சேர் வேப்பெண்ணெயில் ½ (வ) சேர் வில்வப்பழசதையை போட்டு எரித்து வடித்து காதிலிட்டுவர குணமாகும்.

(3) அபினிப்பாவனத் திரவம் 4 கிராம், தேங்காய் எண்ணெய் நாலுகிராம் இவைகளைச் சேர்த்து குலுக்கி காதிலிட்டுவர குணமாகும்.

காதிரைச்சலுக்கு :—

(1) 5 அவுன்ஸ் நல்லெண்ணெயும், 4 அவுன்ஸ் தைவேளைச்சாறும் சேர்த்து எரித்து வடித்து காதிலிட்டுவர குணமாகும்.

(2) முசுமுசுக்கை இலைச்சாறு படி ⅛ (அரைக்கால்), நல்லெண்ணெய் படி ⅛ (அரைக்கால்), இவைகளைச் சேர்த்து அதில் வெள்ளைப்பூண்டு விராக. 3 ஷை சாற்றால் அரைத்து கரைத்து எரித்து வடித்து காதிலிட்டுவர குணமாகும்.

காதுமந்தத்திற்கு :—

(1) இஞ்சிச்சாறு ¾ (முக்கால்) கிராம், குதிரை லத்திச்சாறு 1 கிராம் இவைகளைச்சேர்த்து 4, 5 துளி காதிலிட குணமாகும்.

(2) 2 அவுன்ஸ் புங்கெண்ணெயில் 3 கிராம் பன்றிமுள்ளைச் சிதைத்துப் போட்டு எரித்து வடித்து காதிலிட்டு பஞ்சால் அடைத்து 4 நாள் வரையில் காற்றுப்புகாமல் வைத்திருக்க குணமாகும்.

காதுப்புழுவிழ :—

முருங்கை இலைச்சாறு 3 அவுன்ஸ், நல்லெண்ணெய் 4 அவுன்ஸ் சேர்த்து எரித்து வடித்து காதிலிட குணமாகும்.

காதுஎழுச்சிக்கு :—

1 அவுன்ஸ் நல்லெண்ணெயில் கிலுகிலுப்பைவேர் ½ (அரை) அவுன்ஸ் அரைத்துப்போட்டு எரித்து வடித்து 5, 6 துளி காதிலிட குணமாகும்.

காதுவலிக்கு :—

அபினிப்பாவன திராவமும் தேங்காய் எண்ணெயும் சமனிடையாய் சேர்த்து 5, 6 துளி காதிலிட குணமாகும்.

சிரோரோகங்கள் (19)-க்கு அவுஷதங்கள்.

சிரோரோகம் (19)-க்கு:—

(1) மகா வில்வாதித்தயிலம்
(2) அமிர்தவல்லித்தயிலம்
} இவைகளை இப்புத்தகத்தில் சொல்லியபடி செய்து ஸ்நானஞ்செய்துவர குணமாகும்.

ஒற்றைதலைவலிக்கு-(ஒருதலைவலி):—

(1) இஞ்சிச்சாறும், நல்லெண்ணெயும் வகைக்கு 4 அவுன்ஸ் சேர்த்து எரித்து வடித்து ஸ்நானஞ்செய்துவர குணமாகும்.

(2) மார்த்தாண்ட பயிரவத்தயிலம்
(3) சிரகத்தயிலம்
} இவைகளை ஸ்நானஞ்செய்துவர குணமாகும். செய்முறை இப்புத்தகத்தில் காண்க.

(4) வெள்ளைப்பாஷாண வெலயகீரை 4—5 துளி ஒரு அவுன்ஸ் ஜலத்தில் போட்டு தினம் 3—4 தடவை கொடுக்க குணமாகும்.

(5) கஞ்சாஇலைச்சாறு படி 1, நல்லெண்ணெய் படி 1 சேர்த்து எரித்து வடித்து ஸ்நானஞ்செய்துவர குணமாகும்.

இருபக்கத்தலைவலிக்கு:—

பேய்ப்புடல்சாறும், நல்லெண்ணெயும் வகைக்கு சேர் 1 சேர்த்து எரித்து வடித்து ஸ்நானஞ்செய்துவர குணமாகும்.

சகலதலைவலிக்கும்:—

மென்தல் (Menthal)-யை நெற்றி, புருவம் முதலிய இடங்களில் தேய்த்தால் குணமாகும்.

நீர்கோண்ட மண்டையிடிக்கு:—

கர்ப்பூரம், மிளகு, சதகுப்பை, கடுகு, திப்பிலி, மஞ்சள், மரமஞ்சள் வகைக்கு விரா. 4 அவைகளை குன்றிமணி இலைச்சாற்றால் மைபோலரைத்து மல்லுதுணியில் தடவித் திரியாக்கி உலர்த்தி கொளுத்தி நாசியில் அதன் புகையை இழுக்க குணமாகும்.

கபாலவாயு—கபாலவலி—மண்டையிடி—ஒற்றைதலைவலிஇவைகளுக்கு:—

(1) குப்பைமேனிச்சாறு படி 3, நல்லெண்ணெய் படி 4 சேர்த்து எரித்து வடித்து ஸ்நானஞ்செய்துவர குணமாகும்.

(2) எருக்கம்வேர் விரா. 5, அரிதாரம் விரா. 5 இவ்விரண்டும் சேர்த்து எலுமிச்சம்பழச்சாற்றால் மைபோலரைத்து, மல்லுதுணியில் தடவி திரியாக்கி உலர்த்தி கொளுத்தி நாசியில் புகைபிடிக்க குணமாகும்.

(3) நல்லெண்ணெயில் மிளகாய் போட்டுக்காய்ச்சி சிரசில் தேய்த்து அப்பியங்கன ஸ்நானஞ் செய்துவர குணமாகும்.

மண்டை கபத்திற்கு :—சர்வேசுவர ரசஸ்யம் உபயோகித்தால் குண மாகும்.

மண்டை சிலேஷ்மத்திற்கு :—வங்கேசுவர ரசஸ்யம் உபயோகித்தால் தீரும்.

தலைப்புழு வெட்டுக்கு :—குஷ்டகுடாரி எண்ணெய்யை செய்துகொடுக்க தீரும்.

மண்டையிடி-கபாலசூலைக்கு:—
பீனசகாசகணபதி தயிலத்தை ஸ்நானஞ் செய்தால் குணமாகும். செய்முறை இப்புஸ்தகத்தில் காண்க.

கபாலவரக்ஷிக்கு :—
நெல்லிக்காய் தயிலத்தை இப்புத்தகத்தில் சொல்லியபடி ஸ்நானஞ் செய்துவர குணமாகும்.

தலைமயக்கம்—தலைசுற்றலுக்கு :—
ராஜாங்க கொம்பரக்குத் தயிலத்தை ஸ்நானஞ்செய்துவர குணமாகும். இப்புத்தகத்தில் செய்முறை காண்க.

கபால சூலைக்கு :—
உலகோத்தம செந்தூரத்தைக்கொடுக்க குணமாகும். இப்புத்தகத்தில் செய்முறை காண்க.

சுவாசகாசம், க்ஷயம், இருமல், முதலிய கபரோகங்களுக்கு அவுஷதங்கள்.

காசம் முதலிய 96 கபரோகங்களுக்கு :—

(1) திப்பிலி பலம் 10, மிளகு பலம் 5, சுக்குபலம் 5, குரோசாணி ஓமம், சோம்பு, சீரகம், தும்பராஷ்டகம், தாளிசப்பத்திரி, லவங்கப்பத்திரி, லவங்கப்பட்டை, கடுக்காய், நெல்லிமுள்ளி, லவங்கம், ஏலம், சித்திரமூலம் வகைக்கு பலம் 1 இவைகளை இளவறுப்பாய் வறுத்துச் சூர்ணித்து அத்துடன் சீனி சேர் 4 சேர்த்து தேன்விட்டு பிசைந்து கொட்டைப்பாக்களவு அந்திசந்தி சாப்பிட்டுவர குணமாகும்.

2. ராஜ அப்பிரகசெந்தூரம்
3. திப்பிலி ரசாயனம்
4. சிங்கிபஸ்மம்
5. அயச்செந்தூரம்
6. ராஜமார்த்தாண்ட லேகியம்
7. சந்திரகாசத் தயிலம்
8. வீரபஸ்மம்
9. வெள்ளி பஸ்மம்

இவைகளை இந்த புத்தகத்தில் சொல்லியபடி செய்துகொடுக்க குணமாகும்.

சிலேஷ்மம் (20)-க்கு :—

1. மகாதாம்பிர பஸ்மம்
2. கல்நார் பஸ்பம்
3. மண்டூர செந்தூரம்

} இவைகளை இந்த புத்தகத்தில் பார்வையிட்டு செய்துக்கொடுக்க குணமாகும்.

மார்புச்சளிக்கு :—

நவச்சார உப்பு, இபிக்காகியுவனு, கர்ப்பூரம், வகைக்கு 3 முதல் 4 கிரேன்ஸ் சேர்த்து அனுபானத்தில் கொடுக்க குணமாகும்.

மார்புகபநோவுக்கு :—

வாந்தி உப்பு 1 கிரேன்ஸ், வெடி உப்பு 2 கிராம், வாதுமைப் பருப்புப் பாகு 12 அவுன்ஸ், கர்ப்பூரப்பாவனதிரவம் ½ (அரை) அவுன்ஸ், இவைகளைச்சேர்த்து அதிமதுரக் கசாயத்தில் ½ (அரை) அவுன்ஸ் விதம் தினம் 6 தடவைக்கொடுக்க குணமாகும்.

மார்புச்சளி—மார்பு கபநோவுக்கு :—

வாதுமைப்பருப்புப்பாகு 12 அவுன்ஸ், வெடிஉப்பு 2 கிராம், வாந்தி உப்பு 1 கிரேன், கலவைக் கர்பபூரத்திரவம் ½ (அரை) அவுன்ஸ் இவைகளைச்சேர்த்து ½ (அரை) அவுன்ஸ் வீதம் ஒருமணிக்கு ஒருதரம் கொடுத்துவர குணமாகும். (Dr. Graves).

கோழை வெளியாக்க :—

ஸைகர் பொட்டாஷ், நரிவெங்காயப்பாவனத்திரவம் வகைக்கு 15 துளி, கலவை கர்ப்பூரப்பாவனத்திரவம் ½ (அரை) கிராம், கர்ப்பூரஜலம் 1 அவுன்ஸ் இவைகளைச் சேர்த்துக் கொடுக்க குணமாகும். (Dr. C. B. Williams.)

சுவாச காசந்தீர்ந்து :—

பொட்டிலுப்பை அதிக ஜலத்தில் கரைத்து அதில் ஒரு தளமான கடுதாசியை தோய்த்து கொஞ்சநேரம் ஊறவைத்து பின்பு காற்றில் உலர்த்தி ஒரு சுங்கானில் வைத்துக்கொளுத்திப் புகையை உட்கொண்டால் உடனே குணமாகும். (Dr. Waring)

காசம் (5)-க்கு :—

(1) ஒரு விராகனிடை யானையின் நகத்தை கத்தியால் சீவி ஒரு சேர் வேப்பெண்ணெயைக் காய்ச்சி அதில் போட்டுக் கருகிப்போகாமல் பதத்தில் எடுத்து வடித்து ஒரு விராகனிடை வீதம் கொடுத்துவர குணமாகும்.

(2) ½ (வ) தங்கரேக்கை போஜனஞ் செய்யும்போது முதல் அன்னத்தின் மேல்போட்டு நெய்யைக்காய்ச்சி விட்டு பிசைந்துச்சாப்பிட்டு பிறகு வழக்கப்படி பத்தியமாய் சாப்பிட்டுவர குணமாகும்.

(3) தாளகக்கட்டு.
(4) திப்பிலிரசாயனம்.
(5) பாவனத்திப்பிலி.
(6) உலோகோத்தம செந்தூரம்.
(7) திரிவிக்கிரம ரச செந்தூரம்.
(8) சுவர்ணகோரோசன மாத்திரை
(9) திரிலோக ரக்ஷாமணிமாத்திரை.
(10) பஞ்சாக்ஷர செந்தூரம்.
(11) மகா ரஜதபஸ்மம்.
(12) மகா ரசபஸ்மம்.
(13) பவளபஸ்மம்.
(14) துருசிபஸ்மம்.
(15) பிரவாளபஸ்மம்.
(16) மகா அசுவகெந்திசூர்ணம்.
(17) ராஜாங்ககொம்பரக்குதயிலம்
(18) மகா தாளிசப்பத்திரி சூர்ண[ம்
(19) வீரபத்திர சிந்தாமணி.
(20) மகாதாதுலைகிருதம்.
(21) நமசிவாய செந்தூரம்.

சுவாசம் 5-க்கு :—

1. பஞ்சாக்ஷர செந்தூரம்.
2. திரிவிக்கிரம ரச செந்தூரம்.
3. சுவர்ண கோரோசன மாத்திரை.
4. திரிலோக ரக்ஷாமணி மாத்திரை.
5. பிரவாள பஸ்மம்.
6. லிங்கமெழுகு.
7. பாவனத்திப்பிலி.
8. மகாதாதுலை கிருதம்.
9. மகா அசுவகெந்தி சூர்ணம்.
10. சூரியாவர்த்தன மாத்திரை.

ரத்தகாசம் ரத்தவமனம் இவைகளுக்கு :—

படிகாரம் 2 கிராம், பசும்பால் 18 அவுன்ஸ் இவைகளைச்சேர்த்துக் காய்ச்சி ஆறினபின் 1½ அவுன்ஸ் வீதம் தினம் 3 தடவை கொடுக்கக்குணமாகும்.

பித்தகாசத்திற்கு :—

முசுமுசுக்கைத் தயிலத்தை ஸ்நானஞ் செய்துவர தீரும்.

மந்தாரகாசத்திற்கு :—

திரிலோகரக்ஷாமணி மாத்திரை கொடுக்க குணமாகும்.

சுனைக்கு :—

1. வீரபத்திர சிந்தாமணி.
2. தாளகக்கட்டு.
3. பவளபஸ்மம்.
4. துருசிபஸ்மம்.
5. லகுனாதுலை சூர்ணம்.
6. ராஜ வில்வாதிலேகியம்.
7. வச்சிரவல்லி லேகியம்.
8. மகாதாளிசப்பத்திரி சூர்ணம்.

9. கஸ்தூரிமெழுகு :—கஸ்தூரி, குங்குமப்பூ, கோரோசனை, பச்சைக் கர்ப்பூரம், ரசசெந்தூரம், சுத்திசெய்த லிங்கம், சுத்திசெய்தபூரம் வகைக்கு விரா. 1, ஏலக்காயின் அரிசி, சாதிக்காய், சாதிப்பத்திரி, கிராம்பு, கோஷ்டம், அக்கிறுகாரம், சுக்கு வகைக்கு விரா, 2 இவைகளில் ஏலம் முதலிய எழும் இடித்து தூள் செய்து வடிகட்டி வைத்துக்கொள்க. முதலில் கஸ்தூரி முதலிய எழும் கல்வத்தி

விட்டு அத்துடன் தேன்சேர்த்து அரைத்து, பிறகு ஷை தூளைசேர்த்து தேவையான தேன்விட்டு மெழுகுபதத்தில் அரைத்துவைத்துக்கொண்டு ஒருகுன்றிமணி அளவு குழந்தைகளுக்கு கொடுக்க சன்னி, சயித்தியம், சுரம், களிர், வலிப்பு, தொண்டையில் கபம், இருமல், வாந்திபேதி, பேதிமுதலிய அநேக வியாதிகள் குணமாகும்

க்ஷயரோகம் 4-க்கு:—

1. காட்லிவர் ஆயில்.
2. திரிலோகரக்ஷாமணி மாத்திரை.
3. திரிவிக்கிரம ரச செந்தூரம்.
4. அப்பிரக பஸ்மம்.
5. தாளகபஸ்மம்.
6. மகா தாம்பிர பஸ்மம்.
7. பஞ்சாக்ஷர செந்தூரம்.
8. மகா தாளிசபத்திரி சூர்ணம்.
9. பவளபஸ்மம்.

இரைப்புக்கு:—

1. தருசிபஸ்மம் ... } இப்புத்தகத்தில் சொல்லியபடி செய்துக்கொடுக்க குணமாகும்.
2. மகா ரஜதபஸ்மம் }
3. 2 கிறேன்ஸ் அபினியை பெரியவருக்குக் கொடுக்க இரைப்பு உடனே நிற்கும்.

இருமலுக்கு:—

1. லைகர் அமோனியா அசிடெடிஸ் 1 அவுன்ஸ், வைனம் ஆண்டிமோனி 2 டிராம், டோலுப்பாணிதம் 6 டிராம், சுத்தஜலம் 4 அவுன்ஸ் இவைகளைச் சேர்த்து $\frac{1}{6}$ (ஆறில் ஒரு பாகம்) 4 மணிக்கு ஒரு தடவைக் கொடுத்துவர குணமாகும். (Dr. G. Grogory.)
2. பயிரவ வடி மாத்திரை
3. லகுகட்டுவாங்க மாத்திரை
4. சுவர்ண கோரோசன மாத்திரை
5. பஞ்சாக்ஷர செந்தூரம்
6. வீரபத்திர சிந்தாமணி
7. பவள பஸ்மம்
8. லகு தூதுவளை சூர்ணம்
9. மகா தூதுவளைச் சூர்ணம்
10. அகத்தியர் குழம்பு
11. திப்பிலி ரசாயனம்
12. மகா தூதுவளை கிருதம்
13. ராஜவில்வாதி லேகியம்
14. வச்சிரவல்லி லேகியம்
15. இராஜகேசரி சூர்ணம்.
16. ஒரு குமட்டிக்காயை கொண்டுவந்து அதற்கு ஒரு சிறுத் துவாரஞ் செய்து அதில் மிளகைச்செலுத்தி நிழலிலுலர்த்தி எடுத்த மிளகில் ஒரு தடவைக்கு 7 மிளகைச் சூர்ணித்து அத்துடன் தேன், திப்பிலித்தூள் இவைகளைச் சேர்த்து சாப்பிட்டுவர குணமாகும்.

கபத்திற்கு:—

வாதுமைப்பருப்புப் பாகு 1 அவுன்ஸ், வைனம் இபிக்காக்குவானா 10 துளி, கார்பொனேட் ஆப் பொடாஷ் 10 கிறேன்ஸ், எலுமிச்சம்பழ

ரசம் 3 கிராம் இவைகளைசேர்க்கையில் பொங்கும்போதுச் சாப்பிட குணமாகும்.

கபத்தை வெளியாக்க :—

வாலேந்திர பௌலம் 6 கிரேன்ஸ், இபிக்காக்கியுவனு 3 கிரேன்ஸ், பொட்டிலுப்பு ½ (அரை) கிராம், இவைகளைச் சேர்த்து 4 மணிக்கு ஒரு தடவை ¼ (கால்) பங்கு கொடுக்க கபத்தை வெளிப்படுத்தும். (Dr. Paris)

கிரகணி ரோகங்கள் (11) க்கு அவுஷதங்கள்.

கிரகணி (11) க்கு :—

1. மாதுளம் பிஞ்சி, சாதிக்காய், சாதிப்பத்திரி, கருவப்பிசின், காந்தம், கல்மதம், லிங்கம், இவ்வேழும் வகைக்குப் பலம் 1 சுத்திசெய்து சேர்த்து அத்திப்பாலால் 2 சாமம் அரைத்து குன்றிமணி அளவாக மாத்திரைகளாக்கி ஒரு மாத்திரை வீதம் தினம் 2—3 தடவை வெல்லத்தில் கொடுத்துவர குணமாகும்.
2. லகு சங்குவடி மாத்திரை
3. நாராயண மண்டூர செந்தூரம்
4. அய செந்தூரம்
5. அயகாந்த செந்தூரம்
6. உலகோத்தம செந்தூரம்
7. சுயமக்கினி
8. அப்பிரேக பஸ்மம்
9. வெள்ளி பஸ்மம்
10. கந்தக ரசாயனம்
11. பொஜனகுடாரி மாத்திரை
12. மகா கூழ்பாண்டக் கிருதம்
13. ராஜ அமிர்தசஞ்சீவி லேகியம்
14. ராஜசிந்தாதி லேகியம்
15. ராஜ வில்வாதி லேகியம்
16. மகா தாளிசப்பத்திரி சூர்ணம்
17. ராஜ ஹம்ஸபொடலி மாத்திரை

இவைகளைக்கொடுக்க குணமாகும். இந்த புஸ்தகத்தில் இவைகளின் செய்முறைகள் காண்க.

வாயு கிரகணி—உஷ்ணபேதிக்கு :—

100 வருஷஞ்சென்ற வேப்பமரத்தின் உலர்ந்தப் பட்டை விரா. 100, மிளகு விரா. 50 இவைகளைச்சேர்த்து சூர்ணித்து அத்துடன் சர்க்கரை விரா. 75 சேர்த்து, 2 விரா. வீதம் 7 நாள் கொடுக்க குணமாகும்.

வாத—பித்த—சிலேஷ்ம—கிரகணிகளுக்கு :—

ஒருபலஞ் சீரகத்தை ஒருபலம் கொட்டாங் கரந்தையுடன் சேர்த்து மைபோலரைத்து சிறு வடைகளாகத் தட்டி நல்லெண்ணெயில் வறுத்துச் சாப்பிட குணமாகும்.

வயிறுகடுப்புக்கு :—

1. வெள்ளிய பஸ்மம்
2. நாக பஸ்மம்
} இவைகளை புத்தகத்தில் சொல்லியபடி செய்துக் கொடுக்க குணமாகும்.

3. சீரகம் விரா. 1, வெங்காயம் விரா. 2, கர்க்கடக சிங்கி வீரா. 4, இளவறுப்பாய் வறுத்து சூர்ணித்து திரிக்கடி வீதம் எருமைத்தயிரில் கொடுக்கத்தீரும்.

4. 7 பலம் சீரகத்தை இளவறுப்பாய் வறுத்து சூர்ணித்து ஒரு பலம் சீருக்கற்கண்டு பொடியைச்சேர்த்து 3 விரா. வீதம் பசும் நெய்யில் கொடுக்க குணமாகும்.

5. ஒரு பலம் ஒரு தலை வெள்ளைப்பூண்டுக்கு கறி உப்பை அரைத்து கவசமிட்டு உமிக்காந்தலில் வெதுப்பி, பருப்பை எடுத்து அரைத்துத் தயிரில் கொடுக்க குணமாகும்.

6. வெங்காயம் விரா. 1. சீரகம் விரா. ½ (அரை) கர்க்கடகசிங்கி விரா. ½ (அரை) இவைகளை இளவறுப்பாய் வறுத்துச் சூர்ணித்து எருமைத்தயிரில் கொடுக்கக் குணமாகும்.

மூலக்கடுப்பு—வயிற்றுக்கடுப்பு—ரத்தகிரகணி—சீதகிரகணிக்கு :—

வெந்தியம், நெல்லிவற்றல், சுண்டைக்காய் வற்றல், மாம்பருப்பு, கருவேப்பிலை, ஓமம், மாதுளம் பழத்தோல் வகைக்கு விரா. 1 இவைகளை இளவறுப்பாய் வறுத்து சூர்ணித்து 3 விரா. வீதம் தயிரில் கொடுக்க குணமாகும்.

சகல கழிச்சலுக்கு :—

புளியாரை, வாழைப்பூ, வகைக்கு 4 அவுன்ஸ் சேர்த்து பிட்டு அவித்துப் பிழிந்தச்சாற்றில் தேன் 10 துளி விட்டுக்கொடுக்க குணமாகும்.

அதிசார ரோகங்கள் (6)-க்கு அவுஷதங்கள்.

அதிசாரம் 6-க்கு :—

1. லகு கட்டுவாங்க மாத்திரை.
2. பயிரவடி மாத்திரை.
3. மகா ரச பஸ்மம்.
4. சுவர்ண ரஜத பஸ்மம்.
5. வெள்ளிய பஸ்மம்.
6. கந்தக ரசாயனம்
7. ராஜவில்வாதி லேகியம்.
8. அமிர்த சஞ்சீவி லேகியம்.

இவைகளைக்கொடுக்க குணமாகும். இந்த புத்தகத்தில் செய்முறைகள் காண்க.

9. விளர்வின கந்தகத்திராவகம் 2 கிராம், சீனி 4 கிராம், கலவை எலிசிப் பாவனத்திரவம் 4 கிராம், பெப்பர்மெண்டு ஜலம் 6 அவுன்ஸ்

இவைகளைச் சேர்த்து 4 மணிக்கு ஒரு தடவை இதில் கால் பங்கு கொடுத்துவரத்தீரும் (Mr. E. Shepherd).

10. சீமை எண்ணெய் (Olive oil) 1 அவுன்ஸ், ஐயோடின் 20 கிறேன்ஸ் இவைகளைச் சேர்த்து வயிற்றின் மேல் தேய்த்தால் அதிசாரம், குடலைப்பற்றிய ரோகங்கள் குணமாகும். (Mr. M. Diamond).

11. துருசி $1\frac{1}{2}$ கிறேன்ஸ், அபின் $1\frac{1}{2}$ கிறேன்ஸ், குல்கந்து தேவையானது இவைகளைச் சேர்த்து 3 மாத்திரைகளாக்கி 1 மாத்திரை வீதம் தினம் 3 தடவை கொடுக்க நீடித்த அதிசாரம், ரத்தபேதி குணமாகும். (Dr. Joy).

12. கருகாவி, கஞ்சாவித்து, அதிவிடையம், சாதிக்காய், மாங்கொட்டைப்பருப்பு, அபினி வகைக்கு பலம் 1, இவைகளை சிந்திற்கொடிச்சாற்றுலரைத்து குன்றிமணி பிரமாணம் மாத்திரைகள் செய்து ஒரு மாத்திரை வீதம் அனுபானத்திலிட குணமாகும்.

13. ஓமத்தின் அரிசியும், காட்டாத்திப்பூவும், வகைக்கு விரா. 10 சூர்ணித்து திரிக்கடி வீதம் இஞ்சிச்சாற்றில் கொடுக்கக் குணமாகும்.

சுரமில்லாத அதிசாரத்திற்கு :—

காசிக்கட்டி 10 கிறேன்ஸ், கருவாப்பட்டைத்தூள் 10 கிறேன்ஸ் இவைகளைச்சேர்த்து தேனில் கொடுக்க குணமாகும்.

அதிசாரம்—சீதபேதி இவைகளுக்கு :—

சாதிக்காய், சாதிப்பத்திரி, மாசிக்காய், கடுக்காப்பூ, சீரகம், அதிவிடையம், லவங்கப்பூ, அபினி, வெந்தியம், கசகசா, கோரோசனை, வகைக்கு விரா. 1, முலைப்பாலாலரைத்து உளுந்துபிரமாணம், மாத்திரைகள் செய்து நிழலில் உலர்த்தி பெரியவர்களுக்கு 5 மாத்திரையும், குழந்தைகளுக்கு ஒன்று முதல் 2 மாத்திரையும் தேனில் கொடுக்க குணமாகும்.

மந்தபேதிக்கு :—

நவச்சார உப்பு 5 கிறேன்ஸ், பெப்பர்மெண்டு ஜலம் $1\frac{1}{2}$ (ஒன்றரை) அவுன்ஸ், ரோஜாப்பூ பானகிதம் 1 திராம், இவைகளைச் சேர்த்துக் கொடுக்க குணமாகும்.

அஜீர்ணபேதிக்கு :—

2 விரா. ஓமமும் ஒருபிடி பிரண்டையும் சேர்த்து அரைத்து $\frac{1}{2}$ (அரை) படி ஜலத்தில் போட்டு எரித்து $\frac{1}{8}$ (அரைக்கால்) படியாக்கிக் கொடுக்க குணமாகும்.

சீதபேதி ரோகத்திற்கு அவுஷதங்கள்.

சீதபேதிக்கு :—

(1) டோவாஸ் பவுடரும் காடிக்காரமும் கிரமத்துடன் சேர்த்துக் கொடுக்க குணமாகும்.

(2) சுக்கு பலம் 1, கிராம்பு விரா. 1, கண்டத்திப்பிலி விரா. 1 எருமைத் தயிரால் மைபோலரைத்து சுத்தமான சிறு துணியில் கொஞ்சங் கொஞ்சமாக வைத்து முடித்து ஒரு சட்டியில் $\frac{1}{2}$ (அரை) படி எருமைமோர் விட்டு அதில் டி முடிச்சுகள் எல்லாம் போட்டு எரிக்க அவைகள் வெந்து மேலேமிதக்கும்; அப்போது எடுத்து அத்துடன் 3 விரா. தேனும், 5 விரா. நெய்யும் சேர்த்து பாக்களவு கொடுத்து வர குணமாகும்.

(3) குளோரோடின் (chlorodyne) 10-15 துளி சுத்த ஜலம் அல்லது காசிக்கட்டி கஷாயத்தில் கொடுக்க குணமாகும்.

(4) ராஜ அமிர்த சஞ்சீவி லேகியம் கொடுக்க சீதரத்தபேதி குணமாகும்.

(5) கட்டுவாதிச் சூர்ணம். (6) லகு கட்டுவாங்கமாத்திரை இவைகளைக் கொடுக்க குணமாகும். இப்புஸ்தகத்தில் காண்க.

(6) இபிக்காக்கு வனு, ரசபஸ்மம், அபினி இவைகளை கிரமத்துடன் சேர்த்துக் கொடுக்க குணமாகும்.

(7) 5 விரா. சாதிக்காயை சீலமண் செய்து ஒரு எருவில் புடம்போட்டு எடுத்து நெய்யும் தேனும் சேர்த்து பாசிப்பயிர் பிரமாணம் மாத்திரைகள் செய்து தினம் 2 தடவை 3—4 மாத்திரை வீதம் முலைப்பாலில் கொடுக்க சீதபேதி தீரும். தீபனம், ரத்தவிருத்தி உண்டாகும்.

(8) மாம்பருப்பும், கருவேப்பிலையும் சேர்த்து அரைத்து பிழிந்த சாற்றில் ஒரு டிராம் வீதம் 4 மணிக்கு ஒருதரம் குழந்தைக்கு கொடுக்க குணமாகும்.

(9) மாசிக்காயை நொறுக்கி நெய்யால் வறுத்து சூர்ணித்து 5-10 கிறேன்ஸ் வீதம் தேனில் குழந்தைக்குக் கொடுக்க குணமாகும்.

(10) உலர்ந்த வில்வப்பழத்தை நொறுக்கி ஜலத்திலிட்டு காய்ச்சின கஷாயத்தை கொடுத்துவர குணமாகும்.

(11) காரன் பிளோர் கஞ்சியை குழந்தைகளுக்கு கொடுக்க குணமாகும்.

(12) கைரோ சூர்ணம் குழந்தைகளுக்கும், கைரோ கலவைச் சூர்ணம் பெரியவர்களுக்கும் கொடுக்க குணமாகும்.

(13) கடுக்காய்ப்பூ விரா. 4, வெங்காயம் விரா. 4. சீரகம் விரா. 1 இவைகளை வெதுப்பி அரைத்து எருமைத் தயிரில் கொடுக்க குணமாகும்.

பல், நாக்கு, வாய் ரோகங்களுக்கு அவுஷதங்கள்.

உண்ணாக்குவளர்ந்தநற்கு:—

(1) நவச்சாரதூளை உண்ணாக்கின்பேரில் தடவ உண்ணாக்கு வளர்ந்து காணும் இருமல் குணமாகும்.—(Dr. Addison.)

(2) அயத்திராவகத்தை உண்ணாக்குக்குத் தடவ குணமாகும்.

(3) மிளகுதூளைத் தடவ குணமாகும்.

(4) நவச்சாரமும், கல்சுண்ணாம்பும் எலுமிச்சம்பழச்சாற்றாலரைத்து உண்ணாக்குக்குத் தடவ குணமாகும்.

உண்ணாக்கு அரிக்கும் கிரந்திக்கு:—

கஷுத்திர மாணிக்கதிருதம் கொடுக்க தீரும்.

ஈறு ரணத்திற்கு:—

பந்நீர், தேன் வகைக்கு 1 அவுன்ஸ், வினாவின கறியுப்புத் திராவகம் 1 திராம் இவைகளைச் சேர்த்து தினம் 3-4 தடவை ஈறின்மேல் தடவிவர குணமாகும்.

கண்ட ரணதாபத்திற்கு:—

வினாவின பொட்டிலுப்புத் திராவகம் $1\frac{1}{4}$ திராம், தேன் 2 அவுன்ஸ் பந்நீர் 6 அவுன்ஸ் இவைகளைச் சேர்த்து அடிக்கடி வாயை கொப்பளிக்க குணமாகும்.

ரசவாடை பிடிப்புக்கு:—

(1) வெங்காரம் விரா 5 பொடித்து $1\frac{1}{2}$ சேர் ஜலத்தில் கரைத்து தேன் விரா. 5 சேர்த்து வாயை கொப்பளித்துவர குணமாகும்.

(2) கருவேலம்பட்டையை சிதைத்து ஜலத்தில் போட்டுக் காய்ச்சின கசாயத்தால் வாயை கொப்பளிக்க குணமாகும்.

தொண்டை கரகரப்புக்கு:—

(1) பசும்பாலில் கொஞ்சம் மஞ்சள் சூர்ணத்தைப் போட்டுக் காய்ச்சிச் சாப்பிட குணமாகும்.

(2) கம்பளியால் செய்த கழுத்துப்பட்டையை கழுத்தைச் சுற்றிக் கட்டுவதினால் குணமாகும்.

(3) முக்காவேளைவேர் விரா. $\frac{1}{4}$ (வ), முசுமுசுக்கைவேர் விரா. 1 இவைகளைப்பொடித்து $\frac{1}{4}$ (வ) படி பசும்பாலில் போட்டுக் காய்ச்சிக் கொடுக்க குணமாகும்.

சுண்ணாம்பைச்சாப்பிட்டு வாய்ரணமானால்:—

மஞ்சளை அரைத்து ரணத்தின்மேல் தடவி 5 நிமிஷம் வைத்திருந்து, பிறகு வாயை ஜலத்தால் கொப்பளிக்கவும். அவ்விதமாய் தினம் 3—4 தடவை செய்ய குணமாகும்.

தொண்டைரணந்திற்கு:—
படிக்காரம் 2 கிராம், மாசிக்காய் கசாயம் 18 அவுன்ஸ், தேன் 2 கிராம் இவைகளை சேர்த்து வாய் கொப்பளிக்க குணமாகும்.

தொண்டைரணம், ரசவாடைபிடிப்பு, எயிறுபுண், இவைகளுக்கு:—
வாலெந்திர பௌலப்பாவனதிரவம் 2—4 கிராம், ஜலம் 4 அவுன்ஸ் அல்லது சின்கோனா கசாயம் 4 அவுன்ஸ் இவைகளைச்சேர்த்து வாயை கொப்பளிக்க குணமாகும்.

தொண்டைபுற்றுக்கு:—வேம்பாடம்பட்டை எண்ணெயைக்கொடுக்கவும்.

தொண்டைகம்மலுக்கும், வாய்ரணத்திற்கும், உள்நாக்கு வளர்ந்ததற்கும்:-
ஒரு துண்டு காசிக்கட்டியை வாயில் அடைத்துவைத்தால் குணமாகும்.

தொண்டைநோவுக்கு:—
100 கிறேன்ஸ் மொளகாய்த்தூள், 6—8 அவுன்ஸ் ரோசாப்பூ கசாயம் இவைகளை சேர்த்து வாயை கொப்பளிக்க குணமாகும்.

வாய்ரணத்திற்கு:—
(1) படிக்காரம் விராகனிடை 2, ஜலம் சேர் 1, தேன் விராகனிடை 2 இவைகளை சேர்த்து வாயை கொப்பளிக்க குணமாகும்.
(2) கருவேலம்பட்டை கசாயத்தை வாயை கொப்பளிக்க குணமாகும்.

சொத்தைப்பல் நோவுக்கு:—
அபினியாவது அல்லது அதின் பாவனத்திரவமாவது சொத்தைப்பல்லில் விட நோய் தணியும்.

தந்தவாயுக்கு:—
(1) ஒரு சிறு கலயத்தில் கறி உப்பு 4 அவுன்ஸ், சேங்கொட்டை 8 அவுன்ஸ் நொறுக்கிப்போட்டு அதின்மேல் ஒரு விரற்கடை உயரம் எருக்கம்பால்விட்டு ஓட்டால் மூடி சீலைமண்செய்து வராக புடம்போட்டு எடுத்துச்சூர்ணித்து தந்தசுத்திசெய்துவர குணமாகும். பற்கள் கருகாது.
(2) எருக்கம்பழுப்புசேர் 2, மாங்கொட்டைப்பருப்பு, சேங்கொட்டை, கொட்டைப்பாக்கு வகைக்கு 70, கறிஉப்பு படி ¼ (வ), இலுப்பை இலை சேர் 12, களிப்பாக்குப் பலம் 2½ (இரண்டரை), இவைகளைத் தனித்தனியே கருகிய நிறமாக வறுத்து அத்துடன் காசிக்கட்டி, துரிசு வகைக்குபலம் 1¼ (கவ) சேர்த்து சூர்ணித்து பல்விளக்க குணமாகும்.

சகல தந்தரோகங்களுக்கு:—
டிங்சர் ஜெல்சிமி 1 கிராம், குளோரல் ஹைட்ரஸ் 5 கிறேன்ஸ், கிரியஸோட் ஆயில் 2 துளி இவைகளைச்சேர்த்து தடவிவர குணமாகும்.

நாக்கில் ஜலம்ஊறி வாக்ஷிதோஷம் தீர :—

தங்கம், சுத்திசெய்த வெள்ளி, முத்து, பவளம், ருத்திராக்ஷம், மான் கொம்பு, மயிலிறகுச்சாம்பல் இவைகளை தேன்விட்டு உரைத்து அமிர்தவல்லி சூர்ணத்தை அத்துடன் சேர்த்து நாக்கில் தடவிவர, ஜலம் ஊறி வாக்ஷி, தோஷம் குணமாகும். இதற்கு கஸ்டா அவுஷத மென்று பெயர்.

குரல் நோய்க்கு :—

(1) வீரபத்திர சிந்தாமணி
(2) உலகொத்தம செந்தூரம்.
இவைகளைக் கொடுக்க குணமாகும். செய்முறைகள் இப்புஸ்தகத்தில் காண்க

நாக்கு அரிப்புக்கு :—

நட்சத்திர மாணிக்ககிருதம் செய்துகொடுக்க குணமாகும்.

நாக்குகோப்பளத்திற்கு :—

வேம்பாடம்பட்டை எண்ணெய் செய்துக்கொடுக்க குணமாகும்.

நாக்குவெடிப்புக்கு :—

வேம்பாடம்பட்டை எண்ணெய் செய்துக்கொடுக்க குணமாகும்.

நாக்குப்புற்றுக்கு :—

(1) வேம்பாடம்பட்டை எண்ணெய்.
(2) நட்சத்திர மாணிக்ககிருதம்..
இவைகள் செய்துகொடுக்க குணமாகும்.

வாய்கிரந்திக்கு :—

(1) ராஜ ஏலாதிச் சூர்ணம். ...
(2) வேம்பாடம்பட்டை எண்ணெய்.
இவைகளை செய்துகொடுக்க குணமாகும்.

வாய்புற்றுக்கு :—

(1) வேம்பாடம்பட்டை எண்ணெய்.
(2) க்ஷடாக்ஷர செந்தூரம் ...
இவைகளை செய்து கொடுக்க குணமாகும்.

வாய்நாற்றத்திற்கு :—

(1) வேம்பாடம்பட்டை எண்ணெய்.
(2) பொன்னாங்காணி கிருதம். ...
இவைகளை கொடுக்க குணமாகும். இப்புத்தகத்தில் காண்க.

அரிக்கிரந்திக்கு :—

ராஜ ஏலாதிச்சூர்ணம் செய்துகொடுக்க குணமாகும்.

நெஞ்செரிவுக்கு :—

(1) ராஜ மார்த்தாண்ட லேகியம்.
(2) ராஜ வில்வாதி லேகியம். ...
இவைகளை செய்துக் கொடுக்க குணமாகும்.

உதடுவெடிப்புக்கு :—

வேம்பாடம்பட்டை எண்ணெயை செய்து கொடுக்க குணமாகும்.

பல்லேயிறுக்கட்டிச் சீழ் வடிதலுக்கு :—

வேம்பாடம்பட்டை எண்ணெயை செய்து கொடுக்க குணமாகும்.

கருநாக்குதலுக்கு :—*நட்சத்திர மாணிக்கமிருதம் செய்துகொடுக்கதீரும்.*

மேல்வாய்ப்புண்ணுக்கு :—

நட்சத்திரமாணிக்கமிருதம் செய்து கொடுக்க குணமாகும்.

பல்லீரை அரிந்துத்தின்றும் கிரந்திக்கு :—

நட்சத்திரமாணிக்கமிருதம் செய்து கொடுக்க குணமாகும்.

தந்தம் இறுக :—

கல்நார் பஸ்மத்தால் தந்த சுத்திசெய்ய இறுகும்.

உதடு மேகப்புண், நாக்குமேகப்புண் இவைகளுக்கு :—

மயிர்மாணிக்கம் வேர், வெந்தியம், வெங்காயம் வகைக்கு 8 அவுன்ஸ் சேர்த்து பசுப்பாலால் மைபோலரைத்து 40 அவுன்ஸ் சிற்றாமணக்கெண்ணெயில் கரைத்து எரித்து வடித்து தினம் காலேயில் ½ அவுன்ஸ் கொடுத்துவர குணமாகும்.

குய்யரோகங்கள் 27-க்கு அவுஷதங்கள்.

Female Diseases.

குய்யரோகங்கள் (27)-க்கு :—

(1) *நன்னாரிவேர், அமுக்கிராகிழங்கு, பூமிசர்க்கரைகிழங்கு, சங்குப்பி, வெள்ளறுகு, கொத்தான், நிலவாகை, நிலப்பனைசமூலம், விழுதிவேர், வகைக்கு விராகனிடை 25, நொறுக்கி 4 படி ஜலத்தில் போட்டு ¼ (வ) படியாக்கின கசாயத்தில் பொன்னாங்காணி, குமரி, தாழைவிழுது, அமுக்கிராயிலை, சிவந்தவிழுதி, எலிச்செவிக்கள்ளி இவைகளின்சாறு, வகைக்குபடி 1/16 (வீசம்) கரிசலாங்கண்ணி, சங்குப்பி, வெங்காயம் இலைகளின் சாறு வகைக்குபடி ¼ (வ), சிற்றாமணக்கெண்ணெய் படி ⅜ (காலேயரைக்கால்), இவைகளை விட்டு அதில் பறங்கிப்பட்டை, பிரப்பங்கிழங்கு, சூரத்துக்கடுக்காய் வகைக்கு பலம் 2, கருஞ்சீரகம், நற்சீரகம், மிளகு, அதிமதுரம், தாளிசப்பத்திரி, சோம்பு, வகைக்கு விரா. 2½ (இரண்டரை) இவைகளை ஷை சாற்றாலரைத்து கரைத்து தீபாக்கினியாய் எரித்து வடித்து சுடுகை ஆறுவதற்குமுன் கர்ப்பூரசலாசத்து பஸ்மம், கல்மத பஸ்மம், கல்நார் பஸ்மம், வெங்காரம் பொரித்தச்சூரணம், கடுகுரோகணி சூர்ணம், வகைக்கு விரா. 2½ (இரண்டரை), போட்டு துளாவி தைல கடத்தின் வாயை அகலால் மூடி சீலேமண்செய்து பூமிக்குள் 4 நாள் பு*

தைத்துவைத்து பிறகு எடுத்து ½ (அரை)பலம் வீதம் காலே மாலே 5 நாள்சாப்பிடவும். அந்த நாள்களில் உப்பில்லாப் பத்தியமாக இருந்து பிறகு 5 நாள் உப்பைவறுத்துக் கூட்டி, 11-வது நாளில் பசுவின் நெய்யை தேய்த்து ஸ்நானஞ்செய்ய குய்யரோகங்கள் (27), மேகம் (20), மேகவாதரோகம், மேகரணங்கள் முதலிய அநேக பயங்கரமான ரோகங்கள் குணமாகும்.

(2) ரணச்சிகிச்சைகள் செய்வதாலும் குணமாகும்.

காமாலே ரோகங்கள் 13-க்கு அவுஷதங்கள்.

காமாலே (13)-க்கு :—

(1) மண்டூர செந்தூரம்.
(2) அயச்செந்தூரம்.
(3) வீரபத்திர சிந்தாமணி.
(4) துரிசு பஸ்மம்.
(5) மகா கூழ்ப்பாண்ட கிருதம்.
(6) ராஜஅமிர்த சஞ்சீவி லேகியம்.
(7) மகா கூழ்ப்பாண்ட லேகியம்.

இவைகளை இந்த புஸ்தகத்தில் சொல்லியபடி செய்து கொடுக்க குணமாகும். இன்னும் அநேக மருந்துகள் 13-வது அத்தியாயத்தில் காண்க.

மஞ்சட்காமாலேக்கு :—

(1) ரேவல் சின்னி (Rhubarb Powder) 10 கிறேன்ஸ், டார்டரேட் ஆப் பொட்டாஷ் 1 கிராம், பரிமள லேகியம் 20 கிறேன்ஸ், பெப்பர்மெண்டு ஜலம் 2 அவுன்ஸ் இவைகளைச் சேர்த்து 8 மணிக்கு ஒருதரம் கொடுக்க குணமாகும். (Dr. E. J. Clark).

(2) நாட்டுக்காட்டாமணக்கு இலேயை அரைத்து புன்னேக்காயளவு எருமை வெண்ணெயில் தினம் 2 தடவை 3 நாள் கொடுக்க குணமாகும்.

வாந்திபேதிக்கு அவுஷதங்கள்.

(1) விளாவின வெடியுப்புத் திராவகம் 1 கிராம், பெப்பர்மெண்டு ஜலம் அல்லது கர்ப்பூர ஜலம் 1 அவுன்ஸ், அபினிப்பாவனத்திரவம் 30 துளி இவைகளைச்சேர்த்து அதில் ¼ (வ) பங்கு வீதம் கஞ்சியில் சேர்த்து 3, 4 மணிக்கு ஒருதடவை கொடுக்க குணமாகும். (Mr. Hope).

(2) குளோரெட் ஆப் பொட்டாஷ் 8 கிறேன்ஸ், கறிஉப்பு 20 கிறேன்ஸ், கார்பொனெட் ஆப் சோடா 30 கிறேன்ஸ் இவைகளைச் சேர்த்து ஜலத்தில் கரைத்து 2, 3 மணிக்கு ஒரு தடவைக் கொடுக்க வாந்திபேதி, சந்நிபாத சுரம் குணமாகும். (Dr. Stevens).

(3) வங்கவுப்பு 2 கிறேன்ஸ், ரசபஸ்மம் 2 கிறேன்ஸ், கர்ப்பூரம் 1 கிறேன், அபினி 1 கிறேன், இவைகளைச்சேர்த்து ஒரு மாத்திரையாக்கி 2 அல்லது 3 மணிக்கு ஒரு தரம் கொடுக்க குணமாகும். (Dr. Paterson.)

மூத்திரரோகம், பிரமியம், பிரமேகம், கிரிச்சரம், பவுத்திரம், அரையாப்பு இவைகளுக்கு அவுஷதங்கள்.

மதுமூத்திரம் :—

(1) நவக்ஷார உப்பு 5—8 கிறேன்ஸ்யுடன் அபினிபாவனத்திரவம் சேர்த்து நிலவேம்புக் கசாயத்தில் கொடுத்து மாமிசம் கிரைவகை இவைகளின் பத்தியத்தில் வைக்க குணமாகும். (Dr. Barlow).

(2) நாவல் பழத்தின் விதையை நிழலில் உலர்த்தி தூள்செய்து பட்டைச்சாராயத்தில் சேர்த்து ஊறவைத்துக்கொடுத்தால் மதுமேகம் குணமாகும். இது கைகண்ட முறை.

நீரிழிவுக்கு :—

(1) மேககுலாந்தகமாத்திரை. (2) கணத்தெண்ணெய். (3) மகாசந்தநாதித்தயிலம். — இவைகளைக் கொடுக்க குணமாகும். அன்றியும் 13-வது அத்தியாயத்தில் மருந்துகளை விசேஷமாய் காணலாம்.

நீர்க்கட்டுக்கு :—

1. லைகர் பொட்டாஷ் 2 திராம், பொட்டிலுப்பு 2 திராம், ஸ்பிரிட் ஈதர் நைட்ரஸ் 3 திராம், நரிவெங்காயப்பாவனத்திரவம் 6 திராம், வெந்நீர் 6 அவுன்ஸ் இவைகளைச் சேர்த்து ஒரு பெரிய கரண்டி வீதம் தினம் 3 தடவை ஒரு வைன்கிளாஸ் ஜலத்தில் கொடுக்க மூத்திரத்தை விருத்திக்கும். (Mr. Fergussion).
2. மேகக்குலாந்தக ஷர்பத்து.
3. கூழ்ப்பாண்ட ஷர்பத்து.
4. நன்னாரி ஷர்பத்து.
5. ராஜவில்வாதி லேகியம்.

நீர்க்கோவைக்கு :—

அசிடெட் ஆப் பொட்டாஷ் 1 திராம், டிஜிடெலிஸ் பாவனத்திரவம் 8 துளி, எரிவண்டுப்பாவனத்திரவம் 15 துளி, ஸ்பிரிட் ஈதர் நைட்ரஸ் ½ (அரை) திராம், ஜலம் 1½ (ஒன்றரை) அவுன்ஸ் இவைகளைச் சேர்த்து தினம் 3 தடவைக் கொடுக்க குணமாகும். (Dr. Budd)

நீர்எற்றம், மலக்கட்டு, சூதகக்கட்டு இவைகளுக்கு :—

மக்கியும், சீனக்காரஉப்புவும் வயதுக்குத்தக்கபடி சேர்த்துக் கொடுக்க குணமாகும்.

நீர்ச்சுருக்கத்திற்கு :—

1. மகா கூழ்ப்பாண்டகிருதம்.
2. புளியாரைகிருதம்.
3. மகா கூழ்ப்பாண்ட லேகியம்.
4. அகஸ்தியர் குழம்பு.

இவைகளைக்கொடுக்க குணமாகும். இந்த புஸ்தகத்தில் காண்க.

நீர்எரிவு, நீர்க்கடுப்பு இவைகளுக்கு :—

1. மகாவல்லாரைகிருதம்.
2. மரத்துவெள்ளைநவநீதம்.
3. பவளபஸ்மம்.

இவைகளைச் செய்துகொடுக்க குணமாகும்

4. நெரிஞ்சிச்சாறு 1 அவுன்ஸ், இளநீர் ஜலம் 2 அவுன்ஸ், ஸ்பிரிட் ஈதர் நைட்ரஸ் 25 துளி, கற்கண்டு பொடி 2 திராம் இவைகளைச்சேர்த்துச் சாப்பிட்டுவர நீர் எரிவு, நீர்சுருக்கு குணமாகும்.

கிரிச்சரம் 4-க்கு :—

1. ராஜ அப்பிரேக செந்தூரம்.
2. மகா ரஜதபஸ்மம்.
3. அப்பிரேக பஸ்மம்.

இவைகளை கொடுக்க குணமாகும். அன்றியும் 13-வது அத்தியாயத்தில் அநேக மருந்துகளைக் காணலாம்.

மாவைக்கரைத்ததுபோல் மூத்திரத்திற்கு :—

விளாவின கறி உப்பு திராவகம் 1 திராம், பார்லி அரிசிகஞ்சி 1 பையின்ட், சர்க்கரை ½ (அரை) அவுன்ஸ் இவைகளைச் சேர்த்து 2 முதல் 4 அவுன்ஸ் வீதம் தினம் 3 தடவைக் கொடுக்க குணமாகும்.

அஸ்மரிரோகத்திற்கு (கல்லடைப்புக்கு) :—

1. கார்போனெட் ஆப் பொடாஷ் ½ முதல் 1 திராம், விளாம்பிசின் பாகு 1½ (ஒன்றரை) அவுன்ஸ், குரோசாணி ஓமம் பாவனத்திரவம் 1 முதல் 1½ (ஒன்றரை) திராம் இவைகளைச் சேர்த்துக் கொடுக்க குணமாகும்.

2. மகா ரஜதப்ஸ்மம்.
3. அகஸ்தியர் குழம்பு.

இவைகளைக் கொடுக்க குணமாகும். செய்முறை இந்த புஸ்தகத்தில் காண்க.

மகோதரத்திற்கு, (பெருவயிறுக்கு) :—

1. திராக்ஷ உப்பு ½ (அரை) திராம், நரிவெங்காயத்தூள் 2 கிறேன்ஸ், சுக்குத்தூள் 4 கிறேன்ஸ் இவைகளைச் சேர்த்து 8 மணிக்கு ஒருதரம் ஜலத்தில் கொடுக்க குணமாகும். (Dr. A. T. Thomson.)

2. திராக்ஷ உப்பு 1 அவுன்ஸ், பொட்டிலுப்பு 2 திராம், வெங்காரம் 2 திராம், டிஜிடெலிஸ் தூள் 20 கிறேன்ஸ், இவைகளைச் சேர்த்து 12 பாகமாக்கி தினம் 2, 3 தடவை ஒவ்வொரு பாகமாக ஜலத்தில் கொடுத்துவர குணமாகும். (Dr. Copland.)

சுண்ணாம்பு கரைத்ததுபோல் மூத்திரம் இறங்குதலுக்கு :—

விளாவின கறி உப்புத்திராவகம் 10 துளியை ½ (அரை) சேர் பச்சை அரிசி கஞ்சியில் சேர்த்து காலை மாலை 3 நாள் கொடுக்கத்தீரும்.

மூத்திரரோகம் 20-க்கு :—

ரஜத பஸ்மம் கொடுக்க குணமாகும்.

வெள்ளை விழுதலுக்கு :—

(1) 1 முதல் 4 கிராம் நவக்ஷாரத்தை ஒரு பையின்ட் ஜலத்தில் கரைத்து புருஷருக்கு நீர்த்தாரையிலும், ஸ்திரீகளுக்கு அல்குலியிலும் அடிக்கடி அடிக்க குணமாகும் (Dr. Waring.)

(2) லைகர் பொடாஷ் 3 கிராம், விளாம்பிசின் கலவை 2 அவுன்ஸ், வால் மிளகுத்தூள் 1 அவுன்ஸ், சுத்தஜலம் 8½ (எட்டரை) அவுன்ஸ், ஆரஞ்சிப்பழத்தோல்ப்பாணிதம் 1 அவுன்ஸ் இவைகளைச்சேர்த்து 3 பெரிய கரண்டி வீதம் தினம் 3 தடவைக் கொடுக்க குணமாகும். (Dr. Thomas.)

(3) பொட்டிலுப்பு 1 கிராம், கர்ப்பூர ஜலம் ½ (அரை) கிராம், குல்கந்து ½ கிராம், இவைகளைச்சேர்த்து 30 மாத்திரைகளாக்கி 2 முதல் 10 மாத்திரை தினம் கொடுக்க குணமாகும். (Gulbourt.)

(4) கோடகசாலை இலையை அரைத்து ½ (அரை) அவுன்ஸ் பசும்வெண்ணெயில் பாக்களவு வைத்து தினம் 2, 3 தடவைக் கொடுத்துவர குணமாகும்.

(5) காலபயிரவ எண்ணெய்.
(6) மகா கூழ்ப்பாண்ட கிருதம்.
(7) வெள்ளிய பஸ்பம்.
} இவைகளைக்கொடுக்க குணமாகும். இந்த புஸ்தகத்தில் காண்க.

வெட்டைக்கு :—

(1) அகஸ்தியர் குழம்பு.
(2) ராஜவலாதிச் சூர்ணம்.
} இவைகளைக் கொடுக்க குணமாகும்.

பிரமியம் 20-க்கு :—

(1) மேகத்தெண்ணெய்.
(2) பொன்னுங்காணி கிருதம்.
(3) மகாசந்தனாதித் தயிலம்.
(4) ராஜவலாதிச் சூர்ணம்.
(5) மகா கூழ்ப்பாண்ட லேகியம்.
(6) மகா தாதுளை லேகியம்.
(7) மகா கூழ்ப்பாண்ட கிருதம்.
(8) கூழ்ப்பாண்ட ஷர்பத்து.

இவைகளைக் கொடுக்க குணமாகும். அன்றியும் 13-வது அத்தியாயத்தில் சொல்லிய மருந்துகளை ரோகங்களுக்குத் தக்கபடி மிக்ஸ்சர் செய்து கொடுக்க குணமாகும்.

நீர்த்தாரையில் ரத்தம், சீழ்வடிதலுக்கு :—

(1) பறங்கிப்பட்டை, வெள்ளைக்குங்கிலியம், சர்க்கரை வகைக்கு 1 அவுன்ஸ் சூர்ணித்து பசும் நெய்யில் கலந்து பாக்களவுச் சாப்பிட்டுவர குணமாகும்.

நீர்த்தாரையில் ரத்தம் வடிதலுக்கு :—

(1) ஒருகிராம் சர்க்கரையை ஒரு அவுன்ஸ் ஒரிலைத்தாமரைச் சாற்றில் சேர்த்து 10 நாள் கொடுத்துவர குணமாகும்.

நீர்த்தாரையில் சீழ் வடிதலுக்கு :—

(1) 4 அவுன்ஸ் நீராகாரத்தில் ஒரு கிராம் அதிமதுரத்தைச் சூர்ணித்துப்போட்டுக் கொடுக்க குணமாகும்.

நந்திமேகம்—வெள்ளை விழுதல் இவைகளுக்கு :—

பால்துத்தம் 10 கிறேன்ஸ், ஜலம் 8 அவுன்ஸ் இவைகளைச் சேர்த்து (வீக்கம், நோய் இவைகள் குணமான பிறகு) நீர்த்தாரையில் அடிக்க குணமாகும்.

எலும்புருக்கி ரோகத்திற்கு :—

(1) பொட்டிலுப்பு 10 கிறேன்ஸ், படிகாரம் 5 கிறேன்ஸ் இவைகளைச் சேர்த்து தினம் 3 தடவைக்கொடுக்க குணமாகும். (Dr. Dewees.)

(2) ராஜஏலாதிச் சூர்ணம். (3) மகாதுாதுளை லேகியம். (4) மகா கூழ்ப்பாண்ட லேகியம். இவைகளைக் கொடுக்க குணமாகும்.

சதை அடைப்புக்கு :—மகா ரஜதபஸ்மம் கொடுக்க குணமாகும்

பிரமேகம் 21-க்கு :—

(1) குமட்டிக்காய் வேர், கடுக்காய், தானிக்காய், நெல்லிவற்றல், கோரைக்கிழங்கு, கஸ்தூரி மஞ்சள் இவைகளை சமமாகச்சேர்த்து நொறுக்கி கசாயஞ் செய்து அதில் தேன், மஞ்சள் தூள் இவைகளைச்சேர்த்துக் கொடுக்க குணமாகும்.

(2) ராஜ அப்பிரேக செந்தூரம்.
(3) மேகக்குலாந்தக மாத்திரை.
(4) மகாதுாதுளை லேகியம்.
(5) மகா தாம்பிர பஸ்மம்.
(6) ரஜத பஸ்மம்.
(7) அப்பிரேக பஸ்மம்.
(8) சந்தன ஷர்பத்து.
(9) நன்னாரி ஷர்பத்து.
(10) மகா சந்தனாதித் தயிலம்.
(11) மஹா ரஜத பஸ்மம்.

இவைகளை இப்புஸ்தகத்தில் சொல்லியபடி செய்துகொடுக்க குணமாகும். அன்றியும் 13-வது அத்தியாயத்தில் அநேக மருந்துகளைக் காண்க.

யோனிப்புற்றுக்கு :—

(1) நமசிவாய செந்தூரம்.
(2) காலபயிரவ எண்ணெய்.
(3) மேகத்தெண்ணெய்.
(4) மகா ரஜத பஸ்மம்.

இவைகளைச் செய்துகொடுக்க குணமாகும்.

ஸ்திரீகளின் வெள்ளைக்கு :—

விளாவின் கறிஉப்புக்கிராவகம் 10 துளியை ½ (அரை) சேர் பச்சை அரிசிகஞ்சியில் சேர்த்து காலை மாலை 3 நாள் கொடுக்க குணமாகும்.

லிங்கப்புற்றுக்கு :—

(1) காலபயிரவ என்ணெய். (3) மகா ரஜத பஸ்மம்.
(2) மேகத்தெண்ணெய்.

இவைகளைச் செய்துகொடுக்க குணமாகும். இந்த புஸ்தகத்தில் காண்க.

பவுத்திரரோகம் (15) க்கு :—

(1) உலகோத்தம செந்தூரம்.
(2) சமசிவாய செந்தூரம்.
(3) மகா தாம்பிர பஸ்மம்.
(4) ரச மெழுகு.
(5) திப்பிலிச் சூர்ணம்.

} இவைகளைச் செய்து கொடுக்க குணமாகும். இந்த புஸ்தகத்தில் செய்முறைகள் காண்க.

அண்டரோகங்கள் 4-க்கு அவுஷதங்கள்.

சதை அண்டரோகத்துக்கு :—

வெடி உப்பு 5 அவுன்ஸ், நவச்சாரம் 5 அவுன்ஸ், ஜலம் 16 அவுன்ஸ், இவைகளைச்சேர்த்து சதைஅண்டத்திற்கு லேபனமாகபோட தீரும்.

அண்டவீக்கத்திற்கு :—

குட்டித்தக்காளியிலை சேர் 1, தைவேளையிலை சேர் 1, ஆமணக்கெண்ணெய் சேர் ½ (வ) இவைகளைசேர்த்து வதக்கிக் கட்ட குணமாகும்.

சகல அண்டவாயுக்கு :—

அண்டசுண்ணம் :—ஒருகோழி முட்டைக்கு ஒரு சிறு துவாரஞ்செய்து அதில் குப்பைமேனிச்சாற்றை விட்டு குப்பைமேனி இலையை அரைத்து அதற்கு 3 விரற்கடை கனமாக கவசஞ்செய்து பின்பு சீலமண் செய்து வராக புடம்போட சுண்ணமாகும். அதை எடுத்து 4-6 கிறேன்ஸ் விதமாக பசும்நெய்யில் கொடுக்க குணமாகும்.

அண்டரோகம் (4), குடல்விருத்திரோகம் (7) இவைகளுக்கு :—

(1) முடக்கொத்தான் எண்ணெய்
(2) அகஸ்தியர் குழம்பு ...
(3) வாதராக்ஷச எண்ணெய் ...

} இவைகளைக்கொடுக்க குணமாகும் இந்த புஸ்தகத்தில் காண்க.

குடல் வாதத்திற்கு :—

(1) முடக்கொத்தான் எண்ணெய்
(2) வாதராக்ஷச எண்ணெய் ...
(3) அயச்செந்தூரம் ...

} இவைகளைக் கொடுக்ககுணமாகும். இந்த புஸ்தகத்தில் காண்க.

சரீரத்தின்மேல் காணுஞ் சொறி, சிரங்கு, கிரந்தி, அரையாப்பு, கண்டமாலை, புண், பிளவை, கட்டி, குஷ்டம் முதலியவைகளுக்கு அவுஷதங்கள்.

சொறிசிரங்கு முதலிய கருமரோகங்களுக்கு :—

(1) *திராக்ஷஉப்பு, சர்க்கரை வகைக்கு 2 கிராம், கந்தகப்பதங்கம் 1½ கிராம் இவைகளைச் சேர்த்து தினம் 2 தடவைக் கொடுக்க குணமாகும்.* (Dr. W. Ainslie)

(2) *நாகபஸ்மம் 1 கிராம், கந்தகப்பதங்கம், அபினிப்பாவனத்திரவம் வகைக்கு ½ (அரை) கிராம், வாதுமை நெய் 1 அவுன்ஸ், வெண்ணெய் 3 அவுன்ஸ் இவைகளைச் சேர்த்து வயது சென்றவர்களுக்குக்காணும் சொறி சிரங்குகளுக்கு தடவிவர குணமாகும்* (Alibert)

(3) *விளாவின கந்தகத்திராவகம் 2 கிராம், பன்றிநெய் 2 அவுன்ஸ் இவைகளைக் சேர்த்து தடவிவர குணமாகும்.*

சிரங்குக்கு :—

(1) *வீரபத்திர சிந்தாமணி*
(2) *மகா வல்லரைகிருதம்*
(3) *மகா சந்தாாதித் தயிலம்*
(4) *கணத்தெண்ணெய்*
(5) *வெங்கடேச எண்ணெய்*
(6) *சந்திரபிரகாச எண்ணெய்*
(7) *ராஜ ஏலாதிச் சூர்ணம்.*

இவைகளை செய்துகொடுக்க குணமாகும். புஸ்தகத்தில் காண்க.

நமைச்சலுக்கு :—

லைகர் அமோனிய அசிடெடிஸ் 2 அவுன்ஸ், விளாவின ஹைட்ரோஸையானிக் ஆசிட் 1 கிராம். டிங்சர் டிஜிடெலிஸ் 3 கிராம், பங்நீர் 5 அவுன்ஸ் இவைகளைச் சேர்த்து லேலதமாக செய்து கிழவர்களுக்கு காணும் நமைச்சலுக்கு தடவிவர குணமாகும்.

(Dr. A T. Thomson).

மறு, மூட்டு இவைகளுக்கு :—

(1) *மிளகை உரைத்து தடவிவர குணமாகும்.*
(2) *புனுகு தடவிவர குணமாகும்.*
(4) *ஐயொடைன் பாவனத் திரவம் தடவிவர குணமாகும்.*
(4) *மீன் எண்ணெய் தடவிவர குணமாகும்.*

அக்கிக்கு :—

(1) *சிவப்பு காவிக்கல்லை ஜலத்தாலரைத்துத் தடவிவர குணமாகும்.*

(2) *நீர்வெட்டிமுத்து கிரா. 2, மலாக்கா சந்தனம் கிரா. 4 இவைகளைச் சேர்த்துத் தடவிவர குணமாகும்.*

எச்சிற்றழிப்புக்கு :—

பால்துத்தம் 1 கிராம், மீன்கொழுப்புப்பிளாஸ்திரி 1 அவுன்ஸ் இவைகளைச் சேர்த்து தடவிவர குணமாகும்: (Dr. E. Wilson).

சொறிக்கு :—

(1) விழுதியெண்ணெய் (5) மேகத்தெண்ணெய்
(2) ராஜ ஏலாதிச் சூர்ணம் (6) ரசமெழுகு
(3) மகா வல்லாரைகிருதம் (7) கால பயிரவ எண்ணெய்
(4) சந்திரபிரகாச எண்ணெய் (8) மகா சந்தனாதித் தயிலம்.

இவைகளைச் செய்துகொடுக்க குணமாகும்.

ஆண்குறியின்மேல் காணும் ரணத்திற்கு :—

ரசபஸ்மம் 1 கிராம், கல்சுண்ணாம்பு தெளிவுஜலம் 1 பையிண்டு இவைகளைச் சேர்த்து அதில் துணியை நனைத்து ரணத்தின்மேல் போட குணமாகும்.

உள்ளங்கையின் சொறிசிரங்குக்கு :—

லிங்கம் 2 கிராம், டிங்சர் ஒபியம் 2 கிராம், கந்தகப்பதங்கம் ½ (அரை) அவுன்ஸ், நெய் 5 அவுன்ஸ் இவைகளைச் சேர்த்துத் தடவிவர குணமாகும். (Dr. E. Wilson).

சருமரோகத்திற்கு :—

கந்தகப் புகைச்சல் கொடுக்க குணமாகும். இப்புஸ்தகத்தில் காண்க.

ரணத்திற்கு :—

(1) சாயப்பிளாஸ்திரி ...
(2) ஸ்டிகிக்பிளாஸ்திரி ...
(3) மடல்துத்தசெந்தூரப்பிளாஸ்திரி

} இவைகளைச் செய்துபோட குணமாகும்.

கடிகளுக்கு :—

(1) ரசகர்ப்பூரம், கந்தகம், வகைக்கு ஒரு கிராம், மர எண்ணெய் 2½ (இரண்டரை) கிராம்ஸ், இவைகளைச் சேர்த்து மைபோலரைத்து மறுபடியும் 2 அவுன்ஸ் மரஎண்ணெயை விட்டு கலந்து கடிகளுக்கு பூசி மறுநாள் வெந்நீர் ஸ்நானமும் பிறகு அப்பியங்கன ஸ்நானமுஞ் செய்ய குணமாகும்.

(2) வெங்கடேச எண்ணெய் கொடுக்க குணமாகும்.

மேகரணத்திற்கு :—

(1) தாம்பிரசெந்தூரம் (6) கந்தகலேகியம்
(2) ரசப்புகைச்சல் (7) கனத்தெண்ணெய்
(3) வீரபத்திர சிந்தாமணி (8) குஷ்டகுடாரி எண்ணெய்
(4) திரிமூர்த்தி செந்தூரம் (9) ராஜ ஏலாதிச் சூர்ணம்
(5) க்ஷடாக்ஷர செந்தூரம் (10) மேகத்தெண்ணெய்

பிலுகசாபி ரணசந்நிபந்த :—கொட்டைப்பாக்கை சுட்டு கரியாக்கி தூள் செய்து கசவு ரஸம் இவைகளின்மேல் போட்டுவர 2-3 நாளில் குணமாகும்.

மேகப்புண், மேகப்புரைச்சு :—

(1) மகா சந்தனாதித்தயிலம் ... (2) ஆனந்தரசவிநோத சூர்ணம் (3) திருமூர்த்தி சூர்ணம் ...	இவைகளைக் கொடுக்க குணமாகும் இப்புஸ்தகத்தில் காண்க.

கருமேகசந்நிபந்த :—

தாம்பிரமெழுகு செய்து கொடுக்க குணமாகும்.

அரையாப்புக்கட்டிகந்த :—

(1) உலகோத்தம செந்தூரம் (2) ஆனந்த ரசவிநோத சூர்ணம் (3) காலபயிரவ எண்ணெய் (4) ரசமெழுகு	இவைகளைக்கொடுக்க குணமாகும் இன்னும் அநேக மருந்துகளை 13-வது அத்தியாயத்தில் காண்க.

மேகம் (20)-க்கு :—

(1) பொடாஷியம் அயொடைட் ½ (அரை) திராம், குவாசியாகசாயம் 6 அவுன்ஸ் இவைகளைச் சேர்த்து 1 அவுன்ஸ் வீதம் தினம் 3 தடவைக் கொடுக்க குணமாகும் (Dr. Hooper)

(2) குளோரெட் ஆப் பொட்டாஷ் 20 கிறேன்ஸ், ஜென்சன் கசாயம் 1½ (ஒண்ணரை) அவுன்ஸ் இவைகளைச் சேர்த்து தினம் 3 தடவைக்கொடுக்க மேகம், மேகரணம் குணமாகும் (Mr. Sayle).

(3) ராஜ அப்பிரக செந்தூரம்	(18) மஹா ரஸ பஸ்மம்
(4) வீரபத்திர சிந்தாமணி	(19) சுவர்ண ரஜத பஸ்மம்
(5) அயச்செந்தூரம்	(20) வீரக்கட்டு
(6) உலகோத்தம செந்தூரம்	(21) ரசகர்ப்பூரக்கட்டு
(7) வீரசெந்தூரம்	(22) வீரமெழுகு
(8) ருத்திர செந்தூரம்	(23) பறங்கிப்பட்டை ரசாயனம்
(9) லகு தாம்பிர பஸ்மம்	(24) மகா கூழ்ப்பாண்ட கிருதம்
(10) மகாதாம்பிர பஸ்மம்	(25) பொன்னாங்காணி கிருதம்
(11) ரஜத பஸ்மம்	(26) மகா வல்லாரை கிருதம்
(12) தாளக பஸ்மம்	(27) மேககுலாந்தக ஷர்பத்து
(13) மேகராஜ சுவர்ண வடகம்	(28) கூழ்ப்பாண்ட ஷர்பத்து
(14) மகா ரஜதபஸ்மம்	(29) மகா அசுவகெந்திசூர்ணம்
(15) இராஜஅமிர்தசஞ்சீவிலேகியம்	(30) குஷ்டகுடாரி எண்ணெய்
(16) மகாதூதுளை லேகியம்	(31) கருவங்க பஸ்மம்
(17) மகா விஷ்வாதித்தயிலம்	(32) மேகத் தெண்ணெய்

(33) குமரி சஞ்சீவித் தயிலம் (35) மகாஅசுவகந்தி பலாசலாக்ஷாத் தயிலம்
(34) காலமேக ராஜாங்க மாத்திரை

இவைகளை இந்த புஸ்தகத்தில் சொல்லியபடி செய்து கொடுக்க குணமாகும். இன்னும் அநேக மருந்துகள் 13-வது அத்தியாயத்தில் காண்க.

மேகநீருக்கு :—

(1) ராஜ அமிர்தசஞ்சீவி சூர்ணம்
(2) கஸ்தூரி க்ஷீர்பத்து
} இவைகளைக் கொடுக்க குணமாகும்

ஒட்டுமேகத்துக்கு :—

பாலைத்தயிலத்தை உபயோகிக்க குணமாகும்.

மேகசூலைக்கு :—

(1) பரங்கிப்பட்டை சூர்ணம்
(2) மகா வல்லாரை கிருதம்
} இவைகளைக் கொடுக்க குணமாகும்.

மேகத்தடிப்புக்கு :—

(1) காலபயிரவ எண்ணெய்
(2) தாம்பிரமெழுகு
} இவைகளைக் கொடுக்க குணமாகும்.

மேகஊறலுக்கு :—

(1) காலபயிரவ எண்ணெய் (4) ராஜ ஏலாதி சூர்ணம்
(2) மேகத்தெண்ணெய் (5) ராஜ அமிர்தசஞ்சீவிச் சூர்ணம்
(3) வெங்கடேச எண்ணெய் (6) மேககுலாந்தக க்ஷீர்பத்து

இவைகளைக் கொடுக்க குணமாகும். இப்புஸ்தகத்தில் காண்க.

புற்றுக்கு :—

(1) குஷ்டகுடாரி எண்ணெய்
(2) உலகோத்தம செந்தூரம்
} இவைகளைக் கொடுக்க குணமாகும்,

தொடைவாழைக்கு :—

காலபயிரவ எண்ணெய் கொடுக்க குணமாகும்,

குதிகால், உள்ளங்கால் வெடிப்புக்கு :—

(1) சேங்கொட்டையின் தயிலத்தை கத்தியால் எடுத்து வெடிப்பில் தடவிவர குணமாகும். சிலருக்கு ஏற்றுக்கொள்ளாது.

(2) மஞ்சள் மெழுகை தடவிவர குணமாகும்.

கட்டிகளுக்கு :—

(1) பொட்லிஸ் கட்டவும் (4) மிருதாசிங்கிப் பிளாஸ்திரிபோடவும்
(2) ரஸப்பிளாஸ்திரி போடவும் (5) ஸ்டிகிங்பிளாஸ்திரி போடவும் குணமாகும்.
(3) கால்பேனம் பிளாஸ்திரி போடவும்.

சோடு செருப்பு கடிபுண்ணுக்கு,—

சேங்கொட்டையின் தயிலம் கத்தி அல்லது ஊசியால் தோண்டி எடுத்து தடவிவர குணமாகும்.

கட்டியின் ஆரம்பத்தில் :—

வெங்காயத்தை நெருப்பில் வெதுப்பி அரைத்துப்போட குணமாகும்.

கட்டிபோல் நடிப்பு, வீக்கம் இவைகளுக்கு :—

(1) ரசப்பிளாஸ்திரி ... }
(2) அயோடைட்ஆப் பொட்டாசியம் பிளாஸ்திரி ... } இவைகளைப்போட கரையும்.

கன்னப்புற்றுக்கு :—

உலகோத்தம செந்தூரத்தைக் கொடுக்க குணமாகும்.

புழுவெட்டுக்கு :—

மகா சந்தனாதித் தயிலத்தை ஸ்நானஞ்செய்துவர குணமாகும்.

கிரந்தி (9)க்கு :—

(1) மகாரஜத பஸ்மம்
(2) உலகோத்தம செந்தூரம்
(3) ரசமெழுகு
(4) க்ஷடாக்ஷர செந்தூரம்
(5) மகாவல்லாரைக்கிருதம்.
(6) ஆநந்த ரசவிநோத சூர்ணம்
(7) மேகத்தெண்ணெய்
(8) காலபயிரவ எண்ணெய்
(9) மகா சந்தனாதி தயிலம்

இவைகளை உபயோகித்தால் குணமாகும். இப்புஸ்தகத்தில் காண்க.

(10) பைகார்பொனெட் ஆப் சோடா 30 கிறேன்ஸ், நவக்ஷார உப்பு 5 கிறேன்ஸ், கலம்பாப்பாவனத் திரவம் 1 திராம், ஜென்சன் கஷாயம் $1\frac{1}{2}$ அவுன்ஸ் இவைகளைச் சேர்த்து தினம் 2 தடவை கொடுக்க குணமாகும் (Sir. A. Cooper).

கிரந்தி சூலைக்கு :—

தாளக பஸ்மம் கொடுக்க குணமாகும்.

பிளவைக்கு :—

(1) குஷ்டகுடாரி எண்ணெய் }
(2) க்ஷடாக்ஷர செந்தூரம் } இவைகளைக்கொடுக்க குணமாகும்.
(3) உலகோத்தம செந்தூரம் } இப்புத்தகத்தில் காண்க.

அக்கினிரணத்திற்கு :—

மடல்துத்த செந்தூரப்பிளாஸ்திரியை போட குணமாகும்.

தோல் எரிவுக்கு :—

மடல்துத்த செந்தூரப் பிளாஸ்திரியை போட குணமாகும்.

கண்டமாலை (18) க்கு :—

(1) குஷ்டகுடாரி எண்ணெய்
(2) காலபயிரவ எண்ணெய்
(3) மகா சந்தனாதி தயிலம்
(4) உலகோத்தம செந்தூரம்.

இந்த புஸ்தகத்தில் சொல்லியபடி இவைகளைச் செய்துகொடுக்க தீரும்.

சர்வாங்கம் சானும் மருட்கள், கண்டமாலை, துஷ்டம் இவைகளுக்கு :—

4 சேர் நல்லெண்ணெயும், 150 சவுரிப்பழத்தை பொடித்து 12 படி ஜலத்தில் போட்டு ஒரு படியாகும்படி எரித்து வடித்த கஷாயமும் ஒன்றுக்கி, அதில் 15 வராகனிடை கருஞ்சீரகத்தை யிடி கஷாயத்தால் அரைத்துக் கரைத்து எரித்து வடித்து 8 மண்டலம் ஸ்நானஞ் செய்துவர குணமாகும். (இந்த ஸ்நாநீயம்) இது வெகு நல்லமருந்து.

துஷ்டம் (18) க்கு :—

(1)	ருத்திர செந்தூரம்	(9)	தாம்பிரமெழுகு
(2)	வீரபத்திர சிந்தாமணி	(10)	கந்தக ரசாயனம்
(3)	மகாதாம்பிர பஸ்மம்	(11)	காலபயிரவ எண்ணெய்
(4)	தாளகபஸ்மம்	(12)	மகா வல்லாரை கிருதம்
(5)	சுவர்ண பஸ்மம்	(13)	குஷ்டகுடாரி எண்ணெய்
(6)	உலகோத்தம செந்தூரம்	(14)	விளாரித் தயிலம்
(7)	சூடாக்ஷர செந்தூரம்	(15)	குஷ்டநாசத் தயிலம்
(8)	ரசகர்ப்பூரக்கட்டு	(16)	மகா சந்தநாதித் தயிலம்

இவைகளை உபயோகிக்க குணமாகும். செய்முறை இப்புஸ்தகத்தில் காண்க.

கபால துஷ்டந்தீர்ந்து :—

(1) உலகோத்தம செந்தூரம்
(2) வீரபத்திர சிந்தாமணி

இவைகளைக் கொடுக்க குணமாகும். இப்புத்தகத்தில் காண்க.

சருங் துஷ்டந்தீர்த்து :—

(1) சுவர்ண பஸ்மம்
(2) ஆனந்த ரசவினோத சூர்ணம்
(3) விளாரித் தயிலம்

இவைகளைக் கொடுக்க குணமாகும். இப்புத்தகத்தில் காண்க.

வெண் துஷ்டந்தீர்ந்து :—

(1) விளாரித் தயிலம்
(2) சுவர்ண பஸ்மம்
(3) ஆனந்த ரசவினோத சூர்ணம்
(4) உலகோத்தம செந்தூரம்
(5) உதயாதித்திய மாத்திரை
(6) சீரடி முத்தின் பருப்பை பிராந்தி சாராயமிட்டு அரைத்து பத்துப்போட 10 நாளுக்குள் குணமாகும்.

இவைகள் இப்புஸ்தகத்தில் சொல்லியபடி செய்துகொடுக்க குணமாகும்.

சேங் துஷ்டந்தீர்ந்து :—

(1) விளாரித்தயிலம்
(2) சுவர்ணபஸ்மம்
(3) ஆனந்த ரசவினோத சூரணம்

இவைகளைச் செய்துக் கொடுக்க குணமாகும்.

பிரசவ ரோகங்கள் (18) க்கு அவுஷதங்கள்.

பிரசரோகம் (18)-க்கு :—

(1) ஒழுக்கையுள்ள இளநீர் ஜலம், நல்லெண்ணெய், பசும்பால், வகைக்கு படியளவு (2¼) இரண்டரை சேர்த்து அதில் மஞ்சிஷ்டிக்

கிழங்கு, அதிமதுரம், சந்தனம், வெட்டிவேர், நர்மலைர வசியம், கஸ்தூரிமஞ்சள், விலாமிச்சுவேர், ஏலம், தேற்றாங்கொட்டை, சீரகம், கோரைக்கிழங்கு, பச்சிலை, செங்கழுநீர்க்கிழங்கு, பூலாக் கிழங்கு, தண்ணீர்விட்டான் கிழங்கு, சண்பகமொட்டு, குங்குமப்பூ, புனுகுசட்டம், வகைக்கு 1 கிராம் இவைகளில் குங்குமப்பூ, புனு குசட்டம், தவிர மற்றவைகளை ஷை பசும்பாலாலரைத்துக் கரைத் தெரித்து வடித்து அதில் ஷை குங்குமப்பூவும் புனுகுசட்டமும் சூர்ணித்து சேர்த்து சீசாவிலிட்டு 2 நாளுக்கு ஒருதரம் ஸ்நானஞ் செய்துவர குணமாகும்.

(2) பீநச நாசத் தயிலம்.
(3) இராஜமார்த்தாண்ட லேகியம்.
} இவைகளை உபயோகித்தால் குணமாகும். செய்முறை இப் புஸ்தகத்தில் காண்க.

ரத்தபீநசத்திற்கு :—

படிகாரம் 2 கிராம், ஜலம் 6 அவுன்ஸ் இவைகளைச் சேர்த்து முகரவா வது, அல்லது துணியை தோய்த்து நாசியில் வைத்துக்கொள்வ தாவது செய்தால் குணமாகும்.

சுறுப்பீநசம்—தடித்தபீநசம் இவைகளுக்கு:—

மார்த்தாண்ட பயிரவ தயிலத்தைச் செய்து ஸ்நானஞ் செய்துவர குணமாகும்.

நீர் பீநசத்திற்கு :—

பச்சை மஞ்சள், வெற்றிலை, நொச்சி, ஆதண்டை, கரிசாலை இவை களின் சாறு வகைக்கு 10 அவுன்ஸ், வெங்காயச்சாறு, நல்லெண் ணெய் வகைக்கு 40 அவுன்ஸ், மிளகு சூர்ணம் 10 அவுன்ஸ் இவைக ளைச் சேர்த்து எரித்து வடித்து ஸ்நானஞ் செய்துவர குணமாகும்.

குன்மரோகங்கள் 8-க்கு அவுஷதங்கள்.

குன்மம் (8)-க்கு :—

(1) ராஜ சங்குவடி மாத்திரை.
(2) லகு சங்குவடி மாத்திரை.
(3) குமட்டிக்காய் குழம்பு.
(4) பாவன ஓமம்.
(5) விங்க குழம்பு.
(6) திரிமூர்த்தி செந்தூரம்.
(7) வீரபத்திர சிந்தாமணி.
(8) அயச்செந்தூரம்.
(9) தாம்பிர பஸ்மம்.
(10) லவண சூர்ணம்.
(11) மகா அசுவகெந்தி சூர்ணம்.
(12) ஸ்ரீதேவி எண்ணெய்.
(13) அயக்காந்த வடகம்.
(14) பாவன கடுக்காய்.
(15) பஞ்சாக்ஷர செந்தூரம்.
(16) உலகோத்தம செந்தூரம்.
(17) போஜனகுடாரி மாத்திரை.
(18) ராஜ மார்த்தாண்ட லேகியம்

(19) துரிச பஸ்மம்.
(20) லவண பஸ்மம்.
(21) நாக பஸ்மம்.
(22) ராஜ லவண சூர்ணம்.
(23) குன்மகுடாரி சூர்ணம்.
(24) கலிங்காதிச் சூர்ணம்.
(25) ராஜ வில்வாதி லேகியம்.
(26) இஞ்சிலேகியம்.
(27) பொன்னாங்காணித் தயிலம்.
(28) குமரி சஞ்சீவித் தயிலம்.
(29) மகா வில்வாதித் தயிலம்.

இவைகளில், இந்த புஸ்தகத்தில் சொல்லியபடி எதை செய்து கொடுத்தபோதிலும் குணமாகும். இன்னும் அநேக மருந்துகள் 13-வது அத்தியாயத்தில் காண்க.

சூலைரோகங்கள் 18-க்கு அவுஷதங்கள்.

சூலை 18-க்கு:—
(1) உலகோத்தம செந்தூரம்.
(2) ருத்திர செந்தூரம்.
(3) ரச செந்தூரம்.
(4) திரிமூர்த்தி செந்தூரம்.
(5) அயச்செந்தூரம்.
(6) மகா தாம்பிர பஸ்மம்.
(7) ரசகர்ப்பூரக்கட்டு.
(8) லிங்க மெழுகு.
(9) மேக குலாந்தக ஷர்பத்து
(10) குமட்டிக்காய்க் குழம்பு.
(11) தக்ஷிணாமூர்த்தி லேகியம்.
(12) வாதகோப நாஷ எண்ணெய்
(13) காலபயிரவ எண்ணெய்.
(14) மகா அசுவகெந்திபலா லாக்ஷாத் தயிலம்.
(15) ராஜாங்கக் கொம்பரக்கு தயிலம்.
(16) ராஜ கஜ கேசரி மாத்திரை.

இந்த புஸ்தகத்தில் சொல்லிய இவைகளைச் செய்துகொடுக்க குணமாகும். இன்னும் அநேக மருந்துகள் 13-வது அத்தியாயத்தில் காண்க.

வேடி சூலைக்கு:—
(1) குஷ்டகுடாரி எண்ணெய்.
(2) மேகத்தெண்ணெய்.
இவைகளை இப்புஸ்தகத்தில் சொல்லியபடி செய்துக்கொடுக்க குணமாகும்.

கர்ப்பசூலைக்கு:—
விழுதி எண்ணெய் செய்துகொடுக்க குணமாகும்.

பாண்டு ரோகங்கள் 5-க்கு அவுஷதங்கள்.

விஷப்பாண்டுக்கு:—
ராஜ வில்வாதி லேகியம் செய்து கொடுக்க குணமாகும்.

கைகால் ஊதலுக்கு:—
நாகபஸ்மம் இந்த புஸ்தகத்தில் சொல்லியபடி செய்து கொடுக்க குணமாகும்.

பித்தபாண்டுக்கு:—

1. சுயமக்கினி.
2. மகா தாளிசப்பத்திரிச் சூர்ணம்.

இவைகளைக் கொடுக்க குணமாகும்.

தேக வீக்கத்திற்கு:—

1. அயச்செந்தூரம்.
2. தூரிசு பஸ்மம்.
3. அயக்காந்த வடகம்

இவைகளைக் கொடுக்க குணமாகும். இந்த புஸ்தகத்தில் காண்க.

பாண்டு (5)-க்கு;—

1. மண்டூர செந்தூரம்.
2. அயமெழுகு.
3. அயக்காந்த செந்தூரம்.
4. அயச்செந்தூரம்.
5. நாராயண மண்டூர செந்தூரம்.
6. திரிலோக செந்தூரம்.
7. ராஜ சிந்தாதி லேகியம்.
8. அகஸ்தியர் குழம்பு.
9. அயக்காந்த வடகம்.
10. தூரிசு பஸ்மம்.
11. அய பஸ்மம்.
12. ராஜ அமிர்த சஞ்சீவி லேகியம்.
13. பலகாரிச் சூர்ணம்.
14. மகா அசுவகந்திச் சூர்ணம்.
15. கனத்தெண்ணெய்.
16. மகா அசுவகந்தி பலாலாக்ஷா தயிலம்.
17. குமரிசஞ்சீவித்தயிலம்.
18. ராஜாங்க கொம்பரக்குத் தயிலம்.

இந்த புஸ்தகத்தில் சொல்லியபடி இவைகளைச் செய்துகொடுக்க குணமாகும். இன்னும் அநேக மருந்துகளை 13-வது அத்தியாயத்தில் காண்க.

சோகை ரோகங்கள் 9-க்கு அவுஷதங்கள்.

சோபை—சோகை (9)-க்கு:—

1. நாராயண மண்டூர செந்தூரம்.
2. அயச்செந்தூரம்
3. சுயமக்கினி.
4. திரிலோக செந்தூரம்.
5. தூரிசு பஸ்மம்.
6. அயபஸ்மம்.
7. ராஜ அமிர்த சஞ்சீவி லேகியம்
8. ராஜ சிந்தாதி லேகியம்.
9. மகா கூழ்ப்பாண்ட லேகியம்.
10. அய மெழுகு.
11. அயக்காந்த வடகம்.

இந்த புஸ்தகத்தில் சொல்லியபடி இவைகளைச் செய்துகொடுக்க குணமாகும். அன்றியும் 13-வது அத்தியாயத்தில் அநேக மருந்துகளைக் காண்க.

தேக வெளுப்புக்கு:—

1. மகா ராஜாங்க கொம்பரக்குத் தயிலம்.
2. அயச்செந்தூரம்.
3. அயக்காந்த செந்தூரம்.
4. மண்டூர செந்தூரம்.

இந்த புஸ்தகத்தில் சொல்லியபடி இவைகளை செய்துகொடுக்க குணமாகும்.

மூலரோகங்கள் 8-க்கு ஔஷதங்கள்.

மூலரோகம் 8-க்கு :—

1. கிலாவணை தைலியம் 1 அவுன்ஸ், கந்தக பதங்கம் ¼ கிராம், கிராக்ஷ உப்பு 1½ கிராம், சர்க்கரைப்பாகு தேவையானது இவைகளைச் சேர்த்து ஒரு கிராம் வீதம் படுக்கைக்குப் போகும் காலத்தில் சாப்பிட குணமாகும் (Dr. W. Ainslie.)
2. பிரமானந்தபயிரவ மாத்திரை
3. வீரபத்திர சிந்தாமணி
4. திரிமூர்த்திச் சூர்ணம்
5. ஆனந்த ரசவினோதச்சூர்ணம்.

இவைகளைக் கொடுக்க குணமாகும். இந்த புஸ்தகத்தில் காண்க.

6. அஷ்டமூலநாச லேகியம்.

கருணைக்கிழங்கை துண்டுகளாக்கி உலர்த்தி 32 பலம் தூக்கி அத்துடன் சித்திரமூலம் பலம் 16, சுக்கு பலம் 4, மிளகு பலம் 2, சேர்த்து சூர்ணித்து வெல்லம் பலம் 108, சேர்த்து லேகிய ரூபமாக்கி தினம் பாக்களவு சாப்பிட்டுவர மஹா உபத்திரவத்தைத் தருகின்ற மூலரோகம் 8-ம் தீரும்.

ரத்தமூலத்திற்கு :—

படிக்காரம் ஜலத்தில் கரைத்து அதில் துணியை நனைத்து சாமில்லாதபோது மூலத்தின்மேல்போட ரத்தம் நிற்கும்.

சீழ்மூலத்திற்கு :—

ஒரு பலம் நெய்யைக் காய்ச்சி அதில் 2 பலம் வெங்காயத்தை சிதைத்துப் போட்டு பதத்தில் எடுத்துச்சாப்பிட்டுவர குணமாகும்.

உள்மூலத்திற்கு :—

சுயமக்கினியை செய்துகொடுக்க குணமாகும்.

மூலமுளைக்கு :—

1. எருமைத் தயிரால் சீர்பூரா இலையை அரைத்து டி தயிரில் கரைத்து தினம் 2 தடவை 6 நாள் கொடுக்க குணமாகும்.
2. பிரமானந்தபயிரவ மாத்திரை
3. நாக பஸ்மம்

} இவைகளைக் கொடுக்க குணமாகும் இப்புஸ்தகத்தில் காண்க.

மூலம் வெளிப்படுதலுக்கு :—

கற்றாழைச்சோற்றை அலம்பி ஆசனத்தின்மேல் வைத்துக் கட்ட தீரும்.

மூலக்கட்டுக்கு :—

1. ராஜ லவாதிச் சூர்ணம்
2. சந்தன ஷர்பத்து
3. பொன்னாங்காணி கிருதம்.
4. சந்திரப்பிரகாச எண்ணெய்
5. புளியாரை எண்ணெய்

இவைகளைச் செய்துகொடுக்க குணமாகும்.

பித்தரோகங்கள் 40-க்கு அவுஷதங்கள்.

பித்தரோகம் 40-க்கு :—

(1) அயக்காந்தச் செந்தூரம்.
(2) மண்டூர செந்தூரம்.
(3) தூரிசு பஸ்மம்.
(4) பவள பஸ்மம்.
(5) மகா தாம்பிர பஸ்மம்.
(6) ராஜ வில்வாதி லேகியம்.
(7) நாகேசுவரத் தயிலம்.
(8) சர்வேசுவரத் தயிலம்.
(9) மகா சந்தனாதித் தயிலம்.
(10) குமரிசஞ்சீவித் தயிலம்.
(11) ராஜ மார்த்தாண்ட லேகியம்.
(12) போஜனகுடாரி மாத்திரை.
(13) அகஸ்தியர் குழம்பு.
(14) சண்முக வடகம்.
(15) பாவனக் கடுக்காய்.
(16) மகா கூழ்பாண்டகிருதம்.
(17) இஞ்சி லேகியம்.
(18) மாதுளம்பழ ஷர்பத்து.
(19) திரிநேத்திர சூர்ணம்.
(20) பஞ்சமுகச் சூர்ணம்.
(21) ராஜ ஏலாதிச் சூர்ணம்.
(22) ராஜ அமிர்தசஞ்சீவிசூர்ணம்
(23) ராஜ லோகநாத ரசபஸ்மம்.

இவைகளைச்செய்துகொடுக்க குணமாகும். இந்த புஸ்தகத்தில் காண்க.

பித்தகாங்கைக்கு :—

திராக்ஷப்பழ ஷர்பத்து செய்து கொடுக்க குணமாகும்.

பித்த எரிவுக்கு :—

இஞ்சிலேகியம் செய்து கொடுக்க குணமாகும்.

கைகால் எரிவுக்கு :—

(1) ராஜ அப்பிரேக செந்தூரம்.
(2) மகா கூழ்பாண்ட கிருதம்.
(3) பொன்னாங்காணி கிருதம்.
(4) கூழ்பாண்ட ஷர்பத்து.
(5) கீழாநெல்லித் தயிலம்.
(6) திராக்ஷ ஷர்பத்து.
(7) அப்பிரேக செந்தூரம்.
(8) சந்திரபிரகாச எண்ணெய்.
(9) மகா தாளிசபத்திரி சூர்ணம்
(10) மகா சந்தனாதித் தயிலம்.
(11) மகா மிருகாமலத்தயிலம்.
(12) மகா அஸ்வகெந்திபலாலாக்ஷா தயிலம்.
(13) ராஜ அமிர்த சஞ்சீவி சூர்ணம்.
(14) பொன்னாங்காணித் தயிலம்.
(15) பாலை எண்ணெய்.
(16) வெந்திய எண்ணெய்.
(17) நன்னாரிவேர் ஷர்பத்து

இவைகளில் எதையாகிலும் செய்துகொடுக்க குணமாகும். இந்த புஸ்தகத்தில் காண்க.

தேக எரிவுக்கு :—

(1) மகா மிருகாமலத் தயிலம்.
(2) மகா அசுவகெந்திபலாலாக்ஷாத் தயிலம்.
(3) கீழாநெல்லித் தயிலம்,
(4) பொன்னாங்காணித் தயிலம்.
(5) பாலை எண்ணெய்.
(6) வெந்திய எண்ணெய்.
(7) ராஜ வில்வாதி லேகியம்.
(8) பொன்னாங்காணி கிருதம்.

இவைகளைச் செய்து கொடுக்க குணமாகும்.

பித்தவாயுக்கு :—

(1) போஜனகுடாரி மாத்திரை.
(2) பேர்ச்சங்காய் கிருதம்.
(3) கதலி லேகியம்.
(4) மகா மிருகாமலத் தயிலம்.
(5) இஞ்சி லேகியம்.
(6) பித்தராஜாங்கச் சூர்ணம்.
(7) திரிநேத்திர சூர்ணம்.

இவைகளைச் செய்து கொடுக்க குணமாகும்.

பித்தவெட்டைக்கு :—

(1) ராஜ சிந்தாதி லேகியம்.
(2) புளியாரை கிருதம்.
(3) அய பஸ்பம்.
(4) அயமெழுகு.
(5) அகஸ்தியர் குழம்பு.
(6) கர்ப்பூர சலாசத்து பஸ்மம்.
(7) மகா தாளிசபத்திரி சூர்ணம்.
(8) பித்தராஜாங்கச் சூர்ணம்.
(9) மகா அசுவசெந்தி பலாலாக்ஷா தயிலம்.
(10) மகாமிருகாமலதயிலம்.
(11) ராஜாங்க கொம்பரக்குதயிலம்.

இவைகளைச் செய்துகொடுக்க குணமாகும்.

பித்தசமனத்திற்கு :—

பித்தஹர சூர்ணம் செய்துக் கொடுக்க குணமாகும்.

ரத்தப்பித்தத்திற்கு :—

(1) கீழாநெல்லித்தயிலத்தை செய்து ஸ்நானஞ்செய்துவர குணமாகும்.
(2) படிகாரம் 1 கிராம், வினாவின கந்தகத்திராவகம் 1½ கிராம், சர்க்கரைப்பாகு 4 கிராம், ரோஜாப்பூக்கசாயம் 8 அவுன்ஸ் இவைகளைச் சேர்த்து அதில் 6-ல் 1 பங்குகொடுத்துவர குணமாகும். (Dr. Duirtt)

பித்தவரக்ஷிக்கு :—

குமரி சஞ்சீவித் தயிலத்தை ஸ்நானஞ்செய்துவர குணமாகும்.

பித்தமயக்கத்திற்கு :—

(1) கழுதைப்பாலால் நாயுருவி அரிசியை அரைத்துக் கொடுக்க தீரும்.
(2) மகா சந்தனாதித் தயிலம்
(3) இஞ்சி லேகியம்
(4) புளியாரை கிருதம்
(5) சர்வேசுவர ரசநஸ்யம்

இவைகளைச் செய்து கொடுக்க குணமாகும். இன்னும் அநேக மருந்துகளை 13-வது அத்தியாயத்தில் காண்க.

வாதரோகங்கள் (80)-க்கு அவுஷதங்கள்.

வாதம் (80)-க்கு :—

1. அப்பிரக கோரோசன மாத்திரை.
2. ரச மாத்திரை.
3. லிங்க மாத்திரை.
4. வாதராக்ஷஸ மாத்திரை.
5. நமசிவாய செந்தூரம்.
6. ரசவீர செந்தூரம்.
7. அயக்காந்த செந்தூரம்
8. உலோகோத்தம செந்தூரம்.
9. வீர செந்தூரம்.
10. லிங்க செந்தூரம்.
11. ரச செந்தூரம்.
12. மகா தாம்பிர பஸ்பம்.
13. வீர பஸ்மம்
14. ஸ்ரீ தேவி எண்ணெய்
15. வீரக்கட்டு
16. வீரமெழுகு.
17. லிங்க மெழுகு.
18. குமட்டிக்காய்க் குழம்பு.
19. அகஸ்தியர் குழம்பு.
20. திப்பிலி ரசாயனம்.
21. லிங்கக்குழம்பு.
22. பறங்கிப்பட்டைரசாயனம்.
23. சண்முக வடகம்.
24. சவுபாக்கிய வடகம்.
25. ராஜமார்த்தாண்ட லேகியம்
26. ராஜ ஏலாதிச் சூர்ணம்.
27. மகா அசுவகெந்திபலாலாக்ஷா தயிலம்.
28. இஞ்சி லேகியம்.
29. திரிலோகசூடாமணிமாத்திரை
30. ராஜ லோகநாத ரசபஸ்மம்.

இவைகளை இந்தப் புஸ்தகத்தில் சொல்லியபடி செய்துகொடுக்க குணமாகும். அன்றியும் 13-வது அத்தியாயத்தில் அநேக மருந்துகளைக் காண்க.

வாதரோகங்களுக்கு மேல்பூசும் அவுஷதங்கள் ;—

(1) கர்ப்பூரத்தயிலம் 4 கிராம், கந்தகத்திராவகம் 1½ (ஒன்றரை) கிராம், ஆலிவ் எண்ணெய் 1½ (ஒன்றரை) அவுன்ஸ், இவைகளைச் சேர்த்து தேய்த்தால் நோய் குணமாகும். (Mr. Pearson).

(2) நவக்ஷார ஜெயநீர் 2 கிராம், சவுக்காரப் பூசத்தயிலம் 1 அவுன்ஸ் இவைகளைச்சேர்த்து நோயுள்ள இடத்தில் போட்டுத் தேய்த்தால் குணமாகும். (Dr. Druitt).

(3) வெங்காரம், பெருங்காயம், தேவதாரம், சதகுப்பை, இந்துப்பு, வசம்பு, கடுக்காய் இவைகளை சமமாக சேர்த்து சூர்ணித்து எருக்கம் பலால் மைபோலரைத்துத் தடவிவர நோவு குணமாகும்.

பக்கவாயுக்கு :—

(1) துரிசு பஸ்மம்
(2) அயச்செந்தூரம்

} இவைகளைக்கொடுக்க குணமாகும். இப்புஸ்தகத்தில் காண்க.

மேகவாயுவுக்கு :—

(1) ராஜ அப்பிரக செந்தூரம்
(2) அப்பிரக பஸ்மம்
(3) அருணஜல லேகியம்
(4) கந்தக லேகியம்

இவைகளைச் செய்துக்கொடுக்க குணமாகும்.

மூலவாயுவுக்கு :—

அகஸ்தியர்க் குழம்பைக் கொடுக்க குணமாகும்.

உஷ்ணவாயுவுக்கு :—

(1) போஜனகுடாரி மாத்திரை (4) பேர்ச்சங்காய்க் கிருதம்
(2) திரிநேத்திரச் சூர்ணம் (5) பாவன மிளகு
(3) கதலி லேகியம் (6) பாவனத் திப்பிலி

இவைகளைச் செய்துக்கொடுக்க குணமாகும்.

கில்வாதத்திற்கு :—

ரேவல் சின்னி 6 கிறேன்ஸ், கார்போனெட் ஆப் சோடா 15 கிறேன்ஸ், கலம்பாத்தூள் 4 கிறேன்ஸ் இவைகளைச் சேர்த்து 2 அவுன்ஸ் ஜலத்தில் கொடுக்க குணமாகும்.

சந்நி சிலேஷ்மத்திற்கு :—

(1) நவக்ஷாரம் (Sal Ammoniac) 12 கிறேன்ஸ், ஸின்கோனக் கஷாயம் 1½ (ஒன்றரை) அவுன்ஸ், இவைகளைச் சேர்த்து தினம் 2 தடவைக் கொடுக்க குணமாகும். (Dr. H. W. Fuller.)

(2) பொட்டிலுப்பு 1 கிராம், கார்போனேட் ஆப் பொடாஸ் ½ (அரை) கிராம், கார்பொனெட் ஆப் மாக்னிஷியா ½ (அரை) கிராம், சர்க்கரை 6 கிராம் இவைகளை மெத்த ஜலத்தில் சேர்த்து ஒரு தேயிலைக் கரண்டி வீதம் 2 மணிக்கு ஒருதரம் கொடுத்துவர குணமாகும். (Dr. Greiner.)

வாயுக்கு :—

1. வீரபத்திர சிந்தாமணி.
2. கல்லுப்பு செந்தூரம்.
3. நாராயண மண்டூர செந்தூரம்.
4. வீர பஸ்மம்.
5. கதலி பஸ்மம்.
6. லவண பஸ்மம்.
7. லிங்கக்கட்டு.
8. ரசகர்ப்பூரக்கட்டு.
9. மனோசிலை மாத்திரை.
10. போஜனக் குடாரி மாத்திரை.
11. அகஸ்தியர் குழம்பு.
12. வாத ஹர வடகம்.
13. அயக்காந்த வடகம்.
14. ரச பஸ்மம்.
15. கண்டத்திப்பிலி லேகியம்.
16. பாவனக்கடுக்காய்.
17. ராஜஅமிர்த சஞ்சீவிலேகியம்.
18. ராஜசிந்தாதிலேகியம்.
19. அருணாஜலலேகியம்.
20. பஞ்சமுகச் சூர்ணம்.
21. ரச லிங்க மெழுகு.
22. பாவன ஓமம்.

இவைகளை இந்த புஸ்தகத்தில் சொல்லியபடி செய்துக்கொடுக்க குணமாகும். இன்னும் அநேக மருந்துகளை 13-வது அத்தியாயத்தில் காணலாம்.

பீஜம் வலியும் கசிவுநீரும் எரிச்சலுங் கண்டால் :—

(1) ஆமணக்கெண்ணெயைத் தடவிக்கொண்டே வந்தால் குணமாகும்.

(2) கொட்டைப்பாக்கை சுட்டுக்கரியாக்கி பொடி செய்து தூவி தடவிவர குணமாகும்.

கை, கால், முடக்குக்கு:—

(1)	குமட்டிக்காய் குழம்பு.	இவைகளைச் செய்துக்கொடுக்க குணமாகும்.
(2)	காலபயிரவ எண்ணெய்	
(3)	திரிமூர்த்தி செந்தூரம்.	

அபஸ்மார ரோகங்கள் (4)-க்கு அவுஷதங்கள்.

அபஸ்மாரம் (4)-க்கு:—

(1)	மஹா வங்கபஸ்மம்.	இவைகளை உபயோகித்தால் குணமாகும். இன்னும் அநேக மருந்துகளை 13-வது அத்தியாயத்தில் காண்க.
(2)	மகா கருவங்க பஸ்மம்.	
(3)	காலபயிரவ நஸ்யம்.	

பயித்திய ரோகங்கள் (6)-க்கு அவுஷதங்கள்.

பயித்தியரோகம் (6)-க்கு:—

(1) மகா கருவங்க பஸ்மம் செய்துக்கொடுக்க குணமாகும்.

(2) ஸ்ரீதேவி எண்ணெய் செய்துக்கொடுக்க குணமாகும்.

பிரமைக்கு:—

(1)	உலகோத்தமத் தயிலம்.	இவைகளைச் செய்து கொடுக்க் குணமாகும்.
(2)	ஸ்ரீதேவி எண்ணெய்.	

மூர்ச்சை ரோகங்கள் (4)-க்கு அவுஷதங்கள்.

மூர்ச்சை (4)-க்கு:—

(1)	மஹா வங்க பஸ்மம்.	இவைகளைச் செய்துக்கொடுக்க குணமாகும். செய்முறைகள் இப்புஸ்தகத்தில் காண்க.
(2)	மகா கருவங்க பஸ்மம்.	
(3)	ஸ்ரீதேவி எண்ணெய்.	

அஜீர்ண ரோகங்கள் (6)-க்கு அவுஷதங்கள்.

அஜீர்ணரோகம் (6)-க்கு:—

(1) சண்முகச்சூர்ணம்.
(2) ராஜ மார்த்தாண்ட லேகியம்.
(3) லவண பஸ்மம்.
(4) சண்முக வடகம்.
(5) பாவன ஓமம்.
(6) அஜீர்ண கண்டக ரசமாத்திரை.
(7) ராஜ சங்குவடி மாத்திரை.

இவைகளைச் செய்துக்கொடுக்க குணமாகும். செய்முறை இப்புஸ்தகத்தில் காண்க.

(8) கலம்பாக் கசாயம் 5 அவுன்ஸ், பைகார்பொனெட் ஆப் பொடாஸ் 1 கிராம், ஜென்சன் கலவைப் பாவனத்திரவம் 3 கிராம். இவைக ளைச் சேர்த்து 3 பெரிய கரண்டி வீதம் கொடுக்க குணமாகும். (Dr. Babington.)

(9) நவக்ஷார உப்பு 30 கிறேன்ஸ், கார்பொனெட் ஆப் சோடா 1 கிராம், குவாஷியக் கசாயம் 6 அவுன்ஸ், இவைகளைச் சேர்த்து ஒரு தடவைக்கு ஒரு அவுன்ஸ் கொடுக்க குணமாகும். (Dr. Hooper.)

அக்கினி மந்தரோகத்திற்கு அவுஷதங்கள்.

அக்கினிமந்தரோகத்திற்கு :—

(1) லகுசங்குவடி மாத்திரை
(2) போஜன குடாரி மாத்திரை
(3) லவண பஸ்மம்
(4) அயக்காந்த செந்தூரம்
(5) கல்லுப்பு செந்தூரம்
(6) திரிகேத்திரச் சூர்ணம்
(7) ராஜசிந்தாதி லேகியம்
(8) பேர்ச்சங்காய் கிருதம்
(9) நாராயண மண்டூர செந்தூரம்
(10) ராஜ மார்த்தாண்ட லேகியம்
(11) கந்தக ரசாயனம்.
(12) சென்முக வடகம்
(13) பாவனக் கடுக்காய்
(14) பாவன சீரகம்
(15) பாவன மிளகு
(16) பாவன ஓமம்
(17) பயிரவ எண்ணெய்
(18) அக்கினிச் சூர்ணம்
(19) சென்முகச் சூர்ணம்
(20) மகா அசுவகெந்தி பலாலாக்ஷாத்தயிலம்.

இவைகளில் எதை செய்து கொடுத்தபோதிலும் குணமாகும். இந்த புஸ்தகத்தில் செய்முறைகளைக் காண்க.

(21) கர்ப்பூர தைலம் 1½ (ஒன்றரை) அவுன்ஸ், பரிமல் நவக்ஷாரமது ½ (அரை) கிராம், அபினப்பாவன திரவம் 7 துளி, மாக்னிஷியா கார்பொனெட் 20 கிறேன்ஸ் இவைகளைச் சேர்த்து படுக்கைக் குப்போகும்போது சாப்பிட குணமாகும். (Mr. Brande.)

இன்னும் அநேக மருந்துகளை 13-வது அத்தியாயத்தில் காண்க.

வாந்திரோகங்கள் (5)-க்கு அவுஷதங்கள்.

வாந்தி (5)-க்கு :—

(1) புளியாரைக்கிருதம்
(2) திப்பிலி ரசாயனம்
(3) ராஜமார்த்தாண்ட லேகியம்
(4) பஞ்சமுகச் சூர்ணம்
(5) ராஜ வில்வாதி லேகியம்
(6) இஞ்சி லேகியம்.

இவைகளில் எதை செய்துக்கொடுத்தபோதிலும் குணமாகும்.

இன்னும் அநேக நல்ல மருந்துகள் 13-வது அத்தியாயத்தில் காண்க. செய்முறைகள் இப்புஸ்தகத்தில் காணலாம்.

தாக ரோகங்கள் (6)-க்கு அவுஷதங்கள்.

தாகம் (6)-க்கு :—

(1) மகா தாளிசப்பத்திரி சூர்ணம். } இவைகளைச் செய்துக்கொடுக்க
(2) ஆவாரை லேகியம். } குணமாகும்.

(3) விளாவின திமுறுகல் பாஷாணத் திராவகம் 2 திராம், வடித்த கஞ்சியாவது அல்லது பார்லி அரிசி கஞ்சியாவது 2 பையிண்ட் இவைகளைச் சேர்த்துக் கொடுக்க தாகம் தீரும்.

வித்திரிதிகட்டி 17, பவுத்திரம் 15, அரையாப்பு, ரணம் இவைகளுக்கு.

வித்திரிதிசஞ்சீவி எண்ணெய் :—பொடுதலை, கோழியாவரை, நிலவாகை, அவுரி, பிரமி, சின்னி, மலைவேம்பு சங்கங்குப்பு, கழற்சி, வெள்ளருக்கு, காட்டாமணக்கு இவைகளின் சாறு வகைக்கு படி 1, சிற்றாமணக்கெண்ணெய் படி 8 சேர்த்து, அதில் நீரடிமுத்து, நேர்வாளப் பருப்பு, திப்பிலி, மஞ்சள், வசம்பு, கருஞ்சீரகம், கடுகுரோகணி, காட்டு சீரகம் வகைக்கு பலம் 4, வெள்ளைப்பூண்டு, கடுக்காய் வகைக்கு சேர் 1, மேற்படி சாற்றால் அரைத்து கரைத்து எரித்து வடித்து 2—4 விராகனிடை வீதம் காலையில் 10-நாள் சாப்பிட விரேசனமாகித் தீரும். பத்தியம்.—புளி, உப்பு தள்ளவும்.

பீலிகரோகங்கள் (4)-க்கு அவுஷதங்கள்.

பீலிக சோபாரோகத்துக்கு :—

(1) புரொமைட் ஆப் பொட்டாசியம் 3 கிறேன்ஸ், கர்ப்பூர ஜலம் 1 அவுன்ஸ் இவைகளைச் சேர்த்து தினம் 3 தடவை கொடுக்க குணமாகும். (Dr. Williams.)

2. புளியாரை கிருதம், இப்புஸ்தகத்தில் சொல்லியபடி செய்துக்கொடுக்க குணமாகும்.

விக்கல் ரோகங்கள் (5)-க்கு அவுஷதங்கள்.

விக்கல் 5-க்கு :—

1. மகா தாளிசப்பத்திரிச் சூர்ணம் } இவைகளைக் கொடுக்க குண
2. ராஜ மார்த்தாண்ட லேகியம் } மாகும்.

3. தாமரைப்பருப்பை அரைத்து பாக்களவு வெந்நீரில் கொடுக்க குணமாகும்.

மசூரிகை ரோகங்கள் 8-க்கு அவுஷதங்கள்.

மசூரிகை ரோகங்களின் லக்ஷணங்கள் முதலியவைகளைக் காண்க.

மசூரிகை ரோகங்களின் பெயர்கள்.	மசூரிகை ரோகங்களின் லக்ஷணங்கள்.	அம்மை காணும் நாள்.	அம்மைநீர் கட்டும் நாள்.	அம்மை இறங்கும் நாள்.	ஸ்நானஞ் செய்யும் நாள்.
நல்ல அம்மை	சங்கங்களி போல் கொப்பளங்கள், வாந்தி, பேதி, கடூர சுரம், இவைகள் காணும்.	3-ம்	7-ம்	10-ம்	11-ம்
பால் அம்மை	கடூர சுரம், கொப்பளங்கள் இவைகள் காணும். ...	3-ம்	7-ம்	9-ம்	15-ம்
வரகு அம்மை	சர்வாங்கம் வரகு அரிசியைப்போல் கொப்பளங்கள், ரத்தமூத்திரம், கடூரசுரம், இவைகள் காணும் ...	3-ம்	7-ம்	11-ம்	13-ம்
கொள்ளு அம்மை ...	கொள்ளுபோல் கொப்பளங்கள், வலுப்பு, சுரம், சன்னி இவைகள் காணும்.	3-ம்	7-ம்	13-ம்	16-ம்
உப்பு அம்மை	சர்வாங்கம் உப்பைப்போலிருக்கும், சுரம்காணும் ...	3-ம்	5-ம்	7-ம்	11-ம்
பாசிப்பயிறு அம்மை ...	பாசுப்பயிறு அளவாக கொப்பளங்கள், சுரம், பிதற்றல் இவைகள் காணும்.	3-ம்	7-ம்	9-ம்	17-ம்
வெந்திய அம்மை ...	வெந்தியம்போல் கொப்பளங்கள், தேகக்குத்தல், சுரம் இவைகள் காணும்.	3-ம்	7-ம்	9-ம்	15-ம்
உமி அம்மை	உமிபோல் சர்வாங்கம் கொப்பளங்கள், பேதி, வாந்தி, சுரம் இவைகள் காணும்.	3-ம்	,,	9-ம்	10-ம்

☞ மேல் சொல்லிய மசூரிகை ரோகங்கள் 8 தவிர வாத மசூரிகை, பித்த மசூரிகை, சிலேஷ்ம மசூரிகை திரிதோஷ மசூரிகை, கடுகு மசூரிகை முதலிய அநேக விதங்களாக சொல்வார்கள்.

மசூரிகை பூரிக்க :—

மட்டை நீக்கின இளநீரை தீ நீரில் வேகவைத்து எடுத்து அதிலுள்ள ஜலத்தை ஒரு பிங்கானில் ஊற்றி அதில் 3 விராகனிடை சீரகத்தை அரைத்து சேர்த்து கொடுத்துவர பூரிக்கும்.

மசூரிகை ரோகத்தில் சிதரத்த பேதிக்கு :—

பசும்பால், காவற்பட்டை இவ்விரண்டும் சேர்த்து இடித்துப் பிழிந்த சாறு 1 அவுன்ஸ் வீதம் கொடுத்துவர தீரும்.

மசூரிகை ரோகத்தில் 'தொண்டை கம்மினல் :—

2 கிறேன்ஸ் கொரோசனை உரைத்து ஒரு அவுன்ஸ் கர்ப்பூர வல்லி ரசத்தில் கொடுத்துவர குணமாகும்.

மசூரிகை ரோகத்தில் மலம் இறங்க :—

1—2 அவுன்ஸ் சிற்றாமணக்கெண்ணெயில் வெங்காயம், சீனாக்கற்கண்டு வகைக்கு விரா. 3 அரைத்து கரைத்து கொடுக்க மலம் இறங்கும்.

மசூரிகை ரோகத்தில் தாகங்கண்டால் :—

வெந்நீரில் கலைக்கொம்பை ஊறவைத்து கழுவி ராவின 10 விராகனிடை சூர்ணத்தை ஆவி எழும்பும்படி காய்ச்சின இரண்டு படி சுத்த ஜலத்தில் போட்டு மூடி ½ மணி நேரஞ் சென்றபிறகு வடித்து கொடுத்துவர தாகம் தீரும்.

மசூரிகை சுரத்தில் காணும் ரத்தங்கக்குதல், மூத்திர துவாரத்தில் ரத்தம் வருதல் இவைகளுக்கு :—

தாகத்திற்கு மேல் சொல்லிய ஜலத்தில் 1 படி ஜலம் எடுத்து அதில் கலைக்கொம்பு, நன்னாரிவேர்ப்பட்டை வகைக்கு 1 திராம், பூநாகம் 2 திராம் இவைகளைச் செவ்வையாய் கழுவி மைபோலரைத்து கரைத்து 2 அவுன்ஸ் வீதம் கொடுத்துவர குணமாகும்.

மசூரிகைப் புண்கள் ஆற—:—

வரலிமஞ்சளும் வேப்பங்கொழுந்தும் சேர்த்து அரைத்து தடவிவர குணமாகும்.

மசூரிகை ரோகத்தில் நேத்திரத்தில் பூ விழுந்தால்: —

நந்தியாவட்டப்பூ, சீரகம், முருக்கைப்பூ, நெருஞ்சிப்பூ இவைகளை வகைக்கு விரா. 2 சேர்த்து அரைத்து துணியில் முடித்து கண்ணில் பிழிய குணமாகும்.

மசூரிகை ரோகத்தால் உண்டாகும் உஷ்ணம் முதலியவைகள் தீர :—

ஆவாரையிலை பிடி 2, மோர்விட்டு அரைத்து சர்வாங்கத்தில் தேய்த்து ஸ்நானஞ் செய்யத்தீரும்.

பற்பல ரோகங்களுக்கு அவுஷதங்கள்.

வயிற்றில் புளிப்பை உண்டாக்கி வரும் சகல ரோகங்களுக்கு :—

லைகர் பொடாஸ் ½ டிராம், பெப்பர்மெண்டு ஜலம் 7 அவுன்ஸ், ஜென்சன் பாவனத் திரவம் ½ அவுன்ஸ், மாக்னிஷியா 1 டிராம் இவைகளைச்சேர்த்து 2 கரண்டி வீதம் தினம் 2, 3 தடவைக் கொடுக்க குணமாகும். (Dr. Thomas).

புளிப்பைக் கண்டித்து பசியை உண்டாக்க :—

பரிமள நவக்ஷாரமது, லைகர் பொட்டாஷ், ரேவல்சின்னிப் பாவனத் திரவம் வகைக்கு 1 அவுன்ஸ் இவைகளைச் சேர்த்து ஒரு சின்னக் கரண்டி வீதம் தினம் 2 தடவை ஜலத்தில் கொடுக்க குணமாகும்.

பேதியை நிறுத்தி பலத்தை உண்டாக்க :—

நிலவேம்புக் கசாயம் 7½ அவுன்ஸ், விளாவின வெடியுப்புத் திராவகம் 2 டிராம் இவைகளைச் சேர்த்து 1½ அவுன்ஸ் வீதம் தினம் 3 தடவை கொடுக்க குணமாகும் (Dr Druitt).

தேகத்தின் உஷ்ணம்போக :—

(1) மரத்து வெள்ளை கவசிதம்
(2) கூழ்ப்பாண்டகிருதம்
(3) பஞ்சமுகச் சூர்ணம்
(4) மகா கூழ்ப்பாண்ட லேகியம்
(5) கர்ப்பூர சலாசத்து பஸ்மம்
(6) வீரபத்திர சிந்தாமணி
(7) பொன்னாங்காணிக் கிருதம்
(8) பாவன சீரகம்.

இவைகளைக் கொடுக்க குணமாகும், செய்முறை இந்தப்புஸ்தகத்தில் காண்க.

தந்தரோகம் 31-க்கு:—

பிராயம்பட்டைக் களிம்பு:-பிராயம்பட்டையைக் குழித்தயிலம் இறக்கி அதில் அரப்பொடி, சுக்கு, கடுக்காய் சமமாக சூர்ணித்து சேர்த்துக் களிம்பாக்கி தந்தசுத்தி செய்துவரத்தீரும்.

வலி (வலிப்பு) 5, பயித்தியம் 6 இவைகளுக்கு.

ஒருபடி நல்லெண்ணெயில் மலைவேப்பலைச்சாறு, வெள்ளாட்டுப்பால்-தயிர்- நெய்- மூத்திரம்- சாணிப்பால், வகைக்கு படி 1, சேர்த்து அதில் மஞ்சள், கஸ்தூரிமஞ்சள், மரமஞ்சள், சுக்கு, மிளகு, திப்பிலி, வாய்விளங்கம், செவ்வியம், கடுகுரோகணி, திப்பிலிமூலம் வகைக்கு விரா. 2½ சூர்ணித்து சேர்த்து எரித்து வடித்து தினம் காலையில் 2–4 விரா. வீதம் சாப்பிட்டு நஸ்யமும் அப்பியங்கனமும், செய்தால் நரம்புகளில் ஊறி குணமாகும்.

வயிற்று வலிக்கு :—

(1) சொர்ணனந்தச் சூர்ணம்
(2) கதலி பஸ்மம்
(3) கல்லுப்பு செந்தூரம்
(4) சண்முக சூர்ணம்
(5) லவண பஸ்மம்
(6) பாவன ஓமம்.

இவைகளைக் கொடுக்க குணமாகும் இந்த புஸ்தகத்தில் காண்க.

வயிறு பொருமலுக்கு :—

(1) இஞ்சி லேகியம்
(2) ராஜ சிந்தாதி லேகியம்
(3) லவணச் சூர்ணம்
(4) மகா தாளிசப்பத்திரி சூர்ணம்
(5) பஞ்சமுகச் சூர்ணம்
(6) ரச மாத்திரை.

இவைகளை இந்த புஸ்தகத்தில் பார்வையிட்டு செய்துக் கொடுக்க குணமாகும்.

வயிறு உப்பிசத்திற்கு :—

(1) கணத்தெண்ணெய்
(2) ராஜமார்த்தாண்ட லேகியம்
(3) மகா தாதுளி கிருதம்
(4) பவள பஸ்மம்
(5) பாவன ஓமம்

இவைகளை இந்த புஸ்தகத்தில் பார்வையிட்டு செய்து கொடுக்க குணமாகும்.

அரோசிகத்துக்கு :—

(1) கதலி லேகியம்
(2) இஞ்சி லேகியம்
(3) புளியாரைக் கிருதம்
(4) பாவனக் கடுக்காய்.

இவைகளைக் கொடுக்க குணமாகும். செய்முறை இந்த புஸ்தகத்தில் காண்க.

அன்னதுவேஷத்துக்கு :—

இஞ்சி லேகியத்தை செய்துகொடுக்க குணமாகும்.

உள்ளங்கால் தந்தல்—நீர்த்தங்குதலுக்கு :—

கொஞ்சம் ஜலத்தில் அபினியைக் கரைத்து உள்ளங்காலுக்குத் தடவி அனலைக்காட்டவும். தினம் 3 தடவை, 3 நாள் செய்யவும்.

பித்தத்தை வாந்திசெய்ய :—

அழிஞ்சிவேர்ப்பட்டையை அரைத்து பாக்களவு வெந்நீரில் கொடுக்க வாந்தியாகி பித்தந் தீரும்.

ரத்தவமனத்திற்கு :—

விளாவின கந்தகத்திராவகம் 40 துளி, ரோஜாப்பூக்கசாயம் 10 திராம், சர்க்கரைப்பாகு 1 திராம், இவைகளைச்சேர்த்து 3 மணிக்கு ஒரு தடவைக் கொடுக்க குணமாகும். (Dr. Gregory)

இருதயம்துடித்துஅடித்துக்கொள்ளும்வியாதிக்கு :—

அன்னபேதி 2 கிறேன்ஸ், மூச்சாம்பரம் 2 கிறேன்ஸ், கருவாபட்டைத்தூள் 5 கிறேன்ஸ் இவைகளைச் சேர்த்து 2 மாத்திரைகளாக்கி பகல் போசனத்திற்கு போகும்போதுச் சாப்பிடவும். இராத்திரியிலும் மருந்து வேண்டியதாயிருந்தால் சாப்பிடலாம். (Dr. Abercromblo)

தேகத்தில் கற்றாழை நாற்றம், கருவாடு நாற்றம் போக :—

(1) புதுக்கோட்டை சந்தன பில்லை
(2) மகா சந்தனாதித் தயிலம்
(3) ராஜாங்க கொம்பரக்குத் தயிலம்

இவைகளால் குணமாகும். செய்முறை இந்த புஸ்தகத்தில் காண்க.

உடம்பில் விடாதருசிக்கு :—

கணத் தென்னெய்யைச் செய்துகொடுக்க குணமாகும்.

ருசிவுக்கு :—

(1) சுவர்ண கோரோசன மாத்திரை
(2) அப்பிரேக கோரோசன மாத்திரை
(3) மகா ரசபஸ்மம்

இவைகளைக் கொடுக்க குணமாகும். இந்த புஸ்தகத்தில் காண்க. இன்னுமநேக மருந்துகள் 13வது அத்தியாயத்தில் காண்க.

அஸ்தி வெட்டைக்கு :—

(1) மகா கூழ்ப்பாண்டக் கிருதம்
(2) கூழ்பாண்ட ஷர்பத்து
(3) அப்பிரேக பஸ்மம்
(4) ராஜ அப்பிரேக செந்தூரம்
(5) மகா சந்தனாதித் தயிலம்
(6) மகா மிருகாமலத் தயிலம்
(7) ராஜஅமிர்த சஞ்சீவிச் சூரணம்
(8) மஹா கூழ்ப்பாண்ட லேகியம்
(9) தாளிசப் பத்திரிச் சூரணம்

இவைகளைக் கொடுக்க குணமாகும். செய்முறை இந்த புஸ்தகத்தில் காண்க.

அஸ்தி காங்கைக்கு :—

(1) மகா கூழ்ப்பாண்ட கிருதம்
(2) கூழ்ப்பாண்ட ஷர்பத்து

இந்த புஸ்தகத்தில் சொல்லியபடி செய்துக்கொடுக்க குணமாகும்.

மேக காங்கைக்கு :—

(1) மேக குலாந்தக ஷர்பத்து
(2) நன்னாரி ஷர்பத்து
(3) கல்கார் பஸ்மம்

இவைகளைக் கொடுக்க குணமாகும். இப்புஸ்தகத்தில் காண்க.

நாபி நோய்க்கு :—

மகா வல்லாரைக் கிருதம் செய்து கொடுக்க குணமாகும்.

வயிற்றிலுள்ள ரணத்திற்கு :—

மரத்துவெள்ளை நவநீதம் செய்து கொடுக்க குணமாகும்.

ஸ்திரீபோகத்தில் விருப்பமுண்டாக்க :—

ஸ்திரீபோக ரத்தின வடகத்தைக் கொடுக்க விருப்பமுண்டாகும்.

உள்ளங்கால் பித்தவெடிப்புக்கு :—

(1) சேங்கொட்டையின் தயிலம் ஊசியால் எடுத்து வெடிப்புக்குள் தட்டினால் மறுநாள் வீக்கமும் நோவுமிராது.

(2) மெழுகை வெடிப்பில்விட குணமாகும். கைகண்ட மருந்துகள்.

ஸ்திரீபோகத்தின் உஷ்ணத்திற்கு :—

(1) மேகக்குலாந்தக க்ஷீரபத்து } இவைகளை இந்த புஸ்தகத்தில் சொல்லியபடி செய்துகொடுக்க குணமாகும்.
(2) நன்னாரி க்ஷீரபத்து ...

நோயாளியின் படுக்கைக்கு சமீபத்திலுள்ள நாற்றத்தை போக்க :—

(1) கோஹலாப்பூர் தசாங்க சூர்ணம்
(2) பண்டரிப்பூர் தசாங்க சூர்ணம்
(3) காசி தசாங்க சூர்ணம்
(4) லக்நோதேசத்திய தூபவர்த்திகள்

} இவைகளை உபயோகித்தால் நாற்றத்தை நீங்கும். செய்முறை இந்த புஸ்தகத்தில் காண்க.

ஜலுப்புக்கு :—

(1) அக்கிரான உப்பை அக்கிராணத்தால் குணமாகும்.

(2) சூடத்தை அக்கிராணத்தால் குணமாகும்.

(3) சாம்பிராணித்தயிலம் நெற்றில் பூசிவர குணமாகும்.

(4) புகையிலைத்தூள் கஸ்யமிட குணமாகும்.

உதரரோகம் (8)க்கு :—

(1) கும்மட்டிக்காய் குழம்பு } இவைகளைக் கொடுக்க குணமாகும். செய்முறை இந்த புஸ்தகத்தில் காண்க.
(2) கந்தக ரசாயனம்

(3) மகோதரம் ரோகத்திற்கு சொல்லிய மருந்துகள் கொடுக்க குணமாகும். இன்னும் அநேக மருந்துகள் 13-வது அத்தியாயத்தில் காண்க.

தீராத பெண்ணுக்கு :—

பலத்தையும் தேகபுஷ்டியையும் உண்டாகும்படி மருந்துகளைக்கொடுத்து மூசாம்பரஞ்சேர்ந்த மருந்துகளை பேதிக்கு கொடுத்துவர கருப்பையில் திரவம் உண்டாகி ருது ஆவார்கள்.

எதுர்திகண்ட ரோகத்துக்கு :—

ஐயோடைட் ஆப் பொட்டாசியம், டெராக்ஸியகம் (Taraxacum) இவைகளை வயதுக்குத்தக்கபடி அளவை ஏற்படுத்தி கொடுக்க குணமாகும்.

அதிதூல ரோகத்துக்கு :—

லைகர் பொட்டாஸ் ½ (அரை) முதல் 1 அல்லது 1½ (ஒன்றரை) திராம், வரையில் கொஞ்சங்கொஞ்சமாக அதிகரித்து தினம் 3 தடவை பசும்பாலில் கொடுக்க சிறு வயதில் காணும் அதிதூல ரோகம் குணமாகும்.

வயற்றில் கிருமிகள் உற்பத்தியாகாமலிருக்க :—

விளாவினக் கறிஉப்புத் திராவகம் 2 கிராம், குவாசியா கசாயம் 7½ (ஏழரை) அவுன்ஸ், ஆரஞ்சிப்பழத்தோல் பாணிதம் ½ (அரை) அவுன்ஸ் இவைகளைச்சேர்த்து, நாலிலொருபங்கு வீதம் தினம் 2 தடவைக் கொடுக்க குணமாகும். (Dr. Paris.) இதை பேதிக்கு கொடுத்து பிறகு கொடுக்கவேண்டியது.

தலை எரிவு—கறுவாதம் இவைகளுக்கு :—

ஜென்சன்சத்து, நவக்ஷார உப்பு வகைக்கு 30 கிறேன்ஸ் இவைகளைச் சேர்த்து 12 மாத்திரைகளாக்கி 2 மாத்திரை வீதம் தினம் 3 தடவை கொடுக்க குணமாகும்.

தலையில் பேன் நாசமடைவதற்கு :—

குப்பைமேனி அல்லது கருஊமத்தை இலைச்சாற்றால் ரசத்தை அரைத்து துணிக்குல்லாயின் உள்புறத்தில் தடவி போட்டுக்கொள்ள 6 மணிக்குள் நாசமடையும்.

குதிகால் வலிக்கு :—

குதிக்காலில் அபினியை கொஞ்சம் ஜலத்தில் கரைத்து தடவி அனலில் காட்டி சூட்டை உண்டாக்கவும். தினம் 3 தடவை 3 நாள் செய்ய குணமாகும்.

நரம்புப் பிடிப்புக்கு :—

(1) கரியபோளத்தூள் விராகனிடை 4, எலுமிச்சம்பழச்சாறுபடி $\frac{1}{16}$ (வீசம்) அல்லது வேப்பெண்ணெய் 2 அவுன்ஸ் இவைகளைச் சேர்த்து காய்ச்சி தடவிவர குணமாகும்.

(2) எலுமிச்சம்பழச்சாறும் தேங்காய் எண்ணெயும் வகைக்கு 4 அவுன்ஸ் சேர்த்து துணியை நனைத்துப் போட்டுக்கட்ட குணமாகும்.

காயத்திற்கு :—

(1) புகையிலையின் சாம்பலை வைத்துக்கட்ட குணமாகும்.

(2) கார்பொலிக் ஆசிட் (Carbolic acid) 1 கிராம், தேங்காயெண்ணெய் 3½ அவுன்ஸ் இவைகளைச்சேர்த்து தடவிவர அல்லது துணியை நனைத்து போட்டுவர குணமாகும்.

முள்ளு காலில் தைத்து வெளிப்படாவிட்டால் :—

எள்ளுஇலை அல்லது விதை ஜலத்தாலரைத்து அதின்மேல் வைத்து 2 தடவைகட்ட முள்ளுவெளிப்படும்.

சப்பாத்திமுள்ளு தைத்தால் :—

அந்த இடத்தில் நல்லெண்ணெயை தடவிக்கொண்டே வர முள்ளு வெளிப்படும்.

தலைமயிர் வளர :—

முற்றினதேங்காய்களின் கண்களை திறந்து ஜலத்தை ஊற்றி கறுப்புப் புல்லாந்தி பழங்களை உட்செலுத்தி கண்களை மரத்தாலடைத்து தேங்காய்களுக்கு களிமண்ணால் கவசமிட்டு சேற்றுக்குள் ¾ (முக்கால்) மண்டலம் புதைத்துவைத்து எடுத்து கண்களைத் திறந்து உள்ளிருக்குங் குழம்பை எடுத்து அத்துடன் $\frac{1}{10}$ (பத்திலொரு பாகம்) நல்லெண்ணெயைச் சேர்த்து எரித்து வடித்து ஸ்நானஞ் செய்துவர மயிர் வளர்ந்து தரையில் புரளும்.

சேத்துப்புண்ணுக்கு :—

மண்ணெண்ணெய் (Karosine oil) தடவி தேய்த்தால் குணமாகும். கைகண்ட மருந்து.

அட்டைக்கடிக்கு :—

படிக்காரஜலம் அல்லது துரிசுதூள் கடிவாயில்போட ரத்தம்நிற்கும்.

எலிவிஷக்கடிக்கு :—

கொடிக்கள்ளிப்பட்டை விராகனிடை 2, வெள்ளைப்பூண்டு விராகனிடை ½ இவைகளைச் சேர்த்து அரைத்து நீராகாரத்தில் 3 நாள் கொடுக்க விஷந்தீரும்.

தேள் கொட்டலுக்கு :—

(1) தேள் கொட்டின உடனே கடிவாயைக் கத்தியால் கீறி ரத்தத்தை வெளியாக்க குணமாகும்.

(2) ஈயப் பிளாஸ்திரியை ஒரு சிறு துணியில் தடவி அதற்கு ஒரு சிறு துவாரமாக்கி அந்தத் துவாரம் கொட்டுவாயில் வரும் படியாக போட்டு பொட்டிலுப்புத் திராவகத்தைக் கொட்டு வாயில் தடவி புண்ணாக்க நோய் குணமாகும்.

(3) கொட்டுவாயில் குளோரோபாரம் போட அந்த இடம் மறத்துப் போகும், நோய் தணியும்.

(4) நித்திரா வர்த்தனக் காரிகள் வயதுக்குத் தக்கப்படி அளவை ஏர்ப்படுத்தி கொடுத்து கூச்சலில்லாத யிடத்தில் படுத்துவைக்க நல்ல நித்திரையை உண்டாக்கி நோயே தெரியாது. இது பெரியோர்களுக்கு நல்லது. குழந்தைகளுக்கு கொடுக்கக்கூடாது. கொடுத்தால் கெடுதி நேரிடும்.

(5) வெற்றிலையை அரைத்து அதற்குள் துருசுவை புதைத்து சீலைமண் செய்து சிறு புடம்போட்டு எடுத்து வைத்துக்கொள்க. இதில் கொஞ்சம் எடுத்து கொட்டுவாயில் போட்டு 2—3 துளி ஜலம் அல்லது குளோரோபாரம் போட உடனே குணமாகும்.

(6) மேற்படி துருசு பஸ்பத்துடன் எட்டிக்கொட்டையின் உப்பு (strychnia) சேர்த்து மிஸ்ரித்து வைத்துக்கொண்டு கொட்வொயில் கொஞ்சம் போட்டு அதின்மேல் குளோரோபாரம் 2—3 துளி விட உடனே குணமாகும். (இது நல்ல முறை).

நல்ல பாம்பு விஷக்கடிக்கு :—

(1) நஞ்சறுப்பான் நஞ்சமுரிச்சான் இலை 2 பிடி அல்லது $\frac{1}{16}$ வீசம் சேர் சாறுகொடுக்க விஷம் உடனே தீரும். கைகண்ட மருந்து.

(2) ஆதிசேஷ விஷஹரமாத்திரை கொடுக்க விஷந்தீரும்.

ரத்த மண்டலி விஷக்கடிக்கு :—

யானை வணங்கி இலையை அரைத்து பாக்களவு ஜலத்தில் கரைத்து கொடுக்க குணமாகும்.

நாய் விஷக்கடிக்கு :—

(1) கற்றாழை மடலும் க்றி உப்பும் ஓரளவாய் சேர்த்து அரைத்து 3 தடவை கடிவாயில் வைத்து கட்ட குணமாகும்.

(2) பேய்அத்திவேர், ஆலம்பட்டை, வேப்பிலை வகைக்கு பலம் 10 இடித்து ஒரு படி கழுநீரில் சேர்த்து காய்ச்சி வடித்து 7 நாள் உள்ளுக்கு கொடுத்து மேலுக்கும் பூசி, 8-வது நாள் பேதிக்கு கொடுக்க குணமாகும்.

(3) சிறு செருப்படையும் கோவைக்கிழங்கும் வகைக்கு 2—3 கிராம் சேர்த்து அரைத்து கடிவாயில் போட குணமாகும்.

தேள், பூரான், பாம்பு, முதலிய விஷக்கடிகளுக்கு :—

நவக்ஷார ஜெயநீர் (Liquor Ammonia) 10—20 துளி வீதம் ஜலம், ஒயின் எதிலாகிலும் சேர்த்து ½ (அரை) மணிக்கு ஒரு தடவை கொடுத்து மேலுக்கும் பூசிவர குணமாகும். (Dr. E. G. Waring).

நரம்பு சிலந்திக்கு :—

முதலில் பொட்லீஸ் கட்ட உள்ளிருக்கும் பூச்சி கொஞ்சம் வெளிக்கு வரும். பிறகு அதைப் பிடித்து ஒரு நூலால் கட்டி, அதின்மேல் நாட்டு காட்டாமணக்கு இலை ஒரு பிடி, எண்ணெய் கர்ப்பூரம் விரா. ½ இவைகளைச் சேர்த்து அரைத்து வைத்துக் கட்டவும். இவ்விதமாக 2—3 தடவை கட்ட அந்த பூச்சி இறந்துபோகும். பிறகு அதைப் பிடித்து இழுத்தால் நோவு இல்லாமல் முழுப் பூச்சி வெளியே வந்துவிடும். பிறகு தேங்காய் எண்ணெயில் துணியை நனைத்துப்போட குணமாகும். இதுவே நல்ல மருந்து.

தந்தசுத்திசெய்யுங் குச்சிகளும், அவைகளின் குணங்களும் காண்க.

நம்பர்.	குச்சிகளின் பெயர்கள்.	குச்சிகளின் குணங்கள்.
1	உக்காவேர் ... }	... வீரிய விருத்தியை உண்டாக்கும்.
2	நீர்ப்பூலாவேர். }	
3	ஆலவிழுது ...	... லட்சுமிவிலாசம் உண்டாக்கும்.
4	நாயுருவிவேர் ...	... முகவசியம் உண்டாக்கும்.
5	வேப்பங்குச்சி ...	... பற்களை பிரகாசிக்கச்செய்யும்.
6	வெள்ளெருக்கம்வேர்	... தந்தரோகம் குணமாகும்.
7	கருவேல்குச்சி ...	... பற்களை உறுதிப்படுத்தும்.

தந்தசுத்தியானபிறகு சாப்பிடவேண்டிய தாதுபுஷ்டி ஆகாரம்.

கேசிர அன்னம்.

ஈரகசம்பா அரிசி படி $\frac{1}{4}$ (கால்)—(30 ரூபாய் எடை), பக்குவமாய் சமைத்து ஒரு வெள்ளிவட்டம் அல்லது பீங்கானில் போட்டு அத்துடன் குங்குமப்பூ விரா. $\frac{1}{2}$ (கால்), நெய் படி $\frac{1}{2}$ (அரை) சேர்த்து பிறகு ஏலக்காய், கிராம்பு, சாதிக்காய் துண்டுகள், சாதிப்பத்திரி, கருவாய்ப்பட்டை வகைக்கு விரா. $\frac{1}{2}$ (அரை), நெய்யால் வறுத்து சேர்த்து, பிறகு 18 ரூபாய் எடை நெய்யை உருக்கி சேர்த்து மிஸ்ரித்து அமுக்கி இலையால் மூடி வைக்கவும். அரைமணி நேரம் சென்றபிறகு எடுத்து வேணும்வரையில் தினம் சாப்பிட தாதுபுஷ்டி உண்டாகும்.

மனோரஞ்சக லட்டு.

நாட்டு கோதுமை ரவா படி $\frac{1}{4}$ (கால்), கொஞ்சம் ஜலமிட்டு பிசிந்து நெய்யைத்தடவி இடித்து மொத்தயாக்கி ஒரே அளவாக உருண்டைகளாக்கி, ஒவ்வொரு உருண்டையும் நெய்யைத்தடவி வடைகளாகத்தட்டி,

ஒரு இரும்புவாணலில் 2 சேர் நெய்யை போட்டு காய்ச்சி அதில் மேற்படி வடைகளை பொன் நிறமாகவறுத்து எடுத்து கல்லுரலிலிட்டு கடப்பாறையால் இடித்து மெல்லியதூளாக்கி அத்துடன் சீனி சேர் 3, முந்திரிப்பருப்பு சேர் ½ (அரை), சீனுக்கற்கண்டு சேர் ¼ (கால்), ஏலரிசிதூள் விரா. 2 இவைகளை எல்லாம் சேர்த்து அத்துடன் தேவையான நெய்யை உருக்கு சேர்த்து, லட்டுகளாக்கி தினம் காலை மாலை வேணும்வரையில் சாப்பிட்டுவர தாதுபுஷ்டி உண்டாகும்.

ஸ்திரீரஞ்சக லட்டு.

கால்படி கடலைப்பருப்பை 4 மணிநேரம் ஊறவைத்து அரைத்து வைத்துக்கொள்க. பிறகு ஒரு இரும்புவாணலில் தேவையான நெய்யை விட்டு காய்ச்சி அதில் எலுமிச்சங்காய் அளவு மேற்படி கடலை பருப்பின் மொத்தையில் எடுத்துப் போட்டு கிளரி கிளரி பொன் நிறமாய் வறுத்து எடுக்கவும். இவ்விதமாய் அந்த கடலை மொத்தை முழுமையும் வறுத்து எடுத்துக்கொண்டு அத்துடன் ஏலரிசித்தூள் விரா. 1, முந்திரிப்பருப்பு சேர் ½ (அரை), சீனுக்கற்கண்டு சேர் ¼ (கால்), இவைகளைச் சேர்த்து பிறகு குங்குமப்பூ விரா. ½ (அரை) தேவையான நெய்யில் அரைத்து சேர்த்து லட்டுகளாக்கி தினம் காலை மாலை சாப்பிட்டுவர தாதுபுஷ்டி உண்டாகும். தாதுபுஷ்டி ஆகாரம் சாப்பிட்டவுடனே தாம்பூலம் தரிக்க வேண்டும்.

தாம்பூலம் தரிக்கும் விதிகள்.

முதலில் ஒரு வெற்றிலையைச்சாப்பிட்டு பிறகு வழக்கப்படி பாக்கு, வெற்றிலை, சுண்ணாம்பு சேர்த்து சாப்பிட லக்ஷ்மிவிலாசம் உண்டாகும், நெஞ்சு, மார்படைப்பு காணாது. இப்படி சாப்பிடும்போது ஊறிய 1-வது நீர் நஞ்சு, 2-வது நீர் அஜீரணம், 3-வது நீர் அமிர்தம், 4-வது நீர் மிகஇனிப்பு, 5-வது, 6-வது, நீர்கள் பாண்டு, பித்தம், மந்தம், இவைகளை உண்டாக்கும்.

பிராணரக்ஷாமிர்தசிந்து.

முதலாவது பாகம்

என்னும்

வைத்தியரத்ன சங்கிரகம்.

முற்றிற்று.

பெயர் அட்டவணை.

Index of Medicines.

பெயர் அட்டவணை

முற்றிற்று.

ரோகவர்க்க அட்டவணை.

Index of Diseases.


முற்றிற்று.



ஸ்திரீ ஜெனனம் சார்ந்தகம் வெளிஇடம் மரு
ந்துவ சால்திரத்தில் இருக்கும் ஓர் படம் காண்க.
பூர்ண கர்ப்ப ஸ்திரீயின் பிரசவ காலத்தில்
கர்ப்பா சயத்தில் சிசுயிருக்கும் நிலைமையைப்பாரு
ங்கள்.

சரீர வியவச்சேதசாஸ்திரத்திலுள்ள ஓர் படம்.


இப்படத்திலுள்ளநாடிகள், நாளங்கள், சோஷணக்குழல்களாகிய இரசாயனிகள், மாசாயனிகள் இவைகளெல்லாம் சரீரத்தில் ஓடும் விதங்களைக் காண்க.



1,இடது சிவரம். 2,வலது சிவரம். 3,இடது சடரம். 4,வலது சடரம். 5,வலது சடரத்திலிருந்து கிளம்பும் கண்டரையின் வில். 6,கண்டரை. 7,7,அதக்காயத்தின் நாடி. 8,8,உற்காயத்தின் நாடி. 9,9,கழுத்தின் நாடி. 10,10,கழுத்தின் நாளம். 11,11,உற்காயத்தின் நாளம். 12,12,அதக்காயத்தின் நாளம். 13,கீழ்க்குகா நாளம், 14,மேற்குகா நாளம். 15,இரத்தாசயத்தின் வலது இடது அறைகளுக்கு மத்தியிலிருக்கும் பித்தி. 16,16,புப்புசநாடி. 17,17,புப்புசநாளம். 18, சிறு குடலிலிருந்து கிளம்புகின்ற இரசாயனிகள். 19,ரசதாரை. 20,20, அதக்காயத்தில் ஏறும் மாசாயனிகள். 21, 21, உற்காயத்தின்மாசாயனிகள்.

சரீர வியவச்சேதந சாஸ்திரத்திலுள்ள ஓர் படம்.

[*N. B.*] இப்படத்தில் இரத்த உறுப்புகளின் தொழிலை காண்பிக்கும் உறுப்புகளை காண்க.



1-வலது சிவரம். 2-வலது சடரம். 3-சுவாசப்பை. 4-சுவாசப்பை நாடியின் இடது கிளை. 5-சுவாசப்பை நாடியின் வலது கிளை. 6-தந்துகிகள். 7-இடது சுவாசப்பை நாளம். 8-வலது சுவாசப்பை நாளம். 9-இடது சிவரம். 10-இடது சடரம். 11-கண்டரை நாடி. 12-13-கண்டரை நாடியின் கொப்புகள். 14-14-தந்துகிகள். 15-16-நாளங்கள். 17-திரிக்கபாடங்கள். 18-பிறைக்கபாடங்கள். 19-இணைக்கபாடங்கள். 20-பிறைக்கபாடங்கள்.